All my days for God in Tamil

Saint Alphonsus Liguori

தேவனுக்காக என் எல்லா நாட்களும்

திருச்சபையின் வேதபாரகரும்,

மிகப் பரிசுத்த மீட்பர் சபையின் ஸ்தாபகருமாகிய

அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின்

ஞான எழுத்துக்களிலிருந்து

சிந்தனைகளும், சிநேக உணர்வுகளும்

தேர்வு செய்து, தொகுத்தவர்

சங். J.B. காய்ல், இரட்சகர் சபை.

பொருளடக்கம்

முன்னுரை

“தெஃபுங்க்துஸ் அதுக் லோக்வித்தூர்”

“என் பலவீனங்களில் சந்தோஷமாய் நான் மேன்மை பாராட்டுவேன்."

எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டுமென கடவுள் சித்தம் கொள்கிறார்.

பாவி கடவுளை நிந்திக்கிறான்.

“கெட்டவர்களுக்கு சமாதானமில்லை."

கடவுள் இரக்கமுள்ளவர், இருந்தும் பலர் ஒவ்வொரு நாளும் இழக்கப்படுகிறார்கள்.

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 01

வேதசாட்சிகளின் இராக்கினியான மாமரி

நம் உணவாக இருக்கும்படி பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் தம்மையே விட்டுச் செல்லும் சேசுகிறீஸ்துநாதரின் அன்பு

திவ்ய நற்கருணையிலிருக்கும் சேசுநாதர் நம் அனைவரையும் சந்திக்கிறார்.

திவ்விய நன்மையில் அனைவரும் தம்மை உட்கொள்ள வேண்டுமென சேசுநாதர் ஆசிக்கிறார்.

“மெமெந்தோ, ஹோமோ, குய்யா புல்விஸ் எஸ்!"

“என் மகனே, பாவம் செய்து விட்டாயா? இனி செய்யாதே."

சேசுகிறீஸ்துநாதரின் திருப்பாடுகள் பற்றிய சிந்தனைகளும், அவற்றின் மீதான நாட்டங்களும் - 02

பரிசுத்த மாமரியின் வாழ்வு முழுவதும் நீடித்த வேதசாட்சியம்

"உன் தேவனாகிய ஆண்டவரை சோதியாதிருப்பாயாக."
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் -03
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 04
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 05
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 06
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 07
மாமரியின் வேதசாட்சியத்தின் உயர்வு
"ஆண்டவரே, நாம் இங்கே இருப்பது நல்லது!"
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 08
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் – 09
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 10
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 11
சேசுவின் அன்புள்ள திரு இருதயம்
எந்த விதத்திலும் தணிக்கப்படாத மரியாயின் வேதசாட்சியம்
"அவர் ஊமையாயிருந்த ஒருவனைப் பிடித்திருந்த பேயைத் துரத்தினார்."
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் -12
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 13
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 14
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 15
சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 16
ஆத்தும இரட்சணிய தாகம்
சேசுவின் மீதான மரியாயின் நேசம் எவ்வளவு பெரிதாயிருந்ததோ, அவ்வளவுக்கு அவர்களுடைய வியாகுலங்கள் பெரிதாயிருந்தன.
பாவிகள் மீது சேசுவின் கனிவுள்ள தயவிரக்கம்
அர்ச். சூசையப்பர் திருநாள்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 17

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 18

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 19

“பிதாவே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்!" (1)

“இன்றே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்!" (2)

“ஸ்திரீயே, இதோ உம் மகன் - இதோ உன் தாய்." (3)

“ஏலி! ஏலி! லாமா சபக்தானி? (4)

“நான் தாகமாய் இருக்கிறேன்!" (5)

“எல்லாம் முடிந்தது!" (6)

“பிதாவே, உம்முடைய கரங்களிலே என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்." (7)

நமதாண்டவராகிய சேசுகிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளைப் பற்றிய தியானங்கள்

வியாகுல மாதா திருநாள்

மாமரி நம் இரட்சணியத்துக்காகத் துன்பப்படுகிறார்கள்.

சேசுநாதரின் திருக்காயங்கள்

சேசுநாதரின் திருப்பாடுகளின் மீதான தியானம்

சிலுவையின் மீது சேசுநாதர்

“என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன்......."

திவ்ய நற்கருணைக்கு முன்பாக ஜெபம்

சேசுநாதர் சிலுவையின் மீது மரிக்கிறார்.

இறந்து விட்டவராக சிலுவையில் தொங்கும் சேசுநாதர்

மாமரி சேசுவிடம் பிரியாவிடை பெறுதல்.

சேசுகிறீஸ்துநாதரின் உயிர்ப்பு

“உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்."

நீ முடிசூட்டப்படுவாய்.

கடவுளை நேசிப்பவர்களின் மகிழ்ச்சியான வாழ்வு

“உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக."

“பாறைப் பிளவுகள்"

கடவுளின்மீது மரியாயின் மாசற்ற இருதயம் கொண்டுள்ள அன்பு

“நம் விசுவாசமே உலகத்தை மேற்கொள்ளும் வெற்றியாக இருக்கிறது."

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (1)

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (2)

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (3)

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (4)

நமக்காக மரிப்பதில் சேசுவின் அன்பு

பரிசுத்த மாமரியின் கற்பு

“ஆண்டவர் சின்னஞ்சிறியவராகவும், மிக அதிகமாக நேசிக்கப்படத்தக்கவராகவும் இருக்கிறார்."

“நானே நல்ல ஆயன்."

“நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தத்திற்கு ஓடக்கடவோம்."

பரிதாபத்திற்குரிய பாவிகளுக்குப் பசாசு காட்டும் மாயத் தோற்றங்கள்

அர்ச். சூசையப்பரின் பாதுகாவல்

“ஞானமானது மனிதருக்கு அளவில்லாத திரவியமாய் இருக்கின்றது."

சேசுவின் தாராளமுள்ள திரு இருதயம்

மாமரியிடம் தஞ்சமடைதல்

“இன்னும் சிறிது காலம், அதன்பின் என்னைக் காண மாட்டீர்கள்."

நம் சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் பிறர்சிநேகம்

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 1

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 2

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 3

நம் நம்பிக்கையான சேசுநாதரின் மரணம்

மாமரியின் பிறர்சிநேகம்

“சினம் கொள்ளத் தாமதியுங்கள்."

நம் செயல்களில் பிறர்சிநேகம்

“காலமிருக்கும்போதே நற்செயல்களைச் செய்வோமாக."

அயலானின் ஆத்துமத்தின் மட்டில் பிறர்சிநேகம்

“உங்கள் அர்ச்சிப்பே சர்வேசுரனுடைய சித்தமாக இருக்கிறது."

“இதோ, நமது கரங்களில் உன்னை எழுதி வைத்திருக்கிறோம்."

பிரியதத்தத்தினாலே பூரணமான மரியாயே வாழ்க!

“கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்."

ஜெபத்தின் நிபந்தனைகள்

கடவுள் ஞான நன்மைகளை நமக்குத் தந்தருள்வதாக வாக்களித்திருக்கிறார், உலக நன்மைகளை அல்ல.

பூமியின் மீது சேசுநாதர் வாழ்ந்த தரித்திர வாழ்வு

“எழுந்து வாரும் ஆண்டவரே, உமது இளைப்பாற்றியின் ஸ்தலத்திற்கு எழுந்து வாரும்."

தேவசிநேகம் இருதயத்தைப் பற்றியெரியச் செய்யும் நெருப்பாக இருக்கிறது.

தேவசிநேகம் ஆத்துமத்தை ஒளிர்விக்கும் ஒளியாக இருக்கிறது.

தேவசிநேகம் தேற்றரவு தருகிற நீரூற்றாக இருக்கிறது.
தேவசிநேகம் ஆன்மாவை வளப்படுத்தும் பனித்துளியாக இருக்கிறது.
தேவசிநேகம் மன உற்சாகத்தை மீட்டுத் தரும் இளைப்பாற்றியாக இருக்கிறது.
நேசம் மரணத்தைப் போல வலிமையானது.
தேவசிநேகம் நம் ஆத்துமங்களில் கடவுள் தங்கி வசிக்கச் செய்கிறது.
தேவசிநேகம் ஆத்துமத்தைக் கடவுளோடு சேர்த்துக் கட்டுகிற ஒரு புனித பந்தனமாக இருக்கிறது.
தேவசிநேகம் எல்லா நன்மைகளையும் தன்னுள் கொண்டுள்ள ஒரு பொக்கிஷம்
"அவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து. . . மனிதனானார்."

முன்னுரை

காய்ல் சுவாமியவர்கள் புனித அல்போன்ஸ் லிகோரியாரின் பக்திக்குரிய எழுத்துக்களின் வீரியத்தையும், அவற்றின் சாராம்சத்தையும் நான்கு நூல்களாக வெளியிடவும், ஆண்டு முழுவதும் அவற்றை நாம் பயன்படுத்தும்படி அவை நமக்குக் கிடைக்கச் செய்யவும் திட்டமிட்டிருக்கிறார். உள்ளரங்க பரிசுத்ததனத்தின் இரகசியத்தையும், சுபாவத்திற்கு மேற்பட்ட வாழ்வின் உன்னத மதிப்பையும் இரட்சகர் சபை ஸ்தாபகரை விட நன்றாக வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. தமது வேதபோதகப் பணிகளிலும், ஒரு மிகப் பரந்த மேற்றிராசனத்தை ஆளும் அலுவலிலும் அவர் கிரகிக்கப் பட்டிருந்தாலும், கடவுளோடு தாம் கொள்ளும் தொடர்பு இடைமறிக்கப்பட அவர் ஒருபோதும் அனுமதித்ததில்லை. தமது நேரத்தின் ஒவ்வொரு கணத்தையும் தமது சிருஷ்டிகரின் மகிமைக்கு அர்ப்பணித்து, செயல்பூர்வமான வாழ்வையும், தியான வாழ்வையும் ஓர் ஒப்பற்ற முறையில் அவர் ஒன்றாக இணைத்து, நாம் எப்படி கடவுளுக்காக நம் நாட்களை வாழ முடியும் என்று நமக்குக் காண்பித் திருக்கிறார். நல்லொழுக்க வேதசாஸ்திர ஆசிரியர்களிடையே சிறந்து விளங்குபவர், தமது பரந்த அனுபவத்தை செயலூக்கமும், பக்தியார்வமும் உள்ள வேதபோதகப் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ள வல்லவர் என்ற முறையில்,

வீழ்ச்சியுற்ற மனுக்குலம் இறங்கி விடக் கூடிய பேராழங்களை அளந்து காட்டக் கூடிய நிலையில் அவர் இருந்தார். மனித பலவீனத்தின் மீது இரக்கம் கொள்ளவும், பாவத்தால் கடவுளை விட்டுப் பிரிந்து, அலைந்து திரியும் மனிதர்களை மீண்டும் கடவுளிடம் கொண்டு வந்து சேர்க்கத் தேவையான தீர்வுகளை அவர்களுக்குப் பரிந்துரைக்கவும் அவரது பரந்த அறிவு அவருக்கு உதவியது. இன்றைய ஒழுங்கு தவறிய உலகத்திற்கு அவரது எழுத்துக்கள் ஒப்பற்ற மதிப்புள்ளவையாக இருக்கின்றன.

ஒரு நூற்றாண்டு காலமாக, பரிசுத்த வேதத்தின் நன்மை பயக்கும் செல்வாக்கிலிருந்து ஏறக்குறைய தன்னை முழுமையாகப் பிரித்துக் கொண்டுள்ள உலகத்தன்மையான கல்வியின் கசப்பான கனிகளை நம் காலம் அறுவடை செய்து கொண்டிருக்கிறது. கடவுளை மறுதலிக்கவில்லை என்றாலும், குறைந்த பட்சம் தங்கள் அன்றாட வாழ்வின் அனுசரிப்புகளிலிருந்து அவரை அசட்டை செய்கிற மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்தைப் பற்றி, அல்லது கடவுள் தங்களுக்கென ஏற்பாடு செய்திருக்கிற சுபாவத்திற்கு மேலான கடைசிக் கதியைப் பற்றி, மிகக் கொஞ்சமே அறிந்தவர்கள், அல்லது அவை பற்றி எதுவும் அறியாதவர்கள். நவீன காலங்களின் விஞ்ஞான சாதனைகள் மற்றும் இலௌகீக வளர்ச்சிகளின் போலியான ஒளியால் கண்கள் கூசியவர்களாக, அவர்கள் தற்போதைய உலகத்தோடு தங்கள் பார்வையை நிறுத்திக் கொள்கிறார்கள், உலக செல்வத்திலும், செழிப்பிலும், அல்லது ஒரு நாளின் கடந்து போகிற இன்பங்களிலும் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தேடுகிறார்கள். ஆனால் மகிழ்ச்சிக்கான அவர்களது இந்தத் தேடல் அவர்களை அமைதியற்றவர்களாகவும், மனச் சோர்வுற்றவர்களாகவும், கலக்கமும், குழப்பமும் அடைந்தவர்களாகவும் ஆக்குகிறது, ஏனெனில் மாசற்றதாகிய மகிழ்ச்சி, மற்றும், “புத்தியெல்லாம் கடந்த தேவ சமாதானம்" ஆகியவற்றின் இரகசியத்தை அவர்கள் அறியாமல் போனார்கள். கத்தோலிக்கர்களின் பக்தியும் கூட பனிக்குளிர்ச்சி அடைந்து, அவர்களது சுபாவத்திற்கு மேலான உணர்வு பலவீனமடைந்து விடும்

அளவுக்கு, அவர்களும் கூட உலகில் இன்று நிலவும் பகுத்தறிவுவாதத்தாலும், உலகாதாயத்தாலும் பாதிக்கப்படும் ஆபத்து இருக்கிறது.

அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் எழுத்துக்களில், நவீன இயற்கைவாதம் மற்றும் உலகாதாயம் என்னும் விஷத்திற்கு மிக நிச்சயமான மாற்று மருந்தை நாம் கண்டுபிடிக்க முடிகிறது. வாழ்வின் பிரச்சினைகளுக்குரிய பதிலை அவரால் தர முடியும். எதனாலும் மறைக்கப்படாத கலப்பற்ற மகிழ்ச்சி மற்றும் கடவுளோடு கூடிய ஐக்கியத்திலிருந்தும், எல்லாவற்றிலும் அவரது திருச்சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் ஆசையிலிருந்தும் மட்டுமே ஊற்றெடுக்கும் நிலையான சமாதானம் ஆகியவற்றின் திறவுகோலையும் அவரால் நமக்குத் தர முடியும். அவர் அடிப்படையான காரியங்களுக்கு, சிருஷ்டிக்கும் சிருஷ்டிகருக்கும் இடையே இருக்க வேண்டிய உறவுகளுக்கு, நம்மைத் திரும்பக் கொண்டு வருகிறார். ஞானத்தின் தொடக்கமாகிய நலமிக்க தெய்வபயத்தைப் பாவியிடம் தூண்டியெழுப்பத் தாம் முயலும் அதே சமயம், எல்லாவற்றிற்கும் மேலாக, கடவுளின் இரக்கம் மற்றும் மன்னிப்பின் வழியையும் அவர் நமக்குக் காட்டுகிறார். நிலையான விதத்தில் அவர் நமக்குக் கற்பிக்கிற பாடங்களில் ஒன்று, மனிதாவதாரத்தின் ஆழ்ந்த முக்கியத்துவமும், கல்வாரியின் தனது உச்சத்தை எட்டிய தெய்வீக இரட்சகரின் அளவற்ற அன்பும், அவரது ஞான சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடமும் பாய்ந்து வரும் ஒரு தொடர்ச்சியான வரப்பிரசாத நீரோடையும் ஆகும். நம் பரிசுத்த இராக்கினியின் மிகச் சிறந்த பக்தர் என்னும் முறையில், அவர்களது பரிந்துரையின் வல்லமையை நாம் புரிந்துகொள்ள அவர் நமக்கு உதவுகிறார். இரட்சணியத்தின் உண்மையான வழியை முற்ற முழுக்கப் புரிந்து கொண்டவர் களாகவும், தேவ சமாதானத்தைப் பரிபூரணமாக அடைந்து கொண்டவர்களாகவும், புனிதர்களின் உதாரணங்களை அவர் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். வீரத்துவத்தை அவர் நம்மிடம் கேட்கவில்லை. ஒரு புனிதமான, இயல்பான ஆன்மீகத்தை அவர் வலியுறுத்துகிறார். நம் விசுவாசத்தின் மாபெரும் சத்தியங்களை நம் அன்றாட வாழ்வில் பிரதிபலிக்கச் செய்யவும்,

“சேசுக்கிறீஸ்துநாதர் மீது நம் மனங்களையும், இருதயங்களையும் எப்போதும் ஊன்றி இருக்கவும்" அவர் நமக்கு உதவுகிறார்.

நான் இது வரை சொன்னவற்றிலிருந்து, சுவாமி காய்ல் அவர்களின் இந்த நூல் எவ்வளவு மதிப்பு மிக்கதும், காலத்திற்கு ஏற்றதுமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்நூல், அனுதின “சிந்தனைகள் மற்றும் சிநேக உணர்வுகளின்" வடிவத்தில், புனிதரும் வேதபாரகருமாகிய அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் ஞான எழுத்துக்களிலிருந்து நமக்கு மிகவும் உதவிகரமானவையும், நம்மை ஏவித் தூண்டுபவையுமான சிந்தனைகளை நமக்குத் தருகிறது. ஒவ்வொரு நாட்டையும் சேர்ந்த மக்கள் இந்நூல்களில் தங்களை வசீகரிப்பதும், தங்கள் பக்தியை போஷித்து வளர்ப்பதும், சாதாரண வாழ்வின் அற்பக் கவலைகளுக்கு மேலாகத் தங்களை உயர்த்துவதுமாகிய ஏதோ ஒன்றைக் கண்டுகொள்வார்கள். இந்நூல் குருக்களுக்குப் பிரியமான ஒன்றாக ஆகும் என்று நான் நம்புகிறேன். அவர்களது பக்தியை வளர்ப்பதற்கும், அவர்களது தேவ ஊழியத்தை அதிக பலனுள்ளதாகவும் ஆக்குவதற்குத் தக்கபடி வியத்தகு முறையில் அவர்களது அன்றாட தியானத்திற்கென அபரிமிதமான ஞானக் கருத்துக்களை இந்நூல் அவர்களுக்குத் தருகிறது. மேலும் இந்நூல் பொதுநிலை விசுவாசிகள் மத்தியிலும் பெரிய அளவில் பரவும் என நான் நம்புகிறேன். தங்கள் விசுவாசத்தின் மாபெரும் சத்தியங்களை மதித்துப் போற்றத் தங்களுக்குக் கற்பிக்கவும், தங்கள் பொதுவான செயல்களையும் கூட நித்தியத்தின் ஒளியில் காண அவர்களுக்கு உதவவும் அர்ச். அல்போன்ஸை விட அதிக உறுதியான ஒரு வழிகாட்டியை அவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

செயல்வேகமுள்ள ஒரு வேதபோதக வாழ்வின் கடும் உழைப்புகளுக்கு மத்தியில், அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் நூல்களைத் தமது ஆற்றலுக்கும் மேலாகப் பிரபலப்படுத்துவதில் சுவாமி காய்ல் வெற்றி பெற்றிருக்கிறார். தமது குருத்துவத்தின் இந்தப் பொன்விழா ஆண்டில், கடவுளின் மகிமைக்கும், தமது சபை மற்றும் அதன் ஸ்தாபகரின் வணக்கத்திற்கும் இந்நூலை விட அதிகமாக உதவக் கூடிய வேறு எந்தக் காணிக்கையையும் அவர் செலுத்தி விட முடியாது என்ற எண்ணத்தால் அவர் தேற்றப்பட வேண்டும். இந்நூல்

எல்லா விதத்திலும் ஆசீர்வதிக்கப்பட நான் வாழ்த்துகிறேன், எல்லாம் வல்ல சர்வேசுரன் அவரது உழைப்புக்கு செழிப்பான சம்பாவனையைத் தந்தருளுமாறு நான் ஜெபிக்கிறேன்.

ஜான் டால்ட்டன்,

ஆர்மாக் அதிமேற்றிராணியார்,

ஆர்மாக்,

அக்டோபர் 18, 1946.

"தெஃபுங்க்துஸ் அதுக் லோக்வித்தூர்"

"தேவனுக்காக, என் எல்லா நாட்களும்" தொடரின் முதல் நூல், இரட்சகர் சபையின் அதிவண. வீல்ரைட் சுவாமியவர்களின் முன்னுரையுடன் அப்போதுதான் வெளிவந்திருந்தது. அதே சமயம் துயரம் தரும் அவரது மரணச் செய்தி நம்மை வந்தடைந்தது. அவரது முன்னுரையின் ஊக்கம் தரும் செய்தி, பலருடைய மனங்களில் இன்னும் பசுமையாய் இருக்கிறது.

கடந்த ஆண்டு (1946) தொடக்கத்தில், தமது கடைசி வருடங்களில் மிகுந்த அர்ப்பண உணர்வோடு அவர் செய்து வந்த பணியை, அதாவது, பொதுநிலை விசுவாசிகளுக்காக அடைபட்ட தியானப் பயிற்சிகளை ஒழுங்கு செய்வதும், வழிநடத்துவதுமாகிய பணியை மீண்டும் தொடங்குவதற்காக அவர் அமெரிக்காவிலுள்ள தமது இரட்சகர் சபை இல்லத்திற்குத் திரும்பி வந்தார். ஜூலை மாதத்தில் நோயுற்றிருந்த ஒரு சக துறவியோடு மருத்துவமனைக்குச் செல்லும் வழியில், ஒரு மோசமான கார் விபத்தில் அவர் சிக்கினார். உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட அவர், அங்கே கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுக் கொண்டார். சில நாட்கள் கடுமையான துன்பங்களை அனுபவித்த பிறகு, ஜூலை 22 அன்று, மிகுந்த சமாதான அமரிக்கையோடும், மகிழ்ச்சியோடும் அவர் மரணமடைந்தார்.

சென்ற வருடம் அவர் அயர்லாந்துக்கு வந்திருந்த போது, அவரை சந்திக்க வாய்ப்புப் பெற்ற அனைவரும், அவர் மிகுந்த கருணையும், தயவும் உள்ளவர் என்று கூறுகிறார்கள். நம் பிரியத்திற் குரிய இரட்சகர் சபைச் சக துறவியின் ஆன்மாவை அனைவரின் ஜெபங்களுக்கும் பரிந்துரைக்கிறோம். சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

"தெஃபுங்க்துஸ் அதுக் லோக்வித்தூர்." தாம் இறந்து விட்டாலும், தமது செய்தி மீண்டும் கேட்கப்பட வேண்டும் என்றுதான் அவர் விரும்புவார் என்று நமக்குத் தோன்றுகிறது. உண்மையில், இப்போது காலத்தின் காரியங்களை நித்தியத்தின் ஒளியிலும், ஞானத்திலும் அதிக முழுமையாகவும், அதிக நீதியான விதத்திலும் அவர் கண்டு தீர்மானிக்கிறார் என்பதால், தாம் தமது செய்தியை எழுதிய நேரத்தை விட இப்போது உண்மையாகவே அவர் அதை அதிகமாக வலியுறுத்துவார். முதல் நூலில் அவர் இப்படி எழுதினார்:

"இந்த நூல்களில் அர்ச். அல்போன்ஸ் தமது வெற்றி மற்றும் மகிழ்ச்சியின் இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கப் போகிறார். உங்கள் வாழ்நாள் முழுவதையும் கடவுளுக்குத் தருவது எவ்வளவு எளிது என்று அவர் உங்களுக்குக் கற்பிக்கப் போகிறார்.

"பெத்லகேம் முதல் கல்வாரி வரை தம் வாழ்நாட்கள் முழுவதையும் தமது பரலோகப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தவராகிய கிறீஸ்துநாதரின் போதனைகளைத்தான் இந்நூலில் அவர் வேறு வார்த்தைகளில் தருகிறார்.

"அன்பார்ந்த வாசகரே, ஆழ்ந்த சந்தோஷத்தையும், அமரிக்கையான மகிழ்ச்சியையும், நிலையான சமாதானத்தையும் அறிய நீங்கள் விரும்புவீர்கள் என்றால்-- உங்களைச் சுற்றியுள்ள மந்தமான வாழ்வுகளின் மீது ஒரு சூரியக் கதிரை வீச நீங்கள் விரும்புவீர்கள் என்றால் -- பரிதாபத்திற்குரிய முறையில் வழிதவறிப் போனவர்களை கடவுளிடம் திரும்பக் கொண்டு வர நீங்கள் விரும்புவீர்கள் என்றால் -- ஒரே வார்த்தையில், காலத்திலும், நித்தியத்திலும் உண்மையான மகிழ்ச்சியைப் பற்றிக் கொள்ளவும், உண்மையான வெற்றியை சாதித்துக் கொள்ளவும், உண்மையான

மேன்மையை அடைந்து கொள்ளவும் நீங்கள் விரும்புவீர்கள் என்றால், இதற்கான இரகசியம் மிக எளிதானது: கடவுளையும், நித்திய வாழ்வையும் பற்றிய காரியங்களைத் தியானியுங்கள், நல்ல பிரதிக்கினைகளை எடுங்கள், ஜெபத்தில் பிரமாணிக்கமாயிருங்கள். புனித அல்போன்ஸ் லிகோரியார் “தேவனுக்காக என் வாழ்நாள் முழுவதும்" நூலில் கற்பிக்கும் பாடம் இதுவே."

முதல் நூலைப பயன்படுத்தியிருப்பவர்களும், அதை உதவிகர மானதாகக் கண்டுள்ளதாக நாம் நம்புபவர்களுமாகிய அனைவரும், இந்த நூலில் மிக வந். ஆர்மாக் அதிமேற்றிராணியார், ஜான் டால்ட்டன் ஆண்டகையவர்கள் இதில் எழுதியுள்ள தாராளமானதும், உதவிகர மானதுமாகிய முன்னுரைக்காக அவருக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் பெயராலும், அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரை நேசிப்போர் அனைவரின் பெயராலும் ஆண்டகையவர்களுக்கு நமது உண்மையுள்ள நன்றிகளை சமர்ப்பிக்கிறோம். கடவுள் அவருக்கு அநேக, பலன் மிக்க ஆண்டுகளைத் தர வேண்டும் என்று, ஆர்மாக்கின் அதிமேற்றிராணியாரின் மகிழ்ச்சிக்காகவும், நலனுக்காக மட்டுமின்றி, அயர்லாந்து முழுவதற்காகவும் ஒன்றுசேர்ந்து ஜெபிக்கிறோம்.

பதிப்பாசிரியர்.

சடிகை ஞாயிறு

செப்த்துவாஜெஸிமா ஞாயிறு

(சாம்பல் புதனுக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு)

“என் பலவீனங்களில் சந்தோஷமாய் நான் மேன்மை பாராட்டுவேன்."

(ஞாயிறு நிருபம்)

I

ஏதாவது ஒரு சிலுவையை அனுபவித்துத் துன்புறுவதையும், அதை அரவணைத்துக் கொள்வதன் மூலம் கடவுளைப் பிரியப்படுத்துகிறோம் என்று அறிவதையும் விடப் பெரிய மகிழ்ச்சி

வேறு என்ன இருக்க முடியும்? கடவுளின் திருச்சித்தபபடி தனக்கு வந்த எந்தத் துன்பத்திலும் அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள் எத்தகைய ஆறுதலை உணர்ந்தாள் என்றால், தேவசிநேகத்தின் பரவச நிலை ஒன்றில் ஆழ்ந்து விடுவது அவளுக்கு வழக்கமாக இருந்தது.

கடவுளின் சித்தத்தோடு இணைந்திருப்பவன், இவ்வுலகிலும் கூட, ஓர் இடைவிடாத சமாதானத்தை அனுபவித்து மகிழ்கிறான்: **“நீதிமானுக்கு என்ன நேரிட்டாலும், அது அவனைக் கஸ்திப் படுத்தாது" (பழ.12:21);** இது அப்படித்தான் இருக்க வேண்டும், ஏனெனில் ஓர் ஆன்மா தனது ஒவ்வொரு விருப்பமும் நிறைவேறுவதைக் காண்பதை விட அதிக உத்தமமான மனநிறைவைக் கொண்டிருக்கவே முடியாது; கடவுள் சித்தங் கொள்வதைத் தவிர வேறு எதையும் விரும்பாதிருப்பவன், தான் விரும்பும் அனைத்தையும் பெற்றுக் கொள்கிறான், ஏனெனில் எது நிகழ்ந்தாலும், அது கடவுளின் சித்தத்தாலேயே நிகழ்வதாக இருக்கிறது. அமைந்த மனதுள்ள ஆன்மாக்கள் ஓர் அவமானத்தைப் பெறும்போது, அதை அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் வறுமையால் துன்புறும்போது, தாங்கள் ஏழைகளாய் இருக்க விரும்புகிறார்கள்; சுருங்கச் சொன்னால், நிகழ்வது எதுவாயினும் அதை அவர்கள் விரும்புகிறார்கள், ஆகவே அவர்கள் மகிழ்ச்சியான வாழ்வு நடத்துகிறார்கள். காலநிலை குளிராக அலலது வெப்பமாக இருந்தாலும், மழை அல்லது புயல் வந்தாலும், கடவுளின் சித்தத்தோடு இணைந்திருப்பவன், “நான் இந்தக் குளிரை அல்லது வெப்பத்தை (இதுபோன்ற எதையும்) விரும்புகிறேன், ஏனெனில் கடவுள் இதை சித்தங்கொள்கிறார்" என்று சொல்கிறான். நட்டமோ, கலாபனையோ, நோயோ, மரணமோ வந்தால், அவன் அப்போதும், “நான் ஏழையாக, துன்புறுத்தப்படுபவனாக, நோயாளியாக, அல்லது மரிக்கிறவனாகக் கூட இருக்க விரும்புகிறேன், ஏனெனில் இதுவே கடவுளின் சித்தமாக இருக்கிறது" என்கிறான். தேவ சித்தத்தில்தங்கியிருப்பவனும், கடவுள் எதைச் செய்தாலும் அதைப் பற்றி இன்பம் காண்பவனுமாகிய மனிதன் மேகங்களுக்கு மேலாக வைக்கப்பட்டு, கீழே கடும்புயல்கள் சுழன்றடிப்பதைக் கண்டாலும், அவற்றால் காயப்படுத்தப்படாமலும்,

கலக்கமடையாமலும் இருக்கும் மனிதனைப் போல் இருக்கிறான். புத்தியெல்லாம் கடந்தது (பிலிப்.4:7) என்று அப்போஸ்தலர் கூறும் சமாதானம் இதுவே. இந்த சமாதானம் உலக இன்பங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது, எந்த மாற்றத்தையும் அனுமதிக்காத அளவுக்கு இது நிலையான உறுதி கொண்டதாக இருக்கிறது. **“பரிசுத்தனான மனிதன் சூரியனைப் போல் மாறாமல் ஞானத்தில் நிலைக் கிறான், மூடனோ சந்திரனைப் போல் மாறுபடுகிறான்'' (சர்வப்.27:12).** மூடன், அதாவது பாவி சந்திரனைப் போல மாறுகிறான், அது இன்று வளர்கிறது, நாளை தேய்கிறது; ஒரு நாள் அவன் சிரிக்கிறான், மறு நாள் அழுகிறான்; ஒரு சமயம் அவன் மென்மையாகவும், கலகலப்பாகவும் இருக்கிறான், மற்றொரு சமயம் வன்மையாகவும், வருத்தமுள்ளவனாகவும் ஆகிறான்; ஏனெனில் தனக்கு நேரிடும் இன்ப, துன்பங்களுக்கு ஏற்றபடி அவன் மாறுகிறான். ஆனால் நீதிமானோ சூரியனைப் போலத் தனது மன அமைதியில், என்ன நிகழ்ந்தாலும் மாறாமலும், ஒரே சீராகவும் இருக்கிறான்; ஏனெனில் தேவ சித்தத்திற்கு ஒத்திருப்பதில் அவனது சமாதானம் தங்கிய் இருக் கிறது. **“பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனிதர்களுக்கு சமாதானம் உண்டாகக் கடவது'' (லூக்.2:14).** ஒரு தீமையை அல்லது துன்பத்தை நாம் எதிர்கொள்ளும்போது, நம் ஆன்மாக்களின் கீழான பகுதியில் ஒரு கொடுக்கின் வேதனையை உணர்வதை நாம் தவிர்க்க முடியாதுதான்; ஆயினும், நம் சித்தம் கடவுளின் சித்தத்தோடு இணைந்திருக்கும்போது, நம் ஆன்மாக்களின் மேலான பாகத்தில் எப்போதும் சமாதானம் அரசாளும்; **“உங்கள் சந்தோஷத்தை எந்த மனிதனும் உங்களிட மிருந்து எடுத்து விட மாட்டான்'' (அரு.16:22).** கடவுள் நியமிப்பது எப்படியும் நிறைவேறியே தீரும் என்ற நிலையில், அவரது திருச்சித்தத்தை எதிர்த்து நிற்பவர்கள் எவ்வளவு மூடத்தனமுள்ளவர்களாக இருக்கிறார்கள்! **“அவரது திருச்சித்தத்தை எதிர்ப்பவன் யார்?'' (உரோ.9:19)**. ஆகவே இந்தப் பரிதாபத் திற்குரிய சிருஷ்டிகள் சிலுவையைச் சுமக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள் -- ஆயினும் எந்த பலனுமின்றியும், சமாதானமின்றியும் அதைச் சுமக்கிறார்கள்: “அவருக்கு விரோதமாய் நிற்கிறவன் ஒருக்காலம் அமரிக்கையாய் வாழமாட்டான்'' (யோப்.9:4).

என் தெய்வீக அரசரே, என் அன்பிற்குரிய மீட்பரே, வாரும், இந்நாள் முதல் நீர் மட்டுமே என் ஆன்மாவில் அரசாள்வீராக; நீர் சித்தங்கொள்வதைத் தவிர வேறு எதையும் நான் ஆசிக்காமலும், விரும்பாமலும் இருக்கும்படியாக, என் சித்தத்தை முழுவதும் உமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும். எனக்கு நேரிடும் எக்காரியத்திலும், **"என் தேவனே, நீர் சித்தங் கொள்வதையே நானும் சித்தங்கொள்கிறேன். உமது சித்தம் என்னில் எப்போதும் செய்யப்படுவதாக"** என்றே நான் எப்போதும் சொல்வேன்! உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக!

II

நம் நன்மையைத் தவிர வேறு எதை ஆண்டவர் சித்தங் கொள்கிறார்? **"நீங்கள் அர்ச்சியசிஷ்டவர்களாக வேண்டுமென்பதே சர்வேசுரனுடைய சித்தம்" (1தெச.4:3).** இவ்வாழ்வில் திருப்தியோடும், மறு வாழ்வில் மகிழ்ச்சியோடும் இருப்பதன் மூலம் நாம் புனிதர்களாக இருப்பதைக் காணவே அவர் விரும்புகிறார். கடவுளிடமிருந்து நமக்கு வரும் எல்லாச் சிலுவைகளும் நமக்கு "நன்மைக்கு ஏதுவாக உதவுகின்றன" (உரோ.8:28) என்பதை நாம் புரிந்து கொள்வோமாக. இவ்வாழ்வில் நமக்கு வரும் தண்டனைகளும் கூட நம் அழிவுக்காக அல்ல, மாறாக, நாம் நம்மைத் திருத்திக் கொண்டு, நித்தியப் பேரின்பத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நமக்கு அனுப்பப்படுகின்றன: **"தேவன்... நம்மைத் தண்டிக்கிற தண்டனைகள் நம்மை அழிப்பதற்கல்ல, நம்மைச் சீர்ப்படுத்துவதற்கே நேரிட்டிருக்கின்றன என்று எண்ணிக்கொள்ளக் கடவோம்" (யூதித்.8:27).** கடவுள் எவ்வளவாக நம்மை நேசிக்கிறார் என்றால், நம்மில் ஒவ்வொருவருடைய இரட்சணியத்தையும் அவர் விரும்புவது மட்டுமல்ல, மாறாக அதை அவர் ஏக்கத்தோடு ஆசித்துத் தேடுகிறார். **"ஆண்டவர் என்மேல் கருத்தாய் இருக்கிறார்" (சங்.39:16). "தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்மில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் மற்றெல்லாவற்றையும் அவரோடு நமக்குத் தானம் பண்ணாதிருப்ப தெப்படி?" (உரோ.8:32).** ஆகவே, நாம்

இவ்வாழ்வில் இருக்கையில், நம் நன்மையை மட்டுமே எப்போதும் ஆசிக்கிறவராகிய சர்வேசுரனின் திருக்கரங்களில் நம்மை எப்போதும் கையளித்து விடுவோமாக. **“அவர் உங்களை விசாரிக்கிறவராகையால், அவர் மேல் உங்கள் சகல கவலைகளையும் வைத்துவிடுங்கள்'' (1 இரா.5:7).** ***நமதாண்டவர் அர்ச். சியென்னா கத்தரீனம்மாளிடம்: “என்னை நினைத்துக் கொள்; நான் எப்போதும் உன்னை நினைத்துக் கொள்வேன்'' என்றார்.*** புனித மணவாளியோடு சேர்ந்து, **“நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்'' (உந்.சங்.6:2)** என்று சொல்வோம். என் நேசர் எனக்கு எது நல்லது என்று சிந்திக்கிறார், அவரைப் பிரியப்படுத்துவது பற்றியும், அவருடைய திருச்சித்தத்தோடு என்னையே இணைத்துக் கொள்வது பற்றியும் மட்டுமே நான் சிந்திப்பேன். மேலும் மடாதிபதி நீலஸ் கூறுவது போல, நாம் விரும்புவதைக் கடவுள் செய்ய வேண்டுமென்று ஒருபோதும் நாம் ஜெபிக்கக் கூடாது, மாறாக, அவர் சித்தங் கொள்வதையே நாம் செய்ய அருளும்படியே நாம் ஜெபிக்க வேண்டும்.

இதை எப்போதும் செய்கிறவன் மகிழ்ச்சியாக வாழ்வான், பாக்கியமான மரணத்தை அடைவான்; தேவ சித்தத்திற்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்தவனாய் மரிக்கிறவன், தனது இரட்சணியத்தைப் பற்றிய தார்மீக உறுதியுடன் புறப்பட்டுச் செல்கிறான்.

ஓ சேசுவே, என் மீட்பரே, நீரே என் இரட்சணியத்தின் காரணராக இருக்கும்படியாக, கடும் அவஸ்தையில் சிலுவையின் மீது உமது உயிரைக் கையளித்தீர்; ஆகவே என் மீது இரக்கமாயிருந்து என்னை இரட்சித்துக் கொள்ளும்; இத்தகைய கடும் வாதையிலும், இத்தகைய பேரன்போடும் நீர் மீட்டு இரட்சித்த ஓர் ஆன்மா நரகத்தில் என்றென்றும் உம்மை வெறுத்துப் பகைக்க அதை அனுமதியாதிரும். உம்மை நான் நேசிக்கச் செய்வதற்கு, இது வரை நீர் செய்துள்ளதற்கு மேலாய் உம்மால் எதுவும் செய்ய முடியாது. கல்வாரியில் தேவரீர் மரிக்கும்போது, **“எல்லாம் முடிந்தது'' (அரு.19:30)** என்ற நேச வார்த்தைகளை நீர் உச்சரித்தபோது, இதை நான் புரிந்துகொள்ளச் செய்தீர். ஆனால் உமது அன்பை நான் எப்படி ஏற்றுக்

கொண்டிருக்கிறேன்? கடந்த காலத்தில் உம்மைத் துன்புறுத்தியதையும், என்னை வெறுக்கும்படி உம்மைத் தூண்டியதையும் தவிர நான் வேறொன்றும் செய்யவில்லை என்று உண்மையாகவே நான் சொல்லக்கூடும். இவ்வளவு அதிகப் பொறுமையுடன் என்னைப் பொறுத்துக் கொண்டதற்காகவும், இப்போது என் நன்றி யற்றதனத்திற்குப் பரிகாரம் செய்யவும், நான் இறப்பதற்கு முன் உம்மை நேசிக்கவும் எனக்குக் காலம் கொடுத்திருப்பதற்காகவும் நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் சித்தத்தையும், என் சுதந்திரத்தையும், என்னிடமுள்ள அனைத்தையும் நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இந்தக் கணத்திலிருந்து என் வாழ்வை உமக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கிறேன், நீர் எனக்கு அனுப்ப இருக்கும் மரணத்தை, அதைச் சேர்ந்த சகல வேதனைகள் மற்றும் சூழ்நிலைகளோடு நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த என்னுடைய பலியை, என் சேசுவே, சிலுவையின் மீது நீர் எனக்காக ஒப்புக் கொடுத்த அந்தமாபெரும் பலியோடு ஒன்றிக்கிறேன். உமது திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி மரிக்க நான் ஆசையாய் இருக்கிறேன். உமது திருப்பாடுகளின் பேறுபலன்களைப் பார்த்து, உமது தேவ பராமரிப்புக்கு என்னை அர்ப்பணித்து எப்போதும் வாழும். வரத்தை எனக்குத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறேன்; மரணம் வரும்போது, உமது நல்ல விருப்பப்படி அதே அமைந்த மனதுடன் நான் அதைத் தழுவிக் கொள்ள வரமருளும். என் சேசுவே, உம்மை மகிழ்விக்கும்படி மரணமடைய நான் விரும்புகிறேன். “உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று கூறியபடி சாக நான் ஆசிக்கிறேன். நீர் இவ்வாறுதான் மரித்தீர். மரியாயே, என் மாதாவே, நானும் அப்படியே இறக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாரும்.

திங்கள்

எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டுமென கடவுள் சித்தம் கொள்கிறார்.

நம் பரிசுத்த மீட்பர் தமது சொந்த திரு இரத்தத்தை விலையாகத் தந்து, நித்திய சாவினின்று நம்மை மீட்டுக் கொண்டார். தாம் இவ்வளவு பெரிய விலை கொடுக்கக் காரணமாயிருந்த நம் ஆன்மாக்கள் இழக்கப்படுவதைக் காண அவர் விரும்புவதில்லை. தங்களை நரகத்திற்குத் தீர்ப்பிடுமாறு, தங்கள் பாவங்களைக் கொண்டு அவரை நெருக்குகிற ஆன்மாக்களை அவர் காணும்போது, அவர்கள் மீதுள்ள தயவிரக்கத்தால் அவர் அழுதபடி, **“இஸ்ராயேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்?... மனந்திரும்புங்கள், (அதனால்) பிழைத்திருப்பீர்கள்'' (எசேக.18:31)** என்கிறார். என் குழந்தைகளே, உங்களை இரட்சிக்கும்படியாக நான் ஒரு சிலுவையின் மீது மரித்திருக்க, நீங்கள் ஏன் உங்களை அழித்துக் கொள்கிறீர்கள், ஏன் உங்களையே சாபத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறீர்கள்? மனந்திரும்பி தவம் செய்தபடி என்னிடம் திரும்பி வாருங்கள், அப்போது, நீங்கள் இழந்துபோன தேவ உயிரை நான் உங்களில் மீண்டும் புதுப்பிப்பேன்.

கடவுள் எல்லா மனிதர்களின் இரட்சணியத்தையும் சித்தங் கொள்கிறார் என்று அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கற்பிக்கிறார்: “**சகல மனிதர்களும் இரட்சிக்கப்பட... அவர் சித்தமா ய் இருக்கிறார்'' (1 திமோ.2:4). “அவர் (சர்வேசுரன்) ஒருவராவது கெட்டுப்போக விரும்பாமல், எல்லாரும் தவத்துக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்பி, உங்களைப் பற்றிப் பொறுமையோடு சகித்து வருகிறார்'' என்று அர்ச். இராயப்பர் கூறுகிறார் (2 இரா.3:9).** தேவ சுதன் இதற்காகவே பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, மனிதனாக அவதரித்து, கடும் உழைப்புகளிலும், துன்பங்களிலும் 33 ஆண்டுகளைச் செலவிட்டு, இறுதியாக, நம் இரட்சணியத்திற்காகத் தம் இரத்தத்தைச் சிந்தித் தம் உயிரைக் கையளித்தார். அப்படியிருக்க, நாமே நம் இரட்சணியத்தை வேண்டாமென்று தள்ளி விடலாமா?

நீரோ, என் இரட்சகரே, தேவரீர் என் இரட்சணியத்தை சம்பாதிப்பதில் உம் வாழ்நாளெல்லாம் செலவழித்தீர். என் வாழ்வில் இவ்வளவு அதிக ஆண்டுகளை நான் எதிலே செலவழித்திருக்கிறேன்? என்னிடமிருந்து என்ன பலனை நீர்

அறுவடை செய்திருக்கிறீர்? வெட்டுண்டு, நரகத்தில் போடப்பட மட்டுமே நான் தகுதி பெற்றிருக்கிறேன். ஆனால் நீரே **பாவியின் சாவை விரும்பாமல், அவன் மனந்திரும்பி, பிழைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறீர் (எசேக்.33:11).** ஆம், என் தேவனே, நான் எல்லாவற்றையும் விட்டு விட்டு, உம்மிடம் திரும்பி வருகிறேன். நான் உம்மை நேசிக்கிறேன், உம்மை நான் நேசிப்பதால், உம்மை மனநோகச் செய்ததற்காக நான் மனஸ்தாபப்படுகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும், இனி நான் உம்மைக் கைவிட்டு விலக என்னை அனுமதியாதிரும்.

II

தங்கள் நித்திய இரட்சணியத்தை உறுதிப்படுத்திக் கொள்ள, புனிதர்கள் என்னதான் செய்யாதிருந்தார்கள்! எத்தனை பிரபுக்களும், அரசர்களும் தங்கள் இராச்சியங்களையும், நிலச் சொத்துக்களையும் துறந்து, அடைபட்ட மடங்களுக்குள் தங்களை வைத்து அடைத்துக் கொண்டார்கள்! எத்தனை இளவயதினர் தங்கள் நாட்டையும், நண்பர்களையும் விட்டுப் பிரிந்து குகைகளிலும், வனாந்தரங்களிலும் தங்கி வசித்தார்கள்! மேலும் எத்தனை வேதசாட்சிகள் மிகக் கொடூரமான வாதைகளுக்கு உட்பட்டுத் தங்கள் உயிரைக் கையளித்தார்கள்! இவற்றையெல்லாம் அவர்கள் ஏன் செய்தார்கள்? - தங்கள் ஆன்மாக்களை இரட்சித்துக் கொள்வதற்காக. நாம் என்ன செய்திருக்கிறோம்?

மரணம் அண்மையில் உள்ளது எனினும், அதைப் பற்றி நினைக்காதிருக்கிற எனக்கு ஐயோ கேடு! இல்லை, என் தேவனே, இனியும் உம்மிடமிருந்து நான் தொலைவாக வாழ மாட்டேன். நான் ஏன் தாமதிக்கிறேன்? நான் இப்போது இருக்கும் பரிதாபத்திற்குரிய நிலையில் மரணம் என் மீது வெற்றி கொள்வதற்காகவா? இல்லை, என் சர்வேசுரா, சாவுக்குத் தயாரிக்க தேவரீர் எனக்கு உதவி செய்தருளும்.

ஓ தேவனே, நான் என் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்வதில் எனக்கு உதவும்படியாக, என் இரட்சகர் எவ்வளவு அதிகமான

வரப்பிரசாதங்களை என்மீது பொழிந்தருளினார்! மெய்யான திருச் சபையின் உதரத்தில் நான் பிறக்கச் செய்தார்; பல முறை என் மீறுதல்களை அவர் மன்னித்தார்; பிரசங்கங்களிலும், ஜெபங்களிலும், தியானங்களிலும், திவ்ய நன்மைகளிலும், ஞானப் பயிற்சிகளும் எவ்வளவோ அதிகமான ஒளிகளை எனக்குத் தரத் தயை புரிந்திருக்கிறார்; அடிக்கடி தம் நேசத்திடம் வரும்படி அவர் என்னை அழைத்திருக்கிறார். ஒரே வார்த்தையில், மற்றவர்களுக்குத் தராத எத்துணை அதிகமான இரட்சணிய வழிகளை அவர் எனக்குத் தந்தருளிய் இருக்கிறார்!

இருந்தும், என் தேவனே, உலகத்திடமிருந்து என்னைப் பிரித்துக் கொண்டு, நான் என்னை முழுவதும் உமக்குத் தருவது எப்போது? என் சேசுவே, என்னைக் கண்ணோக்கும், இனி நான் உம்மை எதிர்த்து நிற்க மாட்டேன். உம்மை நேசிக்கும் கடமையை எனக்குத் தந்திருக்கிறீர். முழுவதும் உம்முடையவனாக இருக்க நான் ஆசிக்கிறேன்; என்னை ஏற்றுக்கொள்ளும், இது வரை உம்மை மிக அதிகமாக நிந்தித்துத் துன்புறுத்திய ஒரு பாவியின் அன்பைப் புறக்கணித்துத் தள்ளாதேயும். என் தேவனே, என் அன்பரே, என் சர்வமுமே, நான் உம்மை நேசிக்கிறேன். மரியாயே, நீரே என் நம்பிக்கை என்பதால், என் மீது தயவாயிரும்.

செவ்வாய்

பாவி கடவுளை நிந்திக்கிறான்.

I

சர்வேசுரனுடைய மகா மேன்மையையும், மகத்துவத்தையும் தியானித்து, தாவீதரசர்: **“ஆண்டவரே, உமக்கு நிகரானவர் யார்?"** என்று கூக்குரலிட்டார்! ஆனால் சர்வேசுரனோ, பாவிகள் தமது நட்பை வெறுத்துத் தள்ளி, அதற்குப் பதிலாக ஒரு பரிதாபமான, அற்ப உலக சுகத்தைத் தேர்ந்து கொள்வதைக் கண்டு, “என்னை யாருக்கு ஒப்பாக்கினீர்கள், அல்லது என்னை யாருக்கு சமமாக்கினீர்கள்!" என்று கேட்கிறார். பாவியானவன் கடவுளின் நட்பை விடத் தன் ஆசாபாசமும், தனது வீண்பெருமையும், தனது

உலக இன்பமும் தனக்கு அதிக மதிப்புள்ளவை என்று அறிக்கை யிடுகிறான். **“அவர்கள் ஒரு கைப்பிடி வாற்கோதுமைக்காகவும், ஒரு துண்டு உரொட்டிக்காகவுமே, நம் மக்களினத்தின் நடுவே, நமக்கெதிராகப் பாவம் செய்தார்கள்'' (எசேக்.13:19),**

பாவி கடவுளை நிந்தித்து வெறுக்கிறான். **“திருச்சட்டத்தை மீறியதால் கடவுளுக்கு அவசங்கை செய்தாய்'' (உரோ.2:23)**. ஆம்; ஏனெனில் பாவி கடவுளின் வரப்பிரசாதத்தைப் புறக்கணிக்கிறான், ஓர் அவலமான இன்பத்திற்காக, அவரது நட்பைக் காலில் போட்டு மிதிக்கிறான். ஒரு மனிதன் ஒரு இராச்சியத்தை, அல்லது உலகம் முழுவதையுமே தனதாக்கிக் கொள்ளும்படி கடவுளின் நட்பை இழப்பான் என்றால், அவரது நட்பு உலகத்தை விட - ஓராயிரம் உலகங்களை விட - அதிக மதிப்புள்ளது என்பதால், அப்போதும் கூட அவன் ஒரு மிகப் பெரிய தவறு செய்பவனாகவே இருப்பான். ஆனால் நாம் எதன் நிமித்தமாகக் கடவுளை நோகச் செய்கிறோம்? “தீயவர்கள் எதற்காகக் கடவுளை நோகச் செய்தார்கள்?'' (சங்.9:13). கொஞ்சம் மண்ணுக்காக, ஒரு கோபவெறிக்காக, ஓர் அசுத்தஇன்பத்திற்காக, கொதித்து, ஆவியாகி மறைகிற ஒன்றுக்காக, ஓர் அற்பப் பிரியத்துக்காக:”அவர்கள் ஒரு கைப்பிடி வாற்கோதுமைக் காகவும், ஒரு உரொட்டித் துண்டுக்காகவும் என்னை மீறினார்கள்.'' பாவத்திற்கு சம்மதிப்பதா, வேண்டாமா என்னும் குழப்பத்தில் பாவி தன் கரங்களில் தராசை எடுத்து, எது அதிக எடையுள்ளது - கடவுளின் வரப்பிரசாதமா, அல்லது அந்தக் கோபவெறியா, அல்லது அந்தத் திரவ ஆவியா, அந்த இன்பமா என்று எடைபோட்டுப் பார்க்கிறான். பிறகு, பாவத்திற்குச் சம்மதிக்கும்போது, தன்னைப் பொறுத்த வரை, தன் ஆசாபாசமும், தன் இன்பமும் கடவுளின் நட்பை விடத் தனக்கு அதிக மதிப்புள்ளது என்று அவன் அறிக்கையிடுகிறான். இதோ கடவுள் பாவியால் அவசங்கை செய்யப்படுகிறார்! சர்வேசுரனுடைய மகா மேன்மையையும், மகத்துவத்தையும் தியானித்து, தாவீதரசர்: **“ஆண்டவரே, உமக்கு நிகரானவர் யார்?''** என்று கூக்குரலிட்டார்! ஆனால் சர்வேசுரனோ, பாவிகள் தமது நட்பை வெறுத்துத் தள்ளி, அதற்குப் பதிலாக ஒரு பரிதாபமான, அற்ப உலக சுகத்தைத் தேர்ந்து கொள்வதைக் கண்டு, “என்னை யாருக்கு ஒப்பாக்கினீர்கள், அல்லது

என்னை யாருக்கு சமமாக்கினீர்கள்!" (இசை.40:25) என்று கேட்கிறார். ஆகவே, உனக்கு என் வரப்பிரசாதத்தை விட, அந்த அசுத்த இன்பம் அதிக மதிப்புள்ளதாக இருந்திருக்கிறது என்கிறார் ஆண்டவர்: **"நீ உன் முதுகுக்குப் பின்னால் என்னைத் தள்ளி விட்டாய்" (எசேக்.23:35).** அந்தப் பாவத்தால் நீ ஒரு கையையோ, அல்லது பத்தாயிரம் ரூபாயையோ, அல்லது அதற்கும் மிகக் குறைவான ஒரு தொகையையோ இழக்க வேண்டி வரும் என்றால், அந்தப் பாவத்தை நீ செய்யாமல் இருந்திருப்பாய். ஆகவே கடவுள் உன் கண்களில் எவ்வளவு இழிந்தவராகத் தோன்றுகிறார் என்றால், ஒரு கண நேர ஆசாபாசத்திற்காக, அல்லது ஒரு பரிதாபமான, மிக அற்பமான இன்பத்திற்காக உன்னால் நிந்தித்துத் தள்ளப்பட வேண்டியவராக அவர் கருதப்படுகிறார் என்று ஸால்வியன் என்பவர் கூறுகிறார்: "மற்ற எல்லாக் காரியங்களோடும் ஒப்பிடும்போது, கடவுள் மட்டுமே உன்னால் வெறுக்கத் தக்கவராக மதிக்கப்படுகிறார்."

ஆகவே, என் தேவனை, நீர் அளவற்ற நன்மைத்தனமாக இருக்கிறீர்; ஆனால் நான் அனுபவித்த அடுத்த கணம் மறைந்து போய்விட்ட ஓர் அற்ப சுகத்துக்காக நான் உம்மைக் கைநெகிழ்ந்தேன். ஆனால் இப்படி என்னால் புறக்கணிக்கப்பட்ட போதிலும், நான் மன்னிப்பை ஆசிக்கிறேன் என்றால், என்னை மன்னிக்க இப்போது நீர் தயாராய் இருக்கிறீர், நான் உம்மை நோகச் செய்ததற்காக மனஸ்தாபப்பட்டால், உமது வரப்பிரசாதத்தை மீண்டும் என்னில் ஸ்தாபிப்பதாக நீர் வாக்களிக்கிறீர். ஆம், என் ஆண்டவரே, இவ்வாறு உம்மை அவமானப்படுத்தியதற்காக, என் முழு இருதயத்தோடு நான் மனஸ்தாபப்படுகிறேன். எல்லாத் தீமைகளுக்கும் மேலாக என் பாவத்தை நான் அருவருத்துத் தள்ளுகிறேன்.

II

மேலும்,ஏதாவது ஓர் இன்பத்தின் நிமித்தம் பாவியானவன் கடவுளை நோகச் செய்யும்போது, அந்த இன்பமே அவனது தெய்வமாகிவிடுகிறது. ஏனெனில் அதையே அவன்தனது இறுதி நோக்கமாக்கிக் கொள்கிறான். "ஒவ்வொருவனும் ஆசிக்கும்

காரியத்தையே அவன் வழிபடுவான் என்றால், அது அவனுக்கு ஒரு தெய்வமாக இருக்கிறது. இருதயத்திலுள்ள ஒரு துர்க்குணம் பீடத்தின் மீதுள்ள விக்கிரகமாக இருக்கிறது" என்று **அர்ச். ஜெரோம்** கூறுகிறார். “இன்பங்களை நீ நேசிக்கிறாய் என்றால், அந்த இன்பங்கள் உன் தெய்வமாக இருக்கின்றன" என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** கூறுகிறார். **அர்ச். சிப்ரியன்** தம் பங்கிற்கு, “கடவுளுக்குப் பதிலாக மனிதன் வேறு எதைத் தேர்ந்து கொண்டாலும், அவன் அதைத் தனது தெய்வமாக்குகிறான்" என்கிறார். ஜெரோபோவாம் கடவுளுக்கு எதிராகக் கலகம் செய்தபோது, மக்களைத் தன்னோடு விக்கிரக வழிபாட்டிற்குள் இழுத்துக் கொள்ள அவன் முயன்றான். எனவே அவன் தன் விக்கிரகங்களை அவர்களுக்குக் காட்டி, **“ஓ இஸ்ராயேலே, இவர்களே உன் தேவர்கள்"** என்றான் (3 அரசர்.12:28). இவ்வாறே பசாசும் பாவிக்கு ஏதாவது ஓர் உலக இன்பத்தைக் காட்டி, “உனக்கும் கடவுளுக்கும் என்ன இருக்கிறது? இந்தஇன்பத்தில், இந்த ஆசாபாசத்தில் உன் தெய்வத்தைப் பார்; இதை எடுத்துக் கொள், கடவுளை விட்டுவிடு" என்கிறது. பாவி இதற்கு சம்மதிக்கும்போது, அந்த இன்பத்தை அவன் தன் இருதயத்தில் தெய்வமாக வைத்து ஆராதிக்கிறான்: “இருதயத்தில் உள்ள ஒரு துர்க்குணம், பீடத்தின் மீதுள்ள ஒரு விக்கிரகமாக இருக்கிறது."

பாவியானவன் கடவுளை அவசங்கை செய்கிறான் என்றாலும், குறைந்தபட்சம் அவரது சமூகத்தில் அவன் அப்படிச் செய்யாமலாவது இருப்பானா? இல்லை! ஆ, அவன் அவரது திருமுகத்திற்கு முன்பாகவே அவரை அவமானப்படுத்துகிறான், ஏனெனில் கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். **“நாம் பரலோகத்தையும், பூலோகத்தையும் நிரப்புகிறோம்" (எரே.23:24).** இதைப் பாவியும் அறிந்திருக்கிறான். இருந்தாலும் கடவுளின் கண்களுக்கு முன்பாகவே அவருக்குக் கோபமூட்ட அவன் தயங்குவதில்லை. **“அவர்கள் நமக்குக் கோபமூட்டும் காரியத்தை அவர்கள் நம் கண்களுக்கு முன்பாகவே செய்கிறார்கள்" (இசை.65:3).**

இதோ, என் தேவனே, நான் நம்பியுள்ளது போல, நான் இப்போது உம்மிடம் திரும்பி வருகிறேன்; நீர் ஏற்கெனவே என்னை உம் குழந்தையாக ஏற்று என்னை அரவணைக்கிறீர். ஓ அளவற்ற

நன்மைத்தனமே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் இப்போது எனக்கு உதவி புரியும், என்னிடமிருந்து உம்மை மீண்டும் தள்ளிவிட ஒருபோதும் அனுமதியாதேயும். நரகம் என்னைச் சோதிப்பதை நிறுத்தாது; ஆனால் நீர் நரகத்தை விட அதிக வல்லமையுள்ளவராக இருக்கிறீர். நான் எப்போதும் உமக்கு என்னை ஒப்புக் கொடுத்து வருவேன் என்றால், இனி ஒருபோதும் என்னை நான் உம்மிடமிருந்து விலக்கிக் கொள்ள மாட்டேன் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே, நான் என்னை எப்போதும் உமது பாதுகாவலில் வைக்கும்படியாகவும், இப்போது நான் செய்வது போல, "ஆண்டவரே, எனக்கு ஒத்தாசை செய்யும்; எனக்கு ஒளி தாரும், எனக்கு பலம் தாரும், எனக்கு நிலைமை வரம் தாரும், எனக்குப் பரலோகத்தைத் தாரும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, ஆன்மாக்களின் உண்மையான பரலோகமாக இருக்கிற உமது தேவசிநேகத்தை எனக்குத் தந்தருளும்" என்று எப்போதும் உம்மிடம் நான் ஜெபிக்கும்படியாகவும், நீர் எனக்குத் தந்தருள வேண்டிய வரம் இதுவே. ஓ அளவற்ற நன்மைத்தனமே, நான் உம்மை நேசிக்கிறேன், எப்போதும் உம்மை நேசிக்க ஆசையாய் இருக்கிறேன். சேசுக்கிறீஸ்துநாதரின் அன்பிற்காக, என் மன்றாட்டைக் கேட்டருளும். மரியாயே, நீர் பாவிகளின் அடைக்கலமாக இருக்கிறீர்; உம் சர்வேசுரனை நேசிக்க ஆசிக்கும் பாவியாகிய எனக்கு உதவி செய்தருளும்.

புதன்

"கெட்டவர்களுக்கு சமாதானமில்லை."

I

சமாதானம்! என்ன சமாதானம்? இல்லை என்கிறார் சர்வேசுரன். "கெட்டவர்களுக்கு சமாதானமில்லை" (இசை.48:22). ஒருவனுக்கு வலிமை மிக்க எதிரி ஒருவன் இருக்கிறான் என்றால், அவனால் சமாதானமாய் உண்ணவோ, உறங்கவோ முடியாது; கடவுளையே தன் எதிரியாகக் கொண்டிருப்பவன் சமாதானத்தில் இளைப்பாற முடியுமா?!

இருதயத்தைத் திருப்திப்படுத்த இயலாத இவ்வுலக இன்பங்களும், செல்வங்களும் வீண் என்று மட்டும் சாலமோன் சொல்லாமல், அவை ஆத்துமத்தை சஞ்சலப்படுத்தும் வேதனைகள் என்றும் கூறுகிறார். **“எல்லாம் விழலும், ஆத்துமத்திற்கு சஞ்சலமுமாய் இருக்கின்றன'' (சங்கப்.1:14).** பரிதாபத்திற்குரிய பாவிகள்! தங்கள் பாவங்களில் இன்பம் காணலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள், ஆனால் கசப்பையும், மனவுறுத்தலையும் மட்டுமே அவர்கள் காண்கிறார்கள்: **“அவர்கள் வழிகளில் அழிவும் நிர்ப்பாக்கியமும் இருக்கின்றன. சமாதானத்தின் வழியை அவர்கள் அறிந்ததில்லை'' (சங்.13:3).** சமாதானம்! என்ன சமாதானம்! இல்லை என்கிறார் ஆண்டவர்: **“கெட்டவர்களுக்கு சமாதானமில்லை'' (இசை.48:22).** முதலாவதாக, பாவம் தன்னோடு தேவ பழிவாங்குதல் பற்றிய கடும் அச்சத்தைக் கொண்டு வருகிறது. ஒருவனுக்கு வலிமை மிக்க எதிரி ஒருவன் இருக்கிறான் என்றால், அவனால் சமாதானமாய் உண்ணவோ, உறங்கவோ முடியாது; கடவுளையே தன் எதிரியாகக் கொண்டிருப்பவன் சமாதானத்தில் இளைப்பாற முடியுமா? **“தீமை செய்பவர்களுக்கு அஞ்சுங்கள்'' (பழமொழி.10:29).** ஒரு நில நடுக்கமோ, இடி முழக்கமோ உண்டானால், பாவத்தில் வாழ்பவன் எப்படி நடுங்காமலிருப்பான்! அசையும் ஒவ்வொரு இலையும் கூட அவனை எச்சரிக்கிறது: “**பேரச்சத்தின் ஓசை எப்போதும் அவன் காதுகளில் இருக்கிறது'' (யோபு.28:1).** தன்னைத் துரத்துபவனைக் காணாவிடினும், அவன் பறந்தோடுகிறான். “**எவனும் துரத்தாமலே தீயவன் பறந்தோடிப் போகிறான்'' (பழ.28:1).** அவனைத் துரத்துவது யார்? அவனுடைய சொந்தப் பாவமே. காயின்தன் சகோதரனான ஆபேலைக் கொன்றபின்: **“ஆகவே, என்னைக் காண்கிற எவனும் என்னைக் கொல்வானே!'' என்றான் (ஆதி.4:4).** எவனும் அவனைக் காயப்படுத்த மாட்டான் என்று ஆண்டவர் அவனுக்கு உறுதி தந்த போதிலும் - இல்லை, அது அப்படி இருக்காது - வேதாகமம் கூறுவது போல, காயின் எப்போதும் ஓடிக்கொண்டேய் இருக்கும் ஓர் அகதியாக இருந்தான்: **“காயின் பூமியின்மீது பரதேசியாய் சஞ்சரித்தான்'' (ஆதி.4:16).** காயினைத் துன்பப்படுத்தியது அவனுடைய சொந்தப் பாவங்களே அல்லாமல் வேறு என்ன?

மேலும், பாவம் தன்னோடு மனவுறுத்தலையும்-- இடைவிடாமல் அரித்துத் தின்னும் அந்தக் கொடூரமான புழுவையும்-- கொண்டு வருகிறது. ஈனப் பாவி, நாடகத்திற்கும், நடனங்களுக்கும், விருந்துகளுக்கும் போகிறான்.; அவனது மனசாட்சி அவனிடம்: "நீ கடவுளின் பகைவனாக இருக்கிறாய்; நீ இறக்க நேர்ந்தால், எங்கே செல்வாய்?" என்று கேட்கிறது. மனவுறுத்தல் இவ்வாழ்விலும் கூட எவ்வளவு பெரிய வாதைஎன்றால், அதிலிருந்து தப்பிப்பதற்காகச் சிலர் தற்கொலை செய்து விடுகிறார்கள். இவர்களில் ஒருவன் அவநம்பிக்கையின் காரணமாக நான்று கொண்ட செத்த யூதாஸ் ஆவான். மற்றொருவனைப் பற்றிப் பின்வருமாறு விவரிக்கப் படுகிறது: அவன் ஒரு குழந்தையைக் கொலை செய்தபின், மன உறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு துறவி ஆனான். ஆனால் துறவறத்திலும் கூட சமாதானத்தைக் கண்டடைய முடியாமல், அவன் ஒரு நீதிபதியிடம் போய், தன் குற்றத்தை அவரிடம் ஒத்துக் கொண்டு, மரண தண்டனைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டான்.

ஓ வீணாக்கப்பட்டு விட்ட வாழ்வே! ஓ என் தேவனே, உம்மை நோகச் செய்தபின் நான் பட்ட வேதனைகளை உம்மை மகிழ்விக்கும் கருத்தோடு நான் அனுபவித்திருந்தேன் என்றால், மோட்சத்திற்காக எவ்வளவு அதிகமான பேறுபலனை இப்போது நான் பெற்றிருப்பேன்! ஆ, என் ஆண்டவரே, எதற்காக நான் உம்மை விட்டுப் பிரிந்து, உமது வரப்பிரசாதத்தை இழந்து போனேன்? ஒரு குறுகிய கால, விஷமேறிய இன்பங்களுக்காக! அவையோ எனக்குச் சொந்தமான அடுத்த கணமே மாயமாக மறைந்து விட்டன, ஆனதால் என் இருதயத்தை அவை முட்களும், கசப்பும் நிறைந்ததாக விட்டுச் சென்றன. ஆ, என் பாவங்களே, நான் ஆயிரம் தடவை உங்களை வெறுத்துச் சபிக்கிறேன். என் சர்வேசுரா, எவ்வளவோ பொறுமையோடு என்னை சகித்துக் கொண்ட உமது இரக்கத்தை நான் வாழ்த்திப் போற்றுகிறேன். என் சிருஷ்டிகரும் மீட்பருமானவரே, எனக்காக உம் உயிரைக் கையளித்தவரே, நான் உம்மை நேசிக்கிறேன்; உம்மை நான் நேசிப்பதால், உம்மை நோகச் செய்ததற்காக என் முழு இருதயத்தோடும் மனஸ்தாபப்படுகிறேன்.

II

கடவுள் பாவிகளைப் புயல்வீசும் கடலுக்கு ஒப்பிடுகிறார். "துன்மார்க்கரோ, அடங்க அறியாது கொதித்தெழும் கடலைப் போல்... இருக்கிறார்கள்" (இசை.57:20). நான் உன்னிடம் கேட்கிறேன்: யாராவது ஒருவனை நாடக அரங்குக்கு, அல்லது நடன அரங்குக்கு, அல்லது ஒரு விருந்துக்கு அழைத்துச் சென்று, அங்கே அவனைத் தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டால், அங்கே நடைபெறும் கேளிக்கைகளை அவனால் அனுபவிக்க முடியுமா? பாவியின் நிலையும் அதுதான். உலக உல்லாசங்களுக்கு நடுவில், ஆனால் கடவுள் இன்றி இருக்கிற அவனது ஆத்துமம் தலைகீழாகத் திருப்பப்பட்டது போல் இருக்கிறது. அவன் உண்ணலாம், குடிக்கலாம், நடனமாடலாம்; ஆடம்பரமான உடைகள் அணிந்து, பிறரால் மதித்துப் போற்றப்படலாம், கௌரவிக்கப்படலாம், அல்லது பெரும் உலக செல்வங்கள் அவனுக்குச் சொந்தமாகலாம். ஆனால் அவன் சமாதானத்தைக் கொண்டிருக்க மாட்டான்: கெட்டவர்களுக்கு சமாதானமில்லை. சமாதானம் கடவுளிடமிருந்து மட்டுமே வருகிறது; கடவுள் தம் எதிரிகளுக்கு அல்ல, தம் நண்பர் களுக்கே அதைக் கொடுக்கிறார்.

இவ்வுலக இன்பங்கள் வறண்டு போகின்றன என்று **அர்ச். வின்சென்ட் ஃபெரர்** கூறுகிறார்; அவை இருதயத்திற்குள் நுழைவதில்லை: "எங்கே தாகம் இருக்கிறதோ, அங்கே ஊடுருவிச் செல்லாத நீர்த்தாரைகள் அவை." பாவி அழகிய பின்னல் வேலை செய்த விலையேறப்பெற்ற உடைகளை அணியலாம், அல்லது தன் விரலில் அற்புதமான வைர மோதிரம் அணியலாம்; தன் விருப்பப்படி அருமையான அறுசுவை விருந்தாடலாம்; ஆனால் அவனது பரிதாபமான இருதயம் முட்களும், கசப்பும் நிரம்பியதாகவே நிலைத்திருக்கும்; ஆகவே செல்வங்களும், இன்பங்களும், கேளிக்கைகளும் அவனைச் சூழ்ந்திருந்தாலும், எப்போதும் அமைதியற்றவனாகவும், சிறு பிரச்சினைக்கும் வெறி பிடித்த நாயைப் போல கோப வெறி கொள்பவனாகவுமே நீ அவனைக் காண்பாய். கடவுளை நேசிப்பவனோ, தனக்கு

விரோதமான காரியங்கள் நிகழும்போது, தேவ சித்தத்திடம் தன்னைக் கையளித்து, சமாதானத்தைக் கண்டடைகிறான். ஆனால் தேவ சித்தத்திற்கு விரோதியாக இருப்பவனால் இதைச் செய்ய முடியாது. ஆகவே தன்னை அமைதிப்படுத்தும் வழியை அவன் அறியாதிருப்பான். அந்த மகிழ்ச்சியற்ற மனிதன் பசாசுக்கு ஊழியம் செய்து, மனவேதனையையும், கசப்பையும் மட்டுமே அந்தக் கொடுங்கோலனிடமிருந்து கூலியாகப் பெறுகிறான். ஆ, தேவ வார்த்தை ஒருபோதும் தவற முடியாததாக இருக்கிறது. "உனக்கு அனைத்தும் மிகுதியாகி, மன மகிழ்ச்சியுடனும், இருதயக் களிப்புடனும் நீ இருக்கையில், உன் தேவனாகிய கர்த்தருக்கு நீ ஊழியம் செய்யாமல் போனதால், பசி வேதனைப்பட்டு, தாக வேதனைப்பட்டு, நிர்வாணம் முதலிய சகல குறைவும், வெறுமையும் பட்டு, கர்த்தர் உனக்கு எதிராக அனுப்பும் சத்துருக்களுக்கு ஊழியம் செய்வாய்" (உபா.28:47,48) என்று அது கூறுகிறது. பழிவாங்கத் துடிக்கும் மனிதன், தன்னையே பழிதீர்த்துக் கொள்ளும்போதும், பரிசுத்த கற்பில்லாத மனிதன்தான் இச்சித்துத் தேடியதை அடைந்த பின்னும், பேராசையுள்ளவன் தான் நாடியதைப் பெற்றுக் கொண்டபின்னும், எந்தத் துன்பத்தைத்தான் அனுபவிக்காமல் இருப்பான்! ஓ எத்தனை பேர்! அவர்கள் தங்களை அழித்துக் கொள்ளும் விதமாக இப்போது அனுபவிக்கும் துன்பங்களைக் கடவுளுக்காக மட்டும் அனுபவித்திருப்பார்கள் என்றால், உண்மையாகவே அவர்கள் பெரும் புனிதர்களாக ஆகியிருப்பார்கள்!

என் சர்வேசுரா, என் சர்வேசுரா, நான் ஏன் உம்மை இழந்து போனேன்; உம்மை விற்று எதை வாங்கிக் கொண்டேன்? நான் செய்துள்ள தீமையை இப்போது நான் அறிந்திருக்கிறேன்; இப்போது உமது அன்பை இழப்பதைக் காட்டிலும், அனைத்தையும், உயிரையும் கூட இழக்கவும் நான் தீர்மானம் செய்திருக்கிறேன். நித்திய பிதாவே, சேசுகிறீஸ்துநாதரின் அன்பிற்காக, எனக்கு ஒளி தாரும்; நீர் எவ்வளவு மேலான நன்மைத்தனமாய் இருக்கிறீர் என்றும், உமது வரப்பிரசாதத்தை நான் இழக்கும்படியாக, பசாசு எனக்குத் தரும் இன்பங்கள் எவ்வளவு அருவருப்புக்குரியவை என்றும் நான் அறிந்து கொள்ளச் செய்தருளும்; நான் உம்மை நேசிக்கிறேன்; ஆயினும்

இன்னும் அதிகமாக உம்மை நேசிக்க நான் விரும்புகிறேன். நீரே என் ஒரே சிந்தனையும், ஒரே ஆசையும், ஒரே நேசமுமாக இருக்க எனக்கு வரமருளும். உமது திருக்குமாரனின் பேறுபலன்களின் வழியாக உமது நன்மைத்தனத்திலிருந்து நான் எல்லாவற்றையும் பெறறுக்கொள்வேன் என்று நம்பிய் இருக்கிறேன். மரியாயே, என் மாதாவே, சேசுகிறீஸ்துநாதரின் மீது உமக்குள்ள அன்பைக் குறித்து, மரணம் வரையில் அவருக்கு ஊழியம் செய்யவும் அவரை நேசிக்கவும் எனக்கு வேண்டிய ஒளியையும், பலத்தையும் பெற்றுத் தர உம்மை மன்றாடுகிறேன்.

வியாழன்

கடவுள் இரக்கமுள்ளவர், இருந்தும் பலர் ஒவ்வொரு நாளும் இழக்கப்படுகிறார்கள்.

I

ஆனால் கடவுள் இரக்கமுள்ளவராக இருக்கிறாரே என்று பாவி சொல்கிறான். நான் அவனுக்குப் பதில் சொல்கிறேன்: அதை யார் மறுக்கிறார்கள்? உண்மைதான், கடவுளின் இரக்கம் அளவற்றதுதான். ஆயினும் ஒவ்வொரு நாளும் பலர் இழக்கப்படுகிறார்களே! **“(மனஸ்தாபத்தால்) நொறுங்கிய இருதயமுள்ளவர்களைக் குணமாக்க ... அவர் என்னை அனுப்பினார்" (இசை.61:1).** நல்ல மனமுள்ளவர்களைக் கடவுள் குணப்படுத்துகிறார். அவர் பாவத்தைமன்னிக்கிறார்; ஆனால் பாவத்தில் பிடிவாதமாக நிலைத்திருப்பவனை அவர் மன்னிக்க இயலாது. “நான் இன்னும் இளைஞன்தான்" என்று பாவி பதில் கூறலாம். உண்மை! நீ இளைஞன்தான்; ஆனால் கடவுள் வருடங்களையல்ல, பாவங்களையே கணக்கிடுகிறார். இது அனைவருக்கும் ஒரே விதமாக இருப்பதில்லை. ஒருவனுக்குக் கடவுள் நூறு பாவங்களையும், மற்றொருவனுக்கு ஆயிரம் பாவங்களையும் மன்னிக்கிறார், இன்னொருவனையோ, அவன் இரண்டாவது பாவம் கட்டிக் கொண்ட உடனேயே நரகத்தில் தள்ளுகிறார். எத்தனை பேரை அவர்களுடைய முதல் பாவத்திலேயே அவர் அங்கே அனுப்பிய்

இருக்கிறார்! ஐந்து வயதுக் குழந்தை ஒன்று ஒரு தேவதூஷணம் கூறியதற்காக, அடுத்த கணம் நரகத்தில் தள்ளப்பட்டதாக அர்ச். கிரகோரியார் கூறுகிறார்! பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருத்தி தனது முதல்பாவத்திற்காக நரகத்திற்குத் தீர்ப்பிடப்பட்டதாக திவ்விய கன்னிகை **ஃப்ளாரன்ஸின் பெனடிக்டா** என்னும் தேவ பணிப்பெண்ணுக்கு வெளிப்படுத்தினார்கள். எட்டு வயதேயான மற்றொரு சிறுவன் முதல் பாவம் செய்தவுடனே இறந்து, தன் ஆன்மாவை இழந்து போனான். அத்திமரத்தில்தாம் கனி எதையும் காணாத முதல் தடவையே நமதாண்டவர் அதைச் சபித்தார் என்றும், அது பட்டுப் போயிற்றென்றும் அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம்: **"இனி ஒருக்காலும் உன்னிடத்தில் காய் காய்க்காமல் போகட்டும்" (மத்.21:19).** மற்றொரு முறை சர்வேசுரன்: **"தமாஸ்குவின் மூன்று பாதகங்களை மன்னிப்போம், நான்காவதிலோ அதை நாம் மனந்திருப்ப மாட்டோம்" என்றார் (ஆமோஸ்.1:3).** மிதமிஞ்சின நம்பிக்கையுள்ள மனிதன் யாராவது கடவுளிடம் அவர் ஏன் மூன்று பாவங்களை மன்னித்தாலும்,நான்காவதை மன்னிக்க மாட்டார் என்று கேட்கலாம். அதில், நாம் கடவுளின் தெய்வீகத் தீர்ப்புகளை ஆராதித்து, அப்போஸ்தலரோடு சேர்ந்து: **"ஆ, தெய்வ ஞானம், அறிவு இவைகளின் திரவிய பொக்கிஷம் எவ்வளவோ ஆழமானது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் எவ்வளவோ புத்திக்கெட்டாதவைகளுமாய், அவருடைய வழிகள் எவ்வளவோ ஆராய்ந்தறியக் கூடாதவைகளுமாய் இருக்கின்றன" (உரோ.11:33)** என்று சொல்ல வேண்டும். "தாம் யாரை மன்னிக்கிறார் என்றும், யாரை மன்னிப்பதில்லை என்றும் அவர் நன்றாக அறிந்திருக்கிறார்; அவர் யாருக்காவது இரக்கம் காட்டுகிறார் என்றால், அதை அவர் இலவசமாகவே தருகிறார்; அவர் அதை மறுக்கும்போதோ, நீதியுடன் அதைத் தர மறுக்கிறார்" என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார்.

பிடிவாதமுள்ள பாவி, "ஆனால் நான் மிக அடிக்கடி கடவுளை நோகச் செய்திருக்கிறேன், அவரும் என்னை மன்னித்திருக்கிறாரே; ஆகவே, இந்த இன்னொரு பாவத்தையும் அவர் மன்னிப்பார் என்று நான் நம்புகிறேன்" என்று பதில் சொல்வான். ஆனால் நான் சொல்கிறேன்: கடவுள் இது வரை உன்னைத் தண்டிக்கவில்லை

என்பதால், இனியும் அது அப்படித்தான் இருக்குமா? (பாவத்தின்) அளவு நிரம்பி விடும், அப்போது தண்டனை வரும். சம்சோன் தாலிலாவோடு தன் அசுத்த நடத்தையைத் தொடர்ந்து கொண்டே, முன்பு போல பிலிஸ்தியர்களின் கரங்களிலிருந்து தான் தப்பி விட முடியும் என்று நம்பினான்: **“முன்பு போல் என் சங்கிலிகளை உடைத்து நான் புறப்பட்டுப் போவேன்" (நியா.16:20)**. ஆனால் அந்தக் கடைசி முறை அவன் பிடிபட்டான், இறுதியில் தன் உயிரையும் இழந்தான். “பாவம் செய்தேன், அதனால் எனக்கு என்ன தீங்கு வந்தது? என்று சொல்லாதே. **“நான் மிக அநேகப் பாவங்களைக் கட்டிக் கொண்டேன், கடவுள் என்னை ஒருபோதும் தண்டிக்கவில்லை என்று சொல்லாதே"** என்கிறார் ஆண்டவர்: **“ஏனெனில் உன்னதக் கடவுள் பொறுமையாயிருந்தபின் தண்டிப்பார்" (சர்வப் (சீராக்)5:4).** அதாவது, காலம் வரும், அப்போது அவர் அனைத்திற்கும்தண்டனைதருவார். அவரது இரக்கம் எவ்வளவு பெரிதாயிருந்ததோ, அந்த அளவுக்கு தண்டனையும் பெரிதாய் இருக்கும்.

நான் சோதிக்கப்படும்போது, ஓ இரக்கமுள்ள தேவனே, நான் எப்போதும் உடனே ஓடி வந்து உம்மிடம் தஞ்சம் புகுவேன். இது வரை என் வாக்குறுதிகளிலும், என் தீர்மானங்களிலும் நான் நம்பிக்கை வைத்திருந்தேன், என் சோதனைகளில் உம்மிடம் என்னை ஒப்புவிப்பதில் நான் அசட்டையாயிருந்தேன். இதுவே என் அழிவாக இருந்து வந்திருக்கிறது. இல்லை; இந்நாள் முதல் நீரே என் நம்பிக்கையாகவும் பலமாகவும் இருப்பீர். இவ்வாறு எல்லாவற்றையும் செய்து முடிக்க வல்லவனாக நான் இருப்பேன். ஆகையால், ஓ என் சேசுவே, எப்போதும் உம்மிடம் என்னைக் கையளித்து, என் எல்லாத் தேவைகளிலும் உமது உதவியை மன்றாடும்படியாக, உமது பேறுபலன்களின் வழியாக, எனக்கு அருள் தாரும். ஓ என் இராஜரீக நன்மைத்தனமே, நேசிக்கப்படத் தக்க அனைத்திற்கும் மேலாக நேசிக்கப்படத் தக்கவரே, நம்மை நான் நேசிக்கிறேன், உம்மை மாத்திரமே நான் நேசிப்பேன். ஆயினும் நீர் எனக்கு உதவி செய்ய வேண்டும். ஓ மரியாயே, என் மாதாவே, நீரும் உமது மன்றாட்டால் எனக்கு உதவி செய்ய வேண்டும்; உமது

பாதுகாவலின் மேற்போர்வைக்குள் என்னை மறைத்து வைத்துக் கொளளும், நான் சோதிக்கப்படும்போதெல்லாம் உம்மைக் கூவியழைக்க எனக்கு வரமருளும்; உமது திருப்பெயர் எனக்குக் காவல் அரணாய் இருக்கும்.

II

மனந்திரும்ப மறுக்கும் பாவியைக் கடவுள் தண்டிக்கும் நேரத்தை விட அவர் அவனிடம் பொறுமையோடு இருக்கும்போது தான் நாம் அதிகமாக பயப்பட வேண்டுமென்று அர்ச். கிறிசோஸ்தோம் கூறுகிறார்: “உடனே தண்டிப்பதற்குப் பதிலாக, அவர் பொறுமையோடு இருக்கும்போதுதான் நாம் அஞ்சுவதற்கு அதிகக் காரணம் உள்ளது." ஏனெனில், **அர்ச். கிரகோரியார்** கூறுகிறபடி, கடவுள் யாருக்காக எல்லாவற்றிலும் அதிகப் பொறுமையுடன் காத்திருக்கிறாரோ, அவர்கள் நன்றியற்றவர்களாகவே நிலைத்திருந்தால், அவர்களை அவர் அதிக உக்கிரமாகத் தண்டிக்கிறார்: “யாருக்காக அதிகக் காலம் காத்திருக்கிறாரோ, அவர்கள் அதிகக் கடுமையாகத் தண்டிக்கிறார்." அவர் யாரை மிக நீண்ட காலம் பொறுமையோடு சகித்துக் கொள்கிறாரோ, அவர்கள் இறுதியில், பெரும்பாலும் மனந்திரும்ப நேரமின்றி, அகால மரணமடைகிறார்கள்: “யார் நீண்ட காலம் பொறுமையோடு தாங்கிக் கொள்ளப்படுகிறார்களோ, அவர்கள் தாங்கள் இறக்குமுன் ஒரு துளி கண்ணீர் கூட சிந்தப்பட அனுமதிக்கப்படாமல், திடீர் மரணத்தால் பிடுங்கிக் கொள்ளப்படுகிறார்கள்." குறிப்பாக, கடவுள் உனக்குத் தந்திருக்கும் ஒளி எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பாவத்தில் உன் குருட்டுத்தனமும், பிடிவாதமும் அதிகமாய் இருக்கும். **“அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்பிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அவர்கள் அறியாதிருந்தால், அவர்களுக்கு நலமாய் இருக்கும்"** என்று அர்ச். இராயப்பர் கூறுகிறார் (2 இரா.2:21). அர்ச். சின்னப்பரும் (தார்மீக முறைப்படி பேசும்போது) ஞான ஒளியைப் பெற்ற பின்பு பாவம் செய்யும் ஓர் ஆத்துமம்

மீண்டும் மனந்திரும்புவது இயலாத காரியம் என்று கூறுகிறார்: **"ஒரு முறை ஞான ஒளியடைந்தும், பரம கொடையை சுவை பார்த்தும், இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களைப் பெற்றும்... தவறினவர்கள் மனந்திரும்பிப் புதுப்பிக்கப்படுவது கூடாத காரியம்" (எபி.6:4,6).**

தமது அழைப்புகளுக்குச் செவிடர்களாய் இருப்பவர்களுக்கு எதிராக ஆண்டவர் கூறுவது, உண்மையாகவே பயங்கரமானதாக இருக்கிறது: **"நான் கூப்பிட்டேன், நீங்கள் கேட்க மாட்டோமென மறுத்தீர்கள்; நான் என் கரத்தை நீட்டினேன், அதை உற்றுப் பார்த்தவனுமில்லை. நீங்கள் மரணத் தருவாய் இருக்கிறபோது நானும் நகைப்பேன்; நீங்கள் எதற்குப் பயந்திருக் கிறீர்களோ, அது உங்களுக்கு நேரிடுகையில் உங்களைக் கேலிசெய்வேன்" (பழமொழி. 1:24,26).** "நானும்" என்ற வார்த்தைகளை மனதில் குறித்துக் கொள்ளுங்கள்; பாவி பாவசங்கீர்த்தனம் செய்து, வாக்குறுதிகள் தந்து, ஆனால் எப்போதுமே அவருக்குத் துரோகம் செய்து, அவரை ஏளனம் செய்து நகைத்தது போலவே, அவரும் அவனது மரண வேளையில் அவனைக் கேலி செய்வார். மேலும்**, "மதியீனத்தை மீண்டும் செய்யும் அவிவேகி (விவேகமற்றவன்), தான் கக்கினதுக்கு மீண்டும் வரும் நாய்க்கு ஒப்பானவன்"** என்று ஞானியானவர் கூறுகிறார் (பழமொழி. 26:11). ஆகவே, பாவசங்கீர்த்தனத்தில்தான் வெறுத்துப் பகைப்பதாகக் கூறிய பாவங்களை மீண்டும் செய்பவன், கடவுளுக்கு அருவருப்புக்குரியவனாக ஆகிறான்!

ஒ என் சர்வேசுரா, உமது திருப்பாதங்களில் விழுந்துகிடக்கும் அடியேனைப் பாரும். முன்பு அருவருத்துத் தள்ளிய விலக்கப்பட்ட கனியைத் தின்னும்படி மிக அடிக்கடி திரும்பி வந்த அந்த அருவருப்புக்குரிய பாவி நானே. என் மீட்பரே, உமது இரக்கத்தைப் பெற நான் தகுதியற்றவன்; ஆனால் தேவரீர் எனக்காகச் சிந்திய திரு இரத்தம், அடியேன் உமது இரக்கத்தைப் பெறுவேன் என்று உறுதியாக நம்பும்படி என்னைத் தூண்டி வற்புறுத்துகிறது. எவ்வளவு அடிக்கடி நான் உம்மை நோகச் செய்து, நீரும் என்னை மன்னித்திருக்கிறீர்! உம்மை இனி ஒருபோதும் மனநோகச் செய்வதில்லை என்று நான் வாக்களித்திருக்கிறேன்; இருந்தும் கக்கினதைத் தேடி நான் திரும்பிச்

சென்றேன். நீரோ மீண்டும் என்னை மன்னித்தீர். ஆகவே, தேவரீர் நேரடியாக என்னை நரகத்திற்கு அனுப்பும்படி, அல்லது நரகத்தை விடப் பெரிய தண்டனையாக, நீர் பாவங்களுக்கே என்னைக் கையளித்து விடும்படி நான் உமக்காகக் காத்திருப்பேனா? ஓ, என் தேவனே, நான் மனந்திரும்பி தவம் செய்வேன்; உமக்கு அடியேன் பிரமாணிக்கமாக இருக்கும்படியாக, என் நம்பிக்கையெல்லாம் உம்மில் வைப்பேன்.

வெள்ளி

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 01

I

சிலுவையில் அறையுண்ட சேசுவின் துன்பங்களிலிருந்து அல்லாமல், வாதைகளையும், வேதசாட்சியத்தையும், மரணத்தையும் கூட தாங்கப் புனிதர்கள் வேறு எந்த ஆதாரத்திடம் இருந்து தைரியத்தையும், பலத்தையும் பெற்றுக் கொண்டார்கள்? கப்புச்சின் துறவியான அர்ச். லியோனெஸ்ஸாவின் சூசை என்பவர், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவன் தம் உடலில் செய்ய இருந்த வேதனை தரும் அறுவைக்காக, அவர்கள் தம்மைக் கயிறுகளால் கட்டப் போவதைக் கண்டவுடன், அவர் தமது கரங்களில் தமது பாடுபட்ட சுரூபத்தை எடுத்து, அவர்களை நோக்கி: “ஏன் இந்தக் கயிறுகள்? எதற்காக இந்தக் கயிறுகள்? இதோ, இவையே என் சங்கிலிகள்-- இதோ, என் மீதுள்ள அன்பிற்காகச் சிலுவையில் அறையப்பட்ட என் இரட்சகர்! அவர் தம் நிமித்தமாக ஒவ்வொரு துன்ப சோதனையையும் தாங்கிக்கொள்ளும்படி, தம் துன்பங்களின் வழியாக என்னை நெருக்குகிறார்" என்றார். இவ்வாறு தமது உறுப்பு ஒன்று வெட்டி அகற்றப்பட்டபோது, எந்த முறைப்பாடுமின்றி, “மயிர் கத்தரிப்போன் முன் ஊமையாகவும், வாய் திறவாமலுமிருந்த செம்மறிப் புருவையான" (இசை.53:7) சேசுவையே உற்று நோக்கியபடி, அந்தக் கொடிய வேதனையைத் தாங்கிக் கொண்டார். அப்படி இருக்க, “நம் பாவங்களுக்காகக் காயப்பட்ட" (இசை.53:5) சேசுவைப் பற்றி ஒருவன் சிந்திக்கும்போது, தான் தவறான முறையில் துன்புறுத்தப்படுவதாக அவன் எப்படி முறையிட முடியும்? சேசுநாதர் “மரணமட்டும் கீழ்ப்படிதலுள்ளவராக" (பிலிப்.2:8) இருந்திருக்க, ஏதாவது ஒரு அசௌகரியத்தைக் காரணம் காட்டி, கீழ்ப்படிய மாட்டேன் என்று யார் சொல்ல முடியும்? சேசுநாதர் ஒரு மூடனைப் போலவும், பரிகார இராஜாவைப் போலவும், ஒழுங்கற்ற ஒரு மனிதனைப் போலவும் நடத்தப்படுவதையும், அடிக்கப் படுவதையும், திருமுகத்தில் துப்பப்படுவதையும், அவமானச் சிலுவை மரத்தில் உயர்த்தப்படுவதையும் கண்ட பின்னும், அவமானங்களை ஏற்றுக்கொள்ள யார் மறுக்க முடியும்?

நமது அன்பைத் தம்முடையதாக்கிக் கொள்வதற்காக எவ்வளவோ அதிகத் துன்பங்களுக்கும், அவமானங்களுக்கும் மத்தியில் இறப்பவராக சேசுநாதரைக் கண்ட பின்னும், அவரைத் தவிர வேறு ஒருவரை அல்லது ஒரு பொருளை யார் நேசிக்க முடியும்? கடவுளை உத்தமமான விதமாக நேசிப்பதற்காகத் தம்மால் என்ன செய்ய முடியும் என்று தமக்குக் கற்பிக்கும்படி பக்தியுள்ள ஒரு வனவாசி ஒரு முறை கடவுளிடம் ஜெபித்தார். தமது திருப்பாடுகளை இடைவிடாமல் தியானிப்பதை விடத் தம்மை உத்தமமான விதத்தில் நேசிப்பதற்கு வேறு சிறந்த வழி எதுவுமில்லை என்று நமதாண்டவர் அவருக்கு வெளிப்படுத்தினார். சேசுநாதரின் திருப்பாடுகள் பற்றிய தியானம், அவரது தெய்வீகத்தைப் பற்றிய காட்சி தியானத்திற்கு ஒரு தடையாக இருக்கக் கூடும் என்பதால், அத்தகைய தியானத்தை விட்டு விட வேண்டும் என்று கற்பிக்கும் சில புத்தகங்களைப் பற்றி அர்ச். தெரேசம்மாள் ஆண்டவரிடம் அழுது முறையிட்டாள். “ஓ என் ஆன்மாவின் ஆண்டவரே, ஓ சிலுவையில் அறையுண்ட என் சேசுவே, என் பொக்கிஷமே, உமக்கு ஒரு பெரும் துரோகத்தைச் செய்து விட்டேன் என்ற உறுத்தல் இல்லாமல் இந்தக் கருத்தை நான் ஒருபோதும் நினைவுகூர முடியவில்லை. என் ஆண்டவரே, அதிக மேலான நன்மையின் வழியில் நீரே எனக்கு ஒரு தடையாக இருப்பது சாத்தியமா? அப்படியானால், உம்மிடமிருந்து அல்லாமல் வேறு எங்கிருந்து நற்காரியங்கள் அனைத்தும் எனக்கு வந்து சேரும்?" என்று அவள் கேட்டாள். அதன்பின் அவள் தொடர்ந்து, “கடவுளைப் பிரியப்படுத்தவும், பெரும் வரப்பிரசாதங்களை நமக்குத் தந்தருளும்படி அவரைத் தூண்டவும், இந்த மிகப் புனித மனுUகத்தின் கரங்களின் வழியாக அவையெல்லாம் கடந்து வர வேண்டுமென்று அவர் சித்தங்கொள்கிறார், இந்த மிகப் புனித மனுUகத்திலேயே தாம் இன்பம் காண்பதாக அவரது தெய்வீக மகத்துவம் அறிக்கையிட்டது என்றும் நான் கண்டிருக்கிறேன்" என்றாள்.

சனி

வேதசாட்சிகளின் இராக்கினியான மாமரி

I

உலகில் நிகழந்த அனைத்து நிகழ்வுகளிலும் அதிகம் புலம்புதலுக் குரிய நிகழ்ச்சியைக் கேட்டு உருகாத அளவுக்கு மிகக் கடினமான இருதயம் யாரிடம் இருக்கக் கூடும்? உயர்குடிப் பிறந்தவர்களும், பரிசுத்தமானவர்களுமான ஒரு பெண் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகன் இருந்தார். இந்த மகன் நாம் எவ்வளவு கற்பனை செய்ய முடியுமோ, அவ்வளவு நல்லவராகவும், நேசிக்கப்படத் தக்கவராகவும் இருந்தார். அவர் மாசற்றவராகவும், புண்ணியங்கள் நிரம்பி வழிபவராகவும், அழகானவராகவும் இருந்தார். தமது தாயை இவர் மிகுந்த கனிவுடன் நேசித்தார். எந்த அளவுக்கென்றால், அந்த அன்னைக்கு அவர் ஒரு மிக அற்பமான வேதனையும் தந்ததில்லை, மாறாக, அவர்களுக்கு முழுமையான மரியாதையும், கீழ்ப்படிதலும், பிரியமும் எப்போதும் காட்டி வந்தார். இந்த அன்னையும் பூமியின் மீது தனது முழுப் பாசத்தையும் இந்த ஒரே மகனின் மீது வைத்திருந்தார்கள். அதன்பின் என்ன நிகழ்ந்ததென்று கேளுங்கள். இந்த மகன், அவரது எதிரிகளின் பொறாமையின் காரணமாகப் பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்; அவர் மாசற்றவர், குற்றமற்றவர் என்ற உண்மையை நீதிபதி அறிந்திருந்தாலும், அவனே அதை ஒப்புக்கொண்ட போதிலும், அவரது எதிரிகளைப் பகைத்துக் கொள்ள விரும்பாமல், அவர்கள் கேட்டபடி அவன் அவரை அவமான மரணத்திற்குத் தீர்வையிட்டான். பரிதாபத்திற்குரிய அந்தத் தாய், பிரியத்துக்கும் அன்புக்கும் உரியவராகிய தன் மகன் ஒரு காட்டுமிராண்டித்தனமான மரணத்தால் தம் இளமையின் உச்ச நிலையில் தன்னிடமிருந்து அநியாயமான முறையில் பறித்துக் கொள்ளப்படும் துயரத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. ஏனெனில், வாதைகளாலும், கடைசித் துளி வரை சிந்தப் பட்டதாலும், ஒரு பொது இடத்தில், அவமானக் கழுமரம் ஒன்றில், அதுவும், அவரது தாயின் கண்களுக்கு முன்பாகவே அவர் கொல்லப் பட்டார். பக்தியுள்ள ஆத்துமங்களே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இந்த நிகழ்ச்சியும், இந்தப் பரிதாபத்திற்குரியதாயும் நம் தயவிரக்கத் திற்குத் தகுதியானவர்கள் இல்லையா?

நான் யாரைப் பற்றிப் பேசுகிறேன் என்று உங்களுக்கு ஏற்கனவே புரிந்து விட்டது. மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட இந்த மகன் நம் அன்புக்குரிய மீட்பரான சேசுதான்; இந்தத் தாய், நம் மீது தான் கொண்ட நேசத்தால், தன் தெய்வீக மகன் மனிதர்களின் காட்டுமிராண்டித்தனத்தால், தேவ நீதிக்குப் பலியாகப்படுவதைக் காண சித்தங்கொண்டு மிகப் பரிசுத்த கன்னிமாமரிதான். ஆகவே, மாமரி நமக்காக அனுபவித்த இந்த மாபெரும் சித்திரவதை - ஆயிரம் மரணங்களுக்கும் அதிகமான இந்த வாதை - நம் தயவிரக்கத்திற்கும், நம் நன்றியறிதலுக்கும் தகுதியுள்ளதாக இருக்கிறது. இவ்வளவு அதிகமான அன்புக்கு வேறு எந்த விதத்திலும் ஈடு செய்ய நம்மால் முடியாது என்றாலும், எதன் வழியாக மாமரி வேதசாட்சிகளின் இராக்கினியாக ஆனார்களோ, அந்தத் துன்பங்களின் மிகுதியை ஒரு சில கணங்கள் தியானிக்கவாவது முன்வருவோம்.

ஓ துன்புறுத்தப்பட்டவர்களாகிய என் மாதாவே, வேதசாட்சி களின் இராக்கினியே, வியாகுல மாதாவே, என் இரட்சணியத்திற்காக மரித்த உமது திருமகனுக்காக நீர் வெகுவாக மனங்கசந்து அழுதீர். ஆனால் நான் நித்தியத்திற்கும் இழக்கப்படுவேன் என்றால், உமது இந்தக் கண்ணீர்களால் எனக்கு என்ன பயன்? ஆகையால் உங்கள் வியாகுலங்களின் பேறுபலன்களைக் கொண்டு, என் பாவங்களுக்கு மெய்யான மனஸ்தாபத்தையும், உண்மையான ஜீவிய மாற்றத் தையும், அவற்றோடு சேசுவின் துன்பங்களின் மீதும், உங்கள் வியாகுலங்களின் மீதும் நிலையான, கனிவுள்ள தயவிரக்கத்தையும் எனக்குப் பெற்றுத் தந்தருளும்.

II

சேசுநாதர் மற்றெல்லா வேதசாட்சிகளையும் விட அதிகமாகத் தம் வாழ்நாளில் துன்புற்றார் என்பதால், அவர் துயரங்களின் அரசர் என்று அழைக்கப்படுவது போலவே, மாமரியும் சரியான காரணத்தோடு வேதசாட்சிகளின் இராக்கினி என்று அழைக்கப்படுகிறார்கள். தன் திருமகனுக்குப் பிறகுநு அனைத்திலும்

அதிகக் கொடுமையான வேதசாட்சியத்தை அனுபவித்ததன் மூலம் இந்தப் பெயரை அவர்கள் சம்பாதித்துக் கொணடார்கள். இவ்வாறு, சரியான காரணத்தோடு புனித லாரென்ஸின் ரிச்சர்ட் என்பவரால் அவர்கள் **"வேதசாட்சிகளின் வேதசாட்சி"** என்று அழைக்கப் பட்டார்கள். **"உன்னைத் துன்பத்தால் சூழச்செய்து முடி சூட்டுவார்" (இசை.22:18)** என்ற இசையாஸின் வார்த்தைகளை முழு உண்மையோடு மாமரிக்கும் பொருத்திக் கூறலாம். அதாவது, மற்ற எல்லா வேத சாட்சிகளுடையவும் ஒருங்கிணைந்த எல்லாத் துன்பங்களுக்கும் அதிகமான மரியாயின் துன்பங்கள், வேத சாட்சிகளின் இராக்கினியாக அவர்களைக் காட்டுகிற அரச முடியால் சூட்டடப்பட அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்குகின்றன.

கர்த்தூசியரான டெனிஸ், பெல்பார்ட், கத்தாரினுஸ், மற்றும் வேறு பலர் எண்பிப்பது போல, மாமரி ஓர் உண்மையான வேதசாட்சி என்பதில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. ஏனெனில் ஒருவர் மரணமடையவில்லை என்றாலும், மரணத்தை விளைவிக்கப் போதுமான துன்பத்தை அனுபவிக்கிறார் என்றால் அந்தத் துன்பம் அவருடைய வேதசாட்சியமே என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட கருத்தாக இருக்கிறது. சுவிசேஷகரான அர்ச். அருளப்பர் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் இறக்கவில்லை, மாறாக, "உள்ளே சென்றதை விட அதிக உயிர்த் துடிப்புடன் அவர் வெளியே வந்தார்" என்றாலும், அவர் ஒரு வேதசாட்சியாக வணங்கப்படுகிறார். "வேத சாட்சிய மகிமையைக் கொண்டிருப்பதற்கு, கீழ்ப்படிதலை, அதன் உச்சபட்ச அளவுக்கு செயல்படுத்துவது, அதாவது மரணம் வரைக்கும் கூட கீழ்ப்படிவது, போதுமானதாக இருக்கிறது" என்று அர்ச். தாமஸ் அக்குயினாஸ் கூறுகிறார். "கொலைஞனின் வாளால் அல்ல, மாறாக இருதயத்தின் கசப்பான துயரத்தால், மாமரி வேதசாட்சியாக இருந்தார்கள்" என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார். மாமரியின் திருச்சரீரம் கொலைஞனின் கரத்தால் காயப்படுத்தப் படவில்லை என்றாலும், அவர்களுடைய ஆசீர்வதிக்கப்பட்ட திரு இருதயம் அவர்களது திருமகனின் திருப்பாடுகளைக் கண்டு துயர வாளால் குத்தித் துளைக்கப்பட்டது. இந்த அவர்களது கடும் துயரம் ஒரு முறை அல்ல, ஓராயிரம் முறை அவர்கள் சாவதற்குப் போதுமானதாக

இருந்தது. இதிலிருந்து மாமரி ஒரு நிஜமான வேதசாட்சி மட்டுமல்ல, மாறாக அவர்களுடைய வேதசாட்சியம் மற்ற எல்லா வேதசாட்சியங்களுக்கும் அப்பாற்பட்டது என்று நாம் காண்கிறோம். அவர்களுடைய வாழ்வு முழுவதும் ஒரு நீட்டிக்கப் பட்ட மரணமாகவே இருந்தது என்று சொல்லலாம்.

சேசுவும், மரியாயே நீரும் எவ்வளவோ மாசற்றதவர்களாக இருந்தும், என்மீதுள்ள அன்பின் காரணமாக எவ்வளவோ அதிகமாகத் துன்பப்பட்டீர்கள். நரகத்திற்குத் தகுதி யுள்ளவனாகிய அடியேனாவது உம் அன்பிற்காக ஏதாவது ஒரு துன்பத்தை அனுபவிக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள். அர்ச். பொனவெந்தூரோடு சேர்ந்து நானும், "ஓ இராக்கினியே, நான் உங்களை நோகச் செய்திருக்கிறேன் என்றால், நீதிப்படி என் இருதயத்தைக் காயப்படுத்துங்கள்; நான் உங்களுக்கு ஊழியம் செய்திருக்கிறேன் என்றால், அதற்கு வெகுமதியாக இப்போது நான் காயங்களைக் கேட்கிறேன். என் ஆண்டவராகிய சேசுவும், அவரோடு நீங்களும் காயப்பட்டும், நான் ஒரு காயமும் இல்லாமலும் இருப்பதைக் காண்பது எனக்கு அவமானமாக இருக்கிறது. சுருங்கச் சொன்னால், ஓ என் மாதாவே, உங்கள் திருமகன் மிக அதிகமான வாதைகளுக்கு மத்தியில் தலைசாய்த்து சிலுவையின் மீது மரிப்பதைக் கண்டு நீங்கள் அனுபவித்த துக்கத்தின் வழியாக, ஒரு நல்ல மரணத்தை எனக்குப் பெற்றுத் தரும்படியாக நான் உங்களை மன்றாடுகிறேன். ஆ, பாவிகளுக்காகப் பரிந்து பேசுகிறவர்களே, காலத்திலிருந்து நித்தியத்திற்குக் கடந்து செல்லும் தனது மாபெரும் பயணத்தில் என் துன்பப்பட்ட ஆத்துமம் ஈடுபட்டிருக்கிற போராட்டத்தின் நடுவில், அதற்கு உதவி செய்வதை நிறுத்தி விடாதீர்கள். என் மரணத் தருவாயில் என் முழு நம்பிக்கை யாகிய உங்களுடையவும், சேசுவினுடையவும் திருப்பெயர்களை மன்றாட இயலாத அளவுக்கு நான் பேச்சுத் திறனையும், பலத்தையும் இழந்து போய் இருக்கலாம் என்பதால், இப்போதே உங்களை மன்றாடுகிறேன்; அந்தக் கடைசி கணத்தில் எனக்கு உதவும்படி உங்கள் திருமகனிடமும், உங்களிடமும் நான் இரந்து

மன்றாடுகிறேன். சேசுவே, மரியாயே, என் ஆத்துமத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன் என்று நான் சொல்கிறேன்.

பஞ்சிகை ஞாயிறு

நம் உணவாக இருக்கும்படி பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் தம்மையே விட்டுச் செல்லும் சேசுகிறீஸ்துநாதரின் அன்பு

I

“சேசுநாதர் தாம் இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகவேண்டிய தம்முடைய காலம் வந்ததென்று அறிந்து, இவ்வுலகத்திலே இருந்த தம்முடையவர்களைத் தாம் சிநேகித்திருக்கையில் அவர்களை முடிவு பரியந்தம் சிநேகித்தார்” (அரு.13:1).

தமது வாழ்வின் இறுதி இரவில், மனிதன் மீது தமக்குள்ள அன்பிற்காகத் தாம் மரிப்பதற்காகத் தாம் மிகுந்த ஏக்கத்தோடு எதிர்பார்த்திருந்த நேரம் வந்து விட்டதென அறிந்திருந்த நமது மகா நேசத்திற்குரிய மீட்பர், இந்தக் கண்ணீர்க் கணவாயில் நம்மைத் தனியே விட்டுச் செல்ல விரும்பவில்லை. ஆனால் மரணத்தால் கூட நம்மிடமிருந்து தாம் பிரிக்கப்படாமல் இருக்கும்படியாக, அவர் தம்மை முழுவதுமே பீடத்தின் தேவத்திரவிய அனுமானத்தில் உணவாக விட்டுச் செல்லத் தீர்மானித்தார். அந்த அளவற்ற மதிப்புள்ள இந்தக் கொடையை நமக்குத் தந்து விட்டதால், இதற்கு மேல் தமது அன்பை எண்பிக்க அவர் நமக்கு எதையும் தர முடியாது என்பதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ளச் செய்தார். அவர் முடிவு வரை அவர்களை நேசித்தார். கொர்னேலியுஸ் ஆ லாப்பிதேஎன்பவர் அர்ச். ஜான் கிறிசோஸ்தோம், தியோபிலாக்த் ஆகியோரோடு சேர்ந்து, கிரேக்க மூல பாடத்தின்படி முடிவு பரியந்தம் என்னும் வார்த்தைகளை விளக்கும் விதமாக, “அளவுக்கு மீறியதும்,

உன்னதமானதுமான ஓர் அன்பைக் கொண்டு அவர் அவர்களை நேசித்தார்" என்று கூறுகிறார். இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் மனிதர்களின் மீதான தமது நேசத்தின் கடைசி முயற்சியை அவர் செய்தருளினார். மடாதிபதி குவெரிக் சொல்வது போல, “அவர் தமது அன்பின் முழு வல்லமையையும் தமது நண்பர்கள் மீது பொழிந்தருளினார்."

இது திரிதெந்தீன் பொதுச் சங்கத்தால் இன்னும் நன்றாக எடுத்துரைக்கப்பட்டது. இச்சங்கம் பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தைப் பற்றிப் பேசும்போது, அதில் நம் ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகர், “நம்மீது தாம் கொண்டுள்ள அன்பின் செல்வ வளங்கள் அனைத்தையும், தம்மிலிருந்து பொழிந்தருளினார்" என்று கூறுகிறது. ஆகவே, சம்மனசுகளுக்கு ஒப்பான புனிதரான அர்ச். தாமஸ் அக்குயினாஸ் இந்த தேவத்திரவிய அனுமானத்தை, “தேவ அன்பின் அனுமானம், ஒரு கடவுள் மட்டுமே நமக்குத் தரக் கூடிய அனைத்திலும் மேலான அன்பின் ஓர் அடையாளம்" என்று மிகச் சரியாகவே அழைக்கிறார். அர்ச். பெர்னார்ட் அதை “நேசங்களின் நேசம்" என்று அழைத்தார். அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள் இது பற்றிச் சொல்லும்போது, திவ்விய நன்மை உட்கொண்டபின் ஓர் ஆத்துமம், “எல்லாம் முடிந்தது" என்று சொல்லலாம் என்றாள்; அதாவது, என் சர்வேசுரன் இந்தத் திவ்ய நன்மையில் தம்மையே எனக்குத் தந்து விட்டதால், இனி எனக்குத் தருவதற்கு அவரிடம் வேறு எதுவுமில்லை! இந்தப் புனிதை ஒருநாள் தனது நவகன்னியர்களில் ஒருத்தியிடம், திவ்விய நன்மை வாங்கிய பிறகு அவள் என்ன நினைத்துக் கொண்டிருந்தாள் என்று கேட்க, அந்த நவகன்னிகை, “சேசுவின் அன்பைப் பற்றி" என்று பதிலுரைத்தாள். “ஆம், இந்த அன்பைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, மற்ற சிந்தனைகள் எதற்கும் கடந்து போக இயலாமல், அன்பைப் பற்றிய சிந்தனையிலேயே நாம் நின்று விட வேண்டும்" என்றாள் புனிதை.

ஓ உலக இரட்சகரே, மனிதர்களுக்கு உம்மையே உணவாகத் தர நீர் தூண்டப்படும் அளவுக்கு, அவர்களிடமிருந்து என்னதான் எதிர்பார்க்கிறீர்? உம்மை நேசிப்பதை எங்களுக்குக் கடமையாக

ஆக்கும்படி, இந்தத் தேவத்திரவிய அனுமானத்திற்குப் பிறகு எங்களுககுத் தர வேறு என்னதான் உம்மிடம் எஞ்சிய் இருக்க முடியும்? ஆ, என் உத்தம நேசமுள்ள சர்வேசுரா, தேவ நற்கருணையில் எனக்கு உணவாக ஆகும்படி உம்மையே அளவுகடந்த விதமாய்ச் சிறியவராக்கிக் கொள்ளும் அளவுக்கு இது உமது நன்மைத்தனத்தின் எப்பேர்ப்பட்ட அபரிமிதமாக இருக்கிறது என்று நான் அறிந்து கொள்ளுமாறு, என்னை ஒளிர்வித்தருளும்! ஆகவே, தேவரீர் உம்மை முழுவதும் எனக்குத் தந்திருக்கிறீர் என்றால், நானும் என்னை முழுவதும் உமக்குத் தருவது மெய்யாகவே நீதியான காரியமாக இருக்கிறது. ஆம், என் சேசுவே, நான் என்னை முழுவதும் உமக்கு அர்ப்பணிக்கிறேன். ஒவ்வொரு நன்மைக்கும் மேலான நன்மையாக நான் உம்மை நேசிக்கிறேன், உம்மை இன்னும் அதிகமாக நேசிக்கும்படியாக, உம்மை உட்கொள்ள ஆசிக்கிறேன். ஆகவே, வாரும், என் ஆத்துமத்திற்குள் அடிக்கடி வந்து, அதை முழுவதும் உம்முடையதாக ஆக்கிக் கொள்ளும். ஓ, **அர்ச். பிலிப் நேரியார்** அவஸ்தைநன்மையில் உம்மைப் உட்கொள்ளும் வேளை வந்தபோது, உம்மைப் பற்றி, "இதோ என் நேசம்! இதோ என் நேசம்! என் நேசமானவரை எனக்குத் தாருங்கள்!" என்றாரே! அவரைப் போலவே என்னாலும் உண்மையுள்ள உள்ளத்தோடு சொல்ல முடியுமானால்!

II

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்" (அரு.6:57). அரேயோப்பாகுவின் **அர்ச். டெனிஸ்** இதைப் பற்றி, நேசம் எப்போதும் தன்னால் நேசிக்கப்படுபவரோடு ஒன்றிக்கத் தேடுகிறது என்றார். உணவு, தன்னை உண்பவனோடு ஒரே பொருளாக ஆகிவிடுவது போல, நம் ஆண்டவரும், திவ்விய நன்மையில் தம்மை உட்கொள்வதன் மூலம் நாம் அவரோடு ஒரே பொருளாகும்படி உணவின் தன்மைக்குத் தம்மைத் தாழ்த்திக் கொண்டார்: "இதை வாங்கிப் புசியுங்கள், இது என் சரீரமாய் இருக்கிறது" என்றார் சேசுநாதர். **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்**

கூறுவது போல, இது, "அனைத்திலும் மேலான ஒன்றிப்பு நிகழும்படியாக என்னை உட்கொள்ளுங்கள்" என்று சேசுநாதர் கூறுவதற்கு ஒப்பாகும்.ஓ மனிதா, நீயும் நானும் ஒரே பொருளாகும்படியாக, நீ என்னை உட்கொள்கிறாய். உருக்கப்பட்ட இரண்டு மெழுகுத் துண்டுகள் ஒரே துண்டாக ஒன்றிப்பது போல, திவ்விய நன்மை உட்கொள்ளும் ஆத்துமம் சேசுவோடு எந்த அளவுக்கு முழுமையாக ஒன்றிக்கப்படுகிறது என்றால் சேசுநாதர் அதனிலும், அது சேசுநாதரிலும் வசிக்கிறார்கள். "ஓ என் அன்புள்ள மீட்பரே, உமது திரு இருதயமும், எங்கள் இருதயங்களும் ஒரே இருதயமாக மாறும் அளவுக்கு எங்களை இவ்வளவு அதிகமாக நேசிக்க உம்மால் எப்படி முடிந்தது?" என்று **அர்ச். அலெக்சாந்திரியா சிரில்** கேட்கிறார். "ஓ, நாங்கள் உம்மோடு ஒரே இருதயத்தைக் கொண்டிருக்குமாறு, எங்களை உமது திருச்சரீரத்தோடு ஒன்றித்துக் கொள்ள சித்தங்கொண்டவரான எங்கள் ஆண்டவராகிய சேசுவே, உமது நேசம் எவ்வளவு அதிசயத்திற்குரியது!"

திங்கள்

திவ்ய நற்கருணையிலிருக்கும் சேசுநாதர் நம் அனைவரையும் சந்திக்கிறார்.

I

பீடத்தின் பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் இருக்கும் சேசுநாதர் நம் அனைவரையுமே சந்திக்கிறார். இவ்வுலகில் உள்ள அனைவரும் தங்கள் அரசனோடு பேச முடியாது என்று அர்ச். தெரேசம்மாள் கூறுகிறாள்; ஏழைகள் அப்படிச் செய்ய முடியும் என்று நம்பவும் இயலாது, ஒரு மூன்றாம் மனிதன் வழியாகத் தங்கள் தேவைகளை அரசனுக்கு அறிவிக்க முடியும் என்றுகூட அவர்கள் நம்ப இயலாது? ஆனால் பரலோகப் பேரரசரோடு பேசுவதற்கோ அவர்களுக்கு மூன்றாவது ஆள் யாரும் தேவையில்லை. உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களுமான அனைவருமே அவரோடு பேசலாம், ஏனெனில் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் அவர்

நமக்கு நேர் எதிரிலேயே தங்கி வசிக்கிறார். இந்தக் காரணத்தாலேயே சேசுநாதர் **"வயல்வெளி மலர், பள்ளத்தாக்குகளின் லீலி"** என்று அழைக்கப்படுகிறார் (உந்.சங்.2:1). தோட்டத்து மலர்கள் வேலியிட்டு மூடி கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் வயல்வெளி மலர்களோ அனைவருக்குத் திறப்பாக இருக்கின்றன. கர்தினால் ஹ்யூகோ என்பவர் இந்த வார்த்தைகளைப் பற்றி, "ஏனெனில் அனைவராலும் காணப்படும்படியாக நான் என்னையே காட்டுகிறேன்" என்று சொல்லி விளக்குகிறார்.

ஆகவே, எந்த மனிதனும், ஒரு நாளின் எந்த நேரத்திலும் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் இருக்கும் சேசுவோடு பேசலாம். அர்ச். பீற்றர் கிறிஸோலோகுஸ், பெத்லகேமின் மாட்டுத் தொழுவத்தில் மீட்பரின் பிறப்பைப் பற்றி விளக்கும்போது, அரசர்கள் எப்போதும் மக்களைச் சந்திப்பதில்லை, அரசனோடு பேச விரும்பிச் செல்லும் ஒருவன், அது அனுமதிக்கான நேரம் அல்ல என்றும், சரியான நேரத்தில் வருமாறும் சொல்லி காவலர்களால் திருப்பி அனுப்பப்படுவது அடிக்கடி நிகழ்கிறது. ஆனால் நமதாண்டவர் எல்லாரையும், எந்த நேரத்திலும்தாம் வரவேற்கும் படியாக, கதவும், காவலர்களும் இல்லாத ஒரு திறப்பான குகையில் பிறக்கத் திருவுளங்கொண்டார். "இது சந்திப்பிற்கான நேரம் அல்ல" என்று சொல்லித் தடுக்க, அங்கே ஊழியன் யாருமில்லை. பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்திலும் சேசுநாதர் இவ்வாறே இருக்கிறார். தேவாலயங்கள் எப்போதும் திறந்திருக்கின்றன. ஒவ்வொருவனும் தான் விரும்பும் நேரத்தில் பரலோக அரசரிடம் சென்று அவரோடு பேச முடியும்; முழுமையான நம்பிக்கையோடு நாம் அங்கே அவரிடம் பேச வேண்டுமென்று சேசு விரும்புகிறார். இதற்காகவே அப்பத்தின் சாயலுள் அவர் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார். தாம் பொதுத் தீர்வையின்போது தோன்றும் போது அவர் எப்படியிருப்பாரோ, அப்படியே ஒளியாலான ஒரு சிங்காசனத்தின் மீது வீற்றிருப்பவராக நம் பலிபீடங்களின் மீது அவர் தோன்றுவார் என்றால், நம்மில் யார்தான் அவரை அணுகிச் செல்லத் துணிவு கொள்வான்? ஆனால் தம்மோடு நாம் பேச வேண்டும் என்றும், நம்பிக்கையோடும், அச்சமின்றியும் அவரிடமிருந்து நாம்

வரப்பிரசாதங்களைத் தேட வேண்டும் என்றும் நம் ஆண்டவர் விரும்புகிறார் என்பதால், அவர் அப்பத்தின் குணங்களுக்குள் தம் தெய்வீக மகத்துவத்தை மறைத்துக் கொண்டிருக்கிறார் என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுகிறாள்; **தாமஸ் அ கெம்பிஸ்** எடுத்துரைப்பது போல, "ஒருவன் தன் நண்பனை நடத்துவது போல," நாமும் அவரை நடத்த வேண்டுமென அவர் விரும்புகிறார்.

ஓ மகிமையின் அரசரே, உம்மோடு உரையாடுவதற்கு, மூன்றாம் மனிதன் யாரும் எங்களுக்குத் தேவையில்லை; நீர் பீடத்தின் தேவத் திரவிய அனுமானத்தில் அனைவரையும் சந்திக்க எப்போதும் தயாராக இருக்கிறீர். உம்மை ஆசிப்பவன் யாராயினும், அவன் அங்கே எப்போதும் உம்மைக் கண்டு, உம்மோடு முகமுகமாக உரையாடுகிறான். ஆகவே, என் சேசுவே, உம்மைச் சந்திக்கத் தேடி வரும் பரிதாபத்திற்குரிய சிருஷ்டிகளின் மன்றாட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படி இந்தத் தேவ நற்கருணைப் பேழைக்குள் நீர் அடக்கப் பட்டிருக்கிறீர் என்பதால், பூமியின் மீது அனைவரிலும் அதிக நன்றியற்ற பாவியாகிய அடியேனால் உமக்கு விடுக்கப்படும் விண்ணப்பத்திற்கு இன்று செவிசாய்த்தருள்வீராக. என் பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டவனாக, இதோ நான் உம் திருப்பாதங்களை அண்டி வருகிறேன். இது வரை ஒரு பெரும் கலகக் காரனாக இருந்தஎன்னை உமது மாபெரும் நேசர்களுள் ஒருவனாக மாற்றியருளும். இதைச் செய்ய உம்மால் முடியும். என் சேசுவே, எல்லாவற்றிற்கும் மேலான உம்மை நான் நேசிக்கிறேன். என் தேவனே, என் நேசமே, என் சர்வமுமே, என் உயிரினும் மேலாக உம்மை நான் நேசிக்கிறேன்!

II

ஆத்துமம் பீடத்தின் அடியில் தங்கிய் இருக்கும்போது, **"என் அன்பே, என் அழகுள்ளவளே, விரைவாய் எழுந்து வா" (உந்.சங்.2:10)** என்ற உந்நத சங்கீத வார்த்தைகளை அதனிடம் சேசுநாதர் கூறுவதாகத் தோன்றுகிறது. "எழுந்து வா: பயப்படாதே; என்னை நெருங்கி வா, என் தோழியே, என் அருகில் வா. நீ

இப்போது என் எதிரி அல்ல, ஏனெனில் நீ என்னை நேசிக்கிறாய். என்னை நோகச் செய்ததற்காக நீ மனஸ்தாபப்படுகிறாய். என் அழகுள்ளவளே: நீ இப்போது என் கண்களுக்கு அருவருப்பானவளாக இல்லை. என் வரப்பிரசாதம் உன்னை அழகுள்ளவளாக ஆக்கியுள்ளது. வா: இங்கே வா, நீ விரும்புவது அனைத்தையும் என்னிடம்; சொல்; இதற்காகவே நான் பீடத்தின் மீது இருக்கிறேன்.'' ஓர் அரசன் தன் சமூகத்தில் வரும்படி உன்னை அழைக்கிறான், "உனக்கு என்ன வேண்டும், நீ என்னவெல்லாம் விரும்புகிறாய் என்று என்னிடம் கூறு. நான் உன்னை நேசிக்கிறேன், உனக்கு நன்மை செய்ய விரும்புகிறேன்'' என்று கூறுகிறான் என்றால், அது உனக்கு எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சியாக இருக்கும்! இதோ, பரலோக அரசராகிய சேசுநாதர், தம்மைச் சந்திக்க வரும் அனைவரிடமும் இதைச் சொல்கிறார்: "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன்'' (மத்.11:28). ஏழைகளும், நோயாளிகளுமே, துன்பப்படுபவர்களுமாகிய நீங்கள் அனைவரும் என்னிடம் வாருங்கள். என்னால் உங்களை வளப்படுத்தவும், உங்களைக் குணமாக்கவும், உங்களைத் தேற்றவும் முடியும். அப்படியே நான் செய்வேன். இந்த நோக்கத்திற்காகவே நான் உங்கள் பீடங்களின் மீது இருக்கிறேன்: **"பேசுகிறவர் நாமே, இதோ நாம் இங்கே இருக்கிறோம்'' (இசை.52:6).**

என் அன்புள்ள சேசுவே, உம்மிடம் தஞ்சமடையும் ஈன சிருஷ்டிகளின் விண்ணப்பங் களைக் கேட்பதற்காக எங்கள் பீடங்களின் மீது தேவரீர் தங்கிய் இருக்கிறீர் என்பதால், இப்போது பரிதாபத்திற்குரிய பாவியாகிய அடியேன் உம்மை நோக்கி எழுப்பும் ஜெபத்தைக் கேளும். ஓ சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, பலியாக்கப்பட்டு, சிலுவையின் மீது மரணத்திற்கு உள்ளாக்கப் பட்டவரே, உமது திரு இரத்தத்தால் மீட்டு இரட்சிக்கப்பட்ட ஓர் ஆன்மாவை நீர் என்னில் காண்கிறீர்; நான் உமக்குத் தந்துள்ள அவமானங்களை எனக்கு மன்னியும், இனி ஒருபோதும் உம்மை இழந்து போகாதிருக்க, உமது வரப்பிரசாதத்தால் எனக்கு உதவியருளும். பிரியத்திற்குரிய சேசுவே, என் பாவங்களுக்காக,

ஜெத்சமெனித் தோட்டத்தில் நீர் உணர்ந்த துயரத்தில் எனக்கு ஒரு பங்கு தாரும்! ஓ, என் தேவனே, உம்மை நான் ஒருபோதும் மனநோகச் செய்யாதிருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும்! என் அன்புள்ள ஆண்டவரே, அடியேன் பாவத்தில் மரிப்பேன் என்றால், இனி உம்மை நேசிக்க என்னால் இயலாமல் போகும். ஆனால் நான் உம்மை நேசிக்க வேண்டும் என்பதற்காகவே தேவரீர் எனக்காக இது வரை காத்திருந்திருக்கிறீர். தேவரீர் எனக்குத் தந்தருளிய காலத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது உம்மை நேசிக்க என்னால் இயலும் என்பதால், நான் அப்படியே செய்வேன். உம்மை நேசிக்கும் மாபெரும் வரப்பிரசாதத்தை, உம் மீதுள்ள அன்பினால், நான் எல்லாவற்றையும் மறந்து போகும் வரத்தை, உமது உன்னத நேசமுள்ள இருதயத்தைப் பிரியப்படுத்துவதைப் பற்றி மட்டுமே நான் சிந்திக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும். என் சேசுவே, தேவரீர் எனக்காக உம் வாழ்வு முழுவதையும் செலவிட்டீர். என் எஞ்சிய வாழ்நாளிலாவது அடியேன் உமக்காக வாழும் வரத்தை எனக்குத் தந்தருளும். உமது திருப்பாடுகளின் பேறுபலன்களின் வழியாக எல்லா வரங்களையும் பெற்றுக்கொள்வேன் என்று நம்பிய் இருக்கிறேன். மரியாயே, உங்கள் பரிந்துரையிலும் நான் நம்பிக்கை வைக்கிறேன்! நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்களே, என் தாயாரே! என் மீது தயவாயிருங்கள்.

செவ்வாய்

திவ்விய நன்மையில் அனைவரும் தம்மை உட்கொள்ள வேண்டுமென சேசுநாதர் ஆசிக்கிறார்.

I

நாம் திவ்விய நற்கருணையில் தம்மை உட்கொள்ள வேண்டும் என்பதில் சேசுகிறீஸ்துநாதர் கொண்டுள்ள தாகத்தைப் பற்றி நாம் தியானிப்போம்: சேசுநாதர், தமது நேரம் வந்ததென்று அறிந்திருந்தார் (அரு.13:1). அவரது கசப்பான திருப்பாடுகள் தொடங்க இருந்த அந்த நேரத்தைத் “தமது நேரம்" என்று அழைக்க அவரால் எப்படி முடிந்தது? அவர் ஏன் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்

என்றால், உத்தமமான விதத்தில் தமது நேசத்திற்குரிய ஆன்மாக்களோடு தம்மை ஒன்றிக்கும்படியாக, அந்த இரவில் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் அவர் தம்மையே விட்டுச் செல்ல இருந்தார். **“இந்தப் பாஸ்காவை உங்களோடு கூட உண்ணும்படி நான் ஆசை மேல் ஆசையாயிருந்தேன்" (லூக்.22:15).** இந்த வார்த்தைகளின் மூலம் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் நம் ஒவ்வொருவரோடும் தம்மை ஒன்றித்துக் கொள்ளத் தமக்கிருந்த ஆவலை நம் மீட்பர் விளக்குகிறார். நம் மீது அவர் கொண்டுள்ள அன்பின் பாதாளம் அவரை இப்படிப் பேசச் செய்கிறது. “மிக உக்கிரமாகப் பற்றியெரியும் நேசத்தின் வெளிப்பாடு" என்று **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** கூறுகிறார். அனைவரும் தம்மைப் பெற்றுக் கொள்ள இயலும்படியாக, அப்ப வடிவத்தின் கீழ் தம்மை மறைத்துக் கொள்வதில் இன்பம் காண்பவராக அவர் இருந்து வந்திருக்கிறார். வேறு ஏதாவது ஒரு விலைமதிப்புள்ள உணவின் தோற்றத்தினுள் அவர் தம்மை மறைத்து வைத்திருப்பார் என்றால், “ஏழைகள் அவரை அடைந்து கொள்ள இயலாதவர்களாக இருந்திருப்பார்ககள்; வேறு ஏதாவது விலைகுறைந்த உணவு வகையை அவர் தேர்ந்து கொண்டிருந்தார் என்றாலும் கூட, அது உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படாததாக இருந்திருக்கலாம். அப்பத்தின் வடிவத்தின் கீழ் தங்கி வசிப்பதில் சேசுநாதர் பிரியம் கொண்டது ஏனெனில், அப்பத்தின் விலை மிகக் குறைவு என்பதோடு அது எல்லா இடங்களிலும் எளிதாகக் கிடைக்கிறது என்பதால்தான்; எனவே எல்லா இடங்களிலும் அவரை நாம் காணவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

நம்மால் உட்கொள்ளப்பட நம் மீட்பருக்குள்ள மாபெரும் ஆசை, “வாருங்கள், என் அப்பத்தைச் சாப்பிட்டு, நான் உங்களுக்காகக் கலந்து வைத்திருக்கும் இரசத்தைக் குடியுங்கள்"; “சிநேகிதரே புசியுங்கள், பிரியமானவர்களே, குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்" என்று, தம்மிடம் வரும்படியாகப் பல வழிகளில் நமக்கு அறிவுறுத்துவதோடு மட்டும் நிற்கவில்லை. மாறாக அதை ஒரு கட்டளையாக நம்மீது சுமத்தவும் செய்கிறார்: **“இதை வாங்கிப் புசியுங்கள்; இது என் சரீரமாய் இருக்கிறது" (மத்.26:26).**

நாம் அவரை அணுகிச் செல்லும்படியாக, நித்திய ஜீவியத்தின் வாக்குறுதியால் நம்மை அவர் கவர்ந்திழுக்கிறார்: **“என் மாம்சத்தைப் புசிப்பவன் . . . நித்திய ஜீவியத்தைக் கொண்டிருப்பான்; இந்த அப்பத்தைப் புசிப்பவன் என்றென்றும் ஜீவிப்பான்" (அரு.6:55-59).** இதை நாம் செய்யவில்லை என்றால், மோட்சம் நமக்கு அடைபட்டதாக இருக்கும் என்று அவர் மிரட்டவும் செய்கிறார்! **“மனுமகனுடைய மாம்சத்தை நீங்கள் புசிக்காவிடில். . . உங்களுக்குள் ஜீவன் இராது" (அரு.6:54).** இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் நம்மோடு தம்மை ஒன்றித்துக் கொள்ள வேண்டுமென்ற சேசுநாதரின் தாகத்திலிருந்தே இந்த எல்லா அழைப்புகளும், வாக்குறுதிகளும், மிரட்டல்களும் நமக்கு வருகின்றன. இனி, இந்த ஆசை அவர் நம்மீது கொண்டுள்ள மாபெரும் நேசத்திலிருந்து எழுகிறது; ஏனெனில் அர்ச். பிரான்சிஸ் சலேசியார் கூறுவது போல, நேசத்தின் நோக்கம் நேசிக்கப்படும் காரியத்தோடு தன்னை இணைத்துக் கொள்வது மட்டுமே. ஆகவே இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் சேசுநாதர் தம்மையே முழுமையாக நம்மோடு ஒன்றிக்கிறார். **“என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்" (அரு.6:57).** இக்காரணத்தாலேயே நாம் அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் ஏங்குகிறார். நம் ஆண்டவர் ஒருநாள் **அர்ச். மெட்டில்டம்மாளிடம்**: “என்னை ஆசிக்கிற ஆன்மாக்களிடம் நான் வருவது போல, எந்தத் தேனீயும் மலர்களின் தேனை உறிஞ்சுமாறு மிகுந்த ஆவலோடும், ஏக்கத்தோடும் அவற்றின் மீது வந்து விழுவதில்லை" என்றார்!

ஓ, திவ்விய நன்மை தங்கள் ஆன்மாக்களுக்குக் கொண்டு வருகிற மாபெரும் நன்மையை மட்டும் விசுவாசிகள் அறிவார்களானால்! சேசுநாதர் தமது பிதா தம் கரங்களில் எல்லாவற்றையும் ஒப்புவித் திருக்கிறார் (அரு.13:3) என்று அறிந்திருக்கிறார் என்பதால், அவரே எல்லா செல்வங்களையும் உடையவராக இருக்கிறார். மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானம் “மனிதனின் ஆத்துமத்தை அர்ச்சிக்க ஒரு விசேஷ வல்லமை கொண்டதாக இருக்கிறது" என்று **அர்ச். தியோனிசியஸ்** கூறுகிறார்.

ஓர் ஆன்மா ஒரு வார காலம் அப்பமும் தண்ணீரும் மட்டும் அருந்தி அடையும் ஆதாயத்தை விட, ஒரே ஒரு திவ்விய நன்மை மூலம் அதிக ஆதாயம் பெறுகிறது என்று **அர்ச். வின்சென்ட் ஃபெரர்** எழுதுகிறார். திவ்விய நன்மை "அன்றாடப் பாவங்களிலிருந்து நம்மை விடுவித்து, சாவான பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கும்" ஒரு மாபெரும் அருமருந்தாக இருக்கிறது என்று திரிதெந்தீன் பொதுச்சங்கம் கற்பிக்கிறது. இதனாலேயே வேதசாட்சியான **அர்ச். அந்தியோக் இஞ்ஞாசியார்** ஆசீர்வதிக்கப் பட்ட தேவத்திரவிய அனுமானத்தை "அழியாமையின் மருந்து" என்று அழைக்கிறார். சேசுநாதர் "சிலுவையின் பரம இரகசியத்தால் பாவத்திற்குரிய தண்டனையில் இருந்து நம்மை விடுவித்தார்; ஆனால் திவ்விய நற்கருணையாகிய தேவத்திரவிய அனுமானத்தாலோ, நம்மைப் பாவத்திலிருந்தே விடுவிக்கிறார்" என்று **மூன்றாம் இன்னோசென்ட் பாப்பரசர்** கூறுகிறார்.

ஓ என் சேசுவே, ஆத்துமங்களின் நேசரே, தேவரீர் எங்களை நேசிக்கிறீர் என்று எங்களுக்குக் காட்ட இதை விட மேலான அன்பின் சாட்சியம் உம்மிடம் இல்லை. நாங்கள் உம்மை நேசிக்கச் செய்வதற்கு இதை விட அதிகமாக நீர் வேறு எதைத்தான் தர முடியும்? ஓ அளவற்ற நன்மைத்தனமே, இன்று முதல் சாத்தியமான முழு ஏக்கத்தோடும், ஆசை ஆவலோடும் நான் உம்மை நேசிக்க வரமருளும்படி உம்மை மன்றாடுகிறேன். எனக்காக உமது உயிரைக் யைளித்த பிறகு, இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் உம்மை முழுவதுமே எனக்குத் தந்தருளுகிற என் இரட்சகரே, உம்மை விட அதிகமாக என் ஆன்மா வேறு யாரைக் கனிவுள்ள அன்போடு நேசிக்க முடியும்?

என் அன்புள்ள ஆண்டவரே, அடியேன் மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டு, எந்த இடையூறும், ஒதுக்கமுமின்றி உம்மை மாத்திரமே நேசிக்கும்படியாக, நான் உமது அன்பை எப்போதும் தியானிப்பேனாக.

II

மேலும், இந்தத் தேவத் திரவிய அனுமானம் தேவசிநேகத்தை நம்மில் பற்றியெரியச் செய்கிறது: **"அவர் என்னைத் திராட்சை இரசம் வைக்கும் அறைக்குக் கூட்டி வந்தார்; என்னில் நேசத்தைத் திட்டப்படுத்தினார். புஷ்பங்களை வைத்து என்னைக் காத்துக் கொள்ளுங்கள்; என்னைத் தாங்கக் கனிகளை என் சுற்றிலும் வையுங்கள்; அன்பின் மிகுதியால் சோகம் அடைந்திருக்கின்றேன்" (உந்.சங்.2:4,5).** திராட்சை இரசம் வைக்கும் இந்த அறை திவ்விய நன்மையே என்று **அர்ச். நிஸ்ஸா கிரகோரியார்** கூறுகிறார். அதில் ஆன்மா தேவசிநேகத்தால் எவ்வளவு போதை கொள்கிறது என்றால், அது இவ்வுலகையும், படைக்கப்பட்ட எல்லாவற்றையும் மறந்து போகிறது. சேசுநாதர் தங்களில் தேவசிநேகத்தை அதிகரிக்க வேண்டும் என்ற ஆசையுடன் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் தம்மைப் பெற்றுக் கொள்ளும் ஆத்துமங்களில் அவர் எத்தகைய உக்கிரமான அன்பின் சுவாலைகளைப் பற்றியெரியச் செய்கிறார்! ஒரு நாள் ஒரு குருவின் கரங்களில் சேசுநாதர் அன்பின் தீச்சூளை போல் இருப்பதை அர்ச். சியெனா கத்தரீனம்மாள் கண்டாள். இதன் காரணமாக, திவ்விய நன்மை வாங்கும் அனைவரின் இருதயங்களும் எவ்வாறு இப்படிப்பட்ட ஒரு நெருப்பால் பற்றியெரியாமலும், முற்றிலும் சுட்டெரிக்கப்படாமலும் இருக்கின்றன என்று அவள் வியந்தாள். **அர்ச். லீமா ரோஸ்**, தான் திவ்விய நன்மை வாங்கும் போதெல்லாம் சூரியனையே நாவில் வாங்குவது போலத் தனக்குத் தோன்றுவதாகக் கூறுவது வழக்கம். இதன் காரணமாக, எத்தகைய மிகப் பிரகாசமான ஒளிக்கதிர்கள் அவளது முகத்திலிருந்து சுடர் வீசின என்றால், அவளைப் பார்ப்பவர்கள் கண்கூசிப் போவது வழக்கமாக இருந்தது! எத்தகைய கடும் வெப்பம் அவளுடைய வாயினின்று புறப்பட்டது என்றால், அவள் திவ்விய நன்மை வாங்கிய பின், அவளுக்கு ஏதாவது குடிக்கக் கொடுப்பவர்கள், ஏதோ தீச்சூளையின் அருகில் சென்றவர்களைப் போல, தங்கள் கரம் பொசுங்குவது போல் உணர்ந்தார்கள். பக்தியுள்ள அரசரான **அர்ச். வென்செஸ்லாஸ்** திவ்விய நற்கருணை சந்திக்கச் சென்ற போதெல்லாம், தமது வெளித் தோற்றத்திலும் கூட அவர் எப்பேர்ப் பட்ட பக்தியார்வத்தால் பற்றியெரிவதாகத் தோன்றினார் என்றால், அவரோடு துணைக்குச் செல்லும் ஊழியன், தரையெங்கும் பனி

படர்ந்திருக்கும் சமயங்களில், புனிதரின் பாதச் சுவடுகளிலேயே தன் பாதங்களை வைத்து நடந்து செல்வான். இதனால் அவன் எப்போதும் ஒரு கதகதப்பை உணர்ந்தானே தவிர, குளிர் அவனை ஒருபோதும் பாதித்ததேயில்லை. "திவ்விய நற்கருணை நம்மை நெருப்புப் பற்றியெரியச் செய்யும் தீச்சுவாலையாக இருக்கிறது. இதன் காரணமாக, நெருப்பைக் கக்கும் சிங்கங்களைப் போல, பசாசுக்கு அச்சம் தருபவர்களாக, அந்தத் திவ்விய பந்தியிலிருந்து நாம் திரும்பி வரலாம்" என்று **அர்ச். கிறிசோஸ்தோம்** கூறுகிறார். முடிந்த போதெல்லாம் ஆசையோடு திவ்ய நன்மை உட்கொள்வோம் என்றால், பசாசு ஒருபோதும் நம்மை சோதிக்கக் கூட தைரியம் கொள்ள மாட்டான்.

ஆனால், "நான் அடிக்கடி திவ்விய நன்மை உட்கொள்வதில்லை, ஏனெனில் தேவசிநேகத்தில் நான் மிகவும் குளிர்ந்திருப்பதாக உணர்கிறேன்" என்று சிலர் கூறுவார்கள். தனக்குக் குளிர் அதிகமாக இருப்பதால், தான் நெருப்பின் பக்கத்தில் செல்வதில்லை என்று ஒருவன் சொல்வதற்கு இது ஒப்பானது. உண்மையாகவே கடவுளை நேசிக்க நாம் விரும்பினால், நாம் எவ்வளவு அதிகம் குளிர்ந்தவர் களாக உணர்கிறோமோ, அவ்வளவு அடிக்கடி பீடத்தின் இந்த மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தை நாம் அணுகிச் செல்ல வேண்டும் என்று ஜெர்ஸன் கூறுகிறார். "ஏன் அடிக்கடி திவ்விய நன்மை வாங்குகிறாய் என்று யாராவது உன்னைக் கேட்டால், உத்தமமானவர்களும், குறைபாடுள்ளவர்களுமான இரு வகையினரும் திவ்விய நன்மை வாங்க வேண்டும்; உத்தமமானவர்கள் தங்கள் உத்தமதனத்தில் நிலைத்திருப்பதற்கும், குறைபாடுள்ளவர்கள், உத்தமதனம் அடைவதற்கும் இதைச் செய்ய வேண்டும் என்று பதில் சொல்" என்று **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** எழுதுகிறார். இதே முறையில் **அர்ச். பொனவெந்தூரும்**, "நீ குளிர்ந்தவனாகவே இருந்தாலும், தேவ இரக்கத்தில் நம்பிக்கை வைத்து, அவரை அணுகிச் செல். ஒருவன் எவ்வளவு அதிக சுகவீனமாக உணர்கிறானோ, அவ்வளவு அதிகமாக அவனுக்கு மருத்துவர் தேவைப்படுகிறார்" என்கிறார். சேசுநாதர் அர்ச். மெட்டில்டம்மாளிடம்: "நீ நன்மை வாங்க இருக்கும்போது, எந்த ஒரு

இருதயமும் உணர்ந்திருக்கக் கூடிய முழுமையான அன்பை என்மீது நீ கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பு; அப்போது, நீ விரும்புவது போலவே, அத்தகைய அன்பு நிஜமாகவே உன்னுடையது என்பது போல, நான் அதை ஏற்றுக்கொள்வேன்'' என்றார்.

என் சேசுவே, எல்லாவற்றிற்கும் மேலான நான் உம்மை நேசிக்கிறேன், உம்மை மட்டுமே நேசிக்க நான் விரும்புகிறேன். உம்மோடு தொடர்பில்லாத எல்லா நாட்டங்களையும், ஆசாபாசங்களையும் என் இருதயத்திலிருந்து அகற்றும்படி உம்மை மன்றாடுகிறேன். உம்மை நேசிக்கவும், உமக்கு எதிராக நான் செய்த பாவங்களுக்காக அழவும் எனக்குக் காலம் கொடுத்திருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் சேசுவே, நீர் ஒருவரே என் பிரியத்துக்குரியவராக இருக்க வேண்டுமென நான் ஆசிக்கிறேன். எனக்கு உதவும், என்னைக் காப்பாற்றும், என் இரட்சணியம் என் முழு இருதயத்தோடு உம்மை நேசிப்பதிலும், இவ்வாழ்விலும், மறுவுலகிலும் உம்மை எப்போதும் நேசிப்பதிலும் அடங்கி யிருப்பதாக. மரியாயே, என்தாயாரே, சேசுகிறீஸ்துநாதரை நேசிக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள், எனக்காக அவரிடம் ஜெபியுங்கள்.

சாம்பல் புதன்

"மெமெந்தோ, ஹோமோ, குய்யா புல்விஸ் எஸ்!''

I

"நான் ஒரு நாள் சாக வேண்டும்!'' என்று நமக்கு நாமே அடிக்கடி சொல்லிக் கொள்வது நம் இரட்சணியத்திற்கு மிகவும் பயனுள்ளது. பரிசுத்த திருச்சபை ஒவ்வொரு ஆண்டும் சாம்பல் புதனன்று இதை விசுவாசிகளுக்கு நினைவுபடுத்துகிறது: "மெமெந்தோ ஹோமோ, குய்யா புல்விஸ் எஸ் இன் புல்வேரெம் ரெவெர்த்தேரிஸ்: மனிதா, நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்பதை நினைத்துக் கொள்!''

மனிதா, நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்பதை நினைத்துக்கொள்! மரணத்தைப் பற்றிய இந்த உறுதிப்பாடு வருடத்தில் பல முறை நம் சிந்தனைக்குக் கொண்டு வரப்படுகிறது. சில சமயங்களில் சாலையில் நாம் கடந்து செல்லும் கல்லறைத் தோட்டங்களாலும், சில சமயங்களில் தேவாலயங்களின் அருகில் உள்ள கல்லறைகளாலும், சில சமயங்களில் அடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் மரித்த உடல்களாலும் இது நமக்கு நினைவு படுத்தப்படுகிறது.

வனவாசிகள் தங்கள் குகைகளுக்கு எடுத்துச் செல்லும் மிக விலையுயர்ந்த தட்டுமுட்டுப் பொருட்கள் ஒரு சிலுவையும், ஒரு மண்டையோடும் ஆகும்; சிலுவை சேசுகிறீஸ்துநாதர் நம்மீது கொண்டுள்ள மாபெரும் நேசத்தை அவர்களுக்கு நினைவு படுத்துவதற்காக, மண்டையோடு தங்கள் சொந்த மரணத்தின் நாளை அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காக. இவ்வாறு, தங்கள் வாழ்நாட்களின் இறுதி வரை அவர்கள் தவச் செயல்களில் நிலைத்திருந்தார்கள்; இவ்வாறு வனாந்தரத்தின் வறுமையில் இறந்த போது, தங்கள் அரண்மனைகளில் மரித்த அரசர்களை விட அதிக மனதிருப்தியோடும் மகிழ்ச்சியோடும் அவர்கள் மரித்தார்கள்.

முடிவு அண்மையில் உள்ளது! முடிவு அண்மையில் உள்ளது! **ஃபீனிஸ் வெனித்; வெனித் ஃபீனிஸ் (எசேக். 7:2).** இவ்வாழ்வில் ஒருவன் அதிகக் காலம் வாழ்கிறான், மற்றொருவன் அதை விடக் குறுகிய காலம் வாழ்கிறான்; ஆனால் விரைவிலோ, சற்றுத் தாமதமாகவோ முடிவு வந்தே தீரும்; அந்த முடிவு வரும்போது, சேசுகிறீஸ்துவை நாம் நேசித்திருக்கிறோம், அவருடைய அன்பிற்காக இவ்வாழ்வின் துன்பங்களையும், உழைப்புகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டோம் என்ற எண்ணத்தை விட மரணத்தின் போது நம்மை அதிகம் தேற்றக் கூடியது வேறு எதுவுமில்லை. ஆகவே, நமக்கு ஆறுதல் தரப் போவது, நாம் சம்பாதித்துள்ள செல்வங்கள் அல்ல, நாம் அடைந்துள்ள பதவிகள் அல்ல, நாம் அனுபவித்துள்ள இன்பங்களும் அல்ல. உலகத்தின் மேன்மை முழுவதும் மரிக்கிற ஒரு மனிதனைத் தேற்ற இயலாது; அதற்குப் பதிலாக அது அவனுடைய வேதனைகளை அதிகரிக்க

மட்டுமே உதவுகிறது. எவ்வளவுக்கு அவன் உலக மேன்மைகளை சம்பாதித்திருந்தானோ, அவ்வளவுக்கு அதிகமாக அவன் துன்பப் படுவான். பாதணிகள் அணியாத கார்மேல் சபையின் மிகப் பரிசுத்த கன்னிகையும், பேரரசர் இரண்டாம் ரூடால்ஃபின் மகளுமான அர்ச். அன்னம்மாளின் சகோதரி மார்கரெட் என்பவள், "மரண நேரத்தில் ஓர் இராச்சியத்தால் வரும் பயன் என்ன?" என்கிறாள்!

ஓ எவ்வளவு அதிகமான உலகத்தன்மையான மனிதர்கள் இருக்கிறார்கள்! உலக இலாபங்களையும், அதிகாரத்தையும், பதவியையும் சம்பாதிப்பதில் அவர்கள் மும்முரமய் இருக்கும் அதே கணத்தில் அவர்களுக்கு மரணச் செய்தி வருகிறது: **"உன் இல்லத்தை ஒழுங்குபடுத்து; ஏனெனில் சாகப் போகிறாய், பிழைக்க மாட்டாய்" (இசை.38:1).** ஓ மனிதா, நீ நோயில் விழும் நேரம் வரைக்கும் உன் உயிலை எழுதி வைப்பதில் ஏன் அலட்சியமாய் இருந்திருக்கிறாய்? ஓ என் சர்வேசுரா, ஏதாவது ஒரு வழக்கில் வெற்றி பெறும் நிலையில், அல்லது ஏதாவது ஓர் அரண்மனையை அல்லது ஒரு நிலச் சொத்தை உரிமையாக்க இருக்கும் நிலையில், ஒரு குருவானவர் வந்து தன் ஆத்துமத்திடம், "கிறீஸ்தவ ஆத்துமமே, இவ்வுலகிலிருந்து புறப்பட்டுப் போ" என்று சொல்வதைக் கேட்கும் ஒருவனது வேதனை எவ்வளவு பெரிதாக இருக்கும்! இவ்வுலகிலிருந்து புறப்பட்டுப் போய், சேசுகிறீஸ்துநாதருக்கு உன் கணக்கை ஒப்புவி. "ஆனால், நான் இப்போது ஆயத்தமாக இல்லை" என்று அவன் கதறுகிறான்." அதைப்பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்? நீ இப்போது புறப்பட்டுப் போய்த்தான் ஆக வேண்டும்!

ஓ என் சர்வேசுரா, எனக்கு ஒளி தாரும், உமக்கு ஊழியம் செய்வதிலும், உம்மை நேசிப்பதிலும் என் எஞ்சிய வாழ்நாளைச் செலவிட எனக்கு பலம் தாரும். இப்போது நான் சாவேன் என்றால், மனதிருப்தியோடு நான் சாக மாட்டேன்; மனக்கலக்கத்துடனேயே நான் சாவேன். அப்படியானால், நான் எதற்காகக் காத்திருக்கிறேன்? என் ஆத்துமம் மிக ஆபத்தான ஒரு நிலையில் இருக்கும் சமயத்தில் மரணம் வந்து என்னைப் பற்றிப் பிடிப்பதற்காகவா? ஆண்டவரே, கடந்த காலத்தில் நான் மூடனாக இருந்திருக்கிறேன் என்றாலும், இனி வரவிருக்கும் காலத்தில் நான் அப்படி இருக்க மாட்டேன். இப்போது

நான் என்னை முழுமையாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ளும், உமது வரப்பிரசாதத்தால் எனக்கு உதவியருளும்.

II

ஒரே வார்த்தையில் கூறுவதானால், எல்லோருக்கும் முடிவு வருகிறது. அந்த முடிவோடு கேந்திரமான அந்தத் தருணமும் வருகிறது. நமக்காகக் காத்திருப்பது நித்தியப் பேரின்பமா, அல்லது நித்திய சாபமா அந்தத் தருணத்தையே சார்ந்திருக்கிறது. ஓ, எவ்வளவு பயங்கரத்துக்குரிய நேரம் அது! ஓ! அந்த கணத்தைப் பற்றியும், தங்கள் தெய்வீக நடுவருக்கு அப்போது தங்கள் முழு வாழ்வின் கணக்கை ஒப்புவிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் ஒவ்வொருவரும் அடிக்கடி சிந்திப்பது எவ்வளவு நலம் பயப்பதாக இருக்கிறது! **“அவர்கள் ஞானத்தை அடைவது எப்போது? அவர்களுக்கு எப்போது அறிவு உண்டாகும்? தங்கள் இறுதிக் கதியை அடையத் தேவையானதை அவர்கள் எப்போது செய்வார்கள்?" (உபா.32:29).** உண்மையில், அப்போது அவர்கள் செல்வங்களைக் குவிப்பதில் ஈடுபட மாட்டார்கள், இந்த அழியக்கூடிய உலகில் பெரியவர்களாக அவர்கள் உழைக்கவும் மாட்டார்கள்; புனிதர்களாவது எப்படியென்றும், ஒருபோதும் முடியாத அந்த வாழ்வில் பெரியவர்களாக இருப்பது எப்படியென்றும் அவர்கள் சிந்திப்பார்கள்.

ஆகவே, நம்மிடம் விசுவாசமிருந்தால், மரணமும், ஒரு நடுத் தீர்வையும், ஒரு நித்தியமும் நமக்காகக் காத்திருக்கின்றன என்பதை விசுவசிப்போம்; கடவுளுக்காக மட்டுமே வாழ்வதற்காக நம் எஞ்சிய வாழ்வு முழுவதும் உழைப்போம். ஆகவே, இந்தப் பூமியை விட்டு விரைவில் நாம் புறப்பட வேண்டிய் இருக்கும் என்பதை நினைவில் கொண்டவர்களாக, இந்த பூமியில் திருயாத்ரீகர்களைப் போல வாழ்வதில் நாம் அக்கறை கொள்வோமாக. மேலும், இவ்வாழ்வின் எல்லா விவகாரங்களிலும், மரண நேரத்தில் எப்படி நடந்து கொள்வோமோ, அதே விதமாக எப்போதும் நடந்து கொள்வதில் கவனமாயிருப்போமாக. பூமியின் மீதுள்ள காரியங்கள் (பொருட்கள்)

அனைத்தும் ஒன்றில் நம்மை விட்டுச் சென்று விடுகின்றன, அல்லது நாம் அவற்றை விட்டுப் பிரிந்து செல்கிறோம். **“பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே அந்தும் துருவும் அரிக்கிறதுமில்லை. திருடர் அங்கே கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை'' (மத்.6:20)** என்ற சேசுகிறீஸ்துநாதரின் வார்த்தைகளை நாம் கேட்போமாக. நம்மைத் திருப்திப்படுத்த முடியாதவையும், விரைவாக அழிந்து போகிறவையுமான உலகப் பொக்கிஷங்களை நிந்தித்து அகற்றுவோமாக. நம்மை மகிழ்ச்சியானவர்களாக ஆக்குபவையும், ஒருபோதும் முடியாதவையுமான பரலோகப் பொக்கிஷங்களை சம்பாதித்துக் கொள்வோமாக.

ஆண்டவரே, நிர்ப்பாக்கிய மனிதன் நான், இவ்வுலக நன்மைகளுக்காக, அளவற்ற நன்மைத்தனமாகிய உம்மிடமிருந்து விலகிச் சென்றேன்! புகழ் பெறவும், இவ்வுலகில் பெரும் செல்வத்தை சம்பாதிக்கவும் மட்டுமே உழைத்ததில் என் மூடத்தனத்தை நான் காண்கிறேன். என் உண்மையான மகிழ்சச்சி எது என்பதை நான் காண்கிறேன்: இப்போது முதல் உம்மை நேசிப்பதும், எல்லாவற்றிலும் உமது திருவுளத்தை நிறைவேற்றுவதுமே அது. ஓ என் சேசுவே, ஆதாயத்தின் மீதான ஆசையை என்னிடமிருந்து எடுத்து விடும்; அசட்டை செய்யப்படுவதும், தாழ்மையுள்ளதுமான ஒரு வாழ்வை நான் நேசிக்கச் செய்யும். உம்மை வேதனைப்படுத்தும் எல்லாவற்றிலும் என்னை நான் மறுதலிக்க எனக்கு பலம் தாரும். அமைதியான மனதுடன் நோய்களையும், கலாபனைகளையும், கைவிடப்படுதல்களையும், நீர் எனக்கு அனுப்பும் எல்லாச் சிலுவைகளையும் நான் ஏற்று அரவணைத்துக் கொள்ளச் செய்யும். ஓ, தேவரீர் எனக்காக மரித்தது போலவே நானும் எல்லோராலும் கைவிடப்பட்டு, உம் அன்பிற்காக இறக்க முடிந்தால் எனக்கு எவ்வளவோ நலமாய் இருக்கும்! பரிசுத்த கன்னிகையே, உங்கள் திருமகனைப் பக்தியார்வத்தோடு நேசிப்பதாகிய என் உண்மையான மகிழ்ச்சியை நான் கண்டடைய உங்கள் ஜெபங்கள் எனக்கு உதவ முடியும். ஓ, எனக்காக ஜெபியுங்கள்; உங்களில் நான் என் நம்பிக்கையை வைக்கிறேன்.

“என் மகனே, பாவம் செய்து விட்டாயா? இனி செய்யாதே.'' ।

“என் மகனே, பாவம் செய்து விட்டாயா? இனி செய்யாதே. ஆனால் உன் முந்தின பாவங்கள் உனக்கு மன்னிக்கப்படும்படியாக மன்றாடு'' (சர்வப்.21:1). பிரியமுள்ள கிறீஸ்தவனே, உன் நல்ல ஆண்டவர் உன் இரட்சணியத்தை ஆசிப்பதால், அவர் உனக்குத் தரும் அறிவுரை இதோ: என் மகனே, இனி என்னை நோகச் செய்யாதே; ஆனால் இன்று முதல் உன் கடந்த காலப் பாவங்களுக்காக மன்னிப்பை மன்றாடுவதில் கவனமாயிரு. கடவுளை எவ்வளவு அதிகமாக நோகச் செய்திருக்கிறாயோ, அவ்வளவு அதிகமாக அவரை மீண்டும் நோகச் செய்ய நீ பயப்பட வேண்டும். ஏனெனில் நீ கட்டிக்கொள்ளும் அடுத்த பாவம் தேவ நீதியின் தராசைத் தாழச் செய்து விடலாம், நீ இழக்கப்பட்டு விடலாம். இன்னொரு முறை பாவம் செய்தாய் என்றால் இனி உனக்கு மன்னிப்பே கிடைக்காது என்று நான் சொல்லவில்லை. ஏனெனில் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அப்படியும் நடக்கலாம் என்றுதான் சொல்கிறேன். ஆகவே, நீ சோதிக்கப் படுகிறாய் என்றால்: “ஒருவேளை கடவுள் என்னை இனி மன்னிக்கவே மாட்டார் என்றால், நான் இழக்கப்பட்டு விடுவேன்'' என்று சொல். மேலும், இந்தக் கேள்விக்கு எனக்கு நீ பதில் சொல்ல உன்னை மன்றாடுகிறேன்: ஒரு உணவுப்பொருளில் விஷம் இருக்கிறது என்று தெரிந்தால், அதன்பின் அதை உட்கொள்வாயா? ஒரு குறிப்பிட்ட சாலையில் உன் எதிரிகள் உன் உயிரைப் பறிப்பதற்காகப் பதுங்கிய் இருக்கிறார்கள் என்று தெரிந்தால், அந்த சாலையைத் தவிர்த்து விட்டு, அதிகப் பாதுகாப்பான வேறொரு சாலையில் செல்ல மாட்டாயா? அப்படிய் இருக்க, நீ மீண்டும் பாவம் செய்வாய் என்றால், பிற்பாடு மெய்யான மனஸ்தாபப்படுவாய் என்பதற்கும், பாவத்தில் மீண்டும் விழ மாட்டாய் என்பதற்கும் என்ன வாய்ப்பு இருக்கிறது? மேலும், நீ எதிர்காலத்தில் பாவம் செய்து கொண்டிருக்கும்போதே கடவுள் உன்னை அடித்து வீழ்த்தவோ, அதனால் நீ சாகவோ மாட்டாய்

என்றும், அவர் அதற்குப் பிறகு உன்னைக் கைவிட மாட்டார் என்றும் உனக்கு எப்படித் தெரியும்?

நீ ஒரு வீட்டை வாங்குகிறாய் என்றால், அதற்கு முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதிலும், பணத்தை வீணாக்கி விடக் கூடாது என்பதிலும் முழு கவனமாக இருப்பாய். நீ மருந்து உட்கொள்கிறாய் என்றால், அது உன்னைப் பாதிக்காது என்பதை நன்கு உறுதிப்படுத்திக் கொள்வாய். நீ ஒரு காட்டாற்றைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது என்றால், அதற்குள் விழுந்து விடாமலிருக்க எல்லா முன்னேற்பாடுகளையும் செய்து கொள்வாய். ஆனால் ஒரு பரிதாபமான, அற்ப திருப்திக்காக, மிருகத்தனமான ஓர் இன்பத்திற்காக, உன் நித்திய இரட்சணியத்தை நீ ஆபத்துக்கு உள்ளாக்குகிறாய்! “நான் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லிக் கொள்வேன்" என்கிறாய். ஆனால் நான் உன்னிடம் கேட்கிறேன்: எப்போது அதைப் பாவசங்கீர்த்தனம் செய்வாய்? ஞாயிறன்று. சரி, ஞாயிற்றுக்கிழமை வரை உயிரோடு இருப்பாய் என்று உனக்கு உறுதியளித்தவன் யார்? “மற்றொரு மணி நேர வாழ்வு கூட உனக்கு நிச்சயமில்லாதபோது, மற்றொரு நாளைப் பற்றி ஏன் கனவு காண்கிறாய்?" என்று **அர்ச். அகுஸ்தீனார்** கேட்கிறார். நீ வாழ இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது என்பதைக் கூட உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நீ, நாளைக்குப் பாவசங்கீர்த்தனம் செய்து கொள்வேன் என்று உனக்கே எப்படி வாக்களிக்க முடியும்? “மனஸ்தாபப்பட்டுத் தவம் செய்யும் பாவிக்கு மன்னிப்பை வாக்களித்திருக்கிறவர், நாளைய தினத்தை அவனுக்கு வாக்களிக்கவில்லை. நாளைய தினத்தை அவர் தரலாம், தராமலும் போகலாம்." **அர்ச். அகுஸ்தீனார்** தொடர்ந்து, “மனஸ்தாபப்படுவோருக்குக் கடவுள் மன்னிப்பை வாக்களித்திருக்கிறார். ஆனால் தம்மை நோகச் செய்பவர்களுக்கு நாளைய தினத்தை அவர் வாக்களிக்கவில்லை. இப்போது நீ பாவம் செய்கிறாய் என்றால், ஒருவேளை தவம் செய்யக் கடவுள் உனக்குக் காலம் தரலாம், தராமலும் போகலாம். அப்படி அவர் உனக்குக் காலம் தராமல் போனால், நித்தியம் முழுவதும் உனக்கு என்ன ஆகும்? இதனிடையே, நீ ஒரு ஈனமுள்ள இன்பத்திற்காக உன்

ஆன்மாவை ஏற்கெனவே இழந்து போய், அதை என்றென்றைக்குமாக இழந்து போகும் ஆபத்திற்கும் உள்ளாகிறாய்" என்று எச்சரிக்கிறார்.

ஆண்டவரே, தனது ஆத்துமத்தையும், உமது வரப்பிரசாதத்தையும் மீண்டும் பெற்றுக்கொள்ளும் அசட்டு நம்பிக்கையுடன் அவற்றை மிக அடிக்கடி இழந்து போகும் பைத்தியக்காரர்களில் ஒருவனான என்னைப் பாரும்! நான் பாவத்தில் இருந்த அந்தக் கணத்தில், அந்த இரவில் நீர் என்னை எடுத்துக் கொண்டிருந்தீர் என்றால், எனக்கு என்ன ஆகி இருக்கும்! எனக்காகக் காத்திருந்த உமது இரக்கத்திற்கு நான் நன்றி செலுத்துகிறேன், இப்போது அதே இரக்கம் என் மூடத்தனத்தை நான் உணரும்படி செய்கிறது. ஓ அளவற்ற நன்மைத்தனமே, மிக அடிக்கடி உம்மிடமிருந்து மிக அடிக்கடி திரும்பிக் கொண்டதற்காக நான் மனஸ்தாபப்படுகிறேன்; என் முழு இருதயத்தோடும் உம்மை நேசிக்கிறேன். ஓ என் சேசுவே, உமது திருப்பாடுகளின் பேறுபலன்களின் வழியாக, இனி அவ்வளவு மூடனாய் இருக்க மாட்டேன் என்று நம்புகிறேன்; என்னை விரைவாய் மன்னித்து, உமது தயவு ஆதரவுக்குள் என்னை ஏற்றுக்கொள்ளும், ஏனெனில் இனி உம்மை விட்டு ஒருபோதும் விலகாதிருக்க நான் விரும்புகிறேன்.

II

அந்த அசுத்தஇன்பத்திற்காகவும், திருப்திக்காகவும் ஓராயிரம் அரச மகுடங்களை இழக்கும் ஆபத்துக்கு உட்படுவாயா? நான் இன்னும் சொல்கிறேன்: அந்தக் கணநேர இன்பத்திற்காக, பணம், வீடுகள், நிலச் சொத்துக்கள், சுதந்திரம், உயிர் ஆகிய எல்லாவற்றையும் விட்டு விடுவாயா? மாட்டாய். அப்படிய் இருக்க, அந்த இழிவான கண நேர இன்பத்திற்காக, ஆன்மாவையும், மோட்சத்தையும், கடவுளையும் இழந்து போகும் ஆபத்துக்கு ஏன் உட்படுகிறாய்? எனக்குச் சொல்: ஒரு மோட்சமும், ஒரு நரகமும் ஒரு நித்தியமும் இருக்கின்றன என்று விசுவாசத்தால் கற்பிக்கப்படும்

இக்காரியங்கள் சத்தியங்கள்தானா, அல்லது அவை வெறும் கட்டுக் கதைகளா? நீ பாவத்தில் இருக்கும்போது, மரணத்தால் வெற்றி கொள்ளப்படுவாய் என்றால், நித்தியத்திற்கும் இழக்கப்பட்டு விடுவாய் என்பதை நீ விசுவசிக்கிறாயா? அப்படியானால், “நான் பிற்பாடு இதையெல்லாம் சரிசெய்து கொள்வேன்'' என்று சொல்லிக் கொண்டு, வேதனை மிகுந்த ஒரு நித்தியத்திற்கு உன்னையே நீ தீர்ப்பிட்டுக் கொள்வது எத்தகைய அசட்டுத் துணிச்சலும், எத்தகைய மடமையுமாக இருக்கிறது! “குணமாகி விடுவேன் என்ற நம்பிக்கையில் யாரும் நோயில் விழ விரும்புவதில்லை'' என்கிறார் **அர்ச். அகுஸ்தீனார்**. “பிறகு மாற்று மருந்து சாப்பிட்டு குணமடைவேன்'' என்று சொல்லிக் கொண்டு எவனும் விஷத்தை விழுங்குவதில்லை. ஆனால் நீயோ, “ஒருவேளை நித்திய சாவினின்று என்னை நான் பிற்பாடு விடுவித்துக் கொள்வேன்'' என்று சொல்லிக் கொண்டு, அந்தச் சாவிற்கு உன்னைத் தீர்ப்பிட்டுக் கொள்கிறாய்! ஓ எத்தனையோ ஆன்மாக்களை நரகத்தினுள் வீழ்த்தியதும், இன்னும் வீழ்த்திக் கொண்டிருப்பதுமான மடமையே! **“உன் தீய குணத்தில் நம்பிக்கை வைத்தாய்... தின்மையானது உன் மேல் பாயும், சஞ்சலம் உன்மேல் பெருக்கெடுக்கும், அதை பரிகரிக்க உன்னால் இயலாது போகும்'' (இசை.47:10,11)** என்ற ஆண்டவரின் அச்சுறுத்தும் வார்த்தைகளின்படி, தேவ இரக்கத்தில் அவசரத்தோடும், மிதமிஞ்சியும் நம்பிக்கை கொண்டு நீ பாவம் செய்தாய்; ஆகவே, தண்டனை எங்கிருந்து வருகிறது என்று நீ அறியாமலே அது உன்மீது திடீரென்று விழும்.

“ஆண்டவரே, உம்மில் நம்பிக்கை வைத்தேன்.நான் வெட்கமடைய அனுமதியாதேயும்.'' ஆ, இல்லை! ஓ என் மீட்பரே, உமது வரப்பிரசாதமும், உமது அன்பும் விலக்கப்பட்ட நிலையில் என்னைக் காணும் அவமானமும், கலக்கமும் உள்ள நிலையை நான் மீண்டும் ஒருபோதும் அனுபவிக்க மாட்டேன் என்று நம்பிய் இருக்கிறேன். பரிசுத்த நிலைமை வரத்தை எனக்குத் தாரும்; எப்போதும், குறிப்பாக சோதிக்கப்படும்போதும், “என் சேசுவே, எனக்கு உதவியாக வாரும், என் தாயாரான மாமரியே, எனக்கு உதவியருளும்'' என்று ஜெபித்து, இந்த வரத்தை உம்மிடமும், உமது

பரிசுத்த மாதாவிடமும் மன்றாடிக் கேட்கவும், உதவிக்காக உமது திருப்பெயரைக் கூவியழைக்கவும் எனக்கு வரமருளும். ஆம், என் இராக்கினியே, ஏனெனில் நான் உம்மிடம் தஞ்சமடைந்திருக்கும் வரையிலும் நான் வெற்றிகொள்ளப்பட மாட்டேன். சோதனை தொடரும் என்றால், உமது திருப்பெயரைக் கூவியழைப்பதில் நிலையாயிருப்பதை நான் ஒருபோதும் நிறுத்தி விடாதிருக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

வெள்ளி

சேசுகிறீஸ்துநாதரின் திருப்பாடுகள் பற்றிய சிந்தனைகளும், அவற்றின் மீதான நாட்டங்களும் - 02

I

சேசுவை, சிலுவையில் அறையுண்ட சேசுவையன்றி வேறு எதையும் அறியத் தாம் விரும்பவில்லை என்று அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கூறினார்; அதாவது, சிலுவையின்மீது அவர் நமக்குக் காண்பித்த நேசத்தை; **"உங்களுக்குள்ளே நான் சேசுக்கிறீஸ்து நாதரை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறிந்தவனாய் இருக்க வேண்டுமென்று எண்ணவில்லை" (1 கொரி.2:2).** உண்மையில், சிலுவையில் அறையுண்ட சேசுநாதரிடமிருந்து அல்லாமல், புனிதர்களின் அறிவை, அதாவது கடவுளை நேசிப்பது பற்றிய அறிவை எந்தப் புத்தங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்? கடவுளின் மாபெரும் ஊழியரும், கப்புச்சின் துறவியுமான சகோதரர் **கோர்லியோனின் பெர்னார்ட்** என்பவர் வாசிக்க இயலாதவராக இருந்ததால், அவரது சக துறவி ஒருவர் அவருக்குக் கற்பிக்க விரும்பினார். இதைப் பற்றி அவர் தமது பாடுபட்ட சுரூபத்தோடு கலந்தாலோசிக்கச் சென்றார். ஆனால் சேசு சிலுவையிலிருந்து அவருக்குப் பதில்மொழியாக: "வாசகம் என்பதென்ன? புத்தகங்கள் என்பவை என்ன? இதோ, நான் உன் மீது கொண்டுள்ள அன்பை நீ தொடர்ந்து வாசித்து அறிந்து கொள்ளக் கூடிய புத்தகம் நானே!" என்றார். ஓ, எங்கள் வாழ்நாள் முழுவதிலும், நித்தியத்திலும் நாங்கள் சிந்திக்க வேண்டிய மாபெரும் பாடமே! நம் மீதுள்ள நேசத்திற்காக மரித்தவராகிய ஒரு சர்வேசுரன்! நம் மீதுள்ள நேசத்திற்காக மரித்த ஒரு சர்வேசுரன்! ஓ எங்கள் சிந்தனைக்குரிய அதியற்புதக் கருத்தே!

அர்ச். தாமஸ் அக்குயினாஸ் ஒரு நாள் அர்ச். பொனவெந்தூரைச் சந்தித்து, அவர் எழுதியுள்ள அழகிய பாடங்கள் அனைத்தையும் எந்தப் புத்தகத்திலிருந்து அவர் எடுத்தார் என்று கேட்டார். **அர்ச். பொனவெந்தூர்** சிலுவையில் அறையுண்டவரின் சுரூபம் ஒன்றை அவருக்குக் காட்டினார். அது புனிதரின் ஏராளமான முத்தங்களால் முற்றிலும் கருத்துப் போயிருந்தது. அர்ச்.

பொனவெந்தூர் அர்ச். தாமஸிடம், “இதுவே என் புத்தகம், இதிலிருந்துதான் நான் எழுதும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறேன்; அதுவே நான் பெற்றுள்ள மிகக் கொஞ்சமான அறிவை எனக்குக் கற்பித்துள்ளது" என்றார். சுருங்கக் கூறினால், பாடுபட்ட சுரூபத்தைப் பற்றிய தங்கள் ஆய்விலிருந்தே கடவுளை நேசிக்கும் கலையைப் எல்லாப் புனிதர்களும் கற்றுக்கொண்டார்கள். சகோதரர் ஆல்வெர்னியாவின் ஜான் என்பவர், காயப்பட்ட சேசுநக் காணும் ஒவ்வொரு தடவையும், தமது கண்ணீரை அடக்க இயலாதவராக இருந்தார். சகோதரர் ட்யூடெர்ட்டோவின் ஜேம்ஸ் என்பவர், நம் மீட்பரின் திருப்பாடுகள் வாசிக்கப்படுவதைக் கேட்டபோது, மனங்கசந்து அழுதது மட்டுமின்றி, அவரிடமிருந்து பலத்த கேவுதல்களும் வெளிப்பட்டன. அந்த அளவுக்கு தமது நேச ஆண்டவர் மீதான பற்றியெரியும் அன்பால் அவர் மேற்கொள்ளப்பட்டார்.

II

பாடுபட்ட சுரூபத்தைப் பற்றிய இந்த இனிய ஆய்வுதான் **அர்ச். பிரான்சிஸ் அசிசி**யாரை ஒரு மாபெரும் பக்திச்சுவாலகராக மாற்றியது. சேசுகிறீஸ்துநாதரின் துன்பங்களைப் பற்றி தியானிப்பதில் அவர் எவ்வளவு தொடர்ச்சியாக அழுது கொண்டிருந்தார் என்றால், அவர் கிட்டத்தட்ட தமது பார்வைத் திறனையை இழந்து விட்டார். ஒரு முறை, அவர் அழுதுகொண்டிருப்பதை ஒருவர் கண்டு, அவரை வேதனைப்படுத்துவது எது என்று அவரிடம் கேட்டார். “என்னை வேதனைப்படுத்துவது எதுவா? என் ஆண்டவர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட துயரங்கள் மற்றும் அவமானங்களைப் பற்றி நான் அழுகிறேன்; அவரை நேசியாமலும், அவரைப் பற்றிய எந்த சிந்தனையும் கூட இல்லாமலும் இருக்கிற நன்றியற்ற மனிதர்களைப் பற்றி நினைக்கும்போது என் துக்கம் அதிகரிக்கிறது" என்று புனிதர் பதில் கூறினார். ஒரு செம்மறிக்குட்டி கத்தும் சத்தத்தை அவர் கேட்ட போதெல்லாம், உலகின் பாவங்களுக்காகச் சிலுவையின் மீது தன் இறுதித் துளி இரத்தத்தையும் சிந்திவிட்ட மாசற்ற செம்மறிப்புருவையாகிய சேசுநாதரின் மரணத்தைப் பற்றிய

நினைவால் புனிதர் வேதனைப்பட்டார். ஆகவே, வேறு எதிலும் அன்றி சேசுவின் திருப்பாடுகளை எப்போதும் நினைவுகூர்வதில் மட்டுமே அதிக ஆவல் கொண்டிருக்கும்படி அவர் தம் சகோதரர்களுக்கு அறிவுறுத்தினார்.

எனவே, இதுவே - சிலுவையில் அறையுண்ட சேசுநாதரே - நம் புத்தகம், இதை நாம் நிலையான முறையில் தொடர்ந்து வாசித்து வருவோம் என்றால், அது ஒரு புறத்தில், பாவத்தின் மீதான ஓர் உயிருள்ள அச்சத்தைக் கொண்டிருக்க நமக்குக் கற்பிக்கும்; மறு புறத்தில், நம் மீதுள்ள நேசத்தால் நிரம்பி வழியும் ஒரு சர்வேசுரன் மீதுள்ள நேசத்தால் நாம் பற்றியெரியச் செய்யும்; இந்தத் திருக் காயங்களில், தேவ நீதியை சாந்தப்படுத்துவதற்காக இத்தகைய கசப்பான மரணத்தை அடையும் அளவுக்கு கடவுளாகிய ஒருவரைத் தாழ்த்திய பாவத்தின் மாபெரும் கொடூரத் தன்மையையும், தாம் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை நமக்கு எண்பிக்கும்படி, இவ்வளவு அதிகமாகத் துன்புறுவதைத் தேர்ந்து கொண்டதில் நம் இரட்சகர் நமக்குக் காண்பித்துள்ள நேசத்தையும் நாம் அறிந்து கொள்வோம்.

ஏராளமான நேசமுள்ள இருதயங்கள் சுட்டெரிக்கப்படுகிற இந்த நேசத்தின் தீச்சூளைகளுக்குள் நாமும் நுழையும் வரப்பிரசாதத்தை தேவதாய் கன்னிமாமரி தனது திருமகனிடமிருந்து நமக்குப் பெற்றுத் தருமாறு அவர்களிடம் மன்றாடுவோம். அப்போது, அங்கே நம் உலக நாட்டங்கள் சுட்டெரிக்கப்படுவதோடு, நாமும் ஆசீர்வதிக்கப்பட்ட தீச்சுவாலைகளால் பற்றியெரிவோம், இதனால் பூமியின் மீது ஆன்மாக்கள் பரிசுத்தமடையும், மோட்சத்தில் அவை ஆசீர்வதிக்கப்பட்டவையாக இருக்கும். ஆமென்.

சனி

பரிசுத்த மாமரியின் வாழ்வு முழுவதும் நீடித்த வேதசாட்சியம் I

சேசுவின் திருப்பாடுகள், **அர்ச். பெர்னார்ட்** சொல்வது போல, அவரது பிறப்பிலேயே தொடங்கி விட்டன. எல்லாக் காரியங்களிலும் தன் திருமகனைப் போலவே இருந்த மாமரியும், தன் வாழ்நாள் முழுவதிலும் தனது வேதசாட்சியத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. **அர்ச். பெரிய ஆல்பெர்ட்** குறித்துக் காட்டுவது போல, மாமரியின் திருப்பெயருக்கு, “கசப்பான கடல்" என்னும் பொருளும் உள்ளது. "மாரே ஆமாரும்.'இவ்வாறு, **“உன் நெருக்கிடை கடலைப் போல் அபாரமாய் இருக்கிறதே!"** என்ற ஜெரேமியாஸின் வார்த்தைகள் மாமரிக்குப் பொருந்துபவையாக இருக்கின்றன **(புலம்பல். 2:13).** ஏனெனில் கடல் முழுவதும் கசப்பும், உவர்ப்புமாக இருப்பது போலவே, மரியாயின் வாழ்வும் மீட்பரின் திருப்பாடுகளைப் பற்றிய பார்வை தந்த கசப்பால் நிரம்பியிருந்தது. அவரது திருப்பாடுகள் எப்போதும் அவர்களது மனதில் தங்கியிருந்தன. தீர்க்கதரிசிகள் அனைவரையும் விட மிக உயர்வான அளவில் பரிசுத்த ஆவியானவரால் ஒளிர்விக்கப்பட்டவர்களாக, மாமரி அதே தீர்க்கதரிசிகளால் பரிசுத்த வேதாகமங்களில் மெசையா பற்றிப் பதிவு செய்யப்பட்டிருந்த காரியங்களை, அவர்களை விட அதிகத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. தேவதூதர் அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு வெளிப்படுத்தியதும் இதுதான். அவர் தொடர்ந்து அவளிடம்: “மகா பரிசுத்த திவ்ய கன்னிகை, அவதரித்த வார்த்தையானவரின் தாயாராக ஆகுமுன்னமே, மனிதர்களின் இரட்சணியத்திற்காக அவர் எவ்வளவு துன்பப்படுவார் என்பதை அறிந்திருந்தார்கள். மேலும், தம்முடையதல்லாத பாவங்களுக்காக மிகக் கொடூரமான மரணத்திற்கு உள்ளாக்கப்பட இருந்த இந்த மாசற்ற இரட்சகரின் மீது அந்த மாசற்ற கன்னிகை அளவற்ற தயவிரக்கம் கொண்டிருந்தார்கள். அப்போது முதலே அவர்களுடைய மாபெரும் வேதசாட்சியம் தொடங்கி விட்டது" என்று வெளிப்படுத்தினார். மாமரி இந்த இரட்சகரின்தாயாராக ஆனபோது, அவர்களுடைய இந்தத் துயரமும் வேதனையும் அளவற்ற விதமாக அதிகரித்தன. எந்த அளவுக்கெனில், தனது பரிதாபத்திற்குரிய திருமகன் தாங்க வேண்டியிருந்த பல்வேறு வாதைகளின் துயரமான காட்சி தியானங்களின் காரணமாக, அவர்கள் உண்மையாகவே ஒரு நீண்ட

வேதசாட்சிய வேதனையை அனுபவித்தார்கள். அது அவர்களது வாழ்நாள் முழுவதும் நீடித்த ஒரு வேதசாட்சியமாக இருந்தது. இது அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு ஒரு காட்சியில் மிகத் துல்லியமாகக் குறித்துக் காட்டப்பட்டது. உரோமையிலுள்ள அர்ச். மாமரியின் பெரிய பேராலயத்தில் இந்தக் காட்சி அவளுக்கு அருளப்பட்டது. இக்காட்சியில் திவ்விய கன்னிகை அர்ச். சிமியோனோடும், ஒரு மிக நீண்டதும், இரத்தத்தால் சிவந்திருந்ததுமான ஒரு வாளைச் சுமந்திருந்த ஒரு தேவதூதரோடும் அவளுக்குத் தோன்றினார்கள். இதன் மூலம் மரியாயின் வாழ்நாள் முழுவதும் அவர்களது மாசற்ற இருதயத்தைக் குத்தித் துளைத்துக் கொண்டிருந்த நீண்ட, கசப்பான துயரம் குறித்துக் காட்டப்பட்டது. ரூப்பெர்ட் என்பவர் இக்காட்சியில் மாமரி பின்வருமாறு பேசுவதாகக் கற்பனை செய்கிறார்: “மீட்கப்பட்ட ஆன்மாக்களே, என் அன்புக் குழந்தைகளே, என் பிரியமுள்ள சேசு என் கண்களுக்கு முன்பாக மரித்துக் கொண்டிருந்ததை நான் கண்ட அந்த வேளைக்காக மட்டும் என்மீது பரிதாபப்படாதீர்கள். ஏனெனில், சிமியோனால் முன்னுரைக்கப்பட்ட வியாகுல வாள் என் வாழ்நாள் முழுவதுமே என் ஆத்துமத்தைத் துளைத்துக் கொண்டிருந்தது. என் தேவ குழந்தையானவருக்கு நான் தாயமுது ஊட்டும்போதும், என் கரங்களில் தூக்கி வைத்து, அவருக்குக் கதகதப்பை நான் அளித்த போதும், ஏற்கெனவே என் குழந்தைக்காகக் காத்திருந்த கசப்பான மரணத்தை நான் தீர்க்கதரிசனமாகக் கண்டிருந்தேன். ஆகவே, எத்தகைய நீண்ட, கசப்பான வியாகுலங்களை நான் அனுபவித்திருப்பேன் என்று சிந்தித்துப் பாருங்கள்!''

II

ஆகவே, **“என் வாழ்வு துக்கத்திலும், என் வருஷங்கள் புலம்பல்களிலும் கடந்துபோயின'' (சங்.30:10), “என் துக்கம் எந்நேரமும் எனக்கு முன்பாக இருக்கிறது'' (சங்.37:18)** என்ற தாவீதரசரின் வார்த்தைகளை மாமரி இன்னும் அதிக நியாயத்தோடு கூறலாம். “என் வாழ்வுமுழுவதும் துயரத்திலும் கண்ணீரிலும் செலவிடப்பட்டது; ஏனெனில், என் அன்புக்குரிய திருச்சுதனின் மீது நான் கொண்ட பரிதாப உணர்வாகிய என் துயரம் ஒருபோதும் என்

கண்களுக்கு முன்னிருந்து விலகவில்லை, ஏனெனில் அவர் ஒரு நாள் அனுபவிக்க இருந்த துன்பங்களையும் மரணத்தையும் நான் ஏற்கெனவே தீர்க்கதரிசனமாகக் கண்டேன்." தனது திருமகனின் மரணம் மற்றும் பரலோக ஆரோகணத்திற்குப் பிறகும் கூட உண்ணும்போதும், வேலை செய்யும்போதும், மற்ற எல்லா நேரங்களிலும், ஒவ்வொரு கணமும், சேசுவின் திருப்பாடுகளின் நினைவு மாமரியின் இருதயத்தில் மிக ஆழமாகப் பதிந்திருந்தது என்றும், அது அவர்களது ஞாபகத்தில் எப்போதும் புதிதாக நிலைத்திருந்தது என்றும் தேவ அன்னையே அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு வெளிப்படுத்தினார்கள். இதன் காரணமாக, மகா பரிசுத்த கன்னிகை தன் வாழ்நாள் முழுவதையும் ஒரு தொடர்ச்சியான துயரத்திலேயே கழித்தார்கள், ஏனெனில் அவர்களது இருதயம் எப்போதும் வருத்தத்தாலும், துன்பத்தாலும் நிறைந்திருந்தது என்று **டோலர்** என்பவர் கூறுகிறார்.

ஆகவே, துயரப்படுவோரின் வேதனைகளை வழக்கமாகக் குறைத்து விடும் காலம், மாமரியை மட்டும் விடுவிக்கவில்லை; அதை விட அதிகமாக, அது அவர்களது வியாகுலங்களை இன்னும் அதிகரிக்க மட்டுமே செய்தது. ஏனெனில், ஒரு புறத்தில் சேசு வயதில் வளர்ந்து, மேலும் மேலும் அழகாகவும், நேசத்திற்குரியவராகவும் ஆகிக் கொண்டிருக்க, மறு புறத்தில் அவரது மரண நேரமும் மேன்மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதனால் இவ்வுலகில் அவரை இழந்து போவது பற்றிய எண்ணத்தில் மாமரியின மாசற்ற இருதயத்தில் எப்போதும் துயரம் அதிகரித்தே வந்தது. இது பற்றி தேவதூதர் அர்ச். பிரிஜித்தம்மாளிடம் கூறிய வார்த்தைகள்: "ரோஜா முட்கள் நடுவில் வளர்வது போல, கடவுளின திருத்தாயாரும் துன்பங்களின் மத்தியிலேயே வயதில் அதிகரித்தார்கள்; ரோஜாச் செடி வளர வளர, முட்கள் அதிகரிப்பது போலவே, ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ இரகசிய ரோஜாவாகிய மாமரியிலும் அவர்களது வயதோடு சேர்த்து, அவர்களது வியாகுல முட்களும் அதிகரித்தன. வயது அதிகரிக்க அதிகரிக்க, அவர்களது இருதயத்தை அவையும் அதிக ஆழமாகக் குத்தி ஊடுருவின."

தவக்காலத்தின் முதல் ஞாயிறு

“உன் தேவனாகிய ஆண்டவரை சோதியாதிருப்பாயாக.'' I

அப்போஸ்தலர் சொல்வது போல, **“சகல மனிதர்களும் இரட்சிக்கப்பட ... வேண்டுமென்று கடவுள் சித்தமாய் இருக்கிறார்'' (1 திமோ.2:4).** ஆயினும், நம் எதிரிகளை வெற்றி கொள்ளும் வழிகளைப் பயன்படுத்துவதன் மூலமும், மனஸ்தாபத்திற்கு நம்மை அழைக்கும் அவரது குரலுக்குக் கீழ்ப்படிவதன் மூலமும் நம் இரட்சணியத்திற்காக நாம் உழைக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். சோதனைகளை வெல்ல எந்த முயற்சியும் செய்யாமல் பாவியானவன் பாவத்திற்குத் தன்னைக் கையளிக்கிறான்; வெற்றி கொள்ள கடவுளின் உதவியை அவன் கேட்பது கூடஇல்லை, ஒரு நாள் படுகுழியிலிருந்து கடவுள் தன்னை வெளியே இழுத்து விடுவார் என்று அவன் நம்புகிறான். இப்படிப்பட்டவன் புதுமைகள் செய்யும் படியாகவும், கிறீஸ்தவர்களுக்குப் பொதுவாக வழங்கப்படாத அசாதாரண இரக்கத்தைத் தனக்குக் காட்டும்படியாகவும் கடவுளை சோதிக்கிறான். **“உன் தேவனாகிய ஆண்டவரை நீ சோதியாதிருப்பாயாக'' (மத்.4:7).**

தம்மைப் பாவத்தால் நோகச் செய்பவர்களைக் கடவுள் உடனே தண்டிப்பார் என்றால், இப்போது போல அவர் நிச்சயமாக அவமானப்படுத்தப்பட மாட்டார்; இதற்கு மாறாக, ஆண்டவர் உடனே தண்டிப்பதில்லை, அவர் தாமதிக்கிறார் என்பதால், அவரை இன்னும் அதிகமாக நோகச் செய்யப் பாவிகள் தைரியம் கொள்கிறார்கள்! ஆயினும், கடவுள் காத்திருக்கிறார், அவர் பொறுத்துக்கொள்கிறார் என்றாலும், அவர் என்றென்றும் காத்துக் கொண்டும், பொறுத்துக் கொண்டும் இருக்க மாட்டார் என்பதில் நாம் உறுதியாய் இருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்நாளின் எண்ணிக்கையையும், அவன் மீது தான் பொழியத் தேர்ந்து கொள்ளும் தாலந்துகளையும் அவர் ஏற்கெனவே தீர்மானித்து விடுகிறார் என்பது அர்ச். பேசில், அர்ச். ஜெரோம், அர்ச். அம்புரோஸ், அர்ச். அலெக்சாந்திரியா சிரில், அர்ச். ஜான்

கிறிசோஸ்தோம், அர்ச். அகுஸ்தீன், இன்னும் பல திருச்சபைத் தந்தையரின் கருத்தாக இருக்கிறது. **“தேவரீர் சகலத்தையும் அளவோடும் கணக்கோடும், நிறையோடும் நடத்தினீர்'' (ஞான.11:21);** இவ்வாறே ஒவ்வொரு மனிதனிலும் தாம் மன்னிக்க இருக்கும் பாவங்களின் எண்ணிக்கையையும் அவர் தீர்மானித்து வைத்திருக்கிறார். இந்த எண்ணிக்கை நிரம்பும்போது, அவர் அதற்கு மேல் மன்னிப்பதில்லை. “ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கடவுளின் பொறுமை ஒவ்வொருவரையும் சகித்துக் கொள்கிறது; அந்தக் காலம் முடிந்ததும், இனி அவன் மன்னிக்கப்படுவதில்லை. இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்'' என்கிறார் **அர்ச். அகுஸ்தீனார்**. **செசாரியாவின் யூஸேபியஸும்** இதே காரியத்தைக் கூறுகிறார்: “ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரை கடவுள் பொறுமையாக இருக்கிறார். அதன்பின் கைவிடுகிறார்''; மேலே குறிப்பிடப்பட்ட திருச்சபைத் தந்தையர்களும் இவ்வாறே பேசுகிறார்கள்.

இந்தத் தந்தையர் வாய்க்கு வந்தபடி பேசவில்லை, மாறாகப் பரிசுத்த வேதாகமத்தின்படியே பேசுகிறார்கள். ஓரிடத்தில், அமோறையர்களின் பாவங்களின் எண்ணிக்கை இன்னும் நிறைவு பெறாததால் அவர்களது அழிவைத் தாம் தாமதிப்பதாக ஆண்டவர் கூறுகிறார்: **“அமோறையர்களின் பாவ அக்கிரமங்களின் அளவு இன்னும் நிறைவாகவில்லை'' (ஆதி.15:16).** மற்றோர் இடத்தில், **“இஸ்ராயேல் வீட்டாருக்கு இனி இரக்கம் காட்ட மாட்டோம்'' (ஓசே.1:6). “யார் நம்மைப் பத்து முறையும் சோதித்து, நம் கட்டளைகளை மீறிய் இருக்கிறார்களோ, அம்மனிதரில் ஒருவனும் நாம்... வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தைக் காணமாட்டார்கள்'' (எண்.14:22-23).** மற்றொரு இடத்தில், **“ஒரு பையில் இடுவது போல நீர் என் பாவங்களை இட்டு முத்திரையிட்டீர்''** என்று யோபு கூறுகிறார் (யோபு.14:17). பாவிகள் தங்கள் பாவங்களுக்குக் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. ஆனால் கடவுள் உண்மையாகவே கணக்கு வைத்துக் கொள்கிறார். இவ்வாறு, அறுவடை முற்றியதும் அவர் தண்டிக்கக் கூடும், அதாவது, எண்ணிக்கை நிறைவானதும்: **“பயிர் முற்றிவிட்டதால், அரிவாளை இடுங்கள்'' (யோவேல்.3:13).**

மற்றொரு இடத்தில்: **“மன்னிக்கப்பட்ட பாவங்களைப் பற்றி அச்சமற்றவர்களாய் இராதீர்கள்; பாவத்திற்கு மேல் பாவம் கட்டிக் கொள்ளாதீர்கள்"** என்று கடவுள் கூறுகிறார் (சர்வப். (சீராக்)5:5). அதாவது, அவர் பாவியிடம்: “நான் உனக்கு மன்னித்து விட்ட பாவங்களுக்காகக் கூட நீ அஞ்ச வேண்டும், ஏனெனில் இன்னும் ஒரு பாவத்தை நீ அவற்றோடு சேர்த்தாய் என்றால், மன்னிக்கப்பட்ட பாவங்களோடு அந்தப் புதிய பாவம் எண்ணிக்கையை நிறைவு செய்வதாக இருக்கலாம். அதன்பின் உனக்கு இனி இரக்கம் கிடைக்காது" என்று சொல்கிறார். மற்றோர் இடத்தில் வேதாகமம் இன்னும் அதிக அப்பட்டமாக, **“தீர்வையின் நாள் வரும்போது, தாம் அவர்களைத் தண்டிக்கும்படியாக, ஆண்டவர் பொறுமையாகக் காத்துக் கொண்டிருக்கிறார்"** என்கிறது (2 மக்.6:14). ஆக, பாவங்களின் அளவு முழுமை பெறும் வரை கடவுள் காத்திருக்கிறார், அதன் பின் அவர் தண்டிக்கிறார்.

ஆ, என் தேவனே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; எத்தனை பேர் என்னை விட மிகக் குறைவான பாவங்களுக்காக இப்போது நரகத்தில் இருக்கிறார்கள்! இனி அவர்களுக்கு மன்னிப்பில்லை, நம்பிக்கையுமில்லை. நானோ இன்னும் உயிரோடு இருக்கிறேன்! நான் நரகத்தில் இல்லை. நான் ஆசைப்பட்டால், மன்னிப்படைவேன் என்றும் மோட்சத்தைப் பெற்றுக் கொள்வேன் என்றும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். ஆம், என் தேவனே, நான் மன்னிப்பை ஆசிக்கிறேன்; மற்ற எல்லாத் தீமைகளுக்கும் மேலாக, உம்மை நோகச் செய்ததற்காகவே நான் அதிகம் துக்கப்படுகிறேன், ஏனெனில் உமது அளவற்ற நன்மைத்தனத்தை நான் நோகச் செய்து விட்டேன். நித்திய பிதாவே, என் நிமித்தமாக சிலுவையின் மீது இறந்திருக்கிற உமது திருச்சுதனைப் பாரும். அவரது பேறுபலன்களின் வழியாக, என் மீது தயவாயிரும். மீண்டும் உம்மை நோகச் செய்வதை விட, சாவைத் தேர்ந்துகொள்வேன் என்று நான் உமக்கு வாக்களிக்கிறேன்.

II

இத்தகைய தண்டனைக்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக, சவுலின் உதாரணம்: அவன் தன் இறுதி கீழ்ப்படியாமைக்காகக் கடவுளால் கைவிடப்பட்டான். தனக்காகப் பரிந்து பேசும்படி அவன் சாமுவேலிடம் மன்றாடினான். **“என் பாவத்தைப் பொறுத்துக் கொண்டு, ஆண்டவரை நான் ஆராதிக்கத்தக்கதாக, என்னோடு திரும்பி வாரும்'' என்று அவன் மன்றாடிய போது, சாமுவேல் பதிலுக்கு, “நான் உன்னோடு திரும்பி வர மாட்டேன், ஏனெனில் நீ ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து விட்டாய், ஆண்டவரும் உன்னைப் புறக்கணித்து விட்டார்'' என்றார். (1 அரசர்.15:25).** அடுத்து, பல்தசாரின் உதாரணம்: அவன் பந்தியில் தேவாலயத்தின் புனிதப் பாத்திரங்களை அவசங்கை செய்தான். அப்போது ஒரு கரம் தோன்றி, சுவரின் மீது, **"மானே, தெக்கேல், பாரேஸ்'** என்ற வார்த்தைகளை எழுதுவதை அவன் கண்டான். தானியேல் வந்தார். இவ்வார்த்தைகளை விளக்குகையில் அவர் அவனிடம் மற்ற காரியங்களோடு சேர்த்து, **“நீ தராசில் நிறுக்கப்பட்டாய், அப்போது எடை குறைவாகக் காணப்பட்டாய்''** என்ற வார்த்தைகளையும் அவர் சொன்னார் (தானி.5:27). இதன் மூலம், அவனது பாவங்களின் பாரம் ஏற்கெனவே தேவ நீதியின் தராசைத் தாழச் செய்து விட்டதை அவன் புரிந்து கொள்ளச் செய்தார். அன்றிரவே அவன் கொலை செய்யப்பட்டான். ஓ, இதே காரியம் எத்தனை பரிதாபத்திற்குரிய பாவிகளுக்கு நிகழ்கிறது! அவர்கள் தங்கள் பாவங்களில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அமிழ்ந்திக் கிடக்கிறார்கள்; ஆனால் அவர்களுடைய பாவங்களின் எண்ணிக்கை நிரம்பும்போது, அவர்கள் மரணத்தால் வெற்றி கொள்ளப்பட்டு, நரகத்திற்குத் தீர்ப்பிடப்படுவார்கள். **“தங்கள் வாழ்நாளெல்லாம் செல்வ சுகத்தில் கழித்து, ஒரு கணப் பொழுதில் நரக பாதாளத்தில் இறங்குகிறார்கள்'' (யோபு.21:13).** சிலர் நட்சத்திரங்களின் எண்ணிக்கையை, அல்லது சம்மனசுக்களின் எண்ணிக்கையை, அல்லது ஒரு சம்மனசானவரின் ஆண்டுகளைக் கண்டுபிடிப்பதில் வாழ்நாளைப் போக்குகிறார்கள்; ஆனால் நம்மில் ஒவ்வொருவருக்கும் கடவுள் மன்னிக்கும் பாவங்களின் எண்ணிக்கையை யாரால் கண்டுபிடிக்க முடியும்? ஆகவே, நாம் அஞ்சி நடுங்க வேண்டும். பாவகரமான அந்த இன்பத்திற்குப் பிறகு,

நீ சம்மதித்த அந்த முதல் நினைவுக்குப் பிறகு, நீ கட்டிக்கொள்ள இருக்கும் அந்த முதல் பாவத்திற்குப் பிறகு, கடவுள் உன்னை மீண்டும் மன்னிப்பாரா இல்லையா என்று யாருக்குத் தெரியும்?

சர்வேசுரா, நான் கட்டிக் கொண்ட பாவங்களையும், நீர் என்மீது பொழிந்தருளிய வரப்பிரசாதங்களையும் நான் நினைக்கும்போது, மேலும் ஒரே ஒரு பாவம் செய்வேன் என்றால், பாவங்களின் அளவு முழுமை பெற்று, நான் இழக்கப்படலாம் என்று நான் மிகவே அஞ்சுகிறேன். ஆ, உமது வரப்பிரசாதத்தால் எனக்கு உதவியருளும். உமக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும்படி உம்மிடமிருந்தே ஒளியும் பலமும் பெற்றுக்கொள்வேன் என்று நம்பிய் இருக்கிறேன். ஒருவேளை நான் மீண்டும் உம்மைப் பாவத்தால் நோகச் செய்வேன் என்று நீர் காண்கிறீர் என்றால், உமது வரப்பிரசாதத்தில் இருப்பதாக நான் நம்புகிற இந்தக் கணமே நான் சாகச் செய்தருளும். என் தேவனே, எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் நேசிக்கிறேன், மரணத்தையும் விட அதிகமாக, உமது கோபத்தை மீண்டும் சம்பாதித்துக் கொள்வேன் என்று நான் அஞ்சுகிறேன். உமது இரக்கத்தில் அதை அனுமதியாதிரும். மரியாயே, என் தாயாரே, உங்கள் தயவிரக்கத்தால் எனக்கு உதவுங்கள்; பரிசுத்த நிலைமை வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

திங்கள்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் -03

I

வரலாற்றில் அன்பின் நிரூபணம் ஒன்றை நாம் வாசிக்கிறோம். அது எந்த அளவுக்கு அற்புதமானதாக இருக்கிறது என்றால், அது எல்லாக் காலங்களிலும் மக்களின் அபிமானத்திற்குரியதாக இருக்கும். ஒரு காலத்தில் பல நாடுகளை ஆண்ட பேரரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தார். அவர் எவ்வளவு அழகும், புனிதமும், இனிமையும் உள்ளவராக இருந்தார் என்றால், அவர்

தமது தந்தையின் மகிழ்ச்சியாக இருந்தார். அந்தத் தந்தை தம்மை நேசிப்பது போலவே தமது மகனையும் நேசித்தார். இந்த இளவரசனுக்கு அவரது அடிமைகளில் ஒருவன் மீது மிகுந்த பாசம் இருந்தது. அது எவ்வளவு அதிகமாக இருந்தது என்றால் அந்த அடிமை ஒரு குற்றத்தைச் செய்து, அதற்காக மரணத்திற்குத் தீர்வையிடப் பட்டபோது, அந்த இளவரசர் அந்த அடிமைக்காகத் தாமே பலியாக முன்வந்தார். அவனது தந்தை, நீதியின் மீது தாகம் கொண்டவராக, அந்த அடிமை தனக்குத் தகுதியான தண்டனையில் இருந்து அவன் விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக இருக்குமாறு, தன் அன்புக்குரிய மகனை மரணத்திற்குத் தீர்ப்பிடுவதில் திருப்தியடைந்தார். இவ்வாறு அந்த மகன் ஒரு பாவியைப் போல மரணமடைய, அந்த அடிமை தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

ஈடு இணையற்றதும், இனி ஒருபோதும் நிகழ இயலாததுமான இந்தச் சம்பவம் பரிசுத்த சுவிசேஷங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. அங்கே, மனிதன் தன் பாவங்களுக்குத் தண்டனையாக நித்திய மரணத்திற்குத் தீர்வையடைய வேண்டியவனாக இருந்ததைக் கண்ட பிரபஞ்சத்தின் ஆண்டவராகிய தேவ சுதன், மனித சரீரத்தைத் தம் மீது ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் மனிதனுக்கு உரியதாக இருந்த பாவத்திற்குரிய அபராதத்தைத் தமது மரணத்தால் செலுத்து வதைத் தேர்ந்து கொண்டார். **"அவர் தமது சொந்த சித்தத்தின்படியே பலியானார்" (இசை.53:7).** அவரது நித்தியப் பிதா பரிதாபத்திற்குரிய பாவிகளாகிய நம்மை இரட்சிப்பதற்காகத் தம் திருமகன் சிலுவையின் மீது மரணமடையச் செய்தார்: **"தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தார்" (உரோ.8:32).** ஓ பக்தியுள்ள ஆன்மாவே, சுதனுடையதும், பிதாவுடையதுமான இந்த அன்பைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

ஆகவே, ஓ என் அன்புள்ள மீட்பரே, தேவரீர் என் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருமாறு, உமது மரணத்தின் மூலம் உம்மையே பலியாக்குவதைத் தேர்ந்து கொண்டீர். உமக்கு நான் எப்படிப் பிரதிநன்றி காட்டப் போகிறேன்? உம்மை நான்

நேசிக்கச் செய்வதற்கு, நீர் அளவுக்கு அதிகமாகவே செய்திருக்கிறீர். உண்மையில் என் முழு இருதயத்தோடு உம்மை நான் நேசிக்கவில்லை என்றால் நானே அனைவரிலும் அதிகம் நன்றியற்றவனாக இருப்பேன். உமது சொந்த உயிரையே நீர் எனக்காகக் கையளித்திருக்கிறீர்; பரிதாபத்திற்குரிய பாவியாக இருக்கிற நானும் பதிலுக்கு என் சொந்த உயிரை உமக்குக் கையளிக்கிறேன். ஆம், எனக்கு எஞ்சிய் இருக்கிற காலத்தை உம்மை நேசிப்பதிலும், உமக்குக் கீழ்ப்படிவதிலும், உம்மைப் பிரியப்படுத்துவதிலும் செலவிடுவதையாவது நான் செய்வேன்.

II

ஓ, மனிதர்களே, மனிதர்களே, நாம் இந்த நம் மீட்பரை நேசிப்போமாக. இவர் கடவுளாயிருந்தும் நம் பாவங்களைத் தம் மீது ஏற்றுக்கொள்வதை நிந்தையாகக் கருதவில்லை. **“மெய்யாகவே அவரே நமது பலவீனத்தை எடுத்துக்கொண்டு, நமது வேதனைகளைத் தாமே சுமந்துகொண்டார்" (இசை.53:4).** “நம் ஆண்டவர் நம்மைப் படைப்பதில், தமது வல்லமையைக் கொண்டு நம்மை உருவாக்கினார், ஆனால் நம்மை மீட்டு இரட்சிப்பதில், தமது துன்பங்களின் வழியாக மரணத்தினின்று அவர் நம்மைக் காத்துக் கொண்டார்" என்று **அர்ச். அகுஸ்தீன்** கூறுகிறார். ஓ என் இரட்சகராகிய சேசுவே, உமக்கு நான் எவ்வளவு அளவற்ற விதமாகக் கடன்பட்டிருக்கிறேன்! ஓ, ஓராயிரம் முறை திரும்பத் திரும்ப உமக்காக என் இரத்தத்தைச் சிந்த என்னால் முடிந்தால்-- உமக்காக ஓராயிரம் வாழ்வுகளை என்னால் செலவிட முடிந்தால்-- அது கூட உம் அன்பிற்கு முன் வெறுமையாகவே இருக்கும். ஓ, உமது திருப்பாடுகளில் நீர் தனக்குக காட்டியுள்ள அன்பைப் பற்றி அதிகம் தியானித்துள்ள எவனும் உம்மைத் தவிர வேறு எதையும் நேசிக்க எப்படி முடியும்? சிலுவையின் மீது நீர் எந்த அன்பைக் கொண்டு எங்களை நேசித்தீரோ, அந்த அன்பின் வழியாக, என் முழு இருதயத்தோடு உம்மை நேசிக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும். அளவற்ற நன்மைத்தனமே, உம்மை நான் நேசிக்கிறேன்; மற்ற எல்லா நன்மை களுக்கும் மேலாக நான் உம்மை நேசிக்கிறேன்; வேறு

எதையும் விட அதிகமாக உமது பரிசுத்த அன்பையே நான் உம்மிடம் கேட்கிறேன்.

“ஆனால் இது எப்படி சாத்தியம்?" என்று கேட்கிறார் **அர்ச். அகுஸ்தீன்**: “ஓ உலக இரட்சகரே, நான் குற்றத்தைச் செய்திருக்க, அதற்குரிய அபராதத்தை நீர் செலுத்தும் அளவுக்கு உமது அன்பு மிகப் பெரும் உச்சத்தை எட்டியது எப்படி சாத்தியம்?" “உமது அன்பு எந்த அளவை எட்டியுள்ளது? பாவம் செய்தவன் நான் தண்டிக்கப் படுவது நீர்!" இதன் தொடர்ச்சியாக அர்ச். பெர்னார்ட், “அப்படி யானால் நாங்கள் எங்களுக்குத் தகுதியுள்ளபடி எங்களையே இழந்து தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும், உமது மாசற்ற சரீரத்தைக் கொண்டு எங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதையும், மரணத்தினின்று எங்களை விடுவிக்கும்படி, நீர் மரணத்தைத் தேர்ந்து கொண்டீர் என்பதையும் தவிர வேறு எதை இது உமக்குக் குறித்துக் காட்டுகிறது?" என்று கேட்கிறார்.”ஓ நல்ல சேசுவே, நீர் என்ன செய்கிறீர்? சாக வேண்டியவர்கள் நாங்கள்தான், ஆனால் நீர் சாகிறீர். நாங்கள்தான் பாவம் செய்தோம், ஆனால் நீர் துன்புறுகிறீர். இது, முன் ஒருபோதும் நிகழ்ந்திராத செயல், எந்தத் தகுதியுமின்றி நாங்கள் பெற்றுக்கொண்ட வரம், அளவுகடந்த உமது தேவசிநேகம்!" ஓ, சமமும், நிகருமான எதையும் ஒருபோதும் கொண்டிராததும், இனி ஒருபோதும் கொண்டிருக்க முடியாததுமான செயலே! ஓ, நாங்கள் ஒருபோதும் தகுதி பெற இயலாத உத்தம வரப்பிரசாதமே! ஓ ஒருபோதும் புரிந்துகொள்ள இயலாத தேவசிநேகமே!

செவ்வாய்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 04

I

நமது ஆசீர்வதிக்கப்பட்ட மீட்பர் மரணத்திற்குத் தீர்வையிடப் படுவார் என்றும், மாசற்ற செம்மறிப்புருவையைப் போல அவர் பலிக்குக் கொண்டு வரப்படுவார் என்றும் இசையாஸ் ஏற்கனவே

தீர்க்கதரிசனம் கூறியிருந்தார்: **“கொல்லப்பட இழுத்துச் செல்லப்படும் ஆட்டைப் போல் அவர் கொண்டுபோகப்படுவார்" (இசை.53:7).** தேவதூதர்களுக்கு இது எப்பேர்ப்பட்ட ஆச்சரியத்தை வருவித்திருக்க வேண்டும்! ஓ என் சர்வேசுரா, தங்கள் மாசற்ற ஆண்டவர் மனிதனின் மீதுள்ள நேசத்திற்காக சிலுவை பீடத்தின் மீது பலியாக்கப்படுவதற்காகப் பலிப்பொருளாக இழுத்துச் செல்லப்படுவதைக் காண்பது! ஒரு கடவுள் இழிவான ஒரு குற்றவாளியைப் போலத் தமது சிருஷ்டிகளின் பாவங்களுக்காக அவமானமுள்ள கழுமரத்தின் மீது ஆணிகளால் விரிக்கப்படுவதைக் காண்பது மோட்சத்திற்கும், நரகத்திற்கும் எத்தகைய பயங்கரத் திகிலின் காரணமாக இருந்திருக்க வேண்டும்!

“மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவனென்று எழுதிய் இருக்கிறதுக்கு ஒத்தபடி கிறீஸ்துநாதர் நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்று நம்மை இரட்சித்தார். அபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் கிறீஸ்து சேசுநாதர் மூலமாகப் புறஜாதியாருக்கும் உண்டாகும்படியாக... இவ்விதமாயிற்று" (கலாத்.3:12-13). “நீ கடவுளின் இராச்சியத்தில் பாக்கியவானாகும்படியாக, அவர் சிலுவையின் மீது சாபமாக்கப்பட்டார்" என்று **அர்ச். அம்புரோஸ்** கூறுகிறார். ஓ எனக்கு மிகப் பிரியமுள்ள இரட்சகரே, எனக்குக் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தர, உலகம் முழுவதன் கண்களுக்கு முன்பாக சபிக்கப் பட்டவராகவும், சிலுவையின் மீது உமது நித்திய பிதாவினால் உமது துன்பங்களில் கைவிடப்பட்டவராகவும் கூடத் தோன்றும் அவமானத்தை மன உவப்போடு ஏற்றுக்கொண்டீர். அதிலும் உமது பிதாவால் கைவிடப்பட்டது, “என் சர்வேசுரா, என் சர்வேசுரா, ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?" என்று உரத்த குரலில் நீர் கதறச் செய்த ஓர் அளவற்ற துன்பமாக இருந்ததே! ஆம்! நாம் கட்டிக் கொண்ட பாவங்களில் கைவிடப்பட்டவர்களாக நிலைத்திராதபடியே தமது பாடுகளில் சேசுநாதர் கைவிடப்பட்டார் என்று காஸியாவின் சீமோன் அவதானிக்கிறார்: “ஆகவே, நாம் நம் குற்றத்தில் கைவிடப்படாதபடி கிறீஸ்துநாதர் தமது துன்பங்களில் கைவிடப் பட்டார்." ஓ அளவற்ற தயாளத்தின் அற்புதமே! ஓ மனிதர்கள் மீதான சர்வேசுரனுடைய

அளவற்ற நேசமே! ஓ என் சேசுவே, இதை விசுவசித்த பின்னும் ஓர் ஆன்மா உம்மை நேசியாமல் எப்படி இருக்க முடியும்?

"இவர் நம்மைச் சிநேகித்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களினின்று நம்மைக் கழுவினார்" (காட்சி.1:5). ஓ மனிதர்களே, நம் மீதுள்ள சேசுவின் அன்பு, நம் பாவங்களின் அசுத்தத்திலிருந்து நம்மை சுத்திகரிக்கும்படி அவரை எவ்வளவு தூரம் கொண்டு சென்று விட்டது என்று காணுங்கள்! தமது சொந்த இரத்தத்தில் நமக்காக ஓர் இரட்சணிய ஸ்நானத்தை ஆயத்தம் செய்யுமாறு, அவர் தமது ஒவ்வொரு துளி இரத்தத்தையும் சிந்தவும் செய்தார்: "ஆபேலின் இரத்தத்தை விட நன்றாகப் பேசும் தமது சொந்த இரத்தத்தை அவர் ஒப்புக்கொடுக்கிறார்; ஏனெனில் ஆபேலின் இரத்தம் நீதிக்காகக் கூக்குரலிட்டது. கிறீஸ்துநாதரின் இரத்தமோ இரக்கத்திற்காகக் கூக்குரலிடுகிறது." இதைப் பற்றி **அர்ச். பொனவெந்தூர்** அதிசயித்தபடி, "ஓ நல்ல சேசுவே, தேவரீர் என்ன செய்து விட்டீர்! ஓ என் இரட்சகரே, உண்மையில் நீர் என்னதான் செய்து விட்டீர்! உம் நேசம் உம்மை எவ்வளவு தூரம் தூக்கிச் சென்று விட்டதென்று பாரும்! என்னை இவ்வளவு அதிகமாக நீர் நேசிக்கச் செய்ய, என்னில் அப்படி என்னதான் நீர் கண்டுவிட்டீர்! ஏன் ஆண்டவரே, ஏன்? நீர் இப்படி என்னை நேசிக்க நான் யார்?" என்கிறார். ஆகவே என் ஆண்டவரே, ஏன் எனக்காக இவ்வளவு அதிகமாகத் துன்புறுவதைத் தேவரீர் தேர்ந்து கொண்டீர்? இவ்வளவு பெரிய விலை கொடுத்து என் அன்பை உமக்கென வெற்றி கொள்ளும் அளவுக்கு நான் யார் சுவாமி? ஆ, இது முற்றிலும் உமது அளவற்ற நேசத்தின் வேலைதான்! ஆ என் சேசுவே, தேவரீர் நித்தியத்திற்கும் இதற்காக வாழ்த்திப் போற்றித் துதிக்கப்படுவீராக!

II

"வீதி கடக்கும் நீங்களெல்லோரும் உற்றுப் பாருங்கள்; என் உபாதைக்குச் சமமான உபாதையுண்டோ?" (புலம்பல்.1:12). அதே சம்மனசுக்கொப்பான வேதபாரகரான அர்ச். பொனவெந்தூர், நம் மீதுள்ள அன்பிற்காக சிலுவையில் தொங்கி மரிக்கும் நம் திவ்விய

மீட்பரைப் பற்றி எரேமியாஸ் கூறும் இந்த வர்ததைகளைத் தியானித்து சொல்வதாவது: "ஆம், ஆண்டவரே, நான் கவனிப்பேன், உம்முடைய அன்புக்கு ஈடான அன்பு ஏதேனும் உண்டா என்று பார்ப்பேன்" என்கிறார். இதன் மூலம் அவர் சொல்ல வருவது என்னவெனில்: ஓ என் மிகுந்த நேசமுள்ள மீட்பரே, அந்த அவமான மரத்தின் மீது நீர் எவ்வளவு அதிகமாகத் துன்புற்றீர் என்பதை நான் உண்மையாகவே பார்த்துப் புரிந்து கொள்வேன்; ஆயினும் உம்மை நேசிக்கும்படி என்னை மிக அதிகமாக நெருக்குவது ஏதெனில், நான் உம்மை நேசிக்கும்படி இவ்வளவு அதிகமாகத் துன்பப்பட்டதில் நீர் எனக்குக் காண்பித்த பாசத்தைப் பற்றிய நினைவுதான்.

சேசுவின் மீதுள்ள நேசத்தால் அர்ச். சின்னப்பரை அதிகமாகப் பற்றியெரியச் செய்தது என்னவென்றால், எல்லா மனிதர்களுக்காக மட்டுமின்றி, அவர் குறிப்பாகத் தமக்காக (சின்னப்பருக்காக) மரிப்பதைத் தேர்ந்து கொண்டார் என்பதுதான். **"அவர் என்னை நேசித்து, எனக்காகத் தம்மைக் கையளித்தார்" (கலாத்.2:20).** ஆம், அவர் என்னை நேசித்து, என் நிமித்தம் தம்மை மரணத்திற்குக் கையளித்தார் என்கிறார் அவர். இவ்வாறே நாம் ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும். ஏனெனில் கடவுள் உலகத்தை நேசித்த அதே அன்பைக் கொண்டு ஒவ்வொரு தனி மனிதனையும் நேசித்தார் என்று அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் கூறுகிறார்: "அவர் உலகம் முழுவதையும் எந்த அளவுக்கு நேசித்தாரோ, அதே அளவுக்கு ஒவ்வொரு தனி மனிதனையும் நேசித்திருக்கிறார்." ஆகவே ஒவ்வொரு மனிதனும் தனக்காக மட்டுமே அவர் பாடுபட்டார் என்பது போல அவரை நேசிக்கப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறான். ஏனெனில், மற்ற எல்லோரையும் அவர்களது தொடக்க அழிவில் விட்டுவிட்டு உன்னை மட்டும் இரட்சிப்பதற்காக சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையின் மீது மரித்திருந்தார் என்றால், எவ்வளவு அதிகமாக நீ அவருக்கு நன்றிக் கடன் பட்டிருப்பாய்! ஆனாலும், அனைவரின் இரட்சணியத்திற்காகவும் அவர் இறந்திருப்பதால், இன்னும் பெரிதாக நீ அவருக்குக் கடன்பட்டிருக்கிறாய் என்று நீ உணர வேண்டும். ஏனெனில் உனக்காக மட்டும் அவர் இறந்திருந்தால், உன் அயலார், பெற்றோர்,

சகோதரர்கள், நண்பர்கள் அனைவரும் நரகத் தீர்வையடைவார்கள் என்றும், இந்த வாழ்வு முடிந்ததும் நீ அவர்களிடமிருந்து நித்தியத்திற்குமாகப் பிரிக்கப்படுவாய் என்றும் நினைப்பது உனக்கு இன்னும் எவ்வளவு அதிகமான துயரத்தைத் தந்திருக்கும்! நீயும் உன் குடும்பமும் அடிமையாக இருக்கையில் ஒருவர் வந்து உன்னை மட்டும் காப்பாற்றுவார் என்றால், உன்னோடு சேர்த்து உன் பெற்றோரையும், சகோதரர்களையும் காப்பாற்றும்படி நீ அவரிடம் கெஞ்சி மன்றாட மாட்டாயா? உன்னை மகிழ்விப்பதற்காக அவரும் அப்படியே செய்வார் என்றால், நீ அவருக்கு எவ்வளவு அதிகமாக நன்றி செலுத்துவாய்? ஆகவே, சேசுவிடம் இப்படிச் சொல்: "ஓ என் மிக இனிய மீட்ரே, நான் உம்மிடம் கேட்காமலே இதை நீர் எனக்காகச் செய்திருக்கிறீர்; நீர் உமது இரத்தத்தை விலையாகத் தந்து என்னை மட்டும் மரணத்தில் இருந்து இரட்சிக்காமல், என் பெற்றோரையும், நண்பர்களையும் கூட இரட்சித்தருளினீர். இதன் காரணமாக, நாங்கள் அனைவரும் பரலோகத்தில் உமது பிரசன்னத்தில் என்றென்றும் ஒன்றுசேர்ந்து மகிழ்ந்திருப்போம் என்று உறுதியாக நம்புகிறேன். ஓ ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன், உம்மை நேசிக்கிறேன், அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாட்டில் இதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துவேன் என்றும், என்றென்றும் உம்மை நேசிப்பேன் என்றும் நம்பிய் இருக்கிறேன்."

புதன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 05

I

"இரண்டு காரியங்கள் ஓர் அன்பரை அறிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன: அவர் தம்மால் நேசிக்கப்படுபவருக்கு நன்மை செய்வது, மற்றும் அவருக்காக வாதைகளை அனுபவிப்பது; இந்த இரண்டாவது காரியம் உண்மையான அன்பின் அனைத்திலும் பெரிய அடையாளமாகும்" என்கிறார் **சிசேரோ.** உண்மையில், தாம் மனிதன் மீது பொழியும் எல்லா நன்மைகளையும் கொண்டு, அவன் மீது

தமக்குள்ள அன்னை அவர் ஏற்கெனவே காண்பித்திருக்கிறார்; ஆனால், **அர்ச். பீற்றர் கிறிசோலோகுஸ்** கூறுவது போல, ஒரு மனித சரீரத்தைத் தமக்கென எடுத்துக் கொண்டு மனிதனுக்காகத் துன்புற்று, அவனுக்காக மரிப்பதன் மூலம் தாம் அவனை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்பதை அவனுக்கு எண்பிக்கும் வழியை அவர் கண்டுபிடித்திருக்காவிட்டால், வெறுமனே மனிதனுக்கு நன்மை செய்வதில் மட்டும் அவரது அன்பு திருப்தியடைந்திருக்காது: "ஆனால் துன்பப்படாமல் தமது அன்பை அவர் காட்டியிருந்தால், அதை அவர் மிக அற்பமானதாகவே கருதியிருப்பார்." மனிதனாக அவதரித்து, நமக்காகத் துன்பப்படுவதை விடப் பெரிதான வேறு எந்த வழியை நம் மீது தமக்குள்ள மாபெரும் அன்பை நமக்கு எண்பிக்க கடவுள் கண்டுபிடித்திருக்க முடியும்? "வேறு எந்த வழியிலும் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பு இவ்வளவு நன்றாக வெளிப்படுத்தப்பட்டிருக்க முடியாது" **அர்ச். நாசியான்சென் கிரகோரியார்** எழுதுகிறார். என் அன்புக்குரிய சேசுவே, உம் அன்பை எனக்குக் காட்டவும், உமது நன்மைத்தனத்தால் என் அன்பை ஏவித் தூண்டவும் நீர் எவ்வளவு அதிகமாக உழைத்தீர்! ஆகவே, உண்மையில் நான் உம்மைக் கொஞ்சமே நேசித்தாலும், அல்லது உம்மைத் தவிர வேறு எதையும் நேசித்தாலும், உமக்கு நான் தரும் வேதனை பெரிதாகவே இருக்கும்.

ஆ, அவர் தம்மைக் காயப்பட்டவரும், சிலுவையில் அறையப்பட்டவரும், மரிப்பவருமான ஒரு கடவுளாக நமக்குக் காட்டும்போது, உண்மையில், நம்மீது தாம் கொண்டுள்ள அன்பைப் பற்றிய அனைத்திலும் பெரிதான நிரூபணத்தை அவர் நமக்குத் தரவில்லையா என்று கொர்னேலியுஸ் ஆ லாப்பிதே கேட்கிறார். "கடவுள் சிலுவையின் மீதுதான் தமது உச்சபட்ச அன்பை நமக்குக் காட்டுகிறார்." கொர்னேலியுஸுக்கு முன் **அர்ச். பெர்னார்ட்** இது பற்றி, நம்மீது தமக்குள்ள அன்பு இதை விட மேலாக வெளிப்படுத்தப்பட முடியாது என்று சேசுநாதர் தமது திருப்பாடுகளில் நமக்குக் காட்டினார் என்கிறார்: "திருப்பாடுகளின் அவமானத்தில், அனைத்திலும் பெரியதும், ஒப்பற்றதுமான அன்பு காட்டப்படுகிறது." சேசு கிறீஸ்துநாதர் நம் இரட்சணியத்திற்காக

மரிப்பதைத் தேர்ந்து கொண்டபோது, பரிதாபத்திற்குரிய சிருஷ்டிகளாகிய நமக்குக் கடவுள் காண்பித்த தேவசிநேகம் அனைத்திலும் உயர்ந்ததாகத் தோன்றியது என்று அப்போஸ்தலர் எழுதுகிறார்: **“சர்வேசுரனுடைய கிருபாகடாட்சமும், மனித அன்பும் தோன்றியது'' (தீத்து.3:4).** ஓ என் மிகுந்த நேசத்திற்குரிய இரட்சகரே, உணமையில் உமது திருக்காயங்கள் நீர் என் மீது கொண்டுள்ள அன்பைப் பற்றி என்னிடம் பேசுகின்றன. உமது அன்புக்கு இவ்வளவு ஏராளமான சாட்சியங்களை நீர் தந்த பிறகும், பதிலுக்கு உம்மை நேசியாமலிருக்க யாரால் முடியும்? ஓ மிகவும் பிரியத்துக்குரிய சேசுவே, உம்மை நேசிக்காதவன், தான் உம்மை அறியவில்லை என்பதை எண்பிக்கிறான் என்று அர்ச். தெரேசம்மாள் கூறியபோது, அவள் உண்மையையே கூறினாள்.

II

சேசுக்கிறீஸ்துநாதர் இன்பமும், சுகமும் உள்ள ஒரு வாழ்வு வாழ்ந்து கொண்டு, துன்பப்படாமலே மிக எளிதாக நமக்கு இரட்சணியத்தைப் பெற்றுத் தந்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. **“அவர் சந்தோஷ ஜீவியம் தமக்கு முன் வைக்கப்பட்டிருக்க, அவமானத்துக்குக் கூச்சப்படாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார்''** என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார் **(எபி.12:2)**. அவர் செல்வங்களையும், இன்பங்களையும், உலக மகிமைகளையும் தள்ளி விட்டு, ஒரு தரித்திர வாழ்வையும், அதன்பின் துன்பமும், அவமானமும் நிறைந்த ஒரு மரணத்தையும் தமக்கெனத் தேர்ந்து கொண்டார். எதற்காக? மனிதனின் மன்னிப்பிற்காகத் தமது நித்திய பிதாவுக்கு ஒரே ஒரு ஜெபத்தை அவர் ஒப்புக்கொடுத்திருந்தால், அது போதாததாக இருந்திருக்குமா? ஏனெனில் இந்த ஜெபம், அளவற்ற மதிப்புள்ளதாக, உலகத்தையும், இன்னும் எண்ணற்ற உலகங்களையும் இரட்சிக்கப் போதுமானதாக இருந்திருக்கும். அப்படிய் இருக்க, ஒரு நூலாசிரியர் மிக உண்மையான விதத்தில் சொல்லியிருப்பது போல, வெறும் வேதனையின் வழியாகவே சேசுவின் ஆத்துமம் அவரது சரீரத்திலிருந்து பிரியும் அளவுக்கு, மிக அதிகமான துன்பத்தையும், மிகக் கொடூரமான ஒரு மரணத்தையும்

அவர் எதற்காகத் தெரிந்து கொண்டார்? மனிதனை இரட்சிக்க, எதற்காக இவ்வளவு பெரிய விலை அவரால் தரப்பட்டது? **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** பதில் கூறுகிறார்: சேசுவின் ஒரே ஒரு ஜெபம் உண்மையில் நம்மை மீட்கப் போதுமாயிருந்திருக்கும்; ஆனால் நம் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்னை நமக்குக் காட்ட அது போதுமானதாக இருக்கவில்லை: "நம்மை மீட்க எது போதுமானதாக இருந்ததோ, அது அன்புக்குப் போதுமானதாக இருக்கவில்லை." "கிறீஸ்துநாதர் அன்பினால் துன்பப்படுவதில், மனுக்குலத்தின் பாவத்தின் பரிகாரத்திற்குத் தேவைப்பட்டதை விட அதிகமானதை அவர் கடவுளுக்குச் செலுத்தினார்" என்று அர்ச். தாமஸ் அக்குயினாஸ் கூறும்போது அவர் இதையே எண்பிக்கிறார். சேசுநாதர் நம்மை இவ்வளவு அதிகமாக நேசித்ததால், நம்மாலும் தாம் மிக அதிகமாக நேசிக்கப்பட வேண்டுமென்று அவர் ஆசித்தார். ஆகவே, நம் அன்பைத் தம்முடையதாக்கிக் கொள்வதற்காகவும், தம்மை நாம் நேசிக்கச் செய்ய, இதை விட அதிகமாகத் தாம் எதுவும் செய்ய இயலாது என்று காட்டவும், அவர் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார், நமக்காகத் துன்புறவும் செய்தார்: "தம்மை அதிகமாக நேசிப்பதை மனிதனுக்குக் கடமையாக்கும்படி, அவர் அதிகமான களைப்பை அனுபவித்தார்" என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார்.

வியாழன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 06

I

யாராவது ஒரு பெரிய மனிதனால் ஒருவன் நேசிக்கப்படுவதைக் காண்பது சந்தோஷமான காரியம். அதுவும், அப்படி நேசிக்கப் படுபவனை செல்வந்தனாக்க அந்தப் பெரிய மனிதன் வல்லவனாக இருப்பதைப் பார்ப்பது இன்னும் அதிக சந்தோஷமானது. ஆனால் ஒரு நித்தியப் பேரின்பத்திற்கு நம்மை உயர்த்தக் கூடிய கடவுளால் நாம் நேசிக்கப்படுவதைக் காண்பது

நமக்கு எவ்வளவு அதிக இன்பமும், மகிழ்ச்சியுமாக இருக்க வேண்டும். பழைய திருச்சட்டத்தின் கீழ், கடவுள் கனிவுள்ள அன்பைக் கொண்டு தங்களை நேசிக்கிறாரா என்று மனிதர்கள் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால் அவமானமுள்ள மரத்தின்மீது அவர் இரத்தம் சிந்துவதையும், நமக்காக மரிப்பதையும் கண்ட பிறகு, அவரது அளவற்ற அன்பையும் பாசத்தையும் பற்றி நாம் எப்படி சந்தேகப்பட முடியும்? ஓ என் ஆத்துமமே, இப்போது முழுவதும் காயங்களால் மூடப்பட்டவராக சிலுவையில் தொங்கும் உன்சேசுவைப் பார்! இந்தக் காயங்களைக் கொண்டு, தமது நேச இருதயத்தின் அன்பை அவர் உனக்கு எப்படி எண்பிக்கிறார் என்று பார்: அவரது திரு இருதயத்தின் இரகசியங்கள் அவரது திருச்சரீரத்தின் காயங்களின் வழியாக வெளிப்படுத்தப் படுகின்றன என்கிறார் அர்ச். பெர்னார்ட். என் மிகப் பிரியமுள்ள சேசுவே, ஓர் அவமானச் சிலுவையில் நீர் பயங்கரத் துன்பத்துடன் மரிப்பதைக் காண்பது உண்மையாகவே என்னைக் கஸ்திக்குள்ளாக்குகிறது. ஆனால் அதே சமயம், இந்தத் திருக்காயங்களில் நீர் என்மீது கொண்டுள்ள நேசத்தை நான் காணும்போது, நான் வெகுவாக ஆறுதலடைகிறேன், உம் மீதுள்ள நேசத்தால் பற்றியெரிகிறேன். ஓ பரலோக பக்திச்சுவாலகர்களே, என்னை நேசித்து, எனக்காகத் தம்மையே கையளித்தவராகிய (கலாத்.2:20) என் சர்வேசுரனுடைய அன்பைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

மனிதரின் அன்பிற்காக சேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார் என்று போதிக்கப் படுவதைப் புறவினத்தார் கேட்டபோது, அது அபத்தமானது என்றும், அதை நம்ப முடியாது என்றும் அவர்கள் நினைத்தார்கள் என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார்: **“நாங்களோ சிலுவையில் அறையுண்ட கிறீஸ்துநாதரைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதர்களுக்கு இடறலும், அஞ்ஞானிகளுக்குப் பைத்தியமுமாய் இருக்கிறார்'' (1கொரி.1:23)**. எல்லாம் வல்லவரும், தாம் இருக்கிற படியே பூரண மகிழ்ச்சியோடு இருக்க எதுவும் தேவைப்படாதவருமாகிய ஒரு சர்வேசுரன் எப்படி மனிதனை இரட்சிப்பதற்காகத் தாமே மனிதனாகி, சிலுவையின் மீது மரிப்பதைத் தேர்ந்து கொள்வார் என்று அவர்கள் கேட்டார்கள். ஒரு

கடவுள் மனிதர் மீதுள்ள அன்பிற்காகப் பைத்தியக்காரரானார் என்று சொல்வதற்கு இது நிகரானது என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அது அஞ்ஞானிகளின் பைத்தியமாயிருந்தது. ஆகவே அவர்கள் இதை விசுவசிக்க மறுத்தார்கள். ஆனால் புறவினத்தார் மூடத்தனம் என்று மதித்ததும், அழைத்ததுமான மாபெரும் இரட்சணிய அலுவலை சேசுநாதர் மெய்யாகவே தம்மீது சுமந்து கொண்டு அதை நிறைவேற்றி முடித்தார் என்று விசுவாசம் நமக்குக் கற்பிக்கிறது. “மனிதன் மீது தமக்குள்ள அளவுகடந்த நேசத்திற்காக சர்வேசுரனுடைய ஒரே பேறான திருச்சுதனான நித்திய ஞானமானவர் பைத்தியமானார் என்பதை நாங்கள் கண்டிருக்கிறோம்" என்று **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** கூறுகிறார். கர்தினால் ஹ்யூகோ இதன் தொடர்ச்சியாக, ஏனெனில் கடவுள் மனிதனுக்காக மரிப்பதைத் தேர்ந்து கொள்வது பைத்தியமாக அன்றி வேறு எப்படியும் தோன்றவில்லை என்கிறார்: “மனிதர்களின் இரட்சணியத்திற்காகக் கடவுள் சாக வேண்டும் என்பது பைத்தியமாகத் தோன்றியது."

II

முதலில் இவ்வுலகில் சிறந்த ஞானியாக விளங்கியவரும், பிற்பாடு ஒரு பிரான்சிஸ்கன் துறவியானவருமாகிய முத். ஜியாகோப்போன் என்பவர் சேசுக்கிறீஸ்துநாதர் மீது தமக்கிருந்த நேசத்தின் காரணமாகப் பைத்தியம் பிடித்தவர் போலத் தோன்றினார். ஒருநாள் சேசுநாதர் அவருக்குத் தோன்றி, “ஜியாக்கோபோன், ஏன் இந்த மூடத்தனங்களைச் செய்கிறாய்?" என்று கேட்டார். “ஏனா? ஏனெனில் இதை நீர்தான் எனக்குக் கற்றுத் தந்திருக்கிறீர். நான் பைத்தியமாயிருந்தால், எனக்காக மரித்ததில் நீர் என்னை விட அதிகப் பைத்தியமாக இருந்திருக்கிறீர். நான் ஒரு மூடன், ஏனெனில் நீர் என்னை விடப் பெரிய மூடராக இருந்திருக்கிறீர்" என்று ஜியாக்கோப்போன் பதில் கூறினார். **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாளும்** இவ்வாறே ஒரு பரவச நிலையில் அதிசயித்தபடி, “ஓ அன்பின் தேவனே! ஓ, அன்பின் தேவனே! ஓ என் சேசுவே, சிருஷ்டிகளின் மீது நீர் கொண்டுள்ள அன்பு உண்மையாகவே மிதமிஞ்சியதாக இருக்கிறது" என்றாள். ஒரு நாள் அவள் பரவச

நிலைக்கு உட்பட்டபோது, சிலுவையில் அறையுண்டவரின் தோற்றத்தை எடுத்துக் கொண்டு, “ஓ அன்பே! அன்பே! உம்மை அன்பே என்று அழைப்பதில் நான் ஒருபோதும் நிறுத்திக் கொள்ளவே மாட்டேன்" என்று கதறியபடி மடத்தில் அங்குமிங்கும் ஓடினாள். அதன்பின் கன்னியர்களிடம் திரும்பி, “என் பிரியமுள்ள சகோதரிகளே, சேசுநாதர் வேறு எதுவுமன்றி அன்பாக மட்டுமே இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? அவர் அன்பால் பைத்தியமாகக் கூட இருக்கிறார். நான் இதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருப்பேன்" என்றாள். சேசுவின்அன்பை அனைவரும் அறிந்து அவரை நேசிக்க வேண்டும் என்பதற்காக, சேசுவை “அன்பே!" என்று தான் அழைக்கும்போது, பிரபஞ்சம் முழுவதும் தன் குரலைக் கேட்க வேண்டும் என்று தான் விரும்புவதாகவும் அவள் தெரிவித்தாள். சில சமயங்களில் (தான் விரும்பியபடி, சாத்தியமானால்) தன் சேசுவை நேசிக்கும்படி உலகம் முழுவதிலுமுள்ள எல்லா மக்களும் ஓடி வரும்படியாக, அவள் மடத்தின் மணியை அடிக்கவும் தொடங்கினாள்.

ஆம், அனைவரிலும் எனக்கு அதிகப் பிரியமான என் மீட்பரே, இப்படி நானும் சொல்ல என்னை அனுமதியும். இந்த உமது மணவாளி உம்மை நேசப் பைத்தியமானவர் என்று அழைத்தபோது, அவள் உண்மையில் சரியாகவே கூறினாள். நன்றி கெட்ட அற்பப் புழுவாகிய என்மீதுள்ள அன்பிற்காக நீர் சாவைத் தேர்ந்துகொண்டீர் என்பது உண்மையாகவே எனக்குப் பைத்தியமாகத் தோன்றுகிறது, என் பாவங்களை நீர் முன்கூட்டியே கண்டீர், என் பெரும் குற்றங்களாகிய பிரமாணிக்கமின்மைகளையும் நீர் கண்டீர். ஆயினும் என் தேவனே, என் மீதுள்ள அன்பிற்காக நீர் இப்படிப் பைத்தியமாக ஆனீர் என்றால், ஒரு சர்வேசுரன் மீதுள்ள அன்பிற்காக நான் மட்டும் இன்னும் பைத்தியமாக ஆகாதிருப்பது எப்படி? எனக்காகச் சிலுவையில் அறையுண்டவராகவும், மரித்தவராகவும் உம்மை நான் கண்டுவிட்ட பிறகு, உம்மைத் தவிர வேறு யாரையும் நான் எப்படி நினைக்க முடியும்? ஆம், என் ஆண்டவரே, என் இராஜரீக நன்மைத்தனமே, மற்ற எல்லா நன்மைகளையும் விட என் நேசத்திற்கு அதிகத் தகுதியுள்ளவரே, என்னைவிட அதிகமாக நான் உம்மை

நேசிக்கிறேன். எதிர்காலத்தில் வேறு யாரையுமன்றி உம்மை மட்டுமே நேசிப்பேன் என்றும், எனக்காக இவ்வளவு அதிகமான துன்பங்களுக்கு மத்தியில் இறந்ததன் மூலம் நீர் எனக்குக் காட்டியருளிய நேசத்தைத் தொடர்ச்சியாக தியானிப்பேன் என்றும் நான் வாக்களிக்கிறேன்.

ஓ கசைகளே, ஓ முட்களே, ஓ ஆணிகளே, ஓ சிலுவையே, ஓ திருக்காயங்களே, ஓ துன்பங்களே, ஓ என் இரட்சகரின் மரணமே, இவ்வளவு அதிகமாக என்னை நேசித்திருப்பவரை நேசிக்கும்படி நீங்கள் என்னை நெருக்குகிறீர்கள்! ஓ அவதரித்த வார்த்தையானவரே, ஓ நேசமுள்ள தேவனே, என் ஆன்மா உம்மீதுள்ள அன்பால் நிரம்பி யுள்ளது! என் மிக இனிய ஆண்டவராகிய உம்மை மகிழ்விப்பதைத் தவிர வேறு எதிலும் நான் இன்பம் காணாதபடி, உம்மை மிக அதிகமாக நேசிப்பதில் நான் மகிழ்கிறேன்! என் அன்பை நீர் இவ்வளவு ஏக்கத்தோடு தேடுகிறீர் என்பதால், உமக்காக மட்டுமே நான் வாழ்வேன் என்று நான் வாக்களிக்கிறேன். எனக்காக நீர் சித்தங் கொள்ளும் எதையும் செய்ய நான் ஆசிக்கிறேன். ஓ என் சேசுவே, நான் உம்மிடம் ஜெபிக்கிறேன், எனக்கு உதவி செய்யும், காலத்திலும், நித்தியத்திலும் உம்மை முழுமையாக மகிழ்விக்க எனக்கு வரமருளும். மரியாயே, என் தாயாரே, சேசுநாதர் தமது பரிசுத்த நேசத்தை எனக்குத் தந்தருளும்படி எனக்காக அவரை மன்றாடுங்கள்; ஏனெனில் உலகிலும் மறு வாழ்விலும் சேசுவை நேசிப்பதைத் தவிர வேறு எதையும் நான் ஆசிக்கவில்லை. ஆமென்.

வெள்ளி

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 07

I

தேவ வார்த்தையானவர் மனிதன் தம்மை நேசிக்கச் செய்வதற்காக மனித சரீரத்தைப் பெற்றுக்கொண்டு உலகிற்கு வந்தார். நமக்காகத் துன்புற எத்தகைய ஏக்கத்துடன் அவர் வந்தார் என்றால், குறைந்தபட்சம் அச்சத்தாலும் கலக்கத்தாலும் தம்மையே

வாதித்துக்கொள்ளத் தொடங்குவதில் அவர் ஒரு கணத்தைக் கூட வீணாக்க விரும்பவில்லை. மாமரியின் திருவுதரத்தில் தாம் கருத்தரிக்கப்பட்ட கணத்திலிருந்தே தமது திருப்பாடுகளின் எல்லாத் துன்பங்களையும் அவர் தமது மனதில் கொண்டிருந்தார். நமக்காக மன்னிப்பையும், தேவ வரப்பிரசாதத்தையும் பெற்றுத் தரும்படி, தமது வியாகுலங்களின் வழியாக, நம் பாவங்களுக்குரிய தண்டனையைப் பரிகரிக்கும் படியாக, அவர் தம்மையே தமது நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். அந்தக் கணத்திலிருந்து, பிற்காலத்தில் தமது அனைத்திலும் அதிகக் கசப்பான மரணத்தில் தாம் அனுபவித்த எல்லாவற்றையும் அவர் அனுபவிக்கத் தொடங்கினார். ஓ என் பூரண நேசமுள்ள மீட்பரே, இது வரை நான் உமக்காக என்ன செய்திருக்கிறேன், அல்லது உமக்காக எப்படித் துன்புற்றிருக்கிறேன்? வேதசாட்சிகள் அனைவரும் அனுபவித்த எல்லா வாதைகளையும், உம் நிமித்தமாக ஓராயிரம் ஆண்டுகள் என்னால் அனுபவிக்க முடிந்தாலும், அப்போதும் கூட, நீர் உம்மை ஒப்புக்கொடுத்து, எனக்காக வாதைகளை அனுபவிக்கத் தொடங்கிய அந்த ஒரே ஒரு முதல் கணத்தோடு ஒப்பிடும் போது, அவை ஒன்றுமேயில்லை.

வேதசாட்சிகள் உண்மையாகவே பெரும் வேதனைகளையும், அவமானத்தையும் அனுபவித்தார்கள். ஆனால் தங்கள் வேதசாட்சியத்தின் நேரத்தில் மட்டுமே அவர்கள் அவற்றை அனுபவித்தார்கள். ஆனால் சேசுநாதர் தமது திருப்பாடுகளின் எல்லா வாதைகளையும் முதல் கணத்திலிருந்தே அனுபவிக்கத் தொடங்கி விட்டார். ஏனெனில் அந்த முதல் கணத்திலிருந்து, மனிதர்களிடம் இருந்து தாம் பெற இருந்த எல்லா வாதைகள் மற்றும் அவமானங்களின் பயங்கரமுள்ள காட்சி முழுவதையும் அவர் தம் கண்களுக்கு முன்பாகக் கொண்டிருந்தார். இதன் காரணமாகவே அர் தீர்க்கதரிசியின் வாய்மொழியாக, **“என் துயரம் தொடர்ச்சியாக எனக்கு முன்பாக இருக்கிறது'' என்றார் (சங்.37 :18).** ஓ என் சேசுவே, எனக்காகத் துன்பப்பட நீர் எவ்வளவு ஆவலாக இருந்தீர் என்றால், உரிய காலத்திற்கு முன்பே கூட உமது துன்பங்களை அனுபவிக்க நீர் சித்தமாயிருந்தீர்; இருந்தும் நானோ இவ்வுலக இன்பங்களை அனுபவிக்க மிகுந்த பேராசையோடு இருக்கிறேன். என் உடலுக்கு

இன்பம் தருவதற்காக நான் எத்தனை தடவைகள் உம்மை நோகச் செய்திருக்கிறேன்! ஓ என் ஆண்டவரே, உமது துன்பங்களின் பேறுபலன்களின் வழியாக, உலக இன்பங்களின் மீது எனக்குள்ள நாட்டம் முழுவதையும் என்னிடமிருந்து அகற்றி விடும்படி உம்மை மன்றாடுகிறேன்.

II

கடவுள் நம்மீது கொண்டுள்ள பரிவிரக்கத்தின் காரணமாக, பொதுவாக நமக்காகக் காத்திருக்கும் துன்ப சோதனைகளை நாம் அனுபவிக்க நியமிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்பாக அவற்றை நமக்கு வெளிப்படுத்துவதில்லை. எதிர்காலத்தில், கழுமரத்தில் கொல்லப்பட இருக்கும் ஒரு குற்றவாளியாகப் போகிறவன் புத்தி விபரம் அறிந்தவுடன், அவனுக்கு அந்த உண்மை வெளிப்படுத்தப் பட்டால், அதற்குப் பிறகு அவன் தன் வாழ்வில் ஒரு கண நேரமாவது மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? சவுல் தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன்னைக் குத்திக் கொல்ல இருக்கும் வாளைப்பற்றி அறிந்திருந்தால், யூதாஸ் தன்னை மூச்சடைக்கச் செய்ய இருந்த கயிற்றை முன்பே காட்சியாகக் கண்டிருந்தால் - அவர்களுடைய வாழ்வு எவ்வளவு கசப்பானதாக இருந்திருக்கும்! நம் கருணையுள்ள மீட்பரோ, தமது வாழ்வின் முதல் கணத்திலிருந்தே தமக்காகக் காத்திருந்த கசைகளையும், முட்களையும், சிலுவையையும், தமது திருப்பாடுகளின் அவமானங் களையும், அனைவராலும் கைவிடப்பட்டு தாம் இறக்க இருப்பதையும் தமக்கு முன்பாகக் கொண்டிருந்தார். தேவாலயத்தில் பலியாக்கப்பட்ட பலி மிருகங்களை அவர் கண்டபோது, அவை சிலுவையாகிய பலிபீடத்தின் மீது மாசற்ற செம்மறிப் புருவையாகிய தாம் ஒரு நாள் நிறைவேற்ற இருந்த உன்னதப் பலியின் உருவகங்கள் என்பதை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். ஜெருசலேம் நகரத்தை அவர் கண்டபோது, அங்கேதான் துயரங்கள் மற்றும் வசைகளின் ஒரு கடலில் தமது உயிரை இழக்க வேண்டும் என்பதை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். தமது பிரியத்துக்குரிய அன்னையை அவர் கண்ட போதெல்லாம், சிலுவையின் அடியில், மரிக்கிற தமதருகில், மிகக்

கொடிய துன்ப துயரத்தில் அவர்களைத் தாம் காண்பதாக அவர் ஏற்கெனவே கற்பனை செய்து வந்தார். இதன் காரணமாக, ஓ என் சேசுவே, இந்த எல்லாத் தீமைகளின் பயங்கரத்துக்குரிய காட்சி, உமது வாழ்வு முழுவதும் உமது மரண நேரத்திற்கு முன்பாகவே தொடர்ச்சியாக உம்மை வாதித்தும், கஸ்திப்படுத்தியும் வந்தன. நீரே என் பொருட்டு அனைத்தையும் ஏற்று அனுபவித்தீர்.

ஓ மரண அவஸ்தைப்பட்ட என் சேசுவே, உலகின் எல்லாப் பாவங்களின் காட்சி, குறிப்பாக நான் எவற்றைக் கொண்டு உம்மை நோகச் செய்வேனோ, அந்த எனது சொந்தப் பாவங்களின் காட்சி ஒன்றே கூட, இது வரை உலகில் வாழ்ந்தவர்களும் இனி வாழ்பவர் களுமாகிய அனைவரின் வாழ்வுகளையும் விட உமது வாழ்வை அதிகத் துயரமும் வேதனையும் உள்ளதாக ஆக்கியது. ஆனாலும், ஓ என் தேவனே, ஒரு சர்வேசுரன் ஒரு சிருஷ்டியின் மீது இவ்வளவு பெரும் அன்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், ஆனால் அதே சிருஷ்டி, தனது கடவுளை நேசிக்காமல், அல்லது, இன்னும் மோசமாக அவரை நோகச் செய்தும், வேதனைப் படுத்தியும் வாழ வேண்டும் என்றும் எந்தக் காட்டுமிராண்டித் தனமான சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது? ஓ என் ஆண்டவரே, உமக்கு இனியும் நான் நன்றியற்றவனாக இராதபடி, உமது அன்பின் மிகுதியை நான் அறியச் செய்தருளும். ஓ என் சேசுவே, நான் மட்டும் உம்மை நேசித்திருந்தால் - உண்மையாகவே நான் உம்மை நேசித்திருந்தால் - உமக்காகத் துன்புறுவது எனக்கு எவ்வளவு இனிமையுள்ளதாக இருந்திருக்கும்!

சனி

மாமரியின் வேதசாட்சியத்தின் உயர்வு

I

மாமரியின் வேதசாட்சியம் மற்ற அனைவரின் வேதசாட்சியங்களையும் விட அதிக நீண்டதாக இருந்ததால் மட்டுமல்ல, மாறாக, அது எல்லா வேதசாட்சியங்களையும் விட மிகப் பெரியதாக இருந்ததாலும், மாமரி வேதசாட்சிகளின் இராக்கினியாக

இருக்கிறார்கள். ஆயினும் அவர்களது வேதசாட்சியத்தின் பிரமாண்டத்தை யாரால் அளவிட முடியும்? வியாகுல மாதா தனது திருமகனின் மரணத்தின் போது அனுபவித்த மாபெரும் துன்பங்களை எரேமியாஸ் தீர்க்கதரிசியானவர் சிந்தித்தபோது, அவர்களது வியாகுலங்களை வேறு யாருடைய வியாகுலத் தோடும் ஒப்பிட அவரால் இயலவில்லை. “ஜெருசலேம் **குமாரத்தியே, உன்னை யாருக்கு ஒப்பிடுவேன்? உன்னை யாருக்கு சமமென்பேன் . . உன் துயரம் கடலைப் போல் அபாரமாய் இருக்கிறதே . . . உன்னைக் குணப்படுத்துபவர் யார்?" (புலம்பல்.2:13).** இதனாலேயே, கர்தினால் ஹ்யூகோ, இந்த வார்த்தைகளை விவரிக்கும்போது, “ஓ ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே, கசப்பில் கடலானது மற்ற எல்லாக் கசப்பையும் விஞ்சுவது போலவே, உமது துயரம் மற்ற எல்லாத் துயரத்தையும் விஞ்சுகிறது" என்கிறார். இதனாலேயே அர்ச். ஆன்செல்மும், மாமரியின் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும், கடவுள் ஒரு விசேஷ அற்புதத்தால் அவர்களது உயிரைக் காப்பாற்றி ய் இருக்காவிட்டால், அதுவே அவர்களது மரணத்திற்குக் காரணமாக இருந்திருக்கும் என்று வலியுறுத்திச் சொல்கிறார். அர்ச். சியென்னா பெர்னார்தீன் இதற்கும் அப்பால் சென்று, “மாமரியின் துயரம் எல்லா மனிதர்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால், அவர்கள் உடனே இறக்க அது போதுமானதாக இருந்திருக்கும் என்னும் அளவுக்கு மாமரியின் துயரம் பெரிதாயிருந்தது" என்கிறார்.

ஆனால் மாமரியின் வேதசாட்சியம் ஏன் மற்ற எல்லா வேதசாட்சியங்களையும் விட மேலானதாக இருந்தது என்பதற்கான காரணங்களை நாம் சிந்திப்போம்.

முதலாவதாக, வேதசாட்சிகள் தங்கள் சரீரங்களில் நெருப்பு மற்றும் வேறு பருப்பொருட் களின் விளைவாயிருந்த தங்கள் வாதைகளை அனுபவித்தார்கள்; ஆனால் மாமரியோ, **“உமது ஆத்துமத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" (லூக். 2:35)** என்று **அர்ச். சிமியோன்** கூறியது போல, தனது ஆத்துமத்தில் தனது வேதசாட்சியத்தை அனுபவித்தார்கள்; “ஓ மகா பரிசுத்த கன்னிகையே, மற்ற வேதசாட்சிகளின் உடல்கள் இரும்புக் கருவிகளைக் கொண்டு கிழிக்கப்பட்டன. ஆனால் நீரோ, உமது

சொந்தத் திருமகனின் திருப்பாடுகளால், உமது ஆத்துமத்தில் குத்தி ஊடுருவப்பட்டு, கொல்லப்படுவீர்" என்று அந்தப் பரிசுத்த முதியவர் கூறியது போலாயிற்று. இனி, ஆத்துமம் சரீரத்தை விட அதிக மேன்மையானதாக இருப்பதால், மாமரியின் துன்பங்களும், மற்ற எல்லா வேதசாட்சிகளின் துன்பங்களையும் விட மேலானவையாக இருந்தன. சேசுநாதர் தாமே அர்ச். சியென்னா கத்தரீனம்மாளிடம் இதுபற்றி, "ஆத்துமத்தின் துன்பங்களோடு சரீரத் துன்பங்கள் ஒப்பிடவும் தகுதியற்றவை" என்று அறிக்கையிட்டார். இந்த அடிப்படையிலேயே பரிசுத்த மடாதிபதியான ஷார்த்ரேயின் ஆர்னால்ட் என்பவர், "மாசற்ற செம்மறிப் புருவையானவரின் மாபெரும் பலியைக் காணுமாறு கல்வாரி மலையின் மீது இருந்தவர்கள் அனைவரும், அங்கே இரண்டு மாபெரும் பலிபீடங்களைக் கண்டார்கள். ஒன்று, சேசுவின் திருச் சரீரத்தின் பீடம்; மற்றொன்று மரியாயின் மாசற்ற இருதயத்தின் பீடம். ஏனெனில் அந்தக் குன்றின்மீது, திருமகன் மரணத்தால் தமது சரீரத்தைப் பலியாக ஒப்புக்கொடுத்த அதே நேரததில், மாமரி தயவிரக்கத்தால் தன் ஆத்துமத்தைப் பலியாக ஒப்புக் கொடுத்தார்கள்" என்று கூறுகிறார்.

II

மற்ற வேதசாட்சிகள் தங்க்ள் சொந்த உயிர்களைப் பலியாக்கிக் கொண்டிருக்க, மாசற்ற கன்னகையோ, தனது தேவ மகனின் உயிரை - தன் சொந்த உயிரை விட எவ்வளவோ அதிகமாக நேசித்த அந்த உயிரை - பலியிடுவதன் மூலம் துன்பப்பட்டார்கள். இதன் காரணமாக, அவர்களது திருமகன் தமது திருச்சரீரத்தில் பட்ட அனைத்து துன்பங்களையும், மாமரி தன் ஆத்துமத்தில் அனுபவித்தது மட்டுமல்ல, மாறாக, தன் சொந்த சரீரத்தில் அவை அனைத்தையும் அனுபவித்திருந்தால், அவர்கள் எவ்வளவு துயரப்பட்டிருப்பார்களோ, அதை விட அதிகமான வேதனையையும் துயரத்தையும் அவர்களுடைய திருமகனின் வாதைகளின் காட்சி அவர்களுடைய இருதயத்திற்குக் கொண்டு வந்தது. தனது நேசத்திற்குரிய திருமகன மீது கட்டவிழ்த்து விடப்பட்ட எல்லா

வாதைகளையும், அவமானங்களையும் மாமரி தன் இருதயத்தில் அனுபவித்தார்கள் என்பதில் யாரும் சந்தேகப்பட முடியாது. குழந்தைகளின் துன்பங்கள் அவற்றைக் காணும் அவர்களுடைய தாய்மாரின் துன்பங்களாகவும் இருக்கின்றன என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம். மக்கபேயுஸ் ஆகமத்தின் ஏழு மகன்களின் தாயார் தனது மகன்கள் அனுபவித்த வாதைகளைக் கண்டபோது அனுபவித வேதனையைப் பற்றி **அர்ச். அகுஸ்தீனார்** கூறும்போது, "அவள் அவர்களுடைய துன்பங்களைக் கண்டு, அவை ஒவ்வொன்றிலும் துன்பப்பட்டாள்; ஏனெனில் அவர்கள் அனைவரையும் அவள் நேசித்தாள். அவர்கள் தங்கள் சரீரத்தில் அனுபவித்ததை அவள் தன் ஆத்துமத்தில் அனுபவித்தாள்" என்கிறார். இதே விதமாக, மாமரியும் சேசுநாதருடைய மாசற்ற சரீரத்தை வாதித்த எல்லாச் சித்திரவதை களையும், கசைகளையும், முட்களையும், ஆணிகளையும், சிலுவைçயும் அனுபவித்தார்கள். அவை அனைத்தும் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையின் மாசற்ற இருதயத்திற்குள் நுழைந்து, அவர்களுடைய வேதசாட்சியத்தை முழுமை பெறச் செய்தன. "அவர் தமது சரீரத்திலும், அவர்கள் தன் இருதயத்திலும் துன்பப்பட்டார்கள்" என்று எழுதுகிறார் முத்.அமதேயுஸ் என்பவர். "மாமரியின் இருதயம் திருச்சுதனின் திருப்பாடுகளின் ஒரு கண்ணாடி போலாயிற்று. அதில் சேசுநாதர் அனுபவித்த துப்பப்படுதலும், அடிகளும், காயங்களும், எல்லாமும் பிரமாணிக்கமான விதத்தில் பிரதிபலித்தன" என்று அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன் கூறுகிறார்.

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

"ஆண்டவரே, நாம் இங்கே இருப்பது நல்லது!"

(ஞாயிறு சுவிசேஷம் - மத். 18:1-9)

I

நம் தெய்வீக இரட்சகர் தமது பரலோக மகிமையின் ஒரு கண நேரக் காட்சியைத் தம் அப்போஸ்தலர்களுக்குத் தர விரும்பி, அவர்களுக்கு முன்பாக உருமாறி, தமது திருமுகத்தின் பிரகாசத்தை அவர்கள் காண அனுமதித்தார் என்று இன்றைய சுவிசேஷத்தில் நாம்

வாசிக்கிறோம். தெய்வீக மகத்துவத்திற்காக உழைக்க அவர்களை ஏவித் தூண்டும்படியாக அவர் இதைச் செய்தார். மகிழ்ச்சியாலும், இன்பத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்டவராக, அர்ச். இராயப்பர், **"ஆண்டவரே, நாம் இங்கே இருப்பது நல்லது!"** என்றார். ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்போம்; இந்த இடத்திலிருந்து இனி நாம் பிரிந்து செல்ல வேண்டாம். ஏனெனில் உமது அழகின் காட்சி உலகின் எல்லா இன்பங்களையம் விட அதிகமாக எங்களைத் தேற்றுகிறது.

நமது எஞ்சிய காலத்தில் பரலோகத்தை சம்பாதித்துக் கொள்வதற்காக நாம் உழைப்போம். பரலோகம் எந்த அளவுக்கு மிக உயர்வான ஒரு நன்மையாக இருக்கிறது என்றால், அதை நமக்காக விலைக்கு வாங்குவதற்காக, சேசுகிறீஸ்துநாதர் சிலுவையின் மீது தமது உயிரைப் பலியாக்கினார். தங்கள் சொந்தப் பாவத்தாலேயே மோட்சத்தை இழந்து போனது பற்றய நினைவிலிருந்தும் எழும் வாதைதான் நரகத்தில் சபிக்கப்பட்டவர்கள் அனுபவிக்கும் அனைத்து வாதைகளிலும் மிகப் பெரியது என்பதில் உறுதியாயிருங்கள். பரலோகத்தின் ஆசீர்வாதங்களும், இன்பங்களும், சந்தோஷங்களும், இனிமையும் சம்பாதித்துக் கொள்ளப்படலாம்; ஆனால் அவற்றை அனுபவித்து மகிழும் பாக்கியம் பெற்ற ஆன்மாக்களால் மட்டுமே அவற்றை விளக்கிக் கூறவும், புரிந்து கொள்ளவும் இயலும்.

அப்போஸ்தலர் கூறுகிறபடி, பூமியிலுள்ள எந்த மனிதனும் தம்மை நேசிக்கும் ஆத்துமங் களுக்காகக் கடவுள் ஆயத்தம் செய்திருக்கிற அளவற்ற ஆசீர்வாதங்களைப் புரிந்து கொள்ள இயலாது: **"சர்வேசுரன் தம்மை நேசிக்கிறவர்களுக்காக ஆயத்தம் செய்திருக்கிற காரியங்களைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, மனித இருதயத்திற்கு அது எட்டினதுமில்லை" (1கொரி.2:9).** இவ்வாழ்வில், புலன்களின வழியாக நாம் அனுபவிக்கும் இன்பங்களைத் தவிர வேறு எந்த இன்பத்தின் மிக அற்பமான அறிவையும் கூட நாம் கொண்டிருக்க இயலாது.

மோட்சத்தைப் பற்றிப் பேசும்போது, **அர்ச். பெர்னார்ட்** கூறுவதாவது: "ஓ மனிதா, மோட்சத்தின் ஆசீர்வாதங்களைப் புரிந்து கொள்ள நீ விரும்பினால், அந்த மகிழ்ச்சியான நாட்டில், நீ ஆசிக்காத

எதுவும் இருக்காது, நீ ஆசிக்கிற எல்லாம் இருக்கும் என்பதை அறிந்து கொள். புலன்களுக்கு உகந்ததாய் இருக்கும் சில காரியங்கள் இவ்வுலகில் இருக்கின்றன என்றாலும், இன்னும் எவ்வளவு அதிகமானவை நம்மைச் சித்திரவதை செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளன? பகலின் ஒளி இன்பமானது என்றால், இருளின் இரவு வெறுப்புக்குரியது; வசந்த காலமும் நம்மை உற்சாகப் படுத்துகிறது என்றால் குளிர்காலத்தின் பனியும், கோடையின் வெப்பமும் வேதனை தருகின்றன. இது தவிர, நாம் நோயின் வேதனைகளையும், மனிதர்களின் துன்புறுத்தல்களையும், வறுமையின் அசௌகரியங்களையும் தாங்க வேண்டியுள்ளது; அந்தரங்க கலக்கங்களுக்கும், அச்சங்களுக்கும், பசாசின் சோதனைகளுக்கும், மனச்சான்றின் சந்தேகங்களுக்கும், நித்திய இரட்சணியத்தைப் பற்றிய உறுதியற்ற நிலைக்கும் நாம் உள்ளாக வேண்டியுள்ளது."

ஆனால் மோட்சத்திற்குள் நுழைந்தபின், பாக்கியம் பெற்ற ஆன்மாக்களுக்கு இனி துயரங்கள் இருக்காது. **"சர்வேசுரன் அவர்களுடைய கண்களினின்று கண்ணீர் யாவையும் துடைப்பார்; இனி மரணமே இராது: இனி துக்கமும், அழுகைச் சத்தமும் துயரமும் கிடையாது. முந்தினவைகள் ஒழிந்து போயின என்று உரைக்கக் கேட்டேன். அன்றியும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்" (காட்சி.21:4).**

II

மோட்சத்தில், இனி மரணமும், மரண பயமும் இல்லை. அந்தப் பேரின்ப ஸ்தலத்தில் துயரங்களோ, நோய்களோ, வறுமையோ, வசதிக் குறைவுகளோ, பகல் இரவு மாற்றங்களோ, குளிரோ, வெப்பமோ இல்லை. அந்த இராச்சியத்தில் எப்போதும் பேரமைதியுள்ள ஒரு தொடர்ச்சியான பகல் பொழுதும், எப்போதுமே மலர்ந்து மணம் வீசும் ஒரு தொடர்ச்சியான வசந்த காலமும் மட்டுமே உள்ளது. மோட்சத்தின் துன்புறுத்தல்களோ, பொறாமையோ இல்லை; ஏனெனில் அனைவரும் ஒருவரை ஒருவர் கனிவுள்ள அன்போடு

நேசிக்கிறார்கள். பிறரது மகிழ்ச்சி தன்னுடைய மகிழ்ச்சி என்பது போல, மற்றவர்களின் மகிழ்ச்சியில் ஒவ்வொருவரும் அக்களிக்கிறார்கள். இனி நரகத்தைப் பற்றிய அச்சம் இல்லை, ஏனெனில் வரப்பிரசாதத்தில் உறுதிப்படுத்தப்பட்டு விட்ட ஆத்துமம் இனி பாவம் செய்யவோ, கடவுளை இழக்கவோ முடியாது.

மோட்சத்தில் நீ ஆசிக்கக் கூடிய அனைத்தையும் கொண்டிருப்பாய். **"இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்."** காட்சி. 21:5 அங்கே அனைத்தும் புதிதாக இருக்கிறது: புதிய அழகுகள், புதிய இன்பங்கள், புதிய மகிழ்ச்சிகள். அங்கே நம் எல்லா ஆசைகளும் திருப்தியாக்கப்படுகின்றன. பார்வை அந்த நகரத்தின் அழகைக் காண்பதில் திருப்தியடைகின்றன. படிகத்தாலான தெருக்களும், வெள்ளியாலான வீடுகளும், பொன்னாலான ஜன்னல்களும் கொண்டதும், அனைத்தும் மிக அழகிய மலர்களால் அலங்கரிக்கப் பட்டதுமான ஒரு பட்டணத்தைக் காண்பது மனதுக்கு எவ்வளவு இன்பம் வருவிப்பதாக இருக்கும்! ஆனால், ஓ, பரலோக நகரம் இன்னும் எவ்வளவு அதிக அதியற்புத அழகுள்ளதாக இருக்கும்! அந்த இடத்தின் அழகு, அரச உடைகள் அணிந்து அங்கே வசிப்பவர்களின் அழகால் அதிகரிக்கப்படும்; ஏனெனில், **அர்ச். அகுஸ்தீனார்** கூறுவது போல, அவர்கள் அனைவருமே அரசர்களாக இருப்பார்கள்: குவோத் சிவெஸ் தோத் ரேஜெஸ்.

ஆகவே, பரலோக நித்திய மகிமையை சம்பாதித்துக் கொள்வதற்கு, நாம் நித்திய உழைப்பை சந்தோஷ உற்சாகத்தோடு அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்று **அர்ச். அகுஸ்தீனார்** கூறுவது நீதியானதே. புனிதர்கள் மோட்சத்தை அடைந்து கொள்ள சிறிதளவே செய்திருக்கிறார்கள். எத்தனையோ அரசர்கள் தங்கள் சிம்மாசனங்களைத் துறந்து, துறவற மடங்களுக்குள் தங்களை அடைத்துக் கொண்டார்கள். ஏராளமான பரிசுத்த வனவாசிகள் குகைகளுக்குள் தங்களை அடைத்துக் கொண்டார்கள்; ஏராளமான வேதசாட்சிகள் மகிழ்ச்சியோடு வாதைகளுக்குத் தங்களைக் கையளித்தார்கள், சித்திரவதைச் சட்டங்களையும், பழுக்கச் சிவந்த இரும்புத் தகடுகளையும் ஏற்றுக்கொண்டார்கள் - இவர்கள் எல்லோருமே மிகச் சிறிதளவு மட்டுமே செய்திருக்கிறார்கள்.

“இக்காலத் துன்பங்கள் வரவிருக்கும் மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை” (உரோ.8:18). மோட்சத்தை சம்பாதிப்பதற்கு, நாம் இந்த வாழ்வின் எல்லா வேதனைகளையும் அனுபவிக்க வேண்டியிருந்தாலும், அது கொஞ்சமாகவே இருக்கும்!

ஆகவே, நம் வாழ்நாட்களில் நமக்கு வரக்கூடிய துன்பங்கள் அனைத்தையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ள தைரியத்தோடு தீர்மானம் செய்வோம்; மோட்சத்தை உறுதி செய்து கொள்வதற்கு இவை மிகக் குறைவான விலையாக, அல்லது ஒன்றுமில்லாமையாக இருக்கின்றன. ஆகவே, நாம் இரட்சிக்கப்படுவோமானால், இந்த எல்லா வேதனைகளும், துயரங்களும், துன்புறுத்தல்களும் முடிவில்லாத இன்பங்கள் மற்றும் சந்தோஷங்களின் ஊற்றாக இருக்கும் என்பதற்காக நாம் அகமகிழ்ந்து களிகூர்வோமாக. **“உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" (அரு.16:20).** ஆகவே, இவ்வாழ்வின் சிலுவைகள் நம்மைத் துன்பப்படுத்தும்போது, நாம் பரலோகத்தை நோக்கிந ம் கண்களை உயர்த்தி, மோட்சத்தைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டு நம்மைத் தேற்றிக் கொள்வோமாக. **அர்ச். எகிப்து மேரி**யின் வாழ்வின் முடிவில், மடாதிபதியாக **அர்ச். ஸோஸிமுஸ்** என்பவர் வனாந்தரத்தில் அவள் மரணத் தருவாயில் இருப்பதைக் கண்டார். அவர் அவளிடம், நாற்பத்தேழு ஆண்டுகளாக அந்த வனாந்தரத்தில் அவளால் எப்படி வாழ முடிந்தது என்று கேட்டார். “பரலோகத்தைப் பற்றிய நம்பிக்கையோடு!" என்று அவள் பதிலளித்தாள். இதே நம்பிக்கை நம்மையும் தூண்டும் என்றால், இவ்வாழ்வின் துன்பங்களை நாம் உணர மாட்டோம். தைரியம் கொள்ளுங்கள்! நாம் கடவுளை நேசித்து, பரலோகத்திற்காக உழைப்போம். அங்கே புனிதர்கள் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாமரி நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; சேசுநாதர் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த நித்திய இராச்சியத்தில் நம் ஒவ்வொருவரையும் ஓர் அரசனாக ஆக்கும்படி அவர் தம் திருக்கரத்தில் ஒரு கிரீடத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்.

திங்கள்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 08

I

சிறிது காலமாக ஒரு பெரும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த சகோதரி மதலேன் ஓர்ஸினிக்கு சேசுநாதர் ஒரு நாள் தமது சிலுவையின் மீது தோன்றி, சமாதானத்தோடு துன்புறுமாறு அவளை உற்சாகப்படுத்தினார். அந்த தேவ பணிப்பெண் ஆண்டவருக்குப் பதில் மொழியாக, "ஆனால், ஆண்டவரே, நீர் மூன்று மணி நேரம் மட்டும்தான் சிலுவையின்மீது தொங்கினீர். நானே பல வருடங்களாக இந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேனே!" என்றாள். அவளைக் கடிந்துகொள்ளும் விதமாக ***சேசுநாதர் அவளிடம்: "ஓ நீ அறியாதவளாக இருப்பதால், இப்படிப் பேசுகிறாய். என் திருமாதாவின் திருவுதரத்தில் நான் இருக்கத் தொடங்கிய முதல் கணத்திலிருந்தே, சிலுவையின் மீது நான் பிற்பாடு அனுபவித்த அனைத்து துன்பங்களையும் என் இருதயத்தில் நான் அனுபவிக்கத் தொடங்கி விட்டேன்" என்றார்.*** என் மீட்பரே, உமது வாழ்வு முழுவதும் என் பொருட்டு நீர் தாங்கிய மாபெரும் துன்பங்களை நான் காணும்போது, எனது நன்மைக்காக நீர் எனக்கு அனுப்பும் சிலுவைகளைப் பற்றி எப்படி முறையிட முடியும்? இவ்வளவு அதிக அன்பையும், இத்தகைய துன்பங்களையும் கொண்டு என்னை நீர் இரட்சித்திருப்பதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இவ்வாழ்வின் வேதனைகளைப் பொறுமையாக அனுபவிக்க என்னை ஊக்குவிக்கும்படி, நீர் எங்கள் எல்லாத் தீமைகளையும் உம்மீது சுமந்து கொண்டீர். ஓ என் ஆண்டவரே, உமது அன்பிற்காக நான் எப்போதும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளுமாறும், அவற்றின் மீது ஆசை கொள்ளுமாறும், உமது துயரங்கள் எப்போதும் என் மனதில் நிலைத்திருப்பனவாக.

"உன் துயரம் கடலைப் போல் அபாரமாய் இருக்கிறதே!" (புலம்பல்.2:13). கடலின் நீர் முழுவதும் உப்பாகவும், கசப்பாகவும் இருப்பது போல, சேசுநாதரின் வாழ்வும் கநசப்பால் நிறைந்ததாகவும், ஆறுதல்கள் அனைத்தும் அகற்றப்பட்டதாகவும் இருந்தது. அவரே இதை **அர்ச். கோர்ட்டோனா மார்கரீத்தம்மாளுக்கு** அறிவித்தார்.

மேலும், பூமியின் ஆறுகள் அனைத்தும் கடலோடு ஒன்றிப்பது போல, மனிதர்களின் எல்லாத் துன்பங்களும் சேசுக்கிறீஸ்துநாதரில் ஒன்றித்தன. இதனாலேயே அவர் சங்கீத ஆசிரியரின் வாய்மொழியாக: **“தேவனே! என்னை இரட்சியும்; ஏனெனில் வெள்ளங்கள் என் ஆத்துமத்தினுள் நுழைந்தன. ஆழ்ந்த உளையிலே அமிழ்ந்திய் இருக்கிறேன்; அதில் நிற்க நிலையில்லை; ஆழம் அறியாத சமுத்திரப் பாதாளங்களில் நான் விழுந்து போய் இருக்கிறேன்; புயல் அடித்து என்னை (அதில்) மூழ்கடித்தது" என்கிறார் (சங்.68:1,2).** தேவனே, என்னை இரட்சயும், ஏனெனில் துயரங்கள் என் ஆத்துமத்தின் மிக உள்ளரங்கமான பகுதிகள் வரையிலும் நுழைந்து விட்டன. உள்ளரங்கமானதும், வெளியரங்க மானதுமாகிய அவமானங்கள் மற்றும் துன்பங்களின் புயலில் நான் அமிழ்த்தப்பட்டிருக்கிறேன்.

ஓ என் மிகப் பிரியமுள்ள சேசுவே, என் அன்பே, என் உயிரே, என் சர்வமே, உமது திருச்சரீரத்தை வெளியிலிருந்து நான் பார்த்தால், காயங்களைத் தவிர வேறு எதையும் நான் காணவில்லை. ஆனால் நான் உமது கைவிடப்பட்ட இருதயத்திற்குள் நுழைந்து பார்த்தால், நீர் மரண அவஸ்தையை அனுபவிக்கச் செய்த கசப்பையும், துயரங்களையும் மட்டுமே நான் காண்கிறேன். ஓ என் ஆண்டவரே, அளவற்ற நன்மைத்தனமாகிய உம்மைத் தவிர வேறு யார் உமது சிருஷ்டிகளில் ஒருவனுக்காக இவ்வளவு அதிகமாகத் துன்பப்படவும், மரிக்கவும் இயலும்? ஆனாலும் நீர் கடவுளாக இருப்பதால், ஒரு கடவுள் மட்டுமே நேசிக்க முடிந்த அளவுக்கு, வேறு எந்த நேசத்திற்கும் இணையற்றதாக இருக்கிற ஒரு நேசத்தைக் கொண்டு நீர் நேசிக்கிறீர்!

II

அர்ச். பெர்னார்ட் கூறுவதாவது: “அடிமையை மீட்பதற்காக, பிதாவானவர் தம் சொந்த மகனைத் தண்டியாமல் விடவில்லை, தேவ சுதனும் தம்மைத் தாமே விடுவித்துக் கொள்ளவில்லை." ஓ அளவற்ற தேவசிநேகமே! ஒரு பக்கத்தில், சேசுகிறீஸ்துநாதர் மனிதர்களின்

எல்லாப் பாவங்களுக்கும் சேசுகிறீஸ்துநாதர் பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்கிறார். **“ஆண்டவர் நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மீது சுமத்தினார்'' (இசை. 53:6).** மறு புறத்தில், சேசுநாதர் தம்மால் முடிந்த அனைத்திலும் சிறந்த ஓர் அன்பின் வழியில் மனிதர்களை இரட்சிப்பதற்காக நம் பாவங்களுக்குரிய தேவநீதியின் உச்சபட்ச தண்டனையைத் தம்மீது ஏற்றுக்கொள்வதைத் தேர்ந்துகொண்டார். இதனாலேயே, அர்ச். தாமஸ் அக்குயினாஸ் வலியுறுத்திக் கூறுவது போல, அவர் உச்சபட்ச அளவில் இது வரை சுமக்கப்பட்ட எல்லாத் துன்பங்களையும், நிந்தை அவமானங்களையும் தம்மீது சுமந்து கொண்டார். இதன் காரணமாகவே இசையாஸ் அவரை **“மனிதரில் அருவருக்கப்பட்டவர், கடைத்தரமானவர், துன்புற்ற மனிதர்''** என்று அழைக்கிறார் (இசை.53:3). இதற்குத் தகுந்த காரணமும் உள்ளது: ஏனெனில் சேசுநாதர் தமது திருச்சரீரத்தின் எல்லா உறுப்புகளிலும், புலன்களிலும் வாதிக்கப்பட்டார். தமது ஆத்துமத்தின் எல்லா சத்துவங்களிலும் அவர் இன்னும் அதிகக் கசப்பான முறையில் வேதனைப்படுத்தப்பட்டார். இவ்வாறு, அவர் பட்ட உள்ளரங்க வேதனைகள் அவரது வெளியரங்கத் துன்பங்களுக்கு அளவற்ற விதமாய் அப்பாற்பட்டவையாக இருந்தன. ஆகவே, கிழிக்கப்பட்டவராகவும், இரத்தமற்றவராகவும் அவரைக் காணுங்கள்! அவர் ஒரு வஞ்சகனைப் போலவும், ஒரு மாந்திரீகனைப் போலவும், ஒரு பைத்தியக்காரனைப் போலவும் நடத்தப்பட்டார்; தமது நண்பர்களாலும் கூட கைவிடப்பட்டார், இறுதியாக, அவமானக் கழுமரத்தில் தம் வாழ்வை முடிக்கும் வரையில் அவர் எல்லோராலும் துன்புறுத்தப்பட்டார்.

“நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?'' (அரு.13;12). ஓ ஆண்டவரே, உண்மையாகவே நீர் எவ்வளவு அதிகமாக எனக்குச் செய்திருக்கிறீர், என் நிமித்தமாக எவ்வளவு துன்பப்பட்டிருக்கிறீர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால், அந்தோ, உமக்காக நான் எதுவும் செய்யவில்லை என்பதை நீர் அறிந்திருக்கிறீர். என் சேசுவே, மரணம் என்னை வெற்றி கொள்ளுமுன் உமக்காகக் கொஞ்சமாவது துன்புற எனக்கு உதவும்.

உம் திருமுன் வந்து நிற்க நான் வெட்கப்படுகிறேன்; ஆனாலும் இத்தனை வருடங்களாக உம்மிடம் நான் நன்றியற்றவனாக இருந்து வந்துள்ளது போல் இனி இருக்க மாட்டேன். நீர் எனக்காக எல்லா இன்பங்களையும் விலக்கிய் இருக்கிறீர்; நான் உமது அன்பிற்காகப் புலன்களின் எல்லா இன்பங்களையும் விலக்குவேன். நீர் எனக்காக மிக அதிகமான வேதனைகளை அனுபவித்திருக்கிறீர். நான் உமக்காக, உமக்குப் பிரியமான விதத்தில் என் வாழ்வு மற்றும் என் மரணத்தின் எல்லா வேதனைகளையும் அனுபவிப்பேன். நீர் கைவிடப்பட்டிருக்கிறீர். ஓ என் ஒரே இராஜரீக நன்மைத்தனமாகிய தேவரீர் என்னைக் கைவிடாதிருக்கும் வரை, அனைவராலும் கைவிடப்படுவதில் நான் திருப்தியா யிருப்பேன். நீர் துன்புறுத்தப் பட்டிருக்கிறீர்; எனக்கு நேரிடும் துன்பம் எதுவாயினும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இறுதியாக, நீர் எனக்காக மரித்திருக்கிறீர்; நானும் உமக்காக மரிப்பேன். ஓ என் சேசுவே, என் திரவியமே, என் அன்பரே, என் சர்வமுமே, நான் உம்மை நேசிக்கிறேன். ஓ எனக்கு அதிக அன்பைத் தாரும்! ஆமென்.

செவ்வாய்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் – 09

I

ஓ, தேவசிநேக நெருப்பை ஆன்மாக்களில் மூட்டவே தாம் வந்ததாகவும், அது மனிதருடைய இருதயங்களில் பற்றியெரிய வேண்டுமென்பதே தமது ஒரே ஆசை என்றும் நமது ஆசீர்வதிக்கப் பட்ட மீட்பர் கூறியபோது, உலகிற்குத் தமது வருகை தொடர்பாக அவரது அறிக்கை எவ்வளவு அபரிமிதமான மென்மையும், அன்பும், வற்புறுத்தலும் நிறைந்ததாக இருந்தது! **“நான் பூமியிலே அக்கினியைப் போட வந்தேன். அது பற்றியெரிய வேண்டும் என்பதையன்றி, வேறெதை விரும்புகிறேன்?" (லூக்.12:49).** அவர் உடனே தொடர்ந்து, தமது சொந்த இரத்தத்தால் தாம் ஞானஸ்நானம் பெற ஏக்கமாயிருப்பதாகக் கூறினார்-- தமது சொந்தப் பாவங்களைக்

கழுவுவதற்காக அல்ல, ஏனெனில் அவர் பாவம் செய்ய இயலாதவராக இருக்கிறார், மாறாக, தமது துன்பங்களைக் கொண்டு தாம் பரிகரிக்க வந்திருந்த நமது பாவங்களைக் கழுவிப் போக்குவதற்காகவே இந்த சொந்த இரத்த ஞானஸ்நானத்தை எதிர்பார்த்திருப்பதாக அவர் கூறினார்: "கிறீஸ்து நாதரின் திருப்பாடுகள் ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவரது இரத்தத்தில் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்." ஆகவே, நம் நேச ஆண்டவர், நமக்காக மரிக்கத் தமக்குள்ள ஆசை எவ்வளவு தீவிரமானது என்பதை நாம் புரிந்து கொள்ளும்படி செய்வதற்காக, தமது அன்பை மிக இனிய முறையில் வெளிப் படுத்தும் வார்த்தைகளைக் கூறினார்: தமது திருப்பாடுகளின் நேரத்திற்காகத் தாம் ஏக்கத்துடன் காத்திருப்பதாக அவர் கூறினார். **"நான் பெறவேண்டிய ஸ்நானம் ஒன்றுண்டு; அது நிறைவேறுமளவும் எவ்வளவோ நெருக்கிடைப்படுகிறேன்" (லூக்.12:50).**

ஓ சர்வேசுரா, மனிதர்களின் நேசரே, உம்மை நேசிக்கும் அவசியத்தை என்னில் உண்டாக்க, நீர் இதற்கு மேல் என்னதான் செய்ய, அல்லது சொல்ல முடியும்? எனக்காக மரிப்பதை நீர் தேர்ந்து கொள்ளவும், என் அன்பை அடைந்து கொள்வதற்காக மரணமடைய இவ்வளவு அதிகமாக ஆசிக்கவும், என் அன்பால் உமக்கு என்ன நன்மை விளைந்து விடப் போகிறது? என் ஊழியன் ஒருவன் எனக்காக சாக விரும்புகிறான் என்றால், அவன் என் அன்பை வசீகரித்திருப்பான்; அப்படியிருக்க, எனக்காக மரித்தவரும், என் அன்பைப் பெற்றுக் கொள்வதற்காக மரணத்தை ஏக்கத்தோடு தேடியவருமான என் அரசரும், தேவனுமாகிய உம்மை என் முழு இருதயத்துடன் நேசிக்காமல் வாழ என்னால் எப்படி முடியும்?

"சேசுநாதர் தாம் இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகவேண்டிய தம்முடைய காலம் வந்ததென்று அறிந்து, இவ்வுலகத்திலே இருந்த தம்முடையவர்களைத் தாம் சிநேகித்திருக்கையில் அவர்களை முடிவு பரியந்தம் சிநேகித்தார்" (அரு.13:1). சேசுநாதர் தமது திருப்பாடுகளின் காலத்தைத் தம்முடைய காலம் என்று அழைத்தார் என்று அர்ச். அருளப்பர் கூறுகிறார்; ஏனெனில் ஒரு பக்தியுள்ள விரிவுரையாளர் கூறுவது

போல, இதுவே நம் திவ்விய மீட்பர் தமது வாழ்வு முழுவதும் ஏக்கப் பெருமூச்சோடு தேடிக் கொண்டிருந்த நேரமாக இருந்தது; ஏனெனில் மனிதர்களுக்காகத் துன்பப்பட்டு மரிப்பதன் மூலம், அவர்கள் மீது தமக்குள்ள அளவிறந்த அன்பை அவர்கள் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டுமென அவர் ஆசித்தார்: “அது நேசிப்பவர் தம் நேசித்திற்கு உரியவருக்காகத் துன்புறும் நேரமாக இருக்கிறது." ஏனெனில் நேசிக்கப்படுபவருக்காகத் துன்பப்படுவது, நேசிப்பவரின் அன்பைக் கண்டுபிடிப் பதற்கும், நேசிக்கப்படுபவரின் அன்பை நேசிப்பவர் தமக்கென வசீகரித்துக் கொள்வதற்குமான மிகப் பொருத்தமான வழியாக இருக்கிறது. ஓ எனக்கு மிகப் பிரியமான சேசுவே, நீர் என்மீது கொண்டுள்ள பெரும் அன்பை எனக்குக் காட்டுவதற்காக, என் மீட்பின் வேலையை வேறு யாரிடமும் ஒப்படைக்காமல், அதை நீர் உமக்கென மட்டுமே வைத்துக் கொண்டீர். அப்படியானால், என் அன்பை சம்பாதித்துக் கொள்ள இவ்வளவு அதிகமாக நீர் துன்புறும் அளவுக்கு என் அன்பு உமக்கு அவ்வளவு முக்கியமானதாக இருந்ததா? ஓ, உமது தேவபிதாவின் அன்பை ஒருவேளை நீர் சம்பாதிக்க வேண்டுமானால், இதை விட அதிகமாக நீர் என்ன செய்திருக்க முடியும், இழிந்த, நன்றியற்ற அடிமையாகிய என்னால் நீர் நேசிக்கப்படுமாறு நீர் துன்புற்றதை விட அதிகமாக, ஒரு ஊழியன் தன் எஜமானின் அன்பைப் பெற வேறு என்ன செய்து விட முடியும்?

புதன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 10

I

இப்போது, இதோ நம் அன்புக்குரிய சேசுநாதர் தமது திருப்பாடுகளுக்கு முந்திய அந்தப் பரிசுத்த இரவில், நம் இரட்சணியத்திற்காக சிலுவை பீடத்தில் பலியாக்கப்படும் நேரத்தை ஏற்கெனவே நெருங்கி வந்திருக்கிறார். தம் சீடர்களோடு இராப் போஜனம் அருந்துகையில், அவர்களிடம் அவர் கூறிய வார்த்தைகளுக்கு செவிகொடுப்போம்: **“உங்களோடு இந்தப்**

பாஸ்காவைப் புசிக்க நான் ஆசை மேல் ஆசையாயிருந்தேன்" (லூக்.22:15). அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன் இந்த வார்த்தைகளை தியானித்து, அவை அனைத்தும் அன்பின் வார்த்தைகளாக இருந்தன என்று வலியுறுத்திக் கூறுகிறார்: "ஆசை மேல் ஆசையாயிருந்தேன் - இது அன்பின் குரல்." அதாவது, நம் நேச இரட்சகர் நம்மிடம், "ஓ மனிதர்களே, என் திருப்பாடுகள் தொடங்க இருக்கும் இந்த இரவுதான் என் வாழ்நாள் முழுவதிலும் நான் மிக அதிக ஏக்கத்தோடு தேடிக் கொண்டிருந்த நேரமாக இருக்கிறது; ஏனெனில் என் துன்பங்கள் மற்றும் என் கசப்பான மரணம் ஆகியவற்றின் வழியாக, நான் உங்களை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளச் செய்வேன், அதன் மூலம் என்னால் முடிந்த மிகப் பலமான முறையில், என்னை நீங்கள் நேசிப்பதை நான் உங்களுக்குக் கடமையாக்குவேன்" என்று நம் ஆண்டவர் சொன்னது போலாயிற்று. சேசுநாதரின் திருப்பாடுகளில் தெய்வீக சர்வ வல்லமை நேசத்தோடு தன்னை ஒன்றித்துக் கொண்டது; சர்வ வல்லபம் தன்னால் முடிந்த உச்சபட்ச அளவில் மனிதனை நேசிக்கத் தேடியது; சர்வ வல்லமையானது தனது ஆசை எந்த அளவை எட்ட முடியுமோ, அந்த அளவுக்கு நேசத்தைத் திருப்திப்படுத்தத் தேடியது.

ஓ இராஜரீக தேவனே! நீர் உம்மையே எனக்கு முழுமையாகத் தந்திருக்கிறீர்; அப்படியிருக்க, என் முழு சுயத்தோடு நான் எப்படி உம்மை நேசிக்காமலிருக்க முடியும்?நான் விசுவசிக்கிறேன், ஆம், நீர் எனக்காக இறந்தீர் என்று நான் விசுவசிக்கிறேன்; அப்படியிருக்க, உம்மையும், நீர் எனக்காகப் பட்ட பாடுகள் அனைத்தையும் மிக அடிக்கடி மறந்து போகும் அளவுக்கு இவ்வளவு குறைவாக நான் எப்படி உம்மை நேசிக்க முடியும்? மேலுகூம் ஆண்டவரே, உமது திருப்பாடுகளைப் பற்றி நான் தியானிக்கும்போது, உமது அன்பால் நான் பற்றியெரியாமல் இருப்பது எப்படி? உமது திருப்பாடுகளை தியானித்த பிறகு, எப்போதும் உமது அன்பின் மகிழ்ச்சியுள்ள இரையாக நிலைத்திருந்தவர்களும், தங்களையே உமக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தவர்களுமான மிக அநேக பரிசுத்த ஆன்மாக்களைப் போல நான் முழுவதும் உம்முடையவனாக ஆகாதிருப்பது ஏன்?

II

உந்நத சங்கீத மணவாளி தனது மணவாளர் தமது திருப்பாடுகளின் பரிசுத்த திராட்சை இரச அறைக்குள் தன்னை அழைத்துச் சென்றதாகக் கூறினாள். அவள் எல்லாப் பக்கங்களிலும் தான் தேவசிநேகத்தால் எந்த அளவுக்குத் தாக்கப்படுவதாகக் கண்டாள் என்றால், அன்பினால் மிகுந்த வேதனைக்குள்ளானவளாக, அவள் தனது காயப்பட்ட இருதயத்திற்கு நிவாரணத்தைத் தேடும்படி நெருக்கப்பட்டாள்: **“அவர் என்னைத் திராட்ச இரசம் வைக்கும் அறைக்குள் அழைத்துச் சென்றார்; என்னில் தேவ அன்பை முறைப் படுத்தினார். புஷ்பங்களை வைத்து என்னைத் தடுத்துக் கொள்ளுங்கள்; என்னைத் தாங்கக் கனிகளை என் சுற்றிலும் வையுங்கள்; அன்பின் மிகுதியால் மனச்சோர்வுற்றிருக்கிறேன்" (உந்.சங்.2:4,5).** ஓர் ஆன்மா கிறீஸ்துநாதரின் திருப்பாடுகள் பற்றிய தியானத்திற்குள் நுழைந்தபின், அன்பின் ஏராளமான அம்புகளால், நம் அன்புள்ள ஆண்டவரின் சரீரத்தையும், ஆத்துமத்தையும் மிகக் கொடுமையாகக் கஸ்திக்கு உள்ளாக்கிய துன்பங்களாலும், அவஸ்தைகளாலும், காயப்படுத்தப்படாமல் இருப்பது எப்படி சாத்தியம்? தன்னை மிக அதிகமாக நேசித்துள்ள அவரை நேசிக்கும்படி இனிமையான முறையில் நெருக்கப்படாமல் அது இருப்பது எப்படி சாத்தியம்? ஓ இவ்வாறு புண்படுத்தப்பட்டவரும், இரத்தத்தால் தோய்ந்தவரும், உருக்குலைந்தவருமாகிய மாசற்ற செம்மறிப் புருவையே, இந்தச் சிலுவையின் மீது உம்மை நான் காண்கையில், நீர் எவ்வளவு அழகாகவும், நேசிக்கப்பட எவ்வளவு தகுதியானவராகவும் நீர் எனக்குத் தோன்றுகிறீர்! ஆம், உம்மில் நான் காணும் இந்த எல்லாக் காயங்களும் நீர் என்மீது கொண்ட அன்பின் மிகப் பல அடையாளங்களாகவும், சாட்சியங் களாகவும் இருப்பதை நான் காண்கிறேன். ஓ, ஒருநாள் ஜெருசலேம் முழுவதற்கும் காட்சிப் பொருளாக நீர் ஆக்கப்பட்டிருந்த இந்த உமது பரிதாப நிலையில் மனிதர்கள் அனைவரும் உம்மை அடிக்கடி கண்டு தியானிப்பார்கள் என்றால், உமது நேசத்தால் பற்றிப்பிடிக்கப்படாமல் யார் இருக்கக் கூடும்? ஓ என் அன்புள்ள ஆண்டவரே, நான் என் எல்லாப்

புலன்களையும், என் சித்தம் முழுவதையும் உமக்குத் தருகிறேன் என்பதால், நான் உம்மை நேசிக்கும்படி, என்னை ஏற்றருளும். நீர் உமது திரு இரத்தத்தையும், உமது உயிரையும், உம்மை முழுவதுமே கூட எனக்குத் தர மறுக்காதிருக்க, நான் மட்டும் உமக்கு எப்படி எதையும் மறுக்க முடியும்?

வியாழன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 11

I

நம் நேச இரட்சகர் ஜெத்சமெனித் தோட்டத்திற்கு வந்ததும், அச்சம், மனச் சோர்வு, களைப்பு, துக்கம் ஆகியவை வந்து தங்கள் முழு வாதைகளைக் கொண்டு தம்மை வருத்தும்படி அவற்றிற்கு முழு சுதந்திரம் தருவதன் மூலம் தமது கசப்பான திருப்பாடுகளைத் தாமே எப்படித் தொடங்கி வைக்கிறார் என்று காணுங்கள். **"அவர் பயப்படவும், சலிப்படையவும் (மாற்கு 14), துயரப்படவும், ஆயாசப்படவும் (மத்.26)** தொடங்கினார்." முதலில் அவர் கடும் மரண பயத்திற்கும், தாம் விரைவில் அனுபவிக்க இருந்த துன்பங்களைப் பற்றிய பயத்திற்கும் உள்ளானார். "அவர் பயப்படத் தொடங்கினார்." ஆனால் எப்படி? இந்த எல்லா வாதைகளுக்கும் தாமே முன்வந்து அவர் தம்மைக் கையளிக்கவில்லையா? "அவர் தமது சித்தத்தின்படியே தம்மைக் கையளித்தார்." தமது திருப்பாடுகளின் இந்த நேரத்தை மிக அதிகமாக ஆசித்துத் தேடியவரும், சற்று முன்புதான், "இந்தப் பாஸ்காவை உங்களோடு புசிக்க ஆசை மேல் ஆசையாயிருந்தேன்" என்று சொன்னவரும் அவர்தான் அல்லவா? இருந்தும், இப்போது அதிலிருந்து தம்மை விடுவிக்குமாறு, **"பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக் கடவது" (மத்.26:39)** என்று தமது பிதாவிடம் ஜெபிக்கும் அளவுக்கு அவர் மரண பயத்தால் பீடிக்கப்படுவது எப்படி? வணக்கத்துக்குரிய பீட் இதற்குப் பதில் தருகிறார்: "தாம் மெய்யாகவே மனிதன் என்று காட்டுவதற்காக, இந்தப் பாத்திரம் தம்மை விட்டு அகலும்படி சேசுகிறீஸ்துநாதர் ஜெபிக்கிறார்." நம்

அன்புள்ள இரட்சகராகிய அவர், தமது மரணத்தின் மூலம் நம்மீது தமக்குள்ள அன்பை எண்பிக்குமாறு, நமக்காக மரிப்பதை உண்மையாகவே தேர்ந்து கொண்டார். மேலும், (சில பதிதர்கள் தேவதூஷணமான முறையில் வலியுறுத்துவது போல) அவர் ஒரு கற்பனையான (வெறும் வெளித் தோற்றத்தை மட்டும் கொண்டுள்ள) மனித உடலை மட்டுமே எடுத்திருந்தார் என்றோ, அல்லது தமது தெய்வீகத்தின் பயனாக, எந்த வேதனையையும் அனுபவிக்காமலே அவர் இறந்தார் என்றோ மனிதர்கள் நினைக்காதபடி அவர் இப்படி ஜெபித்தார். ஆகவே, இந்த ஜெபம் கேட்கப்பட வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, தாம் ஒரு மனிதனாக மரித்தார் என்றும், மரண பயத்தாலும், தமது மரணத்துடன் இணைந்திருந்த கொடிய துன்பங்கள் பற்றிய பெரும் பயத்தாலும் அவர் துன்பப்பட்டார் என்றும் நாம் புரிந்து கொள்ளும்படி செய்வதற்காகவே தமது பரலோகப் பிதாவிடம் அவர் இப்படி ஜெபித்தார். ஓ மிகுந்த நேசத்திற்குரிய சேசுவே, இவ்வாழ்வின் துன்ப சோதனைகளை அனுபவிப்பதில் உமது தைரியத்தை எங்களுக்குத் தரும்படியாக, எங்கள் அச்சம் நிறைந்த தன்மையை நீர் உம்மீது எடுத்துக் கொள்ளத் திருவுளங்கொண்டீர். ஓ, உமது மாபெரும் இரக்கத்திற்காகவும், அன்பிற்காகவும் தேவரீர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவீராக! ஓ, எங்கள் இருதயங்கள் அனைத்தும் நீர் ஆசிக்கும் அளவிலும், உமக்குத் தகுதியான அளவிலும் உம்மை நேசிப்பனவாக!

II

"அவர் சலிப்படையத் தொடங்கினார்." தமக்கென ஆயத்தம் செய்யப்பட்டிருந்த வாதைகளின் காரணமாக அவர் ஒரு பெரும் மனச்சோர்வை உணரத் தொடங்கினார். ஒருவன் மனச்சோர்வுற்று இருக்கும்போது, இன்பங்கள் கூட வேதனை மிக்கவை ஆகின்றன. ஓ, அச்சமயத்தில் அவரது மனக் கண் முன் வந்த அவரது பாடுகளின் பயங்கரமுள்ள சித்தரிப்புகளின் காரணமாக, இந்த மனச்சோர்வுடன் எத்தகைய கடும் வேதனையை அவர் உணர்ந்திருக்க வேண்டும்! வெளியரங்க, உள்ளரங்க வாதைகள் அனைத்தையும் அவர் உணர்ந்தார். அவை, எஞ்சியிருந்த அவரது மிகக் குறுகிய வாழ்சவின்

போது, அவரது சரீரத்தையும், அவரது ஆசீர்வதிக்கப்பட்ட ஆத்துமத்தையும் மிகக் கொடூரமான முறையில் வதைக்க இருந்தன! அதன்பின் அவர் அனுபவிக்க இருந்த எல்லாத் துன்பங்களும், யூதர்களிடமிருந்தும், உரோமையர்களிடமிருந்தும், தமக்கு வரவிருந்த எல்லா அவமானங்களும், அவரது வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளை அவருக்கு எதிரான குற்றவாளிகளாக ஆக்கவிருந்த அவர்களது அநீதியும், எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லோராலும், மனிதராலும், கடவுளாலும் கைவிடப்பட்டவராக, துன்பங்கள், மற்றும் நிந்தை அவமானத்தின் ஒரு கடலுக்கு மத்தியில், ஆறுதல் தர யாருமின்றி அடைய இருந்த மரணத்தின் காட்சியும் தெளிவாக அவரது கண்களுக்கு முன்பாகக் கடந்து சென்றன. இதுதான் தமது ஆறுதலுக்காக நித்திய பிதாவிடம் அவர் ஜெபிக்கும்படி செய்யும் அளவுக்கு, அவருக்கு மிக பாரமான துயரத்தை வருவித்தது. ஓ என் சேசுவே, நான் உம்மீது தயவிரக்கம் கொள்கிறேன், உமக்கு நன்றி செலுத்துகிறேன், உம்மை நேசிக்கிறேன்.

“இதோ ஒரு சம்மனசானவர் அவருக்குத் தோன்றி. . . அவரைப் பலப்படுத்தினார்'' (லூக்.22:43). பலம் வந்தது; ஆனால் இது அவரது துன்பங்களை இலகுவாக்குவதற்குப் பதிலாக அவற்றை அதிகரித்தது என்று வணக்கத்துக்குரிய பீட் கூறுகிறார்: “பலம் அவரது துயரத்தைக் குறைக்கவில்லை, மாறாக அதிகரித்தது.'' ஆம், ஏனெனில் மனிதர் மீதுள்ள அன்பிற்காகவும், தமது பிதாவின் மகிமைக்காகவும் இன்னும் அதிகமாக அவர் துன்பப் படுவதற்காகவே சம்மனசானவர் அவரைத் தேற்றினார். என் அன்புள்ள ஆண்டவரே, இந்த முதல் போராட்டம் உமக்கு எத்தகைய பயங்கரமான துன்பங்களைக் கொண்டு வந்தது! உமது திருப்பாடுகள் தொடர்ந்து நிகழ்ந்த போது, உம்மை வாதிப்பதற்காகக் கசைகளும், முட்களும், ஆணிகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. ஆனால் ஒலிவத் தோப்பில் உமது ஒட்டுமொத்தத் திருப்பாடுகளின் எல்லா வாதைகளும் ஒன்றுசேர்ந்து உம்மைத் தாக்கி, உம்மைக் கடுமையாக வாதித்தன. எல்லாவற்றையும் எனக்காகவும், எனது நன்மைக்காகவும் நீர் ஏற்றுக்கொண்டீர். ஓ என் தேவனே, கடந்த காலங்களில் உம்மை நேசிக்காமல் இருந்ததற்காகவும், உமது திருச்சித்தத்திற்கு மேலாக என் சொந்த சபிக்கப்பட்ட இன்பங்களைத்

தேர்ந்து கொண்டதற்காகவும் நான் எவ்வளவு அதிகமாக மனம் வருந்துகிறேன்! இப்போது ஒவ்வொரு தீமைக்கும் மேலான தீமையாக அவற்றை நான் அருவருக்கிறேன், என் முழு இருதயத்தோடும் அவற்றிற்காக மனஸ்தாபப்படுகிறேன். ஓ என் சேசுவே, என்னை மன்னியும்.

மார்ச் முதல் வெள்ளி

சேசுவின் அன்புள்ள திரு இருதயம்

I

நாம் நம்மை நேசிப்பதை விட அதிகமாக சேசுவின் திரு இருதயம் நம்மை அளவற்ற விதமாக நேசிக்கிறது. சேசுநாதர் அதீதமாகவும் கூட நம்மை நேசித்திருக்கிறார். அவர் தமது சொந்த மகத்துவத்தை விட அதிகமாகவும், தமது இளைப்பாற்றியை விட அதிகமாகவும், தமது சொந்த உயிரை விடவும் அதிகமாகவும் நம்மை நேசித்திருக்கிறார். இந்த அதீத அன்பு பரலோகத் தூதர்களைப் பெரும் அதிசய உணர்வால் நிரப்பி அவர்களை மதிமயங்கசச் செய்யப் போதுமானதாக இல்லையா?

ஓ, சேசுவின் திரு இருதயத்தில் நமக்காகப் பற்றியெரியும் அன்பை மட்டும் நம்மால் புரிந்து கொள்ள முடிந்ததென்றால்! அவர் எவ்வளவு அதிகமாக நம்மை நேசித்திருக்கிறார் என்றால், எல்லா மனிதர்களும், எல்லா சம்மனசுக்களும், எல்லாப் புனிதர்களும் தங்கள் ஆற்றல்கள் முழுவதையும் ஒன்றாக இணைத்தாலும் கூட, அவை சேசு நம்மீது கொண்டுள்ள அன்பில் ஆயிரத்தில் ஒரு பாகம் கூட வராது. நாம் நம்மை நேசிப்பதை விட அதிகமாக, அளவற்ற விதமாக அவர் நம்மை நேசிக்கிறார். அவர் அதீதம் என்னும் அளவுக்குக் கூட நம்மை நேசித்திருக்கிறார்: “அவர்கள் ஜெருசலேமில் அவர் நிறைவேற்ற இருந்த அவரது மரணத்தை (அதீதத்தைப்) பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்" (லூக்.9:31). கடவுள் தம் படைப்புகளுக்காக மரிப்பதை விட அதிகமான அன்பின் அதீத அளவு எங்கே இருக்க முடியும்? அவர் அனைத்திலும் அதிகமான அளவுக்கு நம்மை நேசித்திருக்கிறார். “தம்முடையவர்களை அவர் சிநேகித்திருக் கையில், அவர்களை முடிவு பரியந்தம் சிநேகித்தார்" (அரு.13:1). அவர் நித்தியத்தில் இருந்தே நம்மை நேசித்தார். ஏனெனில் நித்தியத்தில் கடவுள் நம்மைப் பற்றி நினைக்காததும், நம் ஒவ்வொருவரையும் நேசிக்காததுமான ஒரே ஒரு கணம் கூட ஒருபோதும் இருந்ததில்லை: “ஒரு நித்திய நேசத்தால் நாம் உன்னை நேசித்திருக்கிறோம்",-- நம் நேசத்திற்காக அவர் மனிதனானார், நம் பொருட்டுத் துன்பங்கள் நிறைந்த ஒரு வாழ்வையும், சிலுவை

மரணத்தையும் அவர் தேர்ந்து கொண்டார். ஆகவே, தமது மகத்துவத்தையும், தமது இளைப்பாற்றியையும், தமது உயிரையும் விட அதிகமாக அவர் நம்மை நேசித்திருக்கிறார்; ஏனெனில் நம்மீது தமக்குள்ள அன்பைக் காட்டுவதற்காக அவர் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்தார். இது நித்தியத்திற்கும் பரலோக சம்மனசுக்களை அதிசயத்தில் ஆழ்த்தி, அவர்களை மதிமயங்கச் செய்யப் போதுமான அன்பின் அதீத நிலையாக இல்லையா? இந்த அன்பு, நேசத்தின் சிம்மாசனம் ஒன்றில் வீற்றிருப்பது போல, பீடத்தின் பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் நம்மோடு தங்கியிருக்கவும் அவரைத் தூண்டிய் இருக்கிறது. ஏனெனில் ஒரு சிறு அப்பத் துண்டின் தோற்றத்தின் கீழ், ஒரு நற்கருணைப் பாத்திரத்தில் அடைக்கப்பட்டவராக அவர் தங்கிய் இருக்கிறார். அங்கே அவர் எந்த அசைவு மின்றியும், தமது புலன்களின் பயன்பாடு இன்றியும் தமது மகத்துவத்தை முற்றிலும் அழித்து விட்டுத் தங்கியிருப்பவராகத் தோன்றுகிறார். இதன் காரணமாக, மனிதர்களை நேசிப்பதை விட வேறு எந்த அலுவலையும் அவர் செய்வதில்லை என்று தோன்றுகிறது. நேசமானது, நம்மால் நேசிக்கப்படும் பொருளின் இடையறாத பிரசன்னத்தில் நாம் ஆசை கொள்ளச் செய்கிறது. இந்த அன்பும், இந்த ஆசையும்தான் சேசுகிறீஸ்துநாதரை மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் நம்மோடு தங்கிய் இருக்கும்படி செய்கிறது.

ஓ என் சேசுவின் ஆராதனைக்குரிய திரு இருதயமே, மனிதர் மீதுள்ள அன்பினால் பற்றியெரியும் திரு இருதயமே, அவர்களை நேசிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே உண்டாக்கப்பட்ட திரு இருதயமே, நீர் வெறுத்துத் தள்ளப்படுவதும், உமது அன்புக்கு மிக மோசமான விதத்தில் பதிலன்பு காட்டப்படுவதும் எப்படி சாத்தியம்? ஓ, நான் எவ்வளவு நிர்ப்பாக்கியன், உம்மை நேசியாத நன்றியற்றவர்களில் நானும் ஒருவனாக இருந்திருக்கிறேன். என் சேசுவே, மிகுந்த அன்புக்குரியவரும், உம்மை நேசிக்கச் செய்வதை விட அதிகமாக வேறு எதையும் செய்ய முடியாதவராக நீர் இருக்கும் அளவுக்கு என்னை நேசித்துள்ளவருமாகிய உம்மை நேசிக்காமல் இருந்த இந்தப் பெரும் பாவத்திற்காக என்னை மன்னியும். இது வரை

நான் செய்து வந்தது போல, உமது அன்பைப் புறக்கணித்ததற்காக, உம்மை நேசிக்க இயலாதபடி நான் தண்டனைத் தீர்ப்பிடப்படத் தகுதியுள்ளவனாக இருக்கிறேன் என்று உணர்கிறேன். ஆனால், வேண்டாம் என் பிரியமுள்ள இரட்சகரே, எனக்கு எந்தத் தண்டனை வேண்டுமானாலும் தாரும், ஆனால் இந்தத் தண்டனையை மட்டும் என் மீது சுமத்தாதிரும். உம்மை நேசிக்கும் வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும். அதன்பின் உமது பிரியப்படி எத்தகைய துன்பத்தையும் எனக்குத் தாரும். ஆயினும், என் ஆண்டவரும் என் தேவனுமாகிய உம்மை நேசிக்கும்படியாக எனக்கு இனிமையான, சுகமான கட்டளையை நீர் தொடர்ந்து தருகிறீர் என்று நான் உணர்வதால், இப்படிப்பட்ட ஒரு தண்டனைக்கு நான் எப்படி பயப்பட முடியும்? **"உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக."**

II

பூமியில் முப்பத்து மூன்று ஆண்டுகள் மட்டும் மனிதர்களோடு இருந்திருப்பது இந்த நேசமுள்ள இரட்சகருக்கு மிகவும் குறுகிய காலமாகத் தோன்றியது. ஆகவே, இடைவிடாமல் எப்போதும் நம்மோடு இருக்கத் தமக்குள்ள ஆசையைக் காட்டும்படி, திவ்விய நற்கருணை ஸ்தாபகத்தில், புதுமைகளில் எல்லாம் மேலான புதுமையை நிகழ்த்த அவர் எண்ணம் கொண்டார். ஆனால் இரட்சணிய வேலை ஏற்கெனவே நிறைவேறி விட்டது, மனிதர்கள் ஏற்கெனவே கடவுளோடு மீண்டும் ஒப்புறவாகி விட்டார்கள். அப்படிய் இருக்க, சேசுநாதர் பூமியின்மீது, இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் எதற்காகத் தங்கிய் இருக்கிறார்?

ஆ, நம்மில் தமது இன்பத்தைக் காண்பதாக அவரே சொல்லி யிருப்பதால், நம்மிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொள்வதை அவரால் தாங்க முடியாது என்பதால்தான் அவர் அங்கே தங்கிய் இருக்கிறார். மேலும், அவர் தம்மை நம்மோடு இணைத்துக் கொண்டு, தமது இருதயத்தையும், நம் இருதயத்தையும் ஒன்றாகச் செய்யும்படியாக, நம் ஆத்துமங்களின் உணவாகவும் ஆகும்படி இந்த

அன்பு அவரைத் தூண்டியது: **"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்" (அரு.6:57).** ஓ அதிசயமே! ஓ கற்பனைக்கெட்டாத தேவசிநேகமே! இது தேவ ஊழியர் ஒரவரால் சொல்லப்பட்டது: திவ்விய நற்கருணையில் எனக்குள்ள விசுவாசத்தை அசைக்க எதனாலாவது முடியும் என்றால், அது அப்பம் எப்படி மாம்சமாக முடியும், அல்லது சேசுநாதர் எப்படி ஒரே சமயத்தில் பல இடங்களில் இருக்க முடியும், எப்படி இவ்வளவு சிறிய இடத்தில் அடைபட்டிருக்க முடியும் என்ற சந்தேகங்களால் அல்ல, ஏனெனில் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று இதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்; ஆனால் மனிதர்களின் உணவாகும் அளவுக்கு அவர்களை இவ்வளவு அதிகமாக நேசிக்க அவரால் எப்படி முடிந்தது என்று என்னிடம் கேட்கப்பட்டால், இது என் புத்திக்கெட்டாத விசுவாசத்தின் பரம இரகசியம் என்றும் சேசுநாதரின் அன்பை நம்மால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது என்றும் மட்டுமே என்னால் பதில் சொல்ல முடியும். ஓ சேசுவின் அன்பே, மனிதர்கள் உம்மை அறிந்து கொள்ளச் செய்யும், மனிதர்கள் உம்மை நேசிக்கச் செய்யும்.

ஆம், என் தேவனே, நீர் என்னால் நேசிக்கப்பட சித்தம் கொள்கிறீர். நானும் உம்மை நேசிப்பேன்; உண்மையில் வேறு யாரையுமன்றி, என்னை இவ்வளவு அதிகமாக நேசித்திருக்கிற உம்மை மட்டுமே நான் நேசிப்பேன். ஓ என் சேசுவின் அன்பே, நீயே என் அன்பாக இருக்கிறாய். ஓ என் சேசுவின் பற்றியெரியும் திரு இருதயமே, என் இருதயத்தையும் பற்றியெரியச் செய்தருளும். எதிர்காலத்தில், ஒரே ஒரு கணம் கூட, உமது அன்பு இல்லாமல் வாழ என்னை அனுமதியாதிரும். அதை விட என்னைக் கொன்று விடும், என்னை அழித்து விடும்; உம்மால் மிக அதிகமாக நேசிக்கப் பட்டவனும், உம்மிடமிருந்து ஏராளமான உபகாரங்களையும் ஒளியையும் பெற்றுக் கொண்டவனுமாகிய நான் மீண்டும் உமது அன்பைப் புறக்கணித்து வாழத் தொடங்கும் பயங்கரமுள்ள நன்றியற்றதனத்தின் காட்சியை உலகம் காண அனுமதியாதிரும். இல்லை என் சேசுவே, இதை அனுமதியாதிரும். நீர் எனக்காக

சிந்தியள திரு இரத்தத்தின் வழியாக, நான் எப்போதும் உம்மை நேசிப்பேன் என்றும், நீர் எப்போதும் என்னை நேசிப்பீர் என்றும் உமக்கும் எனக்கும் இடையிலுள்ள இந்த அன்பு நித்தியத்திற்கும் உடைபடாததாக இருக்கும் என்றும் நான் நம்பிய் இருக்கிறேன். மரியாயே, உத்தம தேவசிநேகத்தின் மாதாவே, சேசுநாதர் நேசிக்கப் படுவதைக் காண மிக அதிகமாக ஆசிப்பவர்களே, உங்கள் திருமகனோடு என்னைச் சேர்த்துக் கட்டுங்கள், அவரோடு என்னை ஒன்றியுங்கள்; ஆயினும் நாங்கள் இனி ஒருபோதும் பிரிக்கப்பட முடியாதபடி என்னை அவரோடு சேர்த்துக் கட்டுங்கள்.

சனி

எந்த விதத்திலும் தணிக்கப்படாத மரியாயின் வேதசாட்சியம் I

"சேசுநாதரின் திருச்சரீரமெங்கும் பரவலாகக் காணப்பட்ட காயங்கள் அனைத்தும் மரியாயின் ஒற்றை இருதயத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன" என்று அர்ச். பொனவெந்தூர் குறிப்பிடுகிறார். நம் ஆசீர்வதிக்கப்பட்ட இராக்கினி, கசைகளால் அடிக்கப்பட்டவரும், முள்முடி சூட்டப்பட்டவரும்,அவமானப் படுத்தப்பட்டவரும், சிலுவையில் அறையப்பட்டவருமான தனது திருமகனின் மீது தன் நேச இருதயத்தில் பொங்கி வழியும் தயவிரக்கத்தின் வழியாக, இவ்வாறு அவரது காயங்களின் கூட்டு உருவமாக இருந்தார்கள். இதன் காரணமாக அதே புனிதர் கல்வாரி மலையில் தனது திருமகனின் மரணத்தின் போது உடனிருக்கும் நிலையில் மாமரியை தியானித்து, பின்வரும் கேள்வியை அவர்களிடம் கேட்கிறார்: "ஓ இராக்கினியே, நீங்கள் எங்கே நின்று கொண்டிருந்தீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள். நீங்கள் சிலுவை அடியில் மட்டும்தான் இருந்தீர்களா? ஆ, அதை விட அதிக அதிகமாக, நீங்கள் சிலுவையின் மீதே இருந்தீர்கள், உங்கள் திருச்சுதனோடு சிலுவையில் அறையப்பட்டிருந்தீர்கள்!" அர்ச். லாரென்ஸின் ரிச்சர்ட் என்பவர் இசையாஸ் தீர்க்கதரிசியால்

பேசப்பட்ட மீட்பரின் வார்த்தைகளை, அதாவது, “நான் திராட்சை ஆலையைத் தனியாகவே மிதித்தேன், புற ஜாதியாருக்குள் ஒருவன் கூட என் உதவிக்கு வரவில்லை" (இசை.63:3) என்ற வார்த்தைகளை தியானித்துச் சொல்வதாவது: “ஆண்டவரே, மனித மீட்பின் அலுவலில் நீர் தனியாகவே துன்பப்பட்டீர் என்பதும், போதுமான அளவில் உம்மீது இரக்கம் காட்டிய ஒரு மனிதனும் கூட இருக்கவில்லை என்பது உண்மையே. ஆயினும் ஒரு பெண் உம்மோடு இருந்தார்கள். அவர்கள் உமது சொந்த அன்னைதான்; நீர் உமது திருச்சரீரத்தில் அனுபவித்ததையெல்லாம் அவர்கள் தன் இருதயத்தில் அனுபவித்தார்கள்."

ஆனால் இதெல்லாமும் கூட மாமரியின் வியாகுலங்களைப் பற்றி மிகக் கொஞ்சமே சொல்கிறது. ஏனெனில், தன் திருமகன் பட்ட வேதனைகள், அவமானங்கள், அடைந்த திருமரணம் ஆகிய அனைத்தையும் அவர்களே அனுபவித்திருந்தால் எவ்வளவு துன்பப் பட்டிருப்பார்களோ, அதை விட அதிகமாக, தன் நேசத்திற்குரிய சேசுவின் துன்பங்களைக் கண்டதால் அவர்கள் அதிகத் துன்பத்தை அனுபவித்தார்கள். **எராஸ்முஸ்,** பொதுவாகப் பெற்றோரைப் பற்றிப் பேசும்போது, “தங்கள் சொந்த வேதனைகளை விட, தங்கள் குழந்தைகள் படும் துன்பங்களைக் காணும்போது அவர்கள் அதிகமாக வாதிக்கப்படுகிறார்கள்" என்று சொல்கிறார். இது எப்போதும் உண்மையல்ல, ஆனால் மாமரியில் இதுவே உண்மை என்பது வெளிப்படை. ஏனெனில் அவர்கள் தன் திருமகனையும், அவரது உயிரையும் தன்னை விடவும், தனது ஓராயிரம் உயிர்களை விடவும் அதிகமாக, மனித புத்திக்கெட்டாத விதத்தில் நேசித்தார்கள் என்பது உறுதி. எனவே, “சேசுநாதரின் திருப்பாடுகள் முழுவதையும் தானே அனுபவித்திருந்தால் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பார்களோ, அதை விடப் பாரதூரமான அளவுக்குத் தனது நேச சேசுவின் வாதைகளைக் கண்ட துயரத்தால் அவர்கள் வேதனைப்பட்டார்கள்"' என்று **முத். அமதேயுஸ்** கூறுகிறார். நமதாண்டவர் தாமே இதே காரியத்தை ஏற்கெனவே சொல்லிய் இருக்கிறார்: **“உங்கள் பொக்கிஷம் எங்கேய் இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (லூக்.12:34).** அப்படிய் இருக்க,

மாமரி அன்பினால் தன்னில் வாழ்வதை விட அதிகமாகத் தன் திருமகனில் வாழ்ந்தார்கள் என்றால், மிகக் கொடூரமான ஒரு மரணம் உ லகத்தில் தனக்குத் தரப்பட்டிருந்தால் அவர்கள் எவ்வளவு துன்புற்றிருப்பார்களோ, அதை விட மிக அதிகமாகத் தனது திருமகனின் துன்பங்களிலும் மரணத்திலும் அவர்கள் கொடிய வேதனைப்பட்டார்கள்.

II

வேதசாட்சிகள் கொடுங்கோலர்களால் தங்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வாதைகளால் துன்புற்றார்கள்; ஆனால் சேசுவின் அன்பு அவர்களுடைய வேதனைகளை இனியதாகவும், மனதிற்கு உகந்ததாகவும் ஆக்கியது. அர்ச். வின்சென்ட் ஒரு சித்திரவதைச் சட்டத்தின்மீது வாதிக்கப்பட்டார், கூரிய இடுக்கிகளால் கிழிக்கப் பட்டார், நெருப்பால் பழுக்கச் சிவந்த இரும்புப் பாளங்களின் மீது படுக்க வைக்கப்பட்டார்; ஆனால் அர்ச். அகுஸ்தீனார் குறிப்பிடுவது போல, “துன்புறுவது ஒருவர் என்ப போலவும், பேசுபவர் மற்றொருவர் என்பது போலவும் தோன்றியது." புனிதர் தமது வாதைகளை சளற்றும் மதிக்காமல் எத்தகைய ஆற்றலோடு அந்தக் கொடுங்கோலனிடம் பேசினார் என்றால், ஒரு வின்சென்ட் துன்புறுவது போலவும், வேறொரு வின்சென்ட் பேசுவது போலவும் தோன்றியது. அவர் அனுபவித்த எல்லாத் துன்பங்களுக்கும் மத்தியில் கடவுள் தமது அன்பின் இனிமையைக் கொண்டு அந்த அளவுக்கு அவரை பலப்படுத்தினார். அர்ச். பொனிபாஸின் உடல் கூர்மையான கொக்கிகளால் கிழிக்கப்பட்டது. கூரிய முனையுள்ள நாணல்கள் அவரது நகங்களுக்கும் தசைக்குமிடையே குத்தப்பட்டன; உருகிய ஈயம் அவரது வாயில் ஊற்றப்பட்டது; இதெல்லாவற்றிற்கும் மத்தியிலும், “ஓ ஆண்டவராகிய சேசுகிறீஸ்துவே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று அவர் கூறியதை மற்றவர்கள் கேட்டார்கள். அர்ச். மாற்கும் அர்ச். மார்செல்லினுஸும் ஒரு கம்பத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டார்கள், அவர்களுடைய பாதங்கள் ஆணிகளால் துளைக்கப்பட்டன. கொடுங்கோலன் அவர்களிடம்: “ஈனப் பிறவிகளே, எந்த நிலைக்கு நீங்கள் தாழ்த்தப்பட்டு விட்டீர்கள் என்று பாருங்கள்; இந்த வாதைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றிக்

கொள்ளுங்கள்"' என்றான். அவர்களோ பதிலுக்கு, "எந்த வேதனைகளை, எந்த வாதைளைப் பற்றி நீ பேசுகிறாய்? இந்தக் கணத்தில் நாங்கள் அனுபவிப்பது போல, இவ்வளவு ஆடம்பரமான விருந்தை நாங்கள் முன் ஒருபோதும் சுவை பார்த்ததில்லை. இதில் சேசுகிறீஸ்துவின் அன்பிற்காக நாங்கள் மகிழ்ச்சியோடு துன்புறுகிறோம்" என்றார்கள். **அர்ச். லாரென்ஸ்** துன்பப்பட்டார். ஒரு வலைக் கம்பிக் கட்டிலின் மீது அவர் உயிருடன் வேக வைக்கப்பட்டபோது, "அவருக்குள் பற்றியெரிந்து கொண்டிருந்த அன்பின் தீச்சுவாலை, அவரது உடலுக்கு வெளியேயிருந்து அவரை வாதித்துக் கொண்டிருந்த நெருப்பை விட எவ்வளவு அதிக வல்லமையுள்ளதாக இருந்தது என்றால், அது அவரது ஆத்துமத்திற்கு ஆறுதல் தந்து, அவரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது" என்று **அர்ச். லியோ** கூறுகிறார். இதன் காரணமாக, அன்பினால் அவர் எவ்வளவு தைரியம் கொண்டார் என்றால், அவர் தம்மை வாதித்துக் கொண்டிருந்தவனை ஏளனம் செய்யத் தொடங்கினார். அவனிடம்: "என் தசையை உண்ண ஆசைப்படுகிறாய் என்றால், ஒரு பகுதி போதுமான அளவுக்கு வெந்து விட்டது; திருப்பிப் போடு, அதன்பின் என்னை உட்கொள்" என்றார். ஆனால் இவ்வளவு அதிகமான சித்திரவதைகளுக்கு மத்தியில், அந்த நீட்டிக்கப்பட்ட மரணத்தில் புனிதர் எப்படி இவ்வாறு அக்களிப்புக் கொண்டிருக்க முடிந்தது? "ஆ! தேவசிநேகத்தின் மதுவால் போதை கொண்டவராக அவர் இருந்ததால், வாதைகளையோ, மரணத்தையோ அவர் உணரவில்லை" என்று அர்ச். அகுஸ்தீனார் இந்தக் கேள்விக்குப் பதில் கூறுகிறார்.

இதன் காரணமாக, பரிசுத்த வேதசாட்சிகள் சேசுநாதரை எவ்வளவு அதிகமாக நேசித்தார்களோ, அவ்வளவு குறைவாக அவர்கள் தங்கள் வாதைகளையும், மரணத்தையும் உணர்ந்தார்கள். சிலுவையில் அறையுண்ட ஒரு சர்வேசுரனின் துன்பங்களின் காட்சி மட்டுமே அவர்களைத் தேற்றப் போதுமாயிருந்தது. ஆனால் நம் வியாகுல அன்னையும் தன் மகன் மீதுள்ள அன்பாலும், அவரது வாதைகளின் காட்சியாலும் தேற்றப்பட்டார்களா? ஆ, இல்லை; துன்புற்றுக் கொண்டிருந்த அந்த அவர்களுடைய திருமகன்தான்

அவர்களுடைய வேதனைகளின் முழுக் காரணமாக இருந்தார். அவர் மீது அவர்கள் கொண்டிருந்த அன்புதான் அவர்களை மிகக் கொடூரமாக வாதித்த ஒரே ஒரு கொலையாளியாக இருந்தது. ஏனெனில் மிக அதிகமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்த தன் மாசற்ற, நேசத்திற்குரிய திருமகனைக் கண்டு பரிதாபப்பட்டுக் கொண்டிருந்ததில்தான் மாமரியின் வேதசாட்சியம் முழுவதும் அடங்கியிருந்தது. இதன் காரணமாக, அவர் மீது அவர்களுக்கு இருந்த அன்பு எவ்வளவு அதிகமாயிருந்ததோ, அவ்வளவுக்கு அவர்களுடைய துயரம் அதிகக் கசப்பானதாகவும், தேற்றப்பட இயலாததாகவும் இருந்தது. **“உன் நெருக்கிடை கடலைப் போல் அபாரமாய் இருக்கிறதே, உன்னைக் குணப்படுத்துபவர் யார்?" (புலம்பல்.2:13).** ஆ, பரலோக இராக்கினியே, தேவசிநேகம் மற்ற வேதசாட்சிகளின் துன்பங்களைத் தணித்தது, அது அவர்களுடைய காயங்களைக் குணப் படுத்தியது; ஆனால் உங்கள் கசப்பான வேதனையைத் தணித்தவர் யார்? உங்கள் மாசற்ற இருதயத்தின் கொடூரமான காயங்களைக் குணமாக்கியவர் யார்? உங்களுக்கு ஆறுதல் தரக்கூடியவராயிருந்த உங்களுடைய ஒரே மகனும் கூட, தமது துன்பங்களால், உங்கள் துன்பங்களுக்கான ஒரே காரணமாக இருந்தாரே, நீங்கள் அவர் மீது கொண்டிருந்த அன்பே உங்கள் வேதசாட்சியத்தின் முழுமையான உட்பொருளாக இருந்ததே! அப்படிய் இருக்க, “உங்களைக் குணப்படுத்துபவர் யார்?"

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

“அவர் ஊமையாயிருந்த ஒருவனைப் பிடித்திருந்த பேயைத் துரத்தினார்."

(ஞாயிறு சுவிசேஷம்)

I

ஒரு மனிதன் பாவத்தில் விழுமுன், அவன் தான் செய்கிற தீமையையும், கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்வதால் தன் மீதே தான் இழுத்து விட்டுக் கொள்கிற அழிவையும் அவன்

காணாதிருக்குமாறு, அவனைக் குருடாக்கி விடப் பசாசு உழைக்கிறது. பவத்திற்குப் பிறகு, வெட்கத்தின் காரணமாக, பாவசங்கீர்த்தனத்தில் அவன் தன் குற்றத்தை மறைக்கும்படி அது அவனை ஊமையாக்கி விட முயல்கிறது. ஓ, சபிக்கப்பட்ட வெட்கமே! எவ்வளவு அதிகமான பரிதாபத்திற்குரிய பாவிகளை நீ நரகத்திற்கு அனுப்புகிறாய்! அவர்கள் இரட்சணியத்தை விடத் தங்கள் வெட்கத்தைப் பற்றி அதிகமாக நினைக்கிறார்கள்!

"ஆண்டவரே, என் உதடுகளைச் சுற்றி ஒரு கதவை அமைத்தருளும்" (சங்.140:3). நம் வாய் புறணிக்கும், தேவதூஷணங்களுக்கும், முறையற்ற எல்லா வார்த்தைகளுக்கும் எதிராக எப்போதும் மூடிய் இருக்கும்படியாகவும், நாம் கட்டிக் கொண்ட பாவங்களை சங்கீர்த்தனம் செய்வதற்காக அது திறக்கப் படும்படியாகவும் அதற்கு ஒரு கதவை அமைப்பது அவசியம் என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார். இந்தப் பரிசுத்த வேதபாரகர் தொடர்ந்து: "இவ்வாறு அது அழிவின் கதவாக இல்லாமல், கட்டுப்பாட்டின் கதவாக இருக்கும்" என்கிறார். கடவுளையோ, அல்லது நம் அயலானையோ காயப்படுத்தக் கூடிய வார்த்தைகளைப் பேச நாம் தூண்டப்படும்போது மவுனமாயிருப்பது ஒரு புண்ணியச் செயலாகும்; ஆனால் பாவங்களை சங்கீர்த்தனம் செய்வதில் மவுனமாயிருப்பது ஆத்துமத்தின் அழிவாகும். நாம் கடவுளை நோகச் செய்த பிறகு, நம் வாயை மூடி வைக்கவும், நம் குற்றத்தைப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தாமல் தடுக்கவும் பசாசு கடுமையாக உழைக்கிறது. அர்ச். அந்தோனினுஸ் ஒரு நிகழ்ச்சியை விவரிக்கிறார். ஒரு பரிசுத்த வனவாசி ஒரு முறை, பாவசங்கீர்த்தனம் செய்ய விரும்பிய சிலருக்கு அருகில் பசாசு நின்று கொண்டிருந்ததைக் கண்டார். அவர் பசாசிடம் அவன் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று கேட்டார். எதிரி அவருக்கு மறுமொழியாக: "பாவசங்கீர்த்தனத்திற்குச் செல்லும் இவர்களிடமிருந்து முன்பு நான் அகற்றிய ஒரு காரியத்தை இப்போது அவர்களில் நான் புதுப்பிக்கிறேன். அவர்கள் பாவம் செய்து கொண்டிருந்த போது, அது பற்றி வெட்கப்படுவதை நான் அவர்களிடமிருந்து அகற்றினேன். இப்போது அவர்கள்

பாவசங்கீர்த்தனம் செய்வது பற்றி அச்சம் கொள்ளும்படி அதை நான் அவர்களில் மீண்டும் புதுப்பிக்கிறேன்" என்றது. **"என் மடமையால் என் புண்கள் சீழ் வைத்தும் அழுகியும் இருக்கின்றன" (சங்.37:6).** சீழ்வைத்த, அழுகிய புண்கள் உய் இருக்கு ஆபத்தானவை. பாவசங்கீர்த்தனத்தில் மறைக்கப்பட்ட பாவங்கள் ஆத்துமத்தைக் கொல்லக் கூடிய ஞானப் புண்களாக இருக்கின்றன. இவை சீழ் வைத்த, அழுகிய புண்களாக ஆகின்றன.

நாம் பாவத்தைத் தவிர்க்கும்படியாக, கடவுள் அதை வெட்கத்துக்குரியதாக ஆக்கினார், தங்கள் பாவங்களைப் பற்றி பாவசங்கீர்த்தனத்தில் தங்களையே குற்றஞ்சாட்டுவோர் அனைவருக்கும் மன்னிப்பை வாக்களிப்பதன் மூலம் அவர் பாவசங்கீர்த்தனம் செய்ய நமக்கு நம்பிக்கை தருகிறார். ஆனால் இதற்கு நேர்மாறானதைப் பசாசு செய்கிறான்; பிற்பாடு மன்னிப்புப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை நமக்குத் தருவதன் மூலம் அவன் பாவம் செய்ய நம்பிக்கை தருகிறான்; ஆனால் பாவம் செய்யப்பட்ட பிறகு, அதை நாம் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லாமல் தடுப்பதற்காக அவன் நம்மில் வெட்க உணர்வைத் தூண்டுகிறான்.

பாவம் செய்திருக்கிற அனைவருக்கும் நான் சொல்கிறேன்: இவ்வளவு பெரியவரும், இவ்வளவு நல்லவருமான ஒரு சர்வேசுரனை நோகச் செய்ததற்காகத்தான் நீங்கள் வெட்கப்பட வேண்டும். ஆனால் நீங்கள் கட்டிக்கொண்ட பாவங்களை சங்கீர்த்தனம் செய்வதற்கு நீங்கள் வெட்கப்படக் காரணமேயில்லை. சேசுகிறீஸ்து நாதரின் திருப்பாதங்களின்மீது கண்ணீர் சிந்தி, தான் ஒரு பாவி என்பதைப் பலருக்கு மத்தியில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட **அர்ச். மரிய மதலேனம்மாளுக்கு** அது அவமானத்துக்குரிய காரியமாக இருந்ததா? தனது பாவசங்கீர்த்தனத்தின் மூலம் அவள் ஓர் அர்ச்சியசிஷ்டவள் ஆனாள். தம் பாவங்களை சங்கீர்த்தனம் செய்தது மட்டுமின்றி, உலகம் முழுவதும் அவற்றை அறிந்து கொள்ளும் விதமாக அவற்றைப் பற்றி ஒரு புத்தகமே எழுதிய **அர்ச். அகுஸ்தினாருக்கு** அது ஓர் அவமானமாக இருந்ததா? மிகப் பல ஆண்டுகளாக ஒரு துர்மாதிரிகையான வாழ்வு நடத்தியபின் பாவசங்கீர்த்தனம் செய்வது

அர்ச். எகிப்து மேரிக்கு வெட்கத்தைத் தந்ததா? தங்கள் பாவசங்கீர்த்தனத்தின் மூலம் இவர்கள் புனிதர்களாக ஆகி இருக்கிறார்கள், இன்று திருச்சபையின் பீடத்தின் மகிமைக்கு இவர்கள் உயர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

II

ஒரு உலக நீதிமன்றத்திற்கு முன் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் மனிதன் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகிறான்; ஆனால் சேசு கிறீஸ்துவின் நீதிமன்றத்தில் தங்கள் பாவங்களை அறிக்கை யிடுபவர்கள் மன்னிப்புப் பெறுவதோடு, நித்திய மகிமையின் முடியையும் பெறுகிறார்கள். "பாவசங்கீர்த்தனத்திற்குப் பிறகு, மனந்திரும்பியவர்களுக்கு ஒரு கிரீடம் வழங்கப்படுகிறது" என்கிறார் **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்**. ஒரு புண்ணால் பாதிக்கப் பட்டிருப்பவன், தான் குணமடைய விரும்பினால், அதை ஒரு மருத்துவரிடம் காட்டவேண்டும். இல்லாவிடில் அது சீழ் வைத்து, மரணத்திற்குக் காரணமாகி விடும். "மருத்துவன் தான் அறியாத ஒரு தீமையைக் குணப்படுத்த முடியாது" என்று திரிதெந்தீன் பொதுச் சங்கம் கூறுகிறது. அப்படிய் இருக்க, உங்கள் ஆத்துமங்கள் பாவத்தால் புண்பட்டுப் போயிருந்தால், அதைப் பாவசங்கீர்த்தனம் செய்ய வெட்கப்படாதீர்கள்; இல்லாவிடில் நீங்கள் இழக்கப்படுவீர்கள். **"உன் ஆத்துமத்திற்காக உண்மையைச் சொல்ல வெட்கப்படாதே" (சர்வப்.4:24).** ஆனால் இன்னின்ன பாவத்தை சங்கீர்த்தனம் செய்ய நான் மிகவும் வெட்கப்படுகிறேன் என்று நீ சொல்கிறாய். நீ இரட்சிக்கப்பட விரும்பினால், இந்த வெட்கத்தின்மீது நீ வெற்றி கொள்ள வேண்டும். **"ஏனெனில் பாவத்தை விளைவிக்கிற செட்கம் உண்டு, மகிமையையும், வரப்பிரசாதத்தையும் கொண்டு வரும் வெட்கமும் உண்டு" (சர்வப்.4:25).** இந்த வார்த்தைகளின்படி வெட்கத்தில் இரு வகைகள் இருக்கின்றன: ஒன்று ஆன்மாக்களைப் பாவத்திற்கு இட்டுச் செல்கிறது, அது, பாவசங்கீர்த்தனத்தில் அவர்கள் தங்கள் பாவங்களை மறைக்கும்படி செய்யும் வெட்கமாகும்; மற்றொன்று தன் பாவங்களை சங்கீர்த்தனம் செய்வதில் ஒரு கிறீஸ்தவன் உணரும் கலக்கம் ஆகும். இந்தக் கலக்கம் அவனுக்கு

இவ்வாழ்வில் கடவுளின் வரப்பிரசாதத்தையும், மறுவுலகில் மோட்ச மகிமையையும் அவனுக்குப் பெற்றுத் தருகிறது.

ஓநாயால் தாக்கப்படும்போது, தன் கதறல்கள் மூலம் ஆடு உதவியைத் தேடாதபடி ஓநாய் அதன் கழுத்தைக் கவ்விக் கொள்கிறது என்று அர்ச். அகுஸ்தீனார் சொல்கிறார். இவ்வாறு, அது பாதுகாப்பாக அதைத் தூக்கிச் சென்று, அதன்பின் கடித்து விழுங்குகிறது. பசாசும் சேசுகிறீஸ்துநாதரின் ஆடுகளிடம் இதே முறையில்தான் செயல்படுகிறது. பாவத்திற்குத் தங்களைக் கையளிக்க அவர்களைத் தூண்டியபின், அவர்கள் தங்கள் குற்றத்தை சங்கீர்த்தனம் செய்யாதபடி அது அவர்களுடைய குரல்வளையைக் கவ்விப் பிடித்துக் கொள்கிறது. இவ்வாறு அவன் அவர்களைப் பாதுகாப்பாக நரகத்திற்கு இழுத்துச் சென்று விடுகிறான். சாவான பாவம் செய்து விட்டவர்களுக்குப் பாவசங்கீர்த்தனத்தைத் தவிர இரட்சணியமடைய வேறு வழியில்லை. ஆனால் பாவசங்கீர்த்தனம் செய்தாலும், அதில் தன் பாவங்களை மறைப்பவனும், பச்சாத்தாபமாகிய நீதிமன்றத்தைக் கடவுளை நோகச் செய்யவும், தன்னை இருமடங்கு சாத்தானின் அடிமையாக ஆக்கிக் கொள்ளவும் பயன்படுத்துபவனுமாகிய மனிதனுக்கு என்ன இரட்சணிய நம்பிக்கை இருக்க முடியும்? மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தை உட்கொள்வதற்குப் பதிலாக, விஷத்தை உட்கொள்ளும் நோயாளி குணமடைவான் என்று நாம் எப்படி நம்ப முடியும்? ஓ சர்வேசுரா! பாவசங்கீர்த்தனத்தில் தங்கள் பாவங்களை மறைப்பவர்களுக்கு, அந்தத் தேவத்திரவிய அனுமானம் அவர்களது பாவத்தின் கொடிய விஷத்தோடு, தேவத் துரோகமாகிய தீமையின் குற்றத்தையும் சேர்க்கும் கருவியாக அன்றி வேறு எப்படி இருக்க முடியும்!

திங்கள்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் -12

I

தம்மைப் பிடிக்க வரும் யூதர்கள் அண்மையில் இருப்பதை அறிந்திருந்த ஆண்டவர், ஜெபத்தினின்று எழுந்து அவர்களைச் சந்திக்கச் சென்றார்; இவ்வாறு, எந்தத் தயக்கமுமின்றி, அவர்கள் தம்மைக் கைது செய்யவும், தம்மைக் கட்டவும் அவர் அனுமதிக்கிறார். **"அவர்கள் சேசுவைப் பிடித்துக் கட்டினார்கள்" (அரு.17:12).** ஓ அதிசயமே! ஒரு கடவுள் தமது சொந்த சிருஷ்டிகளால் ஒரு குற்றவாளியைப் போலக் கட்டப்படுகிறார்! என் ஆன்மாவே, அவர்களில் சிலர் அவரது கரங்களை எப்படிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்; மற்றவர்கள் அவருக்குக் கைவிலங்குகளைப் பூட்டுகிறார்கள்; வேறு சிலர் அவரை அடிக்கிறார்கள் மாசற்ற செம்மறிப் புருவையானவரோ, அவர்கள் தம்மைக் கட்டவும், தங்கள் விருப்பம் போலத் தம்மை அடிக்கவும் அனுமதிக்கிறார், எதிர்த்து ஒரு வார்த்தையும் கூறவில்லை. **"தம் சொந்த சித்தத்தின்படியே அவர் தம்மைக் கையளித்தார், கொல்லப்பட இழுத்துச் செல்லப்படும் ஆட்டைப் போல அவர் வாய் திறக்கவில்லை" (இசை.53:7).** அவர் பேசவுமில்லை, முறையிடவுமில்லை. ஏனெனில் நமக்காக மரிக்கும்படி அவர் ஏற்கெனவே தம்மைக் கையளித்து விட்டார்; ஆகவேதான் செம்மறிப் புருவையானவர் வாய் திறவாமல் தாம் கட்டப்பட்டு மரணத்திற்கு இட்டுச் செல்லப்பட தம்மையை அனுமதிக்கிறார்.

சேசுநாதர் கட்டுண்டவராக ஜெருசலேமுக்குள் நுழைகிறார். தங்கள் படுக்கைகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள், ஒரு கூட்டம் தங்களைக் கடந்து செல்லும் இரைச்சலைக் கேட்டு விழித்தெழுந்து, அவர்கள் யாரைக் கட்டி இழுத்துச் செல்கிறார்கள் என்று விசாரிக்கிறார்கள். "வஞ்சகனும், கெடுப்பவனுமாகிய நாசரேத்தூர் சேசுவை" என்று அவர்களுக்குப் பதில் சொல்லப்படுகிறது. அவர்கள் கைப்பாஸின் முன் அவரைக் கொண்டு வருகிறார்கள். அவரைக் கண்டு அவன் மகிழ்ச்சி கொள்கிறான், அவருடைய சீடர்களைப் பற்றியும், அவரது சத்தியத்தைப் பற்றியும் அவன் அவரை விசாரிக்கிறான். சேசுநாதர் தாம் வெளிப்படையாகப் பேசியதாகப் பதில் சொல்கிறார்; தம்மைச் சுற்றி நிற்கும் யூதர்களே தாம் என்ன பேசினார் என்பதற்கு சாட்சியாக இருக்கிறார்கள் என்கிறார்: "நான்

என்ன பேசினேன் என்று இவர்கள் அறிவார்கள்." ஆனால் அவர் இப்படிப் பதில் சொன்னதும், நீதிமன்ற ஊழியர்களில் ஒருவன் அவரது திருமுகத்தில் அடித்து, "பெரிய குருவுக்கு இவ்விதமோ பதில் சொல்லுகிறாய்?" என்கிறான். ஆனால், ஓ சர்வேசுரா, இவ்வளவு தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள ஒரு பதில் இவ்வளவு பெரிய அவமானத்திற்குத் தகுதி பெற்றது எப்படி? ஆ, என் சேசுவே, உமது பரலோகப் பிதாவுக்கு நான் தந்திருக்கிற அவமானங்களுக்குரிய அபராதத்தைச் செலுத்துவதற்காக இவையெல்லாம் நீர் அனுபவிக்கிறீர்.

II

அடுத்ததாக, அவர் மெய்யாகவே தேவ சுதன்தானா என்று கடவுளின் பெயரால் கூறும்படி பெரிய குரு கேட்கிறான். சேசு ஆம், தாம் அவர்தான் என்று பதிலளிக்கிறார். கைப்பாஸ் இதைக் கேட்டதும், முகங்குப்புற விழுந்து தனக்கு முன் நிற்கும் தன் சர்வேசுரனை ஆராதிப்பதற்குப் பதிலாகத் தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு, மற்ற குருக்களை நோக்கித் திரும்பி: **"நமக்கு இன்னும் சாட்சிகள் வேண்டியதென்ன? இதோ, தேவதூஷணம் இப்பொழுது கேட்டீர்களே, உங்களுக்கு என்ன தோன்றுகிறது?"** என்று கேட்கிறான். அவர்கள் ஒரே குரலாக: **"இவன் சாவுக்குப் பாத்திரவானாய் இருக்கிறான்"** என்றார்கள். அதன்பின் சுவிசேஷகர்கள் விவரிப்பது போல, அவர்கள் அனைவரும் அவரது முகத்தில் துப்பவும், அவரைத் துர்ப்பிரயோகம் செய்யவும், தங்கள் கரங்களால் கன்னத்தில் அறையவும், தங்கள் முஷ்டிகளல் அவரை அடிக்கவும் தொடங்கினார்கள். அதன்பின் அவரது முகத்தில் ஒரு துணியைக் கட்டி, அவரைக் கேலி பரிகாசம் செய்யும் விதமாக, **"கிறீஸ்துவே, உன்னை அடித்தவன் யாரென்று எங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்"** என்றார்கள். அர்ச். மத்தேயு இப்படி எழுதுகிறார் (26:68). **"அப்போது சிலர் அவர் மேல் துப்பவும், அவர் முகத்தை மூடி, அவரைக் குட்டவும், தீர்க்கதரிசனம் சொல் என்று அவரிடத்தில் சொல்லவும் தொடங்கினார்கள். பணிவிடைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்"** என்று அர்ச். மாற்கு

எழுதுகிறார் (மாற்கு.14:65). ஓ என் சேசுவே, இந்த இரவில் நீர்தாமே ஒரு வெறி பிடித்த கூட்டத்தின் பரிகாசப்பொருளாக ஆகியிருப்பதைப் பாரும். தங்கள் மீதுள்ள அன்பிற்காக நீர் இத்தகைய அவமானத்திற்கு உட்படுவதை மனிதர்கள் கண்டும் உம்மை நேசிக்காமல் இருப்பது எப்படி? ஆண்டவரே, எனக்காக நீர் இவ்வளவு அதிகமாகத் துன்பப் பட்டிருக்க, மிக அநேகப் பாவங்களால் உம்மை நிந்தித்துப் பகைக்கும் அளவுக்குச் செல்ல என்னால் எப்படி முடிந்தது? என் நேசரே, என்னை மன்னியும், ஏனெனில் இனி நான் உம்மை வேதனைப்படுத்த மாட்டேன். என் முதன்மையான நன்மைத்தனமே, நான் உம்மை நேசிக்கிறேன், மற்ற எல்லாத் தீமைகளுக்கும் மேலாக, உம்மை நிந்தித்துப் பகைத்தது பற்றி நான் மனஸ்தாபப்படுகிறேன். மரியாயே, என் மாதாவே, என்னை மன்னிக்கும்படி மோசமாக நடத்தப்பட்ட உமது திருக்குமாரனிடம் மன்றாடும்.

செவ்வாய்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 13

I

மறுநாள் பொழுது விடிந்தவுடன், பிலாத்து சேசுவுக்கு மரணத் தீர்வையிடும்படியாக, அவர்கள் அவரை அவனிடம் கூட்டிச் சென்றார்ள். ஆனால் சேசு மாசற்றவர் என்று பிலாத்து அறிந்திருந்தான். எனவே, அவருக்குத் தண்டனைத் தீர்ப்பிடுதற்கான எந்தக் காரணத்தையும் தன்னால் காண முடியவில்லை என்று அவன் யூதர்களிடம் சொல்கிறான். ஆயினும் அவருடைய மரணத்தை வெறியோடு தேடுவதில் அவர் பிடிவாதமாயிருப்பதை அவன் கண்டு, அவரை ஏரோதின் அரசவைக்கு அனுப்புகிறான். ஏரோது, தனக்கு முன்பாக சேசுவைக் கண்டதும், ஆண்டவரின் பெரிய புதுமைகளில் ஏதாவது ஒன்றைக் காண விரும்புகிறான். ஏனெனில் அவற்றைப் பற்றி அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தான். ஆண்டவர் அந்தத் தகாத் துணிவுள்ள மனிதனுடைய

கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயை கூரவில்லை. அந்தோ, கடவுள் இனி பேசுவதை நிறுத்தி விட்ட ஒரு நிர்ப்பாக்கியமுள்ள ஆத்துமம்! ஓ என் இரட்சகரே, உம்முடைய மிக அநேக அழைத்தல்களுக்கு நான் செவிசாய்க்காததால், என்னுடைய நிலையும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும்; இனி நீர் என்னோடு பேசாதிருக்கவும், என்னைத் தனியே விட்டு விடவும் நான் தகுதியுள்ளவனாக இருக்கிறேன்; ஆனால், இல்லை, என் சேசுவே, நீர் இன்னும் என்னைக் கைவிட்டு விடவில்லை. ஆகவே, என்னிடம் பேசும்: **"ஆண்டவரே பேசும், உமது அடியான் கேட்கிறான்."** ' நீர் என்னிடமிருந்து எதை ஆசிக்கிறீர் என்று எனக்குச் சொல்லும், ஏனெனில் உம்மைப் பிரியப்படுத்துவதற்காக நான் அவை எல்லாவற்றையும் செய்வேன்.

சேசுநாதர் தனக்கு பதில் எதுவும் தரவில்லை என்று ஏரோது கண்டு, தன் அரசவையினரோடு அவரை நிந்தித்துப் பரிகாசம் செய்தான். இன்னும் பெரிய அளவில் அவரை அவமானப்படுத்தும் படியாக, அவன் அவருக்கு வெண்ணங்கி ஒன்றை உடுத்தி, அவரைப் பைத்தியக்காரனைப் போலப் பரிகாசம் பண்ணினான். அப்படியே அவரை மீண்டும் பிலாத்துவிடம் அனுப்பவும் செய்தான்: **"ஏரோது தன் ராணுவத்தோடு கூட அவரை நிந்தித்து, அவருக்கு ஒரு வெள்ளை வஸ்திரத்தை உடுத்திப் பரிகாசம் பண்ணி, அவரைத் திரும்பப் பிலாத்துவிடத்தில் அனுப்பினான்" (லூக்.23:11).** நகைக்கப் படுபவராக சேசுவை ஆக்குகிற அந்த உடை உடுத்தப்பட்டவராக, சேசுநாதர் ஜெருசலேம் வீதிகளில் இழுத்துச் செல்லப்படுவதைக் காணுங்கள். ஓ என் நிந்திக்கப்பட்ட இரட்சகரே, ஒரு பைத்தியக் காரனைப் போல நீர் நடத்தப்பட்ட இந்தக் கூடுதல் அவமானம் இன்னும் உமக்குக் குறைவாயிருந்ததே! ஆக, தேவ ஞானம் உலகத்தால் இவ்வாறு நடத்தப்படுகிறது என்றால், உலகம் என்ன நினைக்கிறது என்பதைப் பற்றி எந்தக் கவலையுமின்றி, சிலுவையில் அறையுண்ட சேசுவை அறியவும், துன்பங்களையும், நிந்தையையும் நேசிக்கவும் மட்டுமே விரும்பி, அப்போஸ்தலரோடு: **"நான் சேசுகிறீஸ்து நாதரை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறிந்தவனாய் இருக்க வேண்டுமென்று**

எண்ணவில்லை'' (1கொரி 2:2) என்று சொல்லும் மனிதன் பாக்கியவான்!

பாஸ்காத் திருநாளன்று ஒரு குற்றவாளியை விடுவிக்கும்படி உரோமை ஆளுனனிடம் கேட்க யூதர்கள் உரிமை கொண்டிருந்தார்கள். ஆகவே பிலாத்து மக்களிடம், சேசு அல்லது பரபாஸ், இருவரில் அவர்கள் யார் விடுதலையாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று கேட்டான்: **"உங்களுக்கு எவனை நான் விடுதலையாக்க விரும்புகிறீர்கள், பரபாஸையோ, கிறீஸ்து என்னப்படுகிற சேசுவையோ?'' (மத்.27:17).** பர்னபாஸ் கொடியவன், கொலைகாரன், ஒரு திருடன், அனைவராலும் வெறுக்கப்பட்டவன். சேசுவே மாசற்றவராக இருந்தார். ஆனால் பரபாஸை விடுதலையாக்க வேண்டுமென்றும் சேசு சாக வேண்டுமென்றும் மக்கள் கூட்டம் உரக்கக் கூச்சலிட்டது. ஆ என் சேசுவே, ஏதாவது ஒரு சொந்த திருப்திக்காக நான் வேண்டுமென்றே உம்மை நோகச் செய்த ஒவ்வொரு முறையும், உமக்கு முன்பாக அந்த என்னுடைய நீச இன்பத்தைத் தேர்ந்துகொண்டதிலும், நானும் இந்த வெறிபிடித்த கூட்டத்தைப் போலவே நடந்து கொண்டேன். அந்த இன்பத்தை இழந்து விடாதபடி, அளவற்ற நன்மைத்தனமாகிய உம்மை இழப்பதில் நான் திருப்தியடைந்தேன். ஆனால் இப்போது, மற்ற ஒவ்வொரு நன்மைக்கும் மேலாக நான் உம்மை நேசிக்கிறேன், என் உயிரையும் விட அதிகமாக உம்மை நேசிக்கிறேன். ஓ இரக்கமுள்ள தேவனே, என்மீது தயவாயிரும். மரியாயே, என் தாயாரே, எனக்காகப் பரிந்துபேசுபவர்களாக இருங்கள்.

புதன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 14

I

"அப்பொழுது பிலாத்து சேசுநாதரைப் பிடித்துச் சாட்டைகளால் அடிப்பித்தான்'' (அரு.19:1). ஓ நீதியற்ற நடுவனே, நீதான் அவர் மாசற்றவர் என்று அறிக்கையிட்டாய், அதன் பின் இவ்வளவு

கொடூரமானதும், இவ்வளவு அவமானமுள்ளதுமான தண்டனையை அவருக்குத் தருகிறாய்! என் ஆன்மாவே, இந்த அநியாயமான கட்டளைக்குப் பிறகு, வாதிப்பவர்கள் தேவ செம்மறிப்புருவையை எப்படிப் பாய்ந்து பிடிக்கிறார்கள் என்று பார்; அவர்கள் அவரை ப்ரேட்டோரியத்திற்கு இழுத்துச் சென்று, கயிறுகளால் அவரைத் தூணோடு சேர்த்துக் கட்டுகிறார்கள். ஓ அந்தத் தூணோடு என் இனிய மீட்பரின் திருக்கரங்களைக் கட்டிய ஆசீர்வதிக்கப்பட்ட கயிறுகளே, அதே விதமாக, என்னுடைய நீச இருதயத்தையும் அவருடைய தெய்வீக இருதயத்தோடு சேர்த்துக் கட்டுங்கள், இவ்வாறு, இந்நாள் முதல், அவர் விரும்பாத எதையும் நான் தேடவும் மாட்டேன், அவற்றின் மீது ஆசை கொள்ளவும் மாட்டேன்.

அவர்கள் கசைகளைக் கைகளில் எடுப்பதைப் பார். சமிக்ஞை தரப்பட்டதும், அவர்கள் திருச்சரீரத்தை அடிக்கத் தொடங்குகிறார்கள். இதனால் திருச்சரீரம் முதலில் ஈய நீல நிறத்தைப் பெறுகிறது. அதன்பின் திருச்சரீரத்தின் ஒவ்வொரு துளையிலிருந்தும் வெளியேறுகிற திரு இரத்தத்தால் அது முழுவதுமாக மூடப்படுகிறது. அந்தோ, இப்போது கசைகளும், வாதிப்பவர்களும் இரத்தத்தில் சிவந்து போய் இருக்கிறார்கள்; தரையும் இரத்தத்தால் மூடப் பட்டிருக்கிறது. ஆனால், என் தேவனே, அடிகளின் கொடூரத்தால், இரத்தம் மட்டுமல்ல, சேசுகிறீஸ்து நாதரின் மாம்சத்தின் சிறு துண்டுகளும் கூட அந்தரத்தில் பறந்து தரையில் விழுகின்றன. அந்த தெய்வீக சரீரம் ஏற்கெனவே காயங்களின் ஒரு பெரிய தொகுதியாக மாறிய் இருக்கிறது. இருந்தும் அந்தக் காட்டுமிராண்டிகள் தொடர்ந்து அடித்துக் கொண்டே ய் இருக்கிறார்கள், வேதனையோடு வேதனையை சேர்த்துக் கொண்டே செல்கிறார்கள். இதெல்லாம் நடந்து கொண்டிருக்கும்போது, சேசு என்ன செய்கிறார்? அவர் பேசவில்லை, அவர் முறையிடவில்லை, மாறாக, நமக்கு எதிராகக் கோபம் கொண்டிருக்கிற தேவ நீதியை சாந்தப் படுத்துவதற்காக அந்தப் பெரும் சித்திரவதையை அவர் பொறுமையாகத் தாங்கிக் கொள்கிறார். **“தன் மயிரைக் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சப்தமிடாத ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாமலிருந்தார்'' (இசை.53:7; அப்.நட.8:32).** விரைந்து போ, என்

ஆன்மாவே, போய் அந்தத் தேவ இரத்தத்தில் உன்னையே கழுவு. என் அன்புக்குரிய இரட்சகரே, நீர் எனக்காக முழுவதும் துண்டுகளாகக் கிழிக்கப்பட்டிருப்பதை நான் காண்கிறேன்; ஆகவே, நீர் என்னை நேசிக்கிறீர், வெகுவாக நேசிக்கிறீர் என்பதில் நான் இனியும் சந்தேகம் கொள்ள முடியாது. உம்முடைய ஒவ்வொரு காயமும் உமது அன்பின் ஒரு நிச்சயமான அடையாளமாக இருக்கிறது. அது மிதமிஞ்சிய காரணத்தோடு என் அன்பைக் கேட்கிறது. என் சேசுவே, நீர் தங்குதடையின்றி எனக்கு உம் திரு இரத்தத்தைத் தருகிறீர். நானும் தங்குதடையின்றி என் முழு இருதயத்தையும் உமக்குத் தருவதே நீதியாக இருக்கிறது. ஆகவே, என் இருதயத்தைத் தேவரீர் ஏற்றுக்கொண்டு, அதை எப்போதும் உமக்குப் பிரமாணிக்கமுள்ளதாக மாற்றும்.

II

ஓ என் சர்வேசுரா, சேசுக்கிறீஸ்துநாதர் என் மீதுள்ள அன்பிற்காக ஒரே ஒரு அடிக்கு மேலாக வேறு எந்தத் துன்பத்தையும் அனுபவிக்க வில்லை என்றாலும், அப்போதும் கூட, நான் அவர் மீதுள்ள அன்பினால் பற்றியெரிந்தபடி, "ஒரு சர்வேசுரன் எனக்காக அடித்து நொறுக்கப்பட சித்தமாய் இருக்கிறார்!" என்று வியந்தபடி சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால், அது அப்படியல்ல: அவர் ஒரே ஒரு அடியோடு திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை. மாறாக, என் பாவங்களுக்குரிய அபராதத்தைச் செலுத்துமாறு, தமது திருச்சரீரம் முழுவதும் சிறு சிறு துண்டுகளாகத் தெறித்து விழும் அளவுக்கு அவர் அடித்து நொறுக்கப்பட்டார். இதைப்பற்றி இசையாஸ் தீர்க்கதரிசி, **"நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார்" (இசை.53:5).** மேலும் ஒரு குஷ்டரோகியைப் போலத் தோன்றும் அளவுக்கு அவர் தலை முதல் பாதம் வரை காயங்களால் மூடப்பட்டார். **"நாம் அவரைக் குஷ்டரோகியாக.... எண்ணினோம்" (இசை.53:4).** ஆகவே, என் ஆத்துமமே, சேசுநாதர் கசையால் அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அவர் உன்னைப் பற்றி நினைத்து, நரகத்தின் நித்திய வாதைகளிலிருந்து உன்னை விடுவிக்கும்படியாக, இந்தத் தமது மிகக் கசப்பான துன்பங்களைப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு

ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்தார். ஓ அன்பின் தேவனே, கடந்த காலத்தில் உம்மை நேசிக்காமல், மிக அதிகமான ஆண்டுகளைச் செலவிட என்னால் எப்படி முடிந்தது? சேசுவின் திருக்காயங்களே, இவ்வளவு அதிகமாக என்னை நேசித்திருக்கிற கடவுளின் மீதுள்ள அன்பைக் கொண்டு என்னைக் காயப்படுத்துங்கள். மரியாயே, வரப்பிரசாதங்களின் மாதாவே, இந்த அன்பை எனக்காகப் பெற்றுத் தாருங்கள்!

வியாழன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 15

I

சேவகர்கள் சேசுவைக் கசையால் அடித்து முடித்த பிறகு, அவர்கள் பிரெட்டோரியத்தில் ஒன்று கூடி, அவரைக் கேலி பரிகாசம் செய்யும்படியாகவும், அவரை ஒரு பரிகார அரசராக ஆக்கும்படியாகவும் அவர்கள் அவருடைய சொந்த ஆடைகளை உரிந்து விட்டு, அரச இரத்தாம்பரத்தைக் குறிக்கும் விதமாக, ஒரு பழைய கந்தலான சிவப்பு நிற மேற்போர்வையை அவருக்கு அணிவித்தார்கள்; செங்கோலாக அவரது கரத்தில் ஒரு மூங்கில் தடியைக் கொடுத்தார்கள். மேலும் அரச முடியாக, முட்களின் திரள் ஒன்றை அவரது திருச்சிரசுக்கு சரியாகப் பொருந்துமாறு ஒரு தலைக் கவசத்தைப் போலச் செய்து அவருக்குச் சூட்டினார்கள். **"அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி, ஓர் சிவப்புச் சால்வையை அவர்மேல் போர்த்தினார்கள். முள்ளுகளால் ஓர் முடியையும் பின்னி, அவருடைய சிரசின்மேல் வைத்து, ஓர் மூங்கில் தடியையும் அவருடைய வலது கையில் கொடுத்தார்கள்" (மத்.27:28,29).** தங்கள் கைகளின் பலத்தால் மட்டும் முட்களை தெய்வீக சிரசுக்குள் ஆழமாக ஊடுருவச் செய்ய அவர்களால் முடியாதபோது, அதே மூங்கில் தடியைக் கொண்டு தங்கள் பலம் கொண்ட மட்டும் அந்தக் காட்டுமிராண்டித்தனமான கிரீடத்தின்மீது அடித்தார்கள்: **"அவர்மேல் துப்பி, அந்த மூங்கில் தடியையும் வாங்கி, அவரைச் சிரசில்**

அடித்தார்கள்'' (மத்.27:30). ஓ நன்றியற்ற முட்களே, உங்கள் சிருஷ்டிகரை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்? ஆனால் அவை என்ன முட்கள், என்ன முட்கள்? என் தீய எண்ணங்களாகிய நீங்களே அந்த முட்கள்! நீங்கள்தான் என் மீட்பரின் தலையைக் குத்தி ஊடுருவினீர்கள். என் சேசுவே, மரணத்தை வெறுப்பதை விட மிக அதிகமாக எவ்வளவோ நல்லவராகிய என் தேவனாகிய உம்மை மிக அடிக்கடி துயரப்படுத்திய என் தீய சம்மதங்களை நான் அருவருத்துத் தள்ளுகிறேன். ஆனால் நீர் என்னை எவ்வளவாக நேசித்திருக்கிறீர் என்பதை நான் அறியச் செய்கிறீர் என்பதால், உம்மை மட்டுமே நான் நேசிப்பேன், உம்மை மட்டுமே.

II

ஓ என் சர்வேசுரா, இப்போது துளைக்கப்பட்ட திருச்சிரசில் இருந்து திரு இரத்தம் எப்படி சேசுவின் திருமுகத்தின் மீதும், நெஞ்சின் மீதும் வடிகிறது! நீரோ, என் இரட்சகரே, இத்தகைய கொடூரங்களின் மத்தியிலும் எந்த விதத்திலும் முறையிடவில்லை. நீர் பரலோக பூலோக அரசராய் இருக்கிறீர்; ஆனால் இப்போது, என் சேசுவே, நீர் பரிகாச இராஜாவாகவும், துயரங்களின் அரசராகவும் எங்களுக்கு முன்பாகத் தோன்றுமளவுக்கு வெகுவாகத் தாழ்த்தப் பட்டிருக்கிறீர். ஜெருசலேம் முழுவதற்கும் நகைப்பிற்குரியவராய் ஆக்கப்பட்டிருக்கிறீர். ஆனால் ஒரு நாள் துயரங்களையும் அவமானங்களையும் நீர் நிரம்பக் கொண்டிருப்பீர் என்ற ஜெரேமியாஸின் தீர்க்கதரிசனம் இப்படி நிறைவேற வேண்டியிருந்தது: **"தம்மை அடிக்கிறவனுக்குத் தமது கன்னத்தைக் காட்டுவார்; அவமானங்களால் பூரிக்கப்படுவார்'' (புலம்பல்.3:30)**. ஓ என் சேசுவே, என் நேசமே, கடந்த காலத்தில் நான் உம்மை நிந்தித்து வந்திருக்கிறேன்; ஆனால் இப்போது நான் உம்மை மிக உயர்வாக மதிக்கிறேன், என் முழு இருதயத்தோடும் உம்மை நேசிக்கிறேன், உம் மீதுள்ள அன்பிற்காக மரிக்க நான் ஆசையாய் இருக்கிறேன்.

இல்லை: யாருக்காக நீர் துன்பப்படுகிறீரோ, அவர்கள் உம்மை வாதிப்பதிலும், உம்மைப் பரிகசிப்பதிலும் இன்னும் திருப்தி

அடையவில்லை. சேசுவே! இவ்வாறு உம்மை வாதித்து, பரிகாச அரசராக உம்மை உடுத்திய பிறகு, அவர்கள் உமக்கு முன்பாக முழங்காலிட்டு, ஏளனமாக உம்மை நோக்கி: **"யூதர்களின் இராஜாவே, வாழ்க!"** என்கிறார்கள். அதன்பின் உம்மைக் கேலி செய்து சிரித்து விட்டு, அவர்கள் இன்னும் அதிகமாக உம்மை அடிக்கிறார்கள், இவ்வாறு ஏற்கெனவே முட்களால் துளைக்கப் பட்டுள்ள உமது திருச்சிரசின் கொடிய வேதனையை அவர்கள் இரு மடங்காக்குகிறார்கள். **"அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: யூதருடைய இராஜாவே வாழ்கவென்று அவரைப் பரிகாசம் பண்ணி, அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்" (மத்.27:29; அரு.19:3).** என் ஆத்துமமே நீயாவது போய், அவர் யாராய் இருக்கிறார் என்று அடையாளம் கண்டுகொள், அவர் அரசர்களுக்கு அரசராக, ஆண்டவர்களுக்கு ஆண்டவராக இருக்கிறார்; அவருக்கு நன்றி செலுத்து. இப்போது உன் மீதுள்ள அன்பிற்காகத் துயரங்களின் அரசராக ஆகி இருக்கிற அவரைக் காண்கிறாய் என்பதால் அவருக்குப் பிரதிநன்றி செலுத்து, அவரை நேசி. என் ஆண்டவரே, நான் இது வரை உமக்குத் தந்துள்ள துயரங்களை நினைவில் வைத்துக் கொள்ளாதிரும். நான் இப்போது என்னை விட அதிகமாக உம்மை நேசிக்கிறேன். நீர் மட்டுமே என் முழு நேசத்திற்கும் தகுதியுள்ளவராக இருக்கிறீர். ஆகவே, உம்மை மட்டுமே நான் நேசிக்க விரும்புகிறேன். என் பலவீனத்தின் காரணமாக நான் பயப்படுகிறேன்; என்றாலும் என் ஆசையை நிறைவேற்ற எனக்குப் பலம் தர வேண்டியது உமது பொறுப்பு. மரியாயே, நீங்களும் உங்கள் ஜெபங்களால் எனக்கு உதவி செய்ய வேண்டும்.

வெள்ளி

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 16

I

சேசுநாதர் மீண்டும் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டு வரப்படுகிறார். கசைகளாலும், முட்களாலும் எவ்வளவு அதிகமாகக்

காயப்பட்டவராகவும், உருக்குலைந்தவராகவும் அவன் அவரைக் காண்கிறான் என்றால், மக்களுக்கு அவரைக் காட்டுவதன் மூலம் அவர்களது பரிதாப உணர்வைத் தூண்ட முடியும் என்று அவன் நினைக்கிறான். எனவே, அவன் வெகுவாகத் துன்புறுத்தப் பட்டிருக்கும் ஆண்டவரைத் தன்னோடு கூட்டிக் கொண்டு முகப்பு மண்டபத்திற்கு வந்து, **“இதோ மனிதன் பாருங்கள்!" (அருள. 19:5)** என்கிறான். “இந்தப் பரிதாபத்திற்குரிய மாசற்றவர் ஏற்கெனவே துன்புறுத்தப்பட்டு விட்டார் என்ற திருப்தியோடு இப்போது கலைந்து செல்லுங்கள். இனி இவர் நீண்ட காலம் பிழைத்திருக்க முடியாது என்னும் அளவுக்கு வெகுவாகத் தாழ்த்தப்பட்டு விட்ட அவரைப் பாருங்கள். அவரை விட்டு விட்டு உங்கள் வழியில் செல்லுங்கள். ஏனெனில் இனி அவர் உயிர்வாழ குறுகிய காலம் மட்டுமே உள்ளது" என்று அவன் சொன்னது போலாயிற்று. என் ஆன்மாவே, நீயும் உன் ஆண்டவரை, அந்த முகப்பு மண்டபத்தில், கட்டுண்டவராகவும், அரை நிர்வாணியாகவும், காயங்களாலும், இரத்தத்தாலும் மூடப் பட்டவராகவும் பார்; உன் மேய்ப்பர் காணாமல் போன ஆடாகிய உன்னை இரட்சிக்கும் படியாக, எந்த அளவுக்குத் தன்னைத் தாழ்த்தியிருக்கிறார் என்று தியானி.

பிலாத்து இப்படி காயப்பட்ட சேசுநாதரை யூதர்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் நித்திய பிதா இத்தகைய நிலையில் சேசுகிறீஸ்துநாதரைப் பார்க்கும்படி நாம் நம் கண்களைத் திருப்பும்படியாக நம்மை அழைக்கிறார். அவரும் அதே முறையில் நம்மை நோக்கி: **“இதோ மனிதன் பாருங்கள்!" (அருள. 19:5)** என்கிறார். ஓ மனிதர்களே, இப்படிக் காயப் பட்டவராகவும் வெறுமையானவராகவும் நீங்கள் காண்கிற இந்த மனிதர்-- இவரே என் நேச குமாரன், இவர் உங்கள் பாவங்களுக்குரிய அபராதத்தைச் செலுத்தும்படியாகவே இந்தத் துன்பங்களையெல்லாம் அனுபவிக்கிறார்; அவரைப் பாருங்கள், அவரை நேசியுங்கள் என்று அவர் நம்மிடம் சொல்கிறார். ஓ என் சர்வேசுரனும், என் பிதாவுமானவரே, நான் உமது திருச்சுதனைக் காண்கிறேன், அவருக்கு நான் நன்றி செலுத்துகிறேன், அவர நேசிக்கிறேன், எப்போதும் அவரை நேசிக்க என்னால் முடியுமென நம்புகிறேன்; ஆயினும் நீரும்

அவரைப் பார்க்க வேண்டுமென்று நான் உம்மிடம் ஜெபிக்கிறேன். இந்த உமது திருச்சுதனின் மீது உமக்குள்ள அன்பைக் குறித்து, பாவியாகிய என் மீது இரக்கமாயிரும்; என்னை மன்னியும், ஒருபோதும் உம்மைத் தவிர வேறு எதையும் நேசிக்காதிருக்க எனக்கு வரமருளும்.

II

ஆனால் துயரங்களின் அரசரைக் கண்டதும் யூதர்கள் சொல்லும் பதில் என்ன? அவர்கள் தங்கள் குரல்களை உயர்த்தி, "**இவனைச் சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்'' (அருள. 19:6)** என்று கூச்சலிட்டார்கள். இதைக் கண்டு, பிலாத்து அவர்களுடைய கூச்சல்களையும் மீறி, அவரை விடுவிக்க ஒரு வழியைத் தேடிக் கொண்டிருந்தான். ஆகவே அவர்கள் அவனிடம்: **"நீர் இவனை விடுதலையாக்கினால், செசார் அரசனுக்கு நீர் சிநேகிதர் அல்ல'' (அரு; 19:12)** என்று கூறுவதன் மூலம் அவனது பயத்தை அதிகப் படுத்தினார்கள். பிலாத்து இன்னும் எதிர்ப்புக் காட்டி, **"உங்கள் இராஜாவை நான் சிலுவையில் அறைவேனோ என்க, பிரதான ஆசாரியர்கள் மறுமொழியாக: செசாரைத் தவிர எங்களுக்கு வேறு இராஜா இல்லை என்றார்கள்'' (அரு.19:15)**. ஆ, ஆராதனைக்குரிய என் சேசுவே, இந்த மனிதர்கள் உம்மைத் தங்கள் அரசராக அங்கீகரிக்க மாட்டார்கள், செசாரைத் தவிர தங்களுக்கு வேறு அரசன் இல்லை என்று அவர்கள் உம்மிடம் சொல்கிறார்கள். ஆனால் நானோ உம்மை என் அரசராகவும், கடவுளாகவும் ஏற்றுக் கொள்கிறேன்; என் அன்பரும், என் ஒரே நன்மையுமான உம்மைத் தவிர எனக்கு வேறு அரசன் எவனும் இருக்கலாகாதென நான் விரும்புகிறேன். நான் நீச மனிதனாக இருப்பதால், ஒரு காலத்தில் நீர் என் அரசர் அல்ல என்று மறுதலித்தேன், உமக்கு ஊழியம் செய்ய நான் விரும்பவில்லை என்று நான் அறிக்கையிட்டேன். ஆனால் இப்போது, நீர் மட்டுமே என் சித்தத்தின் மீது ஆட்சி செலுத்த வேண்டுமென நான் விரும்புகிறேன். நீர் எனக்கு நியமித்திருக்கிற அனைத்திலும் என் சித்தம் உமக்குக் கீழ்ப்படியும்படி செய்தருளும். ஓ தேவ சித்தமே, நீயே என் நேசம்.

மாமரியே, எனக்காக மன்றாடுங்கள். உங்கள் ஜெபங்கள் புறக்கணிக்கப்படுவதில்லை.

சனி

ஆத்தும இரட்சணிய தாகம்

அர்ச். பேட்ரிக் திருநாள், மார்ச் 17

I

ஆத்தும இரட்சணியத்தின் மீதும், மனிதர்களின் ஆன்மாக்களில் தேவசிநேகத்தின் வளர்ச்சிக்கான தாகமும் நேசத்தினின்றே புறப்படுகின்றன என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார். அதன்பின் அவர் தொடர்ந்து, ஆன்ம தாகம் இல்லாதவன் தான் கடவுளை நேசிக்கவில்லை என்று காட்டுகிறான், கடவுளை நேசிக்காதவன் இழக்கப்படுகிறான் என்கிறார். "கடவுளை மகிமைப்படுத்த நீ விரும்பினால், அதற்கு, ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காக உழைப்பதை விட சிறந்த வழி இல்லை" என்று **அர்ச். லாரென்ஸ் யூஸ்தீனியன்** கூறுகிறார். "ஆத்தும தாகமுள்ள பத்து குருக்களை எனக்குத் தாருங்கள், நான் உலகத்தை மாற்றிக் காட்டுகிறேன்" என்று **அர்ச். பிலிப் நேரியார்** அடிக்கடி கூறுவது வழக்கம். கீழ்த்திசையில் **அர்ச். பிரான்சிஸ் சவேரியார்** ஒற்றை ஆளாக சாதிக்காதது என்ன இருந்தது? அர்ச். பேட்ரிக்கும், அர்ச். வின்சென்ட் ஃபெரரும் ஐரோப்பாவில் செய்யாதது என்ன இருந்தது? குருக்கள் உலகின் இரட்சகர்களாக இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்.

ஆன்மாக்களின் இரட்சணியத்தைக் கடவுள் எவ்வளவு ஏக்கத்தோடு ஆசிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு, மனிதனின் மீட்பிற்காக அவர் என்ன செய்திருக்கிறார் என்பதை தியானிப்பது போதுமானது. **"நான் பெறவேண்டிய ஸ்நானம் ஒன்று உண்டு; அது நிறைவேறுமளவும் எவ்வளவோ நெருக்கிடைப் படுகிறேன்" (லூக்.12:50)** என்று சேசுகிறீஸ்துநாதர் கூறியபோது, அவர் இந்த ஆசையைத்தான் தெளிவாக வெளிப்படுத்தினார். மனிதர்கள் இரட்சிக்கப்படும்படியாக மீட்பின் அலுவல்

நிறைவேறுவதைக் காண அவர் கொண்டிருந்த ஏக்கப்பற்றுதலின் காரணமாக, அவர் தாம் தவித்துச் சோர்ந்து போவதாக உணர்ந்தார். இதிலிருந்து, ஆத்துமங்களின் இரட்சணியத்தை விடக் கடவுளுக்கு உகந்ததும், அதிகப் பிரியமானதும் வேறு எதுவுமில்லை என்ற நியாயமான முடிவுக்கு **அர்ச். கிறிசோஸ்தோம்** அருளப்பர் வருகிறார். அவருக்கு முன்பாக **அர்ச். ஜஸ்டின்**, மற்றவர்களை அதிக நல்லவர்களாக்க உழைப்பதை விட கடவுளுக்கு அதிகப் பிரியமானது எதுவுமில்லை என்று கூறியிருந்தார். நம் ஆண்டவர் ஒரு முறை ஒரு பரிசுத்த குருவானவரிடம்: "பாவிகளின் இரட்சணியத்திற்காக உழைப்பாயாக, ஏனெனில் இதுவே எனக்கு அனைத்திலும் அதிகப் பிரியமானது" என்றார். இந்த அலுவல் கடவுளுக்கு எவ்வளவு பிரியமானது என்றால், அலெக்சாந்திரியாவின் **கிளமெண்ட்** கூறுவது போல, மனிதனின் இரட்சணியமே கடவுளின் ஒரே கவலையாக இருக்கிறது. இதன் காரணமாக, **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** ஒரு குருவிடம் பேசும்போது, "கடவுளை மகிமைப்படுத்த நீ விரும்பினால், அதற்கு, ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காக உழைப்பதை விட சிறந்த வழி இல்லை" என்றார். அர்ச். பெர்னார்ட் கூறுகிறபடி, உலகம் முழுவதையும் விட ஒரே ஒரு ஆன்மா கடவுளின் கண்களில் அதிக மதிப்புள்ளதாக இருக்கிறது. மேலும், **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பரின்** கருத்துப்படி, உன் உடைமைகளை யெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பதை விட, ஒரே ஒரு ஆத்துமத்தை மனந்திருப்புவதன் மூலம் நீ கடவுளை அதிகம் மகிழ்விக்கிறாய். மந்தையினின்று பிரிந்து போன ஒரே ஒரு ஆட்டின் மீட்பு முழு மந்தையின் மீட்பைப் போல கடவுளுக்குப் பிரியமானது என்று தெர்த்துல்லியன் உறுதிப்படுத்துகிறார். **"என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவசுதனைப் பற்றும் விசுவாசத்தினாலே ஜீவிக்கிறேன்"** என்று **அர்ச். சின்னப்பர்** எழுதினார் **(கலாத்.2:20)**. சேசுக்கிறீஸ்துநாதர் எல்லா மனிதர்களுக்காகவும் மரித்தது போலவே, எந்தத் தயக்கமுமின்றி ஒரே ஒரு ஆன்மாவுக்காகவும் மரித்திருப்பார் என்று இந்த வார்த்தைகள் குறித்துக் காட்டுவதாக **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** கூறுகிறார். காணாமல் போன நாணயணத்தைப் பற்றிய உவமையின் மூலம் நம் ஆண்டவரும் இதையே நாம் புரிந்து கொள்ளச் செய்கிறார். "மனிதன்

கடவுளின் கடவுளாக இருப்பது போலவும், கடவுளின் சொந்த, தெய்வீக இரட்சணியம் மனிதனைச் சார்ந்திருப்பது போலவும், மனிதன் இல்லாமல் தாம் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பது போலவும், மனிதர்கள் அல்ல, மாறாக தாம்தாமே பாராட்டப்படும்படியாக அவர் தேவதூதர்கள் அனைவரையும் அழைக்கிறார்'' என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** கூறுகிறார்.

அந்தோ, என் சேசுவே, என் மீட்பரே, உண்மையான விசுவாசத்தைக் கொண்டுள்ளவர்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறார்கள்! ஓ சர்வேசுரா, மனுக்குலத்தின் பெரும் பகுதி பிரமாணிக்கமின்மை மற்றும் தப்பறையின் இருளில் புதைக்கப்பட்டுக் கிடக்கிறது! மனிதர்களின் இரட்சணியத்திற்காக நீர் மரணம் வரைக்கும், அதுவும் சிலுவை மரணம் வரைக்கும் உம்மைத் தாழ்த்தினீர். ஆனால் அதே மனிதர்களோ நன்றியற்றவர்களாக உம்மை அறிந்துகொள்ள மறுக்கிறார்கள். ஆ, எல்லாம் வல்ல சர்வேசுரா, உன்னதமான, அளவற்ற நன்மைத்தனமே, நான் உம்மை மன்றாடுகிறேன், எல்லா மனிதரும் உம்மை அறிந்து நேசிக்கச் செய்தருளும்.

II

ஆன்ம தாகம் நேசத்திலிருந்து புறப்பட்டு வருகிறது என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார். எனவே, **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** கூறுகிறபடி, நம் அயலானின் நலனில் நமக்குள்ள தாகத்தை விட நம் பிரமாணிக்கத்திற்கும், அன்பிற்கும் வேறு சிறந்த நிரூபணத்தைக் கடவுள் கொண்டிருக்க முடியாது. அர்ச். இராயப்பர் தம்மை நேசிக்கிறாரா என்று நம் இரட்சகர் மும்முறை அவரைக் கேட்டார்: **"யோனாவின் குமாரனான சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா?'' (அரு.21:17).** இராயப்பரின் அன்பை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, ஆன்மாக்களின் மீது அக்கறை கொண்டிருப்பதை இராயப்பரின் அன்புக்கு வேறு நிரூபணத்தை சேசுநாதர் அவரிடம் கேட்கவில்லை. **"அவர் அவரிடம், என் ஆடுகளை மேய் என்றார்'' (அரு.21:17).** "நீ என்னை நேசிக்கிறாய் என்றால், உண் பணத்தைத்

தூர எறிந்து விடு, உபவாசமிரு, கடும் உழைப்பினால் உன்னையே உருக்கிக் கொள் என்றெல்லாம் சேசுநாதர் இராயப்பரிடம் கூறிய் இருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. என் ஆடுகளை மேய் என்று மட்டும்தான் அவர் சொல்கிறார்" என்று **அர்ச். கிறிசோஸ்தோம்** கூறுகிறார்.

அர்ச். தெரேசம்மாள் வேதசாட்சிகள் மற்றும் கடவுளின் திராட்சைத் தோட்டத்தின் பரிசுத்த வேலையாட்களின் வரலாறுகளை வாசித்த பிறகு, முந்தினவர்களை விடப் பிந்தினவர்கள் பாவிகளின் இரட்சணியத்திற்காக உழைப்பதன் மூலம் கடவுளுக்குத் தரும் மாபெருஜம் மகிமையின் காரணமாக, பிந்தியவர்களின் மீதே தான் நேசப் பொறாமை கொண்டதாகக் கூறினாள். ஆன்ம இரட்சணிய அலுவலில் ஈடுபட்டிருந்த குருக்களின் பாதங்கள் பட்ட தரையை முத்தமிடுவது அர்ச். சியென்னா கத்தரீனம்மாளின் வழக்கமாக இருந்தது. பாவிகளின் இரட்சணியத்தின் மீது அவளுக்கு இருந்த தாகம் எவ்வளவு தீவிரமானதாக இருந்தது என்றால், எந்த ஓர் ஆன்மாவும் நரகத்திற்குள் நுழையாதபடி, அந்த வாதைகளின் ஸ்தலத்தின் வாயிலில் தான் வைக்கப்பட வேண்டுமென அவள் ஆசித்தாள். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஏராளமான ஆன்மாக்கள் அழிந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். செயலற்றவர்களாக, அவர்களது அழிவைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களாக மட்டும் நாம் இருந்து விடப் போகிறோமா?

தமது இனத்தாரின் இரட்சணியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு, சிறிது காலம் சேசுக்கிறீஸ்துநாதரிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கத் தாம் சித்தமாயிருப்பதாக அர்ச். சின்னப்பர் கூறினார்: **"மாம்ச உறவின் படி எனக்கு உறவினர்களாகிய என் சகோதரருக்காக நானே கிறீஸ்து நாதரை விட்டுச் சபிக்கப்பட்டவனாய் இருக்க விரும்புவேன்" (உரோ. 9:3).** அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக, உலகில் எத்தனை பாவிகள் இருக்கிறார்களோ, அத்தனை முறை மரணங்களை ஏற்றுக்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக **அர்ச். பொனவெந்தூர்** அறிக்கை யிட்டார். தம்மால் தொடர்ந்து ஆத்துமங்களுக்கு உதவி செய்ய முடியும் என்றால், தம் சொந்த இரட்சணியத்தின் உறுதிப்பாட்டோடு இறப்பதைவிட, அந்த உறுதி இன்றி வாழ்ந்து

கொண்டிருப்பதையே தாம் விரும்புவதாக **அர்ச். இஞ்ஞாசியார்** கூறுவது வழக்கம். **"ஆனிமாம் ஸால்வாஸ்தி; ஆனிமாம் தூவாம் ப்ரேதெஸ்தினாஸ்தி** - வேறு ஒருவனின் ஆத்துமத்தை இரட்சிப்பதன் மூலம் நீ உன் சொந்த இரட்சணியத்தை முன்குறித்து வைக்கிறாய்'' என்று **அர்ச். அகுஸ்தினார் கற்பிக்கிறார்.** மேலும், **அர்ச் யாகப்பர்**, "**தவறின வழியினின்று பாவியை மனந்திருப்பியவன் அவனது ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவான்"** என்று எழுதிய் இருக்கிறார் **(5:20).**

சேசுநாதர் ஒருமுறை வணக்கத்துக்குரிய **செராஃபினா த காப்ரி** என்பவளிடம்: "என் மகளே, உன் ஜெபங்களால் ஆத்துமங்களை இரட்சிக்க எனக்கு உதவி செய்'' என்றார். **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாளிடம்**: "மதலேன், கிறீஸ்தவர்கள் எப்படிப் பசாசின் கரங்களில் இருக்கிறார்கள் என்று பார். என் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தங்கள் ஜெபங்களால் அவர்களை விடுவிக்காவிடில், அவர்கள் விழுங்கப்படுவார்கள்'' என்று அவர் கூறினார். இதன் காரணமாக, இந்தப் புனிதை தன் துறவற சகோதரிகளிடம்: "என் சகோதரிகளே, கடவுள் நம்மை உலகிலிருந்து பிரித்து வைத்திருப்பது நம் சொந்த நன்மைக்காக மட்டுமல்ல, மாறாக, பாவிகளின் நன்மைக்காகவும்தான்'' என்று அறிவித்தாள். மற்றொரு சந்தர்ப்பத்தில், "இழக்கப்பட்ட ஏராளமான ஆத்துமங்களுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். பக்திப் பற்றுதலோடு நாம் கடவுளிடம் அவர்களுக்காக மன்றாடியிருந்தோம், என்றால், ஒருவேளை அவர்கள் தண்டனைத் தீர்ப்படைந்திருக்க மாட்டார்கள்'' என்றாள் அவள்.

ஓ என் ஆண்டவராகிய சேசுகிறீஸ்துவே, நீர் பூமியில் செய்து கொண்டிருந்த அதே வேலையைச் செய்ய, அதாவது என் எளிய உழைப்பைக் கொண்டு, ஆத்துமங்களின் இரட்சணியத்தில் உமக்கு உதவ என்னையும் நீர் அழைத்ததற்காக, நான் எப்படிப் போதுமான அளவுக்கு உமக்கு நன்றி செலுத்துவேன்? மிகக் கனமான விதத்தில் உம்மை நோகச் செய்து, மற்றவர்களும் உம்மை நோகச் செய்யக் காரணமாக இருந்த பிறகு, இந்த மகத்துவத்திற்கு நான் எப்படித் தகுதி பெற்றேன்? என் பலம் முழுவதையும் கொண்டு நான் உமக்கு

ஊழியம் செய்வேன். இதோ, உமக்குக் கீழ்ப்படியுமாறு என் உழைப்பு முழுவதையும், என் இரத்தத்தையும் கூட நான் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமக்குத் தகுதியுள்ளபடி அனைவராலும் நீர் நேசிக்கப்படுவதைக் காண்பதைத் தவிர வேறு ஆசை எதுவும் எனக்கில்லை.

மகா பரிசுத்த மரியாயே, எனக்காகப் பரிந்து பேசுபவர்களே, ஆன்மாக்களை மிக அதிகமாக நேசிப்பவர்களே, எனக்கு உதவி செய்யுங்கள்.

சனிக்கிழமை மாலை

சேசுவின் மீதான மரியாயின் நேசம் எவ்வளவு பெரிதாயிருந்ததோ, அவ்வளவுக்கு அவர்களுடைய வியாகுலங்கள் பெரிதாயிருந்தன.

I

திியெஸ் என்பவர் குறிப்பிடுவது போல, மற்ற எல்லா வேதசாட்சிகளும் தங்கள் வேதசாட்சியத்தின் கருவியோடு சித்தரிக்கப்படுகிறார்கள். அர்ச். சின்னப்பர் ஒரு வாளோடும், அர்ச். பெலவேந்திரர் எக்ஸ் வடிவ சிலுவையோடும், அர்ச். லாரென்ஸ் இரும்புக் கட்டிலோடும் சித்தரிக்கப்படுகிறார்கள் ஆனால் மாமரி இறந்த தன் திருமகனைத் தன் திருக்கரங்களில் தாங்கியவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். ஏனெனில் சேசுவே, அவர் மட்டுமே அவர்களுடைய வேதசாட்சியத்தின் கருவியாக இருக்கிறார். அவர் மீது அவர்கள் கொண்டுள்ள நேசமே அதற்குக் காரணம். நான் இப்போது சொன்ன அனைத்தையும் அர்ச். விக்டரின் ரிச்சர்ட் என்பவர் ஒரு சில வார்த்தைகளில் உறுதிப்படுத்துகிறார். "மற்ற வேதசாட்சிகளில் அவர்களது அன்பின் மிகுதி அவர்களது வேதசாட்சியத்தின் வேதனைகளைத் தணியச் செய்தது. ஆனால் பரிசுத்த கன்னிகையில், அவர்களுடைய அன்பு எவ்வளவு பெரிதாயிருந்ததோ, அந்த அளவுக்கு அவர்களுடைய துன்பம்

பெரிதாயிருந்தது, அவர்களுடைய வேதசாட்சியம் அதிகக் கொடூரமானதாக இருந்தது" என்று அவர் கூறுகிறார்.

நாம் ஒரு காரியத்தை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறோமோ, அந்த அளவுக்கு அதை இழக்கும்போது நாம் அதிக வேதனைப்படுகிறோம். ஒரு பொதி மிருகத்தை இழக்கும்போது நாம் துக்கப் படுவதை விட ஒரு சகோதரன் இறக்கும்போது அதிக துக்கப்படுகிறோம். ஒரு நண்பனின் மரணத்தை விட ஒரு மகனின் மரணம் ஒருவனுக்கு அதிகத் துயரம் தருகிறது. இனி, "மாமரியின் திருமகனின் மரணத்தில் அவர்களது துக்கத்தின் மிகுதியை நாம் புரிந்து கொள்வதற்கு, அவர்கள் அவர் மீது கொண்டுள்ள நேசத்தின் மிகுதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்" என்று **கொர்னேலியுஸ் ஆ லாப்பிதே** கூறுகிறார். ஆனால் அந்த அன்பை யாரால் அளவிட முடியும்? "மரியாயின் இருதயத்தில் சேசுவின் மீது இரண்டு வகையான நேசங்கள் இணைந்திருந்தன. அவை: சுபாவத்திற்கு மேலான நேசம்: இதைக் கொண்டு அவர்கள் அவரைத் தன் கடவுளாக நேசித்தார்கள்; இரண்டாவது, சுபாவமான நேசம்: இதைக் கொண்டு மாமரி அவரைத் தன் மகனாக நேசித்தார்கள்" என்று முத். அமதேயுஸ் கூறுகிறார். இந்த இரண்டு நேசங்களும் மாமரியில் இணைந்து ஒன்றாயின. ஆனால் அது எப்பேர்ப்பட்ட மிகப் பெரும் நேசமாக இருந்தது என்றால், ஒரு மாசற்ற சிருஷ்டிக்கு எவ்வளவு அதிகமாக சாத்தியப்படுமோ, அந்த அளவுக்கு திவ்விய கன்னிகை அவரை நேசித்தார்கள் என்று **பாரிஸின் வில்லியம்** என்பவர் கூறுகிறார். இதன் காரணமாக, **அர்ச். விக்டரின் ரிச்சர்ட்** என்பவர், "மாமரியின் அன்புக்கு ஒப்பான வேறு அன்பு இல்லை என்பது போலவே, அவர்களுடைய வியாகுலத்திற்கு ஒப்பான வேறு வியாகுலமும் இல்லை" என்கிறார். தன் மகன் மீது மாமரி கொண்டுள்ள அன்பு இவ்வளவு பிரமாண்டமானதாக இருக்கிறது என்றால், மரணத்தால் அவரை இழந்து போனதில் அவர்கள் அனுபவித்த துக்கமும் பிரமாண்டமானதாகவே இருந்தது. "எங்கே அனைத்திலும் பெரிதான அன்பு உள்ளதோ, அங்கே அனைத்திலும் பெரிதான துயரமும் உள்ளது" என்கிறார் **அர்ச். பெரிய ஆல்பெர்ட்**.

II

இப்போது சிலுவையின் மீது இறந்து கொண்டிருக்கும் தன் திருமகனுக்கு அருகில் தேவதாயார் நின்று கொண்டிருப்பதாகவும், எரேமியாஸின் வார்த்தைகளைத் தனக்குப் பொருத்தி, நம்மை நோக்கி, “வீதி கடக்கும் நீங்களெல்லோரும் நின்று, என் உபாதைக்குச் சமமான உபாதையுண்டோ என்று பாருங்கள்" என்று சொல்வதாகவும் நாம் கற்பனை செய்வோமாக. ஓ, பூமியில் உங்கள் வாழ்நாட்களைச் செலவிடுபவர்களே, என் மீது பரிதாபப் படாதீர்கள். ஒரு கணம் நின்று என்னை நோக்கிப் பாருங்கள், ஏனெனனில் இப்போது என் கண்களுக்கு முன்பாக இறந்து கொண்டிருக்கிற என் நேச மகனை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; அதன்பின் கஸ்திப்படுபவர்கள் மற்றும் வாதிக்கப்படுபவர்கள் அனைவரிலும், என் துயரத்திற்கு இணையான துயரம் எங்காவது உண்டா என்று பாருங்கள். **அர்ச். பொனவெந்தூர்** தம் அன்னைக்குப் பதில் மொழியாக, “இல்லை, ஓ அனைத்துத் தாய்மாரிலும் அதிகமாகத் துன்பப்பட்ட தாயாரே, உங்களுடையதை விட அதிகக் கசப்பான துயரத்தை வேறு எங்கும் காண முடியாது" என்கிறார். ஆ, “சேசுவை விட அதிகம் இனிமையுள்ள மகன் உலகில் ஒருபோதும் இருந்ததில்லை. அவ்வாறே மாமரியை விட அதிகக் கனிவோடு தன் மகனை நேசித்த தாயும் உலகில் ஒருபோதும் இருந்ததில்லை! ஆனால் மாமரியின் அன்புக்கு ஈடான அன்பு எதுவும் உலகில் ஒருபோதும் இருந்ததில்லை என்பதால், மாமரியின் துயரத்திற்கு இணையான ஒரு துயரத்தை இவ்வுலகில் எப்படிக் காண முடியும்?" என்று அர்ச். லாரென்ஸின் ரிச்சர்ட் கூறுகிறார்.

ஆகவே, “மாமரியின் வியாகுலங்கள் ஒன்றிணைந்த சகல வேதசாட்சிகளின் வாதைகளையும் விட அதிகப் பெரிதாயிருந்தன என்று சொல்வது மிகக் குறைவாக மட்டுமே இது பற்றிச் சொல்வதாக இருக்கிறது" என்று **அர்ச். இல்டஃபோன்ஸ்** உறுதிப்படுத்த சற்றும் தயங்கவில்லை. **அர்ச். ஆன்செல்ம்** இதன் தொடர்ச்சியாக, “பரிசுத்த வேதசாட்சிகளின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடிய வாதைகள், மரியாயின் வேதசாட்சியத்தோடு ஒப்பிடப்படும்போது, அவை மிக அற்பமானவையாக அல்லது வெறும்

ஒன்றுமில்லாமையாக இருக்கின்றன'' என்கிறார். மேலும், “ஏரியன் தனது ஒளியில் மற்ற எல்லாக் கிரகங்களையும் விஞ்சியிருப்பதுபோல, மரியாயின் துன்பங்கள் மற்ற எல்லா வேதசாட்சிகளின் எல்லாத் துன்பங்களுக்கும் அப்பாற்பட்டவையாக இருக்கின்றன'' என்று **அர்ச். செலூசியா பேசில்** எழுதுகிறார். தாந்தை பினாமோன்ட்டி என்பவர் ஓர் அழகிய உணர்வோடு இதை முடித்து வைக்கிறார். இந்த மகா மென்மையும், அன்புமுள்ள தாயார் சேசுவின் திருப்பாடுகளில் கொண்டிருந்த வியாகுலம் எவ்வளவு பெரிதாயிருந்தது என்றால், மனிதனாக அவதரித்த கடவுளின் சாவுக்கு அவர்கள் மட்டுமே போதுமான அளவு தயவிரக்கம் கொள்ள முடிந்தது என்று அவர் எழுதுகிறார்.

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

பாவிகள் மீது சேசுவின் கனிவுள்ள தயவிரக்கம்

(ஞாயிறு சுவிசேஷம்)

I

ஏழை மக்களின் சரீர ரீதியான தேவைகளில் தாம் கொண்ட தயவிரக்கத்தின் காரணமாக, அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, நம் ஆண்டவர் அப்பங்களும், மீன்களும் பலுகச் செய்யும் புதுமையைச் செய்தார். ஆனால் தேவ வரப்பிரசாதம் விலக்கப் பட்டுள்ள பரிதாபத்திற்குரிய பாவிகளின் ஆத்துமங்களின் தேவைகளில் அவரது தயவிரக்கம் எவ்வளவோ அதிகக் கனிவுள்ளதாக இருக்கிறது. “ஓ, பாவிகளின் மீது நம் தேவன் கொண்டுள்ள அளவற்ற இரக்கமே! ஓர் அடிமையை மீட்பதற்கு, பிதாவும் தம் திருச்சுதனைக் கையளிக்கத் தயங்கவில்லை, திருச்சுதனும் தம்மையே அர்ப்பணிக்கத் தயங்கவில்லை!'' என்று அதிசயித்தபடி கூறுகிறார் **அர்ச். பெர்னார்ட்**.

பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்தின் கீழ் கிடந்து முனகிக் கொண்டிருந்த மனிதர்களின் மீது தமது இரக்கத்தின் உள்ளாழங்களின் வழியாக, நம் மிக அன்புக்குரிய மீட்பர், தமது

மரணத்தால் நித்திய வாதைகளிலிருந்து அவர்களை மீட்டு இரட்சிக்கப் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு இறங்கி வந்தார். ஏற்கெனவே நித்திய வார்த்தையானவரின் தாயாராக ஆகியிருந்த திவ்விய கன்னிகை ஸ்நாபக அருளப்பரின் தந்தையாகிய அர்ச். சக்கரியாஸின் இல்லத்தில் இருந்தபோது, அவர் கூறிய வார்த்தைகளும் இத்தகையவையே: **"நமது கடவுளின் இரக்க உருக்கத்தால் உன்னதத்திலிருந்து உதயமானவர் நம்மைச் சந்தித்திருக்கிறார்" (லூக்.1:77-79).**

தமது ஆடுகளாகிய நமக்கு இரட்சணியத்தைப் பெற்றுத் தருவதற்காக உலகிற்கு வந்த நல்ல மேய்ப்பராக சேசுகிறீஸ்துநாதர், **"நானோ ஆடுகள் ஜீவனடையவும் அதை மென்மேலும் ஏராளமாய் அடையவும் வந்தேன்"** என்று சொல்லிய் இருக்கிறார் (அரு.10:10). "மென்மேலும் ஏராளமாய்" என்ற வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். மனுமகன் நாம் இழந்து போன வரப்பிரசாத உயிரை நம்மில் மீண்டும் ஸ்தாபிப்பதற்காக மட்டுமின்றி, பாவத்தால் நாம் இழந்து போன வாழ்வை விடச் சிறந்த வாழ்வை நமக்குத் தருவதற்காகவும் உலகிறகு வந்தார். ஆம், ஏனெனில் அர்ச். சிங்கராயர் கூறுவது போல, சேசுவின் திருமரணத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டுள்ள நன்மைகள், பாவத்தால் பசாசு நமக்குச் செய்துள்ள காயத்தை விட மிகவும் மேலானவையாக இருக்கின்றன. இதே கொள்கை, **"குற்றம் பெருகின இடத்தில் வரப்பிரசாதம் அதிமிகப் பெருகிற்று" (உரோ.5:20)** என்று சொல்லும் அப்போஸ்தலராலும் கற்பிக்கப்படுகிறது.

ஆனால், என் ஆண்டவரே, மனித சரீரத்தை எடுத்துக் கொள்ள நீர் தீர்மானித்தீர் என்பதால், எல்லா மனிதர்களையும் மீட்க உமது ஒரே ஒரு ஜெபம் போதுமானதாக இருந்திருக்குமே! அப்படிய் இருக்க, வறுமையும், அவமானமும், நிந்தையும் நிறைந்த 33 ஆண்டு கால வாழ்வு நடத்தவும், அவமானக் கழுமரத்தின் மீது ஒரு கொடூரமான, அவமான மரணத்தை அடையும், வாதைகளின் காரணமாக, உமது இறுதித் துளி இரத்தத்தையும் சிந்தவும் உமக்கு என்ன தேவை இருந்தது? சேசுநாதர் இதற்கு இவ்வாறு பதில் சொல்கிறார்: "என் ஒரே ஒரு துளி இரத்தம், அல்லது ஓர் எளிய

ஜெபம் உலக இரட்சணியத்திற்குப் போதுமானதாக இருந்திருக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரியும்; ஆனால் மனிதர்கள் மீது நான் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த அவை போதாதவையாக இருந்திருக்கும்; ஆகவே, தங்கள் மீதுள்ள அன்பிற்காக சிலுவையின் மீது மரித்தவராக என்னை அவர்கள் காணும்போது, அவர்களால் நான் நேசிக்கப்படும்படியாக, மிகப் பல வாதைகளுக்கும், ஒரு மிக வேதனையான மரணத்திற்கும் என்னைக் கையளிக்க நான் தீர்மானித்தேன். **"நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறான் . . . நான் என் ஆடுகளுக்காக என் உயிரைக் கையளிக்கிறேன்" (அரு.10:11-13).**

II

மனிதர்களே! மனிதர்களே! தமது உயிரைத் தமது ஆடுகளாகிய நமக்காகக் கையளிப்பதை விட அதிகமாக தம் அன்பிற்கு வேறு என்ன சாட்சியத்தை தேவசுதன் நமக்குத் தந்து விட முடியும்? **"சர்வேசுரன் நமக்காகத் தம் உயிரைக் கையளித்ததால், அவருடைய அன்பு இன்னதென்று நாம் அறிந்திருக்கிறோம்" (1அரு.3:16).** தன் நண்பர்களுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதை விட மேலான முறையில் அவர்களுக்குத் தன் அன்பைக் காட்ட எவனாலும் முடியாது என்கிறார் இரட்சகர். **"தன் சிநேகிதர்களுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறதைவிட அதிகமான சிநேகம் எவனிடத்திலும் இல்லை" (அரு.15:13).** ஆனால் ஆண்டவரே, நீரே நண்பர்களுக்காக அல்ல, மாறாக, பாவத்தால் உமக்கு எதிரிகளாக இருந்த எங்களுக்காக இறந்தீர். **"நாம் சர்வேசுரனுக்குச் சத்துருக்களாய் இருக்கையிலே, தேவ சுதனுடைய மரணத்தினால் அவரோடு சமாதானமாக்கப் பட்டிருக்கிறோம்" (உரோ.5:10).** "ஓ, பாவிகளின் மீது நம் தேவன் கொண்டுள்ள அளவற்ற இரக்கமே! ஓர் அடிமையை மீட்பதற்கு, பிதாவும் தம் திருச்சுதனைக் கையளிக்கத் தயங்கவில்லை, திருச்சுதனும் தம்மையே அர்ப்பணிக்கத் தயங்கவில்லை!" என்று அதிசயித்தபடி கூறுகிறார் அர்ச். பெர்னார்ட். கலகக்கார ஊழியர்களாகிய நம்மை மன்னிப்பதற்கு, பிதா தம் திருச்சுதனை மன்னிக்கவில்லை, சுதனும் தம்மைத் தாமே மன்னிக்கவில்லை,

மாறாக, தமது மரணத்தின் மூலம் நாம் கட்டிக்கொண்ட பாவங்கள் மீதான தேவநீதியை அவர் சாந்தப்படுத்திய் இருக்கிறார்.

சேசுக்கிறீஸ்துநாதர் தமது திருப்பாடுகளுக்கு மிக அருகில் இருந்த போது, ஒரு நாள் சமாரியாவுக்குச் சென்றார்; சமாரியர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தங்கள் குருவுக்கு சமாரியர்கள் செய்த அவமானத்தைக் கண்டு கோபமுற்ற அர்ச். யாகப்பரும், அர்ச். அருளப்பரும் சேசுவிடம் திரும்பி: **"ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் வானத்தினின்று அக்கினி இறங்கி இவர்களைச் சுட்டெரிக்கும்படி சொல்லுகிறோம்" என்றார்கள் (லூக்.9:54).** ஆனால் தம்மை அவமானப்படுத்தியவர்களுக்கும் கூட முழு இனிமையாக இருக்கும் சேசுநாதர்: **"உங்களுக்கு யாருடைய புத்தி உண்டென்று உங்களுக்குத் தெரியவில்லை. மனுமகன் ஆத்துமங்களைச் சேதமாக்குவதற்கல்ல, அவைகளை இரட்சிக்கவே வந்தார்" (லூக்.9:55)** என்று அவர்களுக்குப் பதிலளித்தார். அவர் தம் சீடர்களைக் கடுமையாகக் கடிந்து கொண்டார். "என்ன புத்தியை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்? அது என் புத்தி அல்ல; என்னுடையது பொறுமை மற்றும் தயவிரக்கத்தின் புத்தி; ஏனெனில் நான் மனிதர்களின் ஆத்துமங்களை அழிப்பதற்கு அல்ல, அவற்றை இரட்சிக்கவே வந்தேன்; நீங்கள் நெருப்பையும், தண்டனையையும், பழிவாங்குதலையும் பற்றிப் பேசுகிறீர்கள்." இதனாலேயே மற்றொரு இடத்தில் அவர் தம் சீடர்களிடம்: **"நான் சாந்தமும் மனத் தாழ்ச்சியுமுள்ளவன் என்று என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்றார் (மத்.11:29).** என்னிடமிருந்து தண்டிப்பதை அல்ல, மாறாக சாந்தமாயிருப்பதையும், பிறர் உங்களுக்குத் தரும் காயங்களைத் தாங்கிக் கொள்வதையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென நான் ஆசிக்கிறேன்.

திங்கள்

அர்ச். சூசையப்பர் திருநாள்

மார்ச் 19

I

சேசு மரியாயின் திருக்கரங்களில் மரிக்கும் மகிழ்ச்சியை அர்ச். சூசையப்பர் கொண்டிருந்தார். வாழ்வாக இருப்பவரின் திருக்கரங்களில் இறப்பவருக்கு மரணம் எப்படி வேதனையானதாக இருந்திருக்க முடியும். அர்ச். சூசையப்பரின் பக்தர்கள் தங்கள் மரண நேரத்தில், அவர்கள் மகிழ்ச்சியோடு இறக்கத் தங்களுக்கு உதவி செய்யும்படி சூசையப்பர் சேசுவோடும் மரியாயோடும் அவர்களைச் சந்திப்பார் என்று உறுதியாக நம்ப வேண்டும்.

ஆண்டவரின் புனிதர்களின் மரணம் அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக இருக்கிறது (சங்.115:15). சேசுவுக்கும், மாமரிக்கும் பிரமாணிக்கமாக ஊழியம் செய்த பின், அர்ச். சூசையப்பர் நாசரேத்தூரில் இருந்த வீட்டில் தம் வாழ்வின் முடிவை வந்தடைந்தார். தேவதூதர்கள் அவரைச் சூழ்ந்திருக்க, அவரது பரிதாபமான படுக்கையின் ஒரு பக்கத்தில் தேவதூதர்களின் அரசரான சேசு கிறீஸ்துநாதரும், மறு பக்கத்தில் தமது கன்னி மணவாளியான மாமரியும் அவருக்கு உதவி செய்ய, இந்த இனிய, மேன்மை மிக்க தெய்வீகத் தோழமையில், பரலோக சமாதானத்தால் நிரப்பப்பட்டவராக அவர் இந்த நிர்ப்பாக்கிய வாழ்வை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

இத்தகைய ஒரு மணவாளியும், சூசையின் மகன் என்னும் பெயரால் அழைக்கப்படத் தயை கூர்ந்த மீட்பரும் சூசையப்பரோடு இருந்தது, அவரது மரணத்தை அதீத இனிமையும், மதிப்பும் உள்ளதாக்கியது. வாழ்வாகவே இருப்பவரின் திருக்கரங்களில் மரித்தவருக்கு மரணம் எப்படி வேதனையுள்ளதாக இருந்திருக்க முடியும்? சேசு மரியாயின் திருவாய்களிலிருந்து மாறி மாறி வந்த நித்திய வாழ்வின் வார்த்தைகள், சூசையப்பரின் வாழ்வின் முடிவில் அவரது ஆத்துமத்தினுள் ஊதிய கலப்பற்ற இனிமையையும், ஆறுதல்களையும், ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கைகளையும், அமைந்த மனதையும், தேவசிநேகத் தீச்சுவாலைகளையும் விளக்கிக் கூறவும், புரிந்து கொள்ளவும் யாரால் இயலும்? ஆகவே, அர்ச். சூசையப்பர் முழுமையான, மாசற்ற தேவசிநேகத்தின் காரணமாக இறந்தார் என்ற **அர்ச். பிரான்சிஸ் சலேசியாரின்** கருத்து உண்மையாய் இருக்க மிகுந்த வாய்ப்புள்ளது.

என் பரிசுத்த பிதாப்பிதாவே, இப்போது நீர் பரலோகத்தில், ஒரு மகிமையின் சிங்காசனத்தின்மீது, பூமியில் உமக்குப் பணிந்திருந்த உமது நேசத்திற்குரிய சேசுவுக்கு அருகில் பேரின்பத்தில் திளைத்திருக்கிறீர் என்பதால், தேவ சமாதானத்தை என்னிடமிருந்து திருடிக் கொள்ளத் தொடர்ந்து பாடுபட்டு வரும் பசாசுக்கள், தீய ஆசாபாசங்கள் ஆகிய ஏராளமான எதிரிகளுக்கு மத்தியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிற என்மீது இரக்கமாயிரும். ஆ, சேசு மரியாயோடு இவ்வுலகில் எப்போதும் இருக்க நீ பெற்றிருந்த வரத்தின் வழியாக, நானும் ஒரு நாள் நிததியப் பேரின்ப இராச்சியத்தில் உம்மோடு சேசு மரியாயின் நட்புறவில் மகிழ்ந்திருக்கும்படியாக, நரகத்தின் தாக்குதல்களை எதிர்த்து நின்று, சேசு மாமரிக்காக மரிப்பதன் வழியாக, எப்போதும் கடவுளோடு இணைந்து வாழும் வரத்தை எனக்குப் பெற்றுத் தந்தருளும்.

II

ஆகவே அர்ச். சூசையப்பரின் மரணம் இவ்வாறு பரிபூரண சமாதானமும் இனிமையும் உள்ளதாகவும், எல்லா வகையான வேதனைகள், அச்சங்களிலிருந்து விடுபட்டதாகவும் இருந்தது; ஏனெனில் அவரது வாழ்வு எப்போதும் பரிசுத்தமானதாக இருந்தது. கடவுளை நோகச் செய்தவர்களும், நரகத்திற்குத் தகுதியுள்ளவர்களுமான மனிதர்கள் இத்தகைய ஒரு மரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் உண்மையில், அர்ச். சூசையப்பரால் பாதுகாக்கப்படுவோர், தங்கள் மரண நேரத்தில் மிகுந்த ஆறுதலைப் பெற்றுக்கொள்வார்கள். ஒரு காலத்தில் கடவுளே அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்; அவர் பசாசுக்களுக்குக் கட்டளையிட அதிகாரம் கொண் டிருக்கிறார். அவருடைய பக்தர்களின் கடைசி நேரத்தில் பசாசுக்கள் அவர்களை சோதிக்காத படி, அவர் அவற்றைத் துரத்தியடிப்பார், தடை செய்வார். ஆகவே, இந்த மாபெரும் பரிந்து பேசும் புனிதரின் உதவியைத் தன் மரண நேரத்தில் பெற்றுக்கொள்ளும் ஆன்மா பாக்கியம் பெற்றது! அவர் சேசு மரியாயின் உதவியோடு மரித்ததாலும், எகிப்துக்கு ஓடிப் போன போது, மரண ஆபத்துக்களிலிருந்து குழந்தை சேசுவைக்

காப்பாற்றினார் என்பதாலும், நல்ல மரணத்தின் பாதுகாவலராக இருக்கவும், மரிக்கும் தருவாயிலுள்ள தமது பக்தர்களை நித்திய நரகத்தின் ஆபத்திலிருந்து விடுவிக்கவும் அவர் தேவ சலுகை பெற்றவராக இருக்கிறார்.

என் பரிசுத்த பாதுகாவலரே, உமது ஒட்டுமொத்த வாழ்வும் பரிசுத்தமானதாக இருந்ததால், இத்தகைய ஒரு பரிசுத்த மரணத்தை அடைய நீர் நீதியுள்ள உரிமையைக் கொண்டிருந்தீர். நானே ஒரு நிர்ப்பாக்கிய மரணத்திற்கு மட்டுமே தகுதியுள்ளவனாக இருக்கிறேன். ஏனெனில் என் தீய வாழ்வின் மூலம் நான் அதற்கு என்னைத் தகுதியாக்கிக் கொண்டேன். ஆனால் நீர் என்னைப் பாதுகாப்பீர் என்றால், நான் இழக்கப்பட மாட்டேன். நீர் என் நித்திய நடுவரின் மிகச் சிறந்த நண்பராக இருப்பது மட்டுமின்றி, அவரை ஆபத்திலிருந்து காப்பாற்றியவராகவும, அவரது பாதுகாவலராகவும் இருந்திருக்கிறீர். தேவரீர் சேசுவிடம் என்காகப் பரிந்து பேசினால், எனக்குத் தண்டனைத் தீர்ப்பிடுவது எப்படியென அவர் அறியாதிருப்பார். மாமரிக்குப் பிறகு, எனது முதன்மையான பரிந்து பேசுபவராகவும் பாதுகாவலராகவும் உம்மையே நான் தேர்ந்து கொள்கிறேன். ஏதாவது ஒரு விசேஷ பக்தி முயற்சியைக் கொண்டும், உமது பாதுகாவலில் என்னை வைப்பதன் மூலமாகவும் ஒவ்வொரு நாளும் உம்மை மகிமைப்படுத்துவதாக நான் வாக்களிக்கிறேன். உமது ஊழியனாய் இருக்க அடியேன் தகுதியற்றவன்; ஆனால் நீர் சேசு மரியாயின் மீது கொண்டுள்ள அன்பின் ஐக்கியத்தைப் பார்த்து, உமது நிரந்தர ஊழியனாக என்னை ஏற்றுக்கொள்ளும். உமது இவ்வுலக வாழ்வில் நீர் அனுபவித்து மகிழ்ந்திருந்த சேசு மரியாயின் தோழமையின் வழியாக, கடவுளின் வரப்பிரசாதத்தை இழப்பதன் மூலம் அவரிடமிருந்து நான் ஒருபோதும் பிரிக்கப்படாதபடி என் வாழ்நாள் முழுவதிலும் என்னைப் பாதுகாத்தருளும். உமது மரணத்தின்போது சேசுவும், மாமரியும் உமக்குத் தந்தருளின உதவி ஒத்தாசையின் வழியாக, என் மரண நேரத்தில் என்னைப் பாதுகாத்தருளும். இவ்வாறு, உம்முடையவும், சேசு மரியாயினுடையவும் தோழமையில் மரித்து, ஒரு நாள் உமக்கு நன்றி

செலுத்தவும், உம்மோடு சேர்ந்து நம் சர்வேசுரனை என்றென்றும் போற்றித் துதிக்கவும், அவரை நேசிக்கவும் நான் பேறு பெறுவேனாக.

திங்கள் மாலை

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 17

I

பிலாத்து மாசற்ற செம்மறிப்புருவையானவரை அந்த ஓநாய்களின் கரங்களில், தாங்கள் விரும்பியதை அவர்கள் அவருக்குச் செய்யும்படியாகக் கையளிக்கிறான். **“பிலாத்து... சேசுநாதரை அவர்களுடைய இஷ்டத்துக்குக் கையளித்தான்'' (லூக்.23:25).** சாத்தானின் இந்த ஊழியர்கள் அவரை வெறியோடு பிடித்து இழுக்கிறார்கள். அவர்கள் யூதர்களின் தூண்டுதலின் பேரில் அவரது செந்நிற ஆடையை உரிந்து விட்டு, அவரது சொந்த ஆடைகளை அவருக்கு உடுத்துகிறார்கள். **“அவர்கள் அவருடைய சிவப்புப் போர்வையைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை உடுத்தி, சிலுவையில் அறையும்படிக்கு வெளியே கூட்டிக்கொண்டு போனார்கள்'' (மாற்கு.15:20).** தமது சொந்த ஆடையின் மூலமாவது சேசுநாதர் மற்றவர்களால் அடையாளம் காணப்பட வேண்டும் என்பதற்காக அவர்ள் அப்படிச் செய்தார்கள் என்று அர்ச். அம்புரோஸ் கூறுகிறார். அவரது அழகிய திருமுகம் எந்த அளவுக்கு இரத்தத்தாலும், காயங்களாலும் உருக்குலைந்திருந்தது என்றால், வேறு ஆடைகளில் மற்றவர்கள் அவரை அடையாளம் காண்பது கடினமாயிருந்திருக்கும்: “அவர் அனைவராலும் நன்கு அடையாளம் காணப்படும்படியாக, அவர்கள் அவருடைய சொந்த ஆடையை அவருக்கு உடுத்தினார்கள். ஏனெனில் அவரது திருமுகம் முழுவதும் இரத்த மயமாகவும், உருக்குலைந்தும் இருந்ததால், அவரை அனைவரும் அடையாளம் கண்டு கொள்வது எளிய காரியமாக இருந்திருக்காது.'' அதன்பின் அவர்கள் இரண்டு கரடுமுரடான மர விட்டங்களை எடுத்து, அவற்றைக் கொண்டு விரைவாக திருச்சிலுவையை உருவாக்குகிறார்கள். அவற்றில் நீளமான மரத்

துண்டின் நீளம் பதினைந்து அடியாக இருந்தது என்று அர்ச். பொனவெந்தூரும், அர்ச். ஆன்செல்மும் கூறுகிறார்கள். சேவகரகள் அந்தச் சிலுவையை மீட்பரின் தோள்களின்மீது வைக்கிறார்கள்.

ஆனால், **அர்ச். வில்லனோவா தோமையார்** கூறுவது போல, வாதிப்பவன் சிலுவையைத் தம் மீது வைக்கும் வரை சேசு காத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் தாமே முயற்சி செய்து தமது கரங்களை முன்னே நீட்டி, தமது இரட்சணியத்தின் கருவியைத் தம் கரங்களால் பற்றி, காயப்பட்ட தமது திருத்தோளின் மீது அதை வைத்துக் கொள்கிறார்: "போர்ச் சேவகன் அதைத் தம் மீதுவைக்கும் வரை அவர் காத்திருக்கவில்லை. மாறாக அவரே அதை மகிழ்ச்சியோடு ஏற்று சுமந்து கொண்டார்." அப்போது அவர், "வா, என் அன்பிற்குரிய சிலுவையே; முப்பத்து மூன்று ஆண்டுகளாக நான் பெருமூச்சுக்களோடு உன்னைத் தேடிக் கொண்டிருந்தேன். உன்னை நான் அரவணைத்துக் கொள்கிறேன், என் இருதயத்தோடு உன்னை அணைத்துக் கொள்கிறேன். ஏனெனில் என் மந்தையின் மீது நான் கொண்டுள்ள அன்பிற்காக, என் சித்தப்படி என் உயிரை நான் பலியாக்க இருக்கும் திருப்பீடம் நீயே" என்கிறார்.

ஆ, என் ஆண்டவரே, உமக்கு எதிராக இவ்வளவு அதிகமான தீமை செய்துள்ள ஒருவனுக்கு இவ்வளவு அதிகமான நன்மையைச் செய்ய உம்மால் எப்படி முடிந்தது? ஓ என் தேவனே, தேவ நட்புறவை எனக்குப் பெற்றுத் தர நீர் இவ்வளவு அதிகமான வாதைகளை அனுபவிக்க முன்வந்திருந்தும், மிக அடிக்கடி என் சொந்தப் பாவத்தால் பிற்பாடு நான் அதை மிக அடிக்கடி இழந்திருக்கிறேன் என்பதை நினைக்கும்போது, துக்கத்தினால் மரித்து விடவே நான் விரும்புகிறேன். எவ்வளவு அடிக்கடி நீர் என்னை மன்னித்திருக்கிறீர், அப்படியிருந்தும் எத்தனை தடவை நான் உம்மை விட்டுத் திரும்பி, உம்மை மீண்டும் மீண்டும் நோகச் செய்திருக்கிறேன்! என்னை மன்னிப்பதற்காகவே நீர் இறந்தீர் என்பதை மட்டும் நான் அறியாதிருந்தால், மன்னிப்புப் பெற முடியும் என்று நான் எப்படி நம்பிய் இருக்க முடிந்திருக்கும்? உமது இந்த மரணத்தின் மூலம் நான் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வேன் என்றும், உமது அன்பில் நிலைத்திருப்பேன் என்றும் நான் நம்பிய்

இருக்கிறேன். இனி ஒருபோதும் உம்மை மனம் நோகச் செய்ய மாட்டேன் என்று நான் வாக்களிக்கிறேன். தேவரீர் உமது பேறுபலன்களைப் பார்த்து என்னை மன்னித்தருளும். இவ்வுலகின் எல்லா நற்காரியங்களையும் விட அதிகமாக நான் உமது நட்பை மதித்து நேசிக்கிறேன். ஓ, மீண்டும் உம்மிடமிருந்து விலகி, அதை இழந்து போவது என் பாகமாக இராதிருக்கக் கடவது! அதை விட வேறு எந்தத் தண்டனையையும், எனக்குத் தந்தருளும், ஆண்டவரே. ஓ என் சேசுவே, இனி உம்மை இழக்க நான் விரும்பவில்லை; அதை விட என் உயிரை இழக்க நான் மனதாய் இருக்கிறேன்; உம்மை எப்போதும் நேசிக்க விரும்புகிறேன்.

II

நீதிமன்ற அதிகாரிகள் தீர்ப்பிடப்பட்ட கைதிகளுடன் வருகிறார்கள். கைதிகளின் நடுவே சர்வேசுரனுடைய ஏக பேறான திருச்சுதனாகிய பரலோக அரசர், சிலுவை சுமத்தப்பட்டவராகத் தமது மரணத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறார்: **"அப்படியே அவர் தமது சிலுவையைச் சுமந்து கொண்டு எபிரேய மொழியில் கொல்கொத்தா எனப்பட்ட கபால ஸ்தலம் என்னும் இடத்துக்குப் புறப்பட்டுப் போனார்" (அரு.19:17).** ஓ ஆசீர்வதிக்கப்பட்ட பக்திச் சுவாலகர்களே, நீங்கள் மோட்சத்திலிருந்து புறப்பட்டு, அணிவகுத்து வந்து, அவமானக் கழுமரத்தில் கொல்லப்படும் படியாக, குற்றவாளிகளோடு கல்வாரியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற உங்கள் ஆண்டவரோடு சேர்ந்து செல்ல வருகிறீர்களா?

ஓ பயங்கரமுள்ள காட்சியே! ஒரு சர்வேசுரன் கொலை செய்யப் படுகிறார்! சில நாட்களுக்கு முன்புதான் உலக இரட்சகர் என்று பிரகடனம் செய்யப்பட்டிருந்த மெசையா இதோ! **"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா; ஆண்டவருடைய திருநாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்!" (மத்.21:9)** என்று கூக்குரலிட்ட மக்களால் வாழ்த்திப் போற்றி ஆர்ப்பரித்துக் கொண்டாடப்பட்டவர் இதோ! எல்லாவற்றிற்கும் மேலாக, கட்டுண்டவராகவும், அனைவராலும் கேலி பரிகாசம் செய்யப்படுபவராகவும், சபிக்கப்பட்டவராகவும், அருவருக்கப் பட்டவராகவும் அவரைக் காண்பது! கொடியவனான ஒரு கயவனைப்போல, சிலுவை

சுமந்தபடி அவர் மரணத்தைத் தேடிச் செல்கிறார்! இப்பேர்ப்பட்ட சர்வேசுரனை நேசிக்காத எந்த மனிதனையாவது நாம் காண முடியுமா? ஓ என் நித்திய அன்பரே, உம்மை நேசிக்கத் தொடங்குவதற்கு நான் எவ்வளவோ தாமதம் செய்தேன்; எனக்கு எஞ்சியுள்ள காலத்தில், நான் இழந்து போன காலத்திற்குத் தகுந்த பரிகாரம் செய்ய எனக்கு வரமருளும். உண்மையில் நான் செய்யக் கூடியது, நீர் என் மீது கொண்டுள்ள அன்போடு ஒப்பிடும்போது மிக அற்பமே என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் உம்மை என் முழு இருதயத்தோடு இப்போதிலிருந்தாவது நேசிப்பது என் குறைந்தபட்ச ஆசையாக இருக்கிறது. தேவரீர் இவ்வளவு அதிகமாக எனக்குக் கருணை காட்டிய பிறகும், என் இருதயத்தைக் கூறுகளாகப் பிரித்து, அவற்றின் சில பாகங்களை உம்மையன்றி சிருஷ்டிகளுக்கு நான் கொடுப்பேன் என்றால், அது நான் உமக்குச் செய்கிற மிகப் பெரும் தீமையாக இருக்கும்! இன்று முதல் என் முழு வாழ்வையும், என் சித்தத்தையும், என் சுதந்திரத்தையும் உமக்கு நான் அர்ப்பணிக்கிறேன்; உமது பிரியப்படி என்னை நடத்தும். மோட்சத்தில் என் முழு பலத்தோடும் உம்மை நான் நேசிக்கும்படியாக, மோட்சத்தை எனக்குத் தந்தருளும். நித்தியம் முழுவதும் அளவுகடந்து உம்மை நான் நேசிக்கும்படியாக, இவ்வுலகில் உம்மை அளவுகடந்து நேசிக்க நான் விரும்புகிறேன். இதை உம்மிடம் இரந்து கேட்கிறேன், உமது பேறுபலன்களின் வழியாக, இதைப் பெற்றுக்கொள்வேன் என்று நம்புகிறேன்.

செவ்வாய்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 18

I

இதோ, நம் அன்பர் சிலுவையில் அறையப்படும் நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்திருக்கிறோம், சேசுக்கிறீஸ்துநாதருக்கு மரணத்தைக் கொண்டு வந்த கடைசி வாதை! இதோ, தேவசிநேகத்தின் ஓர் அற்புதக் காட்சிக்காக ஓர் அரங்கமாக மாற்றப்பட்டுள்ள கல்வாரியில்

நாம் இருக்கிறோம், இங்கே ஒரு கடவுள் துன்பங்களின் கடலுக்கு மத்தியில் இவ்வாழ்விலிருந்து கடந்து செல்லப் போகிறார்! **“அவர்கள் கபால ஸ்தலமென்னும் இடத்திலே சேர்ந்த பின், அங்கே அவரை... சிலுவையில் அறைந்தார்கள்" (லூக்.23:33).** ஆண்டவர் மிகுந்த சிரமத்தோடு கடைசியில் ஒரு வழியாக அந்தக் குன்றின் உச்சிக்கு உயிரோடு வந்து சேர்ந்ததும், அவர்கள் மூன்றாவது முறையாக, அவரது திருக்காயங்களில் ஒட்டிய் இருக்கும் அவரது ஆடைகளை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்து உரிகிறார்கள். அதன்பின் அவரைச் சிலுவையின் மீது பிடித்துத் தள்ளுகிறார்கள். தேவ செம்மறிப் புருவையானவர் அந்தச் சித்திரவதைப் படுக்கையின் மீது தமது கரங்களை விரித்துக் கொடுக்கிறார். தமது கரங்களும், பாதங்களும் ஆணிகளால் அறையப்படும்படி அவர் அவற்றை வாதிப்பவர்களிடம் நீட்டிக் கொடுக்கிறார். தமது கண்களை மோட்சத்தை நோக்கி உயர்த்தி, தமது நித்திய பிதாவுக்குத் தமது உயிரின் மாபெரும் பலியை மனிதர்களின் இரட்சணியத்திற்காக ஒப்புக்கொடுக்கிறார். அவரது கரங்களில் ஒன்றை சிலுவையில் அறைந்த பிறகு, அவரது நரம்புகள் சுருங்கி விட்டதால், அவர்கள் மற்றொரு கரத்தை, அது அறையப்படுவதற்கு சிலுவையில் இடப் பட்டிருந்த அடையாளம் வரை கொண்டு வருவதற்குத் தங்கள் பலம் முழுவதையும் கயிறுகளையும் அவர் மீது பயன்படுத்த வேண்டியதாயிற்று. இந்த பயங்கரம் **அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு** வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, அவரது நரம்புகளும் இரத்தக்குழாய்களும் அறுபட்டுத் தெறிக்க, அவர் கடுமையான வலிப்புக்கு உள்ளானார்: “அவர்கள் ஆணிகளின் இடங்களுக்கு என் கரங்களையும், பாதங்களையும் கொண்டு வர அவற்றைக் கயிறுகளால் கட்டி இழுத்தார்கள். இதன் காரணமாக, என் நரம்புகளும், இரத்தக் குழாய்களும் முழுமையாக இழுபட்டு, இறுக்கமாகி, அதன்பின் அறுந்து தெறித்து விட்டன." இதன் காரணமாக, **“அவர்கள் என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். என் எலும்புகளையெல்லாம் எண்ணினார்கள்" (சங்.21:17,18)** என்று தாவீதரசர் ஏற்கெனவே முன்னுரைத்திருந்தபடி, அவரது எலும்புகள் எளிதாக எண்ணப்படும் அளவுக்குப் புடைத்துக் கொண்டிருந்தன. ஆ என் சேசுவே, எத்தகைய பலத்தோடு உமது

கரங்களும், பாதங்களும் மரத்தோடு அறையப்பட்டன, நீரும் மனிதர்கள் மீதுள்ள அன்பிற்காக அந்தக் கொடூர வேதனையைத் தாங்கிக் கொண்டீர்! துளைக்கப்பட்ட உமது திருக்கரங்களின் வேதனையைக் கொண்டு, மனிதர்கள் கட்டிக் கொண்ட தொடுதலின் பாவங்கள் அனைத்திற்கும் உரிய பரிகாரத்தைச் செலுத்த நீர் சித்தம் கொண்டீர். உமது திருப்பாதங்களின் வேதனையைக் கொண்டு உம்மை நோகச் செய்வதற்காக நாங்கள் எடுத்து வைத்த தவறான காலடிகள் அனைத்திற்கும் நீர் பரிகாரம் செய்தீர். ஓ சிலுவையின் அறையுண்ட என் நேசமே, இந்தத் துளைக்கப்பட்ட கரங்களால் எனக்கு உமது ஆசீர்வாதத்தைத் தந்தருளும்! ஓ, இனி நான் ஒருபோதும் உம்மை விட்டுப் பிரியாதபடியும், உமகு எதிராக மிக அடிக்க கலகம் செய்துள்ள இந்த என்னுடைய சித்தம் உமது பரிசுத்த அன்பில் ஒரே சீராக என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியும், என்னுடைய இந்த நன்றியற்ற இருதயத்தை உமது திருப்பாதங்களோடு சிலுவையில் அறைந்தருளும். உமது அன்பாலும், உம்மை மகிழ்விக்கும் ஆசையாலும் மட்டுமே நான் இயக்கப்பட எனக்கு வரமருளும். இந்தக் கழுமரத்தின்மீது தொங்குபவராக உம்மை நான் பார்க்கிறேன் என்றாலும், நீரே உலகின் ஆண்டவர், சர்வேசுரனுடைய மெய்யான திருச்சுதன், மனுக்குலத்தின் இரட்சகர் என்பதை நான் விசுவசிக்கிறேன். ஓ என் சேசுவே, என் மீது பரிதாபம் கொண்டு, என் வாழ்நாளின் எந்த நேரத்திலும், குறிப்பாக என் மரண நேரத்திலும் என்னை ஒருபோதும் கைவிடாதேயும். இந்தக் கடைசி அவஸ்தைகளிலும், நரகத்துடனான எனது கடைசிப் போராட்டங்களிலும், தேவரீர் எனக்கு உதவியாக இருந்து, உமது அன்பில் நான் சாகும்படியாக என்னைப் பலப்படுத்தும். உம்மை நான் நேசிக்கிறேன், சிலுவையில் அறையுண்ட என் நேசரே, என் முழு இருதயத்தோடும் உம்மை நான் நேசிக்கிறேன்.

II

சிலுவை மரணத்தை விட அதிகக் கசப்பான மரணம் ஏதுமில்லை என்று **அர்ச். அகுஸ்தினார்** சொல்கிறார்: "மரணத்தில் பல்வேறான எல்லா வகைகளிலும் இதை விட அதிக மோனமானது

வேறில்லை." ஏனெனில், **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** குறித்துக் காட்டுவது போல, சிலுவையில் அறையப்படுபவர்களின் கரங்களும் பாதங்களும், முற்றிலும் நரம்புகளாலும், தசைகளாலும், இரத்தக் குழாய்களாலும் உருவாக்கப்பட்ட பாகங்களின் வழியாகச் சிலுவையில் அறையப் படுகின்றன. எனவே இதில் வேதனை துல்லியமாக உணரப்படுகிறது. அவற்றிலிருந்து தொங்க விடப்படும் உடலின் பாரமே கூட ஒரு தொடர்ச்சியான வேதனைக்கும், மரண நேரம் வரை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லும் வேதனைக்கும் காரணமாகி விடுகிறது. ஆனால் சேசுநாதர் அனுபவித்த வேதனைகள் மற்ற எல்லா வேதனைகளையும் பாரதூரமான அளவுக்கு விஞ்சியவையாக இருந்தன. ஏனெனில், தேவதூதருக்கு ஒப்பான வேதபாரகர் (அர்ச். தாமஸ் அக்குயினாஸ்) கூறுகிறபடி, சேசுகிறீஸ்துநாதரின் திருச்சரீரம் உத்தமமான முறையில் உருவாக்கப்பட்டதாக மட்டுமின்றி, வேதனையை மிக விரைவாகவும், அதிகமாகவும் உணரக் கூடியதாகவும் இருந்தது-- முன்னுரைக்கப்பட்டபடி, சேசுவின் திருப்பாடுகளை மனதில் கொண்டு பரிசுத்த ஆவியானவரால் உருவாக்கப்பட்ட அந்தத் திருச்சரீரம் அதிகமாக வேதனையை உணரக்கூடியதாக இருந்தது. **“எனக்கு ஒரு சரீரத்தைப் பொருத்தினீர்" (எபி.10:5)** என்று அப்போஸ்தலர் இதற்கு சான்று பகர்கிறார். மேலும், மனுக்குலம் முழுவதின் பாவங்களுக்குத் தகுதியான உலகத் தண்டனைக்குப் பரிகாரம் செய்யப் போதுமானதாக இருக்கும்படி, மிக அதிகமாகத் துன்பப்பட சேசுகிறீஸ்துநாதர் தேர்ந்துகொண்டார் என்று அர்ச். தாமஸ் அக்குயினாஸ் கூறுகிறார். சிலுவையில் அறையப்பட்டதில், அவரது கரங்களின் மீது இருபத்தெட்டு சுத்தியல் அடிகளும், பாதங்களின் மீது முப்பத்தாறு சுத்தியல் அடிகளும் அடிக்கப்பட்டன என்று தியேப்போலி என்பவர் நமக்கு அறிவிக்கிறார்.

ஓ என் ஆத்துமமே, உன் ஆண்டவரைப் பார், உன் வாழ்வாக இருப்பவர் அந்த மரத்தின்மீது தொங்குவதைப் பார்: **“உன் ஜீவன் உனக்கு முன்பாகத் தொங்கிக் கொண்டிருக்கும்" (உபா.28:66)** அந்த ஜீவன் கொடூர ஆணிகளால் வேதனையின் மரத்தில் அறையப்பட்டுத் துடித்துக் கொண்டிருப்பதைப் பார். அவருக்கு இளைப்பாற ஓர்

இடமில்லை. ஒரு சமயம் அவர் தம் கரங்களின் மீது எடையைப் போடுகிறார், அடுத்த நிமிடம் தமது பாதங்களில் தம் பாரத்தை இறக்குகிறார். எந்தப் பக்கம் சாய்ந்தாலும், வேதனை அதிகரிக்கிறது. கொடுமைப்படுத்தப்பட்ட திருமுகத்தை அவர் இரு பக்கமும் மாறி மாறித் திருப்புகிறார். தமது மார்பின்மீது அதைத் தொங்க விடுகிறார் என்றால், அதிகப்படியான பாரத்தின் காரணமாக, அவரது கரங்கள் அதிகமாகக் கிழிகின்றன! தமது தோள்களின் மீது தம் திருச்சிரசை அவர் வைக்கிறார் என்றால், தோள்கள் முட்களால் துளைக்கப் படுகின்றன. திரும்ப சிலுவையின் மீதே சாய்கிறார் என்றால், முட்கள் திருச்சிரசுக்குள் இன்னும் ஆழமாக ஊடுருவுகின்றன. ஆ என் சேசுவே, எவ்வளவு கசப்பான ஒரு மரணத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்! ஓ என் சிலுவையில் அறையுண்ட மீட்பரே, அவமானம் மற்றும் வேதனையின் இந்தச் சிங்காசனத்தில் நான் உம்மை ஆராதிக்கிறேன். நீர் ஓர் அரசராய் இருக்கிறீர் என்று இந்தச் சிலுவையின் மீதுஎழுதப்பட்டுள்ளதை நான் வாசிக்கிறேன்: “நாசரேத்தூர் சேசு யூதர்களின் அரசன்." ஆனால் இந்த நிந்தையான பட்டத்தைத் தவிர்த்து, நீர் அரசர்தான் என்பதற்கு என்ன சாட்சியத்தைத் தருகிறீர்? ஆ, இந்தக் கரங்கள் ஆணிகளால் பிணைக்கப்பட்டுள்ளன, இந்தத் திருச்சிரசு முட்களால் ஊடுருவப் பட்டிருக்கிறது! இந்தத் துயரத்தின் சிங்காசனம், புண்ணாக்கப் பட்டிருக்கிற இந்தத் திருச்சரீரம், நீர்தான் அரசர், ஆனால் அன்பின் அரசர் என்பதை நான் நன்கு அறிந்து கொள்ளச் செய்கிறது! ஆகவே, என் மீதுள்ள அன்பினால், அசையாதபடி அறையுண்டிருக்கிற உமது திருப்பாதங்களை முத்தமிடும்படியாக, நான் தாழ்ச்சியோடும், கனிவுள்ள அன்போடும் அவற்றை நெருங்கி வருகிறேன். நீர் அன்பின் பலிப்பொருளாக ஆக்கப்பட்டு, தேவ நீதிக்கு உம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் திருவுளங் கொண்ட பலிபீடமாகிய இந்தச் சிலுவையை என் கரங்களால் நான் பற்றிப் பிடிக்கிறேன்: “மரண மட்டுக்கும், அதுவும் சிலுவை மரணமட்டுக்கும் கீழ்ப்படிதல் உள்ளவரானார்" (பிலிப்.2:8). ஓ எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தந்த ஆசீர்வதிக்கப்பட்ட கீழ்ப்படிதலே! ஓ என் இரட்சகரே, நீர் எனக்காகப் பாவப் பரிகாரத்தைச் செலுத்தாமல் இருந்திருந்தால், நான் என்ன கதியை அடைந்திருப்பேன்! ஓ என் அன்பரே, நான்

உமக்கு நன்றி செலுத்துகிறேன், இந்த பக்திக்குரிய கீழ்ப்படிதலின் பேறுபலன்களைப் பார்த்து, நான் அனைத்திலும் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறேன். பரலோகத்தை நான் ஆசிப்பதற்கான முழுக் காரணம், என் நேசரே, தேவரீரை அடியேன் என் முழு பலத்தோடும் என்றென்றும் நேசிக்கும்படியாகவே.

புதன்

சேசுகிறீஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய தியானமும், அவற்றின் மீதான நேசமுள்ள நாட்டங்களும் - 19

I

இதோ, இப்போது தமது ஆத்துமத்தைப் பிதாவிடம் கையளிக்கும் நிலையில், சிலுவையின் மீது தொங்குகிற பரலோக அரசரைப் பார்! "**உமது கரங்களின் நடுவிலுள்ள இக்காயங்கள் என்ன?" (சக்கரியாஸ். 13:6)** என்று தீர்க்கதரிசியோடு சேர்ந்து நாமும் அவரிடம் கேட்போம். ஓ என் சேசுவே, உமது கரங்களின் நடுவிலுள்ள இந்தக் காயங்கள் என்ன என்று எனக்குக் கூறும். மடாதிபதி ரூப்பெர்ட் சேசுவுக்காகப் பதில் கூறுகிறார்: "இவை பிறர் சிநேகத்தின் நினைவுச் சின்னங்கள், மனித மீட்பின் விலை." அவை உங்கள் மீது நான் கொண்டுள்ள மாபெரும் அன்பின் அடையாளங்கள் என்கிறார் மீட்பர்; அவை, உங்கள் எதிரிகளின் கரங்களிலிருந்தும், நித்திய மரணத்திலிருந்தும் உங்களை விடுவிக்க நான் தந்த விலையாக இருக்கின்றன. ஆகவே, பிரமாணிக்கமுள்ள ஆத்துமமே, இவ்வளவு அதிகமாக உன்னை நேசித்திருக்கிற உன் சர்வேசுரனை நேசிப்பாயாக. எப்போதாவது அவரது அன்பின்மீது உனக்கு சந்தேகம் வருமானால், உன் கண்களைத் திருப்பு என்கிறார் அர்ச். வில்லனோவா தோமையார்: உன் கண்களைத் திருப்பி, அந்தச் சிலுவையை, அந்த வேதனைகளை, உனக்காக அவர் அனுபவித்த அந்தக் கசப்பான மரணத்தைப் பார்: ஏனெனில் இத்தகைய சாட்சியங்கள், உன் இரட்சகர் உன்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறார் என்பதை நீ நிச்சயமாக அறிந்துகொள்ளச் செய்யும்: "திருச்சிலுவை சாட்சியம் கூறுகிறது, வேதனைகள் சாட்சியம் கூறுகின்றன, உனக்காக அவர் அனுபவித்த கசப்பான மரணம் இதற்கு சாட்சியம் கூறுகிறது." **அர்ச். பெர்னார்ட்** இதைத் தொடர்ந்து, ஒரு மெய்யான நேசத்தைக் கொண்டு சேசுநாதர் நம்மை நேசிக்கிறார் என்று திருச்சிலுவை கூக்குரலிடுகிறது, சேசுவின் ஒவ்வொரு காயமும் கூக்குரலிடுகிறது என்கிறார்: "அவர் உண்மையாகவே நேசிக்கிறார் என்று சிலுவை அறிக்கையிடுகிறது, திருக்காயங்கள் அறிக்கையிடுகின்றன."

ஓ என் சேசுவே, துக்கமும், வருத்தமும் உம்மீது எவ்வளவு பாரமாக இறங்கியுள்ளன என்பதை நான் காண்கிறேன்! ஆ, "இந்த மரத்தின் மீது கொடிய வேதனையால் மரிக்கும் அளவுக்கு நான் என்னைத் தாழ்த்தியும், மிகக் குறைவான ஆத்துமங்களே என்னை நேசிக்கும் இருதயத்தைக் கொண்டுள்ளன!' என்று நீர் நினைக்க எவ்வளவோ அதிகக் காரணம் உள்ளது! ஓ என் தேவனே, உமக்கு வசீகரிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மத்தியிலும் கூட எவ்வளவு அதிகமான இருதயங்கள், இந்த கணத்தில் உம்மை நேசியாமல் இருக்கின்றன, அல்லது போதிய அளவுக்கு நேசியாமல் இருக்கின்றன! ஓ தேவ அன்பின் அழகிய தீச்சுவாலையே, சிலுவையின் மீது ஒரு சர்வேசுரனுடைய உயிரையே சுட்டெரித்த தீப்பிழம்பே, என்னையும் சுட்டெரிக்கக் கருணை கொள்வாயாக; என் இருதயத்தில் வாழும் ஒழுங்கற்ற நாட்டங்கள் அனைத்தையும் சுட்டெரித்து, என் அன்புள்ள ஆண்டவருக்காக மட்டுமே பற்றியெரிபவனாகவும், என்மீது தமக்குள்ள அன்பிற்காக, அவமானச் சிலுவையின் மீது, கொடிய வாதைகளால் விழுங்கப்பட்டவராகத் தம் வாழ்வை முடித்துக் கொள்ள சித்தங்கொண்ட அவர் மீது ஏக்கம் கொண்டு பெருமூச்சு விடுபவனாகவும் என்னை ஆக்குவாயாக! ஓ என் அன்புக்குரிய சேசுவே, எப்போதும், என்றென்றும் உம்மை, உம்மை மாத்திரமே நான் நேசிக்க விரும்புகிறேன். என் நேசரும், என் தேவனும், என் சர்வமுமான உம்மை நேசிப்பதே என் ஒரே விருப்பமாக இருக்கிறது!

II

“உன் கண்கள் எப்போதும் உன் ஆசிரியரைத் தரிசிக்கும்" (இசை.30:20). மனிதர்கள் தங்கள் சொந்தக் கண்களால் தங்கள் தெய்வீக குருவைக் காண்பார்கள் என்று அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. சேசுநாதரின் வாழ்வு முழுவதும் உத்தமதனத்தின் ஒரு தொடர்ச்சியான மாதிரிகையும், அதன் பள்ளிக்கூடமுமாக இருந்தது. ஆனால் தமது திருச்சிலுவை யாகிய போதக மேடையிலிருந்து போதித்ததை விட அதிக நன்றாக, வேறு எங்கிருந்தும் அவர் தமது மிக உன்னதமான புண்ணியங்களை

ஒருபோதும் நமக்குக் கற்பித்ததில்லை. அங்கே, குறிப்பாக நோயுற்ற காலத்தில், பொறுமையாயிருப்பது பற்றிய எவ்வளவு ஆச்சரியத்திற்குரிய போதகத்தை அவர் நமக்குத் தருகிறார்! ஏனெனில் எத்தகைய ஒரு நிலையான தன்மையோடு சிலுவையின் மீதிருக்கும் சேசுநாதர் எத்தகைய உத்தமமான பொறுமையோடு தமது மிகக் கசப்பான மரணத்தின் வேதனைகளைத் தாங்கிக் கொள்கிறார்! அங்கே தமது சொந்த முன்மாதிரிகையைக் கொண்டு, தெய்வீகக் கட்டளைகளுக்கு நுட்பமான கீழ்ப்படிதலையும், கடவுளின் சித்தத்திற்கு உத்தமமான முறையில் அமைந்திருப்பதையும் அவர் நமக்குக் கற்பிக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் எப்படி நேசிக்க வேண்டுமென அவர் நமக்குக் கற்பிக்கிறார். இளையவரான சுவாமி பவுல் செஞ்ஞேரி தம்மிடம் பாவசங்கீர்த்தனம் செய்த ஒரு பெண்ணுக்கு இப்படி எழுதினார்: "உன் பாடுபட்ட சுரூபத்தின் அடிப்பகுதியில், "நேசிப்பது என்றால் என்ன என்று காணுங்கள்" என்ற வார்த்தைகளை நீ எப்போதும் எழுதி வைத்திருக்க வேண்டும்."

சிரமமான எதையாவது தவிர்க்கும்படி, அவரது பார்வைக்குப் பிரியமான ஏதாவது ஒரு வேலையை நாம் கைவிடும்போதெல்லாம், அல்லது அவரது வரப்பிரசாதத்தையும், அன்பையும் கூட வேண்டாமென்று விலக்கி விடும் அளவுக்கு நாம் செல்லும் சமயங்களில், நம் மீட்பர் சிலுவையிலிருந்து நம் அனைவரையும் நோக்கி, "நேசிப்பது என்றால் என்னவென்று காணுங்கள்" என்று சொல்வதாகத் தோன்றுகிறது. மரணம் வரைக்கும் அவர் நம்மை நேசித்திருக்கிறார். தமது உயிரை சிலுவையின் மீது தம் உயிரைப் பிதாவிடம் கையளிக்கும் வரை அவர் அதன் மீதிருந்து இறங்கி வரவில்லை. ஆ என் சேசுவே, எனக்காக சாகும் அளவுக்குக் கூட நீர் என்னை நேசித்திருக்கிறீர்; நானும் உமக்காக சாகும் அளவுக்கு உம்மை நேசிக்க விரும்புகிறேன். கடந்த காலத்தில் நான் உம்மை எவ்வளவு அடிக்கடி நோகச் செய்து, உமக்குத் துரோகம் செய்திருக்கிறேன்! ஓ என் ஆண்டவரே, என்னைப் பழிதீர்த்துக் கொள்ளும்! ஆயினும் அது தயவிரக்கம் மற்றும் நேசத்தின் பழிவாங்குதலாக மட்டும் இருப்பதாக. உம்மை நோகச் செய்தது பற்றி நான் என் பாவங்களுக்காகத் தொடர்ந்து துக்கத்திலும்,

வேதனையிலும் என் வாழ்நாளைச் செலவிடும்படியாக, என் பாவங்களின்மீது மெய்யான உத்தம மனஸ்தாபத்தை என்மீது பொழிந்தருளும். உம்மை வேதனைக்குள்ளாக்குவதை விட, வரவிருக்கும் காலத்தில் ஒவ்வொரு தீமையையும் அனுபவித்து ஏற்றுக்கொள்ள நான் மனதாயிருப்பதாக அறிக்கையிடுகிறேன். என் தேவனும், என் மீட்பரும், என் நம்பிக்கையும், என் பொக்கிஷமும், என் சர்வமுமான உம்மை மனநோகச் செய்வதை விட வேறு என்ன பெரிய தீமை எனக்கு நேரிட முடியும்?

வியாழன்

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

“பிதாவே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்!'' (1)

I

ஓ, மனிதர்கள் மீது சேசுவுக்குள்ள கனிந்த நேசமே! இரட்சகர் அவரது எதிரிகளால் காயப்படுத்தப்பட்டபோது, அவர் அவர்களுக்காக மன்னிப்பை வேண்டினார்; ஏனெனில், அவர்களிடமிருந்து தாம் பெற்ற காயங்களையும், அவர்கள் தம்மை உள்ளாக்கிய மரணத்தையும் பற்றி அவர் அதிகமாக நினைக்காமல், அவர்களுக்காக மரிக்கும் நிலைக்குத் தம்மை உள்ளாக்கிய தமது பேரன்பைப் பற்றி மட்டுமே நினைத்தார்.

ஆனால், “தாமே அவர்களுடைய பாவங்களை மன்னித்திருக்க முடியும் என்ற நிலையில், சேசுநாதர் ஏன் அவர்களை மன்னிக்குமாறு பிதாவிடம் ஜெபித்தார்?'' என்று சிலர் கேட்கலாம். அவர்களைத் தம்மால் மன்னிக்க முடியாது என்பதற்காக அல்ல, மாறாக, நம்மைத் துன்புறுத்துபவர்களுக்காக ஜெபிக்க நமக்குக் கற்றுத் தருவதற்காகவே அவர் இவ்வாறு ஜெபித்தார் என்று அர்ச். பெர்னார்ட் பதிலளிக்கிறார். இந்தப் பரிசுத்த மடாதிபர் மற்றொரு இடத்தில்: “அவர் ''மன்னியும்!' என்று கூக்குரலிடுகிறார். அவர்கள் “சிலுவையில் அறையும்!' என்று கூச்சலிடுகிறார்கள்'' என்று கூறி வியக்கிறார். யூதர்களை இரட்சிப்பதற்காக சேசுநாதர் உழைத்துக் கொண்டிருந்தபோது,

தங்களை அழித்துக் கொள்வதற்காக அவர்கள் உழைத்துக் கொண்டிருந்தார்கள் என்று ஷார்த்ரேயின் ஆர்னால்ட் கூறுகிறார்; ஆனால் தேவ சுதனின் நேசமானது, அந்த நன்றியற்ற மனிதர்களின் குருட்டுத்தனத்தை விட கடவுளுக்கு முன்பாக அதிக வல்லமையுள்ளதாக இருந்தது. “கிறீஸ்துநாதரின் திரு இரத்தத்தைச் சிந்துபவனும் கூட, அதே திரு இரத்தத்தால் வாழும்படி செய்யப்படுகிறான்" என்று அர்ச். சிப்ரியன் எழுதுகிறார். சேசு கிறீஸ்துநாதர், தாம் மரிப்பதில், எல்லா மனிதர்களையும் இரட்சிக்க எவ்வளவு பெரும் ஆசை கொண்டிருந்தார் என்றால், வாதைகளைக் கொண்டு தமது இரத்தத்தைச் சிந்திய அவரது எதிரிகளையும் கூட அவர் தமது திரு இரத்தத்தில் பங்கெடுப்பவர்களாக ஆக்கினார். “சிலுவையின் மீது உன் கடவுளைப் பார்; தம்மைச் சிலுவையில் அறைபவர்களுக்காக அவர் எப்படி ஜெபிக்கிறார் என்று பார்; அதன்பின் உன்னை நோகச் செய்த உன் சகோதரனை மன்னிக்க மறுக்க உன்னால் முடிகிறதா என்று பார்!" என்று **அர்ச். அகுஸ்தினார்** சொல்கிறார்.

II

அப்போஸ்தலர் நடபடியாகமத்தில் நாம் வாசிப்பது போல, கிறீஸ்துநாதரின் இந்த ஜெபத்தின் வழியாகத்தான் பல்லாயிரக்கணக்கான யூதர்கள் அர்ச். சின்னப்பரின் போதகத்தால் மனந்திரும்பினார்கள் என்று அர்ச். சிங்கராயர் கூறுகிறார். சேசு கிறீஸ்துநாதரின் இந்த ஜெபம் தொடர்ந்து பயனற்றதாக இருப்பதைக் கடவுள் விரும்பவில்லை. ஆகவே, அதே நேரத்தில் அவர் ஏராளமான யூதர்கள் விசுவாசத்தைத் தழுவிக்கொள்ளும்படி செய்தார். ஆனால் அவர்கள் எல்லோரும் ஏன் மனந்திரும்பவில்லை? சேசுகிறீஸ்துநாதரின் ஜெபம் நிபந்தனையுள்ளது, மனந்திருப்பப்பட்டவர்கள், **“நீங்கள் பரிசுத்த ஆவியானவரை எப்போதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" (அப்.7:51)** என்ற வார்த்தைகள் யாரைப் பற்றிச் சொல்லப்பட்டதோ, அவர்களைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று நான் இதற்குப் பதில் கூறுகிறேன்.

நாம் அனைவரும் சர்வேசுரனிடம் பின்வருமாறு ஜெபிக்கும்படியாக, சேசுநாதர் இந்த ஜெபத்தில் எல்லாப் பாவிகளையும் உள்ளடக்கினார்:

ஓ நித்திய பிதாவே, எங்களை மன்னிக்கும்படி உம்மிடம் ஜெபித்த உமது நேசப் பிரிய குமாரனின் ஜெபத்தைக் கேட்டருளும். இந்த மன்னிப்புக்கு நாங்கள் தகுதியற்றவர்கள், ஆனால் சேசுகிறீஸ்து நாதர் இந்த மன்னிப்பைப் பெற்றுத் தர தகுதியுள்ளவராக இருக்கிறார். அவர் தமது திருமரணத்தால் தேவைக்கும் அதிகமாகவும் அபரிமிதமாகவும் எங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் செய்திருக்கிறார். இல்லை, என் தேவனே, நான் யூதர்களைப் போலப் பிடிவாதமுள்ளவனாக இருக்க மாட்டேன்; ஓ என் பிதாவே, உம்மை நோகச் செய்ததற்காக என் முழு இருதயத்தோடும் நான் மனஸ்தாபப் படுகிறேன், சேசுநாதரின் பேறுபலன்களின் வழியாக நான் உமது மன்னிப்பைக் கேட்கிறேன். என் சேசுவே, நான் ஏழையும் நோயாளியுமாக இருக்கிறேன் என்றும், என் பாவங்கள் வழியாக, நித்தியத்திற்கும் இழக்கப்படத் தகுதியுள்ளவனாக இருக்கிறேன் என்றும் நீர் அறிவீர்; ஆயினும் நோயாளிகளைக் குணப்படுத்துவதும், உம்மை நோகச் செய்ததற்காக மனஸ்தாபப் படுபவர்களை இரட்சிப்பதுமான நோக்கத்திற்காகவே நீர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தீர். நீர் **"இருதயம் நொந்தவர்களைக் குணப்படுத்துகிறீர்'' (இசை.61:1)** என்று தீர்க்கதரிசியானவர் கூறுகிறார். மேலும் அர்ச். மத்தேயு உம் வார்த்தையாக**, "மனுமகன் சேதமாய்ப் போனதை இரட்சிக்க வந்தார்''** என்று எழுதுகிறார் **(மத்.18:11)**.

வெள்ளி

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

"இன்றே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்!'' (2)

I

சேசுநாதரோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களைப் பற்றி அர்ச். லூக்காஸ் எழுதுகிறார். அவர்களில் ஒருவர் தொடர்ந்து பிடிவாதமுள்ளவனாக இருந்தான். மற்றொருவன் மனந்திரும்பினான். தனது பரிதாபத்திற்குரிய தோழன் சேசுகிறீஸ்துவுக்கு எதிராக, **"நீ கிறீஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்"** என்று தேவதூஷணம் உரைப்பதைக் கேட்ட அவன், அந்தக் கெட்ட கள்ளனை நோக்கித் திரும்பி, தாங்கள் தண்டனை பெறுவது நியாயம்தான் என்றும், ஆனால் சேசுநாதர் மாசற்றவர் என்றும் கூறினான். அதன்பின் அவன் சேசுவிடம் திரும்பி,: **"சுவாமி, தேவரீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்போது, அடியேனை நினைத்தருளும்"** என்று விண்ணப்பம் செய்தான். இந்த வார்த்தைகளின் மூலம் அவன் சேசுகிறீஸ்துவை மெய்யான ஆண்டவர் என்றும் பரலோக அரசர் என்றும் அங்கீகரித்துக் கொண்டான். அதே நாளில் சேசுநாதர் அவனுக்குப் பரலோகத்தை வாக்களித்தார்: **"இன்றே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" (லூக்.23:39-43).** இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக, ஆண்டவர் அதே நாளில், தமது மரணத்திற்குப் பின் உடனடியாக மனந்திரும்பிய கள்ளனுக்குத் தம்மை வெளிப்படையாகக் காண்பித்து, அவனுக்கு மோட்ச பாக்கியம் தந்தார் என்றாலும், அவன் மோட்சத்தில் நுழையும் வரை அதன் முழு இன்பத்தையும் அவர் அவனுக்குத் தரவில்லை என்று அறிஞரான ஒரு ஞான ஆசிரியர் கூறுகிறார்.

ஷார்த்தேயின் ஆர்னால்ட் ஏழு வாக்கியங்களைப் பற்றிய தமது ஆய்வுக் கட்டுரையில், நல்ல கள்ளன் தனது மரண நேரத்தில் செயல்படுத்திய எல்லாப் புண்ணியங்களைப் பற்றியும் குறித்துக் காட்டுகிறார்: ***"அவன் விசுவசித்தான், மனஸ்தாபப்பட்டான், பாவ சங்கீர்த்தனம் செய்தான், போதித்தான், நேசித்தான், நம்பினான், ஜெபித்தான்."***

"தேவரீர் உமது இராச்சியத்தில் சேரும்போது" என்று சொன்ன போது, அவன் விசுவாசத்தைச் செயல்படுத்தினான். சேசுநாதர் தமது மரணத்திற்குப் பிறகு, தமது மகிமையுள்ள இராச்சியத்திற்குள்

நுழைவார் என்று அவன் விசுவசித்தான். மரிக்கிறவராக அவன் கண்டவர் ஆட்சி செலுத்த இருந்தார் என்பதை அவன் விசுவசித்தான் என்று அர்ச். கிரகோரியார் கூறுகிறார்.

"நமக்கு இது நியாயம்தான், நம் செய்கைகளுக்குத் தக்க சம்பாவனையைப் பெறுகிறோம்" என்று அவன் சொன்னபோது, அவன் தன் பாவங்களுக்கு மனஸ்தாபத்தையும், தனது பாவசங்கீர்த்தனத்தையும் செயற்படுத்தினான். தனது பாவசங்கீர்த்தனத்திற்கு முன் தன் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நம்பும் துணிவு அவனிடம் இருக்கவில்லை, தன் குற்றத்தை அறிக்கையிட்டுத் தன் பாவங்களின் சுமையை இறக்கி வைக்கும் வரை, "என்னை நினைவுகூரும்" என்று சொல்ல அவன் துணியவில்லை என்று **அர்ச். அகுஸ்தினார்** அவதானிக்கிறார். இதைப் பற்றி **அர்ச். அத்தனாசியார்** ஆச்சரியத்தோடு: ***"ஓ ஆசீர்வதிக்கப்பட்ட கள்ளனே, நீ அந்தப் பாவசங்கீர்த்தனத்தால் ஒரு இராச்சியத்தையே திருடிக் கொண்டாய்"*** என்கிறார்.

II

இந்தப் பரிசுத்த மனிதன் வேறு மேன்மை மிக்க புண்ணியங்களையும் கொண்டிருந்தான். அவன் சேசுநாதரின் மாசற்றதனத்தைப் பற்றி அறிக்கையிட்டு போதித்தான். **"இவரோ ஒரு பொல்லாப்பும் செய்தவரல்ல."** அவன் தேவசிநேகத்தைப் பயிற்சி செய்தான். "நமக்கு இது நியாயம்தான், நமது செய்கைகளுக்குத் தக்க சம்பாவனையைப் பெறுகிறோம்" என்று சொல்லி, அவன் தன் மரணத்தைத் தன் பாவங்களுக்குரிய தண்டனையாக அமைந்த மனதோடு ஏற்றுக் கொண்டான். இதன் காரணமாக, அர்ச். சிப்ரியனும், அர்ச். அகுஸ்தினாரும் எந்த மனவுறுத்தலும் இன்றி அவனை ஒரு வேதசாட்சி என்று அழைக்கிறார்கள்; கொலைஞர்கள், அவன் சேசுநாதரின் மாசற்றதனத்தை அறிக்கையிட்டான் என்பதால் அதிகரிக்கப்பட்ட கோப வெறியுடன் அவனது கால்களை முறித்தார்கள் என்பதால், பாக்கியம் பெற்ற இந்தக் கள்ளன் ஓர் உண்மையான வேதசாட்சியாக இருந்தான், தனது ஆண்டவரின் மீது

தனக்குள்ள அன்பிற்காக, இந்த வாதையை இந்தப் புனிதன் மனமுவந்து ஏற்றுக்கொண்டான் என்று சில்வேயிரா கூறுகிறார்.

இந்தச் சூழ்நிலையில் கடவுளின் நன்மைத்தனத்தையும் நாம் குறித்துக் காட்ட வேண்டும். **அர்ச். அம்புரோஸ்** கூறுவது போல, நாம் கேட்பதை விட அவர் எப்போதும் நமக்கு அதிகமாகவே தருகிறார்: அந்தக் கள்ளன் தன்னை நினைவுகூரும்படி மட்டும்தான் ஜெபித்தான். ஆனால் சேசுநாதரோ, **"இன்றே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய்"** என்று வாக்களித்தார். மேலும், **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** இதைப் பற்றி, இந்தக் கள்ளனுக்கு முன் பரலோகத்தை சொந்தமாக்கிக் கொள்வதற்கு யாரும் தகுதி பெறவில்லை என்கிறார். இவ்வாறு, கடவுள் எசேக்கியேலின் மூலம் சொன்னது உறுதிப்படுத்தப்படுகிறது: பாவியானவன் இருதய பூர்வமாகத் தன் பாவங்களுக்கு மனம் வருந்தும்போது, அவன் கட்டிக்கொண்ட எல்லாப் பாவங்களையும் தாம் மறந்து விட்டது போன்ற அதே முறையில் கடவுள் அவனை மன்னிக்கிறார். மேலும், கடவுள் நம் நலனைப் பற்றி எவ்வளவு அவசரமுள்ளவராக இருக்கிறார் என்றால், நாம் ஜெபிக்கும்போது, அவர் அதே கணத்தில் நம் ஜெபத்தைக் கேட்கிறார் என்று இசையாஸ் நாம் புரிந்து கொள்ளச் செய்கிறார். மனஸ்தாபப்படும் பாவிகளை அரவணைத்துக் கொள்ளக் கடவுள் எப்போதும் ஆயத்தமாய் இருப்பதாக அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார்.

இவ்வாறு, கெட்ட கள்ளனின் சிலுவை, பொறுமையின்மையோடு தாங்கிக் கொள்ளப் பட்டபோது, அது அவனை நரகத்திற்கு இட்டுச் செல்லும் செங்குத்தான மலைச்சரிவாக ஆனது. நல்ல கள்ளனின் சிலுவை, பொறுமையோடு அவனால் தாங்கப்பட்டபோது, அது அவனுக்கு மோட்சத்திற்கான ஏணியாக ஆனது. ஓ உன் மரணத்தை உன் இரட்சகரின் மரணத்தோடு இணைக்கும் பாக்கியத்தைப் பெற்ற பரிசுத்த கள்ளனே, நீ பேறுபெற்றவன்!

ஓ என் சேசுவே, இன்றுமுதல் நான் என் வாழ்வை உமக்குப் பலியாக ஒப்புக் கொடுக்கிறேன். சிலுவையின் மீது கடவுளுக்கு நீர் ஒப்புக்கொடுத்த உமது பலியோடு என் வாழ்வின் பலியையும் இணைக்கும்படி, என் மரண நேரத்தில் எனக்கு உதவும்படி

வரப்பிரசாதத்தைத் தேடுகிறேன். மேலும், ஒவ்வொரு உலக நாட்டமும் உரிந்து அகற்றப்பட்ட மாசற்ற நேசத்தோடு உம்மை நேசித்து, நித்திய காலமும் என் முழு வல்லமையோடும் உம்மை நேசிக்கும் வரத்தை அடைந்து கொள்வேன் என்றும் நம்பிய் இருக்கிறேன்.

சனி

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

"ஸ்திரீயே, இதோ உம் மகன் - இதோ உன் தாய்." (3)

I

கல்வாரியின்மீது பல பெண்கள் தொலைவிலிருந்து சிலுவையின் மீதிருந்த சேசுவைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்று அர்ச். மாற்கு சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம். அவர்களில் மரிய மதலேனம்மாளும் இருந்தாள். இந்தப் பரிசுத்த பெண்களில் தேவமாதாவும் இருந்தார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனால் அர்ச். அருளப்பர், திவ்விய கன்னிகை தொலைவில் அல்ல, மாறாக, சிலுவைக்கு அருகில் கிளேயோப்பா மரியம்மாளோடும், மரிய மதலேனம்மாளோடும் நின்று கொண்டிருந்தார்கள் என்று கூறுகிறார் (அரு.19:25). யூத்திமியுஸ் என்பவர் இந்த முரண்பாட்டைச் சரிசெய்யும் முயற்சியாக, திவ்விய கன்னிகை தனது திருமகன் மரணத்தை நெருங்கி வருவதைக் கண்டு மற்ற பெண்களிடமிருந்து விலகி, சிலுவைக்கு நெருக்கமாக வந்தார்கள், அதைச் சூழ்ந்து நின்ற போர்வீரர்கள் பற்றிய அச்சத்தின் மீது அவர்கள் வெற்றி கொண்டார்கள், தன் நேச மகனுக்கு அருகில் வரும்படியாக, தண்டனைத் தீர்ப்பிடப் பட்டவர்களுக்குக் காவலாக இருந்த போர்வீரர்களின் அவமானங்கள், எதிர்ப்புகளை தேவ அன்னை பொறுமையோடு தாங்கிக் கொண்டார்கள் என்று கூறுகிறார். சேசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மற்றொரு அறிஞரான ஞான ஆசிரியர் சொல்வதாவது: "அங்கே அவரது நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் தொலைவிலிருந்தே அவரைக் கவனித்துக்

கொண்டிருந்தார்கள். ஆனால் திவ்விய கன்னிகையும், மரிய மதலேனம்மாளும், மற்றொரு மரியாளும் அருளப்பரோடு சிலுவைக்கு அருகில் நின்றார்கள்; ஆகவே, சேசுநாதர் தமது தாயாரையும், அருளப்பரையும் கண்டபோது, மேலே குறிப்பிடப் பட்ட வார்த்தைகளை அவர்களிடம் கூறினார். உண்மையாகவே அவர்கள் ஒரு தாயாக இருந்தார்கள். மரண பயத்திலும் கூட அவர்கள் தன் திருமகனைத் தனியே விட்டு விடவில்லை. சில தாய்மார் தங்கள் குழந்தைகள் மரிப்பதைக் காணும்போது, அங்கிருந்து ஓடிப் போகிறார்கள். சாவிலிருந்து தங்கள் குழந்தைகளை விடுவிக்கத் தங்களால் இயலாதபோது, அந்தச் சாவை சகித்துக் கொள்ள முடியாதபடி குழந்தைகளின் மீது அவர்களுக்கு உள்ள அன்பு அவர்கள் ஓடிப் போகச் செய்கிறது. ஆனால் பரிசுத்த அன்னை, தன் திருமகன் எவ்வளவு அதிகமாக மரணத்தை நெருங்கிச் சென்றாரோ, அவ்வளவு அதிகமாக அவரது திருச்சிலுவையை நெருங்கி வந்தார்கள்."

கொடிய வியாகுலத்தால் நொறுக்கப்பட்ட தேவமாதா இவ்வாறு சிலுவையின் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களது திருமகன் தம் உயிரைப் பலியாக்கிக் கொண்டிருந்தது போலவே, அவர்களும் தனது பயங்கர வேதனைகளை மனிதர்களின் இரட்சணியத்துக்காக ஒப்புக்கொடுத்தார்கள். இவ்வாறு தனது திருமகன் தமது மரணத்தில் அனுபவித்த எல்லா வேதனைகளையும், அவமானங்களையும் பூரண அமைதலோடு அவர்கள் அவரோடு பகிர்ந்து கொண்டார்கள். மாமரி துக்க மிகுதியால் சிலுவையின் அடியில் மயங்கி விழுந்தார்கள் என்று சொல்பவர்கள் மாமரியின் திடமனதையும் நிலைத்த தன்மையையும் அவமதிக்கிறார்கள். அவர்கள் வீரமிக்க பெண்ணாக இருந்தார்கள். அவர்கள் மயங்கி விழவுமில்லை, அழவுமில்லை. “அவர்கள் அழுது கொண்டிருப்பதைப் பற்றியல்ல, நின்று கொண்டிருப்பதைப் பற்றியே நான் வாசிக்கிறேன்" என்கிறார் அர்ச். அம்புரோஸ்.

II

தனது திருமகனின் திருப்பாடுகளில் திவ்விய கன்னிகை அனுபவித்த கொடிய வியாகுலம் மனித இருதயம் தாங்கக் கூடிய வேதனைக்கெல்லாம் அப்பாற்பட்டதாயிருந்தது. ஆனால் மாமரியின் கொடும் துயரம், தங்கள் குழந்தைகளின் துன்பங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிற மற்ற தாய்மாரின் துயரங்ளைப் போலப் பலனற்ற துயரமாக இருக்கவில்லை. அவர்களுடைய பெரும் வியாகுலத்தின் வழியாகவும், நேசத்தின் வழியாகவும், அர்ச். அகுஸ்தினாரின் கருத்துப்படி, நம் சிரசாயிருப்பவருக்கு அவர்கள் சுபாவமான தாயாராக இருப்பது போலவே, அவரது பிரமாணிக்கமுள்ள உறுப்பினர்களாகிய நமக்கு அவர்கள் அந்த நேரத்தில் ஆன்ம தாயார் ஆனார்கள். இவ்வாறு தனது அன்பைக் கொண்டு, அவரோடு ஒத்துழைத்து, நாம் திருச்சபையின் மக்களாகப் பிறக்கவும், இருக்கவும் காரணமாக இருக்கிறார்கள்.

கல்வாரி மலையின் மீது சேசு மரியாயாகிய இந்த இரண்டு மாபெரும் வேதசாட்சிகளும் மவுனமாக இருந்தார்கள், ஏனெனில் அவர்கள் அனுபவித்த பெரும் வேதனை பேசும் திறனை அவர்களிடமிருந்து எடுத்து விட்டிருந்தது என்று அர்ச். பெர்னார்ட் எழுதுகிறார். தாயார் தன் திருமகனைச் சிலுவையின் மீது மரண அவஸ்தையில் காண்கிறார்கள். திருமகன் தாம் அனுபவிக்கும் வேதனைகளைக் கண்ட பரிதாபத்தால் முழுவதும் காயப்பட்டவர்களாக, சிலுவையின் அடியில் மரண அவஸ்தையோடு நிற்கும் தாயைக் காண்கிறார்.

அங்கு நிலவிய பெரும் அமளிக்கு மத்தியிலும் சேசுநாதரின் வார்ததைகளை அதிக எளிதாகக் கேட்கவும், அவரது பார்வைகளைக் குறித்துக் கொள்ளவும், மாமரியும், அருளப்பரும் மற்றவர்களை விட சிலுவைக்கு அதிக நெருக்கமாக நின்றார்கள்.

“சேசுநாதர் தமது தாயாரையும், அங்கு நின்ற தம்மால் சிநேகிக்கப்பட்ட சீஷனையும் கண்டபோது, தம்முடைய தாயாரை நோக்கி: ஸ்திரீயே, இதோ உம் மகன் என்றார். பின்னும் சீஷனை நோக்கி இதோ உன் தாய் என்றார்'' என்று அர்ச். அருளப்பர் எழுதுகிறார் (அரு.19:26). ஆனால் மரியாயோடும், அருளப்பரோடும் மற்ற பெண்களும் நின்றிருந்தார்கள் என்றால், சேசு

மற்றவர்களைக் கவனிக்கவில்லை என்பது போல, தம் தாயாரையும் சீடரையும் அவர் கண்டார் என்று ஏன் சொல்லப்பட்டுள்ளது? நேசம் எப்போதும் நம் நேசத்திற்குரியவரை அதிக நெருக்கமாகக் காணும்படி செய்கிறது என்று அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் எழுதுகிறார். அர்ச். அம்புரோஸும் இதே விதமாக: "மற்ற யாருக்கும் முன்பாக நம்மால் நேசிக்கப் படுபவர்களை நாம் காண்பது இயல்பானதே" என்று எழுதுகிறார். சேசுநாதர், சிலுவைக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த தமது தாயாரைப் பார்க்கும்படியாக, முதலில் தாம் தெளிவாகக் காண முடியாதபடி தடுத்துக் கொண்டிருந்த இரத்தத்தைத் தமது கண்புருவங்களை நெறிப்பதன் மூலம் அகற்ற வேண்டியிருந்தது என்று திவ்விய கன்னிகை அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு வெளிப்படுத்தினார்கள்.

சேசு தம் அருகில் நின்று கொண்டிருந்த அர்ச். அருளப்பரை நோக்கித் தம் கண்களைத் திருப்பியபடி தம் தாயிடம்: **"ஸ்திரீயே, இதோ உம் மகன்"** என்றார். ஆனால் அவர் ஏன் தம் தாயாரை "அம்மா!" என்று அழைக்காமல் "ஸ்திரீயே!" என்று அழைத்தார்? ஏனெனில் தாம் மரணத்தை நெருங்கி வருகையில், மாமரியிடமிருந்து விடைபெறுபவரைப் போல் அவர் அவர்களிடம்: "ஸ்திரீயே, இன்னும் சிறிது நேரத்தில் நான் இறந்து விடுவேன். நீங்கள் பூமியின் மீது உங்கள் மகனைக் கொண்டிருக்க மாட்டீர்கள். ஆகவே, நான் அருளப்பனை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், அவன் ஒரு மகனாக உங்களுக்குப் பணிவிடை செய்து உங்களை நேசிப்பான்' என்பது போலப் பேசினார். இதிலிருந்து, அர்ச். சூசையப்பர் அப்போது ஏற்கெனவே இறந்திருந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் அவர் உயிரோடு இருந்திருந்தால், அவர் தான் இன்னும் திருத்தாயாரின் பாதுகாவலராக இருந்திருப்பார்.

திருப்பாடுகளின் ஞாயிறு

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

"ஏலி! ஏலி! லாமா சபக்தானி? (4)

I

சேசுநாதர் உரத்த சத்தமாக இந்த வார்த்தைகளைச் சொன்னார் என்று அர்ச். மத்தேயு எழுதுகிறார். அவர் ஏன் இந்த வார்த்தைகளைக் கூறினார்? தமது தெய்வீக வல்லமையை நமக்குக் காட்டும்படியாக அவர் இவ்வாறு கூக்குரலிட்டார், ஏனெனில் அவர் மரிக்கும் தருவாயில் இருந்தாலும், மரிக்கிற மனிதர்களின் அதீத சோர்வின் காரணமாக அவர்களுக்கு அசாத்தியமாக இருந்திருக்கக் கூடிய விதத்தில் இவ்வாறு உரத்த சத்தமாகக் கூப்பிட அவரால் முடிந்தது என்று யூத்திமியுஸ் கூறுகிறார். மேலும் தாம் எத்தகைய கடும் அவஸ்தையில் தாம் மரிக்கிறார் என்பதை நமக்குக் காட்டும் படியாகவும் சேசுநாதர் இவ்வாறு கூக்குரலிட்டார். சேசுநாதர் கடவுளும் மனிதனுமாக இருந்ததால், தமது தெய்வீகத்தின் வல்லமையைக் கொண்டு, தமது வாதைகளின் கடும் வேதனையை அவர் குறைத்திருக்கக் கூடும் என்று ஒருவேளை சொல்லப் பட்டிருக்கலாம்; இந்த சிந்தனையைத் தடுப்பதற்காகவே, தமது மரணம் வேறு எந்த மனிதனுடைய மரணத்தையும் விட அதிகக் கசப்பாக இருந்தது என்று இந்த வார்த்தைகளில் அறிக்கையிடுவது பொருத்தமானது என்று அவர் கருதினார். மேலும் வேதசாட்சிகள் தங்கள் வாதைகளில் தெய்வீக இனிமையால் தேற்றப்பட்டிருக்க, வேதசாட்சிகளின் அரசராகிய அவர் ஒவ்வொரு ஆறுதலும் விலக்கப் பட்டவராக மரிப்பதைத் தேர்ந்து கொண்டார், இதன் மூலம் மனிதர்களின் எல்லாப் பாவங்களாலும் மூண்டெழுந்த தேவ நீதியின் மகா கடுமையை அவர் தணித்தார் என்றும் இந்த வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் அவர் காட்டுகிறார். ஆகவேதான் சேசுநாதர் தமது பிதாவை "பிதாவே!" என்று அழைக்காமல் "சர்வேசுரா!" என்று அழைத்தார், ஏனெனில் அவர் அச்சமயத்தில் அவரை ஒரு நடுவராகவே மதித்தார். ஒரு மகன் என்ற முறையில் அவரை ஒரு தந்தையாக அவர் பார்க்கவில்லை.

ஆண்டவரின் இந்தக் கூக்குரல் ஒரு புலம்பல் அல்ல, மாறாக அது ஒரு வேத சத்தியம், ஏனெனில் தேவ சுதன் நம் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதாகத் தம் மீது சுமந்து கொண்ட பொறுப்பின் காரணமாக, அவர் ஆறுதலின்றி மரிக்கும்படியாக, பிதாவானவர்

தமது நேச மகனைக் கைவிட்டு விடும்படி செய்த பாவத்தின் தீமை எவ்வளவு பெரியது என்று இவ்விதமாக நமக்குக் காட்ட அவர் ஆசை கொண்டார் என்று **அர்ச். சிங்கராயர்** எழுதுகிறார். அதே சமயம், சேசுநாதர் தெய்வீகத்தால் கைவிடப்படவில்லை, அவரது ஆசீர்வதிக்கப்பட்ட ஆத்துமம் தான் படைக்கப்பட்ட முதல் கணத்திலிருந்தே அதற்கு வழங்கப்பட்டு வந்த மகிமையையும் இழக்கவில்லை, மாறாக, கடவுள் வழக்கமாகத் தமது பிரமாணிக்கமுள்ள ஊழியர்களின் துன்பங்களில் அவர்களைத் தேற்றும்படி அவர்களுக்குத் தரும் உணரக்கூடிய நிவாரணம் அனைத்தும் அவரிடமிருந்து விலக்கப்பட்டது. நாம் தகுதி பெற்றிருந்த இருள், பயம், கசப்பு, கடும் வேதனைகள் ஆகியவற்றில் அவர் அமிழ்த்தப்பட்டார். தெய்வீகப் பிரசன்னம் தன்னோடு இருப்பதை உணரக்கூடிய தன்மையிலிருந்து விலக்கப்படுவதும் ஜெத்சமெனித் தோட்டத்தில் சேசுநாதரால் அனுபவிக்கப்பட்டது; ஆனால் சிலுவையின் மீது அவர் அனுபவித்தது அதிகப் பெரியதும், அதிகக் கசப்பானதுமாக இருந்தது.

நித்தியப் பிதாவே, மாசற்றவரும், பூரண கீழ்ப்படிதல் உள்ளவருமாகிய உமது திருச்சுதனை இவ்வளவு கசப்பான மரணத்தைக் கொண்டு நீர் தண்டிக்கும் அளவுக்கு அவர் உம்மை எந்த விதத்தில் நோகச் செய்து விட்டார்? இந்தச் சிலுவையில் தொங்கும் நிலையில் அவரைப் பாரும். அவருடைய திருச்சிரசு முட்களால் வாதிக்கப்படுகிறது, அவர் மூன்று இரும்பு ஆணிகளில் தொங்கிக் கொண்டிருக்கிறார், தமது சொந்தக் காயங்களால் தாங்கப்பட்டிருக்கிறார். அவருடைய சொந்த சீடர்கள் உட்பட அனைவருமே அவரைக் கைவிட்டு விட்டார்கள். எல்லோருமே சிலுவையின் மீதுள்ள அவரை ஏளனம் செய்கிறார்கள், அவருக்கு எதிராகத் தேவதூஷணம் பேசுகிறார்கள். இவ்வளவு அதிகமாக அவர் நேசித்திருக்கிற தேவரீர் ஏன் அவரைக் கைவிட்டு விட்டீர்? சேசுநாதர் மனிதர்கள் அனைவரிலும் மிகப் பரிசுத்தமானவர், அவரே பரிசுத்த தனம் என்ற போதிலும், அகில உலகின் பாவங்களை அவர் தம்மீது சுமந்து கொண்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம் பாவங்கள் அனைத்திற்கும் பரிகாரம் செய்வதற்காக அவர்

அவற்றைத் தம் மீது சுமந்து கொண்டதால், அவரே எல்லாப் பாவிகளிலும் பெரிய பாவியாகத் தோன்றினார். இவ்வாறு அனைத்திலும் தம்மைக் குற்றமுள்ளவராக அவர் ஆக்கிக் கொண்டதால், அனைத்திற்கும் உரிய விலையைச் செலுத்தும்படி அவர் தம்மையே ஒப்புக்கொடுத்தார். நரகத்தில் நித்திய அவநம்பிக்கைக்கு என்றென்றும் கையளிக்கப்பட்டு விட நாம் தகுதி பெற்றிருந்தோம் என்பதால், நித்திய மரணத்தினின்று நம்மை விடுவிக்கும்படி ஒவ்வொரு நிவாரணமும் விலக்கப்பட்ட ஒரு மரணத்திற்குத் தம்மையே கையளிப்பதை அவர் தேர்ந்து கொண்டார்.

II

அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தைப் பற்றிய தனது விளக்கவுரையில் கால்வின் தேவதூஷணமான முறையில், சேசுநாதர் தமது பிதாவை சாந்தப்படுத்தும்படியாக, கடவுள் பாவிகளுக்கு எதிராக உணரும் கடுஞ்சினம் முழுவதையும் அனுபவித்தார் என்றும், சபிக்கப்பட்டவர்களின் எல்லா வேதனைகளையும், குறிப்பாக அவநம்பிக்கையையும் உணர்ந்தார் என்றும் வலியுறுத்துகிறான். ஓ தேவதூஷணமானதும், அதிர்ச்சி தருவதுமான சிந்தனையே! அவநம்பிக்கை போன்ற மிகப் பெரிதான ஒரு பாவத்தைக் கட்டிக் கொள்வதன் மூலம் அவர் நம் பாவங்களுக்கு எப்படிப் பரிகாரம் செய்ய முடியும்? கால்வின் கற்பனை செய்கிற இந்த அவநம்பிக்கை, **“பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்படைக்கிறேன்'' (லூக்.23:46)** என்ற சேசுவின் வார்த்தைகளோடு எப்படிப் பொருந்த முடியும்? உண்மை என்னவெனில், அர்ச். ஜெரோமும் மற்றவர்களும் இதை விளக்குவது போல, நம் இரட்சகர் அவநம்பிக்கையை அல்ல, மாறாக ஆறுதலற்ற ஒரு மரணத்தில் தாம் அனுபவித்த கசப்பைக் காட்டும்படியாகவே இந்தப் புலம்பலை வெளியிட்டார். மேலும் தாம் கடவுளால் நேசிக்கப்படுகிறார் என்ற ஓர் அறிவு மட்டுமே சேசுநாதரில் அவநம்பிக்கையை விளைவித்திருக்க முடியும்; ஆனால் தமது திருச்சித்தத்திற்குக் கீழ்ப்படிவதற்காக, மனிதர்களின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும்படி தம்மையே ஒப்புக் கொடுத்தவரான தமது திருமகனைக் கடவுள் எப்படி வெறுக்க

முடியும்? இந்தக் கீழ்ப்படிதலுக்குப் பிரதிபலனாகத்தான் பிதாவானவர் அவரைக் கண்ணோக்கி, மனுக்குலத்தின் இரட்சணியத்தை அவருக்குத் தந்தருளினார். இதைப் பற்றியே அப்போஸ்தலரும், **“இவர் தம்முடைய மாம்ச ஐக்கிய நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி உரத்த சத்தத்தோடும், கண்ணீர்களோடும் விண்ணப்பங்களையும், மன்றாட்டுகளையும் ஒப்புக்கொடுத்தபோது, தம்முடைய பயபக்தியைப் பற்றிக் கேட்டருளப்பட்டார்'' என்று எழுதுகிறார் (எபி.5:7).**

மேலும், சேசுநாதர் இவ்வாறு கைவிடப்படுதல் அவருடைய திருப்பாடுகள் முழுவதிலும் அதிக அச்சத்திற்குரிய துன்பமாக இருந்தது. ஏனெனில், எந்த முறைப்பாடுமின்றி எத்தனையோ கொடிய கசப்பான வேதனைகளை அனுபவித்த பிறகு, இந்தத் துன்பத்தைப் பற்றி அவர் புலம்பினார் என்றும், உரத்த சத்தமாகவும், அர்ச். சின்னப்பர் சொல்கிறபடி, ஏராளமான கண்ணீரோடும், ஜெபங்களோடும் அவர் தம் மன்றாட்டுக்களை ஒப்புக்கொடுத்தார் என்று நாம் அறிந்திருக்கிறோம். இருந்தும் நமக்குத் தேவ இரக்கத்தைப் பெற்றுத் தருவதற்காக அவர் எவ்வளவு அதிகமாகத் துன்பப்பட்டார் என்று நமக்குக் கற்பிப்பதற்காகவும் இந்தக் கண்ணீர்களும் ஜெபங்களும் பொழியப்பட்டன, அதே சமயத்தில் குற்றமுள்ள ஆன்மா கடவுளிடமிருந்து விரட்டப்படுவதும், **“நமது இல்லத்தில் நின்று அவர்களை அகற்றுவோம்... இனி அவர்களை நேசிக்க மாட்டோம்'' (ஓசே.9:15)** என்ற தெய்வீக அச்சுறுத்தலின் படி, என்றென்றைக்குமாக அவரது அன்பிலிருந்து விலக்கப்படுவதும் எவ்வளவு அச்சத்திற்குரிய தண்டனையாக இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளச் செய்யவும் இவை நிகழ்ந்தன.

சேசுநாதர் தமது மரணத்தின் காட்சியைணக் கண்டு கலக்கமுற்றார் என்று அர்ச். அகுஸ்தினாரும் சொல்கிறார். ஆனாலும், தமது ஊழியர்கள் தங்கள் சொந்த மரண நேரத்தில் கலக்கமுற்ற நிலையில் தாங்கள் இருப்பதைக் கண்டால், அவர்கள் தங்களை சபிக்கப்பட்டு விட்டவர்கள் என்று கருதக் கூடாது, அல்லது, அவநம்பிக்கைக்குத் தங்களை அவர்கள் கையளித்து விடக் கூடாது,

ஏனெனில் மரணத்தின் காட்சியில் அவரே கூட கலக்கமுற்றார் என்பதைக் கண்டு அவர்கள் தைரியம் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, மரண நேரத்தில் அவர்களைத் தேற்றுவதற்காக இது இவ்வாறு நிகழ்ந்தது என்றும் அவர் கூறுகிறார்.

ஆகவே, நமக்குரியவையாயிருந்த வேதனைகளைத் தம் மீது ஏற்றுக்கொள்ளவும், அதன் மூலம் நித்திய மரணத்திலிருந்து நம்மை விடுவிக்கவும் சித்தமாயிருந்ததற்காக நம் இரட்சகரின் நன்மைத் தனத்திற்கு நாம் நன்றி கூறுவோமாக. மேலும் இப்போது முதல், அவருக்குரியதாக இல்லாத நமது ஒவ்வொரு நாட்டத்தையும் நம் இருதயங்களிலிருந்து அகற்றுவதன் மூலம், நம்மை விடுவித்த இவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க நாம் உழைப்போமாக. ஆத்துமத்தில் ஆறுதலற்றவர்களாகவும், தேவ பிரசன்னத்தின் உணர்வு விலக்கப்பட்டவர்களாகவும் நாம் நம்மைக் காணும்போது, நமது இந்த ஆறுதலற்ற நிலையைக் கிறீஸ்துநாதர் தமது மரணத்தில் அனுபவித்த ஆறுதலற்ற நிலையோடு ஒன்றிப்போமாக. சில சமயங்களில் சேசுநாதர் தாம் மிக அதிகமாக நேசிக்கும் ஆத்துமங்களிலிருந்து தம்மை மறைத்துக் கொள்கிறார். ஆனால் அவர் உண்மையில் அவர்களது இருதயங்களை விட்டு விலகுவதில்லை. தமது உள்ளரங்க வரப்பிரசாதத்தைக் கொண்டு அவர் அவர்களுக்கு உதவி செய்கிறார். இத்தகைய ஒரு கைவிடப் படுதலில், அவரே தமது தெய்வீகப் பிதாவிடம்: “பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக் கடவது" என்று கூறியது போல நாம் கூறினால், அது அவரை மனநோகச் செய்வதில்லை. ஆனால் அதே சமயத்தில், **“ஆயினும் என் சித்தப்படி அல்ல, உமது சித்தப்படியே ஆகக்கடவது"** என்றும் நாம் சொல்வோமாக **(மத்.26:39).** இந்த ஆறுதலற்ற நிலை தொடர்ந்து நீடிக்குமானால், அவர் மூன்று மணி நேரமாக ஒலிவத் தோப்பில் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்த தேவ சித்தத்திற்குப் பணிந்திருப்பது பற்றிய ஜெபங்களை நாமும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். சேசுநாதர் தம்மைக் காட்டும்போது எப்படி நம் அன்புக்குத் தகுதியுள்ளவராக இருக்கிறாரோ, அப்படியே அவர் தம்மை ஒளித்துக் கொள்ளும்போதும் இருக்கிறார் என்று **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்**

கூறுகிறார். மேலும் நரகத்திற்குத் தகுதியுள்ளவனாக இருப்பவனும், அதிலிருந்து தான் விடுபட்டிருப்பதைக் காண்பவனுமாகிய மனிதன், **“எல்லாக் காலங்களிலும் நான் ஆண்டவரை வாழ்த்திப் போற்றுவேன்'' (சங்.33:2)** என்று மட்டும் செல்ல வேண்டும். ஆண்டவரே, ஆறுதல்களுக்கு நான் தகுதியற்றவன்; உம் வரப்பிரசாதத்தின் வழியாக உம்மை நான் நேசிக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும். நீர் விரும்பும் வரை ஆறுதலற்ற, கைவிடப்பட்ட நிலையில் வாழ்வதில் நான் திருப்தியடைகிறேன்! சபிக்கப்பட்டவர்கள் தங்கள் வேதனையில் தேவ சித்தத்தோடு தங்களை இணைத்துக் கொள்வது சாத்தியமானால், நரகம் கூட அவர்களுக்கு இனி நரகமாக இராது!

ஆனால் ஆண்டவரே! நீர் எனக்கு உதவி செய்வதை விட்டு அகலாதேயும்; என்னை ஆதரிக்கக் கிருபையோடு என்னைக் கண்ணோக்கியருளும் (சங்.21:19). ஓ என் சேசுவே, உமது ஆறுதலற்ற மரணத்தின் பேறுபலன்களின் வழியாக, என் மரண நேரத்தில், நரகத்தோடு நான் செய்ய வேண்டிய அந்த மாபெரும் போராட்டத்தில் உமது உதவியை என்னிடமிருந்து விலக்கிக் கொள்ளாதேயும். அந்த நேரத்தில் உலகக் காரியங்கள் அனைத்தும் என்னைக் கைவிட்டிருக்கும், அவை எனக்கு உதவ இயலாதவையாக இருக்கும்; அச்சமயத்தில் எனக்காக மரித்தவரும், என் வாழ்வின் உச்ச நிலையில் எனக்கு உதவக் கூடிய ஒரே ஒருவருமாகிய தேவரீர் என்னைக் கைவிடாதிருப்பீராக. நீர் கைவிடப்பட்டபோது அனுபவித்த வேதனைகளின் பேறுபலன்களின் வழியாக இதைச் செய்தருளும். அதன் வழியாகவே, எங்கள் பாவங்களின் வழியாக நாங்கள் தகுதி பெற்றுள்ளபடி தேவ வரப்பிரசாதத்தால் நாங்கள் கைவிடப்படாதிருக்கும் வரத்தை நீர் எங்களுக்காக சம்பாதித்திருக்கிறீர்.

திங்கள்

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

“நான் தாகமாய் இருக்கிறேன்!'' (5)

I

“மீளவும் சேசுநாதர், எல்லாம் முடிந்ததென்று அறிந்து, வேத வாக்கியம் முற்றும் நிறைவேறத்தக்கதாக: தாகமாய் இருக்கிறேன் என்றார்'' என்று அர்ச். அருளப்பர் எழுதுகிறார் **(அரு.19:28).** இதில் வேதவாக்கியம் என்பது **“என் ஆகாரத்திற்குப் பிச்சைக் கொடுத்தார்கள்; என் தாகத்திற்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்'' (சங்.68:22)** என்ற தாவீதின் வார்த்தைகளைக் குறிக்கிறது.

முதலில் தோட்டத்திலும், பிற்பாடு தீர்வை மண்டபத்தில் தாம் கசையால் அடிக்கப் பட்டதிலும், முள்முடி சூட்டப்பட்டதிலும், இறுதியாக சிலுவையின் மீதும் அவர் ஏராளமான இரத்தத்தை இழந்ததன் காரணமாக, சிலுவையின் மீது சேசுநாதர் அனுபவித்த இந்த உடல் ரீதியான தாகம் மிகக் கடுமையானதாக இருந்தது. சிலுவையின் மீதிருந்து அவரது துளைக்கப்பட்ட கரங்களிலும், பாதங்களிலும் இருந்த காயங்களிலிருந்து, நான்கு ஊற்றுக்களிலிருந்து புறப்படுவது போல நான்கு இரத்தத் தாரைகள் பொங்கி வழிந்தன. ஆனால் அவரது ஆன்ம தாகம், அதாவது மனுக்குலம் முழுவதையும் இரட்சிக்கவும், **அர்ச். ப்ளோஸியுஸ்** கூறுவது போல, தமது அன்பை நமக்குக் காட்டும்படி இன்னும் அதிகமாகத் துன்புறவும் அவர் கொண்டிருந்த பற்றியெரியும் தாகம், இன்னும் எவ்வளவோ அதிக பயங்கரமானதாக இருந்தது. இதைப் பற்றி அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன் எழுதும்போது, “இந்த தாகம் அவரது பிறர்சிநேகத்தின் கடும் வேட்கையிலிருந்து வந்தது.''

ஓ என் சேசுவே, நீர் இவ்வாறு எனக்காகத் துன்புறுவதை ஆசித்தீர். நானோ, என் துயரம் அதிகரிக்கத் தொடங்கியவுடனேயே, எவ்வளவு பொறுமையற்றவனாக ஆகிறேன் என்றால், மற்றவர்களாலும், என்னாலுமே கூட, நான் தாங்கிக் கொள்ளப்பட முடியாதவனாக ஆகிவிடுகிறேன். என் சேசுவே, உமது பொறுமையின் பேறுபலன்களின் வழியாக, எனக்கு நேரிடும் நோய்களிலும், சிலுவைகளிலும், பொறுமையும் அமைந்த மனமும் உள்ளவனாக என்னை மாற்றும்; நான் சாகுமுன் உம்மைப் போல் என்னை ஆக்கியருளும்.

II

சேசுநாதர் மரணத்தை நெருங்கி வருகையில், **"ஸீத்ஸியோ - தாகமாய் இருக்கிறேன்!"** என்றார். ஓஷியாவின் லியோ என்பவர் இதைப் பற்றி, ஆண்டவரே, எதற்காக தாகமாய் இருக்கிறீர்? சிலுவையின் மீது நீர் அனுபவிக்கிற மிகக் கொடிய வேதனைகளைப் பற்றி நீர் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தாகத்தைப் பற்றி மட்டுமே முறையிடுகிறீர் என்கிறார்: "ஆண்டவரே, எதற்காக தாகமாய் இருக்கிறீர்? சிலுவையைப் பற்றி மவுனமாய் இருக்கிறீர், தாகத்தைப் பற்றியே கதறுகிறீர்." இதற்கு சேசுவின் சார்பாக **அர்ச். அகுஸ்தின்**, "என் தாகம் உங்கள் இரட்சணியத்தைப் பற்றியது" என்கிறார். "ஆத்துமமே, என்னுடைய இந்த தாகம், உங்கள் இரட்சணியத்தின் மீது எனக்குள்ள ஆசையேயன்றி வேறு எதுவுமில்லை" என்கிறார் சேசு. ஆம், நேச இரட்சகர், அளவுக்கு மீறிய நேசப் பற்றுதலோடு நம் ஆன்மாக்களை ஆசித்தார். ஆகவே தமது மரணத்தின் மூலம் தம்மையே முழுமையாக நமக்குத் தர அவர் ஏக்கம் கொண்டார். இதுவே அவரது தாகம் என்று **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** கூறுகிறார்: "அவர் நமக்காகத் தாகம் கொண்டார், தம்மை நமக்குத் தர ஆசித்தார்." மேலும், தாம் தாகமாயிருப்பதாகக் கூறுவதில், நம் மீதுள்ள அன்பிற்காக தாம் அனுபவித்ததை விட அதிகம் துன்பப்படும் ஆசையோடு இறந்து கொண்டிருந்தார் என்கிறார் **அர்ச். செலூசியா பேசில்**: "ஓ, திருப்பாடுகளை விடப் பெரிதான அவருடைய ஆசையே!"

ஓ அனைவரிலும் அழகானவரான சர்வேசுரா, நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதால், நாங்களும் உம்மை ஆசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்!" **அர்ச். கிரகோரியார்** கூறுகிறபடி, "ஆ, என் ஆண்டவரே, மிக அசுத்தப் புழுவாகிய எனக்காக தாகமாய் இருக்கிறீரா? என் அளவற்ற தேவனாகிய உமக்காக நான் தாகம் கொள்ளாதிருப்பேனா? ஓ, சிலுவையின் மீது நீர் அனுபவித்த இந்த தாகத்தின் பேறுபலன்களைக் கொண்டு, உம்மை நேசிக்கவும், எல்லாவற்றிலும் உம்மை மகிழ்விக்கவும் ஒரு பெரும் தாகத்தை எனக்குத் தந்தருளும்" உம்மிடமிருந்து நாங்கள் தேடுவது

எதுவாயினும், அதைத் தந்தருள்வதாக நீர் வாக்களித்திருக்கிறீர்: **“கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள்'' (அரு.16:24).** உம்மை நேசிப்பதாகிய ஒரே ஒரு கொடையை நான் உம்மிடம் கேட்கிறேன். உண்மையில் இதைப் பெற்றுக்கொள்ள நான் தகுதியற்றவன், ஆனால் இதில், அதாவது, ஓர் இருதயத்தை, ஒரு காலத்தில் உம்மை மிக அதிகமாக நிந்தித்து வந்த ஓர் இருதயத்தை, உம்முடைய பெரும் அன்பனாக மாற்றுவதில், முழுவதும் அசுத்தமும், பாவங்களும் நிறைந்திருக்கும் ஒரு பாவியை தேவசிநேகத்தின் உத்தமமான தீச்சுவாலையாக ஆக்குவதில்தான், உமது திரு இரத்தத்தின் மகிமை இருக்க வேண்டியுள்ளது. எனக்காக மரித்ததில் நீர் இதை விட மிக அதிகமாகவே செய்து விட்டீர். ஓ அளவற்ற நன்மைத்தனமாகிய ஆண்டவரே, உமக்குத் தகுதியுள்ள அளவுக்கு என்னால் மட்டும் உம்மை நேசிக்க முடியுமானால்! உம்மால் வசீகரிக்கப்பட்ட ஆன்மாக்கள் உம்மீது கொள்ளும் அன்பிலும், இன்னும் அதிகமாக உம்மீதே நீர் கொள்ளும் அன்பிலும் நான் இன்பம் காண்கிறேன். இத்துடன் என் சொந்த ஈனமுள்ள அன்பையும் நான் இணைக்கிறேன். ஓ நித்திய தேவனே, உம்மை நான் நேசிக்கிறேன்; ஓ அளவற்ற அழகே, நான் உம்மை நேசிக்கிறேன். அடிக்கடி அன்பின் வார்த்தைகளை உம்மிடம் கூறிக் கொண்டும், இடைவெளியோ ஒதுக்கமோ இன்றி எல்லாவற்றிலும் உம்மை மகிழ்விக்கப் பாடுபட்டுக் கொண்டும் உமது அன்பில் நான் எப்போதும் அதிகரிக்கச் செய்தருளும். அடியேன் அற்பனும், நீசப் பாவியுமாக இருந்தாலும், குறைந்த பட்சம் என்னை முழுவதும் உம்முடையவனாக்கியருளும்.

செவ்வாய்

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

“எல்லாம் முடிந்தது!'' (6)

I

“சேசுநாதர் அந்தக் காடியை வாங்கிக்கொண்டபின்பு: எல்லாம் முடிந்தது என்றார்...'' என்று அர்ச். அருளப்பர் எழுதுகிறார்

(அரு.19:30). இந்தக் கணத்தில், சேசுநாதர் தமது ஆத்துமத்தை வெளியிடுமுன், (சிலுவைப் பலியின் உருவகங்களாக மட்டுமே இருந்த) பழைய திருச்சட்டத்தின் பலிகள் அனைத்தையும், பிதாப்பிதாக்களின் அனைத்து ஜெபங்களையும், அவரது வாழ்வையும், மரணத்தையும் குறித்த அனைத்து தீர்க்கதரிசனங்களையும், தாம் அனுபவிக்க இருப்பதாக முன்னுரைக்கப்பட்ட எல்லாக் காயங்களையும், அவமானங்களையும் தம் கண் முன் கொண்டு வந்தார்; அவை அனைத்தும் இப்போது நிறைவேறி விட்டதென அவர் கண்டு: “எல்லாம் முடிந்தது" என்றார்.

நாம் இரட்சணியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, மன தாராளத்தோடு ஓடி, இவ்வாழ்வில் நம் எதிரிகளோடு நமக்காகக் காத்திருக்கிற போராட்டத்தைப் பொறுமையோடு எதிர் கொள்ளும்படி அர்ச். சின்னப்பர் நம்மை ஊக்கப்படுத்துகிறார்: **“நமது விசுவாசத்தின் ஆதி கர்த்தாவும், அதைச் சம்பூரணமாக்குகிறவருமாகிய சேசுநாதரை எப்போதும் கண்முன்பாக வைத்துக் கொண்டு, நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தத்துக்குப் பொறுமையோடு ஓடக்கடவோம்" (எபி.12:1,2).** இவ்வாறு, தம் சரீரத்தில் உயிர் இருந்த வரை, சிலுவையினின்று இறங்கி வராதிருந்த சேசுகிறீஸ்துநாதரின் மாதிரிகையைப் பின்பற்றி, முடிவு வரைக்கும் பொறுமையோடு சோதனைகளை எதிர்த்து நிற்கும்படி அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துகிறார். இதைப் பற்றி அர்ச். அகுஸ்தினார் கூறுவதாவது: “தாம் சிலுவையில் தொங்கியபோது, அதிலிருந்து இறங்கி வர சித்தமில்லாதிருந்தவர், உன் கடவுளில் பலமுள்ளவனாக நீ இருக்க வேண்டும் என்பதையன்றி, வேறு எதை உனக்குப் போதித்தார்?" இறுதி வரை நிலைத்திருப்பவனைத் தவிர வேறு யாருக்கும் மகிமையின் வெகுமதி கடவுளால் தரப்படுவதில்லை என்பதை நமக்கு வலியுறுத்திக் கூறும்படி, சேசுநாதர் மரணம் வரைக்கும் தம் பலியை முழுமையாக்குவது பொருத்தமானது என்று நினைத்தார். அவ்வாறே அவர் **அர்ச். மத்தேயு** சுவிசேஷத்தில்: **“முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவன் எவனோ, அவனே இரட்சண்ணியம் அடைவான்" (10:12)** என்று நமக்குக் கற்பிக்கிறார்.

ஆகவே, நம் சொந்த ஆசாபாசங்களின் வழியாக, அல்லது பசாசின் சோதனைகளின் வழியாக, அல்லது மனிதர்களின் துன்புறுத்தலின் வழியாக, நாம் கலக்கமுறுவதாகவும், நம் பொறுமையை இழக்கவும், கடவுளை நோகச் செய்யும் நிலைக்கு நம்மைக் கையளித்துவிடவும் தூண்டப்படுவதாகவும் நாம் உணரும்போது, சிலுவையில் அறையுண்ட சேசுவின் மீது நம் கண்களைப் பதிப்போம். அவர் நம் இரட்சணியத்திற்காகத் தம் திரு இரத்தம் முழுவதையும் சிந்தினார். அவர் மீதுள்ள அன்பிற்காக நாம் இதுவரை ஒரு துளி இரத்தத்தைக் கூட சிந்தவில்லை என்பதை யோசிப்போம்: **"பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுவதில் நீங்கள் இன்னும் இரத்தம் சிந்துமளவு எதிர்த்து நிற்கவில்லையே" (எபி.12:4).** ஆகவே, எந்த உலக மகிமையையாவது விட்டு விட, அல்லது எந்த ஒரு கோப உணர்வையும் தவிர்த்து விட, அல்லது ஏதாவது ஒரு மன திருப்தியை, அல்லது எதையாவது பார்க்க வேண்டுமென்ற நம் வினோதப் பிரியத்தை, நம்மிடமிருந்து விலக்கி விட, அல்லது நமக்கு வெறுப்பாய் இருக்கிற எதையாவது செய்யும்படி நாம் அழைக்கப்பட்டால், இந்தப் பரிசை சேசுவுக்குக் கொடுக்க மறுப்பதற்கு நாம் வெட்கப்படுவோம். அவர் எதையும் தமக்கென நிறுத்தி வைத்துக் கொள்ளாமல் நம்மை நடத்தி வந்திருக்கிறார்; அவர் தம் சொந்த உயிரையும், தம் இரத்தம் முழுவதையும் நமக்குத் தந்திருக்கிறார். ஆகவே, அரைகுறை நேசத்தோடு அவரை நடத்துவதற்கு நாம் வெட்கப்படுவோம்.

II

நாம் கடமைப்பட்டுள்ளபடி, நம் எதிரிகளை முழு வலிமையோடு நாம் எதிர்த்து நின்று, சேசுகிறீஸ்துநாதரின் பேறுபலன்களிலிருந்து மட்டும் வெற்றி பெறுவோம் என நம்பி யிருப்போமாக. இந்தப் பேறுபலன்களின் வழியாக மட்டுமே புனிதர்களும், குறிப்பாகப் பரிசுத்த வேதசாட்சிகளும் தங்கள் வாதைகளையும், மரணத்தையும் வெற்றி கொண்டார்கள்: **"இந்த எல்லாக் காரியங்களிலும், நம்மை நேசித்துள்ளவரால் நாம் ஜெயங்கொள்ளுகிறோம்" (உரோ.8:37).** ஆகவே, நம் பலவீனத்தின்

காரணமாக, வெற்றிகொள்வது மிகவும் கடினமாகத் தோன்றுகிற தடைகளைப் பசாசு நமக்கு முன் சித்தரித்துக் காட்டும்போது, நாம் சிலுவையில் அறையுண்டவரை நோக்கி நம் கண்களைத் திருப்புவோமாக, அவரது உதவியிலும், பேறுபலன்களிலும் முழு நம்பிக்கை கொண்டு, அப்போஸ்தலரோடு சேர்ந்து, **“என்னைப் பலப்படுத்துகிறவரைக் கொண்டு எதுவும் செய்ய என்னால் கூடும்" (பிலிப்.4:13)** என்று சொல்வோமாக. தனியாக என்னால் எதுவும் செய்ய முடியாது, ஆனால் சேசுவின் உதவியோடு என்னால் எதுவும் செய்ய முடியும்.

இவ்வாறு, சிலுவையின் மீதுள்ள சேசுவின் வேதனைகளின் காட்சியால், நம் இவ்வுலக வாழ்வின் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள நம்மை நாம் உற்சாகப்படுத்திக் கொள்வோம். ஆண்டவர் இந்தச் சிலுவையிலிருந்து சொல்வதாவது: “இந்த மரத்தின் மீது உனக்காக நான் எவ்வளவு பெருந்திரளான வேதனைகளையும், அவமானங்களையும் அனுபவிக்கிறேன் என்று பார். என் திருச்சரீரம் மூன்று ஆணிகளில் தொங்குகிறது. என் சொந்தக் காயங்களின் மீது மட்டுமே அது இளைப்பாறுகிறது. என்னைச் சுற்றியுள்ள மனிதர்கள் என்னை தூஷிக்கிறார்கள், வேதனைப் படுத்துகிறார்கள். என் ஆத்துமம் எனக்குள், என் சரீரத்தை விட அதிகமாகத் துன்பப்படுகிறது. நான் உன் மீதுள்ள அன்பிற்காகவே எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்கிறேன்; நான் உன் மீது கொண்டுள்ள பாசத்தைப் பார், என்னை நேசி; துன்பங்களால் நிறைந்த ஒரு வாழ்வு வாழ்ந்த பின், உனக்காக இப்போது மிகக் கசப்பான ஒரு மரணத்தை சந்தித்துக் கொண்டிருக்கிற எனக்காக எந்தத் துன்பத்தையும் அனுபவிப்பதில் நீ சோர்ந்து போகாதே."

ஓ என் சேசுவே, நான் உம்மை நேசித்து, உமக்கு ஊழியம் செய்வதற்காக நீர் என்னை இந்த உலகில் வைத்திருக்கிறீர்; நான் உமக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும்படி நீர் மிக அதிகமான ஒளிகளையும், வரப்பிரசாதங்களையும் எனக்குத் தந்திருக்கிறீர். ஆனால் என் நன்றியற்றதனத்தில், என் சொந்த இன்பங்களில் எதையும் நான் இழந்து விடாதபடி, எவ்வளவு அடிக்கடி உமது வரப்பிரசாதத்தை இழக்கவும், உம்மிடமிருந்து திரும்பிக் கொள்ளவும்

நான் துணிந்திருக்கிறேன்! ஓ, என் பொருட்டு நீர் ஏற்றுக்கொண்ட ஆறுதலற்ற மரணத்தின் வழியாக, என் எஞ்சிய வாழ்நாட்களில் உமக்கு நன்றியுள்ளவனாக இருக்க எனக்கு பலம் தாரும். அதே வேளையில், இந்நாள் முதல் என் கடவுளும், என் நேசரும், என் சர்வமுமாகிய உம்முடையதாக இல்லாத ஒவ்வொரு நாட்டத்தையும் என் இருதயத்திலிருந்து அகற்றி விட நான் விரும்புகிறேன்.

மரியாயே, என் தாயாரே, என்னை இவ்வளவு அதிகமாக நேசித்திருக்கிற உங்கள் திருமகனுக்குப் பிரமாணிக்கமாக இருக்க எனக்கு உதவுங்கள்.

புதன்

சிலுவையின் மீது சேசுநாதரின் ஏழு வாக்கியங்கள்

"பிதாவே, உம்முடைய கரங்களிலே என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்." (7)

I

"சேசுநாதரோ உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: பிதாவே, என் ஆத்துமத்தை உம்முடைய கரங்களிலே ஒப்புக்கொடுக்கிறேன் என்றார்" (லூக்.23:46).

சேசுநாதர் தமது பிதாவாகிய சர்வேசுரனை அழைப்பதை அனைவரும் கேட்டு, அவரே சர்வேசுரனுடைய உண்மையான திருமகன் என்பதைப் புரிந்து கொள்ளும்படியாக, அவர் உரத்த சத்தமாய் இந்த வார்த்தைகளைக் கூறினார் என்று யூத்திஷியஸ் என்பவர் கூறுகிறார். சேசுநாதர் கட்டாயத்தால் அல்ல, மாறாகத் தமது சொந்த சித்தத்தின்படி மரிக்கிறார் என்பதை நமக்குக் கற்பிக்கும்படியாக, தாம் மிகவும் பலவீனமாகவும், தம் வாழ்வை முடித்துக் கொள்ளும் நிலையிலும் இருக்கும்போதும் மிகப் பலமான குரலில் இவ்வார்த்தைகளை உச்சரித்தார் என்று **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** எழுதுகிறார். தமது வாழ்வின் போது சேசு கூறியிருந்த காரியத்தோடு ஒத்துப் போவதாக இது இருந்தது. தமது எதிரிகளின் சித்தத்தாலும், துர்ப்புத்தியாலும் அன்றி, தாமே

முன்வந்து தம் ஆடுகளுக்காகத் தம்மைப் பலியாக்க இருப்பதாக அவர் கூறியிருந்தார்: **“என் உயிரையும் என் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன். . . என்னிடத்திலிருந்து அதைப் பறிக்கிறவன் ஒருவனுமில்லை. ஆனால் நானாக அதைக் கொடுக்கிறேன்'' (அரு.10:15,18).**

சிரசானது மற்ற உறுப்புகளோடு சேர்ந்து ஒரே சரீரத்தை உருவாக்குவது போல, சேசுநாதர் இவ்வாறு பிதாவுக்குத் தம்மை ஒப்புக்கொடுப்பதில், தம் வழியாக இரட்சணியம் அடையக் கூடிய விசுவாசிகள் அனைவரையும் அதே வேளையில் பிதாவுக்கு ஒப்புக் கொடுத்தார் என்று அர்ச். அத்தனாசியார் கூறுகிறார். **“பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தருளினவர்கள் நம்மைப்போல ஒன்றாய் இருக்கும்படிக்கு உம்முடைய நாமத்தினாலே அவர்களைக் காத்தருளும்''** என்றும், தொடர்ந்து: **“நீர் எனக்குத் தந்தருளின மகிமையை நீர் எனக்குத் தந்தருளினவர்களும் காணும்படியாக, நான் இருக்கிற இடத்தில் அவர்களும் என்னோடிருக்க வேண்டுமென்று மனதாய் இருக்கிறேன்'' (அரு17:11,24)** என்றும் சேசுநாதர் முன்பு செய்த ஜெபத்தை அவர் மீண்டும் இச்சமயத்தில் சொல்ல விரும்பினார் என்று இதே புனிதர் மீண்டும் குறிப்பிடுகிறார்.

இதனாலேயே அர்ச். சின்னப்பர்: **“நான் யாரை விசுவசித்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். அவரிடத்தில் நான் ஒப்புவித்திருக்கிறதை அவர் அந்த மகாநாள் வரைக்கும் காக்க வல்லவரென்று நிச்சயித்திருக்கிறேன்'' என்று கூறுகிறார் (2 திமோ.1:12).** அப்போஸ்தலர் சேசுவுக்காகச் சிறையில் துன்பப்பட்டுக்கொண்டிருந்தபோது, இப்படி எழுதினார். சேசுநாதர் மீதுள்ள அன்பிற்காகத் துன்புறுபவர்களுக்கு அவர் எவ்வளவு நன்றியும் பிரமாணிக்கமும் உள்ளவராய் இருக்கிறார் என்பதை அறிந்தவராக, அவர் தமது துன்பங்கள் மற்றும் தமது சகல நம்பிக்கைகளின் திரட்டை அவரது திருக்கரங்களில் ஒப்புக் கொடுத்தார்.

II

“உம்முடைய கையில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்; சர்வ சத்தியமுடைய தேவனாகிய ஆண்டவரே! நீர் என்னை மீட்டு இரட்சித்தீர்" (சங்.30:5) என்று தாவீதரசர் கூறியபோது, இனி வரவிருக்கும் மீட்பரில் அவர் தம் நம்பிக்கைகள் அனைத்தையும் வைத்தார். இப்போது நம் மீட்புச் செயலை முடித்து விட்ட சேசுநாதரின் மீது நாம் எவ்வளவு அதிகமான நம்பிக்கை வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்? ஆகவே நாமும் அதிக நம்பிக்கையோடு, “ஆண்டவரே, நீர் என்னை மீட்டு இரட்சித்து விட்டீர்! உமது கரங்களில் எனது ஆத்துமத்தை ஒப்புக் கொடுக்கிறேன்! பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக் கொடுக்கிறேன்!" என்று ஜெபிப்போம். இவ்வார்த்தைகள் நமது மரணத் தருவாயில் நரக சோதனைகளுக்கு எதிராகவும், அச்சமயத்தில் நம் பாவங்களின் காரணமாக நமக்கு ஏற்படும் அச்சங்களுக்கு எதிராகவும் நமக்கு மிகப் பெரும் ஆறுதலை வருவிக்கின்றன.

ஆனால், என் மீட்பராகிய சேசுவே! என் ஆத்துமத்தை உமக்கு ஒப்புக்கொடுக்க நான் என் மரணம் வரை காத்திருக்க மாட்டேன்; இப்போதே அதை நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்; மீண்டும் உம்மிடமிருந்து திரும்பிக் கொள்ளும் பரிதாபத்திற்கு நான் ஆளாக விடாதேயும். என் கடந்த கால வாழ்வு உம்மை அவமதிப்பதற்கு மட்டுமே உதவியுள்ளது என்று நான் காண்கிறேன். எனக்கு இன்னும் எஞ்சிய் இருக்கிற நாட்களில் உம்மை நான் தொடர்ந்து நோகச் செய்ய என்னை அனுமதியாதேயும். ஓ சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையே, சிலுவையின் மீது பலியாக்கப் பட்டவரே, அன்பின் பலியாகவும், துக்க துயரங்களால் சுட்டெரிக்கப்பட்டவராகவும் எனக்காக மரித்தவரே, உமது மரணத்தின் பேறுபலன்களைப் பார்த்து நான் என் முழு இருதயதய்தோடும் உம்மை நேசிக்கவும், எனக்கு எஞ்சியுள்ள வாழ்வில் முற்றிலும் உம்முடையவனாய் இருக்கவும் எனக்கு அருள்வீராக. நீர் என் மீதுள்ள அன்பால் மரித்தீர்; நானும் உம் மீதுள்ள அன்பிற்காக மரிப்பேனாக. நீர் உம்மை முழுமையாக எனக்குத் தந்திருக்கிறீர்; நானும் என்னை முழுமையாக உமக்குத் தருகிறேன். “ஆண்டவரே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை

ஒப்புக்கொடுக்கிறேன். ஆண்டவரே, சத்தியத்தின் தேவனே, நீர் என்னை மீட்டு இரட்சித்திருக்கிறீர்!" நீர் உமது திரு இரத்தம் முழுவதையும் சிந்தினீர்; என்னை இரட்சிப்பதற்காக நீர் உமது உயிரைத் தந்திருக்கிறீர். என் பாவத்தால் இதையெல்லாம் நான் இழந்து போக அனுமதியாதேயும். ஓ என் சேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன், உமது பேறுபலன்களின் வழியாக உம்மை நான் என்றென்றும் நேசித்திருப்பேன் என்றும் நம்பிய் இருக்கிறேன். **“ஆண்டவரே! நான் உம்மிடத்தில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்; நான் நித்திய காலத்திற்கும் வெட்கமடையேன்" (சங்.30:1).**

ஓ மரியாயே, தேவதாயாரே, நான் உங்கள் ஜெபங்களில் நம்பிக்கை வைக்கிறேன்; உங்கள் திருமகனுக்குப் பிரமாணிக்க முள்ளவனாக நான் வாழவும், இறக்கவும் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள். அர்ச். பொனவெந்தூரோடு நானும் சேர்ந்து உம்மை நோக்கி: “என் இராக்கினியே, உம்மில் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். நான் நித்திய காலத்திற்கும் வெட்கமடையேன்" என்று சொல்வேன்.

வியாழன்

நமதாண்டவராகிய சேசுகிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளைப் பற்றிய தியானங்கள்

I

இசையாஸால் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருப்பதை நாம் சிந்திப்போம்: **“நாம் அவரைக் குஷ்டரோகியாகவும், கடவுளால் தண்டிக்கப்பட்டவராகவும், துன்புற்றவராகவும் எண்ணினோம். நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார்; நமது அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமது சமாதானத்துக்குரிய கண்டனை அவர்மீது விழ, அவர் காயத்தால் நாம் இரட்சிக்கப்பட்டோம். நாம் எல்லோரும் ஆடுகளைப்போல் சிதறுண்டு போனோம்; ஒவ்வொருவனும் தன் வழியில் பிசகிப் போனான்; ஆதலின் ஆண்டவர் நம்மெல்லோருடைய பாவங்களையும் அவர்மீது சுமத்தினார்"**

(இசை.53:4-6). நேசத்தால் நிறைந்தவராகிய சேசுநாதர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தம்மை முழு மனதோடு கையளித்தார். பிதாவின் சித்தம் அவரது கொலைஞர்கள் தங்கள் இஷ்டம்போல அவரைக் கொடூரமாக வாதித்து அவமானப்படுத்த அவரை அனுமதித்தது. **“அவர் தாமே விரும்பி பலியானார்; ஆடானது தன்னைக் கழுத்தறுப்போன் முன் வாய்த் திறவாதிருப்பதுபோல, அவர் தம் கொலைஞர் முன் மௌனங்காத்தார்'' (இசை.53:7).** ஆட்டுக்குட்டி, தன் மயிர் கத்தரிக்கப்பட எந்த முறைப்பாடுமின்றி தன்னை ஒப்புக்கொடுப்பது போல, நம் அன்புள்ள இரட்சகர் தமது திருப்பாடுகளில், வாய் திறவாமல், கம்பளியை அல்ல, மாறாக, தமது தோலையே கொலைஞர்கள் அகற்ற அவர்களை அனுமதித்தார்.

நம் பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய அவருக்கு என்ன கடமை இருந்தது? என்றாலும், நித்திய சாபத்தினின்று நம்மை விடுவிக்கும்படி அவர் அதைத் தம் மீது சுமந்து கொள்வதைத் தேர்ந்து கொண்டார்; ஆகவே, நாம் ஒவ்வொருவரும் அவருக்கு நன்றி செலுத்தவும், **“ஆண்டவரே! நீரோ என் ஆத்மா அழியாதபடி இருவித மரணத்தினின்றும் கைதூக்கிவிட்டீர்; என் பாவங்களை எல்லாம் உமது பின்னால் எறிந்துவிட்டீர்'' (இசை.38:17)** என்று சொல்லவும் வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவ்வாறு, சேசுநாதர் தமது நன்மைத்தனத்தில், தாமே முன்வந்து, நமது கடன்களைத் தம்மீது சுமந்து கொண்டார், சிலுவையின் வேதனைகளில் மரிக்கும் அளவுக்குத் தம்மைப் பலியாக்குவதையும் அவர் தேர்ந்துகொண்டார். இதைப் பற்றி அவரே அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில்: **“என் உயிரையும் என் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன் . . . என்னிடத்திலிருந்து அதைப் பறிக்கிறவன் ஒருவனும் இல்லை. ஆனால் நானாக அதைக் கொடுக்கிறேன்'' (அரு.10:15,18)** என்று சொல்கிறார்.

II

அர்ச். அம்புரோஸ், நமது ஆண்டவரின் திருப்பாடுகளைப் பற்றி எழுதும்போது, சேசுநாதரைப் பின்செல்வோர் இருக்கிறார்கள்,

ஆனால் அவருக்குச் சமமானவர்கள் யாருமில்லை என்றார். புனிதர்கள் அவரைப் போலத் தாங்களும் ஆகும்படி துன்பத்தில் சேசுநாதரைக் கண்டுபாவிக்கப் பெரும் முயற்சி செய்திருக்கிறார்கள்; ஆனால் அவரது துன்பங்களில் அவருக்கு சமமாகும் நிலையை யார் அடைந்தார்கள்? அவர் மெய்யாகவே, எல்லாத் தவசிகளும், வனவாசிகளும், வேதசாட்சிகளும் பட்ட துன்பங்களை விட அதிகமாகத் துன்பப்பட்டார், ஏனெனில் மனிதர்களின் எல்லாப் பாவங்களுக்காகவும் தேவ நீதிக்கு ஒரு கொடூரமான பரிகாரத்தின் பாரத்தைக் கடவுள் அவர் மீது சுமத்தினார்: "ஆண்டவர் நமது அக்கிரமங்களை யெல்லாம் அவர் மீது சுமத்தினார்" (இசை. 53:6).

சேசுநாதர் தமது மகா பரிசுத்த சரீரத்தில் நம் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும்படி, சிலுவையின் மீது நம் எல்லாப் பாவங்களையும் சுமந்து கொண்டார் என்று அர்ச். இராயப்பர் எழுதுகிறார்: **"அவர் தாமே சிலுவை மரத்தின் மேல் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார்" (1 இரா. 2:24)**. சேசுநாதர் நம்மை மீட்டு இரட்சிப்பதில், மனுக்குலத்தின் எல்லாப் பாவங்களையும் அபரிமிதமாகவும், கொடூரமான விதத்திலும் பரிகரிக்கப் போதுமான அளவுக்கு வேதனையும், துயரமும் நிறைந்த ஒரு மரணத்தை அனுபவிப்பதைத் தேர்ந்து கொண்டார் என்று அர்ச். தாமஸ் அக்குயினாஸ் எழுதுகிறார். "நம் பாவங்களையெல்லாம் தாமே செய்தது போல, அந்த அளவுக்குத் துன்பங்களை அனுபவிப்பதை அவர் தேர்ந்து கொண்டார்" என்று **அர்ச். பொனவெந்தூர்** எழுதுகிறார். சேசுநாதரின் துன்பங்கள் நம் பாவக் கடனை மொத்தமாகத் திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமானதாக இருக்கும்படி கடவுள் தாமே அவரது வேதனைகளை அதிகரிப்பது சரியானதென்று நினைத்தார்; இவ்வாறு, **"ஆண்டவர் அவரைக் கஸ்தி வேதனையிலாழ்த்தி அவரை நொறுக்கச் சித்தமானார்" (53:10)** என்ற இசையாஸின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. வேதசாட்சிகளின் வரலாறுகளை நாம் வாசிக்கும் போது, அவர்களில் சிலர் சேசுவின் வேதனைகளை விட அதிகக் கசப்பான வேதனைகளை அனுபவித்தார்கள் என்பதுபோல முதல் பார்வையில் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் எந்த ஒரு வேதசாட்சியின் வேதனையும் அதன் தீவிரத்தில் நம் இரட்சகரின் வேதனைகளுக்கு ஈடாகவே

முடியாது என்று அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார். அவருடைய வேதனைகள் மற்ற எல்லா வேதனைகளையும் விட அதிகக் கூர்மையானவையாக இருந்தன. இதே போல, கிறீஸ்துநாதரின் துன்பங்கள் இவ்வாழ்வில் உணரப்படக் கூடிய அனைத்திலும் அதிகக் கடுமையான வேதனை களாக இருந்தன என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸும்** எழுதுகிறார். நம் ஆண்டவர் அனுபவித்த வாதைகள் ஒவ்வொன்றிலும், துன்பங்களின் கடும் வேதனை மற்றும் தீவிரத் தன்மை காரணமாக, அவர் வேதசாட்சிகளின் எல்லா வாதைகளுக்கும் ஈடான வாதைகளை அனுபவித்தார் என்று **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** எழுதுகிறார். தாவீதரசர், கிறீஸ்துவின் ஆளுமையில், "என் மீது உமது கோபம் சுமந்தது...உமது பயங்கரங்கள் என்னைக் கலங்கடித்தன" என்று கூறியபோது, இதெல்லாம் அவரால் முன்னுரைக்கப்பட்டன. இவ்வாறு நம் பாவங்களுக்கு எதிராகக் கடவுள் தம்மில் கருக்கொண்ட கடுஞ்சினம் முழுவதும் சேசுகிறீஸ்துநாதரின் ஆளுமையின் மீது சுமத்தப்பட்டது. இவ்வாறுதான், **"அவர் நமக்காக சாபமானார்" (கலாத்.3:13)** என்று அப்போஸ்தலர் சொன்னதற்கு நாம் விளக்கம் கூற வேண்டும், அதாவது நம் பாவங்களுக்குத் தகுதியான எல்லா சாபங்களுக்கும் அவர் இலக்கானார்.

வெள்ளி

வியாகுல மாதா திருநாள்

I

வேதசாட்சிகள் என்ன துன்பம் அனுபவித்தார்கள் என்று நமக்குக் காட்டும்படியாக, அவர்கள் தங்கள் வேதசாட்சியத்தின் கருவிகளோடு சித்தரிக்கப்படுகிறார்கள்; அர்ச். பிலவேந்திரர் ஒரு சிலுவையோடும், அர்ச். சின்னப்பர் ஒரு வாளோடும் தோன்றுகிறார்கள். மாமரியோ, தனது கரங்களில் தனது திருமகனின் மரித்த திருச்சரீரத்தோடு தோன்றுகிறார்கள். ஏனெனில் அவர் மட்டுமே அவர்களது வேதசாட்சியத்தின் காரணமாக இருந்தார்;

அவர் மீதுள்ள தயவிரக்கம்தான் தேவ அன்னையை வேதசாட்சிகளின் இராக்கினியாக ஆக்கியது.

சேசுநாதர் கல்வாரிக்குச் செல்லும் சாலையில் தம் தோளில் சிலுவையைச் சுமந்து கொண்டு செல்வதை **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** பின்வருமாறு தியானிக்கிறார். அவர் தம் தாயாரை நோக்கித் திரும்பி, “ஐயோ, என் சொந்த, பிரியமுள்ள அன்னையே, எங்கே போகிறீர்கள்? எப்பேர்ப்பட்ட ஒரு காட்சியை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்! என் துன்பங்களைக் கண்டு நீங்களும், உங்கள் துன்பங்களைக் கண்டு நானும் அவஸ்தைப்படப் போகிறோம்'' என்று சொல்கிறார். ஆனால் நேசமிக்க திருத்தாயார் , அவரது மரணத்தின் போது அவருக்கு அருகில் இருந்தால், தான் மரணத்தை விடக் கொடிய வாதைகளை அனுபவிக்க வேண்டிய் இருக்கும் என்று அறிந்திருந்தும் கூட, அவரைப் பின்செல்கிறார்கள். தன் திருமகன் தாம் அறையப்பட இருக்கும் சிலுவையைச் சுமந்து செல்வதை அவர்கள் காண்கிறார்கள். அவர்களும் தன் வியாகுலங்களாகிய சிலுவையைச் சுமந்து கொண்டு, அவரோடு தனது சிலுவையில் அறையப்படும்படியாக, அவரைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

“மாமரி, தனது திருமகனின் திருப்பாடுகளைத் தானே அனுபவித்திருந்தால், எவ்வளவு துன்பப்பட்டிருப்பார்களோ, அதை விட மிக அதிகமாக, அவருடைய திருப்பாடுகளில் துன்பப் பட்டார்கள்; ஏனெனில் அவர்கள் தன்னை நேசித்ததை விட எவ்வளவோ அதிகமாகத் தன் சேசுவை நேசித்தார்கள்'' என்று முத். அமதேயுஸ் எழுதுகிறார். இதனாலேயே “மாமரியின் துன்பங்கள் ஒருங்கிணைந்த அனைத்து வேதசாட்சிகளின் துன்பங்களுக்கும் அப்பாற் பட்டவையாக இருந்தன'' என்று வலியுறுத்திக் கூற **அர்ச். இல்டஃபோன்ஸ்** சற்றும் தயங்கவில்லை. **அர்ச். ஆன்செல்ம்**, திவ்விய கன்னிகையிடம் பேசும் விதமாக: “பரிசுத்த வேத சாட்சிகளின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடிய சித்திரவதைகள், அம்மா, உங்கள் வேதசாட்சியத்தோடு ஒப்பிடும்போது, மிகவும் அற்பமானவையாக அல்லது ஒன்றுமில்லாமை யாக இருந்தன'' என்கிறார். அதே புனிதர் தொடர்ந்து: “உண்மையாகவே, ஓ இராக்கினியே, வாழ்வின் ஊற்றாகிய உங்கள் திருச்சுதன் உங்களைப்

பாதுகாத்திராவிட்டால், உங்கள் துன்பங்களின் காரணமாக நீங்கள் இறந்திருப்பீர்கள் என்னும் அளவுக்கு, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு கணமும் உங்கள் துன்பங்கள் மகா கொடியவையாக இருந்தன" என்கிறார். அர்ச். சியென்னா பெர்னார்தீன் இன்னும் ஒரு படி மேலே சென்று, மாமரியின் துன்பங்கள் துன்பப்படத் திறனுள்ள எல்லா சிருஷ்டிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் என்றால், அவற்றைத் தாங்க முடியாமல், அந்தக் கணமே அவர்கள் இறந்திருப்பார்கள் என்னும் அளவுக்கு, அவை மிகக் கொடியவையாக இருந்தன என்கிறார். அப்படிய் இருக்க, மாமரியின் வேதசாட்சியம் ஒப்பற்றது என்பதிலும், அது அனைத்து வேதசாட்சிகளின் துன்பங்களையும் கூடப் பெரியதாயிருந்தது என்பதிலும் யார் சந்தேகம் கொள்ள இயலும்? அர்ச். அந்தோனினுஸ் கூறுவதுபோல, "வேதசாட்சிகள் தங்கள் சொந்த உயிர்களின் பலியில் துன்புற்றார்கள்; ஆனால் திவ்விய கன்னிகையோ, தன் சொந்த உயிரை விடப் பாரதூரமான அளவுக்குத் தான் நேசித்த தன் திருமகனின் உயிரைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்ததால் துன்பப்பட்டார்கள்."

ஓ, இனிய நேசத்தின் தாயாரே, இந்த உங்களது அழகிய ஆத்துமத்தின் வேத சாட்சியத்தால், என் அன்புள்ள ஆண்டவரும், தேவனுமானவருக்கு எதிராக நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருகிறீர்கள். இந்தப் பாவங்களுக்காக என் முழு இருதயத்தோடு நான் மனஸ்தாபப்படுகிறேன். சோதனைகளில் என்னை ஆதரித்துக் காத்தருளுங்கள், இந்த நிர்ப்பாக்கியமான அந்நிய தேச வாழ்வுக்குப் பிறகு, நித்தியத்திற்கும் சேசுவினுடையவும், உங்களுடையவும் ஸ்துதிகளை நான் பாடும்படி பரலோகத்திற்கு வந்து சேரும்படியாக, சேசுவின் பேறுபலன்களின் வழியாகவும், உங்கள் பேறுபலன்களின் வழியாகவும் என் ஆத்துமத்தை நான் இரட்சித்துக் கொள்ளுமாறு, என் மரண நேரத்தில் எனக்கு செய்தருளுங்கள். ஆமென்.

II

வேதசாட்சிகள் கொடுங்கோலர்களால் தங்களுக்குச் செய்யப் பட்ட வாதைகளின் கீழ் துன்புற்றார்கள். ஆனால் தமது ஊழியர்களை ஒருபோதும் கைவிடாதவராகிய நம் ஆண்டவரோ, அவர்களது துன்பங்களுக்கு மத்தியில் எப்போதும் அவர்களைத் தேற்றினார். அவர்களது இருதயங்களில் எரிந்து கொண்டிருந்த தேவசிநேகம், அவர்களது வேதனைகள் அனைத்தையும் இனியதாகவும், இன்பமானவையாகவும் ஆக்கி விட்டது. இதன் காரணமாக, சேசுநாதரின் மீது அவர்களது அன்பு எவ்வளவு பெரிதாயிருந்ததோ, அவ்வளவுக்குக் குறைவாகவே அவர்கள் தங்கள் வேதனைகளை உணர்ந்தார்கள்; மேலும், அவை அனைத்திற்கும் மத்தியிலும், கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளின் நினைவு ஒன்றே கூட அவர்களைத் தேற்றப் போதுமாயிருந்தது.

மாமரியின் காரியத்திலோ, இது நேர் எதிராக இருந்தது; ஏனெனில் சேசுநாதரின் வாதைகளே, அவர்களது வேதசாட்சியமாக இருந்தன. சேசுவின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பே அவர்களை வாதிப்பவனாக இருந்தது. **“உன் நெருக்கிடை கடலைப் போல் அபாரமாய் இருக்கின்றதே, உன்னைக் குணப்படுத்துபவர் யார்?"** என்ற எரேமியாஸின் வார்த்தைகளை இங்கே நாம் திரும்பவும் சொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம். கடல் முழுவதும் கசப்பு நிரம்பியதாகவும், இனிப்பாய் இருக்கும் ஒரே ஒரு துளி நீரைக் கூடத் தனக்குள் கொண்டிராததாகவும் இருப்பது போலவே, மாமரியின் இருதயமும் முற்றிலும் கசப்பாகவும், மிக அற்பமான ஆறுதலும் அற்றதாகவும் இருந்தது: “உன்னைக் குணப்படுத்துபவர் யார்?" அவர்களது திருமகன் மட்டுமே அவர்களுக்கு ஆறுதல் தரவும், அவர்களைக் குணப்படுத்தவும் முடியும்; ஆனால் மாமரி கிறீஸ்துவின் மீது கொண்டிருந்த அன்பே அவர்களது வேதசாட்சியத்துக்குக் காரணமாக இருந்ததால், சிலுவையில் அறையுண்ட தனது திருமகனிடமிருந்து வரும் தனது மிகக் கொடிய வேதனையில் மாமரி என்ன ஆறுதலைத்தான் பெற்றுக்கொள்ள முடியும்?

ஆகவே, மாமரியின் துக்கம் எவ்வளவு பெரியது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, அவர்களது திருமகனின் மீது அவர்ள்

கொண்டிருந்த அன்பின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று கொர்னேலியுஸ் ஆ லாப்பிதே கூறுகிறார். ஆனால் இந்த அன்பை அளக்க யாரால் முடியும்? "தனது மகன் என்ற முறையில் அவர்கள் அவர் மீது கொண்டிருந்த சுபாவமான அன்பும், தனது கடவுளாக அவர் மீது அவர்கள் கொண்டிருந்த சுபாவத்திற்கு மேற்பட்ட அன்பும் மாமரியின் திரு இருதயத்தில் ஒன்றாக இணைந்திருந்தன." இந்த இரண்டு அன்புகளும் ஒன்றாகக் கலந்திருந்தன. இந்த அன்பு எவ்வளவு பெரிதாயிருந்தது என்றால், "ஒரு மாசற்ற சிருஷ்டியால் எந்த அளவுக்கு சேசுவை நேசிக்க முடியுமோ, அந்த அளவுக்கு" மாமரி சேசுவை நேசித்தார்கள் என்று பாரிஸின் வில்லியம் தயக்கமேயின்றி வலியுறுத்துகிறார். இவ்வாறு, அர்ச். விக்டரின் ரிச்சர்ட் என்பவர் கூறுவது போல, "மாமரி சேசுவை நேசித்ததை விட அதிகமாக வேறு எந்த சிருஷ்டியும் அவரை ஒருபோதும் நேசித்ததில்லை என்பதால், எந்த ஒரு துயரமும் மாமரியின் துயரத்திற்கு ஈடானதாக இருக்க ஒருபோதும் சாத்தியமில்லை" என்று **அர்ச். விக்டரின் ரிச்சர்ட்** கூறுகிறார்.

என் வியாகுலத் தாயாரே, உம் நேசத் திருக்குமாரன் மரணத்திற்கு இட்டுச் செல்லப் பட்டதைக் காண்பதில் நீங்கள் அனுபவித்த துயரத்தைப் பார்த்து, கடவுள் எனக்கு அனுப்பும் துன்பங்களை நானும் பொறுமையோடு தாங்கிக் கொள்ளத் தேவையான வரப்பிரசாதத்தை எனக்குப் பெற்றுத் தாரும். என் சிலுவையுடன் என்மரணம் வரை உங்களோடு எப்படி சேர்ந்து வருவது என்பதை மட்டும் நான் அறிந்திருப்பேன் என்றால், நான் பேறுபெற்றவன். நீங்கள் உங்கள் சேசுவோடு-- நீங்கள் இருவருமே மாசற்றவர்கள் மற்றவற்றை விட மிக அதிக பாரமான சிலுவையைச் சுமந்தீர்கள். அப்படிய் இருக்க, நரகத்திற்கே தகுதி பெற்றிருககிற நீசப் பாவியாகிய நான் என் சிலுவையைச் சுமந்துசெல்ல மறப்பேனா? ஆ, மாசற்ற கன்னிகையே, எல்லாச் சிலுவைகளையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ள நீங்கள் எனக்கு உதவி செய்வீர்கள் என்று நம்பிய் இருக்கிறேன். ஆமென்.

சனி

மாமரி நம் இரட்சணியத்துக்காகத் துன்பப்படுகிறார்கள்.

I

அர்ச். பொனவெந்தூர், திவ்விய கன்னிகையிடம் பேசும் விதமாக, “ஓ இராக்கினியே, உங்களையும் பலியாக்கும்படி ஏன் கல்வாரிக்குச் சென்றீர்கள்? சிலுவையில் அறையுண்ட ஒரு சர்வேசுரன் எங்களை மீட்டு இரட்சிக்கப் போதாது என்றா, அவருடைய தாயாராகிய நீங்களும் அவரோடு சிலுவையில் அறையப்படும்படி சென்றீர்கள்?" என்று கேட்கிறார். உண்மையில், சேசுநாதரின் மரணம் உலகையும், எண்ணற்ற உலகங்களையும் மீட்டு இரட்சிக்கப் போது மானதாக இருந்தது. ஆனால் இந்த நல்ல தாயார், நம்மீது தனக்குள்ள அன்பிற்காக, கல்வாரியின் மீதுதான் ஒப்புக்கொடுத்த தன் துன்பங்களின் பேறுபலன்களால் நம் இரட்சணியத்திற்குத் தானும் உதவ விரும்பினார்கள். ஆகவே, நம் அன்பிற்காக சேசுநாதர் அனுபவித்த திருப்பாடுகளுக்காக அவருக்கு நாம் பெரும் கடமைப்பட்டவர்களாக இருப்பது போலவே, தனது திருமகனின் மரணத்தில், நம் இரட்சணியத்திற்காகத் தானே முன்வந்து மாமரி அனுபவித்த வேத சாட்சியத்திற்காக, அவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். தானே முன்வந்து என்று நான் சொல்கிறேன், ஏனெனில், அர்ச். ஆக்னஸ் அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு வெளிப்படுத்தியது போல, “தயாளமும், கருணையுமுள்ள நமது திவ்ய அன்னை, நம் ஆத்துமங்கள் மீட்கப்படாமல் இருப்பதையும், அவை தங்கள் முந்தின அழிவின் நிலையில் கைவிடப் படுவதையும் காண்பதை விட, நமக்காக எந்த ஒரு வாதைக்கும் தன்னைக் கையளிக்க ஆர்வமாக இருந்தார்கள்." உண்மையில், தனது திருமகனின் திருப்பாடுகளில் மாமரியின் மாபெரும் வியாகுலத்தின் மத்தியில் அவர்களுக்கு இருந்த ஒரே ஒரு ஆறுதல், இழக்கப்பட்ட உலகம் அவரது மரணத்தால் மீட்டு இரட்சிக்கப்படுவதையும், கடவுளின் எதிரிகளாக இருந்த மனிதர்கள் அவரோடு மீண்டும் ஒப்புறவாவதையும் காண்பது மட்டுமே. “அனைவரின் மீட்பிற்காகவும் ஒரு பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது, அதன் மூலமாகக் கடுங்கோபத்தில் இருந்தவர் சாந்தப்படுத்தப் பட்டார் என்பதைப் பற்றி, தான் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த

அதே வேளையில், அகமகிழ்ந்து களிகூர்ந்து கொண்டும் இருந்தார்கள்" என்கிறார் காஸியாவின் சீமோன் என்பவர்.

II

ஆகவே, மாமரியின் மிகப் பெரிதான நேசம் நம் நன்றியறிதலுக்கு தகுதியுள்ளதாக இருக்கிறது. குறைந்த பட்சம் மாமரியின் வியாகுலங்களில் அவர்களைத் தியானித்து, அவர்கள்மீது பரிதாபப் படுவதன் மூலம் இந்த நன்றியறிதல் அவர்களுக்குக் காட்டப்பட வேண்டும். ஆனால் மிகச் சிலர் மட்டுமே இப்படிச் செய்கிறார்கள் என்றும், உலகின் பெரும் பகுதி அவற்றை மறந்தே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றும் மாமரி அர்ச். பிரிஜித்தம்மாளிடம் முறையிட்டார்கள்: “என் மீது இரங்குபவர்களும், என் வியாகுலங்களை தியானிப்பவர்களும் யாராவது இருக்கிறார்களா என்று பூமி முழுவதிலும் தேடிப் பார்க்கிறேன்; மிக மிகச் சிலரே அப்படிச் செய்வதை நான் காண்கிறேன். ஆகவே, என் மகளே, அநேகரால் நான் மறக்கப்படுகிறேன் என்றாலும், நீயாவது என்னை மறக்காமல் இரு; என் கடும் வேதனையை தியானி, உன்னால் முடிந்த வரை என் துயரத்தைக் கண்டுபாவி." மாமரியின் வியாகுலங்களை நாம் தியானிப்பது அவர்களுக்கு எவ்வளவு பிரியமான செயலாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர்களது ஒரு காட்சியை நாம் அறிந்திருப்பது போதுமானது. 1239ம் ஆண்டில் மாமரி தனது பக்தர்களாகிய ஏழு பேருக்குத் தோன்றினார்கள். (இந்த ஏழு பேரும் பிற்காலத்தில் செர்வைட்ஸ் துறவற சபையை ஸ்தாபித்தார்கள்.) மாமரியின் கரங்களில் ஒரு கருப்பு நிற உடை இருந்தது. தன்னை மகிழ்விக்க அவர்கள் விரும்பினால், அவர்கள் அடிக்கடி தனது வியாகுலங்களை தியானிக்க வேண்டும் என்று மாமரி ஆசையோடு கேட்டுக் கொண்டார்கள்; இந்த நோக்கத்திற்காகவும், தனது துயரங்களை அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் இந்தத் துக்க ஆடையை அவர்கள் அணிந்திருக்க வேண்டும் என்ற தனது ஆசையை மாமரி வெளிப்படுத்தினார்கள். தம்மை விடத் தம் தாயைக் கண்டு ஆத்துமங்கள் பரிதாபப்படுவதைக் காண்பதில் தாம் அதிக

மகிழ்ச்சியடைவதாக கிறீஸ்துநாதர் தாமே **முத். பினாஸ்கோ வெரோணிக்கம்மாளுக்கு** அறிவித்தார்: “என் மகளே, என் திருப்பாடுகளை தியானித்து சிந்தப்படும் கண்ணீர்த் துளிகள் எனக்குப் பிரியமானவை. ஆனால் என் தாய் மாமரியை ஒரு மிகப் பெரும் நேசத்தைக் கொண்டு நான் நேசித்தேன் என்பதால், என் மரணத்தின்போது அவர்கள் தாங்கிய வாதைகளைப் பற்றிய தியானம் எனக்கு இன்னும் அதிகம் உகந்ததாக இருக்கிறது" என்று அவர் வெளிப்படுத்தினார்.

இதன் காரணமாக, மாமரியின் வியாகுலங்களில் பக்தி கொண்டிருப்பவர்களுக்கு சேசுநாதர் வாக்களித்துள்ள வரப்பிரசாதங்கள் மிகப் பெரியவையாக இருக்கின்றன.

குருத்து ஞாயிறு

சேசுநாதரின் திருக்காயங்கள்

I

சிலுவையில்தான் நம் இரட்சணியமும், சோதனைகளுக்கு எதிரான பலமும், உலக இன்பங்களில் பற்றின்மையும் இருக்கின்றன. சிலுவையில் கடவுளின் உண்மையான நேசம் காணப்படுகிறது. ஆகவே, சேசுநாதர் நமக்கு அனுப்பும் சிலுவையைப் பொறுமையோடு சுமக்கவும், நம் மீதுள்ள அன்பிற்காகத் தமது சிலுவையின் மீது மரித்தவராகிய சேசுவின் பொருட்டு, நம் சிலுவையின் மீது மரிக்கவும் நாம் பிரதிக்கினை செய்ய வேண்டும். மரணம் வரைக்கும் துன்பங்களுக்கு நம்மை அமைந்த மனதோடு கையளிப்பதை விட மோட்சம் செல்ல வேறு வழி எதுவும் இல்லை. இவ்வாறு, துன்பத்திலும் கூட நாம் சமாதானத்தைக் கண்டடைய முடியும். சிலுவை வரும்போது, தேவ சித்தத்தோடு நம்மை இணைத்துக் கொள்வதை விட சமாதானத்தை அனுபவிக்க நமக்கு வேறு என்ன வழி உள்ளது? இந்த வழியை நாம் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், நம் விருப்பப்படி எங்கு சென்றாலும், என்ன

செய்தாலும், சிலுவையின் பாரத்திலிருந்து நாம் ஒருபோதும் தப்பித்துக் கொள்ள மாட்டோம். மறு புறத்தில், அதை நல்ல மனதோடு நாம் சுமப்போம் என்றால், அது மோட்சத்திற்கு நம்மைச் சுமந்துசெல்லும், இவ்வுலகில் நமக்கு சமாதானத்தைத் தரும்.

சிலுவையை ஏற்க மறுப்பவன் எதை ஆதாயமாக்கிக் கொள்கிறான்? அவன் அதன் பாரத்தை அதிகரிக்கிறான். ஆனால் அதை அரவணைத்துக் கொண்டு, பொறுமையோடு சுமப்பவனோ அதன் பாரத்தை இலகுவாக்குகிறான், அதன் பாரமே அவனுக்கு ஓர் ஆறுதலாக மாறிப் போகிறது; ஏனெனில் தம்மை மகிழ்விக்கும்படி நல்ல மனதோடு தங்கள் சிலுவையைச் சுமக்கும் அனைவருக்கும் கடவுள் வரப்பிரசாதத்தை அபரிமிதமாகத் தருகிறார். இயற்கை விதியின்படி துன்பத்தில் இன்பம் எதுவுமில்லை; ஆனால் தேவசிநேகம் ஓர் இருதயத்தில் அரசாளும்போது, அந்த இருதயம் தன் துன்பங்களில் இன்பம் காண அது அதற்கு உதவுகிறது.

அழுது புலம்பாமல் துன்பங்களையும், கடும் உழைப்பையும் தாங்குவதில் நாம் கடவுளுக்குப் பிரமாணிக்கமாக இருப்போம் என்றால், மோட்சத்தில் நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சியான நிலை என்ன என்பதை மட்டும் நாம் சிந்திப்போமானால்! துன்பப்படும்படி நமக்குக் கட்டளையிடுபவராகிய சர்வேசுரனுக்கு எதிராக நாம் முறையிடாமலிருந்து, யோப் என்பவரோடு: “அவர் என்னைத் துன்பத்திலிருந்து விடுவிக்காதிருப்பதும், பரிசுத்தருடைய வார்த்தைகளை நான் மீறாதிருப்பதுமே எனக்குப் பெரிய ஆறுதலா யிருப்பதாக" (யோப்.6:10) என்று சொல்வோமானால்! நாம் பாவிகளாயிருந்து, நரகத்திற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றால், இவ்வுலகிலேயே நாம் தண்டிக்கப்படுகிறோம் என்பது, நமக்குநேரிடும் துன்பங்களில் நமக்குப் பெரும் ஆறுதலாக இருக்க வேண்டும்; ஏனெனில் கடவுள் நித்தியத் தண்டனையிலிருந்து நம்மை விடுவிப்பார் என்பதற்கு இது நிச்சயமான அடையாளமாக இருக்கிறது. இவ்வுலகில் செல்வச் செழிப்போடு இருக்கும் பாவிக்கு ஐயோ கேடு! கசப்பான ஒரு துன்ப சோதனையை அனுபவிப்பவன் யாராயினும், தனக்குத் தகுதியாய் இருக்கிற நரகத்தை ஒரு கணம் நோக்கிப் பார்ப்பானாக. இவ்வாறு, அவன் தாங்குகிற வேதனைகள்

அவனுக்கு இலகுவாகத் தோன்றும். ஆகவே, நாம் பாவம் கட்டிக் கொண்டோம் என்றால், இதுவே நம் தொடர்ச்சியான ஜெபமாக இருக்க வேண்டும்: “ஆண்டவரே, உமது திருச்சித்தத்திற்கு எதிரானவனாக நான் இராதபடி, வேதனைகளிலிருந்து என்னை விடுவிக்காமல், அவற்றைப் பொறுமையோடு சுமக்க எனக்குத் தேவையான பலத்தைத் தந்தருளும். பரிசுத்தரின் வார்த்தைகளை நான் எதிர்த்து நிற்க மாட்டேன்; சேசுகிறீஸ்துவோடு எப்போதும் சேர்ந்து, **“ஆம் பிதாவே, இதுவே உமக்குப் பிரியமாய் இருக்கிறது" (மத்.11:26)** என்று கூறியபடி, நீர் எனக்கு நியமித்திருக்கிற காரியத்தோடு எல்லாவற்றிலும் என்னை நான் ஒன்றித்துக் கொள்வேனாக."

II

தேவசிநேகத்தால் ஆளப்படுகிற ஆத்துமம் கடவுளை மட்டுமே தேடுகிறது. **ஒரு மனிதன் அன்பிற்காகத் தன் இல்லத்திலுள்ள அனைத்தையும் கொடுத்து விட்ட பிறகு, அவன் அவற்றை ஒன்றுமில்லாமையாகக் கருதி வெறுப்பான் (உந்.சங்.8:7).** கடவுளை நேசிப்பவன், அவரை நேசிக்கத் தனக்கு உதவாத அனைத்தையும் நிந்தித்துத் தள்ளுகிறான்; அவன் செய்யும் எல்லா நற்செயல்களிலும், கடவுளின் மகிமைக்காகத் தான் செய்யும் எல்லாத் தவச் செயல்களிலும், உழைப்புகளிலும் அவன் ஆத்துமத்தின் ஆறுதல்களையும், இனிமைகளையும் தேடுவதில்லை. தான் கடவுளை மகிழ்விக்கிறான் என்று அறிந்திருப்பதே அவனுக்குப் போதுமானதாக இருக்கிறது. ஒரே வார்த்தையில் கூறுவதானால், அவன் எல்லாக் காரியங்களிலும் தன்னை மறுதலிக்கவும், தனக்குச் சொந்தமான ஒவ்வொரு இன்பத்தையும் புறக்கணிக்கவும் அவன் பெருமுயற்சி கூட செய்கிறான்; அதன்பின், எதைப் பற்றியும் அவன் பெருமையடித்துக் கொள்வதில்லை, எதற்காகவும் வீண்பெருமை கொள்வதுமில்லை; மாறாக, அவன் தன்னைப் பயனற்ற ஊழியனாக மதிக்கிறான், மிகத் தாழ்மையான இடத்தில் தன்னை வைக்கிறான், தேவ சித்தத்திற்கும், இரக்கத்திற்கும் தன்னை அர்ப்பணிக்கிறான்.

புனிதர்களாவதற்கு நாம் நம் சுவைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். கசப்பானது இனிப்பாகவும், இனிப்பு கசப்பாகவும் தோன்றும் நிலைக்கு நாம் வந்துசேரவில்லை என்றால், கடவுளோடு உத்தமமான ஐக்கிய நிலையை நாம் ஒருபோதும் அடைய மாட்டோம். நாளுக்கு நாள் நமக்கு நிகழ்வது போல நம் நாட்டங்களுக்கு எதிரான, சிறியவையும், பெரியவையுமான எல்லாக் காரியங்களையும் அமைந்த மனதோடு ஏற்றுத் துன்புறுவதில்தான் நம் முழுப் பாதுகாப்பும், உத்தமதனமும் அடங்கியுள்ளது. அவற்றை எந்தக் கருத்துக்காக நாம் தாங்க வேண்டுமென ஆண்டவர் ஆசிக்கிறாரோ, அந்த நோக்கத்திற்காக நாம் அவற்றை அனுபவிக்க வேண்டும். நாம் செய்துள்ள பாவங்களிலிருந்து நம்மைச் சுத்திகரிப்பதும், நித்திய வாழ்வைச் சுதந்தரித்துக் கொள்வதும், கடவுளை மகிழ்விப்பதுமே அந்த நோக்கம். இதுவே நம் எல்லாச் செயல்களிலும் நாம் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டிய முதன்மையானதும், மிகுந்த மேன்மையுள்ளதுமான நோக்கமாகும்.

ஆகவே, கடவுள் நமக்கு அனுப்புகிற ஒவ்வொரு சிலுவையையும் ஏற்று அனுபவிக்க நாம் நம்மையே கடவுளுக்கு எப்போதும் அர்ப்பணிப்போம்; கடவுளின் மீதுள்ள அன்பிற்காக ஒவ்வொரு கடும் உழைப்பையும், துன்பத்தையும் தாங்க எப்போதும் தயாராக இருப்பதில் நாம் கவனமாயிருப்போம். இவ்வாறு அவை வரும் போது, அவற்றை அரவணைத்துக் கொள்ள நாம் ஆயத்தமாயிருப்போம். சேசுநாதர் ஒலிவத் தோட்டத்தில் யூதர்களால் கைதுசெய்யப்பட்டு, மரணத்திற்கு இட்டுச் செல்லப்பட்டபோது, இராயப்பரிடம் கூறிய வார்த்தைகளை நாமும் சொல்வோம்: **“பிதாவானவர் எனக்குக் கொடுத்த பாத்திரத்தை நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" (அரு.18:11).** கடவுள் இந்தச் சிலுவையை என் நன்மைக்காகத் தந்திருக்கிறார், அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நான் அவரிடமே சொல்வேனா?

எந்தச் சிலுவையாவது மிக பாரமானதாகத் தோன்றும் போதெல்லாம், ஜெபத்திடம் நாம் தஞ்சமடைவோம். அப்போது அதைப் பலனுள்ள முறையில் அனுபவிக்கக் கடவுள் நமக்குப் பலம் தருவார். அப்போது, **“இக்காலத்தின் துன்ப துரிதங்கள் இனி**

நம்மிடத்தில் வெளிப்படப் போகிற மகிமைக்குச் சரிதகைமையானதல்ல என்று எண்ணுகிறேன்" (உரோ.8:18) என்ற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளை நாம் தியானிப்போம். ஆகவே, துன்பங்கள் நம்மை வாதிக்கும் போதெல்லாம் நம் விசுவாசத்திற்கு உயிரூட்டிக் கொள்வோம்; முதலில், சிலுவையின் மீது நமக்காக மரண அவஸ்தைப்பட்டவரை நோக்கி நம் கண்களைத் திருப்புவோம். மேலும் மோட்சத்தை, கடவுள் தமது நேசத்திற்காகத் துன்புறுபவர்களுக்கு ஆயத்தம் செய்திருக்கிற ஆசீர்வாதங்களை நோக்கிப் பார்ப்போம்; இவ்வாறு செய்தால், நாம் பலவீன இருதய முள்ளவர்களாக இருக்க மாட்டோம். மாறாக, நாம் துன்புறும்படி அவர் நமக்குத் தருகிற வேதனைகளுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம், இன்னும் அதிக வேதனைகளை அவர் நமக்கு அனுப்ப வேண்டுமென்று ஆசைப்படுவோம். ஓ புனிதர்கள் இவ்வுலகில் தாங்கள் பட்டம் பதவிகளையும், இன்பங்களையும் கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றியல்ல, மாறாக, சேசுகிறீஸ்துவுக்காகத் தாங்கள் துன்பப்பட்டார்கள் என்பதைப் பற்றியே இப்போது மோட்சத்தில் அக்களிக்கிறார்கள்! கடந்து செல்லும் அனைத்தும் அற்பமானது; நித்தியமானது மட்டுமே மேன்மையானது, அது ஒருபோதும் கடந்து போவதில்லை.

ஓ என் சேசுவே, **"நம்மிடம் (மனந்திரும்பி) வாருங்கள், நாமும் உங்களை நோக்கி வருவோம்" (சக்கரி.1:3)** என்று நீர் என்னிடம் சொல்லும் வார்த்தைகள் எவ்வளவு ஆறுதலாக இருக்கின்றன! சிருஷ்டிகளின் நிமித்தமாகவும், என் இழிவான நாட்டங்களின் காரணமாகவும் நான் உம்மை விட்டுப் பிரிந்தேன்; இப்போது அவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு, உம்மை நோக்கித் திரும்புகிறேன்; உம்மை நேசிக்க நான் ஆசித்தால், நீர் என்னைப் புறக்கணிக்க மாட்டீர் என்று நான் நம்புகிறேன்; ஏனெனில் என்னை அரவணைத்துக் கொள்ள நீர் ஆயத்தமாயிருப்பதாக என்னிடம் நீர் கூறிய் இருக்கிறீர். ஆகவே, உம் வரப்பிரசாதத்திற்குள் என்னை ஏற்றுக் கொள்ளும். இனி ஒருபோதும் நான் உம்மை விட்டுப் பிரியாதபடி நீர் எவ்வளவு பெரிய நன்மையாக இருக்கிறீர் என்றும், என் மீது நீர் கொண்டுள்ள அன்பின் மிகுதியையும் நான் அறியச் செய்தருளும். ஓ என் சேசுவே,

என்னை மன்னியும்! ஓ என் நேசரே, உமக்கு எதிராக நான் கட்டிக்கொண்ட பாவங்களை எனக்கு மன்னியும். உமது அன்பை எனக்குத் தாரும். அதன்பின் உமது சித்தப்படி என்னை நடத்தும்; உமது சித்தப்படி என்னைத் தண்டியும், உம்மைத் தவிர மற்ற எல்லாவற்றையும் என்னிடமிருந்து விலக்கும். உலகம் முழுவதும் என்னிடம் வந்து, தனது செல்வங்கள் அனைத்தையும் எனக்குத் தந்தாலும், உம்மை மட்டுமே நான் ஆசிக்கிறேன், வேறு எதையுமல்ல என்று நான் அறிக்கையிடுகிறேன். ஓ என் மாதாவான மரியாயே, உங்கள் திருச்சுதனிடம் எனக்காகப் பரிந்துபேசுங்கள். நீங்கள் கேட்கிற எதையும் அவர் உங்களுக்குத் தந்தருளுகிறார். உங்களில் நான் என் நம்பிக்கையை வைக்கிறேன்.

செவ்வாய்

சேசுநாதரின் திருப்பாடுகளின் மீதான தியானம்

I

நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளைப் பற்றிய தியானம் தேவசிநேகத்தை சம்பாதித்துக் கொள்ள ஒரு சிறந்த வழியாகும். சேசுநாதர் இவ்வுலகில் மிகக் கொஞ்சமாகவே நேசிக்கப்படுகிறார் என்ற உண்மை, குறைந்தபட்சம் அவ்வப்போதாவது, அவர் எவ்வளவு அதிகமாக நமக்காகத் துன்பப் பட்டிருக்கிறார் என்பதையும் அவர் எத்தகைய துன்பங்களை நமக்காக அனுபவித்தார் என்பதையும் தியானிப்பதிலிருந்து அல்ல, மாறாக, மனுக்குலத்தின் அசட்டைத்தனத்திலிருந்தும், அவர்களுடைய நன்றியற்றதனத்திலும் இருந்தே எழுகிறது. “கடவுள் நமக்காக இறந்தார் என்பது மனுக்குலத்திற்கு மடமையாகத் தோன்றுகிறது" என்று **அர்ச். கிரகோரியார்** குறிப்பிடுகிறார். பரிதாபத்திற்குரிய அடிமைகளாகிய நம்மை மீட்கும்படி மரணத்தைத் தழுவிக்கொள்ள சர்வேசுரன் சித்தமாயிருந்தார் என்பது மடமையாகத் தோன்றுகிறது; ஆயினும், அவர் அதைத்தான் செய்தார் என்று நம் விசுவாசம் கற்பிக்கிறது. “அவர் நம்மை நேசித்து, நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:2). தமது இரத்தத்தைக் கொண்டு நம்

பாவங்களைக் கழுவும்படி, தமது இரத்தத்தை முழுவதுமாகச் சிந்த அவர் சித்தங்கொண்டார்: **“இவர் நம்மைச் சிநேகித்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களினின்று நம்மைக் கழுவினார்'' (காட்சி.1:5).**

“என் தேவனே, நீர் எவ்வளவு அதிகமாக என்னை நேசித்தீர் என்றால், என் மீதுள்ள உமது அன்பின் வழியாக, உம்மையே நீர் வெறுக்கும் அளவுக்குச் சென்று விட்டவர் போலத் தோன்றுகிறீர்'' என்று அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார். மேலும், தேவ நற்கருணையில் நம் உணவாக வேண்டும் என்றும் அவர் சித்தங்கொண்டார். இங்கே, தேவதூதர்களுக்கு ஒப்பான புனிதராகிய அர்ச். தாமஸ் அக்குயினாஸ், மகா பரிசுத்த தேவத் திரவிய அனுமானத்தைப் பற்றிப் பேசும்போது, கடவுள் நமது ஊழியர் என்பது போலவும், நாம் ஒவ்வொருவரும் அவருடைய கடவுள் என்பது போலவும் அவர் நமக்காகத் தம்மையே தாழ்த்திக் கொண்டார் என்று கூறுகிறார்: “அவர் மனிதர்களின் ஊழியர் என்பது போலவும், அவர்கள் ஒவ்வொருவரும் கடவுளின் கடவுள் என்பது போலவும்!'' இதன் காரணமாகவே, **“கிறீஸ்துநாதருடைய சிநேகம் நம்மை நெருக்குகிறது'' (2கொரி.5:14)** என்று அப்போஸ்தலர் கூறுகிறார். கிறீஸ்துநாதர் நம்மீது கொண்டுள்ள அன்பு நம்மை நெருக்குகிறது, ஒருவிதத்தில் அவரை நேசிக்கும்படி அது நம்மைக் கட்டாயப்படுத்துகிறது என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார். ஓ என் தேவனே, மனிதர்கள் ஏதாவது ஒரு சிருஷ்டியின் மீது பாசம் கொண்டு விட்டால், அதன் மீது தங்களுக்குள்ள அன்பிற்காக அவர்கள் செய்யாமல் இருப்பது என்னவுண்டு? ஆனால், இதற்கும் அப்பால், கடவுளாகவே இருப்பவர் மீது, அளவற்ற நன்மைத்தனமும், அழகுள்ள உள்ளவர் மீது, நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவையில் மரிக்கும் அளவுக்கு அவர்களை நேசித்த அவர் மீது, அவர்களுக்கு உள்ள அன்பு எவ்வளவு குறைவானதாய் இருக்கிறது! ஆ, **“நானோ நம் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவின் சிலுவையிலன்றி வேறொன்றிலும் மேன்மை பாராட்டாதிருப்பேனாக'' (கலாத். 6:14)** என்று கூறிய அப்போஸ்தலரின் முன்மாதிரிகையை நாம் பின்செல்வோமாக! புனிதரான அப்போஸ்தலர் இப்படிப் பேசினார்;

என் மீதுள்ள அன்பினால் தமது திரு இரத்தத்தையும், உயிரையும் பலியாக்கும் ஒரு கடவுளைக் கொண்டிருப்பதை விட உலகத்தில் நான் பெற்றுக்கொள்வேன் என்று நம்பக் கூடிய மேலான மகிமை எது?

விசுவாசமுள்ள ஒவ்வொருவரும் சொல்ல வேண்டியது இதுதான். ஒருவனிடம் விசுவாசம் இருக்கிறது என்றால், கடவுளைத் தவிர வேறு எதையும் நேசிப்பது அவனுக்கு எப்படி சாத்தியமாக இருக்கும்? ஓ என் தேவனே! மூன்று ஆணிகளில், தமது கைகளிலும், பாதங்களிலும் உள்ள காயங்களில் தொங்குபவரும், முழுமையான வேதனையில், நம்மீதுள்ள அன்பிற்காக மரிப்பவருமாகிய சிலுவையில் அறையுண்ட சேசுவைக் கண்டுதியானிக்கிற ஓர் ஆன்மா, தனது முழு வலிமையோடும் அவரை நேசிக்கும்படி தான் இழுக்கப்படுவதாகவும், நெருக்கப் படுவதாகவும் உணராமல் எப்படி இருக்க முடியும்?

II

ஓர் ஆன்மா தேவசிநேகத்தில் எவ்வளவு குளிர்ந்ததாகத் தன்னால் இருக்க முடியுமோ, அவ்வளவு குளிர்ந்ததாக இருக்கட்டும்; அதனிடம் விசுவாசம் இருந்தால், சேசுகிறீஸ்துவை நேசிக்கும்படி உந்தப்படுவதாக உணராமல் இருப்பது அதற்கு எப்படி சாத்தியம் என்று எனக்குத் தெரியவில்லை. பரிசுத்த வேதாகமத்தை மேலோட்டமாக தியானித்தாலும் கூட, தமது திருப்பாடுகளிலும், தேவநற்கருணையிலும் அவர் நமக்கு வெளிப்படுத்திய அன்பை அது நமக்கு வெளிப்படுத்துகிறது. அவரது திருப்பாடுகளைப் பொறுத்த வரை, "மெய்யாகவே அவர் நமது பலவீனத்தைத் தாமே எடுத்துக் கொண்டு, நமது வேதனைகளைத் தாமே சுமந்து கொண்டார்'' என்று **இசையாஸ்** ஆகமத்தில் **(53:4)** நாம் வாசிக்கிறோம். அடுத்த வாக்கியம், **"நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார்; நமது அக்கிரமங்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார்''** என்கிறது. இவ்வாறு, வேதனைகளும், துன்பங்களுக்கும் யாருக்குத் தகுதியானவையாக இருந்ததோ, அந்தப் பாவிகளை அவற்றிலிருந்து

விடுவிக்கும்படியாக, அந்த வேதனைகளையும், துன்பங்களையும் அவர் தமது சொந்த ஆளுமையில் அனுபவிக்க சேசுநாதர் சித்தங் கொண்டார். நம்மீது தமக்குள்ள அன்பிற்காக அன்றி, வேறு எதற்காக அவர் இதைச் செய்தார்? அர்ச். சின்னப்பர் கூறுவது போல, **"கிறீஸ்துநாதர் நம்மை நேசித்து, நமக்காகத் தம்மையே கையளித்தார்'' (எபே.5:2). "இவர் நம்மை நேசித்து, தமது இரத்தத்தில் நம்முடைய பாவங்களைக் கழுவினார்'' (காட்சி.1:5)** என்று அர்ச். அருளப்பர் எழுதுகிறார். திவ்ய நற்கருணையாகிய தேவத்திரவிய அனுமானத்தைப் பொறுத்த வரை, அதைத் தாம் ஏற்படுத்தியபோது, "**இதை வாங்கிப் புசியுங்கள், இது என் சரீரமாய் இருக்கிறது'' (1 கொரி.11:24)** என்று சொன்னவர் சேசுநாதர்தான். மற்றொரு வேதாகமப் பகுதியில்**: "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்'' (அரு.6:57)** என்று அவர் சொல்கிறார். விசுவாசத்தைக் கொண்டிருக்க எவனும் இதை வாசித்து விட்டு, தனது மீட்பரை நேசிக்கும்படி நெருக்கப்படாமல் எப்படி இருக்க முடியும்? அவன் மீது தமக்குள்ள அன்பின் காரணமாகத் தம் இரத்தத்தையும், தம் உயிரையுமே பலியாக்கிய பிறகு, தமது திருச்சரீரம் அவனுடைய ஆத்துமத்திற்கு உணவாகவும், திவ்விய நன்மையில் அவனைத் தம்மோடு முழுமையாக இணைக்கும் வழியாகவும் இருக்கும்படியாக, பீடத்தின் தேவத்திரவிய அனுமானத்தில் தமது சொந்த சரீரத்தை அவனுக்கு விட்டுச் சென்றவரை நேசியாதிருக்க அவனால் எப்படி முடியும்?

சேசுவின் திருப்பாடுகளில் மேலும் ஒரு சுருக்கமான சிந்தனையை நாம் இங்கே சேர்க்கலாம். அவர் மூன்று ஆணிகளால் துளைக்கப்பட்டவராகத் தம்மை நமக்குக் காட்டுகிறார். அந்த ஒவ்வொரு துளையினின்றும் திரு இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது. கடும் மரண வேதனையால் அவர் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய இரங்கத்தக்க நிலையில் சேசுநாதர் ஏன் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்? ஒருவேளை நாம் அவர் மீது தயவிரக்கம் கொள்ள வேண்டும் என்பதற்காகவா? இல்லை. நம் தயவிரக்கத்தை சம்பாதிக்க வேண்டும் என்பதை விட

அதிகமாக, நம் நேசத்திற்குரியவராக ஆக வேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வளவு பரிதாபத்திற்குரிய நிலைக்குத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார். நம்மீது அவர் கொண்டுள்ள அன்பு நித்தியமானது என்று நாம் அறியச் செய்வதே கூட, நம் அன்பைப் பெறப் போதுமான நோக்கமாக இருந்திருக்க வேண்டும்: **“முடிவில்லாத நேசத்தால் உன்னை நாம் சிநேகித்திருக்கிறோம்'' (எரே.31:3).** ஆனால் நமது வெதுவெதுப்பான தன்மைக்கு இது போதாது என்று கண்டு, நமதாண்டவர், தமது ஆசைகளின்படி நாம் அவரை நேசிக்கும்படி நம்மைத் தூண்டுவதற்காக, உண்மையாகவே தமது அன்பிற்கு ஒரு நடைமுறை செயல்விளக்கம் தர அவர் திருவுளம் கொண்டார்: அவர் காயங்களால் மூடப்பட்டவராகவும், நம்மீதுள்ள அன்பிற்காகக் கொடிய வேதனையில் மரிப்பவராகவும் தம்மை நமக்குக் காட்டுகிறார். இவ்வாறு தமது துன்பங்களின் வழியாக, அவர் நம்மீது கொண்டுள்ள அன்பின் பிரமாண்டத்தையும், கனிவையும் நாம் புரிந்துகொள்ளச் செய்ய அவர் விரும்புகிறார்: **“சேசுநாதர் நம்மைச் சிநேகித்து, நமக்காகத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:2).**

புதன்

சிலுவையின் மீது சேசுநாதர்

I

சிலுவையின் மீது சேசுநாதர்! ஒரு சர்வேசுரனுடைய அன்பின் நிரூபணத்தைப் பாருங்கள்! அவதரித்த வார்த்தையானவர் இந்த உலகின் மீது தம்மைப் பற்றி நமக்குத் தருகிற அவருடைய கடைசி வெளிப்பாட்டைப் பாருங்கள்! உண்மையில் அது துன்பத்தின் வெளிப்பாடாகவும், ஆனால், இன்னும் அதிகமாக, நேசத்தின் வெளிப்பாடாகவும் இருக்கிறது. **அர்ச். பவுலா பிரான்சிஸ்** ஒரு முறை சிலுவையில் அறையுண்ட சேசுநாதரின் ஆளுமையில் தேவசிநேகத்தைப் பற்றித் தியானித்துக் கொண்டிருந்தபோது, பரவச நிலையில் பொதியப்பட்டவராக மூன்று முறை உரத்த சத்தமாக: “ஓ சர்வேசுரா-- நேசமே! ஓ சர்வேசுரா-- நேசமே! ஓ சர்வேசுரா-- நேசமே!''

என்று வியந்தபடி கூறினார். இதன் மூலம் நம் மீதுள்ள அன்பிற்காக மரிக்கத் திருவுளம் கொண்டதில் நமக்குக் காட்டப்பட்ட தேவசிநேகம் எவ்வளவு பெரியதாக இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் புரிந்துகொள்ளவே முடியாது என்று குறித்துக் காட்ட அவர் விரும்பினார்.

ஓ என் நேச சேசுவே, இந்தச் சிலுவையின் மீது உமது திருச் சரீரத்தை நான் பார்த்தால், காயங்களையும், இரத்தத்தையும் தவிர வேறு எதையும் நான் பார்க்கவில்லை. அதன்பின் நான் உமது திரு இருதயத்தை நோக்கி என் கவனத்தைத் திருப்பினால், அது முழுமையாகத் துன்பத்திலும், துயரத்திலும் மூழ்கியுள்ளதை நான் காண்கிறேன். ஆனால் நீர் இன்னும் உம்முடையதாகக் கொண்டிருக்கிற உமது மகத்துவத்தின் அடையாளங்கள் என்ன? அந்த அவமான மரத்தைத் தவிர வேறு எந்த இராஜரீக சிங்காசனத்தையும் நான் காணவில்லை; காயப்பட்டும், இரத்தம் சிந்திக்கொண்டும் இருக்கிற உமது மாம்சத்தைத் தவிர வேறு எந்த அரச இரத்தாம்பர உடையையும் நான் காணவில்லை; உம்மை வாதிக்கும் அந்த முட்களின் தொகுதியைத் தவிர வேறு எந்த அரச மகுடத்தையும் நான் காணவில்லை. ஆ, இவையெல்லாம் நீர் அன்பின் அரசராக இருப்பதை எவ்வளவு தீவிரமாக அறிக்கை யிடுகின்றன! ஆம், ஏனெனில் இந்தச் சிலுவையும், இந்த ஆணிகளும், இந்த முள்முடியும், இந்தக் காயங்களுமான அனைத்தும் அன்பின் அடையாளங்களாக இருக்கின்றன.

II

சேசுநாதர் சிலுவையிலிருந்து நமது தயவிரக்கத்தை விட அதிகமாக நமது அன்பையே கேட்கிறார். அவர் நமது தயவிரக்கத்தையே கேட்டாலும் கூட, அது அவரை நாம் நேசிக்க நம்மைத் தூண்ட வேண்டும் என்பதற்காகவே அதைக் கேட்கிறார். அளவற்ற நன்மைத்தனமாக இருக்கிற அவர் ஏற்கெனவே நம் முழு அன்பிற்கும் தகுதியுள்ளவராக இருக்கிறார்; ஆனால் சிலுவையின் மீது வைக்கப்பட்டபோது, நாம் அனைவரும், குறைந்த பட்சம்

தயவிரக்கத்தினாலாவது, தம்மை நேசிக்க வேண்டுமென்று அவர் தேடுவதாகத் தோன்றுகிறார். ஆ என் சேசுவே, நீரே மெய்யான சர்வேசுரன் என்று விசுவாச அறிக்கையிட்டுக் கொண்டும், உம்மைச் சிலுவையின் மீது கண்டுதியானித்துக் கொண்டும் இருக்கும் எந்த மனிதன்தான் உம்மை நேசிக்காமல் இருப்பான்? அந்த அன்பின் சிம்மாசனத்திலிருந்து ஆன்மாக்களை நோக்கி எத்தகைய நெருப்பாலான அம்புகளை நீர் எய்து கொண்டிருக்கிறீர்! ஓ எத்தனை இருதயங்களை உம்முடைய அந்தச் சிலுவையிலிருந்து நீர் உம்மிடம் ஈர்த்திருக்கிறீர்! ஓ என் சேசுவின் திருக்காயங்களே! ஓ அன்பின் அழகிய தீச்சூளைகளே! நரக நெருப்பால் அன்றி, வாதைகளால் எரிக்கப்பட்டு எனக்காக மரிக்க சித்தங்கொண்டவராகிய சர்வேசுரன் மீது எனக்குள்ள பரிசுத்த அன்பின் சுவாலைகளால் நானும் பற்றியெரியும்படியாக, உங்களோடு என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்! ஓ என் பிரியமுள்ள மீட்பரே, உம்மை நோகச் செய்ததற்காகத் துக்கப்பட்டு, உம்மை நேசிக்க ஏக்கம் கொண்டு உம்மிடம் திரும்பி வரும் ஒரு பாவியை ஏற்றுக்கொள்ளும். நான் உம்மைநேசிக்கிறேன், நான் உம்மை நேசிக்கிறேன், ஓ அளவற்ற நன்மைத்தனமே, ஓ அளவற்ற சிநேகமே! ஓ மரியாயே, அழகிய நேசத்தின் மாதாவே, என்மீதுள்ள அன்பினால் சுட்டெரிக்கப்பட்டு மரிதத சர்வேசுரன் மீதுள்ள நேசத்தால் நானும் சுட்டெரிக்கப்படும்படியாக, எனக்கும் நேசத்தை அதிகமாகப் பெற்றுத் தாரும்.

புனித வியாழன்

காலை :

"என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன்......."

I

நம் இரட்சகர் திவ்விய நன்மையை விட மற்ற எல்லாற்றிலும் அதிக நேசத்திற் குரியவராகவும், அதிகக் கனிவுள்ளவராகவும் ஒருபோதும் காணப்பட முடியாது, இவர் அதில் தம்மையே அழித்துக் கொண்டு உணவாக மாறி, தமது விசுவாசிகளின் இருதயங்களோடும், உடல்களோடும் தம்மை இணைத்துக் கொள்கிறார் என்று **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** கூறுகிறார். ஆகவே, நம் ஆன்மாக்களில் கடவுளின் மீதான பக்தியையும், பரிசுத்த நேசத்தையும் தூண்டுவதற்கு திவ்விய நன்மையை விட அதிக பயனுள்ள வேறு எந்த வழியுமில்லை என்று அறிஞரான **ஜெர்சன்** கூறுவது வழக்கம்.

உண்மையில், கடவுளுக்கு உகந்த ஏதாவது ஒரு காரியத்தைப் பற்றி நாம் பேசுவோம் என்றால், திவ்ய நன்மை உட்கொள்வதைத் தவிர அவருக்கு அதிகம் உகந்த வேறு எதை ஓர் ஆத்துமம் செய்ய முடியும்? அன்பு எப்போதுமே உத்தம ஐக்கியத்தை நோக்கிச் செல்கிறது என்று **அர்ச். டெனிஸ்** நமக்குக் கற்பிக்கிறார்; ஆனால், **"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன்"** என்று அவர்தாமே கூறியுள்ள முறையிலேயன்றி, வேறு எந்த முறையில் ஓர் ஆன்மா சேசுவோடு அதிக உத்தமமான முறையில் ஐக்கியம் கொள்ள முடியும்? ஒவ்வொரு நாளும் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தை நீ உட்கொள்வாய் என்றால், சேசு எப்போதும் உன்னோடு இருப்பார், நீ எப்போதும் தேவசிநேகத்தில் வளர்வாய் என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார்.

மேலும், நம் ஞான நோய்களைக் குணமாக்கும் பிரச்சினை இருக்குமானால், "நம் அன்றாடப் பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதும், சாவான பாவங்களிலிருந்து நம்மைப் பாதுகாப்பதுமான மருந்து" என்று திரிதெந்தீன் பொதுச் சங்கத்தால் அழைக்கப்படும் திவ்ய நன்மையை விட அதிக நிச்சயமான மருந்தை நாம் கொண்டிருக்க முடியாது.

அடிக்கடி நன்மை வாங்கிய பின்பும் ஏராளமான ஆன்மாக்களில் மிகக் குறைவான பலனையே நாம் காண முடிவதற்கும், அவை தொடர்ந்து ஒரே பாவங்களில் விழுந்து கொண்டிருப்பத்கும் என்ன காரணம் என்று கர்தினால் போனா கேட்கிறார். அதன்பின் அவரே பதிலும் சொல்கிறார்: "பிரச்சினை உணவில் அல்ல, மாறாக அதை உட்கொள்பவனின் மனநிலையில் உள்ளது" என்று. **"தன் வஸ்திரங்கள் வேகாமல் மனிதன் தன் நெஞ்சத்து அக்கினியை ஒளிக்கக் கூடுமோ?" (பழ.6:27)** என்று கேட்கிறார் சாலமோன். கடவுள் சுட்டெரிக்கும் நெருப்பாக இருக்கிறார். இந்த தெய்வீக நெருப்பைத் தூண்டும்படி அவரே திவ்விய நன்மையில் நம்மிடம் வருகிறார். அப்படிய் இருக்க, இத்தகைய தீச்சுவாலைகளுக்கு மத்தியில் தெய்வீக அன்பில் ஆன்மாக்கள் குளிர்ந்தவர்களாகவே நிலைத்திருப்பதாகிய பேய்த்தனமுள்ள புதுமையை நாம் காண்பது எவ்வாறு நிகழ்கிறது என்று பாரிஸின் வில்லியம் என்பவர் கேட்கிறார்.

அனைத்தும் முறையான மனநிலைகள் இல்லாமையாலும், குறிப்பாக, தகுந்த ஆயத்தம் இல்லாமையாலும் வருகிறது. நெருப்பு காய்ந்த விறகை உடனடியாக எரிக்கிறது, பச்சை மரமோ உடனே தீப்பற்றுவதில்லை. பச்சை மரம் எரிப்பதற்குத் தகுதியானது அல்ல. புனிதர்கள் தங்கள் திவ்விய நன்மைகளால் பெரும் பயன் அடைந்தது ஏனெனில் அவர்கள் மிக அதிக கவனத்தோடு தங்களை ஆயத்தம் செய்தார்கள். **அர்ச். அலாய்சியஸ் கொன்ஸாகா** திவ்ய நன்மை உட்கொள்ள மூன்று நாள் ஆயத்தம் செய்வார், நன்மை வாங்கியபின் மூன்று நாட்கள் தம் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவார்!

II

திவ்ய நன்மை வாங்க நன்கு ஆயத்தம் செய்வதற்கு, ஓர் ஆன்மா இரண்டு முக்கியக் காரியங்களில் அது நல்ல மனநிலை கொண்டிருக்க வேண்டும்: அது சிருஷ்டிகளிடம் பற்றில்லாததாக இருக்க வேண்டும், தேவ சிநேகத்தில் வளர அது பெரும் ஆசை கொண்டிருக்க வேண்டும்.

1. ஆகவே, முதலாவதாக ஓர் ஆன்மா எல்லாக் காரியங்களிலும் தனக்குள்ள பற்றை அறுத்துக் கொண்டு, கடவுளல்லாத அனைத்தையும் தன் இருதயத்திலிருந்து வெளியே துரத்தி விட வேண்டும். **“குளித்து விட்டவன் தன் பாதங்களையன்றி மற்றொன்றையும் கழுவ வேண்டுவதில்லை. மற்றப்படி அவன் முழுதும் சுத்தமாய் இருக்கிறான்'' (அரு.13:10). அர்ச். பெர்னார்ட்** இதை விளக்குகிறபடி, இந்தத் தேவத்திரவிய அனுமானத்தை மிகுந்த பலனோடு பெற்றுக்கொள்வதற்கு, நாம் சாவான பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவது மட்டும் போதாது, மாறாக நம் பாதங்களும் கழுவப்பட வேண்டும், அதாவது நாம் உலக நாட்டங்களிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில் பூமியோடு தொடர்புள்ளவை என்ற முறையில் அவை கடவுளில் ஒரு வகையான அருவருப்பைத் தூண்டுகின்றன, ஆன்மாவைக் கறைப்படுத்தி, திவ்விய நன்மையின் பலன்களைத் தடுக்கின்றன என்பதையே இவ்வாக்கியம் குறித்துக் காட்டுகிறது.

அர்ச். ஜெர்த்ரூத் நம் ஆண்டவரிடம், திவ்ய நன்மை வாங்கத் தன்னிடம் என்ன ஆயத்தங்களை அவர் எதிர்பார்க்கிறார் என்று கேட்க, “என்னைப் பெற்றுக்கொள்ள உன்னையே நீ வெறுமையாக்கி விட்டு வர வேண்டும் என்று மட்டும்தான் நான் கேட்கிறேன்'' என்று அவர் பதிலளித்தார்.

2. இரண்டவதாக, திவ்விய நன்மை உட்கொள்வதில், சேசுநாதரையும், அவருடைய பரிசுத்த அன்பையும் பெற்றுக் கொள்ள ஒருவன் மிகுந்த ஆசை கொண்டிருக்க வேண்டும். இந்தப் புனித விருந்தில், மிகுந்த பசியோடு இருப்பவர்கள் மட்டுமே வயிறார உண்கிறார்கள்; மகா பரிசுத்த கன்னிகை ஏற்கெனவே இதே காரியத்தைப் பற்றிப் பேசிய் இருக்கிறார்கள்: **“பசித்திருக்கிறவர்களை நன்மைகளினால் நிரப்பினார்'' (லூக்.1:53).** சேசுநாதர் அதிகமாகவும் நீண்ட காலமாகவும் தாம் ஆசிக்கப்பட்டிருந்த பிறகுதான் இவ்வுலகிற்கு வந்தார், அதே போல, தம்மை ஆசித்துத் தேடும் ஓர் ஆன்மாவில் மட்டுமே அவர் பிரவேசிப்பார். ஏனெனில் இந்த உணவின் மீது வெறுப்புள்ளவனுக்கு அது வழங்கப்படுவது தகுதியானதல்ல என்று தந்தை அவிலா எழுதுகிறார். நம் ஆண்டவர்

ஒருநாள் **அர்ச். மெட்டில்டாவிடம்**, "என் அன்பின் வன்மையால் துரத்தப்படுபவராக திவ்விய நன்மையில் ஆன்மாக்களிடம் நான் பறந்து செல்வது போன்ற ஆற்றலுடனும் வேகத்துடனும் எந்தத் தேனீயும் மலர்களின் தேனை உண்ணும்படி அவற்றிடம் விரைந்து செல்வதில்லை" என்றார். ஆகவே, கிறீஸ்துநாதர் நம் ஆன்மாக்களில் வர இவ்வளவு பெரும் ஆசை கொண்டிருப்பதால், நாமும் திவ்ய நன்மையில் அவரையும், அவரது தேவசிநேகத்தையும் பெற்றுக் கொள்ள மிகுந்த ஆசை கொண்டிருப்பதே சரியானது. திவ்ய நன்மை உட்கொள்வதில் ஓர் ஆத்துமம் கொண்டிருக்க வேண்டிய முதன்மையான நோக்கம், தேவசிநேகத்தில் வளர்வதேயாகும் என்று அர்ச். பிரான்சிஸ் சலேசியார் நமக்குக் கற்பிக்கிறார். நேசத்திற்காக மட்டுமே தம்மை நமக்குத் தருபவர் நேசத்திற்காகவே உட்கொள்ளப் பட வேண்டும்.

புனித வியாழன்

மாலை:

திவ்ய நற்கருணைக்கு முன்பாக ஜெபம்

I

தியானம் எங்கு செய்யப்பட்டாலும், அது கடவுளை மகிழ்விக்கிறது. சேசுநாதர் குறிப்பாக மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்திற்கு முன்பாகச் செய்யப்படும் தியானத்தில் இன்பம் காண்கிறார். ஏனெனில் அங்கே அவர் தம்மைச் சந்தஅப்பவர்கள் மீது ஒளியையும், வரப்பிரசாதத்தையும் மிக அபரிமிதமாகப் பொழிகிறார் என்று தோன்றுகிறது. திவ்ய நன்மையில் தம்மை உட்கொள்ளும் ஆன்மாக்களுக்கு உணவாக இருக்கும்படியாக மட்டுமல்ல, மாறாக, எல்லாக் காலங்களிலும் தம்மைத் தேடும் ஒவ்வொருவராலும் சந்திக்கப்படும்படியாகவும் அவர் இந்தத் தேவத்திரவிய அனுமானத்தில் தங்கிய் இருக்கிறார். பக்தியுள்ள திருப்பயணிகள் சேசுநாதர் இவ்வுலகில் இருந்தபோது வாழ்ந்த லொரேட்டோ புனித

இல்லத்திற்கும், அவர் சிலுவையின் மீது மரித்த ஜெருசலேமுக்கும் செல்கிறார்கள்; ஆனால் ஒரு தேவ நற்கருணைப் பேழையில் நமக்கு முன்பாக நாம் அவரைக் காணும்போது நம் பக்தி இன்னும் எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்! முன்பு நம் மத்தியில் வாழ்ந்தவரும், கல்வாரியின் மீது மரித்தவருமான அதே ஆண்டவர் இப்போது தம் ஆள்தன்மையில் தேவ நற்கருணைப் பேழையில் தங்கிய் இருக்கிறார்!

அரசர்களோடு எல்லோரும் சாதாரணமாகப் பேசுவது இவ்வுலகில் அனுமதிக்கப்படாத ஒன்று; ஆனால் பரலோக அரசராகிய சேசுகிறீஸ்துவுடனோ, மேற்குடியினரும், பாமரரும், செல்வந்தரும், ஏழைகளும் தங்கள் மனம் போல் இந்தத் தேவத் திரவிய அனுமானத்தில் அவரோடு உரையாடலாம், தாங்கள் விரும்பும் வரைக்கும் அவருக்கு முன்பாக இருந்து தங்கள் தேவைகளை அவருக்குத் தெரிவிக்கலாம், அவருடைய வரப்பிரசாதங்களைத் தேடலாம்; அங்கே சேசுநாதர் அனைவரையும் சந்திக்கிறார், அனைவர் சொல்வதையும் கேட்கிறார், அனைவரையும் தேற்றுகிறார்.

இவ்வுலகப் பொக்கிஷங்களைத் தவிர வேறு பொக்கிஷம் எதையும் அறியாத உலக மனிதர்கள் தேவ வசீகரம் செய்யப்பட்ட ஓர் அப்பம் இருக்கும் ஒரு பீடத்திற்கு முன்பாக நீண்ட நேரம் செலவழிப்பதில் என்ன இன்பத்தை அடைய முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் கடவுளை நேசிக்கும் ஆன்மாக்களுக்கோ, திவ்ய சற்பிரசாதத்திற்கு முன்பாகக் கடந்து போகும் மணித் தியாலங்களும், நாட்களும், அங்கே ஆண்டவர் அவர்களுக்கு சுவைத்து அனுபவிக்கத் தரும் பரலோக இனிமையின் காரணமாக, சில கணங்களைப் போலத் தோன்றுகிறது.

ஆனால் உலகத்தன்மையான மனிதர்கள் தங்கள் இருதயங்களை இவ்வுலகத்தால் நிரப்பி வைத்திருக்கிறார்கள் என்றால், இந்த இனிமையை அவர்கள் எப்படி சுவைக்க முடியும்? தேவசிநேகம் நம் இருதயங்களில் ஆட்சி புரியும்படியாக, நாம் முதலில் உலகத்தை அவற்றிலிருந்து துரத்தியடிக்க வேண்டும்; இல்லாவிடில், தேவசிநேகம் ஒருபோதும் அவர்களுக்குள் நுழையாது, ஏனெனில்

அது ஓய்வெடுக்க எந்த இடத்தையும் கண்டடையாது என்று அர்ச். பிரான்சிஸ் போர்ஜியா கூறுகிறார். “நீங்கள் அசையாமல் அமர்ந்திருந்து, நாமே கடவுளாய் இருக்கிறோமென்று பாருங்கள்" (சங்.45:9). கடவுளின் அனுபவத்தைப் பெறுவதற்கும், அவரை நேசிப்பவர்களுக்கு அவர் எவ்வளவு இனியவராக இருக்கிறார் என்பதை எண்பிப்பதற்கும், நம் இருதயங்கள் வெறுமையாக இருக்க வேண்டும். அதாவது நம் இருதயங்கள் உலக நாட்டங்களிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். நீ கடவுளைக் கண்டடைய விரும்புகிறாயா? “சிருஷ்டிகளிடம் உனக்குள்ள பற்றை விட்டு விலகு, அப்போது நீ அவரைக் கண்டடைவாய்" என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுகிறாள்.

II

தேவ நற்கருணையின் பிரசன்னத்தில் இருக்கும்போது ஓர் ஆத்துமம் என்ன செய்ய வேண்டும்? அது நேசிக்கவும், ஜெபிக்கவும் வேண்டும். இனிமையையும் ஆறுதலையும் உணர்வதற்காக அது அங்கே வரக்கூடாது, மாறாக, தேவசிநேக ஜெபங்களைச் சொல்வதாலும், தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் தன்னையே முழுமையாகக் கடவுளுக்குக் கொடுப்பதாலும், தனது சொந்த சித்தத்தைத் தன்னிடமிருந்து உரிந்து அகற்றுவதாலும், “ஓ என் தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன், உம்மையன்றி வேறு எதையும் நான் ஆசிக்கவில்லை. நான் எப்போதும் உம்மை நேசிக்க எனக்கு வரமருளும். அதன்பின் உமது பிரியப்படி என்னையும், எனக்குச் சொந்தமான அனைத்தையும் ஆண்டு நடத்தும்" என்று சொல்லித் தன்னையே ஒப்புக்கொடுப்பதாலும் கடவுளை மகிழ்விப்பதற்காக மட்டுமே அது வர வேண்டும். அன்பின் செயல்கள் அனைத்திலும் இதுவே கடவுளுக்கு அதிகப் பிரியமானது. மோட்சவாசிகள் இதைத்தான், அதாவது கடவுளின் அளவற்ற மகிழ்ச்சியில் அக்களிப்பதைத்தான் தொடர்ந்து செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் மோட்சத்திலுள்ள பாக்கியம் பெற்ற ஆன்மா தன்னைத் தானே நேசிப்பதை வட அதிகமாகக் கடவுளை முடிவற்ற விதமாக நேசிக்கிறது, ஆகவே அது தனது சொந்த மகிழ்ச்சியை விடத் தன் அன்பரின் மகிழ்ச்சியையே

அதிகமாக ஆசிக்கிறது. கடவுள் அளவற்ற மகிழ்ச்சியை அனுபவிக்கிறார் என்று காண்கிற ஆசீர்வதிக்கப்பட்ட ஆன்மா, அதிலிருந்து ஓர் அளவற்ற இன்பத்தைப் பெற்றுக்கொள்கிறது. ஒரு சிருஷ்டியாக, அளவற்ற இன்பத்தை அனுபவிப்பதற்கு அது திறனற்றதாக இருப்பதால், அது திருப்தியோடு இளைப்பாறுகிறது, இவ்வாறு கடவுளின் மகிழ்ச்சி அதன் மகிழ்ச்சியாகவும், அதன் மோட்சமாகவும் ஆகிறது. இந்த நேசச் செயல்கள் எந்த விதமான உணரக்கூடிய இனிமையும் இன்றி நம்மால் செய்யப்பட்டாலும், அவை கடவுளை மகிழ்விக்கின்றன. ஆயினும், கடவுள் தாம் யாரை நேசிக்கிறாரோ அந்த ஆன்மாக்களுக்கு இவ்வாழ்வில், அவரது ஆறுதல்களை நிரந்தரமாக அனுபவிக்கும் வரத்தைத் தருவதில்லை, மாறாக இடைவெளிகளில் மட்டுமே அவை அவற்றை அனுபவிக்கச் செய்கிறார். அவர் அந்த ஆன்மாக்கள் இவ்வுலக வாழ்வின் துன்பங்களையும், பிரச்சினைகளையும், குறிப்பாக தியானத்தில் பக்தியுள்ள ஆன்மாக்கள் அனுபவிக்கிற பராக்குகள் மற்றும் ஞான வறட்சி ஆகியவற்றையும் பொறுமையோடு தாங்கத் தேவையான பலத்தை அதிகமாகத் தருவது போல, நற்செயல்களுக்குப் பெரிய சம்பாவனையை வழங்குவதில்லை. (முழுமையான சம்பாவனையை அவர் மோட்சத்தில் அவர்களுக்கென ஒதுக்கி வைத்திருக்கிறார்.)

பராக்குகளைப் பொறுத்த வரை, அவற்றைப் பற்றி நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. அவை வரும்போது அவற்றை விரட்டுவது போதுமானது. மேலும், புனிதர்களும் கூட தங்களையும் மீறிய பராக்குகளால் துன்பப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் இதன் காரணமாக அவர்கள் தியானத்தை விட்டு விடவில்லை. நாமும் இப்படித்தான் செயல்பட வேண்டும்: தியானத்தில் பராக்குகளை விரட்டுவதை, அல்லது அவற்றை விரட்டத் தேடுவதைத் தவிர நாம் வேறொன்றும் செய்யவில்லை என்றாலும், நம் தியானம் பெரும் நன்மை பயப்பதாகவே இருக்கும். ஞான வறட்சியைப் பொறுத்த வரை, தியானம் செய்யும் ஆன்மாக்களின் மிகப் பெரிய வேதனை, சில சமயங்களில் தாங்கள் பக்தியுணர்வு இல்லாதவர்களாகவும், அதைப் பற்றி சோர்வுற்றவர்களாகவும், கடவுளை நேசிப்பதற்கான உணரக்கூடிய

ஆசை எதுவுமில்லாதவர்களாகவும் தாங்கள் இருப்பதைக் காண்பதுதான். இத்துடன் தங்கள் பாவங்களால் கடவுளின் கடுஞ்சினத்திற்கு உட்பட்டிருப்பது பற்றிய பயமும் அடிக்கடி சேர்ந்து கொள்கிறது. அவற்றின் காரணமாக ஆண்டவர் தங்களைக் கைவிட்டு விட்டார் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இந்தக் கலக்கம் தரும் இருளில் இருக்கும் அவர்கள் அதிலிருந்து தப்பக் கூடிய எந்த வழியையும் அறியாதிருக்கிறார்கள், ஏனெனில் ஒவ்வொரு வழியும் தங்களுக்கு எதிராக மூடப்பட்டு விட்டதாக அவர்களுக்குத் தோன்றுகிறது. அப்படியிருக்க, பக்தியுள்ள ஆத்துமம், பசாசு தனக்குக் கூறும் ஆலோசனையின்படி, தியானத்தை விட்டு விடாதிருப்பதில் தொடர்ந்து தீர்மானமாக இருக்க வேண்டும். அத்தகைய ஒரு நேரத்தில், சேசுநாதர் சிலுவையின் மீது அனுபவித்த ஆறுதலற்ற நிலையோடு அது தன் ஆறுதலற்ற நிலையை இணைக்க வேண்டும்; "என் தேவனே, நான் உம்மை நேசிக்க விரும்புகிறேன்; நான் முற்றிலும் உம்முடையவனாக இருக்க விரும்புகிறேன்! என் மீது தயவாயிரும்! ஓ என்னை விட்டு விலகாதிரும்" என்று சொல்ல அதனால் இயலுமானால், குறைந்தபட்சம் முழு இருதயத்தோடும், சித்தத்தோடும் இப்படிச் சொல்ல அதனால் இயலுமானால், அதுவே அதற்குப் போதுமானதாக இருக்கும். மேலும், ஒரு பரிசுத்த ஆத்துமம் தனது ஆறுதலின்மையின் நேரத்தில் தன் கடவுளிடம் கூறியது போல, "உம் பார்வையில் நான் ஓர் எதிரியாக இருப்பதாக எனக்கு நானே தோன்றினாலும், நான் உம்மை நேசிக்கிறேன். உமது சித்தப்படி என்னைத் துரத்தி விடும், நானே உம்மை எப்போதும் பின்செல்வேன்" என்று அது சொல்வதாக.

பெரிய வெள்ளி

காலை :

சேசுநாதர் சிலுவையின் மீது மரிக்கிறார்.

I

நேச இரட்சகர் இப்போது எப்படித் தமது மரணத்தை நெருங்கி வருகிறார் என்று பார். ஓ என் ஆத்துமமே, இதோ அந்த அழகியண

கண்கள் மங்குகின்றன, அந்த முகம் முழுவதும் வெளிறிப் போகிறது. அந்த இருதயம் ஏறக்குறைய துடிப்பதை நிறுத்தி விட்டது. அந்தத் திருச்சரீரம் இப்போது தன் உயிரைக் கடைசியாகப் பிதாவிடம் ஒப்புக்கொடுப்பதற்குத் தயாராகிறது. “எல்லாம் முடிந்தது" என்று அவர் கூறினார். அதன்பின் வறுமை, நிந்தை அவமானம், வேதனை ஆகியவற்றின் வடிவில் தாம் தமது இவ்வுலக வாழ்வில் அனுபவித்திருந்த அநேக பயங்கரமான துன்பங்கள் தமது மனக்கண் முன் கடந்து போவதை அவர் காண்கிறார். அதன்பின் அவர் அவற்றையெல்லாம் தமது நித்தியப் பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். அதன்பின் அவர் தமது பிதாவிடம் திரும்பி “எல்லாம் முடிந்தது" என்று சொல்கிறார். என் பிதாவே, என் வாழ்வின் பலியால், நீர் என் மீது சுமத்திய உலக இரட்சணிய அலுவல் இப்போது முடிந்து விட்டதைப் பாரும். அதன்பின் அவர் நம்மிடம் மீண்டும் திரும்பி, “எல்லாம் முடிந்தது" என்கிறார். ஓ மனிதர்களே, ஓ மனிதர்களே, என்னை நேசியுங்கள், ஏனெனில் நான் எல்லாவற்றையும் செய்து விட்டேன்; உங்கள் அன்பை என்னுடையதாக்கிக் கொள்வதற்கு நான் செய்யக் கூடியது இனி வேறெதுவுமில்லை என்று அவர் சொல்வதாக இது இருக்கிறது.

இதோ, இறுதியாக சேசுநாதர் எப்படி மரிக்கிறார் என்று பார். பரலோகத் தூதர்களே வாருங்கள், வந்து உங்கள் அரசருடைய மரணத்தில் அவருக்கு உதவி செய்யுங்கள். ஓ வியாகுல மாதாவே, சிலுவையை இன்னும் நெருங்கி வந்து, உங்கள் கண்களை இன்னும் அதிக கவனத்தோடு உங்கள் திருமகனின் மீது பதித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர் இப்போது சாகும் தருவாயில் இருக்கிறார். தமது ஆத்துமத்தைத் தமது நித்திய பிதாவிடம் ஒப்புக் கொடுத்த பின், அவர் எப்படி மரணத்தை அழைக்கிறார், அது வந்து தன் உயிரை எடுத்துக் கொள்ள அவர் எப்படி அதை அனுமதிக்கிறார் என்று பார். "ஓ மரணமே வா,' என்கிறார் சேசுநாதர், "விரைவாக வந்து உன் அலுவலைச் செய்; என்னைக் கொல், என் மந்தையை விட்டு விடு.' இப்போது பூமி அதிர்கிறது, கல்லறைகள் திறக்கின்றன. தேவாலயத்தின் திரைச் சீலை இரண்டாகக் கிழிகிறது. மரிக்கும் இரட்சகரின் பலம், அவரது துன்பங்களின் வன்மை காரணமாக

அவரைக் கைவிடுகிறது. அவருடைய திருச்சரீரத்தின் உஷ்ணம் படிப்படியாகக் குறைகிறது; அவர் மரணத்திற்குத் தம் சரீரத்தைக் கையளிக்கிறார்; தமது திருமார்பின்மீது தலைகவிழ்ந்து, தமது வாயைத் திறந்து மரணமடைகிறார்: **“தலைகுனிந்து பிராணனை (உயிரைக்) கொடுத்தார்'' (அரு.19:30).**

II

சேசுநாதர் இறப்பதை மக்கள் பார்க்கிறார்கள். அவரிடம் அசைவில்லை என்பதை கவனித்து, அவர் இறந்து விட்டார், அவர் இறந்து விட்டார் என்கிறார்கள். மாமரியின் குரல் அவர்களது குரலின் எதிரொலியாக ஒலிக்கிறது: “ஆ, என் மகனே! நீர் இறந்து விட்டீரே!'' என்று கதறுகிறார்கள் அன்னை.

அவர் இறந்து விட்டார்! ஓ சர்வேசுரா, இறந்திருப்பவர் யார்? ஜீவிய கர்த்தர், கடவுளின் ஏக பேறான திருச்சுதன், உலகின் ஆண்டவர் - அவர்தான் இறந்திருக்கிறார்! ஓ மரணமே, நீ பரலோகம் மற்றும் இயற்கை முழுவதற்கும் அதிசயமானாய்! ஓ அளவற்ற நேசமே! தமது திரு இரத்தத்தையும், தமது வாழ்வையும் பலியாக்கிய ஒரு சர்வேசுரன்! யாருக்காக! நன்றியற்ற தமது சிருஷ்டிகளுக்காக! அவர்களுடைய பாவங்களுக்குரிய அபராதத்தைச் செலுத்தும்படி, துன்பங்கள் மற்றும் அவமானங்களின் ஒரு பெருங்கடலின் மத்தியில் அவர் மரிக்கிறார்! ஆ, அளவற்ற நன்மைத்தனமே! ஓ அளவற்ற நேசமே! ஓ என் சேசுவே, நீர் என் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக இறந்திருக்கிறீர்! ஓ, இனி ஒரு கணம் கூட உம்மை நேசிக்காமல் நான் வாழாதிருப்பேனாக! என் அரசரே, என் ஏக நன்மையே, உம்மை நான் நேசிக்கிறேன்; எனக்காக மரித்திருக்கிற என் சேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்! ஓ, என் வியாகுலத் தாய் மரியாயே, சேசுவை நேசிக்க ஆசிக்கும் உம் ஊழியர்களில் ஒருவனாகிய எனக்கு உதவி செய்தருளும்.

பெரிய வெள்ளி

மாலை:

இறந்து விட்டவராக சிலுவையில் தொங்கும் சேசுநாதர் I

என் ஆத்துமமே, உன் கணகளை உயர்த்தி, சிலுவையில் அறையுண்டிருக்கும் அந்த மனிதரைப் பார். அந்த வேதனையின் பலிபீடத்தின் மீது இப்போது பலியாக்கப்பட்டிருக்கிற அந்த தேவ செம்மறிப்புருவையைப் பார். அவர் நித்திய பிதாவின் நேச மகன் என்பதை தியானி; உன் மீது தாம் கொண்ட அன்பிற்காக அவர் இறந்திருக்கிறார் என்பதை தியானி. உன்னை அரவணைத்துக் கொள்ள அவர் தமது திருக்கரங்களை விரித்திருக்கிறார்; உனக்கு சமாதான முத்தம் தரும்படி அவரது திருச்சிரசு கீழ்நோக்கி சாய்ந்திருக்கிறது; உன்னைத் தமது திரு இருதயத்திற்குள் ஏற்றுக் கொள்ளும்படி அவரது திருவிலா திறந்திருக்கிறது. நீ என்ன சொல்கிறாய்? இவ்வளவு நேசமுள்ள ஒரு கடவுள் நேசிக்கப்படத் தகுதியற்றவராக இருக்கிறாரா? அந்தச் சிலுவையிலிருந்து அவர் உன்னை நோக்கிக் கூறும் வார்த்தைகளைக் கேள்: “பார், என் மகனே, என்னை விட அதிகமாக உன்னை நேசித்திருக்கிறவன் யாராவது உலகில் உண்டா என்று பார்." இல்லை, என் தேவனே, உம்மை விட அதிகமாக என்னை நேசித்துள்ளவன் எவனுமில்லை. ஆனால் எனக்காக மரித்த ஒரு சர்வேசுரனுக்கு நான் என்ன பிரதிபலன் செலுத்த முடியும்? தன் மீதுள்ள அன்பிற்காக இறந்த தன் சிருஷ்டிகரின் அன்புக்கு ஒரு சிருஷ்டி என்ன பதிலன்பு காட்ட முடியும்?

ஓ சர்வேசுரா, சேசுநாதர் எனக்காக அனுபவித்த துன்பங்களை மனுக்குலத்திலேயே மிகவும் கீழ்த்தரமான ஒரு மனிதன் எனக்காக அனுபவித்திருப்பான் என்றால், அவனை நேசிக்காமல் இருக்க என்னால் முடியுமா? என் வாழ்வைக் காப்பாற்றுவதற்காக எந்த மனிதனாவது கசைகளால் துண்டு துண்டாகக் கிழிக்கப்படுவதையும், ஒரு சிலுவையோடு பிணைக்கப்படுவதையும் நான் கண்டால், அதை நினைக்கும்போதெல்லாம் அவன் மீதுள்ள நேசத்தால் நான் உள்ளம் உருகாமல் இருக்க முடியுமா? அவன் சிலுவையில் மரித்தவனாகத் தொங்குவதைச் சித்தரிக்கும் ஒரு சித்திரம் என்னிடம் கொண்டு வரப்பட்டால், “என் மீதுள்ள அன்பிற்காக இந்த மனிதன் இப்படி

வதைக்கப்பட்டு இறந்திருக்கிறான். என்னை அவன் நேசித்திருக்கவில்லை என்றால், இந்த முறையில் இறக்க அவன் விரும்பிய் இருக்க மாட்டான்" என்று நான் சிந்திக்கும்போது, அந்தச் சித்திரத்தை அசட்டைத்தனமுள்ள கண்களோடு பார்க்க என்னால் முடியுமா? ஆ என் மீட்பரே, என் ஆத்துமத்தின் அன்பரே! இனி எப்படி நான் உம்மை மறக்க முடியும்? என் பாவங்களே இந்த நிலைக்கு உம்மைத் தாழ்த்தி விட்டன என்று நினைத்து, உமது நன்மைத்தனத்திற்குநான் செய்திருக்கிற தீமைகளுக்காக எப்போதும் புலம்பியழாமல் இருக்க என்னால் எப்படி முடியும்? என் மீதுள்ள அன்பிற்காக இந்தச் சிலுவையின் மீது வேதனையோடு நீர் மரித்திருப்பதைக் கண்ட பின்னும், என் முழு வல்லமையோடும் உம்மை நேசிக்காதிருக்க என்னால் எப்படி முடியும்?

II

ஓ என் பிரியமுள்ள மீட்பரே, இந்த உமது காயங்களிலும், புண்படுத்தப்பட்டுள்ள உமது திருச்சரீரத்திலும், என் மீது நீர் கொண்டுள்ள கனிவுள்ள பாசத்தை நான் அடையாளம் கண்டு கொள்கிறேன். ஆகவே, என்னை மன்னிப்பதற்காக, நீர் உம்மையே மன்னியாதிருந்தீர் என்பதால், ஓ, நீர் எனக்காக மரித்துக் கொண்டிருந்தபோது, சிலுவையிலிருந்து அன்றொரு நாள் நீர் எத்தகைய அன்போடு என்னைப் பார்த்தீரோ, அதே அன்போடு இப்போதும் என்னைக் கண்ணோக்கியருளும். என்னைக் கண்ணோக்கி, எனக்கு ஞான ஒளி தந்து, இன்று முதல், உம்மைத் தவிர வேறு யாரையும் நான் நேசிக்காமல் இருக்கும்படி, என் முழு இருதயத்தையும் உம்மிடம் இழுத்தருளும். உமது திருமரணத்தை நான் ஒருபோதும் மறவாதிருப்பேனாக. தேவரீர் சிலுவையின் மீது உயர்த்தப்படும்போது, எங்கள் எல்லா இருதயங்களையும் உம்மிடம் ஈர்த்துக் கொள்வதாக வாக்களித்தீர். இதோ, உமது மரணத்தால் மென்மையாக்கப்பட்டதும், உம் மீது அன்பினால் தூண்டப்பட்டதுமாக இருக்கிற என் இருதயம், உம் அழைப்புகளை இனியும் எதிர்த்து நிற்காதிருக்க ஆசிப்பதைப் பாரும். ஓ, அதை உம்மிடம் இழுத்துக் கொண்டு, உமக்கு முழுவதும் சொந்தமாக்கியருளும்.

நீர் எனக்காக இறந்திருக்கிறீர், நானும் உமக்காக இறக்க ஆசிக்கிறேன்; நான் தொடர்ந்து வாழ்வேன் என்றால், ஓ சேசுவே, உம்மை மட்டுமே நான் நேசிப்பேன். ஓ சேசுவின் அவமானங்களே, ஓ சேசுவின் மரணமே, ஓ சேசுவின் அன்பே, என் இருதயத்தினுள் உங்களையே நீங்கள் பதித்துவிடுங்கள். உங்களைப் பற்றிய நினைவு தொடர்ந்து என்னைப் பாதித்து, அன்பினால் நான் பற்றியெரியும்படி செய்யுமாறு, என் இருதயத்தில் எப்போதும் தங்கி யிருப்பதாக. ஓ அளவற்ற நன்மைத்தனமே, உம்மை நான் நேசிக்கிறேன்; ஓ அளவற்ற நேசமே, உம்மை நான் நேசிக்கிறேன். நீரே என்றென்றும் என் ஒரே நேசமாக இருக்கிறீர், இனியும் இருப்பீர். ஓ மரியாயே, நேசத்தின் தாயாரே, எனக்கு அன்பைப் பெற்றுத் தாருங்கள்.

பெரிய சனி

மாமரி சேசுவிடம் பிரியாவிடை பெறுதல்.

I

கல்லறையின் நுழைவாயிலை மூடுவதற்காகக் கல்லை உயர்த்துவதில் இரட்சகரின் பரிசுத்த சீடர்கள் தேவமாதாவை அணுகி அவர்களிடம்: "ஓ இராக்கினியே, இப்போது நாம் கல்லறையை மூட வேண்டும். எங்களை மன்னியுங்கள். உங்கள் திருமகனே மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொள்ளுங்கள். அவருக்குக் கடைசிப் பிரியாவிடை கொடுங்கள்" என்று சொல்ல வேண்டியுள்ளது. "அப்படியானால், என் நேச மகனே, உம்மை இனி நான் பார்க்கவே முடியாதா? ஆகவே, உம்மை நான் பார்த்துக் கொண்டிருக்கிற கடைசி சந்தர்ப்பமாகிய இந்நேரத்தில், என் கடைசிப் பிரியாவிடையை, உமது பிரியமுள்ள அன்னையின் பிரியாவிடையை ஏற்றுக் கொள்ளும், உம்மோடு நான் அடக்கம் செய்யும் என் இருதயத்தையும் ஏற்றுக்கொள்ளும்" என்று வியாகுல மாதா தன் திருமகனிடம் கூறிய் இருக்க வேண்டும்.

ஒரு தாய் துன்பப்பட்டு இறந்து கொண்டிருக்கிற தன் குழந்தையின் அருகில் இருக்கும் போது, அவள் சந்தேகமின்றி, அவனுடைய எல்லா வேதனைகளையும் உணருகிறாள்,

அனுபவிக்கிறாள்; ஆனால் அவன் உள்ளபடி இறந்து விட்ட பின், அவனது உடல் கல்லறைக்குச் சுமந்து செல்லப்படும்போது, துயரத்திற்குள்ளான அந்தத் தாய் தன் குழந்தைக்குக் கடைசிப் பிரியாவிடை தர வேண்டும். தான் இனி அவனைக் காணப் போவதில்லை என்ற நினைவு உண்மையில் அந்தத் தாய்க்கு மற்ற எல்லாத் துயரங்களுக்கும் மேலான துயரமாகவே இருக்கிறது. மாமரியின் வியாகுலத்தின் கடைசி வாளைப் பாருங்கள். தன் திருமகன் சிலுவையில் மரணமடைந்ததைக் கண்டு, அவரது உயிரற்ற திருச்சரீரத்தைக் கடைசி முறையாக அரவணைத்த பிறகு, இந்த மகா பரிசுத்த அன்னை, பூமியின் மீது இனி ஒருபோதும் அவரோடு வாழ இயலாதபடி, கல்லறையில் அவரை விட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

இந்தக் கடைசி வியாகுலத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ளும்படி, கல்வாரிக்கு மீண்டும் திரும்பி வந்து, உயிரற்ற தனது திருமகனின் திருச்சரீரத்தை மடியில் தாங்கியபடி இருக்கிற வியாகுல மாதாவைக் காட்சி தியானத்தில் காண்போமாக. அவர்கள் யோபின் வார்த்தைகளில், ஓ என் மகனே, "நீர் முன்போலிராமல் என்னிடம் கடுமையுள்ளவரானீர்" (30:21) என்று சொல்வதாகத் தோன்றுகிறார்கள். ஆம், ஏனெனில் உமது மேன்மையுள்ள குணங்களும், உமது அழகும், வரப்பிரசாதமும், புண்ணியங்களும், உமது வசீகரமான பாவனைகளும், நீர் என் மீது பொழிந்தருளிய விசேஷ அன்பின் எல்லா அடையாளங்களும், நீர் எனக்குத் தந்தருளிய ஒப்பற்ற வரப்பிராத சலுகைகளும்-- இவை அனைத்துமே இப்போது துக்கமாக மாறி விட்டன. எண்ணற்ற அம்புகள் என் இருதயத்தைத் துளைத்திருக்கின்றன, எவ்வளவு அதிகமாக உம்மை நேசிக்க அவை என்னைத் தூண்டுகின்றனவோ, அவ்வளவு அதிகக் கொடூரத்தோடு அவை இப்போது உமது இழப்பை எனக்கு உணர்த்தவும் செய்கின்றன. "ஓ சர்வேசுரனுடைய மெய்யான ஏக பேறானவரே, நீர் எனக்கு ஒரு தந்தையாக, ஒரு மகனாக, ஒரு மணவாளராக இருந்தீர்! நீர் என் ஆத்துமமாகவே இருந்தீர். இப்போதோ, நான் என் தந்தையை இழந்து விட்டேன், என் மணவாளரை இழந்து விதவையாகி விட்டேன், ஆறுதலற்ற,

குழந்தையை இழந்த தாயாகி விட்டேன்; என் ஒரே மகனை இழந்ததால், நான் எல்லாவற்றையும் இழந்து விட்டேன்" (**அர்ச். பெர்னார்ட்**).

இவ்வாறு மாமரி, தன் மகனைத் தன் கரங்களில் சுமந்து கொண்டு, துக்கத்தில் கிரகிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பரிதாபத்திற்குரிய மாதா அதிகப்படியான துக்கத்தால் இறந்து விடக்கூடும் என்று அஞ்சும் பரிசுத்த சீடர்கள், அவர்களது மகனின் திருச்சரீரத்தை அவர்களது கரங்களிலிருந்து வாங்கி, அடக்கத்திற்காகச் சுமந்துசெல்லும்படி, அவர்களை நெருங்கி வருகிறார்கள். மென்மையாகவும், மரியாதையோடும் அவர்கள் அவரை மாதாவிடமிருந்து "பிடுங்கி' எடுத்துக்கொள்கிறார்கள். குறிக்கப்பட்ட இடத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்ததும், ஓ தன் திருமகனுக்கு சித்தமானால், அவரோடு தானும் உயிரோடு அந்தக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட தேவ அன்னை எவ்வளவு ஏக்கமாயிருந்தார்கள்! “என் மகனின் அடக்கத்தில், ஒரு கல்லறை இரண்டு இருதயங்களைக் கொண்டிருந்தது என்று என்னால் உண்மையாகவே கூற முடியும்" என்று மாமரி **அர்ச். பிரிஜித்தம்மாளுக்கு** வெளிப்படுத்தினார்கள்.

மிகுந்த கஸ்திக்குள்ளாகிய என் மாதாவே, நீங்கள் மட்டும் தனியாக அழும்படி நான் விட்டுவிட மாட்டேன். இல்லை. என் கண்ணீரையும் உங்கள் கண்ணீரோடு சேர்ப்பேன். இந்த வரப்பிரசாதத்தை இப்போது உங்களிடம் கேட்கிறேன். என் இனிய அன்னையே உங்கள் துயரங்களைப் பற்றியும், என் இரட்சகரின் துயரங்களைப் பற்றியும் என் எஞ்சிய வாழ்நாளில் நான் அழுது கொண்டிருக்கும்படியாக, சேசுநாதருடைய திருப்பாடுகளையும், உங்கள் வியாகுலங் களையும் நான் எப்போதும் மனதில் கொண்டிருந்து, அவற்றின் மீது ஒரு கனிவுள்ள பக்தியை நான் எப்போதும் கொண்டிருக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாரும். இந்தத் துயரங்கள் என் மரண வேளையில், என் ஆண்டவரை நோகச் செய்த என் பாவங்களின் காட்சியால் நான் அவநம்பிக்கை கொள்ளாதபடி, அச்சமயத்தில் எனக்குத் தேவைப்படும் நம்பிக்கையையும், பலத்தையும் எனக்குத் தரும் என்று நான்

நம்புகிறேன். அவை எனக்கு மன்னிப்பையும், நிலைமை வரத்தையும், மோட்சத்தையும் பெற்றுத் தருவனவாக. அங்கே, உங்களோடு அக்களித்துக் கொண்டும், நித்தியத்திற்கும் என் சர்வேசுரனுடைய அளவற்ற இரக்கங்களைப் பாடிக்கொண்டும் இருப்பேன் என்றும் நான் நம்பிய் இருக்கிறேன். ஆமென்.

II

கல்லறையை விட்டுப் புறப்படுமுன், **அர்ச். பொனவெந்தூர்** கூறுகிறபடி, மாமரி அதை மூடியிருந்த கல்லை நோக்கி: "ஓ, ஒன்பது மாதங்களாக என் உதரத்தில் அடங்கியிருந்த புனித சரீரத்தை இப்போது சூழ்ந்திருக்கிற பாக்கியம் பெற்ற கல்லே, நான் உன்னை ஆசீர்வதிக்கிறேன், உன்னைக் கண்டு பொறாமை கொள்கிறேன்; என் மகனின் காலவனாக, என் முழுப் பொக்கிஷமும், என் முழு சிநேகமுமான என் திருமகனின் காவலனாக, உன்னை நான் விட்டுச் செல்கிறேன்" என்று சொல்லி, அதை ஆசீர்வதித்தார்கள். அதன்பின் தன் இருதயத்தில் நித்திய பிதாவை நோக்கி எழும்பி, அவர்கள் அவரிடம்: "ஓ பிதாவே, உம்முடைய திருச்சுதனும், அதே சமயம் என் திருமகனுமாகிய அவரை உம்மிடம் ஒப்படைக்கிறேன்" என்று சொல்கிறார்கள். இவ்வாறு, தனது நேச சேசுவுக்குத் தன் இறுதிப் பிரியாவிடை தந்த பிறகு, மாமரி அங்கிருந்து புறப்பட்டுத் தன் சொந்த வீட்டுக்குத் திரும்பி வருகிறார்கள். இந்தத் தாய் எவ்வளவு வேதனையும், துயரமும் உள்ளவர்களாகத் திருக்கல்லறையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள் என்றால், அவர்களைக் கண்ட பலர் தங்களையும் மீறித் துயரத்தால் கண்ணீர் சிந்தினார்கள்; மாமரி கடந்து சென்ற பாதையெல்லாம், அவர்களைக் கண்ட அனைவருமே அழுதார்கள், அவர்களைக் கண்டவர்களால் தங்கள் கண்ணீரை அடக்க முடியவில்லை என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார். அவரே மேலும் தொடர்ந்து, மாதாவுடன் சென்ற பரிசுத்த சீடர்களும் பெண்களும், "தங்கள் ஆண்டவருக்காகத் துக்கப்படுவதை விட அதிகமாக மாமரிக்காகத் துக்கம் கொண்டாடினார்கள்" என்று சொல்கிறார்!

திரும்பிச் செல்லும் வழியில், தன் சேசுவின் திரு இரத்தத்தால் இன்னும் ஈரமாயிருந்த திருச்சிலுவைக்கு முன்பாகக் கடந்து செல்கையில், மாமரியே அதை முதலாவதாக ஆராதிப்பவர்களாக இருந்தார்கள். அச்சமயத்தில் மாமரி, “ஓ பரிசுத்த சிலுவையே, நான் உன்னை முத்தமிடுகிறேன், உன்னை ஆராதிக்கிறேன்; ஏனெனில் நீ இனியும் அவமானம் தரும் கழுமரமாக இல்லாமல், உலக இரட்சணியத்துக்காக உன் மீது பலியாக்கப்பட்ட தேவ செம்மறிப் புருவையானவரின் திரு இரத்தத்தால் அர்ச்சிக்கப்பட்டு, இப்போது நீ அன்பின் சிங்காசன மாகவும், இரக்கத்தின் பலிபீடமாகவும் ஆகி இருக்கிறாய்" என்று கூறினார்கள் என்று அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார்.

அதன்பின் அவர்கள் சிலுவையை விட்டுப் பிரிந்து வீடு திரும்பினார்கள். அங்கே வந்ததும், வியாகுல அன்னை சுற்றிலும் பார்க்கிறார்கள், இப்போது தன் சேசுவை அங்கு அவர்களால் பார்க்க முடியவில்லை; ஆனால், தனது பிரிய திருமகனின் இனிய பிரசன்னத்திற்குப் பதிலாக, அவரது அழகிய வாழ்வு மற்றும் கொடிய மரணத்தின் நினைவுகள் அவர்களுடைய கண்களுக்கு முன்பாகத் தோன்றின. பெத்லகேம் தொழுவத்தில் தன் பச்சிளங்குழந்தையைத் தான் எப்படி தன் மார்போடு அணைத்துக் கொண்டார்கள் என்பதை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள்; நாசரேத் வீட்டில் தாங்கள் ஒன்றாக வாழ்ந்த பல ஆண்டுகளில் அவரோடு தான் நடத்திய உரையாடல் களை நினைவுகூர்ந்தார்கள்; தங்களுடைய பரஸ்பர பாசத்தையும், நேசப் பார்வைகளையும், அந்தத் தெய்வீக உதடுகளிலிருந்து வெளிப்பட்ட நித்திய வாழ்வுக்குரிய வார்த்தைகளையும் அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். அதன்பின் அந்நாளில் அவர்கள் கண்டிருந்த அந்தத் துயரமான காட்சி அவர்களுக்கு முன்பாக வந்தது. ஆணிகளும், முட்களும், கிழித்துப் புண்ணாக்கப்பட்ட அவர்களது திருமகனின் திருச்சரீரமும், அந்த ஆழமான காயங்களும், வெளியே தெரிந்த அவருடைய எலும்புகளும், திறந்திருந்த அந்த வாயும், மங்கியிருந்த அந்தக் கண்களும் அவர்களுடைய மனக்கண்களுக்கு முன்பாக வந்தன. ஆ! அந்த இரவு எத்தகைய பயங்கரமுள்ள வியாகுல இரவாக மாமரிக்கு இருந்தது! துயரம் தாளாத அந்தத் தாய்,

அர்ச். அருளப்பரிடம் திரும்பி, துக்கத்தோடு: "ஆ, அருள், உன் குரு இப்போது எங்கே இருக்கிறார் என்று எனக்குச் சொல்" என்கிறார்கள். அதன்பின் அவர்கள் மதலேனிடம்: "மகளே, உன் நேசர் எங்கே இருக்கிறார் என்று எனக்குச் சொல். ஓ சர்வேசுரா, அவரை எங்களிடமிருந்து யார் எடுத்துக் கொண்டார்கள்?" என்று கேட்கிறார்கள். மாமரி துக்கம் தாளாமல் கண்ணீர் சிந்த, கூடியிருந்த அனைவரும் அவர்களோடு சேர்ந்து அழுகிறார்கள்.

நீயோ, என் ஆத்துமமே, நீ அழுவதேயில்லை! ஆ, மாமரியை நோக்கித் திரும்பி, அர்ச். பொனவெந்தூரோடு சேர்ந்து அவர்களை நோக்கி: "ஓ, என் இனிய இராக்கினியே, நான் அழச் செய்யுங்கள்; நீங்கள் மாசற்றவர்கள், நானோ குற்றமுள்ளவன்" என்று சொல். குறைந்தபட்சம் அவர்களோடு சேர்ந்து அழவாவது உன்னை அனுமதிக்கும்படி வேண்டிக்கொள். அவர்கள் அன்பிற்காக அழுகிறார்கள். நீ உன் பாவங்களுக்காகத் துக்கப்பட்டு அழுவாயாக.

ஏற்கெனவே இறந்து, உமது திருமடியில் வளர்த்தப்பட்டிருந்த உங்கள் திருச்சுதனைக் கண்டதால் உங்கள் இருதயத்தை ஊடுருவிய கசப்பான வாளுக்காக, என் வியாகுல மாதாவே, உங்கள்மீது நான் பரிதாபம் கொள்கிறேன். உமது கரங்களிலுள்ள உமது திருமகன் முன்பு பெத்லகேம் தொழுவத்தில் நீங்கள் அவரைப் பெற்றுக் கொண்ட போது இருந்தது போல, இப்போது அழகோ, வசீகரமோ இல்லாதிருக்கிறார், அதற்கு மாறாக, அவர் இரத்தத்தால் மூடப்பட்டவராகவும், நீலம் பூத்தவராகவும், எலும்புகள் தெரியும் அளவுக்குக் காயங்களால் சிதைக்கப்பட்டவராகவும் இருக்கிறார். அப்போது நீங்கள் அவரிடம்: "என் மகனே, என் மகனே, நேசம் எந்த அளவுக்கு உம்மைத் தாழ்த்தி விட்டது!" என்றீர்கள். அவர் கல்லறைக்குச் சுமந்து செல்லப்பட்டபோது, நீங்களும் அவருடன் சென்று, உங்கள் சொந்தக் கரங்களால் அவரைக் கல்லறையில் வைத்தீர்கள். அவருக்கு இறுதிப் பிரியாவிடை தந்தபின், உங்கள் நேச இருதயத்தை அவரோடு அடக்கம் செய்து விட்டுத் திரும்பிச் சென்றீர்கள். உங்களது அழகிய ஆத்துமத்தின் இந்த வேத சாட்சியத்தைக் கொண்டு, ஓ அழகிய நேசத்தின் மாதாவே, என் நேச சர்வேசுரனுக்கு எதிராக நான் கட்டிக்கொண்டவையும், இப்போது என்

முழு இருதயத்தோடும் நான் மனஸ்தாபப்படுபவையுமான என் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தாருங்கள். சோதனைகளில் என்னைக் காத்துக்கொள்ளுங்கள்; சேசுவுடையவும், உங்களுடையவும் பேறுபலன்களின் வழியாக என் ஆத்துமத்தை இரட்சித்துக் கொண்டு, ஒரு நாள், இந்தப் பரிதாபத்திற்குரிய அந்நிய தேச வாழ்வுக்குப் பிறகு, நித்தியத்திற்கும் சேசுவினுடையவும், உங்களுடையவும் ஸ்துதிகளை நான் பாடிக் கொண்டிருக்கும்படியாக, நான் மோட்சம் செல்லும்படியாக, என் மரண வேளையில் எனக்கு உதவி செய்யுங்கள். ஆமென்.

உயிர்ப்பு ஞாயிறு

காலை :

சேசுகிறீஸ்துநாதரின் உயிர்ப்பு

I

நம் இரட்சகரும், நம் தந்தையும், நாம் சொந்தமாகக் கொண்டிருக்கும் மிகச் சிறந்த நண்பருமானவரின் உயிர்ப்பின் மகிமையில் அவரைக் கண்டு நாம் அகமகிழ்ந்து களிகூர்வோமாக. நம் பொருட்டும் நாம் களிகூர்வோமாக. ஏனெனில் சேசுநாதரின் உயிர்ப்பு நமக்கு நம் சொந்த உயிர்ப்புக்கும், நம் ஆத்துமத்திலும், சரீரத்திலும் ஒரு நாள் மோட்சத்தில் நாம் சொந்தமாகக் கொண்டிருப்போம் என நாம் நம்பிய் இருக்கும் மகிமைக்கும் ஒரு நிச்சயமான வாக்குத்தத்தமாக இருக்கிறது.

சேசுநாதர் நம்மை மீட்டு இரட்சிப்பதற்காக மட்டுமின்றி, தமது முன்மாதிரிகையால், எல்லாப் புண்ணியங்களையும், குறிப்பாக தாழ்ச்சியையும், அதனுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கும் பரிசுத்த தரித்திரத்தையும் நமக்குக் கற்பிப்பதற்காகவும் உலகிற்கு வந்தார். இதற்காகவே, ஒரு குகையில் பிறப்பதை அவர் தேர்ந்து கொண்டார்; முப்பது ஆண்டுகள் ஓர் ஏழை மனிதனாக, ஒரு தச்சுப் பட்டறையில் வாழ்வதை அவர் தேர்ந்து கொண்டார்; இறுதியாக, ஒரு சிலுவையின் மீது, ஏழையாகவும், நிர்வாணியாகவும் மரிப்பதை

அவர் தேர்ந்துகொண்டார். தமது கடைசி மூச்சை வெளியிடுமுன், தமது ஆடைகள் போர்ச் சேவகர்களால் பிரித்துக்கொள்ளப் படுவதை அவர் கண்டார்; அதே சமயத்தில், தமது மரணத்திற்குப் பிறகு, தமது அடக்கத்திற்குரிய பரிவட்டச் சீலையைக் கூட அவர் மற்றவர்களிடமிருந்து பிச்சையாகப் பெற்றுக் கொண்டார்.

பரலோக, பூலோக அரசராயிருந்தும், தமது பேறுபலன்களாலும், கொடைகளாலும் நம்மை வளப்படுத்தும்படியாக, தரித்திரத்தில் வாழ்ந்து மரிப்பதைத் தேர்ந்துகொண்ட சேசுநாதரைக் காண்பதில் ஏழைகள் ஆறுதலடைவார்களாக. **“நமது ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதருடைய கிருபையை அறிந்திருக்கிறீர்களே, அவர் செல்வந்தராயிருந்தும், தம்முடைய தரித்திரத்தால் நீங்கள் செல்வந்தர்களாகும்பொருட்டு, அவர் உங்கள் நிமித்தம் தரித்திரர் ஆனார்" (2 கொரி.8:9).**

ஓ என் சேசுவே, உமது உயிர்ப்பைப் பார்த்து, என்றென்றும் அடியேன் உம்மைத் துதித்துக் கொண்டும், நேசித்துக் கொண்டும் இருக்குமாறு, பரலோகத்தில் உம்மோடு எப்போதும் இணைந்திருக்கும்படி, இறுதி நாளில் உம்மோடு நானும் மகிமையோடு அரசாளச் செய்தருளும்படியாக உம்மை மன்றாடுகிறேன்.

II

ஆகவே, சேசுநாதர் கடவுளாக மட்டுமின்றி மனிதனாகவும் பரலோகத்திலும், பூலோகத்திலும் எல்லா அதிகாரத்தையும் கொண்டிருக்கும் மகிமையோடு, மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். எனவே சகல தேவதூதர்களும், சகல மனிதர்களும் அவருக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள். நம் இரட்சகரும், நம் தந்தையும், நாம் சொந்தமாகக் கொண்டிருக்கிற மிகச் சிறந்த நண்பருமானவரை இப்படி மகிமையில் காண்பதில் நாம் அக்களிப்போமாக.

நமக்காகவும் நாம் அக்களிப்புக் கொள்வோமாக. ஏனெனில் சேசுகிறீஸ்துநாதரின் உயிர்ப்பு நம் சொந்த உயிர்ப்புக்கும், ஒரு நாள்

பரலோகத்தில் நம் ஆத்துமத்திலும் சரீரத்திலும் நாம் கொண்டிருக்கப் போகிறோம் என்று நம்பிய் இருக்கும் மகிமைக்கும் ஒரு நிச்சயமான வாக்குத்தத்தமாக இருக்கிறது. வேதசாட்சிகள் வாழ்வில் எல்லாத் தீமைகளையும், கொடுங் கோலர்களின் மிகக் கொடூரமான வாதைகளையும் மகிழ்ச்சியோடு அனுபவிக்க அவர்களுக்குத் தைரியம் தந்தது இந்த நம்பிக்கையே. ஆயினும், இவ்வுலகில் சேசுவோடு துன்பப்பட மனதாயிருப்பவர்களைத் தவிர வேறு யாரும் அவரோடு அக்களித்திருக்க மாட்டார்கள் என்பதிலும், தனக்கு நியமிக்கப்பட்டுள்ளபடி போராடாதவன் நித்திய முடியைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதிலும் நாம் உறுதியாயிருப்போம். **“மல்யுத்தம் பண்ணுகிறவன் சட்டப்படி யுத்தம் பண்ணினாலன்றி முடிசூட்டப்பட மாட்டான்" (2 திமோ.2:5).** அதே சமயம், இவ்வுலக வாழ்வின் துன்பங்கள் மோட்சத்தில் நாம் அனுபவிப்போம் என்று நம்பிய் இருக்கிற மட்டற்ற, நித்தியப் பேரின்பங்களோடு ஒப்பிடப்படும்போது, அவை குறுகியவை, இலகுவானவை என்று அதே அப்போஸ்தலர் சொல்லும் காரியத்திலும் நாம் உறுதியாயிருப்போம் (2 கொரி.4:17). கடவுளின் வரப்பிரசாதத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க நாம் உழைப்போம்; கடவுளின் நட்பில் நிலையாய் இருக்கத் தொடர்ந்து ஜெபிப்போம். தொடர்ச்சியான ஜெபமின்றி, நாம் நிலைமை வரத்தை அடைய முடியாது. நிலைமை வரமின்றி, நாம் இரட்சிக்கப்பட முடியாது.

ஓ, முழு நேசத்திற்குத் தகுதியுள்ளவராகிய இனிய சேசுவே, உமது அன்பைக் காட்டும் படியாக, ஓர் அவமானச் சிலுவையில் காயப்பட்டவராகவும், அவமதிக்கப்பட்டவராகவும் மரிக்க நீர் மறுக்கவில்லை என்னும் அளவுக்கு, மனிதர்களை நீர் எப்படி இவ்வளவு அதிகமாக நேசித்தீர்? ஓ என் தேவனே, தங்கள் முழு இருதயத்தோடு உம்மை நேசிப்போர் மனிதர்கள் மத்தியில் இவ்வளவு குறைவாக எண்ணிக்கையில் இருப்பது எப்படி? ஓ என் பிரியமுள்ள இரட்சகரே, இந்த ஒரு சிலரில் ஒருவனாக நான் அருக்க ஆசிக்கிறேன். கடந்த காலத்தில் உமது அன்பை மறந்து, அற்பமான இன்பங்களுக்காக உமது வரப்பிரசாதத்தை இழந்து போன நிர்ப்பாக்கியப் பாவியாக நான் இருக்கிறேன்! நான் செய்த தீமை

என்னவென்று நான் அறிவேன். அதைப் பற்றி என் முழு இருதயத்தோடு துக்கப்படுகிறேன், இது பற்றி துக்கத்தினால் மரிக்கவும் நான் விரும்புகிறேன். ஓ என் அன்புள்ள மீட்பரே, இப்போது என்னை விட அதிகமாக உம்மை நான் நேசிக்கிறேன், உமது நட்பை இழப்பதை விட ஓராயிரம் தடவை மரிக்கவும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன். சேசுவே, நீர் எனக்குத் தந்திருக்கிற ஒளிக்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். சேசுவே, என் நம்பிக்கையே, என் சொந்தக் கரங்களில் என்னை விட்டு விடாதேயும். மரணம் வரைக்கும் எனக்கு உதவி செய்தருளும்.

ஓ மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, சேசுவிடம் எனக்காக ஜெபியுங்கள்.

உயிர்ப்பு ஞாயிறு

மாலை:

“உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.''

I

நாம் இவ்வாழ்வின் துன்பங்களைப் பொறுமையோடு அனுபவிப்போம் என்றால், நாம் பாக்கியவான்கள்! சூழ்நிலைகள் சார்ந்த துன்பம், பயங்கள், உடல் ரீதியான நோய்கள், கலாபனைகள், எல்லா வகையான சிலுவைகள் ஆகிய அனைத்தும் ஒரு நாள் முடிவுக்கு வரும்; நாம் இரட்சிக்கப்படுவோம் என்றால், அவை அனைத்தும் நமக்குப் பரலோகத்தில் சந்தோஷம் மற்றும் மகிமையின் காரணங்களாக ஆகிவிடும்: “உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' என்று சொல்லி, நம் இரட்சகர் நம்மை ஊக்கப்படுத்துகிறார் (அரு.16:20). பரலோக இன்பங்கள் எவ்வளவு மேலானவை என்றால், அழியக்கூடிய மனிதர்களாகிய நம்மால் அவற்றை விளக்கிச் சொல்லவோ, புரிந்து கொள்ளவே இயலாது: **“தம்மை நேசிக்கிறவர்களுக்கு சர்வேசுரன் ஆயத்தம் செய்துள்ளவைகளைக் கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, மனித இருதயத்திற்கு அவை எட்டினதுமில்லை'' (1 கொரி.2:9).** மோட்ச அழகுகளுக்கு

இணையான அழகுகளைக் கண் ஒருபோதும் கண்டதில்லை; பரலோக இசைகளுக்கு இணையான இனிய இசையைக் காது கேட்டதில்லை; தம்மை நேசிக்கிறவர்களுக்காகக் கடவுள் ஏற்பாடு செய்திருக்கிற பேரின்பங்களை மனித இருதயம் புரிந்து கொண்டதுமில்லை. குன்றுகளாலும், சமவெளிகளாலும், காடுகளாலும், கடலின் காட்சிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிற ஒரு நிலப்பரப்பின் காட்சி அழகியதாக இருக்கிறது. கனிகளும், மலர்களும், ஊற்றுகளும் மிகுந்திருக்கிற ஒரு தோட்டத்தின் காட்சி அழகானது. ஓ, பரலோகம் இன்னும் எவ்வளவோ அதிக அழகுள்ளதாய் இருக்கிறது!

பரலோக இன்பங்கள் எவ்வளவு பெரியவை என்பதைப் புரிந்து கொள்வதற்கு, அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாட்டில் சர்வ வல்லபரான ஒரு கடவுள் தங்கி வசிக்கிறார், தமது நேசத்திற்குரிய ஆத்துமங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது அவருடைய பொறுப்பு என்பதை மட்டும் நாம் அறிந்திருப்பது போதுமானது. பரலோகம் என்பது, "***நீ விரும்பாத எதுவும் இராததும், நீ விரும்பும் எல்லாமே இருப்பதுமான"*** ஓர் இடம் என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார். அங்கே உனக்கு வெறுப்பைத் தரும் எதையும் நீ காண மாட்டாய், நீ ஆசிக்கும் அனைத்தையும் அங்கே நீ காண்பாய்; "நீ விரும்பாத எதுவும் அங்கே இருக்காது." மோட்சத்தில் இரவு என்பதில்லை; குளிர்காலம், கோடை காலம் போன்ற பருவ காலங்கள் இல்லை; அதற்கு மாறாக மாறாத அமைதியுள்ள ஒரே ஒரு நிரந்தரமான பகல் மட்டுமே அங்கு உள்ளது, மாற்றமில்லாத இன்பங்களின் ஒரேயயாரு நிரந்தரமான வசந்த காலம் மட்டுமே அங்குள்ளது. அங்கே இனி கலாபனைகளோ, பொறாமைகளோ இல்லை; ஏனெனில் அங்கே அனைவரும் உண்மையுள்ள மனத்தோடு ஒருவரையயாருவர் நேசிக்கிறார்கள், ஒவ்வொருவரும் மற்றவரின் நன்மை தன் சொந்த நன்மை என்பது போல மற்றவரின் நன்மையில் அக்களிக்கிறார்கள். உடல் நோய்களோ, வலிகளோ அங்கில்லை. ஏனெனில் உடல் இனி துன்பம் அனுபவிக்கக் கூடியதாக இராது; தரித்திரம் அங்கில்லை, ஏனெனில் ஒவ்வொருவரும் இதற்கு மேல் வேறொன்றும் ஆசிக்காத அளவுக்கு முழு செல்வந்தர்களாக இருப்பார்கள்; அங்கே பயங்கள்

இனி இல்லை, ஏனெனில் ஆத்துமம் வரப்பிரசாதத்தில் உறுதிப் படுத்தப்பட்டு, இனி பாவம் செய்ய முடியாததாகவும், தான் சொந்தமாகக் கொண்டிருக்கிற உன்னத நன்மையை இனி இழக்க முடியாததாகவும் இருக்கும்.

II

“நீ விரும்பும் அனைத்தும் அங்கே இருக்கும்." பரலோகத்தில் நீ ஆசைப்படும் அனைத்தையும் சொந்தமாகக் கொண்டிருப்பாய். அங்கே மிக அழகிய அந்த நகரத்தையும், நித்திய இராச்சியத்தின் அரசர்களாக, இராஜ உடைகள் அணிந்திருக்கிற அதன் குடிமக்கள் அனைவரையும் பார்ப்பதில் பார்வைப் புலன் திருப்தியடையும். அங்கே மாமரியின் மாசற்ற அழகை நாம் காண்போம். அனைத்து தேவதூதர்கள் மற்றும் புனிதர்களின் ஒருங்கிணைந்த அழகை விட மாமரியின் தோற்றம் அதிக அழகுள்ளதாக இருக்கும். அங்கே சேசு நாதரின் அழகை நாம் காண்போம். அது மாமரியின் அழகையும் விட அளவற்ற விதமாய் மேம்பட்டதாக இருக்கும். நம் முகரும் புலன் பரலோக நறுமணங்களால் திருப்திப்படுத்தப்படும். செவிப்புலன் பரலோக தெய்வீக இசைகளாலும், மனதைக் கொள்ளை கொள்ளும் இனிமையோடு நித்தியத்திற்கும் தேவ ஸ்துதிகளைப் பாடும் பரலோகவாசிகளின் கீதங்களாலும் திருப்திப் படுத்தப்படும். ஆ, என் தேவனே, மோட்சத்திற்கல்ல, நரகத்திற்கே நான் தகுதியுள்ளவனாக இருக்கிறேன்; என்றாலும் உமது மரணம் மோட்சத்தைப் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையை எனக்குத் தருகிறது. பரலோகத்தை அனுபவித்து மகிழ்வதற்கும் அதிகமாக, அங்கே, இனி ஒருபோதும் உம்மை இழப்பது பற்றிய பயம் எனக்கில்லை என்ற பாதுகாப்பு உணர்வோடு, உம்மை என்றென்றும் நேசிக்கும்படி, பரலோகத்தை நான் ஆசித்து, அதை உம்மிடம் கேட்கிறேன். ஓ மரியாயே, என் மாதாவே, சமுத்திரத்தின் நட்சத்திரமே, உங்கள் ஜெபங்களால் என்னை மோட்சத்திற்கு நடத்திச் செல்வது உங்கள் பொறுப்பு.

திங்கள்

நீ முடிசூட்டப்படுவாய்.

I

இவ்வுலகிலிருந்து புறப்பட்டு, தேவ இஷ்டப்பிரசாத நிலையில் நித்தியத்திற்குள் நுழையும் ஓர் ஆன்மாவை நாம் கற்பனை செய்வோம். தாழ்ச்சியும், நம்பிக்கையும் நிறைந்ததாக அது தனது நடுவரும், இரட்சகருமான சேசுநாதருக்கு முன்பாகத் தோன்றுகிறது. சேசுநாதர் அதை அரவணைத்து, தமது ஆசீர்வாதத்தை அதற்குத் தந்து, “வா, என் மணவாளியே, வா. நீ முடிசூட்டப்படுவாய்" என்ற இனிய வார்த்தைகளை அது கேட்கச் செய்கிறார். அந்த ஆன்மா சுத்திகரிக்கப்பட வேண்டிய தேவையில் இருந்தால், அவர் அதை உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு அனுப்புகிறார். முற்றிலும் அமைந்த மனதோடு அது இந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்கிறது. ஏனெனில், தான் முழுமையாக சுத்திகரிக்கப்படாத வரைக்கும், அந்த மாசற்றதனத்தின் நாடாகிய மோட்சத்திற்குள் நுழைய அதுவே விரும்புவதில்லை. அதன் காவல் தூதர் உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு அதை வழிநடத்திச் செல்கிறார்; அது தனது வாழ்நாள் முழுவதும் அவர் தனக்குச் செய்த உதவிகளுக்காக அவருக்கு முதலில் நன்றி செலுத்துகிறது. அதன்பின் கீழ்ப்படிதலோடு அவரைப் பின்செல்கிறது. ஆ, என் தேவனே, நான் இந்த ஆபத்துக்கள் நிறைந்த உலகத்திலிருந்து, இனி உம்மை இழக்கும் ஆபத்தில்லை என்ற பாதுகாப்புணர்வோடு புறப்பட்டுச் செல்லும் நாள் எப்போது வரும்? ஆம், என்னுடையதாக இருக்கப் போகிற உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு நான் மன உவப்போடு செல்வேன்; அதன் எல்லா வேதனைகளையும் மகிழ்ச்சியோடு அணைத்துக் கொள்வேன்; அங்கே வேறு யாரையுமன்றி உம்மை மட்டுமே நான் நேசிப்பேன் என்பதால், அந்த நெருப்பில் உம்மை என் முழு இருதயத்தோடு நேசிப்பது எனக்குப் போதுமானதாக இருக்கும்.

II

உத்தரிக்கிற ஸ்தலத்தின் சுத்திகரிப்பு முடிந்தவுடன் தேவதூதர் திரும்பி வந்து அந்த ஆத்துமத்திடம்: வா, அழகிய ஆத்துமமே,

தண்டனை முடிந்து விட்டது; வா, மோட்சத்தில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிற உன் சர்வேசுரனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க வா என்று சொல்கிறார். இதோ, அந்த ஆன்மா மேகங்களுக்கு அப்பால் இப்போது கடந்து போகிறது. வானமண்டலத்தின் பெருவெளிகளையும், நட்சத்திரங்களையும் கடந்து அது பறந்து சென்று, இதோ, மோட்சத்திற்குள் நுழைகிறது. ஓ சர்வேசுரா, அந்த அழகிய நாட்டிற்குள் அது நுழைந்து, தனது முதல் பார்வையை அந்த இன்பங்களின் நகரத்தின் மீது வீசும்போது அது என்ன சொல்லும்! தேவ தூதர்களும், புனிதர்களும், குறிப்பாக அதன் சொந்த, பரிசுத்த பாதுகாவலர்களும், அதற்காகப் பரிந்துபேசியவர்களும் அதைச் சந்திக்கச் செல்வார்கள், "வரவேற்கிறோம், ஓ எங்கள் சொந்த நண்பனே, உன்னை வரவேற்கிறோம்!" என்று சொல்லிப் பெருமகிழ்ச்சியோடு அவர்கள் அதை வரவேற்பார்கள். ஆ என் சேசுவே, இதற்கு நான் தகுதி பெறச் செய்தருளும்.

தனக்கு முன்பாக மோட்சத்திற்குள் நுழைந்திருந்த உறவுகளையும், நண்பர்களையும் சந்திக்கும்போது, அந்த ஆன்மா எத்தகைய ஆறுதலைத்தான் அனுபவிக்காது? ஆனால் தனது இராக்கினியாகிய மாமரியன்னையைத் தரிசிப்பதில் அதன் மகிழ்ச்சி எத்தனையோ மடங்கு அதிகமாகும். அவர்களுடைய திருப்பாதங்களை முத்தமிட்டு, அவர்கள் அதற்குக் காட்டிய எண்ணற்ற கருணைகளுக்காக அவர்களுக்கு நன்றி கூறுவதில் அது அளவற்ற மகிழ்ச்சியடையும். தேவ இராக்கினி அதை அரவணைத்து, தானே சேசுவுக்கு முன்பாக அழைத்துச் சென்று அவரிடம் சமர்ப்பிப்பார்கள். அவர் தனது மணவாளியாக அதை வரவேற்பார். அதன்பின் சேசுநாதர் தமது திவ்விய பிதாவிடம் அதை சமர்ப்பிக்க, பிதா அதை அணைத்து, "உன் ஆண்டவரின் மகிழ்ச்சியில் பிரவேசி" என்று சொல்லி அதை ஆசீர்வதிப்பார். இவ்வாறு தாமே அனுபவித்து மகிழும் பரலோகப் பேரின்ப பாக்கியத்தில் அந்த ஆத்துமத்தையும் அவர் பங்குபெறச் செய்வார். ஆ, என் தேவனே, நித்தியத்தில் அளவுக்கு அதிகமாக உம்மை நான் நேசிக்கும்படியாக, இவ்வாழ்வில் உம்மை அளவுக்கு அதிகமாக நான் நேசிக்கச் செய்யும். நீர் நேசிக்கப்பட பூரண தகுதியுள்ளவராக இருக்கிறீர்; என் முழு

அன்பிற்கும் நீர் தகுதியுள்ளவராாக இருக்கிறீர்; நான் வேறு யாரையுமன்றி உம்மை மட்டுமே நேசிப்பேன். உமது வரப்பிரசாதத்தால் எனக்கு உதவியருளும். மரியாயே, என் மாதாவே, என் பாதுகாவலியாக இருங்கள்.

செவ்வாய்

நித்தியத்திற்கும் கடவுளை தரிசித்தலும், அவரை அனுபவித்தலும்.

I

புனிதர்களின் அழகும், பரலோக இசையும், மோட்சத்தின் மற்ற இன்பங்களும் அதன் பெரும் பொக்கிஷங்களில் மிகச் சிறிய பாகமாக மட்டுமே இருக்கின்றன. ஆத்துமத்திற்கு முழுமையான பேரின்பத்தை அளிக்கும் காரியம், அன்பின் தேவனை முகமுகமாய் தரிசிப்பதே யாகும். நரகத்திலுள்ள சபிக்கப்பட்டவர்கள் தமது திருமுகத்தைக் காணு அவர் அவற்றை அனுமதிப்பார் என்றால், நரகம், தனது எல்லா வாதைகளோடும் அவர்களுக்கு ஒரு மோட்சமாக மாறிப் போகும் என்று அர்ச். அகுஸ்தினார் சொல்கிறார். இவ்வுலகிலும் கூட, கடவுள் ஓர் ஆன்மாவுக்கு ஜெபத்தில் தமது இனிய பிரசன்னத்தின் சுவையைத் தரும்போதும், ஓர் ஒளிக் கீற்றின் மூலம் தமது நன்மைத்தனத்தையும், அந்த ஆன்மாவின்மீது தாம் கொண்டுள்ள அன்பையும் அது அறியச் செய்வார் என்றால், அந்த ஆன்மா அனுபவிக்கிற மகிழ்ச்சி எவ்வளவு பெரியதாக இருக்குமென்றால், அது, தான் அன்பில் கரைந்து உருகிப் போவதாக உணரும். இருந்தாலும், இவ்வாழ்வில் கடவுள் இருக்கிற படி அவரைக் காண்பது நமக்கு சாத்தியமில்லை. நாம் மங்கலாக, ஒரு கனத்த திரை வழியாகப் பார்ப்பதுபோல் அவரைப் பார்க்கிறோம். அப்படியானால், அந்தத் திரையை நமக்கு முன்பிருந்து கடவுள் அகற்றி விட்டுத் தம்மை முகமுகமாக, முற்றிலும் திறப்பாகக் காண அனுமதிப்பார் என்றால், அது எத்தகைய நிலையாக இருக்கும்! ஓ ஆண்டவரே, உம்மிடமிருந்து நான் திரும்பிக் கொண்டதால், இனி உம்மைக் காண நான் தகுதியற்றவனாகவே இருக்கிறேன். ஆயினும், உமது நன்மைத்தனத்தில் நம்பிக்கை கொண்டு, மோட்சத்தில்

என்றென்றும் உம்மைக் காண்பேன் என்றும், உம்மை நேசிப்பேன் என்றும் நான் நம்பி ய் இருக்கிறேன். எனக்கு மோட்சத்தைத் தருவதற்காக இறந்தவராகிய ஒரு கடவுளிடம் பேசுகிறேன் என்பதால்தான் நான் இப்படிப் பேசுகிறேன்.

கடவுளை நேசிக்கும் ஆன்மாக்களே இவ்வுலகில் மற்ற அனைவரையும் விட அதிக மகிழ்ச்சியானவர்கள் என்றாலும், இங்கே பூமியில் முழுமையானதும், நிறைவுற்றதுமான ஒரு மகிழ்ச்சியை அவர்களால் அனுபவிக்க முடியாது. தங்கள் தகுதி பெற்றிருப்பது தங்கள் அன்பு இரட்சகரால் நேசிக்கப்படுவதற்கா, அல்லது வெறுக்கப்படுவதற்கா என்று தெரியாததால் வருகிற அந்த பயம் ஓர் இடையறாத துன்பத்தில் அவர்களை வைத்திருக்கிறது. ஆனால் பரலோகத்தில் ஆத்துமம், தான் கடவுளை நேசிப்பதைப் பற்றியும், கடவுளால் நேசிக்கப்படுவது பற்றியும் உறுதி கொண்டிருக்கிறது. கடவுளோடு அதைப் பிணைத்திருக்கிற அந்த அன்பின் இனிய கட்டு நித்திய காலமும் இனி அவிழ்க்கப்படாது என்று அது காண்கிறது. மனிதனாக அவதரித்ததிலும், அந்த ஆத்துமத்திற்காக அவர் மரிக்க சித்தங்கொண்டதிலும், தேவ நற்கருணையில் அவர் தம்மையே அதற்கு உணவாகத் தந்ததிலும், கடவுள் கொண்டிருந்த அளவற்ற அன்பைப் பற்றித் தான் அப்போது கொண்டிருக்கும் அதிகத் தெளிவான அறிவினால், அதன் நேசச் சுவாலைகள் அதிகரிக்கும். மேலும், தன்னை மோட்சத்திற்கு அழைத்து வருவதற்காக அவர் தனக்குத் தந்தருளிய வரப்பிரசாதங்களை அவற்றின் தெளிவான காட்சியில் காண்பதன் மூலம் அந்த ஆத்துமத்தின் அன்பு அதிகமாகும். தனது உலக வாழ்வின் போது தனக்கு அனுப்பப்பட்ட சிலுவைகள் அனைத்தும், தன்னை மகிழ்விக்கும்படி அவர் உருவாக்கிய அற்புதக் கருவிகள் என்பதையும் அது காணும். மேலும் அவர் தனக்குத் தந்தருளிய இரக்கங்களையும், பல ஞான வெளிச்சங்களையும், தவம் செய்வதற்கான அழைத்தல்களையும் அது காணும். அந்த ஆசீர்வதிக்கப்பட்ட மலையின் உச்சியிலிருந்து, தனது சொந்தப் பாவத்தை விடக் குறைவான பாவங்களுக்காக இப்போது நரகத்தில் இருக்கும் பல ஆன்மாக்களை அது பார்க்கும், தான் இப்போது இரட்சிக்கப்பட்டிருப்பதையும், கடவுளைச் சொந்தமாகக்

கொண்டிருப்பதையும் அது கண்டு, இனி நித்தியத்திற்கும் அவரைத் தான் ஒருபோதும் இழக்கப் போவதில்லை என்ற அறிவில் உறுதிப்படுத்தப்படும். என் சேசுவே, என் சேசுவே, அந்த அளவுக்கு மீறிய மகிழ்ச்சியின் நாள் எனக்கு எப்போது வந்து சேரும்?

II

ஆசீர்வதிக்கப்பட்ட ஆத்துமம் இப்போது அனுபவிக்கிற கடவுளை, நித்தியத்திற்கும் தன்னால் துய்த்தனுபவிக்க முடியும் என்று அது முழு நிச்சயத்தோடு அறிந்து கொள்ளும்போது, அதன் மகிழ்ச்சி பூரணமாக்கப்படும். தாங்கள் இப்போது அனுபவிக்கிற கடவுளை ஒருவேளை தாங்கள் இழக்க நேரிடலாம் என்ற மிக அற்பமான சந்தேகம் கூட பரலோக வாசிகளிடம் இருக்குமானால், பரலோகம் இனி பரலோகமாக இராது. ஆனால் இல்லை! ஆசீர்வதிக்கப்பட்ட ஆன்மா கடவுளின் இருத்தலைப் பற்றி எவ்வளவு உறுதி கொண்டுள்ளதோ, அதே அளவுக்கு, தான் இப்போது அனுபவிக்கிற அதே நன்மைத்தனத்தை இனி என்றென்றும் அனுபவிக்க இருக்கிறது என்பதிலும் உறுதி கொண்டிருக்கும். மேலும் அந்த மகிழ்ச்சி காலப்போக்கில் குறைந்து போகாது. மாறாக, அது எப்போதும் புதியதாக இருக்கும். ஆசீர்வதிக்கப்பட்ட அந்த ஆத்துமம் எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கும், அந்த மகிழ்ச்சியின் மீது அது எப்போதும் தாகம் கொண்டிருக்கும்.

ஆகவே, நாம் வாழ்வின் துன்பங்களால் வேதனைப்படுத்தப் படுவதைக் காணும்போது, நம் கண்களைப் பரலோகத்தை நோக்கி உயர்த்தி, “பரலோகம்! இந்தத் துன்பங்கள் ஒருநாள் முடிந்து போகும்; அதை விட மேலாக, அவை தாங்களே என் அக்களிப்பிற்குரிய காரணங்களாக மாறிப் போகும்" என்று சொல்லி நம்மை நாமே தேற்றிக் கொள்வோம். புனிதர்கள் நமக்காகக் காத்திருக்கிறார்கள்; தேவதூதர்கள் நமக்காகக் காத்திருக்கிறார்கள். அர்ச். மாமரி நமக்காகக் காத்திருக்கிறார்கள்; சேசுநாதருக்கு நாம் பிரமாணிக்கமாக இருப்போமானால், நமக்குத் தாம் சூட்ட இருக்கும் மகிமையின் முடியைத் தமது கரத்தில் ஏந்தியபடி அவர் நிற்கிறார். ஆ என்

சர்வேசுரா, உம்மைச் சொந்தமாக்கிக் கொள்ளும் படியாகவும், உம்மை நோக்கி, "என் அன்பரே, இனி உம்மை என்னால் இழக்க முடியாது!" என்று சொல்லும்படியாகவும், அந்த நாளுக்குநான் எப்போது வந்து சேர்வேன்! ஓ மரியாயே, என் நம்பிக்கையே, மோட்சத்தில் உங்கள் திருப்பாதங்களின் அருகில் பாதுகாப்பாக நீங்கள் என்னைக் காணும் வரை, எனக்காக ஜெபிப்பதை ஒருபோதும் நிறுத்தி விடாதீர்கள்!

புதன்

கடவுளை நேசிப்பவர்களின் மகிழ்ச்சியான வாழ்வு

I

"நீதியும் சமாதானமும் முத்தமிட்டுக் கொண்டன" (சங்.84:11). நீதி தங்கி வசிக்கும் ஒவ்வொரு ஆன்மாவிலும் சமாதானம் குடிகொண்டிருக்கிறது. ஆகவேதான் தாவீதரசர்: **"ஆண்டவரிடத்தில் ஆனந்தம் கொள். அப்போது உன் இருதயம் விரும்புவதை அவர் உனக்குத் தருவார்" என்கிறார் (சங்.36:4).** இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு, உலகத்தன்மையான மனிதர்கள் இவவுலக பொய்த் தெய்வங்களைக் கொண்டு தங்கள் இருதயங்களின் ஆசைகளைத் திருப்திப்படுத்திக்கொள்ளத் தேடுகிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்; ஆனால் அவை அவர்களை மகிழ்ச்சியானவர்களாக ஆக்க முடியாது என்பதால், அவர்களது இருதயங்கள் தொடர்ந்து புதிய காரியங்களைத் தேடுகின்றன. இந்த உலகப் பொருட்களை அவர்கள் எவ்வளவு அதிகமாக சம்பாதித்தாலும், அவற்றில் அவர்கள் திருப்தி கொள்வது இல்லை. இதன் காரணமாகவே தீர்க்கதரிசியானவர்: "ஆண்டவரில் ஆனந்தம் கொள், அப்போது உன் இருதயம் விரும்பியதை அவர் உனக்குத் தருவார்" என்கிறார். சிருஷ்டிகளை விட்டுவிடு, உன் மகிழ்ச்சியைக் கடவுளில் தேடு, அவர் உன் இருதயத்தின் ஏக்கங்கள் அனைத்தையும் திருப்திப்படுத்துவார்.

அர்ச். அகுஸ்தினாருக்கு நிகழ்ந்ததும் இதுதான். அவர் சிருஷ்டிகளில் இன்பத்தைத் தேடிக் கொண்டிருந்த வரைக்கும்,

ஒருபோதும் சமாதானத்தை அனுபவிக்கவில்லை. ஆனால் அவற்றை விட்டு விலகி, தமது இருதயத்தின் நாட்டங்கள் அனைத்தையும் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த மாத்திரத்தில், அவர் அதிசயித்தபடி, “எல்லாமே கடினமானவை, ஆண்டவரே, நீர் மட்டுமே இளைப்பாற்றியாக இருக்கிறீர்" என்றார். இதன் பொருள் என்னவெனில்: ஆ ஆண்டவரே! என் மூடத்தனத்தை நான் இப்போது அறிந்திருக்கிறேன். உலக இன்பங்களில் மகிழ்ச்சியைக் கண்டடையலாம் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவை அனைத்தும் வீண்தான் என்றும் அவை ஆத்துமத்தைக் கஸ்திக்கு உள்ளாக்குபவை என்றும், நீர் மட்டுமே எங்கள் இருதயங்களின் சமாதானமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர் என்றும் இப்போது நான் அறிந்திருக்கிறேன் என்பதாகும்.

II

தம்மை நேசிப்பவர்களுக்குக் கடவுள் தரும் சமாதானம், ஒரு மனிதன் இவ்வுலகில் அனுபவிக்கக் கூடிய எல்லாப் புலனின்பங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார்: **“எல்லா அறிவையும் கடந்த சர்வேசுரனுடைய சமாதானம்..." (பிலிப். 4:7). அர்ச். பிரான்சிஸ் அசிசியார்**, “என் தேவனே, என் சர்வமுமே!" என்று சொல்வதில் இவ்வுலகத்திலேயே பரலோகத்தின் ஒரு முன்சுவையை அனுபவித்தார். அர்ச். பிரான்சிஸ் சவேரியார் சேசுநாதரின் மகிமைக்காக இந்தியாவில் தாம் மேற்கொண்ட கடும் உழைப்புகளுக்கு மத்தியில், தேவ ஆறுதல்களால் எந்த அளவுக்கு நிரப்பப்பட்டார் என்றால், அவர் அடிக்கடி அதிசயித்தபடி, “போதும், ஆண்டவரே, போதும்!" என்பார். இவ்வுலக செல்வங்களால் நிறைவுற்று, “போதும், உலகமே, போதும்! இதற்கு மேல் செல்வங்கள் வேண்டாம்! பட்டம் பதவிகள் வேண்டாம், இன்பங்கள் வேண்டாம்" என்று திருப்தியோடு சொல்லக் கூடியவன் எங்காவது இருக்கிறானா என்று நான் கேட்கிறேன். ஆ, இல்லை! உலகத்தை நேசிப்பவர்கள் இடைவிடாமல் உயர் பதவிகளையும், அதிக செல்வங்களையும், புதிய இன்பங்களையும் தேடிக் கொண்டே இருக்கிறார்கள்; ஆனால்

எவ்வளவு அதிகமாக இவற்றை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்களுடைய மனச் சமாதானமின்மையும் அதிகரிக்கிறது.

II

கடவுள் மட்டுமே ஆன்மாவைத் திருப்திப்படுத்தக் கூடியவர் என்ற இந்த உண்மையைப் பற்றி நம்மையே நாம் வலுவந்தம் செய்வது அவசியம். உலகத் தன்மையான மனிதர்கள் இதை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஏனெனில், தங்களைக் கடவுளுக்குத் தருவதாயிருந்தால், கசப்பும், அதிருப்தியும் நிறைந்த ஒரு வாழ்வையே தாங்கள் நடத்த வேண்டிய் இருக்கும் என்று அவர்கள் தவறாகக் கருதுகிறார்கள். ஆனால் அரச தீர்க்கதரிசியோடு சேர்ந்து நான் அவர்களுக்குச் சொல்கிறேன்: **“ஆண்டவர் எம்மாத்திரம் மதுரமாய் இருக்கிறார் என்று சுவைத்துப் பாருங்கள்" (சங்.33:9).** ஓ பாவிகளே, இன்னும் நீங்கள் சுவை பார்க்காத ஒரு வாழ்வை எப்படி நிந்தித்துத் தள்ளி, அது நிர்ப்பாக்கியமானது என்று எப்படி மதிக்கிறீர்கள? ஓ, சுவைத்துப் பாருங்கள். அதை சோதித்துப் பார்க்கத் தொடங்குங்கள். ஒவ்வொரு நாளும் பூசை காணுங்கள்; மன ஜெபத்தை அனுசரியுங்கள், தினமும் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில் ஆண்டவரை சந்தியுங்கள்; வாரம் ஒரு முறையாவது திவ்ய நன்மை உட்கொள்ளுங்கள்; தீய உரையாடல்களிலிருந்து விலகி ஓடிப் போங்கள்; எப்போதும் கடவுளோடு நடங்கள்; அப்போது, உலகம் தன் இன்பங்கள் அனைத்தையும் கொண்டு இது வரை உங்களுக்குத் தந்திராத இனிமையையும், சமாதானத்தையும் இத்தகைய வாழ்வின் மூலம் நீங்கள் அனுபவிப்பதைக் காண்பீர்கள்.

வியாழன்

“உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக."

I

“கிறீஸ்துநாதர் மரித்தோருக்கும், ஜீவியருக்கும் கர்த்தராய் இருக்கும் பொருட்டே மரித்து உயிர்த்திருக்கிறார்'' (உரோ.14:9). புனிதர்கள் சேசுநாதருடைய திருமரணத்தைக் கண்டு தியானித்து, இவ்வளவு அதிக அன்புள்ள ஒரு கடவுளின் மீதுள்ள அன்பிற்காகத் தங்கள் உயிரையும், எல்லாவற்றையுமே தருவதும் கூட மிகக் குறைவானதுதான் என்று நினைத்தார்கள். எத்தனை வேதசாட்சிகள் அவருக்காகத் தங்கள் உயிரைப் பலியாக்கினார்கள்! எத்தனை கன்னியர்கள் தங்கள் நிமித்தமாக உயிரைக் கையளித்த சர்வேசுரனுடைய பேரன்க்குப் பதிலன்பு செலுத்தும்படியாக, அரசர்களையும் பிரபுக்களையும், பெரும் செல்வந்தர்களையும் மணக்க மறுத்து, மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்! சேசுநாதருக்காக நீ என்ன செய்திருக்கிறாய்?

“ஒரு காரியம்தான் அவசியமானது'' (லூக்.10:42). இந்த அவசியமான ஒரே ஒரு காரியம் என்ன? செல்வங்களைக் குவிப்பதும், பதவிகளை அடைவதும், புகழ் பெறுவதும் அவசியமானவை அல்ல. கடவுளை நேசிப்பது ஒன்றே அவசியமானது. கடவுளுக்காகச் செய்யப்படாத எந்தக் காரியமும் இழக்கப்பட்டதாகவே இருக்கிறது. இதுவே தேவ சட்டத்தின் மிகப் பெரியதும், முதன்மையானதுமான கட்டளையாக இருக்கிறது. வேதப் பிரமாணத்தில் எல்லாம் பெரிய கட்டளை எது என்று கேட்ட பரிசேயர்களுக்கு, **“உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக . . . இதுவே எல்லாவற்றிலும் பெரிதும், முதன்மையுமான கட்டளை'' என்று சேசுநாதர் பதிலளித்தார் (மத்.22:37,38).** ஆனால், கட்டளைகளில் எல்லாம் பெரியதாகிய இந்தக் கட்டளைதான் மனிதர்களால் அதிகமாக வெறுப்படுகிறது; ஒரு சிலர் மட்டுமே இதை நிறைவேற்றுகிறார்கள். பெரும்பாலான மனிதர்கள் தங்கள் உறவினர்களையும், நண்பர்களையும், ஏன், மிருகங்களையும் கூட நேசிக்கிறார்கள். ஆனால் தங்கள் கடவுளை அவர்கள் நேசிப்பதில்லை. இவர்களைப் பற்றியே அர்ச். அருளப்பர், அவர்களிடம் உயிரில்லை, இவர்கள் செத்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்: **“சிநேகியாதவன் மரணத்தில் நிலை கொண்டிருக்கிறான்'' (1அரு. 3:14).** கடவுளின் மீது ஓர்

ஆன்மாவுக்குள்ள அன்பின் அளவைக் கொண்டே அதற்குரிய வெகுமதி அளவிடப்படுகிறது என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார்.

ஆகவே, கடவுளை நம் முழு இருதயத்தோடும் நேசிக்க வேண்டுமென்ற இந்தக் கட்டளை நமக்கு எவ்வளவு பிரியமானதாக இருக்க வேண்டும் என்பதைச் சிந்திப்போம். சேசுநாதரை விட அதிக மேன்மையுள்ளதும், அதியற்புதமானதும், அதிக வல்லமையுள்ளதும், அதிக வளமுள்ளதும், அதிக அழகுள்ளதும், அதிக தாராளமுள்ளதும், அதிக இரக்கமுள்ளதும், அதிக நன்றியுள்ளதும், அதிகம் நேசத்திற்குரியதும், அதிகம் அன்புள்ளதுமான வேறு யாரை, அல்லது எதை நாம் நேசிப்பதற்காகக் கடவுள் நமக்குத் தர முடியும்?

கடவுளை விட அதிக மேன்மையுள்ளவன் யார்? சிலர் ஐநூறு அல்லது ஆயிரம் வருட குடும்பப் பாரம்பரியத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறார்கள். ஆனால் நம் பிதாவாகிய சர்வேசுரனின் மேன்மை நித்தியமானது. அவர் அனைத்திற்கும் ஆண்டவராக இருக்கிறார். கடவுளுக்கு முன்பாக மோட்சத்திலுள்ள சகல சம்மனசுக்களும், பூமியிலுள்ள அனைத்து உயர்குடியினரும், ஒரு துளி நீரைப் போல, அல்லது ஒரு மணற்துகளைப் போல் இருக்கிறார்கள். “அவர் முன் சகல ஜனங்களும் ஏற்றச் சாலினின்று ஒழுகும் நீர்த் துளி போலவும், தராசில் ஒட்டியுள்ள தூசு போலவும் பாவிக்கப்படுகின்றனர். இதோ தீவுகள் எல்லாம் சிறு தூசுத் துகளாகக் காணப்படுகின்றன" (இசை. 40:15).

கடவுளை விட அதிக வல்லமையுள்ளவன் யார்? தாம் விரும்பும் எதையும் செய்ய அவரால் முடியும். தமது சித்தத்தின் ஒரு செயலைக் கொண்டு அவர் உலகைப் படைத்தார். மற்றொரு செயலைக் கொண்டு, தாம் விரும்பும்போது அதை அழிக்கவும் அவரால் முடியும்.

அவரை விட அதிக செல்வமுள்ளவன் யார்? அவர் பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள செல்வங்கள் அனைத்தையும் சொந்தமாகக் கொண்டிருக்கிறார்.

அவரை விட யார் அதிக அழகுள்ளவன்? கடவுளின் அழகுக்கு முன்பாக, சிருஷ்டிகளின் அழுழகுகள் மங்கி மறைந்து போகின்றன.

அவரை விட யார் அதிக தாராளமுள்ளவன்? நன்மைகளைப் பெற நமக்குள்ள ஆசையை விட, அவற்றை நமக்குத் தர அவர் அதிக ஆசை கொண்டிருக்கிறார் என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார்.

அவரை விட யார் அதிக இரக்கமுள்ளவன்? பூமியின் மீதுள்ள அனைவரிலும் அதிகக் கொடியவனும், பக்தியற்றவனுமாகிய ஒரு பாவி கடவுளுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தி, தனது பாவங்களுக்கு மனஸ்தாபப்படுகிறான் என்றால், கடவுள் உடனே அவனை மன்னித்து, அவனை அரவணைத்துக் கொள்கிறார்.

அவரை விட யார் அதிக நன்றியுள்ளவன்? அவர் பொருட்டு நாம் செய்யும் மிகச் சிறிய செயலுக்கும் கூட அவர் வெகுமதி தராமல் இருப்பதில்லை.

அவரை விட யார் அதிக நேசத்திற்குரியவன்? கடவுள் எவ்வளவு நேசத்திற்குரியவராக இருக்கிறார் என்றால், மோட்சத்தில் வெறுமனே அவரைப் பார்த்து, அவரை நேசிப்பதன் மூலமாக, புனிதர்கள் நித்தியத்திற்கும் தங்களைப் பூரண மகிழ்ச்சியும், திருப்தியும் கொள்ளச் செய்யும் ஒரு சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள். நரகவாசிகளின் வாதைகளில் எல்லாம் மிகப் பெரிய வாதை, இந்தக் கடவுள் எவ்வளவோ அதிக அன்புக்குரியவர், மனதிற்கு இனியவர் என்பதையும், அவரை இனி தங்களால் நேசிக்க இயலாது என்பதையும் அறிவதிலிருந்தே எழுகிறது.

ஓ அளவற்ற நன்மைத்தனமே! ஓ அளவற்ற நேசமே! என் இனிய நேசத்திற்குரிய சேசுவே, நான் என்னை மறந்து, உம்மை நேசிப்பதையும், மகிழ்விப்பதையும் தவிர வேறு எதைப் பற்றியும் நினைக்காதிருக்கும்படியாக, உமது அன்பால் என் இருதயத்தை நிரப்பும். இப்போது நான் என் சரீரத்தையும், என் ஆத்துமத்தையும், என் சித்தத்தையும், என் சுதந்திரத்தையும் உமக்கு அர்ப்பணிக்கிறேன். இப்போது வரை உம்மை மிகவும் மனநோகச் செய்யும் விதமாக நான் என்னையே திருப்திப்படுத்தத் தேடி வந்திருக்கிறேன். சிலுவையில் அறையுண்ட என் நேசரே, இதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். இனி என் தேவனும், என் சர்வமுமான உம்மைத் தவிர வேறு எதையும் நான் தேட மாட்டேன்.

II

மேலும் கடவுளை விட அதிக நேசமுள்ளவர் யார்? பழைய வேதப் பிரமாணத்தில், கடவுள் தங்களைக் கனிவோடு நேசிக்கிறாரா என்று மனிதர்கள் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால், நமக்காக அவர் சிலுவையின் மீது மரிப்பதைக் கண்ட பிறகு, மிகுந்த கனிவோடும், ஆசையோடும் அவர் நம்மை நேசிக்கிறார் என்பதில் நாம் எப்படி சந்தேகம் கொள்ள முடியும்? நாம் நம் கண்களை உயர்த்தி, சர்வேசுரனுடைய மெய்யான திருச்சுதனாகிய சேசுநாதர் ஒரு மரத்தில் ஆணிகளால் பிணைக்கப்பட்டிருப்பதை உற்று நோக்குவோம். அவர் நம் மீது கொண்டுள்ள அன்பின் தீவிரத்தை தியானிப்போம். அந்தச் சிலுவையும், அந்தத் திருக் காயங்களும், அவர் மெய்யாகவே நம்மை நேசிக்கிறார் என்று கூக்குரலிட்டு அறிக்கையிடுகின்றன என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். முப்பது ஆண்டுகளாகத் துயரம் நிறைந்த ஒரு வாழ்வு நடத்தியதையும், அதன்பின், தமது சொந்த திரு இரத்தத்தால் நம் பாவங்களைக் கழுவிப் போக்குமாறு, அவமானமுள்ள சிலுவை மரத்தின் மீது கடும் வாதைகளுக்கு மத்தியில் மரித்ததையும் விட அதிகமாக, நமக்குத் தமது பெரும் நேசத்தை எண்பிக்க அவர் வேறு என்னதான் செய்ய முடியும்? **"கிறீஸ்துநாதர் நம்மை நேசித்து, நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:2). "இவர் நம்மைச் சிநேகித்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களினின்று நம்மைக் கழுவினார்" (காட்சி.1:5).** "கடவுளை விசுவசிக்கிற ஒருவனுக்கு, அவரைத் தவிர வேறு எதையும் நேசிப்பது எப்படி சாத்தியமாகும்?" என்று **அர்ச். பிலிப் நேரியார்** கேட்கிறார். மனிதர்கள் மீது கடவுள் கொண்டுள்ள அன்பைத் தியானித்து, ஒரு நாள் **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள்** மணியடித்து, இவ்வளவு நேசத்திற்குரியவராகிய கடவுளை நேசிக்கும்படி பூமியின் மக்களினங்கள் அனைத்தையும் அழைக்கத் தான் விரும்பியதாகத் தெரிவித்தாள்! "நம் கடவுளுக்குத் தகுதியுள்ளபடி அவரை நேசிப்பதற்கு, நமக்கு ஓர் அளவற்ற அன்பு தேவைப்படும்; நாமோ, வீணான, இழிவான காரியங்களின் மீது

நமது அன்பை வீசியெறிகிறோம்'' என்று **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** அடிக்கடி கண்ணீரோடு கூறுவது வழக்கமாக இருந்தது.

ஐயோ, என் சேசுவே, எத்தனை தடவைகள் உமது நட்பை நான் உதறித் தள்ளி, உமது அளவற்ற மகத்துவத்தை அவமதித்து, சாத்தானுக்கு என்னை அடிமையாகக் கையளித் திருக்கிறேன்! எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வளவு கேவலமாக உம்மை அவமானப் படுத்தியதற்காக நான் துக்கப்படுகிறேன். ஆ என் தேவனே, என் சித்தம் உம்மை மகிழ்விப்பதைத் தவிர வேறு எதையும் விரும்பாதபடி, அதை உமது பரிசுத்த அன்பின் இனிய கயிறுகளைக் கொண்டு உமது திருப்பாதங்களோடு சேர்த்துக் கட்டியருளும். உம்முடைய திருச்சித்தத்தையே அடியேன் என் வாழ்வின் ஒரே வழிகாட்டியாகக் கொண்டிருப்பேனாக. நான் எல்லாவற்றையும் விட்டு விலகுகிறேன். நீர் மட்டுமே எனக்குப் போதுமானவராக இருக்கிறீர்.

ஏப்ரல் மாதத்தின் முதல் வெள்ளி

"பாறைப் பிளவுகள்''

I

ஓ, புனித "பாறைப் பிளவுகளில்,'' அதாவது சேசுவின் திருக் காயங்களில் எத்தகைய பாதுகாப்பான தஞ்ச ஸ்தலத்தை நாம் கொண்டிருக்கிறோம்! "மீட்பரின் காயங்கள் பாறைப் பிளவுகளாக இருக்கின்றன; இவற்றில் என் ஆத்துமம் தன் நம்பிக்கையை வைத்துள்ளது'' என்கிறார் **அர்ச். தமியான் இராயப்பர்.**

சேசுநாதரின் திருப்பாடுகளை தியானிப்பதை விட, தேவசிநேகத்தை நம்மில் மிக நிச்சயமாகத் தூண்டக் கூடிய வேறு வழி எதுவுமில்லை. சேசுநாதரின் திருக்காயங்கள், அன்பின் காயங்களாக இருப்பதால், அவை இருதயங்களை மிகக் கடுமையாகக் காயப்படுத்தும் அம்புகளாகவும், மிகக் குளிர்ந்திருக்கிற ஆத்துமங்களையும் கூட நேச அக்கினியால் பற்றியெரியச் செய்யும்

தீச்சுவாலைகளாகவும் இருக்கின்றன என்று **அர்ச். பொனவெந்தூர்** சொல்கிறார்: “ஓ, கல்லான இருதயங்களைக் காயப்படுத்துபவையும், குளிரால் உறைந்து போன மனங்களைப் பற்றியெரியச் செய்பவையுமான திருக்காயங்களே!" ஆண்டவரை விசுவசித்து, அவரது திருப்பாடுகளைத் தியானிக்கிற ஓர் ஆத்துமம் அவரை நோகச் செய்வதும், அவரை நேசிக்காமல் இருபபதும் சாத்தியமேயில்லை. இன்னும் மேலாக, நம்மீது கொண்ட நேசத்தால் பைத்தியக்காரர் போல் ஆகிவிட்ட ஒரு கடவுளைக் கண்டு அது ஒரு பரிசுத்த நேசப் பைத்தியமாகாமல் இருக்க சாத்தியமேயில்லை. “அளவுக்கு அதிகமான அன்பினால் கவரப்பட்ட தேவ ஞானத்தை நாம் கண்டிருக்கிறோம்" என்று **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** கூறுகிறார். இதன் காரணமாகவே, சிலுவையில் அறையுண்ட சேசுநாதரின் திருப்பாடுகள் போதிக்கப்படுவதைப் புறவினத்தார் கேட்டபோது, அதை அவர்கள் மடமை என்று நினைத்தார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்: **“நாங்களோ சிலுவையில் அறையுண்ட கிறீஸ்துநாதரைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதர்களுக்கு இடறலும், அஞ்ஞானிகளுக்குப் பைத்தியமுமாய் இருக்கிறார்" (1கொரி.1:23).** எங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டவரைப் போல, சர்வ வல்லவரும், பூரண மகிழ்ச்சியுள்ளவருமாகிய ஒரு சர்வேசுரன் தமது சிருஷ்டிகளுக்காக மரிக்க சித்தம் கொண்டிருப்பது எப்படி சாத்தியம் என்று அவர்கள் கேட்டார்கள்.

ஆ, என் சேசுவே, உம் திருச்சரீரத்தின் வெளிப்புறத்தை நான் உற்று நோக்கினால், காயங்களையும், இரத்தத்தையும் மட்டுமே நான் காண்கிறேன். உமது திரு இருதயத்தினுள் நான் உற்று நோக்கினால், நீர் மரண அவஸ்தைகளை அனுபவிக்கச் செய்யும் கசப்பையும், வேதனையையும் தவிர வேறு ஒன்றையும் நான் காணவில்லை. ஆ, மனிதர் மீதுள்ள நேசத்தால் ஈர்க்கப்பட்டவரான தேவனே, இவ்வளவு மேலான நன்மைத்தனத்தையும், இவ்வளவு மேலான ஒரு நேசத்தையும் மனிதர்கள் இவ்வளவு மோசமாக அசட்டை செய்வது எப்படி சாத்தியமாகிறது? நேசம் நேசத்தால் ஈடுசெய்யப்படுகிறது என்று வழக்கமாகச் சொல்லப்படுகிறது; ஆனால் உமது அன்பு-- எந்த வகையான அன்பைக் கொண்டு அதற்கு நாங்கள் ஈடு செய்ய

முடியும்? எங்களுக்காக மரிப்பதில் நீர் எங்கள் மீது கொண்டிருந்த அன்பிற்கு ஈடு செய்ய, உமக்காக மரிக்கும் ஒரு கடவுள் எங்களுக்கு அவசியம்! ஓ சேசுநாதரின் திருச்சிலுவையே, ஓ சேசுநாதரின் திருக் காயங்களே, ஓ அவருடைய திருமரணமே! என் நேச சேசுவை நேசிக்கும்படியாக நீங்கள் என்னை அவரோடு இறுக்கமாகக் கட்டுகிறீர்கள்!

II

இதோ, உன் இரட்சகர் மரிப்பதையும், அவரது இறுதி மூச்சு, **"எல்லாம் முடிந்தது!" (அரு.19:30)** என்று சொல்வதையும் பார். "மனிதர்களே, உங்கள் மீட்பிற்காக எல்லாம் செய்து முடிக்கப்பட்டு விட்டது. நீங்கள் என்னை நேசிக்கும்படி செய்ய இதற்கு மேல் என்னால் எதையும் செய்ய முடியாது என்பதால், என்னை நேசியுங்கள்" என்று அவர் சொன்னது போலாயிற்று. என் ஆத்துமமே, நீ உன் கண்களை உயர்த்தி, இப்போது மரிக்கும் தருவாயிலிருக்கிற உன் சேசுவைப் பார். மங்கிக் கொண்டிருக்கும் அந்தத் திருவிழிகளையும், வெளிறிக்கொண்டிருக்கும் அந்தத் திருமுகத்தையும், மிகப் பலவீனமாகத் துடித்துக் கொண்டிருக்கும் அந்த இருதயத்தையும், இப்போது மரணத்திற்குத் தன்னைக் கையளித்துக் கொண்டிருக்கும் அந்தத் திருச்சரீரத்தையும் பார். அந்தத் திருச் சரீரத்தை விட்டுப் பிரியும் நிலையில் இருக்கும் அந்த அழகிய ஆத்துமத்தைப் பார். வானங்கள் இருண்டு போகின்றன, பூமி நடுங்குகிறது, கல்லறைகள் திறக்கின்றன. இவை உலகத்தைப் படைத்தவர் மரிக்கப் போகிறார் என்பதற்கான அடையாளங்களாக இருக்கின்றன. இதோ, இறுதியாக, சேசுநாதர் தமது பிதாவிடம் தமது ஆசீர்வதிக்கப்பட்ட ஆத்துமத்தை ஒப்படைத்தபின், தமது உயிரைக் கையளிப்பதன் அடையாளமாக அவர் தம் தலைகுனிகிறார். இந்தக் கணத்தில் தமது இந்த ஒப்புக்கொடுத்தலை நம் இரட்சணியத்திற்காக புதுப்பிக்கிறார். நீண்ட நேரமாகத் தமது துயரத்தின் வன்முறைக்கு உட்பட்டிருந்தபின், அவர் மரணமடைந்து, தமது ஆத்துமத்தைத் தமது நேசப் பிதாவின் திருக்கரங்களில் ஒப்படைக்கிறர்.

என் ஆத்துமமே, இந்தப் பரிசுத்த சிலுவையை அணுகி வா. மரித்த உன் இரட்சகரின் திருப்பாதங்களை அணைத்துக் கொண்டு, உன் மீது வைத்த அன்பினாலேயே அவர் மரித்திருக்கிறார் என்பதைத் தியானி. ஆ என் சேசுவே, என் மீது நீர் கொண்ட பாசம் எந்த அளவுக்கு உம்மைத் தாழ்த்தி விட்டது! என்னை விட அதிகமாக வேறு யார் உமது மரணத்தின் கனிகளைச் சுவைத்திருக்க முடியும்? இன்று முதல், வேறு யாரையுமன்றி, உம்மை மட்டுமே நான் நேசிக்கும்படியாக, ஒரு சர்வேசுரன் எனக்காக மரிக்கும் அளவுக்கு, அவர் என் மீது கொண்டிருந்திருக்க வேண்டிய அன்பின் தன்மையை நான் புரிந்துகொள்ளச் செய்யுமாறு உம்மை மன்றாடுகிறேன். ஓ அனைத்திலும் மேலான நன்மையே, நான் உம்மை நேசிக்கிறேன்; ஓ என் ஆன்மாவின் மெய்யான நேசரே, உமது திருக்கரங்களில் அதை நான் இப்போது ஒப்புக்கொடுக்கிறேன். என் முழு நேசத்திற்கும் தகுதியுள்ள ஒரே ஒருவரான உம்மை மட்டுமே நான் நேசிக்கும் படியாக, உமது திருமரணத்தின் பேறுபலன்களைப் பார்த்து, உலக நேசங்கள் அனைத்திற்கும் நான் மரிக்கும்படி செய்ய உம்மை மன்றாடுகிறேன். மரியாயே, என் நம்பிக்கையே, எனக்காக சேசுவிடம் மன்றாடுங்கள். சேசுவே, எங்கள் நேசமே, வாழ்க! மரியாயே எங்கள் நம்பிக்கையே, வாழ்க!

“ஓ குத்தித் துளைக்கப்பட்ட திரு இருதயமே,
ஓ எனக்காக இப்போது சிலுவையில் அறையுண்ட அன்பே!
உமது காயப்பட்ட திருவிலாவுக்குள்
என் ஆத்துமத்திற்கு இளைப்பாற்றி தாரும்!"

சனி

கடவுளின்மீது மரியாயின் மாசற்ற இருதயம் கொண்டுள்ள அன்பு

I

"எங்கே அனைத்திலும் மேலான மாசற்றதனம் உள்ளதோ, அங்கே அனைத்திலும் மேலான தேவசிநேகமும் இருக்கிறது" என்று **அர்ச். ஆன்செல்ம்** கூறுகிறார். ஓர் ஆத்துமம் எந்த அளவுக்கு மாசற்றதாகவும், தன்னையே வெறுமையாக்கியும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு, கடவுள் மீது அதற்குள்ள அன்பின் முழுமை பெரிதாய் இருக்கும். மகா பரிசுத்த மாமரி, முற்றிலும் தாழ்ச்சியால் நிறைந்திருந்தார்கள். தான் என்ற சுயம் அவர்களிடம் அணுவளவும் இல்லாதிருந்தது. எனவே அவர்கள் எந்த அளவுக்கு தேவசிநேகத்தால் நிரப்பப்பட்டிருந்தார்கள் என்றால், "கடவுள் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பு சகல மனிதர்கள் மற்றும் தேவதூதர்களின் அன்பையும் விஞ்சியதாக இருந்தது" என்று **அர்ச். பெர்னார்தீன்** எழுதுகிறார். இதனாலேயே **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** சரியான காரணத்தோடு தேவ அன்னையை, "நேசத்தின் இராக்கினி" என்று அழைக்கிறார்.

மனிதர்கள் தங்கள் முழு இருதயத்தோடு தம்மை நேசிக்க வேண்டும் என்ற கட்டளையைக் கடவுள் மெய்யாகவே மனிதர்களுக்குத் தந்திருக்கிறார்: **"உன் தேவனாகிய ஆண்டவரை உன முழு இருதயத்தோடு... நேசிப்பாயாக" (மத்.22:37).** ஆனால், **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** அறிக்கையிடுவது போல, "இந்தக் கட்டளை பூமியில் அல்ல, மோட்சத்தில்தான் முழுமையாகவும், உத்தமமான விதத்திலும் மனிதர்களால் நிறைவேற்றப்படும், பூமியில் அது குறைவுள்ள விதத்திலேயே நிறைவேற்றப்படுகிறது." ஒரு குறிப்பிட்ட விதத்தில் பார்க்கும்போது, உத்தமமான விதத்தில் ஒருபோதும் நிறைவேற்றப்பட இயலாத ஒரு கட்டளையைக் கடவுள் தந்திருப்பது பொருத்தமற்றதாகவே இருந்திருக்கும் என்று இதைப் பற்றிப் பேசும்போது **அர்ச். பெரிய ஆல்பர்ட்** கூறுகிறார். ஆனால் தேவமாதா இதை உத்தமமான விதத்தில் நிறைவேற்றி யிராவிட்டால், மேற்கூறியதுதான் உண்மையாயிருந்திருக்கும். "யாராவது ஒருவர் இந்தக் கட்டளையை நிறைவேற்றிய் இருக்கலாம், அல்லது யாருமே நிறைவேற்றாமல் இருந்திருக்கலாம்; அப்படி யாராவது ஒருவர் அதை நிறைவேற்றியிருந்தால், அது மகா பரிசுத்த கன்னிகையால் மட்டுமே முடிந்திருக்கும்" என்று இந்தப் புனிதர் கூறுகிறார். "நம்

எம்மானுவேலின் திருத்தாயார் புண்ணியங்களை அவற்றின் மிக உச்சமான முழுமையில் அனுசரித்தார்கள். “உன் தேவனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடு நேசிப்பாயாக" என்ற முதலாம் கட்டளையை அவர்கள் அனுசரித்தது போல வேறு யார் அனுசரித்திருக்க முடியும்? அவர்களில் தேவசிநேகம் எவ்வளவு தீவிரமுள்ளதாக இருந்தது என்றால், எந்த விதமான, மிக அற்பமான குறைபாடும் கூட அவர்களை அணுகிய் இருக்கவே முடியாது" என் அவர் கூறுகிறார். “தேவசிநேகம் மாமரியின் ஆத்துமத்தை எந்த அளவுக்கு ஊடுருவி அதை நிரப்பியிருந்தது என்றால், அவர்களின் எந்தப் பாகமும் அதனால் தொடப்படாமல் விடப்படவில்லை. இதன் காரணமாக, அவர்கள் தன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமத்தோடும், முழு பலத்தோடும், வரப்பிரசாத முழுமையிலும் கடவுளை நேசித்தார்கள்" என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். ஆகவே, **“என் நேசர் தம்மை முழுவதும் எனக்குத் தந்திருக்கிறார், நானும் என்னை முழுவதும் அவருக்குத் தந்திருக்கிறேன்: - என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" (உந்.சங்.2:16)** என்று மாமரி மட்டுமே கூற முடியும். “ஆ, கடவுளை நேசிப்பது என்று கற்றுக்கொள்ளும்படி, பக்திச்சுவாலகர்களும் கூட பரலோகத்தில் இருந்து மாமரியின் இருதயத்திடம்தான் வந்திருக்க வேண்டும்!" என்கிறார் ரிச்சர்ட் என்பவர்.

ஓ மரியாயே, என் தாயாரே, நீங்கள் சேசு நேசிக்கப்படுவதைக் காண்பதைத் தவிர வேறு எதிலும் ஆசை கொள்வதில்லை; மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக இந்த வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள். உலகப் பொருட்களையோ, பட்டம் பதவிகளையோ, செல்வங்களையோ நான் கேட்கவில்லை. உமது நேச இருதயம் எனக்காக, மற்ற எதையும் விட அதிகமாக எதை ஆசிக்கிறதோ, அதையே நானும் கேட்கிறேன். என் கடவுளை நேசிக்க நான் விரும்புகிறேன்.

II

அன்பாகவே இருக்கிற கடவுள் அனைவரின் இருதயங்களிலும் தமது தேவசிநேகத்தின் தீச்சுவாலையைத் தூண்டுவதற்காக உலகிற்கு வந்தார். ஆனால் தமது திருத்தாயாரின் இருதயத்தில் அதைத் தூண்டிய அளவுக்கு அவர் வேறு எந்த இருதயத்திலும் அதைத் தூண்டவில்லை. ஏனெனில் அவர்களுடைய இருதயம் எல்லா உலக நாட்டங்களிலிருந்தும் விடுபட்டு மாசற்றதாக இருந்தது; இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தீச்சுவாலையால் சுட்டெரிக்கப்பட அது முழு ஆயத்தத்தோடு இருந்தது. இவ்வாறு, "தேவசிநேகம் அவர்களிடம் எவ்வளவாகப் பற்றியெரிந்தது என்றால், இவ்வுலகைச் சார்ந்த எதுவும் அவர்களது நாட்டங்களில் நுழைந்திருக்கவே முடியாது" என்று **அர்ச். சோஃப்ரோனியுஸ்** கூறுகிறார். மாமரி அவரது பரலோக நெருப்பால் எப்போதும் பற்றியெரிந்து கொண்டிருந்தார்கள். ஒரு விதத்தில், அதை நிறைவாகப் பருகி, போதை கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக, உந்நத சங்கீதத்தில் அவர்களைப் பற்றி, "அங்கிருக்கிற விளக்குகள் அக்கினித் தழலும், அதன் சுவாலை கடுஞ்சுவாலையுமாய் இருக்கிறது" (உந்.சங்.8:6) என்று நாம் வாசிக்கிறோம். **அர்ச். ஆன்செல்ம்** விளக்குகிறபடி, அது அன்பின் வழியாக மாமரியினுள் பற்றியெரியும் தீச்சுவாலை; வெளியில் பிரகாசித்து எரிகிற தீச்சுவாலைகள், புண்ணியத்தை அனுசரிப்பதில் மாமரி அனைவருக்கும் தந்த முன்மாதிரிகை; ஆகவே, மாமரி இவ்வுலகில் இருந்தபோது, அவர்கள் தன் கரங்களில் சேசுவைத் தாங்கியிருந்தபோது, அவர்கள் "நெருப்பைச் சுமந்திருக்கும் நெருப்பு" என்று அழைக்கப்படத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆம், ஏனெனில், "நெருப்பு இரும்பில் செயல்படுவது போல, பரிசுத்த ஆவியானவர் அன்பைக் கொண்டு மாமரியை உஷ்ணப்படுத்தி, பற்றியெரியச் செய்து, உருக்கினார்; இவ்வாறு பரிசுத்த ஆவியானவரின் தீச்சுவாலை காணப்பட்டது, வேறு எதுவுமன்றி, தேவசிநேகத்தின் நெருப்பு மட்டுமே உணரப்பட்டது" என்று **அர்ச். இல்டஃபோன்ஸ்** கூறினார். வெந்து போகாமல் எரிவதாக மோயீசன் கண்ட முட்செடி, மரியாயின் திரு இருதயத்தின் நிஜமான அடையாளம் என்று அர்ச். வில்லனோவா தோமையார் கூறுகிறார். எனவே, சரியான காரணத்தோடுதான் அர்ச். அருளப்பர் மாமரியை சூரியனை அணிந்தவர்களாகக் கண்டார் என்று அர்ச். பெர்னார்ட்

கூறுகிறார்: **“அன்றியும் வானத்திலே ஒரு பெரிய அடையாளம் காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள்'' (காட்சி.12:1).** அர்ச். பெர்னார்ட் தொடர்ந்து, “ஏனெனில், மாமரி எந்த அளவுக்கு அன்பினால் கடவுளோடு ஐக்கியப் பட்டிருந்தார்கள், எந்த அளவுக்கு ஆழமாக தேவ ஞானத்தின் பாதாளத்தால் ஊடுருவப் பட்டிருந்தார்கள் என்றால், கடவுளோடு தனிப்பட்ட, சுய ஐக்கியம் இல்லாமல், அவரோடு ஒரு சிருஷ்டி நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்பது இயலாத காரியமாகவே தோன்றும்'' என்று கூறுகிறார்.

ஓ மிகுந்த அழகுள்ள மரியாயே, ஓ மிகுந்த நேசத்திற்குரிய அன்னையே, நீங்கள் கடவுளின் திரு இருதயத்தையே சொந்தமாக்கிக் கொண்டீர்கள்! என் இருதயத்தையும் எடுத்துக் கொண்டு, என்னை ஒரு புனிதனாக ஆக்குங்கள். நான் உங்களை நேசிக்கிறேன். உங்களில்தான் என் நம்பிக்கை இருக்கிறது. அனைவரிலும் அதிகம் நேசிக்கப்படத் தக்கவராகிய மாதாவே, எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

தாழ்நிலை ஞாயிறு

(உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு)

“நம் விசுவாசமே உலகத்தை மேற்கொள்ளும் வெற்றியாக இருக்கிறது.''

I

உலகத்தின் வீண்பெருமையும், உலகம் உயர்வாக மதிக்கிற சகல காரியங்களின் ஒன்றுமில்லாமையும் வெறும் பொய்மையும் வஞ்சகமுமாகவே இருக்கின்றன என்ற எண்ணம், பல ஆன்மாக்கள் கடவுளுக்குத் தங்களை முழுமையாகக் கையளிக்கச் செய்தது. “மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமம் சேதப்பட்டால், அவனுக்கு வரும் பயன் என்ன?'' (மத்.16:26). எத்தனை இளம் பருவத்தினர் சுவிசேஷத்தின் இந்த மேலான போதனையின் காரணமாக, கடவுளை

மட்டுமே தியானித்து, அவரை மட்டுமே நேசிக்கும்படியாக, தங்கள் உறவினர்களையும், நாட்டையும், உடைமைகளையும், பட்டம் பதவிகளையும், அரச மகுடங்களையுமே கூடத் துறந்து, அடைபட்ட மடங்களில், அல்லது வனாந்தரங்களில் தங்களை அடைத்துக் கொண்டார்கள்! மரண நாள் அழிவின் நாள் என்று வேதாகமத்தால் அழைக்கப்படுகிறது: **"அவர்களுடைய அழிவு நாள் இதோ சமீபித்திருக்கிறது" (உபா.32:35).** பூமியின் மீது நாம் சம்பாதித்த உடைமைகள் அனைத்தையும் நம் மரண நாளில் நாம் விட்டுச் செல்ல வேண்டும் என்பதால், அது அழிவின் நாளாக இருக்கிறது. ஆகவேதான் **அர்ச். அம்புரோஸ்** ஞானத்தோடு, "இந்த உடைமைகளை நம் நல்ல பொருட்கள் என்று நாம் தவறாக அழைக்கிறோம். ஏனெனில் இவற்றை நாம் என்றென்றும் வாழ இருக்கும் மறு உலகிற்குத் தூக்கிச் செல்ல நம்மால் முடியாது. நம் பரிசுத்த செயல்கள் மட்டுமே நம்முடன் வருகின்றன. அவை மட்டுமே நித்தியத்தில் நம்மைத் தேற்ற முடியும்" என்கிறார்.

உலக செல்வங்கள், அனைத்திலும் உயர்ந்த பெரும் பதவிகள், பொன், வெள்ளி, மிக விலையேறப்பெற்ற ஆபரணங்கள் ஆகிய அனைத்தும், மரணப் படுக்கையில் இருந்து சிந்திக்கப்படும்போது, அவை தங்கள் மகத்துவத்தை இழந்து விடுகின்றன. மரணத்தின் இருண்ட நிழல் செங்கோல்களையும், அரச மகுடங்களையும் கூட திரையிட்டு மறைக்கிறது, உலகத்தால் மதிக்கப்படுவது எதுவாயினும், அது வெறும் புகையும், தூசியும், வீணும், நிர்ப்பாக்கியமுமே என்று நாம் காணச் செய்கிறது. உண்மையில், மரண சமயத்தில், மரித்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு, அவனது மரணத்திற்குப் பின் அவன் அழுகிப் போகும்படி வைத்து மண்ணால் மூடப்படுகிற ஒரு மரப் பெட்டியைத் தவிர வேறு ஒன்றும் சொந்தமில்லை என்றால், அவன் சம்பாதித்த செல்வங்களால் அவனுக்கு என்ன பயன்? முன்பு மிக அழகாயிருந்த உடலில், இப்போது கெட்டுப் போன கொஞ்சம் தூசியும், தசையற்ற கை கால்களும் மட்டுமே இருக்கும் என்றால், அது அழகாயிருந்ததால் இப்போது என்ன பயன்?

பூமியின் மீது மனிதனின் ஜீவியம்தான் என்ன? அர்ச். யாகப்பர் விளக்குகிறபடி அதைப் பார்: **"மெய்யாகவே உங்கள் ஜீவியம்**

எப்படிப்பட்டது? கொஞ்ச நேரம் தோன்றி, பின்பு ஒழிந்து போகும் புகைதான் அல்லவோ?'' (யாக.4:15). இன்று இந்தப் பெரிய மனிதன் மதிக்கப்படுகிறான், அஞ்சப்படுகிறான், போற்றப்படுகிறான். நாளை அவன் நிந்திக்கப்படுவான், இழிவுபடுத்தப் படுவான், துர்ப்பிரயோகம் செய்யப்படுவான். **"தீயவன் வெகுவாய்ப் பெருமையடைந்து லீபானின் கேதுரு மரத்துக்கு ஒப்பாக உயர்த்தப்பட்டதைக் கண்டேன். நான் கடந்து போவதற்குள் அவன் ஒழிந்து போனான்'' (சங்.36:35,36).** தனது அழகிய வீட்டில், அவன் கட்டிய இந்தப் பெரும் அரண்மனையில் அவனை இப்போது காணவில்லை. அவன் எங்கே இருக்கிறான்? தன் கல்லறையில் தூசியாக ஆகி இருக்கிறான்!

"அவன் கையில் வஞ்சகத் தராசு இருக்கிறது'' (ஓசே.12:7). இவ்வார்த்தைகளின் மூலம் உலகத்தால் ஏமாற்றப்படாமல் இருக்க பரிசுத்த ஆவியானவர் நம்மை எச்சரிக்கிறார். ஏனெனில் உலகம் தனது பொருட்களை ஒரு கள்ளத் தராசு கொண்டு எடைபோடுகிறது. விசுவாசத்தின் உண்மையான தராசில் நாம் அவற்றை எடைபோட வேண்டும். ஒருபோதும் முடியாத உண்மையான பொருட்களை அது நமக்குக் காட்டும். மரணத்தோடு முடிந்து போகும் எதையும் நாம் ஒருபோதும் பொருட்படுத்தவே கூடாது என்று அர்ச். தெரேசம்மாள் கூறுகிறாள். சர்வேசுரா, முன்பு அரசு அமைச்சர்களாகவும், படைத் தளபதிகளாகவும், அரசர்களாகவும், உரோமைப் பேரரசர்களாகவும் இருந்தவர்கள் இப்போது காட்சி மாறி, நித்தியத்தில் தாங்கள் இருக்கக் காணும்போது, அவர்களிடம் என்ன மேன்மை இன்னும் எஞ்சிய் இருக்கிறது! **"அவர்களுடைய கீர்த்தி ஓர் அமளியோடு அழிந்து போயிற்று'' (சங்.9:7).** அவர்கள் உலகத்தில் பிரசித்தி பெற்றிருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள் எங்கும் ஒலித்தன. ஆனால் அவர்கள் இறந்த பின், அவர்களது பதவி, பெயர் மற்றும் அனைத்துமே மாறிப் போயிற்று. பல பெரிய மனிதர்களும், சீமாட்டிகளும் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் ஒரு கல்லறையின் மீது எழுதப்பட்டிருக்கும் ஒரு வாசகத்தை இங்கு நாம் கவனிப்பது பயனுள்ளதாக இருக்கும்: "எல்லா மேன்மையும், எல்லா உலக ஆடம்பரமும், எல்லா அழகும் முடிந்து போகும் இடத்தைப் பார்.

புழுக்களும், தூசும், மதிப்பற்ற ஒரு கல்லும், கொஞ்சம் மணலும், அனைத்திற்கும் இறுதியில் அந்தக் குறுகிய காட்சியை முடித்து வைக்கின்றன!"

ஓ ஆண்டவரே, உலகின் வெறுமைக்குப் பின்னால் இவ்வளவு அதிகமாக ஓடி, இராஜரீக நன்மையாகிய உம்மை விட்டுப் பிரிந்திருந்ததில் நான் எவ்வளவு ஈனமுள்ளவனாக இருந் திருக்கிறேன்!

II

"இவ்வுலகத்தின் கோலம் மாயமாய்ப் போகிறது" (1கொரி.7:31). நம் வாழ்வு வேகமாகக் கடந்து போய் முடிகிற ஒரு காட்சி மட்டுமே. உயர்குடியினரும், சாமானியரும், அரசர்களும், குடிகளும், செல்வந்தவர்களும், ஏழைகளுமான அனைவரின் வாழ்வும் ஒரு நாள் முடிந்து போகிறது. இதில், கடவுளுக்கு முன்பாகத் தன் பாத்திரத்தை நல்ல முறையில் நடித்து முடித்தவன் பேறுபெற்றவன். ஸ்பெயின் அரசரான மூன்றாம் பிலிப் தமது 42ம் வயதில் இறந்தார்; தாம் சாவதற்கு முன் அவர் தம் அருகில் நின்றவர்களிடம்: "நான் இறந்தவுடன், இப்போது நீங்கள் காணும் காட்சியை மக்களுக்கு அறிவியுங்கள்; ஓர் அரசனாய் இருந்திருப்பது, மரணத்தில், தான் இரு வரை அரசாண்டது பற்றிய வேதனையை உணரச் செய்வதற்கு மட்டுமே பயன்படுகிறது என்று அறிவியுங்கள்" என்றார். அதன்பின் அவர், "ஓ, நான் இவ்வளவு காலமும் ஒரு வனாந்தரத்தில் இருந்து, ஒரு புனிதனாகியிருந்தால், இப்போது சேசுநாதரின் நீதியாசனத்திற்கு முன்பாக அதிக நம்பிக்கையோடு தோன்றுவேனே!" என்று சொல்லிப் புலம்பினார்.

பேரரசி இசபெல்லாவின் பிணத்தின் காட்சி அர்ச். பிரான்சிஸ் போர்ஜியாவின் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தை நாம் அறிவோம். அவள் உயிரோடு இருந்தபோது, மிகச் சிறந்த அழகியாயிருந்தாள். ஆனால் மரணத்திற்குப் பிறகு, தன்னைக் கண்டவர்கள் அனைவருக்கும் அவள் கடும் அச்சத்தை வருவித்தாள். அவளது பிணத்தைக் கண்டதும் போர்ஜியா அதிசயித்தபடி: "இவ்வுலகின்

நற்காரியங்களின் முடிவு இதுதானா!" என்றார். அதன்பின் அவர் தம்மை முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பணித்தார். ஓ, மரணம் வருமுன் நாம் அனைவரும் அவரைக் கண்டுபாவிக்க முடிந்தால் எவ்வளவு நல்லது! ஆயினும் நாம் இதில் அவசரப்படுவது அவசியம். ஏனெனில் மரணம் நம்மை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கிறது. அது எப்போது வந்து சேரும் என்று நமக்குத் தெரியாது. நம் கரங்களில் மரணத்தின் மெழுகுவர்த்தியை நாம் பிடித்திருக்கும் போது, கடவுள் நமக்குத் தரும் ஒளி, நம் மனவுறுத்தலை அதிகரிப்பதற்கே தவிர வேறு ஒன்றுக்கும் உதவாது. ஆகவே, மரண நேரத்தில் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதால், அப்போது நாம் எதையெல்லாம் செய்து முடித்திருக்க வேண்டும் என்று விரும்புவோமோ, அதையெல்லாம் இப்போதே செய்யப் பிரதிக்கினை செய்வோமாக.

இல்லை, என் தேவனே, இது வரை என்னைப் பொறுத்துக் கொண்டது போதாது; நான் என்னை முழுமையாக உமக்கு அர்ப்பணிப்பதைக் காண நீர் இனியும் காத்திருப்பதை நான் விரும்பவில்லை. இந்த உலகை விட்டு விலகி, என்னை முழுவதும் உமது அன்புக்குக் கையளிக்கும்படி நீர் என்னைப் பல முறை எச்சரித்திருக்கிறீர். இப்போது உம்மிடம் திரும்புமாறு நீர் என்னை அழைக்கிறீர்; இதோ நான் வருகிறேன். உமது கரங்களில் என்னை ஏற்றுக் கொள்ளும். நான் என்னை முழுமையாக உமக்கு அர்ப்பணிக்கிறேன். ஓ, எனக்காகச் சிலுவையில் பலியான மாசற்ற செம்மறிப்புருவையே, உமது திரு இரத்தத்தால் முதலில் என்னைக் கழுவி, என்னிடமிருந்து நீர் பெற்றுக்கொண்ட எல்லாக் காயங்களையும் மன்னித்தருளும். அதன்பின் உமது பரிசுத்த அன்பால் நான் பற்றியெரியச் செய்தருளும். எல்லாவற்றிற்கும் மேலாக நான் உம்மை நேசிக்கிறேன். என் முழு இருதயத்தோடு நான் உம்மை நேசிக்கிறேன். உம்மை விட என் அன்புக்கு அதிகத் தகுதியானதும், என்னை அதிகமாக நேசித்துள்ளதுமான எதை இவ்வுலகில் நான் காணப் போகிறேன்? ஓ மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, எனக்காகப் பரிந்துபேசுபவர்களே, எனக்காக ஜெபியுங்கள்; ஓர்

உண்மையான, நீடித்த வாழ்க்கை மாற்றத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள். உங்களில் நான் என் நம்பிக்கையை வைக்கிறேன்.

திங்கள்

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (1)

I

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனத்திற்கு மூன்று காரியங்கள் அவசியம் என்று நம் அனைவருக்கும் தெரியும். அவை: ஆத்தும சோதனை, பாவத்திற்கு மனஸ்தாபம் மற்றும் இனி பாவம் செய்வதில்லை என்ற உறுதியான பிரதிக்கினை.

ஆத்தும சோதனையைப் பொறுத்த வரை, அடிக்கடி தேவத் திரவிய அனுமானங்களைப் பெறுபவர்களுக்கு, அற்பப் பாவங்களின் மிகச் சிறிய சூழ்நிலைகள் அனைத்தையும் கண்டு பிடிக்கும்படி மிகக் கடுமையாக முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. அத்தகையவர்கள் தங்கள் பற்றுகள் மற்றும் வெதுவெதுப்பு ஆகியவற்றின் காரணங்களையும், அவற்றின் வேர்களையும் கண்டுபிடிப்பதில் கவனமாக இருப்பதைக் காண்பதையே நான் விரும்புவேன். வேறு சிலர் இருக்கிறார்கள்; இவர்கள் அதே கதையைத் திரும்பவும் சொல்வார்கள், அதே பாவங்களை எந்த மனஸ்தாபமும், மனந்திரும்புவது பற்றிய எந்த எண்ணமும் இன்றி சொல்வார்கள்.

அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்பவர்களும், வேண்டுமென்று செய்யும் அற்பப் பாவங்களுக்கு எதிராகத் தங்களைக் காத்துக் கொள்பவர்களுமான ஞானத் தன்மையுள்ள ஆன்மாக்கள் ஆத்தும சோதனைக்கு நீண்ட நேரம் செலவிட அவசியமில்லை. கனமான பாவங்களைப் பொறுத்த வரை, அவர்கள் தங்கள் மனசாட்சியைக் கசக்கிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் ஏதாவது சாவான பாவம் செய்திருந்தால், ஆத்தும சோதனை இன்றியே அவர்கள அதை அறிந்திருப்பார்கள். அற்பப் பாவங்களைப் பொறுத்த வரை, அவை வேண்டுமென்று செய்யப்பட்டவையாக

இருந்தால், அவை விளைவிக்கும் மனவுறுத்தலின் காரணமாக, அவையே தங்களை அந்த ஆத்துமங்களுக்கு வெளிப்படுத்தி விடும். மேலும், நம் அற்ப மீறுதல்கள் அனைத்தையும் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லும் கடமையும் நமக்கு இல்லை. இதன் விளைவாக, அவற்றைக் கண்டிப்பான முறையில் தேட வேண்டிய கடமை நமக்கில்லை. அவற்றின் எண்ணிக்கையையும், சூழ்நிலையையும், அவை செய்யப்பட்ட விதம், அல்லது அவற்றின் காரணம் ஆகியவற்றையும் சொல்ல வேண்டிய அவசியம் அதை விடக் குறைவு. அதிகக் கனமானவையும், உத்தமதனத்திற்கு மிக எதிரானவையுமான பாவங்களைச் சொல்வதும், மற்றவற்றைப் பொதுவான வார்த்தைகளில் சொல்வதும் போதுமானது. பாவசங்கீர்த்தனம் செய்ய உன்னிடம் எந்தப் பாவமும் இல்லை என்று நீ உணர்ந்தால், கடந்த காலத்தில் நீ செய்தவையும், உனக்கு அதிக மனஸ்தாபத்தை வருவித்தவையுமான பாவங்களைச் சொல். உதாரணமாக: பிறர்சிநேகத்திற்கும், பரிசுத்ததனத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் எதிராக கடந்த காலத்தில் நான் செய்த எல்லாப் பாவங்களைப் பற்றியும் விசேஷமான முறையில் என்னை நான் குற்றஞ்சாட்டிக் கொள்கிறேன் என்று சொல். இக்காரியத்தில் அர்ச். பிரான்சிஸ் சலேசியாரின் கோட்பாடு நமக்கு எவ்வளவு ஆறுதல் தருவதாக இருக்கிறது: "பாவசங்கீர்த்தனத்தில் உன் சிறிய பாவங்கள் அனைத்தையும் உன்னால் நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை என்றால், அதற்காகக் கலக்கமடையாதே. ஏனெனில் நீ அடிக்கடி உன்னையும் அறியாமல் இந்தச் சிறிய பாவங்களில் விழுகிறாய். ஆகவே, அடிக்கடி உன்னையும் அறியாமல் இந்தப் பாவங்களில் இருந்து நீ எழுந்தும் விடுகிறாய்" என்று அவர் சொல்கிறார். அதாவது, அன்புச் செயல்களாலும், பக்தியுள்ள ஆன்மாக்கள் வழக்கமாகச் செய்கிற மற்ற நற்செயல்களாலும் நீ அந்தப் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறாய்.

II

இரண்டாவதாக, மனஸ்தாபம் அவசியம்; இதுவே பாவ மன்னிப்புப் பெறுவதற்கு அவசியமான முதன்மையான நிபந்தனையாக இருக்கிறது. மிக நீண்ட பாவசங்கீர்த்தனங்கள் அல்ல,

மாறாக, மிக அதிக துக்கத்தோடு செய்யப்படும் பாவசங்கீர்த்தனங்களே மிகச் சிறந்தவையாக இருக்கின்றன. நல்ல பாவசங்கீர்த்தனத்திற்கான நிரூபணம், அதைச் செய்பவன் பயன்படுத்தும் ஏராளமான வார்த்தைகளில் அல்ல, மாறாக, உண்மையான மனஸ்தாபத்தில்தான் இருக்கிறது என்று அர்ச். கிரகோரியார் சொல்கிறார். ஆனாலும், அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வோரும், அற்பப் பாவங்களைக் கூட வெறுப்பவர்களுமான விசுவாசிகள் தங்கள் மனஸ்தாபத்தின் உண்மைத்தன்மை பற்றிய எல்லா சந்தேகங்களையும் அகற்றி விடுவார்களாக. சிலர் தாங்கள் எந்த துக்கத்தையும் உணராததால், கலக்கமடைகிறார்கள். அவர்கள் பாவசங்கீர்த்தனம் செய்யும் ஒவ்வொரு முறையும் கண்ணீர் சிந்தவும், ஆழ்ந்த மனத் துக்கத்தை உணரம் விரும்புகிறார்கள். எவ்வளவு முயற்சி செய்தும் இந்த ஆழ்ந்த துக்கத்தைத் தங்கள் மனங்களில் எழுப்ப அவர்களால் இயலாததால், தங்கள் பாவசங்கீர்த்தனத்தைப் பற்றி அவர்கள் எப்போதும் அமைதியின்மையை உணர்கிறார்கள். ஆனால் உண்மையான மனஸ்தாபம் அதை உணர்வதில் அல்ல, மாறாக அதை விரும்புவதில் இருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். புண்ணியத்தின் பலன் முழுவதும் சித்தத்தில் இருக்கிறது; இதனாலேயே, விசுவாசமாகிய புண்ணியத்தைப் பற்றிப் பேசும்போது, சில சமயங்களில் விசுவசிக்க விரும்பும் ஒருவன் விசுவசிக்கும் மற்றொருவனை விட அதிகப் பேறுபலன் உள்ளவனாக இருக்கிறான் என்று ஜெர்சன் சொல்கிறார். அர்ச். தாமஸ் அக்குயினாஸ் மனஸ்தாபத்தைப் பற்றிப் பேசும்போது, பாவசங்கீர்த்தனத்திற்கு அவசியமான அடிப்படை மனஸ்தாபம் பாவம் செய்தது பற்றிய அதிருப்தியிலும், வெறுப்பிலும் உள்ளது, இந்த மனஸ்தாபம் ஆத்துமத்தின் உணரக்கூடிய பாகத்தில் இல்லை, மாறாக அது சித்தத்தில் உள்ளது; ஏனெனில் உணரக்கூடிய துக்கம், பாவத்தின் மீதான சித்தத்தின் வெறுப்பின் ஒரு விளைவாக இருக்கிறது என்கிறார். இந்த விளைவை நாம் எப்போதும் நம்மில் உருவாக்க இயலாது. ஏனெனில் ஆத்துமத்தின் கீழான பாகம் எப்போதும் ஆத்துமத்தின் மேலான பாகத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. சித்தம் பாவம் செய்தது பற்றி மற்ற எல்லாவற்றிற்கும் மேலான

வெறுப்புக் கொள்ளும்போது, அந்தப் பாவசங்கீர்த்தனம் நல்ல பாவ சங்கீர்த்தனமாக இருக்கிறது.

உணரக்கூடிய மனஸ்தாபத்தை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொள்ளும் முயற்சிகளைத் தவிர்ப்பதில் கவனமாயிரு. உள்ளரங்கச் செயல்களில் மிகக் குறைந்த வலுவந்தத்தோடும், மிகப் பெரிய இனிமையோடும் நாம் செய்யும் செயல்களே மிகச் சிறந்தவை என்பதை நினைவில் கொண்டிரு. ஏனெனில், பரிசுத்த ஆவியானவர் **"சகலத்தையும் இனிதாய் ஒழுங்குபடுத்துகிறார்" (ஞான.8:1).** இதனாலேயே புனிதத் தவசியான எசேக்கியாஸ் தம் பாவங்களைப் பற்றித் தாம் உணர்ந்த துக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, **"இதோ சமாதானத்தின் நடுவே மகா கசப்பான என் கஸ்தி உள்ளது" என்றார் (இசை.38:17).** அவர் மிகுந்த துக்கத்தை உணர்ந்தார் என்றாலும் அதனோடு சமாதானமும் சேர்ந்திருந்தது.

நீ பாவ மன்னிப்புப் பெற விரும்பும்போது, பாவசங்கீர்த்தனத்திற்கான உன் ஆயத்தத்தில் கவனமாயிரு. முதலில் சேசுநாதரிடமும், வியாகுல மாதாவிடமும் உன் பாவங்களுக்கு மெய்யான மனஸ்தாபத்தைக் கேள். அதன்பின், ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது போல, ஒரு சுருக்கமாக ஆத்தும சோதனை செய். அதன்பின் உன் துக்கத்தை வெளிப்படுத்துமாறு, நேர்மையுள்ள மனதோடு பின்வரும் ஜெபத்தைச் சொல்வது போதுமானது:

"என் தேவனே, எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் நேசிக்கிறேன். சேசுகிறீஸ்துநாதரின் திரு இரத்தத்தின் வழியாக, என் எல்லாப் பாவங்களுக்கும் நான் மன்னிப்புப் பெறுவேன் என்று நம்புகிறேன். என் பாவங்களைக் கொண்டு அளவற்ற நன்மைத்தனமாகிய உம்மை மனநோகச் செய்து வேதனைப்படுத்தினேன் என்பதால், என் முழு இருதயத்தோடு அவற்றிற்காக மனஸ்தாபப் படுகிறேன். எல்லாத் தீமைகளுக்கும் மேலாக அவற்றை அருவருக்கிறேன். பாவங்களின் மீதான என் அருவருப்பை, ஜெத்சமெனித் தோட்டத்தில் பாவங்களைப் பற்றி சேசுநாதர் கொண்டிருந்த அருவருப்போடு ஒன்றுசேர்க்கிறேன். உமது வரப்பிரசாதத்தைக் கொண்டு, இனி ஒருபோதும் உம்மை நோகச் செய்வதில்லை என்று பிரதிக்கினை செய்கிறேன்."

உண்மையுள்ள மனதோடு இந்தச் செயல்களைச் செய்ய நீ விரும்பும்போதெல்லாம், சமாதானத்தோடு, எந்த பயமோ, மனவுறுத்தலோ இன்றி, பாவ மன்னிப்பைப் பெறச் செல். பாவங்களின் மீதான துக்கத்தைப் பற்றிய கவலையை அகற்றுவதற்கு **அர்ச். தெரேசம்மாள்** மற்றொரு அற்புதமான வழியைக் காட்டுகிறாள்: “நீ பாவசங்கீர்த்தனத்தில் சொல்லும் பாவங்களை இனி ஒருபோதும் செய்வதில்லை என்ற உறுதியான பிரதிக்கினை உன்னிடம் உள்ளதா என்று பார். அது உன்னிடம் இருந்தால், மெய்யான மனஸ்தாபமும் உன்னிடம் உள்ளது என்பதில் சந்தேகம் கொள்ளாதே."

செவ்வாய்

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (2)

இனி பாவம் செய்வதில்லை என்ற உறுதியான, பொதுவான, நற்பயனுள்ள பிரதிக்கினை

I

மூன்றாவதாக, இனி ஒருபோதும் பாவம் செய்வதில்லை என்ற பிரதிக்கினை நல்ல பாவசங்கீர்த்தனத்திற்கு அவசியம். இந்தப் பிரதிக்கினை உறுதியானதாகவும், பொதுவானதாகவும், நற்பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

முதலாவதாக, அது உறுதியானதாக இருக்க வேண்டும். இந்தப் பாவத்தை இனி ஒருபோதும் கட்டிக்கொள்ளக் கூடாது என்றே நான் விரும்புவேன்; கடவுளை இனி ஒருபோதும் நோகச் செய்யக் கூடாது என்றே நான் விரும்புவேன் என்று சிலர் சொல்கிறார்கள். அந்தோ! இந்த "நான் விரும்புவேன்" என்ற வார்த்தைகள், பிரதிக்கினை உறுதியானதாக இல்லை என்பதைக் காட்டுகின்றன. உறுதியான பிரதிக்கினையைக் கொண்டிருப்பதற்கு, நீ தீர்மானமான சித்தத்தோடு: இனி ஒருபோதும் இந்தப் பாவத்தைக் கட்டிக் கொள்ள மாட்டேன்; நான் இனி ஒருபோதும் வேண்டுமென்றே கடவுளை நோகச் செய்ய மாட்டேன்" என்று நீ சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, அது எல்லாப் பாவங்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். பாவசங்கீர்த்தனம் செய்பவன் எந்த விதிவிலக்குமின்றி, அதாவது எல்லா சாவான பாவங்களையும் தவிர்த்து விடுவதாகப் பிரதிக்கினை செய்ய வேண்டும். அற்பப் பாவங்களைப் பொறுத்த வரை, இந்த தேவத்திரவிய அனுமானம் செல்லுபடியாவதற்கு, அவற்றில் ஒரு வகைப் பாவத்தைப் பற்றி மனஸ்தாபப்படுவதும், அதைத் தவிர்க்க உறுதியான பிரதிக்கினை செய்வதும் போதுமானது. ஏனெனில் வேண்டுமென்றே செய்யப் படாத அற்பப் பாவங்களைத் தவிர்ப்பது இயலாத காரியம்.

மூன்றாவதாக, அது நற்பயன் தருவதாக இருக்க வேண்டும். அதாவது, தான் பாவசங்கீர்ததனம் செய்யும் பாவங்களில் மீண்டும் ஒருவன் விழாதிருப்பதற்கான வழியை அவன் பயன்படுத்தும்படி அது செய்ய வேண்டும். அது மீண்டும் பாவம் செய்வதற்கான

நெருங்கிய பாவசந்தர்ப்பத்தை அவன் தவிர்க்கும்படி செய்ய வேண்டும். ஒருவன் அடிக்கடி எந்த சந்தர்ப்பத்தில் ஒரு கனமான பாவத்தில் விழுகிறானோ, அல்லது நியாயமான காரணமின்றி, மற்றவர்கள் எந்த சந்தர்ப்பத்தில் மற்றவர்கள் பாவத்தில் விழ அவனே தூண்டுதலாக இருந்திருக்கிறானோ, அந்த சந்தர்ப்பமே நெருங்கிய பாவசந்தர்ப்பம் எனப்படுகிறது. பாவசங்கீர்த்தனம் செய்பவர்கள் பாவத்தை விட்டு விடுவதாக வெறுமனே பிரதிக்கினை மட்டும் செய்வது போதாது. அதற்குரிய சந்தர்ப்பத்தை அடியோடு விலக்குவது பற்றி அவன் பிரதிக்கினை செய்வதும் அவசியம். இல்லாவிடில், அவர்கள் ஆயிரம் முறை பாவ மன்னிப்புப் பெற்றிருந்தாலும், அவர்களுடைய எல்லாப் பாவசங்கீர்த்தனங்களும் செல்லாதவையாக ஆகி விடும். ஏனெனில் ஒரு சாவான பாவத்திற்கான சந்தர்ப்பத்தை விலக்கத் தீர்மானமின்றி இருப்பதுவும் தன்னிலேயே ஒரு சாவான பாவமாக இருக்கிறது. மேலும், நான் என் நல்லொழுக்க வேதசாஸ்திரம் என்னும் நூலில் கூறியுள்ளது போல, சாவான பாவங்களுக்குரிய நெருங்கிய சந்தர்ப்பத்தை விலக்க உறுதியான பிரதிக்கினை இன்றி பாவ மன்னிப்பு ஆசீர்வாதம் பெறுபவன், ஒரு புதிய சாவான பாவத்தைக் கட்டிக்கொள்கிறான், இவ்வாறு அவன் தேவதுரோகம் என்னும் குற்றத்திற்கு ஆளாகிறான்.

II

ஆனால், நான் இத்தகைய ஓர் ஆளிடமிருந்து பிரிந்தால், இத்தகைய ஒரு நட்பை விட்டு விலகினால், துர்மாதிரிகை அதன் விளைவாக இருக்கும். அது பிறருடைய பேச்சுக்கு ஒரு சந்தர்ப்பமாகி விடும் என்று சிலர் சொல்லக் கூடும். இதற்கு நான் பதில் சொல்கிறேன்: நீங்கள் சொல்வது தவறு. இதற்கு மாறாக, இந்த சந்தர்ப்பத்தை அகற்றாதிருப்பதன் மூலம்தான் அந்த நட்பைப் பற்றி அறிந்தவர்களுக்கு நீங்கள் ஒரு பாவசந்தர்ப்பமாக இருப்பீர்கள். உங்களுக்கு முன்பாக அவர்கள் பேசவில்லை என்றாலும், உங்கள் நடத்தை குற்றமுள்ளது என்று அவர்கள் நினைப்பார்கள் என்பதில் உறுதியாயிருங்கள். ஆனால், “இத்தகைய ஒருவரிடமிருந்து என்னைப் பிரித்துக் கொள்வது நாகரீகமற்ற செயலாகவும், நன்றி

யற்றதனமாகவும் கூட இருக்கும், ஏனெனில் அவர் எனக்கு உதவுகிறார், எனக்குப் பணிவிடை புரிகிறார், என் பிரச்சினைகளிலிருந்து என்னை விடுவிக்கிறார்" என்று நீ சொல்லலாம். ஆம், அத்தகைய ஒருவர் கடவுளிடமிருந்து நீ விலகவும், இங்கே நீ ஒரு மகிழ்ச்சியற்ற வாழ்வு வாழவும், மறுவுலகில் இன்னும் அதிகக் கொடிய துன்ப வாழ்வு வாழவும் உனக்கு உதவுகிறார். இத்தகைய ஒருவரைத் தவிர்ப்பது நாகரீகமற்ற, அல்லது நன்றியற்ற செயலா?

நாகரீகமும், நன்றியறிதலும் முதலில் சேசுநாதருக்கே உரியன. அவர் அளவற்ற மகத்துவமுள்ள அரசராக இருக்கிறார். அவரிடம் இருந்து நாம் மிகப் பெரும் நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். அப்படிய் இருக்க, உன் ஆசாபாசம்தான் நீ இந்த விதத்தில் பேசச் செய்கிறது என்றும், நித்திய அழிவிற்கு உன்னை இட்டுச் செல்ல இத்தகைய சாக்குப்போக்குகளை நீ தேடும்படி அது செய்கிறது என்றும் நீ காணவில்லையா? ஆ! சேசுகிறீஸ்துநாதரின் திரு இருதயத்திற்கு இனியும் எந்த வேதனையும் தந்து விடாதே. **அர்ச். லுட்கார்ட்** ஓர் ஆபத்தான நட்பில் மோசமான விதத்தில் சிக்கியிருந்த போது, சேசுநாதர் அவளுக்குத் தோன்றி, மிகக் கொடூரமாகக் காயப்படுத்தப்பட்டிருந்த தமது திரு இருதயத்தை அவளுக்குக் காட்டினார். புனிதை உடனே தன் பாவத்திற்காக அழத் தொடங்கினாள். உடனே தன் நண்பனிடம், சேசுகிறீஸ்துவைத் தவிர வேறு யாரையும் நேசிக்கத் தன்னால் முடியாது என்றும், அவரையே தனது மணவாளராக ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறி, அவள் அவனை விட்டுப் பிரிந்தாள். அப்போது முதல் அவள் தனது மணவாளருடைய அன்பிற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, ஒரு புனிதை ஆனாள்.

புதன்

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (3)

அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதன் முக்கியத்துவம்

I

சாவான பாவங்கள் செய்பவர்களைப் பற்றியும், தேவத் துரோகமான பாவ சங்கீர்த்தனங்களைப் பற்றியும் விரைவில் நான் ஏதாவது சொல்வேன் என்றாலும், அவர்களுடைய பாவசங்கீர்த்தனங்களைப் பற்றிப் பேசுவது என் நோக்கமல்ல. மாறாக, உத்தமதனத்தை நேசிப்பவர்களும், அற்பப் பாவக் கறைகளிலிருந்து அதிகமதிகமாகத் தங்கள் ஆத்துமங்களைச் சுத்திகரிக்க இடைவிடாமல் முயன்று வருபவர்களுமான ஆத்துமங்களின் பாவசங்கீர்த்தனங்களைப் பற்றிப் பேசுவதற்கே நான் முதலிடம் கொடுக்கிறேன்.

பேயோட்டும் அதிகாரம் பெற்றிருந்த ஒரு நல்ல குருவைப் பற்றி செசாரியுஸ் விவரிக்கிறார். இந்த குரு ஒரு முறை தமக்குத் தோன்றிய ஒரு பசாசிடம், வேறு எதையும் விட அதிகமாக அவனைக் காயப்படுத்துவது எது என்று தமக்குக் கூறும்படி கடவுளின் திருப்பெயரால் கட்டளையிட்டார். அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதை விடத் தன்னை அதிகம் காயப்படுத்துவதும் தனது வெறுப்புக்குரியதும் வேறு எதுவுமில்லை என்று பசாசு பதிலளித்தது. சேசுநாதர் ஒரு முறை அர்ச். பிரிஜித்தம்மாளிடம், தங்கள் பக்தியார்வத்தைக் காத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் தங்கள் எல்லாக் குறைபாடுகளையும், அவரது ஊழியத்தில் அவர்களுடைய அசட்டைத்தனத்தையும் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதன் மூலம் தங்கள் ஆத்துமங்களை அடிக்கடி சுத்திகரித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். உத்தமதனத்தை அடைய விரும்புகிறவன் மனச்சான்றின் பெரும் பரிசுத்ததனத்தைத் தன் நோக்கமாகக் கொள்ள வேண்டும், ஏனெனில் மனச்சான்றின் பரிசுத்ததனத்திலிருந்துதான் ஆத்துமம் உத்தமமான நேசத்திற்குக் கடந்து செல்கிறது, இவ்வாறு நேசமானது இருதய சுத்தத்தோடு தொடர்புள்ளதாக இருக்கிறது என்று காஸியன் கூறுகிறார். ஆயினும் தற்போதைய நிலையில் ஆத்துமத்தின் இந்தப் பரிசுத்ததனம் எல்லாப் பாவங்களிலிருந்தும் முற்றுமாக விலகி யிருப்பதில் அடங்கிய் இருக்கவில்லை என்பதை அறிந்திருப்பது அவசியம். ஏனெனில், நம் திவ்ய இரட்சகரையும், அவருடைய திவ்ய மாதாவையும் தவிர, உலகில் எல்லாப் பாவக் கறைகளிலிருந்தும், குறைபாடுகளிலிருந்தும் விடுபட்டிருந்த

ஆத்துமம் எதுவும் இதுவரை உலகில் இருந்ததில்லை, இனி இருக்கப் போவதுமில்லை. "நாமெல்லோரும் அநேகக் காரியங்களிலே தவறிப் போகிறோம்" (யாகப்.3:2). மாறாக அது இரண்டு காரியங்களில் அடங்கியுள்ளது. முதலாவது, எவ்வளவுதான் அற்பமானதாக இருந்தாலும், வேண்டுமென்றே செய்யும் ஒவ்வொரு அற்பப் பாவத்தையும் தடுக்கும்படியாக, இருதயத்தின் மீது கவனத்தோடு விழிப்பாயிருந்து அதைக் கண்காணிப்பது; இரண்டாவது, ஆத்துமம் கட்டிக் கொள்ளக் கூடிய எந்தப் பாவத்திலிருந்தும், எந்தத் தாமதமுமின்றி, உடனடியாக அதைச் சுத்திகரிப்பது. இனி, இந்த இரண்டும் மிக நுட்பமாக, அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்வதன் நற்பலனாக இருக்கின்றன.

முதலாவதாக, பாவசங்கீர்த்தனம் ஆத்துமத்தை அது தன் மீது இழுத்து விட்டுக் கொள்கிற கறைகளிலிருந்து சுத்திகரிக்கிறது. அர்ச். கிளிமாக்குஸ் அருளப்பர் ஓர் இளைஞனைப் பற்றிப் பேசுகிறார். இவ்வுலகில் தான் நடத்தி வந்த துர்மாதிரிகையான வாழ்வை விட்டு விலகத் தீர்மானித்த அவன், ஒரு துறவியாகுமாறு ஒரு துறவற மடத்திற்குச் சென்றான். அவனை சேர்த்துக் கொள்வதற்குமுன் மடத்தின் அதிபர், அவன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமானால், அவன் தன் எல்லாப் பாவங்களையும் பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்று கூறினார். கடவுளுக்குத் தன்னைக் கையளிக்க உண்மையுள்ள மனதோடு பிரதிக்கினை செய்திருந்த அந்த இளைஞனும் உடனே கீழ்ப்படிந்தான். இதோ, துறவிகளுக்கு முன்பாக அவன் தன் பாவங்களை சங்கீர்த்தனம் செய்தபோது, அவர்களில் பரிசுத்தராயிருந்த ஒரு துறவி கண்ணியமான, வணக்கத்துக்குரிய தோற்றத்தில் இருந்த ஒரு மனிதரை அவனருகில் கண்டார். அந்த மனிதர் தமது கையிலிருந்த, அவனது பாவங்கள் எழுதப்பட்டிருந்த ஒரு தாளிலிருந்து அவன் பாவசங்கீர்த்தனம் செய்த ஒவ்வொரு பாவத்தையும் அடித்துக் கொண்டே வந்தார். இவ்வாறு இறுதியில் அவர் அவனுடைய எல்லாப் பாவங்களையும் அடித்து முடித்திருந்தார். அச்சமயத்தில் காணக்கூடிய விதமாக நடந்த இக்காரியம், அவசியமான மனநிலைகளோடு நல்ல பாவ

சங்கீர்த்தனம் செய்யும் ஒவ்வொருவருக்கும் கண்காணாத முறையில் நிகழ்கிறது.

II

பாவசங்கீர்த்தனம் ஆத்துமத்தின் பாவக் கறைகளைக் கழுவிப் போக்குவது மட்டுமின்றி, அது மீண்டும் பாவம் செய்யாதிருக்கத் தேவையான பலத்தையும் தருகிறது. தேவதூதருக்கு ஒப்பான வேதபாரகரான அர்ச். தாமஸ் அக்குயினாஸ் இதைப் பற்றி, பாவசங்கீர்த்தனத்தின் பலன் செய்யப்பட்ட பாவங்களை அழிப்பது மட்டுமின்றி, அது மீண்டும் துளிர்க்காதபடி தடுத்தும் விடுகிறது என்று கற்பிக்கிறார். அர்ச். மலாக்கியின் வரலாறு என்னும் தமது நூலில் அர்ச். பெர்னார்ட் ஒரு பெண்ணைப் பற்றி விவரிக்கிறார். இவள் எந்த அளவுக்கு பொறுமை யின்மைக்கும் கோபத்திற்கும் அடிமையாகியிருந்தாள் என்றால், பிறரால் பொறுத்துக்கொள்ளப் பட இயலாத நிலைக்கு அவள் ஆளாகி விட்டாள். தனது பொறுமையின்மை பற்றி அவள் பாவசங்கீர்த்தனத்தில் சொன்னதேயில்லை என்று அவள் சொல்லக் கேட்ட **அர்ச். மலாக்கி**, கோபம் தொடர்பான தன் எல்லாப் பாவங்களையும் சங்கீர்த்தனம் செய்யும்படி அவளைத் தூண்டினார். தனது பாவசங்கீர்த்தனத்திற்குப் பிறகு அவள் எவ்வளவு சாந்தமும் பொறுமையும் உள்ளவளாக ஆகி விட்டாள் என்றால், பிறர் தன்னைக் காயப்படுத்தும்போது, அல்லது அவமானப்படுத்தும்போது கூட, பதிலுக்குக் கோபப்பட இயலாதவளாக அவள் ஆகிவிட்டாள் என்று அர்ச். பெர்னார்ட் குறிப்பிடுகிறார்.

இதன் காரணமாக, மனச்சான்றின் பரிசுத்ததனத்தை அடைவதற்காகப் பல அர்ச்சியசிஷ்டவர்கள் அனுதினமும் பாவசங்கீர்த்தனம் செய்தார்கள். அவர்களில் அர்ச். சியென்னா கத்தரீனம்மாளும், அர்ச். பிரிஜித்தம்மாளும், முத். கொலெட்டாவும், அர்ச். சார்லஸ் பொரோமியோவும், அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரும், இன்னும் பலரும் அடங்குவர். அர்ச். பிரான்சிஸ் போர்ஜியா ஒரு நாளில் இரண்டு தடவை கூட பாவசங்கீர்த்தனம்

செய்வார். உலக விரும்பிகள், தாங்கள் நேசிப்பவர்களுக்கு முன்பாகத் தங்கள் முகத்தில் ஒரு கறையோடு தோன்றுவதை சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்றால், கடவுளை நேசிப்பவர்கள், தங்கள் நேச ஆண்டவரின் கண்களில் அதிகப் பிரியத்துக்குரியவர்களாக ஆகும்படியாக, அதிகமதிகமாகத் தங்களைச் சுத்தமாக்கிக் கொள்ள எப்போதும் முயன்று வர வேண்டும் என்பதில் என்ன அதிசயம் இருக்கிறது! இப்போது, அடிக்கடி திவ்ய நன்மை உட்கொள்பவர்கள், தாங்கள் நன்மை வாங்கும் ஒவ்வொரு முறையும் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனாலும், அவர்கள் குறைந்தபட்சம் வாரத்திற்கு இரு முறையோ, அல்லது வேண்டுமென்று அவர்கள் ஏதாவது ஒரு பாவத்தைக் கட்டிக்கொள்ளும் ஒவ்வொரு முறையும் பாவசங்கீர்த்தனம் செய்வதுதான் சரியானது என்றுநான் கூறுகிறேன்.

வியாழன்

ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் (4)

I

ஐயோ, என் தேவனே, எத்தனை ஆத்துமங்கள் சபிக்கப்பட்ட ஒரு போலியான வெட்கத்தின் காரணமாக, இன்று நித்திய நரகத்தின் அடியாழங்களுக்குள் என்றென்றைக்குமாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறார்கள்! சில கிறீஸ்தவர்கள் முகத்தாட்கணியத்தின் காரணமாகவும், மற்றவர்களின் மதிப்பை இழந்து விடும் அச்சத்தாலும் பல மாதங்களாகவும், பல ஆண்டுகளாகவும் தொடர்ந்து தேவத் துரோகமான முறையில் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை உட்கொண்டு வருகிறார்கள். பாதணிகள் அணியாத கார்மெல் சபையினரின் காலப் பதிவேடுகளில், பெரும் புண்ணியவதியாயிருந்த ஓர் இளம் பெண்ணைப் பற்றி எழுதிய் இருக்கிறது. இவள் கற்புக்கு எதிரான ஒரு பாவத்திற்கு மனம் பொருந்தி சம்மதித்தாள்; அதன்பின் மூன்று முறை பாவசங்கீர்த்தனத்தில் இந்தப் பாவத்தை ஒளித்து, திவ்ய நன்மை வாங்கினாள். மூன்றாம் முறை நன்மை வாங்கிய பின் திடீரென அவள் கீழே விழுந்து இறந்துபோனாள். அவள் ஓர்

அர்ச்சியசிஷ்டவளாகக் கருதப்பட்டதால் அவளது உடல் சேசு சபையினரின் ஆலயத்தின் ஒரு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது. ஆனால் அடக்கச் சடங்குகள் முடிந்து, கோவில் மூடப்பட்ட பிறகு, இரு தேவதூதர்கள் அவளது பாவசங்கீர்த்தன குருவுக்குத் தோன்றி, அவரை அந்தப் பெண் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அழைத்து வந்தனர். இதோ, அவள் கல்லறையிலிருந்து வெளியே வந்து, முழந்தாளில் விழுந்து, ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருந்த ஒரு நற்கருணைப் பாத்திரத்தினுள் மூன்று திவ்ய அப்பங்களைத் தன் வாயினின்று துப்பினாள். அவை தேவத் துரோகமான முறையில் அவள் உட்கொண்டிருந்த தேவ நற்கருணை அப்பங்கள்தான். புதுமையான முறையில் அவை அவளுடைய நெஞ்சினுள் பாதுகாக்கப்பட்டிருந்தன. தேவதூதர்கள் அவளை மூடியிருந்த போர்வையை அகற்றியபோது, அந்தப் பரிதாபத்திற்குரிய பெண் அதே கணத்தில் கடும் அச்சம் தரும் தோற்றத்திற்கு மாறினாள். உடனே அங்கு தோன்றிய பசாசுக்களால் அவள் இழுத்துச் செல்லவும்பட்டாள்.

ஆனால் ஒரு கிறீஸ்தவன், ஒரு குருவிடம் தான் செய்யும் பாவசங்கீர்த்தனத்தில், தான் செய்த ஒரு குறிப்பிட்ட பாவத்தை வெளிப்படுத்துவதால் உண்டாகும் அற்பமான, கண நேர வெட்கத்தையும், அவமான உணர்வையும் தவிர்ப்பதற்காக, அதைப் பாவசங்கீர்த்தனத்தில் மறைப்பதற்குக் கடவுளுக்கு முன்பாக ஒரு சாக்குப்போக்கை எப்படி கண்டுபிடித்துச் சொல்ல முடியும்? இவ்வாறு அவன் எப்படி தேவ மகத்துவத்திற்கு எதிராக ஒரு கனமான பாவம் கட்டிக் கொண்டு, அதைப் பாவசங்கீர்த்தனத்தில் மறைப்பதன் மூலம் ஒரு தேவத் துரோகத்தையும் செய்து, நித்திய நரகத்தின் நித்திய வெட்கத்திற்கும் அவமானத்திற்கும் உட்பட எப்படி மனம் துணிய முடியும்? தான் கடவுளால் மன்னிக்கப்படவும் தனக்குத் தகுதியுள்ள நரகத்திலிருந்து தான் விடுவிக்கப்படவும் அவன் விரும்பினால், தன் பாவத்தை சங்கீர்த்தனம் செய்வதால் அவனுக்கு உண்டாகும் வெட்கம் தேவ மன்னிப்பைப் பெற அவனைத் தகுதியுள்ளவனாக்குகிறது. தன் பாவத்தால் கடவுளை நிந்தித்த ஒருவன் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்வதும், அந்த

வெட்கத்திற்குத் தன்னை உள்ளாக்கிக் கொள்வதும் நியாயமானதே. பாவியாகிய அடிலெய்ட் என்பவள் பசாசுக்கு ஓர் அழகிய பதிலைத் தந்தாள். வாழ்க்கை மாற்றத்திற்குக் கடவுளால் அழைக்கப்பட்ட அவள் மனந்திரும்பி, உடனடியாக ஒரு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யப் பிரதிக்கினை செய்தாள்; அவள் தன் பாவங்கள் அனைத்தையும் சங்கீர்த்தனம் செய்வதில் எதிர் கொள்ள வேண்டியிருந்த அவமான உணர்வைப் பசாசு அவளது கண்களுக்கு முன்பாக வைத்து, “அடிலெய்ட், எங்கே போகிறாய்?" என்று கேட்டது. அவள் தைரியமாக, “அசுத்த மிருகமே, நான் எங்கே போகிறேன் என்றா கேட்கிறாய்? என்னை நானே வெட்கத்திற்கு உள்ளாக்கிக் கொள்வதன் மூலம் உன்னை நான் வெட்கத்திற்கு உள்ளாக்கப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தாள்.

II

இந்தப் போலியான அவமான உணர்வால் மட்டுமின்றி, பல மாயத் தோற்றங்களாலும் வீண் பயங்களாலும் பாவிகளின் மனதை நிரப்பப் பசாசு பாடுபடுகிறது. இப்படிப்பட்ட ஒரு பாவி: என் பாவசங்கீர்த்தன குருவிடம் இந்தப் பாவத்தை நான் சொன்னால், அவன் என்னைக் கடுமையாகக் கடிந்து கொள்வார் என்று சொல்கிறான். அவர் ஏன் உன்னைக் கடிந்து கொள்ள வேண்டும்? எனக்குப் பதில் சொல்: நீ ஒரு பாவசங்கீர்த்தன குருவாக இருந்தால், வீழ்ச்சியுற்ற தன் நிலையிலிருந்து எழுப்பப்படும் நம்பிக்கையில் உன்னிடம் தன் நிர்ப்பாக்கியங்களை வெளிப்படுத்த முன்வரும் ஒரு பரிதாபத்திற்குரிய பாவியிடம் நீ கடுமையாகப் பேசுவாயா? அப்படிய் இருக்க, தமது பதவியின் காரணமாக, பச்சாத்தாபமாகிய நீதிமன்றத்திடம் வருபவர்களுக்குப் பிறர்சிநேகம் காண்பிக்க கடமைப்பட்டுள்ள ஒரு பாவசங்கீர்த்தன குரு, பாவசங்கீர்த்தனத்தில் உன்னை முரட்டுத்தனமாகவும், கடுமையோடும் கடிந்துகொள்வார் என்றுநீ எப்படி கற்பனை செய்ய முடியும்?

மற்றொருவன் இப்படிச் சொல்கிறான்:ஆனால் அவர் குறைந்த பட்சம் என் பாவத்தைக் கேட்டு அதிர்ச்சியாவது அடைவார்,

அதனால் அவர் என்னை வெறுக்கத் தொடங்குவார் என்று! முற்றிலும் தவறு! பாவத்தை வெளிப்படுத்துவது தனக்கு வருவிக்கும் அவமானத்தையும் பொருட்படுத்தாது, நல்ல மனநிலையோடு ஒரு பாவி தம்மிடம் பாவசங்கீர்த்தனம் செய்ய வருவதைக் கண்டு அவர் பெருமிதம் கொள்வார். மேலும் இதே விதமான, அல்லது இவற்றை விட அதிக கனமான பாவங்களை மற்ற பாவிகளிடமிருந்து அவர் கேட்டிருக்க மாட்டாரா? ஓ, நீதான் உலகத்தில் உள்ள ஒரே ஒரு பாவி என்று எண்ணிக் கொள்ளாதே! தம்மிடம் தங்கள் பாவங்களை வெளிப்படுத்துவோரை அவர் வெறுக்கத் தொடங்குவார் என்பதும் உண்மையல்ல. அதற்கு மாறாக அவர் அவர்களை இன்னும் அதிகமாக மதிக்கத் தொடங்குவார், தம்மில் அவர்கள் வைத்துள்ளதும், தம்மிடம் தங்கள் நிர்ப்பாக்கியங்களை அவர்கள் வெளிப்படுத்தச் செய்வதுமான நம்பிக்கையை அவர் காணும்போது, அவர்களுக்கு உதவுவதற்காக இன்னும் அதிகமான பக்தியார்வத்தோடு அவர் உழைப்பார்.

அந்தோ, இன்னும் சில பாவிகள் என்ன சொல்கிறார்கள்? நான் பாவசங்கீர்த்தனம் செய்வேன், ஆனால் வேறு ஒரு பாவசங்கீர்த்தன குரு வரும் வரை தாமதிப்பேன் என்கிறார்கள். இவர்கள் வெட்கத்தைத் தவிர்ப்பதற்காக, இடைப்பட்ட காலத்தில் கடவுளுக்குப் பகைவர்களாக வாழ்வார்களா, அதன் மூலம் என்றென்றும் இழக்கப்படும் ஆபத்துக்கு உட்படத் தயாராக இருக்கிறார்களா? ஆத்துமத்தைக் குத்திக் கிழித்துப் புண்ணாக்கி, அல்லும் பகலும் அவர்கள் எந்த சமாதானத்தையும் அனுபவிக்க முடியாமல் செய்து விடும் மன உறுத்தலால் உருவாக்கப்படும் நரகத்திலும், அதன்பின் நித்திய நரகத்திலும் வாழ அவர்கள் விரும்புகிறார்களா? அவர்கள் பாவத்தில் நிலைத்திருக்கப் போகிறார்களா, அல்லது தாங்கள் கட்டிக்கொண்டுள்ள பாவங்களோடு இன்னும் பல தேவத் துரோகப் பாவங்களைச் சேர்க்கப் போகிறார்களா? தேவத் துரோகம் பயங்கமான பாவம் என்பது அவர்களுக்குத் தெரியாதா? பச்சாத்தாபமாகிய தேவத் திரவிய அனுமானத்தில், சேசுநாதர் தமது திரு இரத்தத்தால் அவர்களுக்காக ஆயத்தம் செய்திருக்கிற நித்திய ஜீவியத்திற்குரிய தெய்வீக மருந்தை அவர்கள் நித்திய

மரணத்திற்குரிய விஷமாக மாற்றிக் கொள்வார்களா? பிற்பாடு நாங்கள் பாவசங்கீர்த்தனம் செய்து கொள்வோம் என்கிறார்கள். ஆனால் இன்று திடீர் மரணங்கள் வெகுவாக அதிகரித்திருக்கிற இந்தக் காலத்தில், இவர்கள் ஒரு திடீர் மரணத்தைச் சந்திக்க நேரிட்டால், இவர்களுடைய நித்திய கதி என்ன?

ஆகவே உன் மனதில் பசாசு மிகப் பெரிதாக்கிக் காட்டுகிற இந்த அவமான உணர்வுக்கு எதிராக நீ தைரியம் கொண்டு, அதன் மீது வெற்றி பெற வேண்டும். நீ செய்த பாவத்தை வெளிப்படுத்தத் தொடங்கினாலே போதும், உன் வீணான குழப்பம், பயம் எல்லாம் கண நேரத்தில் மறைந்துபோகும். நீ உலகம் முழுவதற்கும் அரசனாக முடிசூட்டப்பட்டால் எவ்வளவு மகிழ்ச்சி கொள்வாயோ, அதை விட அதிகமாக, உன் பாவங்கள் அனைத்தையும் வெளிப்படுத்தி விட்டதற்காக நீ மகிழ்ச்சி கொள்வாய். மகா பரிசுத்த கன்னிகைக்கு உன்னை ஒப்புக்கொடு. இந்த வெட்கம் மற்றும் அவமான உணர்வு முழுவதையும் மேற்கொள்ள அவர்கள் உனக்கு பலத்தைப் பெற்றுத் தருவார்கள். உன் பாவங்களை நேரடியாக குருவிடம் வெளிப்படுத்த உனக்கு தைரியம் இல்லை என்றால், அவரிடம்: “சுவாமி, எனக்கு உதவி செய்யுங்கள், ஏனெனில் எனக்கு உதவி தேவைப்படுகிறது; ஒரு குறிப்பிட்ட பாவத்தை நான் செய்து விட்டேன், ஆனால் அதை வெளிப்படுத்த என்னால் முடியவில்லை" என்று சொல். அப்போது, அவர் உன்னை விழுங்கும் காட்டு மிருகத்தின் குகையிலிருந்து அதை வெளியே இழுப்பதற்கான எளிதான வழி ஒன்றைப் பயன்படுத்துவார். அவருடைய கேள்விகளுக்கு “ஆம்" அல்லது “இல்லை" என்று பதில் சொல்வது உனக்குப் போதுமானதாக இருக்கும். ஒருவன் தன் பாவத்தை வார்த்தைகளில் சொல்ல மனமின்றி இருந்தால், அவன் அதை ஒரு காகிதத்தில் எழுதி குருவிடம் அதைக் காட்டி, “நீர் வாசிக்கும் இந்தப் பாவத்தை நான் செய்தேன்" என்று சொல்லலாம். அதன்பின் இதோ பார்! நித்திய நரகமும், அநித்திய நரகமும் மறைந்து போயின. கடவுளின் வரப்பிரசாதத்தையும், அதனோடு மனச்சான்றின் சமாதானத்தையும் அவன் மீண்டும் பெற்றுக்கொண்டான். வெட்கத்தை மேற்கொள்ள ஒருவன் எந்த அளவுக்குத் தன்னைத் தானே வலுவந்தம்

செய்கிறானோ, அந்த அளவுக்கு அதிக வாஞ்சையோடு கடவுள் அவனை அரவணைத்துக் கொள்வார். சிறியவரான சுவாமி பவுல் செஞ்ஞேரி ஒரு பெண்ணைப் பற்றி விவரிக்கிறார். இவள் தன் குழந்தைப் பருவத்தில் செய்த சில பாவங்களை சங்கீர்த்தனம் செய்ய எவ்வளவு பெரிய முயற்சி எடுத்தாள் என்றால், தன் ஆன்ம குருவிடம் அவற்றை வெளிப்படுத்தியபோது, அவள் வெட்கத்தால் மயக்கமடைந்தாள். ஆனால் அவள் தனக்குத்தானே செய்துகொண்ட பலவந்தத்திற்குப் பிரதிபலனாக ஆண்டவர் எத்தகைய பக்தியார்வம் உள்ள உத்தம மனஸ்தாபத்தை அவளுக்குத் தந்தார் என்றால், அன்று முதல் அவள் உத்தமதனத்தில் வளரத் தொடங்கினாள். கடுமையான தவ முயற்சிகளை மேற்கொண்டாள், இறுதியில் ஓர் அர்ச்சியசிஷ்டவளாக மதிக்கப்பட்ட பாக்கியமான மரணமடைந்தாள்.

வெள்ளி

நமக்காக மரிப்பதில் சேசுவின் அன்பு

I

நம் மீது தமக்குள்ள அன்பு நம் இருதயங்களை முழுமையாக ஆட்கொள்ளும்படியாக, சேசுநாதர் நமக்காக இறந்தார். **“கிறீஸ்து நாதர் மரித்தோருக்கும், ஜீவியருக்கும் கர்த்தராய் இருக்கும் பொருட்டே மரித்து உயிர்த்திருக்கிறார்'' (உரோ.14:9).** சேசுநாதரின் திரு மரணத்தையும், மனிதர்களுக்காக மரிப்பதில் அவர் வெளிப்படுத்திய அன்பையும் தியானித்து, புனிதர்கள் அவர் நிமித்தமாகத் தங்கள் உடைமைகளையும், பதவிகளையும், உயிரையும் துறந்து விடுவதும் கூட மிகச் சிறிய காரியமே என்று நினைத்தார்கள்.

பிரபஞ்சத்தின் ஆண்டவரும், தேவ சுதனுமானவர் உண்மையாகவே சிலுவையின் மீது நம் அன்பிற்காகத் துன்புற்று மரிக்கவில்லை என்றால், அவர் அப்படிச் செய்யக் கூடும் என்று யார் நினைத்திருக்க முடியும்? சிருஷ்டிகர் தமது சிருஷ்டிகளின் மீதுகொண்ட நேசத்தால் மரிப்பதை விட அளவற்ற மிகுதியான நேசம் வேறு எது இருக்க முடியும்?

என் பிரியமுள்ள மீட்பரே, உமது அன்பிற்குப் பிரதியன்பு செலுத்தும்படியாக, உமக்காக இன்னொரு கடவுள் மரிப்பதுதான் அவசியமாக இருக்கும். ஆகவே, பூமியின் பரிதாபத்திற்குரிய புழுக்களாகிய நாங்கள் அனைவரும் உமக்காக, நீர் தந்த உயிரைக் கையளித்தாலும் அது மிக அற்பமானதாக, அல்லது வெறுமையாக மட்டுமே இருக்கும்.

அவரை நேசிக்க இன்னும் அதிகமாக நம்மைத் தூண்ட வேண்டிய காரியம், தமது வாழ்நாளில் தமது மரண நேரத்தை ஏக்கத்தோடு தேடுவதில் அவருக்கிருந்த மிகுதியான ஆசையாகும். இந்த ஆசையைக் கொண்டு, நம்மீது தமக்குள்ள அன்பு எவ்வளவு மேலானது என்று உண்மையாகவே அவர் எண்பித்தார். **"நான் பெற வேண்டிய ஸ்நானம் ஒன்றுண்டு; அது நிறைவேறுமளவும் எவ்வளவோ நெருக்கிடைப்படுகிறேன்" (லூக்.12:50).** மனிதர்களின் பாவங்களைக் கழுவிப் போக்குவதற்கு நான் என் சொந்த இரத்தத்தால் ஞானஸ்நானம் பெற வேண்டும். என் கசப்பான திருப்பாடுகள் மற்றும் மரணத்தின் மீதுள்ள ஆசையால் நான் எப்படி இறந்து கொண்டிருக்கிறேன்! என் ஆத்துமமே, உன் கண்களை உயர்த்தி, அவமானச் சிலுவையில் தொங்கும் உன் ஆண்டவரை நோக்கிப் பார்; அவரது திருக்காயங்களிலிருந்து ஒழுகும் திரு இரத்தத்தை உற்றுநோக்கு; உருக்குலைக்கப்பட்ட அவரது திருச்சரீரத்தைப் பார், இவையெல்லாம் அவரை நேசிக்க உன்னை அழைக்கின்றன. உன் மீட்பர் தமது துன்பங்களில், பரிதாப உணர்வின் வழியாகவாவது நீ அவரை நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

சேசுவே, உமது உயிரையும், விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தையும் எனக்குத் தர நீர் மறுக்கவில்லை. நீர் என்னிடம் கேட்கும் எதையாவது நான் உமக்கு மறுப்பேனா? இல்லை, நீர் எதையும் ஒதுக்கி வைத்துக் கொள்ளாமல், உம்மையே எனக்குத் தந்திருக்கிறீர். நானும் எதையும் ஒதுக்கி வைக்காமல், என்னை முழுமையாக உமக்குக் கையளிப்பேன்.

II

“கிறீஸ்துநாதரின் தேவசிநேகம் நம்மை நெருக்குகிறது" (2 கொரி. 5:14) என்ற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளைப் பற்றிப் பேசும் போது அர்ச். பிரான்சிஸ் சலேசியார் கூறுவதாவது: “மெய்யான சர்வேசுரனாக இருக்கிற சேசுநாதர் நமக்காகத் தம் உயிரைக் கையளிக்கும் அளவுக்கு, அதுவும், ஒரு சிலுவையில் மரிக்கும் அளவுக்கு நம்மை நேசித்திருக்கிறார் என்று அறிந்திருக்கும் போது, நம் இருதயங்கள் திராட்சை பிழியும் இயந்திரத்தில் வைத்து அழுத்தப்படுவதாகவும், வலுவந்தமாக நெருக்கப்படுவதாகவும், மிகுந்த வல்லமையுள்ளதாகவும், அதே சமயம் மிகுந்த அன்பிற்கு உரியதாகவும் இருக்கிற ஒரு வன்முறையால் நெருக்கப்பட்டு அவற்றிலிருந்து அன்பு வெளிப்படுவதாகவும் நாம் உணர வில்லையா?" அதன்பின் அவர் தொடர்ந்து, “ஆகவே, நம் மீதுள்ள அன்பிற்காகச் சிலுவையின் மீது மரித்தவருக்காக, சிலுவையில் அறையுண்ட சேசுநாதர் மீது நாம் ஏன் நம்மையே வீசியெறிவதில்லை? நான் அவரோடு ஒட்டிக் கொள்வேன், ஒருபோதும் அவரை விட்டுப் பிரிய மாட்டேன்; அவரோடு மரிப்பேன், அவரது அன்பின் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவேன் என்று நாம் சொல்ல வேண்டும். என் சேசு தம்மையே முழுமையாக எனக்குத் தந்தார்; நானும் என்னை முழுமையாக அவருக்குத் தருவேன். அவரது திருமார்பின் மீது நான் வாழ்ந்து இறப்பேன்; வாழ்வோ சாவோ இனி ஒருபோதும் அவரிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது. ஓ நித்திய நேசமே, என் ஆத்துமம் உம்மைத் தேடுகிறது, அது நித்தியத்திற்கும் உம்மைத் தன் மணவாளராக ஏற்றுக்கொள்கிறது!" என்கிறார்.

சனி

பரிசுத்த மாமரியின் கற்பு

I

ஆதாமின் வீழ்ச்சியின் காலத்திலிருந்து, புலன்கள் புத்திக்கு எதிராகக் கலகம் செய்வதால், எல்லாப் புண்ணியங்களிலும் கற்பு

என்னும் புண்ணியமே நாம் அனுசரிக்க மிகக் கடினமான புண்ணியமாக இருக்கிறது. “நாம் ஈடுபட்டிருக்கிற எல்லாப் போராட்டங்களிலும் அதிகக் கடுமையானவை, கற்பைக் காக்க நாம் செய்யும் போராட்டங்களே; அதற்காக நாம் தினமும் போராடுகிறோம், ஆனால் வெற்றி அரிதாகவே கிடைக்கிறது'' என்கிறார் **அர்ச். அகுஸ்தினார்**. ஆயினும், மாமரியில், இந்தப் புண்ணியத்தின் உத்தமமான முன்மாதிரிகையை நமக்குத் தர சித்தங்கொண்ட சர்வேசுரன் என்றென்றும் ஸ்துதிக்கப்படுவாராக!

“சரியான காரணத்தோடுதான் மாமரி கன்னியர்களில் உத்தம கன்னிகை என்று அழைக்கப்படுகிறார்கள்; ஏனெனில், அவர்கள் மற்றவர்களின் ஆலோசனையோ, முன்மாதிரிகையோ இன்றி, தனது உத்தம, மாசற்ற கன்னிமையைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுப்பதில் முதலானவர்களாக இருந்தார்கள்'' என்று **அர்ச். பெரிய ஆல்பர்ட்** கூறுகிறார். இவ்வாறு, **“அவளுக்குப் பின் கன்னியர்கள் அரசரின் தேவாலயத்திற்குள் கூட்டி வரப்படுவார்கள்'' (சங்.44:15)** என்று தாவீதரசர் ஏற்கெனவே முன்னுரைத்தது போல, மாமரியே தன்னைக் கண்டுபாவிக்கும் சகல கன்னியரையும் கடவுளிடம் கூட்டி வந்தார்கள். ஆலோசனையோ, முன்மாதிரிகையோ இன்றி. ஆம்; ஏனெனில் **அர்ச். பெர்னார்ட்** சொல்வது போல: “ஓ கன்னிகையே, கன்னிமையால் கடவுளை மகிழ்விக்கவும், பூமியின் மீது ஒரு சம்மனசுப் போல வாழவும் உங்களுக்குக் கற்றுத் தர யார் இருந்தார்கள்?'' ஆ, “இந்த மகா பரிசுத்த, மாசற்ற கன்னிகை அனைவருக்கும் கற்பின் மாதிரிகையாக இருக்கும்படி சர்வேசுரன் அவர்களைத் தம் தாயாராகத் தெரிந்துகொண்டார்'' என்று **அர்ச். ஸோஃப்ரோனியஸ்** பதிலளிக்கிறார். ஆகவே, அர்ச். அம்புரோஸ் மாமரியைக் “கன்னிமையின் விருதுக்கொடி தாங்குபவர்'' என்று அழைக்கிறார்.

தனது மாசற்றதனத்தின் காரணமாக, திவ்விய கன்னிகை காட்டுப் புறாவைப் போல் அழகானவர்கள் என்று பரிசுத்த ஆவியானவரால் அறிக்கையிடப்படுகிறார்கள்: **“காட்டுப் புறாவின் அழகு போலிருக்கின்றன உன் கன்னங்கள்'' (உந்.சங்.2:2).** இந்தப் பகுதி பற்றி கர்த்தூசியரான டெனிஸ் விளக்கம் கூறும்போது, “மாமரி

முட்கள் நடுவேயுள்ள லீலி மலருக்கு ஒப்பிடப்படுகிறார்கள், ஏனெனில் மற்ற கன்னியர்கள் அனைவரும் தங்களுக்குத் தாங்களே, அல்லது மற்றவர்களுக்கு, முட்களாக இருந்தார்கள்; ஆனால் மாமரி தனக்கோ, மற்றவர்களுக்கோ அப்படி இருக்கவில்லை. ஏனெனில் தன்னைக் காண்பவர்கள் அனைவரின் மனங்களிலும் அவர்கள் கற்புள்ள எண்ணங்களை எழுப்பினார்கள்" என்கிறார். **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** இதை உறுதிப்படுத்தும் விதமாக, திவ்விய கன்னிகையின் அழகு அவர்களைக் கண்ட அனைவரிலும் பரிசுத்த கற்புக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது என்கிறார். மாமரியோடு வாழ்ந்ததாலேயே அர்ச். சூசையப்பர் கன்னிமையுள்ளவராக நிலைத்திருந்தார் என்பது அர்ச். ஜெரோமின் கருத்தாக இருந்தது. ஏனெனில், மரியாயின் திவ்விய கன்னிமையை மறுதலித்த பதிதனான யஹல்விதியுஸ் என்பவனுக்கு எதிராக அவர் எழுதும்போது, "மாமரி கன்னிகையாக நிலைத்திருக்கவில்லை என்று நீ சொல்கிறாய். அவர்கள் தான் கன்னிகையாக நிலைத்திருந்தது மட்டுமல்ல, மாறாக, சூசையப்பரும் மாமரியின் வழியாகவே தமது கன்னிமையைக் காத்துக் கொண்டார் என்று நான் சொல்கிறேன்" என்று அவர் சொல்கிறார்.

"சரீரப் பரிசுத்ததனத்திற்கு எதிராக சோதிக்கப்பட்டவர்களில் பலர் நம் பரிசுத்த இராக்கினியின் மீது பக்தி கொண்டதால் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொண்டார்கள்" என்று முத். அவிலா அருளப்பர் கூறுகிறார். ஓ, அசுத்ததனத்திற்கு எதிரான சகல சோதனைகளின் மீதும் வெற்றி கொள்ள "மரியாயே!' என்னும் திருப் பெயர் எவ்வளவு விசேஷ வல்லமையுள்ளதாக இருக்கிறது! ஓ மகா பரிசுத்த கன்னிமரியாயே, அந்தச் சோதனைகளிலிருந்து என்னை இரட்சித்துக் கொள்ளுங்கள். என் எல்லாச் சோதனைகளிலும் உங்களிடம் தஞ்சமடைந்து, அந்தச் சோதனை என்னில் நீடித்திருக்கும் வரை உங்களை இடைவிடாது மன்றாடிக் கொண்டிருக்க எனக்கு அருள்வீர்களாக. ஆமென்.

II

கன்னிமையாகிய இந்தப் புண்ணியத்தைப் பிதாவின் இந்த அன்பு மகள் எவ்வளவு அதிகமாக நேசித்தார்கள் என்றால், தன் கன்னிமையைக் காப்பாற்றிக் கொள்ள, சர்வேசுரனுக்குத் தாயாகும் மாபெரும் மகிமையைக் கூட துறந்து விட அவர்கள் சித்தமாயிருந்திருப்பார்கள் என்று **அர்ச். நிஸ்ஸா கிரகோரியார்** கூறுகிறார். அதிதூதரிடம், **"இது எப்படியாகும்? நானோ மனிதனை அறியேனே?"** என்று மாதா கேட்ட கேள்வியிலிருந்து நாமும் இந்த முடிவுக்கு வரலாம். மேலும், **"இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது"** என்றும் தொடர்ந்து மாதா கூறினார்கள் **(லூக்.1;34,38)**. இதன் மூலம், சம்மனசானவர் தனக்கு உறுதி கூறியது போல, பரிசுத்த ஆவியானவர் நிழலிடுவதால் மட்டுமே தான் ஒரு தாயாக ஆவார்கள் என்ற நிபந்தனையின் பேரிலேயே மாமரி தனது சம்மதத்தைத் தந்தார்கள் என்பது குறித்துக் காட்டப்படுகிறது.

கற்பைப் பாதுகாத்துக் கொண்டுள்ளவன் யாராயினும் அவன் ஒரு சம்மனசாக இருக்கிறான், அதை இழந்து விட்டவன் ஒரு பசாசாக இருக்கிறான் என்று அர்ச். அம்புரோஸ் கூறுகிறார். கற்புள்ளவர்கள் தேவதூதர்களாக ஆவார்கள் என்று நம் ஆண்டவர் நமக்கு உறுதி கூறுகிறார்: **"அவர்கள் பரலோகத்திலே தேவதூதர்களைப் போலிருப்பார்கள்" (மத்.22:30).** ஆனால் அசுத்தமுள்ளவர்கள் பசாசுக்களாக, கடவுளின் பார்வையில் வெறுப்புக்குரியவர்களாக ஆகிறார்கள். வளர்ச்சி பெற்றவர்களில் பெரும்பகுதியினர் இந்தத் தீமையால் இழக்கப் படுகிறார்கள் என்று சொல்வது அர்ச். ரெமிஜியுஸின் வழக்கமாக இருந்தது. நாம் அர்ச். அகுஸ்தினோடு ஏற்கெனவே சொல்லியுள்ளது போல, இந்தத் தீமையின் மீது வெற்றி கொள்வது மிக அரிது. ஏன்? ஏனெனில் அதன் மீதுவெற்றி கொள்வதற்கான வழிகள் மிக அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. அவை: உபவாசம், பாவ சந்தர்ப்பங்களை விலக்குதல், ஜெபம் ஆகியவையாகும்.

ஆ, என் மாசற்ற இராக்கினியே, அழகிய புறாவே, கடவுளின் நேசத்திற்குரியவர்களே, என் ஆத்துமத்தின் பல கறைகள் மற்றும் காயங்களின் மீது உங்கள் கண்களைத் திருப்ப அருவருப்புக்

கொள்ளாதீர்கள். என்னைப் பார்த்து, என் மீது பரிதாபம் கொள்ளுங்கள்! உங்களை மிக அதிகமாக நேசிக்கும் கடவுள் உங்களுக்கு எதையும் மறுப்பதில்லை. உங்களிடம் தஞ்சமடையும் யாரையும் ஏற்க மறுப்பது எப்படியென்று நீங்களும் அறிந்ததில்லை. மரியாயே, நான் உங்களிடம் தஞ்சமடைகிறேன். என் மீது தயவாயிருங்கள். கன்னி சுத்தங்கெடாத மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்!

ஏப்ரல் 25

“ஆண்டவர் சின்னஞ்சிறியவராகவும், மிக அதிகமாக நேசிக்கப்படத்தக்கவராகவும் இருக்கிறார்.''

I

மனிதர்களின் அன்பை அதிக எளிதாகவும், அதிக விசையோடும் தம்மிடம் இழுத்துக் கொள்ளுமாறு, தேவ சுதன் ஓர் இனிய சிறு குழந்தையின் வடிவத்தில் தம்மை உலகிற்கு வெளிப்படுத்த விரும்பினார். சிறு குழந்தைகள் மனிதர்களால் உடனடியாக நேசிக்கப் படுகிறார்கள். அவர்களைக் காண்பதும், அவர்களை நேசிப்பதும் ஒரே காரியம்தான். இவ்வாறு, மனிதர்கள் தம்மைக் கண்டு அஞ்சாமல், அவர்கள் தம்மை நேசிக்க வேண்டுமென்று விரும்பிய அவரும் ஒரு குழந்தையாகவே பிறக்க விரும்பினார்.

“ஓ ஆத்துமங்களே, இந்தச் சிறு குழந்தையானவரை நேசியுங்கள். ஏனெனில் அவர் அளவுக்கு மீறி நேசிக்கப்படத் தக்கவராக இருக்கிறார்! “'ஆண்டவர் மகத்துவமுள்ளவரும், மிகவும் புகழப்படத் தக்கவருமாய் இருக்கிறார் (சங்.144:3). ஆண்டவர் சிறியவரும் மிகவும் நேசிக்கப்படத் தக்கவருமாய் இருக்கிறார்! ஆம், இந்தக் கடவுள் நித்தியத்திலிருந்தே இருக்கிறவராக இருக்கிறார், “ஆண்டவர் மகத்துவமுள்ளவரும், மிகவும் புகழப்படத் தக்கவருமாய் இருக்கிறார் என்று'' தாவீதரசர் பாடியுள்ளது போல, தமது மகத்துவத்திற்காக அவர் எல்லாப் புகழ்ச்சிக்கும், வணக்கத்திற்கும் தகுதியுள்ளவராக இருக்கிறார்'' என்று அர்ச்.

பெர்னார்ட் கூறுகிறார். ஆனால் இப்போது நாம் பால் தேவைப்படுபவரும், தாமாக இயங்க முடியாதவரும், குளிரால் நடுங்குபவரும், முனகி அழுபவரும், தம்மை எடுத்துக் கதகதப்பாக்கித் தேற்ற ஒருவரைத் தேடுபவருமாக அவரைப் பார்க்கிறோம்; ஆ, இப்போது உண்மையாகவே அவர் நம் இருதயங்களால் மிகவும் நேசிக்கப் படத் தக்கவராக ஆகி இருக்கிறார்! "ஆண்டவர் சின்னஞ்சிறியவராகவும், அளவுக்கு அதிகமாக, நேசிக்கப்படத்தக்கவராகவும் இருக்கிறார்!"

நாம் நம் கடவுளாக அவரை ஆராதிக்க வேண்டும் என்பது உண்மைதான், ஆனால் இவ்வளவு நேசத்திற்குரியவரும், இவ்வளவு அதிகமாக நேசிப்பவருமாகிய ஒரு கடவுளுக்கு நாம் காட்டும் வணக்கத்தோடு நம் நேசமும் போட்டி போட வேண்டும்.

ஒரு குழந்தை மற்ற குழந்தைகளோடு இருப்பதிலும், மலர்களை வைத்திருப்பதிலும், தன்னை நேசிப்பவர்களின் கரங்களில் இருப்பதிலும் இன்பம் காண்கிறது என்று அர்ச். பொனவெந்தூர் நமக்கு நினைவுபடுத்துகிறார். புனிதர் சொல்ல வருவது என்னவெனில்: நாம் இந்தத் தேவ குழந்தையை மகிழ்விக்க விரும்பினால், நாமும் குழந்தைகளாகவும், எளியவர்களாகவும், தாழ்ச்சியுள்ளவர்களாகவும் வேண்டும்; புண்ணியம், சாந்தம், ஒறுத்தல் மற்றும் பிறர்சிநேகத்தின் மலர்களை அவருக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும்; நம் அன்பின் கரங்களில் அவரை நாம் தூக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

மேலும், அர்ச். பெர்னார்ட் தொடர்ந்து, "ஓ மனிதா, உன்னையே முழுவதுமாகக் கடவுளுக்குக் கொடுப்பதற்கு முன்பாக, நீ இன்னும் வேறு எதைக் காண விரும்புகிறாய்? எத்தகைய உழைப்போடும், நேசப் பற்றுதலோடும் உன் சேசு பரலோகத்திலிருந்து உன்னைத் தேடி இறங்கி வருகிறார் என்று பார். இன்னும் பிறந்தும் பிறவாதிருக்கையிலேயே அவரது மழலைப் பிதற்றல்கள் உன்னை அழைப்பதைக் கேள். ஆத்துமமே, ஆத்துமமே, உன்னைத்தான் நான் தேடுகிறேன்; உனக்காக, உன் அன்பைப் பெறுவதற்காகத்தான் நான் மோட்சத்திலிருந்து பூமிக்கு வந்திருக்கிறேன்" என்று அவர் சொல்வதாகத் தோன்றுகிறது.

ஓ சர்வேசுரா, மிருகங்களும் கூட, நாம் அவற்றிற்குக் கருணை காட்டினால், நாம் அவற்றிற்கு உணவளித்தால், அதற்காக அவை நம்மிடம் நன்றிபாராட்டுகின்றன. அவை நம் அருகில் வந்து, தங்களுக்கேயரிய முறைகளில் நம்மோடு உறவாடுகின்றன, நாம் நெருங்கி வரும்போது, மகிழ்ச்சியின் அடையாளங்களைக் காட்டுகின்றன. அப்படிய் இருக்க, தம் சுயத்தை நம் மீது பொழிந்துள்ளவரும், நமக்காக மோட்சத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்து, நம்மை இரட்சிக்கவும், நம்மால் நேசிக்கப்படவும் ஒரு சிறு குழந்தையாக ஆனவருமாகிய அதே சர்வேசுரனிடம் நாம் இவ்வளவு நன்றியற்றவர்களாக இருப்பது எப்படி? ஆகவே, "வாருங்கள், பெத்லகேமின் குழந்தையானவரை நாம் நேசிப்போமாக" என்பது அர்ச். பிரான்சிஸ் அசிசியாரின் பரவச நிலைக் கூக்குரலாக இருக்கிறது; இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியில் நம் இருதயங்களைத் தம்மோடு ஒன்றிக்கத் தேடியவரான சேசுகிறீஸ்து நாதரை நாம் நேசிப்போமாக.

"முக்கியமாக, இக்காரணத்திற்காகவே, அதாவது, கடவுள் மனிதனை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே சேசுநாதர் வந்தார்" என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார்.

ஆனால் என் சேசுவே, நீர் ஏற்கனவே வந்து விட்ட இக்காலத்திலும் கூட எத்தனை மனிதர்கள் உண்மையாகவே உம்மை நேசிக்கிறார்கள்? நீசனாய் இருக்கிற நான் உம்மை இது வரை எவ்வளவு குறைவாக நேசித்து வந்திருக்கிறேன் என்று நீர் அறிவீர்! உமது அன்பை நான் எவ்வளவு இழிவுபடுத்திய் இருக்கிறேன் என்பதை நீர் அறிவீர்! ஓ, அதற்காக நான் துக்கத்தினால் மரிப்பேன் எத்துணை நலமாய் இருக்கும்! என் பிரியமுள்ள மீட்பரே, உம்மை நிந்தித்ததற்காக நான் மனம் வருந்துகிறேன். ஆ, என்னை மன்னித்து, உம்மை நேசிக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும்!

II

சேசுநாதரின் அன்பிற்காக நாம் நம் அயலாரையும், நம்மை நோகச் செய்பவர்களையும் கூட நேசிக்க வேண்டும். மெசையா **"எதிர்காலப் பிதா"** என்று இசையாஸால் அழைக்கப்படுகிறார் **(9:6)**. இனி, இந்தப் பிதாவின் மகன்களாக இருக்கும்படியாக, நாம் நம் எதிரிகளை நேசிக்கவும், நம்மைக் காயப்படுத்துவோருக்கு நன்மை செய்யவும் வேண்டுமென்று சேசுநாதர் நமக்கு அறிவுறுத்துகிறார். **"உங்கள் எதிரிகளை சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்... (அப்போது) பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு (ஏற்ற) பிள்ளைகளாயிருப்பீர்கள்" மத்.5:44,45).** இதற்கு அவரே சிலுவையின் மீது நமக்கு முன்மாதிரிகை தருகிறார், தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகத் தமது பரலோகப் பிதாவிடம் மன்னிப்பைக் கேட்கிறார்.

"தன் எதிரியை மன்னிக்கிறவன், தனக்குக் கடவுளின் மன்னிப்பைப் பெறாமல் போக முடியாது" என்று அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் கூறுகிறார். **"மன்னியுங்கள், நீங்களும் மன்னிக்கப்படுவீர்கள்" (லுக்.6:37)** என்ற தெய்வீக உறுதிப்பாடும் நமக்கு உள்ளது. ஒரு துறவி இருந்தார். அவருடைய வாழ்வு அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை. ஆனால் தம் இறப்பின்போது, தம் பாவங்களுக்காக அவர் புலம்பியழுதார் என்றாலும் மிகுந்த நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அவரிடம் இல்லாமல் இருக்கவில்லை. "ஏனெனில், எனக்குச் செய்யப்பட்ட தீமைக்கு நான் ஒருபோதும் பழிவாங்கியதில்லை" என்றார் அவர். "நான் ஆண்டவரை நோகச் செய்தேன் என்பது உண்மைதான், ஆனால் தன் பகைவர்களை மன்னிப்போரை அவரும் மன்னிக்கிறார். நான் என்னை நோகச் செய்தவர்கள் அனைவரையும் மன்னித்து விட்டேன், ஆகவே, கடவுளும் இவ்வாறே என்னை மன்னிப்பார் என்று நான் உறுதியா ய் இருக்கிறேன்" என்றார் அவர்.

ஆனால், ஓ என் சேசுவே, எனக்கு மன்னிப்பு மட்டும் போதாது; நீர் என் அன்பிற்குத் தகுதியுள்ளவராக இருக்கிறீர். நீர் மரணம் வரைக்கும் என்னை நேசித்திருக்கிறீர்; மரணம் வரைக்கும் நானும் உம்மை நேசிப்பேன். ஓ அளவற்ற நன்மைத்தனமே, என் முழு

ஆத்துமத்தோடு நான் உம்மை நேசிக்கிறேன்; என்னை விட அதிகமாக நான் உம்மை நேசிக்கிறேன். உம் அன்பிற்காக என் அயலானை நான் நேசிக்கிறேன். ஆம், என் சேசுவே, உம்மை நான் நேசிக்கிறேன்; என் பொக்கிஷமும், என் வாழ்வும், என் அன்பும், என் சர்வமுமான உம்மை நான் எப்போதும் நேசிப்பேன்.

உயிர்ப்புக்குப் பின் வரும் இரண்டாம் ஞாயிறு

"நானே நல்ல ஆயன்."

(ஞாயிறு சுவிசேஷம்)

I

"நானே நல்ல ஆயன்" என்று சேசுநாதர் தம்மைப் பற்றிக் கூறினார் **(அரு.10:11).** ஒரு நல்ல ஆயனின் வேலை நல்ல புல்வெளிகளுக்குத் தன் மந்தையை இட்டுச் செல்வதும், ஓநாய்களிடமிருந்து அவற்றைப் பாதுகாப்பதும்தான்; ஆனால், ஓ இனிய இரட்சகரே, எந்த ஆயன் உம்மைப் போல் இரக்கம் உள்ளவனாக இருந்திருக்கிறான்? எந்த மேய்ப்பன் தன் மந்தைகளுக்காகத் தன் உயிரைக் கொடுத்து, அவற்றிற்குத் தகுதியாயிருந்த தண்டனையிலிருந்து அவற்றை விடுவித்திருக்கிறான்?

"நாம் பாவங்களுக்கு மரித்தவர்களாய் நீதிக்கு ஜீவிக்கும்படி அவர்தாமே சிலுவை மரத்தின் மேல் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார். அவருடைய காயங்களினால் சொஸ்தமாக்கப்பட்டீர்கள்" (1 இரா. 2:24). நம் நோய்களிலிருந்து நம்மை குணமாக்குவதற்காக இந்த நல்ல ஆயர் நம் நோய்களை எல்லாம் தம் மீது சுமந்து கொண்டு, தமது சொந்த ஆள்தன்மையில் நம் கடன்களைத் திருப்பிச் செலுத்தினார், இதற்காக அவர் ஒரு சிலுவையின் மீது அவஸ்தைப்பட்டு மரித்தார். தமது ஆடுகளின் மீது அவர் கொண்டிருந்த இந்த அளவற்ற அன்புதான் வேதசாட்சியான அர்ச். இஞ்ஞாசியாரை சேசுவுக்காகத் தம் உயிரைக் கையளிக்கும் ஆசையால் பற்றியெரியச் செய்தது. "ஆ, என் நேசம் சிலுவையில்

அறையுண்டிருக்கிறதே! என்ன! என் சர்வேசுரன் எனக்காக ஒரு சிலுவையின் மீது மரிக்கச் சித்தமாயிருந்திருக்க, அவருக்காக மரிக்கும்படி ஆசை கொள்வதற்கு என்னால் முடியாதா?" என்று இதே அன்பு அவரைக் கதறச் செய்தது. உண்மையில் சேசுநாதர் தங்களின் மீதுள்ள அன்பிற்காகத் தம் உயிரைக் கொடுத்திருக்கும் போது, வேதசாட்சிகளும் சேசுவுக்காகத் தங்கள் உயிரைக் கொடுத்தது பெரிய காரியமா? ஓ, சேசுநாதர் அவர்களுக்காக அனுபவித்த மரணம்--காயங்கள், குத்தித் துளைக்கும் ஆணிகள், நெருப்பால் பழுக்கச் சிவந்த இரும்புப் பாளங்கள், மற்றும் மிகக் கொடூர வேதனை தந்த மரணங்கள் போன்ற அவர்களுடைய வாதைகள் அனைத்தையும் எப்படி அவர்களுக்கு இனிமையானதாக மாற்றியது!

ஆனால் இந்த நல்ல மேய்ப்பரின் அன்பு, தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைத் தருவதோடு திருப்தியடையவில்லை. தமது மரணத்திற்குப் பின், முதலில் சிலுவையின் மீது பலியாக்கப்பட்ட தம் திருச்சரீரத்தை அவர்களுக்கு விட்டுச் செல்ல அவர் ஆசித்தார். அது அவர்களுக்கு உணவாகவும், அவர்களது ஆத்துமங்களுக்கு மேய்ச்சல் நிலமாகவும் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். "நம்மீது அவர் கொண்டிருந்த தகிக்கும் நேசம் தம்மை நம்மோடு ஒரே பொருளாக ஒன்றிக்கும்படி அவரைத் தூண்டியது" என்று அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் கூறுகிறார்.

ஆகவே, என் சேசுவே, நீர் யாருக்காக உம் உயிரைக் கையளித்தீரோ, அந்த ஆடுகளில் நானும் ஒருவன் என்பதை நினைத்தருளும். ஆ! முன்பு எனக்காக நீர் இறந்து கொண்டிருந்த போது, என் மீது வீசிய தயவுள்ள பார்வைகளில் ஒன்றை இப்போது என் மீது வீசியருளும். என்னைக் கண்ணோக்கி, என்னை மாற்றும், என்னை இரட்சியும். நீர் அன்புள்ள ஆயன் என்று உம்மையே அழைத்துக் கொண்டீர். நீர் காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடித்து, மகிழ்ச்சியோடு உமது தோள்களின் மீது அதைச் சுமந்து வந்து, அதன்பின் உம்மோடு அக்களிக்கும்படி உம் நண்பர்களை அழைக்கும் நல்ல மேய்ப்பராக இருக்கிறீர். என் நல்ல ஆயரே, நான் உம்மை நேசிக்கிறேன். மீண்டும் ஒருபோதும் உம்மை விட்டு நான் பிரிய என்னை ஒருபோதும் அனுமதியாதேயும்.

II

இந்த நல்ல மேய்ப்பர் காணாமல் போன ஓர் ஆட்டைக் காணும்போது, அதை மீண்டும் தம்முடையதாக்கிக் கொள்ள என்னதான் செய்ய மாட்டார், என்ன வழியைத்தான் அவர் கையாள மாட்டார்! அதைக் கண்டு பிடிக்கும் வரை அவர் அதைத் தேடுவதை நிறுத்துவதில்லை. **"... அவைகளில் ஒன்று காணாமற் போனால்... காணாமல் போன ஆட்டைக் காணும் வரையும் அதைத் தேடித் திரிய மாட்டானா?" (லூக்.15:4).** அதைத் தாம் கண்டுபிடித்ததும், இனி மீண்டும் அது தொலைந்து விடாதபடி, அதை அக்களிப்போடு தம் தோளின்மீது போட்டுக் கொண்டு, திரும்பி வந்து, காணாமல் போன ஆட்டைத் தாம் தேடிக் கண்டுபிடித்தது பற்றித் தம்மோடு அகமகிழ்ந்து களிகூரும்படி தம் நண்பர்களையும், அயலாரையும், அதாவது சம்மனசுக்களையும், புனிதர்களையும், அவர் அழைக்கிறார். அப்படிய் இருக்க, தமக்கு முதுகைத் திருப்பிக் கொண்டு, தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிற பாவிகளுக்கு இவ்வளவு அன்புள்ளவராகத் தம்மைக் காட்டுகிற இந்த நல்ல ஆண்டவரை யார்தான் தனது முழு நேசப் பற்றுதலோடு நேசிக்க மாட்டான்?

ஓ என் முழு அன்பிற்கும் தகுதியுள்ளவராகிய என் இரட்சகரே, காணாமல் போன ஓர் ஆட்டை உமது பாதங்களின் அருகில் பாரும்! நான் உம்மை விட்டு விலகிச் சென்றேன், ஆனால் நீர் என்னைக் கைவிட்டு விடவில்லை. என்னை மீண்டும் சொந்தமாக்கிக் கொள்ள எல்லா வழிகளையும் நீர் முயன்று பார்த்து விட்டீர். என்னைத் தேடுவதை நீர் நிறுத்தி விட்டிருந்தால், எனக்கு என்ன ஆகி இருக்கும்! ஓ எனக்கு ஐயோ கேடு! எவ்வளவு நீண்ட காலம் நான் உம்மிடமிருந்து தொலைவாக வாழ்ந்திருக்கிறேன்! இப்போது, உம் இரக்கத்தின் வழியாக, நான் உமது வரப்பிரசாதத்தில் இருக்கிறேன் என்று நம்புகிறேன். நான் முதலில் உம்மை விட்டு ஓடிப் போனதால், இப்போது வேறு எதையுமன்றி உம்மை நேசிக்கவும், உமது பாதங்களைத் தழுவியபடி வாழவும் இறக்கவும் நான் ஆசிக்கிறேன். ஆனால் நான் வாழும்போது, உம்மை விட்டு விலகும் ஆபத்தில் நான் இருக்கிறேன்; ஓ, உமது பரிசுத்த அன்பின் பந்தத்தால் என்னைக் கட்டி,

உமது அன்பின் சங்கிலிகளால் என்னைப் பிணைத்தருளும். நான் இந்த பூமியில் வாழும் வரைக்கும், என்னைத் தேடுவதை ஒருபோதும் நிறுத்தி விடாதேயும். “காணாமல் போன ஆட்டைப் போல வழிதவறிப் போனேன். உமது ஊழியனைத் தேடி வாரும்" (சங்.118:176). ஓ மரியாயே, பாவிகளுக்காகப் பரிந்து பேசுகிறவர்களே, எனக்குப் பரிசுத்த நிலைமை வரத்தைப் பெற்றுத் தாருங்கள்.

திங்கள்

“நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தத்திற்கு ஓடக்கடவோம்."

நாம் நம் பலவீனத்தின் காரணமாக, நாம் இடைவிடாமல் போரிட வேண்டியுள்ள நம் எதிரிகளின் தாக்குதல்களின் கீழ் விழுந்து விடுவோமோ என்று பயப்படுவோமானால், அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துகிறபடி நாம் என்ன செய்ய வேண்டும் என்று பாருங்கள்: “நமது விசுவாசத்தின் ஆதிகர்த்தரும், அதைச் சம்பூரணமாக்கு கிறவருமாகிய சேசுநாதரை எப்போதும் கண்முன்பாக வைத்துக் கொண்டு, நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தத்துக்குப் பொறுமையோடு ஓடக்கடவோம்; அவர் சந்தோஷ ஜீவியம் தமக்கு முன் வைக்கப்பட்டிருக்க, அவமானத்துக்குக் கூச்சப்படாமல், சிலுவையை ஏற்றுக்கொண்டார்" (எபி.12:2). தமது சிலுவையிலிருந்து நமக்கு உதவியையும், வெற்றியையும், கிரீடத்தையும் தருகிற சிலுவையில் அறையுண்ட சேசுநாதரைப் பார்த்துக் கொண்டு, மிகுந்த தைரியத்தோடு போர்க்களத்துக்கு ஓடக் கடவோம். கடந்த காலங்களில், நம் மீட்பர் அனுபவித்த காயங்களையும், வேதனைகளையும் நாம் தியானிக்காததால், பாவத்தில் விழுந்தோம். ஆகவே உதவிக்காக நாம் அவரிடம் தஞ்சமடையவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நம் மீதுள்ள அன்பிற்காக அவர் அனுபவித்த அனைத்தையும், நாம் அவரிடம் தஞ்சமடையும்போது, நமக்கு உதவ அவர் எப்படி எப்போதும் ஆயத்தமாக நிற்கிறார் என்பதையும் நம் கண்களுக்கு முன்பாக நாம் வைத்துக் கொள்வோ மானால், நம்

எதிரிகளால் நாம் வெற்றி கொள்ளப்பட மாட்டோம் என்பது உறுதி. **அர்ச். தெரேசம்மாள்** தனக்கு வழக்கமான தாராளத்தோடு: “கடவுளே! கடவுளே! என்று சொல்வதன் மூலம் சாத்தானை நடுங்கச் செய்ய நம்மால் முடியும் என்னும்போது, பசாசு! பசாசு! என்று சொல்லிக் கொண்டிருக்கும் மனிதர்களின் பயங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்கிறாள். மறு புறத்தில், இதே புனிதை, நாம் நம் நம்பிக்கையை எல்லாம் கடவுளில் வைக்காவிடில், நம் சொந்த முயற்சிகளால் மிகக் குறைந்த அளவு பயனே இருக்கும், அல்லது எந்தப் பயனும் இருக்காது என்கிறாள். அவளது சொந்த வார்த்தைகளில் கூறுவதானால்: “நாம் நம் நம்மில் உள்ள நம்பிக்கை முழுவதையும் முற்றிலுமாகக் கைவிட்டு, அதை முழுமையாகக் கடவுளில் வைக்காவிடில், நம் முயற்சிகள் அனைத்தும் சிறிதளவு பயனுள்ளவையாகவே இருக்கும்."

ஓ, சேசுநாதரின் திருப்பாடுகளும், பீடத்தின் தேவத்திரவிய அனுமானமும் நமக்கு நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றின் எப்பேர்ப்பட்ட இரு மாபெரும் பரம இரகசியங்களாக இருக்கின்றன! விசுவாசம் நமக்கு உறுதி தந்திராவிட்டால், நாம் ஒருபோதும் விசுவசித்திருக்கவே முடியாத பரம இரகசியங்கள்! எல்லாம் வல்ல சர்வேசுரன் மனிதனாகத் திருவுளம் கொள்வதும், தமது இரத்தமெல்லாம் சிந்தி, ஒரு சிலுவையின் மீது துன்ப துயரமிக்க மரணம் அடைவதும் -- இதெல்லாம் எதற்காக? நம் பாவங்களுக்குரிய பரிகாரத்தைச் செலுத்தவும், கலகக்காரப் புழுக்களாகிய நமக்கு இரட்சணியத்தை சம்பாதித்துத் தரவுமே! அதன்பின் நம்மோடு தம்மை இணைத்துக் கொள்ளும்படியாக, முன்பு சிலுவையின் மீது நமக்காகப் பலியாக்கப்பட்ட தமது சொந்த திருச்சரீரத்தை நமக்கு உணவாகத் தர அவர் தயைபுரிகிறார்! ஓ சர்வேசுரா, இந்த இரு பரம இரகசியங்களும் சகல மனிதர்களின் இருதயங்களையும் அன்பினால் சுட்டெரிக்காதிருப்பது எப்படி! மிகவும் கைவிடப்பட்டவனாகவே இருந்தாலும், மனிதர்கள் மீது இவ்வளவு அதிகமான அன்பு கொண்டுள்ளவரும், அவர்களுக்கு நன்மை செய்ய மிகுந்த ஆர்வம் கொண்டவருமான ஒரு கடவுளைத் தான் காணும்போது, தான் செய்த தீமைக்காக அவன் வருந்துவான்

என்றால், தான் மன்னிக்கப்படுவது பற்றி அவநம்பிக்கை கொள்ளக் கூடிய பாவி யார் இருக்க முடியும்? இதனாலேயே **அர்ச். பொனவெந்தூர்** மிகுந்த நம்பிக்கையுடன், “என் இரட்சணியத்திற்காக மிக அதிகமாகச் செய்துள்ளவரும், துன்பப் பட்டுள்ளவருமான ஆண்டவர் எனக்குத் தேவைப்படும் எதையும் எனக்குத் தர மறுக்க மாட்டார் என்று உறுதியாக நம்பி, நான் பெரும் நம்பிக்கை கொண்டிருப்பேன்'' என்றார். என்னை இரட்சிப்பதற்காக இவ்வளவு அதிகமாகச் செய்துள்ளவரும், இவ்வளவு அதிகமாகத் துன்புற்றவருமான அவர் என் இரட்சணியத்திற்குத் தேவையான வரப்பிரசாதங்களை எனக்குத் தர எப்படி மறுக்க முடியும்?

II

“ஆதலால் நாம் இரக்கம் பெறும்படிக்கும், அவசிய சமயத்துக்குக் கிருபையைக் கண்டடையும்படிக்கும் அவருடைய கிருபைச் சிம்மாசனத்தை நம்பிக்கையோடு அண்டிப் போவோமாக'' (எபி.4:16) என்று அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துகிறார். சிலுவையே இந்தக் கிருபையின் சிம்மாசனம். சேசுநாதர் தம்மிடம் வரும் அனைவருக்கும் வரப்பிரசாதங்களையும், இரக்கத்தையும் தந்தருளும்படியாக அதன் மீது வீற்றிருக்கிறார். அவசிய நேரத்தில் நம் இரட்சணியத்துக்குரிய உதவியை நாம் அடைய வேண்டுமானால், உடனே அவரிடம் தஞ்சம் புகுவது அவசியம். ஆகவே, நாம் விரைந்து போய், சேசுநாதரின் சிலுவையைத் தழுவிக் கொள்வோம். நாம் மிகுந்த நம்பிக்கையோடு அதனிடம் செல்வோம். நம் துன்பங்களைக் கண்டு நாம் அச்சம் கொள்ளலாகாது. சிலுவையில் அறையுண்ட சேசுநாதரில், நாம் எல்லா செல்வ வளங்களையும், எல்லா வரப்பிரசாதத்தையும் கண்டடையலாம். “**நீங்கள் அவரிடத்தில் எல்லாவற்றிலும் செல்வந்தராக்கப் பட்டிருக்கிறீர்கள். இவ்விதமாக, நமது ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதர் வெளிப்படுவதற்கு எதிர்பார்த்திருக்கிற உங்களுக்கு எந்த வரப்பிரசாதத்திலும் யாதொரு குறைவுமில்லை'' (1 கொரி. 1:5,7).** சேசுநாதரின் பேறுபலன்கள் எல்லா தேவ பொக்கிஷங்களையும் கொண்டு நம்மை செல்வந்தர்கள் ஆக்கியுள்ளன; நாம் ஆசிக்கக்கூடிய ஒவ்வொரு

வரப்பிரசாதத்தையும் அடைய வல்லவர்களாக நம்மை ஆக்கியுள்ளன.

"பசாசு பாவத்தின் மூலம் நமக்குச் செய்துள்ள தீமையை விட, சேசுநாதர் தமது மரணத்தின் மூலம் நமக்கு அதிக நன்மையைச் செய்திருக்கிறார்" என்று அர்ச். லியோ கூறுகிறார். இரட்சணியமாகிய கொடை பாவத்தை விடப் பெரியது என்றும், வரப்பிரசாதம் பாவத்தின் மீது வெற்றிகொண்டு விட்டது என்றும் தமக்கு முன்பு அர்ச். சின்னப்பர் கூறியுள்ள காரியத்தை இந்த வார்த்தைகளின் மூலம் அவர் விளக்குகிறார்: **"வரப்பிரசாதத்தின் அளவு குற்றத்தின் அளவைப்போல் அல்ல... குற்றம் பெருகின இடத்தில் வரப்பிரசாதம் அதிமிகப் பெருகிற்று" (உரோ.5:15,20).** இதிலிருந்து, தமது பேறுபலன்களின் வழியாக ஒவ்வொரு நன்மையையும், ஒவ்வொரு வரப்பிரசாதத்தையும் நாம் பெற்றுக் கொள்வோம் என நம்பிய் இருக்கும்படி நம் இரட்சகர் நம்மை ஊக்கப் படுத்துகிறார். தமது நித்தியப் பிதாவிடமிருந்து நமக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் வழியை அவர் நமக்கு எப்படிக் கற்பிக்கிறார் என்று பாருங்கள்: **"என் நாமத்தினால் நீங்கள் பிதாவினிடத்தில் எதையாகிலும் கேட்டால், அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (அரு.16:23).** நீங்கள் எதை ஆசித்தாலும், என் பெயரால் அதைப் பிதாவிடம் கேளுங்கள், அப்போது உங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நான் உங்களுக்கு வாக்களிக்கிறேன் என்று அவர் சொல்கிறார். உண்மையில், தமது நேசமுள்ள ஏக பேறான திருச்சுதனையே பிதாவானவர் நமக்காகத் தந்திருக்க, அவர் வேறு எதைத்தான் நமக்குத் தர மறுக்க முடியும்? **"தமது சொந்தக் குமாரன் மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் மற்றெல்லாவற்றையும் அவரோடு நமக்குத் தானம் பண்ணாதிருப்பது எப்படி?" (உரோ.8:32).** எல்லாவற்றையும் என்று அப்போஸ்தலர் சொல்கிறார். இவ்வாறு, மன்னிப்போ, நிலைமை வரமோ, பரிசுத்த நேசமோ, உத்தமதனமோ, மோட்சமோ-- எந்த வரப்பிரசாதமும் நமக்கு மறுக்கப்படுவதில்லை. "எல்லாவற்றையும், எல்லாவற்றையும், அவர் நமக்குத்

தந்திருக்கிறார்." ஆனால் நாம் அவரிடம் ஜெபிக்க வேண்டும். கடவுள் தம்மைக் கூவியழைக்கும் அனைவருக்கும் முழு தாராளமுள்ளவராக இருக்கிறார்: **“அவர் தம்மை மன்றாடுகிற யாவர் மட்டிலும் செல்வந்தராய் இருக்கிறார்" (உரோ.10:12).**

செவ்வாய்

பரிதாபத்திற்குரிய பாவிகளுக்குப் பசாசு காட்டும் மாயத் தோற்றங்கள்

I

ஓர் இளைஞன் சாவான பாவங்களைச் செய்திருக்கிறான், என்றாலும் அவற்றை அவன் சங்கீர்த்தனம் செய்து, தேவ வரப்பிரசாதத்தை மீண்டும் பெற்றிருக்கிறான். இந்நிலையில் அவன் பாவம் செய்யுமாறு பசாசு மீண்டும் அவனைச் சோதிக்கிறது; அவன் எதிர்த்து நிற்கிறான், ஆனால் ஏற்கெனவே, எதிரி தனக்குக் கூறும் வஞ்சகமான காரியங்களின் காரணமாக, அவன் தடுமாறத் தொடங்குகிறான். நான் அந்த மனிதனிடம்: “எனக்குப் பதில் சொல்: நீ திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளதும், அகில உலகையும் விட அதிக மதிப்புள்ளதுமாகிய தேவ வரப்பிரசாதத்தை, இந்த நீசமான சந்தோஷத்திற்காக இப்போது இழந்து விடப் போகிறாயா? உன் நித்திய மரணத்தின் தீர்ப்பை நீயே எழுதி, நித்தியத்திற்கும் நரகத்தில் கிடந்து எரியும்படி உனக்கு நீயே தண்டனைத் தீர்ப்பிட்டுக் கொள்ளப் போகிறாயா?" என்று கேட்கிறேன். “இல்லை, நான் எனக்குத் தண்டனைத் தீர்ப்பிட விரும்பவில்லை, இரட்சிக்கப்படவே நான் விரும்புகிறேன். இப்போது இந்தப் பாவத்தை நான் செய்தாலும், பிற்பாடு அதைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லிக் கொள்வேன்" என்று நீ சொல்கிறாய். இதோ, சோதிப்பவனின் முதல் மாய்கை! ஆக, பிற்பாடு பாவசங்கீர்த்தனம் செய்து கொள்வேன் என்று நீ என்னிடம் சொல்கிறாயா? ஆனால் இதனிடையே நீ ஏற்கெனவே உன் ஆத்துமத்தைக் கையளித்து விட்டாயே! எனக்குச் சொல், உன் கையில் ஓராயிரம் பொற்கிரீடங்களுக்குச் சமமான மதிப்புள்ள ஓர் அணிகலன் இருக்கிறது என்றால், பிற்பாடு நான் கவனமாகத் தேடிக் கண்டுபிடித்து

விடுவேன் என்று சொல்லியபடி அதை ஆற்றில் எறியத் துணிவாயா? சேசுநாதர் தமது திரு இரத்தத்தால் விலைக்கு வாங்கிய உனது ஆத்துமமாகிய விலையேறப் பெற்ற அணிகலனை நீ உன் கையில் வைத்திருக்கிறாய். அதை நீயாகவே நரகத்தில் வீசியெறிந்து விட்டு, (ஏனெனில் பாவம் செய்வதில், தேவ நீதியின்படி நீ ஏற்கனவே தண்டனைத் தீர்ப்புப் பெறுகிறாய்.) பாவசங்கீர்த்தனத்தில் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வேன் என்று நம்புகிறேன் என்கிறாய். ஆனால் ஒருவேளை அதை உன்னால் திரும்பப் பெற முடியாமல் போய் விட்டால்? அதைத் திரும்பப் பெறுவதற்கு நீ உண்மையான மனஸ்தாபப்பட வேண்டும், அந்த மனஸ்தாபமோ கடவுளின் கொடையாக இருக்கிறது; கடவுள் இந்த மனஸ்தாபத்தை உனக்குத் தரவில்லை என்றால்? பாவசங்கீர்த்தனம் செய்ய உனக்கு நேரம் தராமல் மரணம் வந்து விடும் என்றால்?

பாவசங்கீர்த்தனம் செய்யாமல் ஒரு வார காலம் கடந்து போக நான் அனுமதிக்க மாட்டேன் என்கிறாய். ஒரு வார காலம் உயிரோடிருப்பாய் என்று உனக்கு வாக்களித்தவர் யார்? நாளைக்குப் பாவசங்கீர்த்தனம் செய்வேன் என்கிறாய். நாளைய தினத்தை உனக்கு வாக்களித்தவர் யார்? "கடவுள் உனக்கு நாளைய தினத்தை வாக்களிக்கவில்லை. ஒரு வேளை அவர் அதை உனக்குத் தரலாம், தராமலும் போகலாம்" என்று **அர்ச். அகுஸ்தினார்** சொல்கிறார். இரவில் நல்ல உடல்நலத்தோடு படுக்கைக்குச் சென்று, காலையில் இறந்தவர்களாகக் காணப்பட்ட பலருக்குக் கடவுள் அதைத் தர மறுத்திருக்கிறார். பாவம் செய்து கொண்டிருக்கும்போதே எத்தனை பேரைக் கடவுள் அடித்து வீழ்த்தி, நரகத்திற்கு அனுப்பிய் இருக்கிறார்!

அதையே உனக்கும் அவர் செய்வார் என்றால், உன் நித்திய அழிவை நீ எப்படி சரிசெய்து கொள்ள முடியும்? "நான் பிற்பாடு பாவசங்கீர்த்தனம் செய்து கொள்வேன்" என்ற இந்த மாய்கையின் வழியாக, பசாசு ஆயிரமாயிரம் ஆன்மாக்களை நரகத்திற்கு இழுத்துச் சென்றிருக்கிறது. தன்னையே தீர்ப்பிட்டுக் கொள்ளத் தீர்மானிக்கும் அளவுக்கு அவநம்பிக்கை கொண்ட ஒரு பாவியைக் கண்டுபிடிப்பது நமக்கு மிகவும் அரிதான காரியம்: எதிர்காலப் பாவசங்கீர்த்தனம் என்ற நம்பிக்கையில் பாவம் செய்யும்போதும் கூட, அனைவருமே

இப்படிச் செய்கிறார்கள். இவ்வாறு ஏராளமான பரிதாபத்திற்குரிய ஆத்துமங்கள் இழக்கப்பட்டிருக் கின்றன. இப்போது அவர்கள் தங்கள் கடந்த காலத்தை இனி சரிசெய்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆகவே, என் தேவனே, நீர் எனக்கு மிக நல்லவராய் இருந்திருப்பதாலேயே நான் இப்படி உம்மிடம் நன்றியற்றவனாக இருந்து வந்திருக்கிறேனா? நாம் ஒரு போட்டியில் ஈடுபட்டிருக்கிறோம்: நான் உம்மிடமிருந்து விலகியோட வேண்டும், நீர் என்னைத் துரத்திக் கொண்டு வர வேண்டும்; நீர் எனக்கு நன்மை செய்ய வேண்டும், பதிலுக்கு நான் உமக்குத் தீமை செய்ய வேண்டும்! ஆ, என் ஆண்டவரே, வேறு எந்தக் காரணமும் இல்லாதிருந்தாலும் கூட, எனக்கு நீர் காண்பித்துள்ள நன்மைத்தனம் ஒன்றே உம்மை நான் நேசிக்கச் செய்திருக்க வேண்டுமே, ஏனெனில் நான் என் பாவங்களை அதிகரித்துக் கொண்டிருந்த போது, நீரோ உமது வரப்பிரசாதங்களை அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்; இப்போது நீர் எனக்குத் தரும் இந்த ஞான ஒளிக்கு நான் தகுதி பெற்றிருப்பது எப்படி? என் ஆண்டவரே, இதற்காக என் முழு இருதயத்தோடு நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; நித்திய காலமும் மோட்சத்தில் இதற்காக நான் உமக்கு நன்றி செலுத்திக் கொண்டிருப்பேன் என்று நம்பிய் இருக்கிறேன்.

II

ஆனால்: தற்போது, சோதனையை எதிர்த்து நிற்க என்னிடம் பலமிருப்பதாக நான் உணரவில்லை என்று நீ சொல்கிறாய். இதோ பசாசின் இரண்டாவது மாய்கை! தற்போதைய ஆசாபாசத்தை எதிர்த்து நிற்பது சாத்தியமில்லை என்று உனக்குத் தோன்றும்படி அவன் செய்கிறான். முதலாவதாக, அப்போஸ்தலர் கூறுவது போல கடவுள் பிரமாணிக்கமுள்ளவர், நம் பலத்துக்கு மேலாக சோதிக்கப்பட அவர் நம்மை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பதை நீ அறிந்திருக்க வேண்டும்: **“சர்வேசுரன் பிரமாணிக்கம் உள்ளவர்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு**

அவர் இடங்கொடுக்க மாட்டார்" (1கொரி.10:13). மேலும், நான் உன்னிடம் கேட்கிறேன், இப்போது எதிர்த்து நிற்கும் நம்பிக்கை உன்னிடம் இல்லை என்றால், பிற்பாடு எதிர்த்து நிற்க உன்னால் முடியும் என்று எப்படி நம்புவாய்? இனி, வேறு பாவங்களுக்கு உன்னைச் சோதிக்கப் பசாசு தவற மாட்டான்; அதன்பின் அவன் உனக்கு எதிராக மேன்மேலும் அதிக பலம் பெறுவான், நீயோ அதிகமதிகம் பலவீனமுள்ளவன் ஆவாய். ஆகவே, இந்த நெருப்பை இப்போது உன்னால் அணைக்க முடியாது என்று நீ உணர்கிறாய் என்றால், அது அளவிட முடியாத வண்ணம் பெரிதாகி விடும்போது எப்படி அதை அணைப்பாய்? கடவுள் எனக்கு உதவுவார் என்கிறாயா? ஆனால் இப்போதும் உனக்கு உதவ அவர் தயாராக இருக்கிறாரே! அப்படிய் இருக்க, இந்த உதவியைக் கொண்டு நீ ஏன் பாவத்தை எதிர்த்து நிற்கக் கூடாது? இப்போது உனக்கு அதிக உதவியும் பலமும் தேவை என்றால், அதை ஏன் நீ கடவுளிடம் கேட்கக் கூடாது? தம்மிடம் கேட்கப்படும் அனைத்தையும் தந்தருள்வதாக வாக்களித்துள்ள கடவுளின் பிரமாணிக்கத்தின் மீது நீ சந்தேகப்படுகிறாயா? **"கேளுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்.7:7).** கடவுள் தவற முடியாதவர், அவரிடம் தஞ்சமடைவாய், அப்போது அவர் எதிர்த்து நிற்க உனக்குத் தேவையான பலத்தைத் தந்தருள்வார். "சாத்தியமில்லாதவற்றைக் கடவுள் கட்டளை இடுவதில்லை, மாறாக, கட்டளையிடுவதன் மூலம் உன்னால் செய்ய முடிவதைச் செய்யும்படி அவர் உனக்கு அறிவுறுத்துவதோடு, உன்னால் (செய்ய) முடியாததற்காக ஜெபிக்கும்படியும் அவர் உன்னிடம் கூறுகிறார். உன்னால் செய்ய முடியும்படி அவர் உனக்கு உதவி செய்கிறார். செய்ய முடியாத எதையும் கடவுள் கட்டளையிடுவதில்லை. ஆனால் தமது கட்டளைகளை நம்மீது சுமத்துவதன் மூலம், அவர் நம்மீது பொழியும் உதவியைக் கொண்டு நம்மால் முடிந்ததைச் செய்யும்படி அவர் நமக்கு அறிவுறுத்துகிறார்" என்று **திரிதெந்தின் பொதுச்சங்கம்** கூறுகிறது. அந்த உதவி எதிர்த்து நிற்க நமக்குப் போதாது என்றால், இன்னும் அதிக உதவிக்காக மன்றாடும்படி அவர் நமக்கு அறிவுறுத்துகிறார்; நாம் முறையான விதத்தில் அதைக் கேட்டு மன்றாடுவோம் என்றால், அவர் நிச்சயமாக அதை நமக்குத் தந்தருள்வார்.

ஓ என் பிரியமுள்ள சேசுவே, நான் உம்மிடம் வருகிறேன். உமது திரு இரத்தத்தின் வழியாக நான் இரட்சிக்கப்படுவேன் என்று நம்புகிறேன். இதை நான் உறுதியாக நம்புகிறேன், ஏனெனில் நீர் எனக்கு அத்தகைய மாபெரும் இரக்கம் காட்டிய் இருக்கிறீர். இதனிடையே, உமக்கு இனி ஒருபோதும் துரோகம் செய்யாதிருக்க எனக்குப் பலம் தருவீர் என்றும் நான் நம்புகிறேன். நான் மிக அதிகமாக உம்மை நோகச் செய்து விட்டேன். என் எஞ்சிய வாழ்வில் நான் உம்மை நேசிப்பேன். எனக்காக மரித்த பின், நான் அவருக்குச் செய்த எல்லாத் தீமைகளையும் மீறி மிகுந்த பொறுமையோடு என்னைப் பொறுத்துக் கொண்டுள்ளவருமாகிய இந்த சர்வேசுரனை நான் எப்படி நேசிக்காதிருக்க முடியும்? ஓ என் ஆத்துமத்தின் தேவனே, என் முழு இருதயத்தோடு நான் மனஸ்தாபப்படுகிறேன்; என்னை விட அதிகமாக நான் உம்மை நேசிக்கிறேன். நித்தியப் பிதாவே, சேசுகிறீஸ்துநாதரின் பேறுபலன்களின் வழியாக, உம்மை நேசிக்க விரும்பும் நீசப் பாவியாகிய எனக்கு உதவி செய்தருளும். மரியாயே, என் நம்பிக்கையே, எனக்கு ஒத்தாசையாயிருங்கள்; பசாசு மீண்டும் பாவம் செய்யும்படி என்னைச் சோதிக்கும் ஒவ்வொரு முறையும் உம் திருமகனிடமும், உங்களிடமும் எப்போதும் தஞ்சமடையும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

புதன்

அர்ச். சூசையப்பரின் பாதுகாவல்

I

சேசுகிறீஸ்துவிடம் அர்ச். சூசையப்பரின் பரிந்துரை எவ்வளவு வல்லமையுள்ளது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, **“அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்'' (லூக்.2:51)** என்ற நற்செய்தி வாக்கியத்தை அறிந்திருப்பது ஒன்றே போதுமானது. முப்பது வருடங்களாக, தேவசுதன் சூசையப்பருக்கும் மாமரிக்கும் மிக கவனமாகக் கீழ்ப்படிந்திருந்தார். சூசையப்பர் ஒரு வார்த்தை அல்லது ஒரு சைகை மூலம் தமது சித்தத்தை அவருக்குக் குறித்துக் காட்டுவது மட்டுமே தேவையாயிருந்தது. சேசுநாதர் உடனே அவருக்குக்

கீழ்ப்படிந்தார். கீழ்ப்படிவதில் சேசுநாதர் கொண்டிருந்த இந்தத் தாழ்ச்சி, அர்ச். சூசையப்பரின் மகத்துவம் தேவமாதா நீங்கலாக மற்ற எல்லாப் புனிதர்களின் மகத்துவத்திற்கும் மேலானது என்று நமக்குக் கற்பிக்கிறது.

அர்ச். சூசையப்பரின் பாதுகாவலில் நாம் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கை பற்றி அர்ச். தெரேசம்மாள் கூறும் காரியத்தை நாம் சிந்திப்போம்: “நம் ஆண்டவர் ஒரு தேவையில் நமக்கு உதவும் வல்லமையை மற்றப் புனிதர்களுக்குத் தந்துள்ளதாகத் தோன்றுகிறார்; ஆனால் இந்தப் புனிதர் எல்லாவற்றிலும் நமக்கு உதவுகிறார் என்பதை அனுபவம் நமக்கு எண்பிக்கிறது; பூலோகத்தில் தாம் சூசையப்பருக்குக் கீழ்ப்படிந்திருந்தது போலவே, ப்போது பரலோகத்திலும் அவர் கேட்கும் எதையும் தாம் அவருக்கு மறுப்பதில்லை என்று நாம் புரிந்து கொள்ள வேண்டுமென நம் ஆண்டவர் விரும்புகிறார். அர்ச். சூசையப்பருக்குத் தங்களை ஒப்புவிக்கும்படி நான் அறிவுரை கூறியுள்ள மற்ற மனிதர்கள் இதை அனுபவத்தில் உணர்ந்திருக்கிறார்கள். சூசையப்பருக்குத் தோத்திரமாக ஏதாவது ஒரு பக்தி முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் அவருக்கு ஊழியம் செய்து, அதனால் எப்போதும் புண்ணியத்தில் வளர்ச்சி பெறாத யாரையும் நான் அறிந்ததில்லை. நான் சொல்வதில் நம்பிக்கை இல்லாதவர்கள் இதைத் தாங்களே பரிசோதித்துப் பார்க்கும்படி நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். சம்மனசுக்களுடைய இராக்கினியையும், சேசுவின் குழந்தைப் பருவத்தில் அவர்கள் செய்யவும் அனுபவிக்கவும் வேண்டியிருந்த உழைப்புகளையும், துன்பங்களையும் தியானித்து விட்டு, இந்தத் திருத்தாயாருக்கும், தேவ திருச்சுதனுக்கும் அச்சமயத்தில் அர்ச். சூசையப்பர் செய்த அனைத்து சேவைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்தாதிருப்பது எப்படி சாத்தியம் என்று என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆகவே, நம் நிர்ப்பாக்கியங்களுக்கு மத்தியில் துன்புற்றவர்களாக நம் ஆண்டவர் நம்மைக் காணும்போது, எகிப்தின் பஞ்ச காலத்தில் பாரவோன் தன் மக்களுக்குக் கூறிய, “சூசையிடம் போங்கள்" என்ற வார்த்தைகளை நம் ஆண்டவர்

நம்மிடம் கூறுவதாக நாம் கற்பனை செய்து கொள்வோம்: உங்களுக்கு ஆறுதல் தேவையானால், “சூசையப்பரிடம் போங்கள்."

அர்ச். சூசையப்பரே, என் பரிசுத்த பாதுகாவலரே, மாமரிக்குப் பிறகு, என் முதன்மையான பரிந்து பேசுபவராகவும், என் பாதுகாவலராகவும் நான் தேர்ந்து கொள்கிறேன். ஏதாவது ஒரு விசேஷ பக்தி முயற்சியாலும், உமது பாதுகாவலின் கீழ் என்னை வைப்பதாலும் ஒவ்வொரு நாளும் உம்மை மகிமைப்படுத்துவேன் என்று நான் வாக்களிக்கிறேன். உமது ஊழியனாக இருக்க நான் தகுதியற்றவன்; ஆனால் சேசு மரியாயின் மீது நீர் கொண்டுள்ள அன்பின் வழியாக, உமது நிரந்தர ஊழியனாக என்னை ஏற்றுக் கொள்ளும். இவ்வுலக வாழ்வில் நீர் அனுபவித்த சேசு மரியாயின் இனிய தோழமையைப் பார்த்து, என் வாழ்வு முழுவதும் கடவுளின் வரப்பிரசாதத்தை இழப்பதன் மூலம் அவரிடமிருந்து நான் ஒருபோதும் பிரிந்து விடாதபடி, தேவரீர் என்னைக் காத்துக் கொள்ள உம்மை மன்றாடுகிறேன்.

II

அர்ச். சூசையப்பர் ஒரு பரிசுத்த மரணத்தை நமக்குப் பெற்றுத் தரும்படியாக, விசேஷமாக நாம் அவரிடம் பக்தி கொண்டிருக்க வேண்டும். அவர், ஏரோதின் மரணக் கண்ணிகளிலிருந்து குழந்தை சேசுவைக் காப்பாற்றியதன் பலனாக, பசாசின் கண்ணிகளிலிருந்து மரிக்கிறவர்களை விடுவிக்கும் விசேஷ வரப்பிரசாத சலுகையைக் கொண்டிருக்கிறார். மேலும், சேசுவுக்கும், மாமரிக்கும் தாம் ஆற்றி வந்த பணிவிடைகளின் காரணமாக, அவர்கள் இருவருக்கும் உணவும் உறைவிடமும் தந்து காப்பாற்றியதன் காரணமாக, தமது பக்தர்களின் மரணத்தின் போது, சேசு மரியாயின் விசேஷ உதவியை அவர்களுக்குப் பெற்றுத் தரும் சலுகையையும் கொண்டிருக்கிறார்.

என் பரிசுத்த பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரே, என் பாவங்களின் காரணமாக, ஒரு தீய மரணத்திற்கு நான் தகுதி பெற்றிருக்கிறேன். ஆயினும் நீர் என்னைக் காத்துக் கொள்வீர் என்றால், நான் இழக்கப்பட மாட்டேன். நீர் என் திவ்ய நடுவரின் ஒரு

மிகச் சிறந்த நண்பராக மட்டுமின்றி, அவரது பாதுகாவலராகவும், அவரது சுவீகாரத் தந்தையுமாக இருந்தீர்; உம்மை மிக அதிகமாக நேசிக்கிற உமது சேசுவிடம் எனக்காகப் பரிந்து பேசும். நான் உமது பாதுகாவலின் கீழ் என்னை வைக்கிறேன். உமது நிரந்தர ஊழியனாக என்னை ஏற்றுக்கொள்ளும். நீர் பூலோகத்தில் அனுபவித்து மகிழ்ந்த சேசு மரியாயின் பரிசுத்த தோமையைப் பார்த்து, அவர்களுடைய அன்பிலிருந்து நான் ஒருபோதும் பிரியாத வரத்தை எனக்குப் பெற்றுத் தாரும். மொத்தத்தில், உமது மரணத்தின்போது நீர் கொண்டிருந்த சேசு மரியாயின் உதவியைப் பார்த்து, என் மரணத்தில் நானும் அவர்களுடைய விசேஷ உதவியைக் கொண்டிருக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாரும். மகா பரிசுத்த கன்னிகையே, உங்கள் பரிசுத்த மணவாளராகிய அர்ச். சூசையப்பர்மீது நீங்கள் கொண்டிருந்த நேசத்தைப் பார்த்து, என் மரண நேரத்தில் எனக்கு உதவி செய்தருளுங்கள்.

வியாழன்

"ஞானமானது மனிதருக்கு அளவில்லாத திரவியமாய் இருக்கின்றது."

I

கடவுளின் ஒரே பேறான திருச்சுதனும், பிரபஞ்சத்தின் ஆண்டவருமான சேசுநாதர் கடும் வேதனைக்கும், துன்பத்திற்கும் மத்தியில் ஓர் அவமானச் சிலுவை மீது மரிப்பதை பூமியும், வானங்களும், இயற்கை முழுவதும் அதிசயத்தோடு பார்த்தன. ஏன் அவர் இவ்வாறு மரித்தார்: ஏனெனில், "அவர் நம்மை நேசித்து, நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:2). மனிதர்கள் இதை விசுவசித்தும், கடவுளை நேசிக்காமல் இருப்பது எப்படி?

ஓ, கடவுளுக்கு முன்பாக நம்மைச் செல்வந்தர்களாக்குகிற தேவசிநேகத்தின் அளவிட இயலாத மதிப்பே! இது அவரது நட்பை நாம் சம்பாதிக்க உதவும் அளவில்லாத திரவியமாய் இருக்கிறது. **"ஞானமானது மனிதருக்கு அளவில்லாத திரவியமாய் இருக்கின்றது. அதைப் பயன்படுத்திக்கொள்ளுகிறவர்கள்... சர்வேசுரனுடைய**

சிநேகத்துக்குப் பங்காளிகள் ஆகிறார்கள்'' (ஞான.7:14). நாம் பயப்பட வேண்டிய ஒரே ஒரு காரியம் கடவுளின் நட்பை இழந்து போவதுதான்; அதைப் பெற்றுக்கொள்வதுதான் நம் ஆசைகளின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். கடவுளின் நட்பை நமக்குப் பெற்றுத் தருவது அன்பே. இதனாலேயே, **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** கூறுகிறபடி, அன்பினால் ஏழைகள் செல்வந்தர்கள் ஆகிறார்கள். அன்பில்லாமையால் செல்வந்தர்கள் ஏழைகள் ஆகிறார்கள்: "தேவசிநேகத்தைக் கொண் டிருப்பதை விட மேலான செல்வங்கள் ஏதுமில்லை. தேவசிநேகத்தைக் கொண்டிருக்கிற ஏழை செல்வந்தனாய் இருக்கிறான். தேவசிநேகமில்லாத செல்வந்தன் ஏழையாய் இருக்கிறான்.''

உயர்ந்த பதவியிலுள்ள ஒரு மனிதனால் தான் நேசிக்கப்படுவதாக நினைப்பதில் ஒரு மனிதன் அனுபவிக்கும் மகிழ்ச்சி எவ்வளவு பெரிதாய் இருக்கிறது! ஆனால் கடவுள் தன்னை நேசிக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கையிலிருந்து ஓர் ஆன்மா வெற்றுக் கொள்ளும் ஆறுதல் இன்னும் எவ்வளவோ பெரியதாக இருக்கிறது! **"என்னை நேசிக்கிறவனை நானும் நேசிக்கிறேன்'' (பழ.8:17).** கடவுளை நேசிக்கும் ஓர் ஆத்துமத்தில் ஆராதனைக்குரிய தமத்திரித்துவத்தின் மூன்று ஆட்களும் தங்கி வசிக்கிறார்கள். **"ஒருவன் என்னைச் சிநேகித்தால், என் வாக்கியத்தை அநுசரிப்பான்; என் பிதாவும் அவனைச் சிநேகிப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனுக்குள் வாசம்பண்ணுவோம்'' (அரு.14:23).** எல்லாப் புண்ணியங்களிலும் தேவசிநேகமே கடவுளுடன் நம்மை இணைக்கும் புண்ணியமாக இருக்கிறது என்று அர்ச். பெர்னார்ட் எழுதுகிறார். தேவசிநேகமே ஆத்துமத்தைக் கடளோடு பிணைக்கிற பொற்சங்கிலியாக இருக்கிறது என்று **அர்ச். பொலோஞ்ஞா கத்தரீனம்மாள்** அடிக்கடி கூறுவது வழக்கம். "நேசம் நேசரை நேசிக்கப்படுபவளோடு இணைக்கும் கண்ணியாக இருக்கிறது'' என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார். கடவுள் ஒருவேளை எங்கும் இருப்பவராக இல்லாதிருந்தால், அவரை நாம் எங்கே காண முடியும்? கடவுளை நேசிக்கும் ஓர் ஆத்துமத்தைக் கண்டுபிடி. அதில் கடவுள் நிச்சயமாகக் காணப்படுகிறார். அர்ச். அருளப்பர் இதுபற்றி

நமக்கு உறுதி தருகிறார்: **“சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் சர்வேசுரனிடத்தில் நிலைத்திருக்கிறான்; சர்வேசுரனும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார்'' (1அரு.4:16).** ஏழையாக இருப்பவன் செல்வங்களை நேசிக்கிறான், ஆனால், அந்த நேசத்தின் காரணமாக, அவன் அவற்றை அனுபவிப்பதில்லை. அவன் ஒரு சிங்காசனத்தை நேசிக்கலாம், ஆனால் அதன் மூலம் ஒரு இராச்சியத்தை அவன் சொந்தமாகக் கொண்டிருக்க முடியாது. ஆனால் கடவுளை நேசிக்கிற மனிதன் அவரைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறான். “அவன் சர்வேசுரனில் நிலைத்திருக்கிறான், சர்வேசுரனும் அவனில் நிலைத்திருக்கிறார்.''

ஓ என் சேசுவே, ஏராளமான விசேஷ ஒளிகளையும், வரப்பிரசாதங்களையும் பெற்ற பிறகும் உம்மை அடிக்கடி நோகச் செய்யும் அளவுக்கு நான் பெரும் நீசனாக இருக்கிறேன். புனிதர்கள் எதனால் பற்றியெரிந்தார்களோ, அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தீச்சுவாலைகளால் பற்றியெரிய இனியும் நான் தகுதியற்றவன். நரகநெருப்பிற்கே நான் தகுதியானவன். ஆயினும், தேவரீர் உம்மை நேசிக்கும்படி எனக்குக் கட்டளையிடுவதால், நான் உமக்குக் கீழ்ப்படிவேன். சேசுவே, என் முழு இருதயத்தோடு நான் உம்மை நேசிப்பேன்.

II

அன்பு தான் செல்லும் வழியில் எல்லாப் புண்ணியங்களையும் ஈர்க்கிறது என்றும், அது கடவுளோடு நம்மை அதிக நெருக்கமாக இணைக்கும்படியாக அனைத்தையும் வழிநடத்துகிறது என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** கூறுகிறார். இதன் காரணமாக, தேவசிநேகத்திடமிருந்தே எல்லாப் புண்ணியங்களும் பிறப்பதால், **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** அதை “சகல புண்ணியங்களின் தாய்'' என்று அழைத்தார். இதனாலேயே **அர்ச். அகுஸ்தினார்** வழக்கமாக: “நேசி, அதன்பின் நீ விரும்புவதைச் செய்'' என்று சொல்வார். கடவுளை நேசிப்பவனால் நன்மையானதை மட்டுமே செய்ய முடியும்; அவன் தீமை செய்கிறான் என்றால், தான் கடவுளை

நேசிப்பதை நிறுத்தி விட்டான் என்பதை அவன் காட்டுகிறான். அவன் கடவுளை நேசிப்பதை நிறுத்தி விடும்போது, எந்தக் காரியத்தாலும் எந்த ஆதாயத்தையும் அவன் பெற்றுக்கொள்வது இல்லை. எனக்குள்ளதையெல்லாம் ஏழைகளுக்கு நான் பகிர்ந்தளித்தாலும், என் சரீரத்தை நெருப்புக்குக் கையளித்தாலும், என்னிடத்தில் தேவசிநேகம் இல்லையென்றால், நான் ஒன்றுமில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார்: **“என் ஆஸ்திபாஸ்திகள் எல்ல்லாவற்றையும் நான் ஏழைகளுக்குப் போஜனமாகப் பகிர்ந்தாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கும்படி கையளித்தாலும் என்னிடத்தில் தேவசிநேகமில்லா விட்டால், எனக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை'' (1 கொரி.13:3).**

நாம் இவ்வாழ்வின் வேதனைகளை உணர்வதிலிருந்தும் நேசம் நம்மைத் தடுத்துக் காப்பாற்றுகிறது. தேவசிநேகம் தேனைப் போன்றது, அது மிகக் கசப்பானவற்றையும் இனிப்பாக மாற்றுகிறது என்று அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார். கடவுளை நேசிக்கும் ஓர் ஆத்துமத்திற்கு, அவருக்காகத் துன்புறுவதை விட அதிக இனிமையான காரியம் வேறு என்ன இருக்க முடியும்? சந்தோஷமாகத் துன்பங்களை அரவணைத்துக் கொள்ளும்போது தான கடவுளை மகிழ்விப் பதையும், தனது வேதனைகள் பரலோகத்தில் தனது நித்திய மகுடத்தில் மிகுந்த பிரகாசமுள்ள மணிக்கற்களாக இருக்கும் என்றும் அது அறிந்திருக்கிறது. நம் மீதுள்ள அன்பிற்காகத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கும்படி நமக்கு முன் சிலுவை சுமந்து சென்றுள்ளவரும், தமது முன்மாதிரிகையைப் பின்பற்றும்படி நம்மை அழைப்பவருமான சேசுகிறீஸ்துநாதரைக் கண்டுபாவித்து மனமுவந்து துன்பப்பட்டு இறக்க விரும்பாதவன் யார் இருக்க முடியும்? “யாதொருவன் என் பிறகே வர மனதாயிருந்தால், தன்னைத்தானே பரித்தியாகஞ் செய்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக் கடவான்'' (மத்.16:24). இந்த நோக்கத்திற்காகவே, நம் மீதுள்ள அன்பிற்காக மரணம் வரைக்கும், அதுவும், அவமானமுள்ள சிலுவை மரணம் வரைக்கும் தம்மைத் தாழ்த்த அவர் திருவுளங்கொண்டார்.

“தம்மைத்தாமே தாழ்த்தி, மரணமட்டுக்கும் அதாவது சிலுவை மரண மட்டுக்கும் கீழ்ப்படிதலுள்ளவரானார்'' (பிலிப்.2:8).

ஓ சேசுவே, நான் இதையெல்லாம் விசுவசித்திருக்கிறேன், ஆயினும் நான் உம்மை நேசியாமல் இருந்தது மட்டுமல்ல, மாறாக, நான் உம்மை அடிக்கடி நோகச் செய்திருக்கிறேன். தேவரீர் என்னை மன்னித்தருளும். இனி ஒருபோதும் நான் உம்மை நோகச் செய்யாமல், எப்போதும் உம்மை நேசிக்கும்படியாக, நீர் எனக்காக அனுபவித்த கொடிய மரணத்தை எப்போதும் நான் நினைவில் கொண்டிருக்கச் செய்யுமாறு உம்மை மன்றாடுகிறேன். அர்ச். மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, சேசுவை நேசிக்க எனக்கு உதவுங்கள்; நான் உங்களிடம் கேட்கும் ஒரே உபகாரம் இதுவே .

மே மாத தலை வெள்ளி

சேசுவின் தாராளமுள்ள திரு இருதயம்

I

அனைவரையும், குறிப்பாக மிகுந்த துன்ப துயரத்தில் இருப்போரையும் மகிழ்ச்சியுள்ளவர்களாக ஆக்க ஆசைப்படுவது நல்ல மனமுள்ளவர்களின் தனிப்பட்ட குணமாகும். ஆனால் சேசுநாதரின் இருதயத்தைவிட அதிகக் கருணையுள்ள இருதயமுள்ள ஒருவனை யார் கண்டுபிடிக்க முடியும்? அவர் அளவற்ற நன்மைத்தனமாக இருக்கிறார், எனவே தமது செல்வங்களை நமக்கு வழங்க ஒரு இராஜரீக ஆசையுள்ளவராக அவர் இருக்கிறார்: **“என்னை நேசிக்கின்றவர்களை செல்வந்தராக்கவும், அவர்களுடைய பொக்கிஷங்களை நிறைக்கும் படியாகவும் ... ஆஸ்தியும், மகிமையும், மேலான செல்வமும், நீதியும் என்னோடிருக்கின்றன'' (பழ.8:21,18).** அவர் இந்த நோக்கத்திற்காகத் தம்மையே ஏழையாக்கிக் கொண்டார். அப்போஸ்தலர் சொல்வது போல, நம்மைச் செல்வந்தர் ஆக்கும்படி அவர் ஏழையானார்: “அவருடைய தரித்திரத்தால் நீங்கள் செல்வந்தராகும் பொருட்டு, அவர் உங்கள் நிமித்தம் தரித்திரரானார்'' (2 கொரி.8:9). இந்த நோக்கத்திற்காகவே அவர் பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானத்தில்

நம்மோடு தங்கியிருப்பதைத் தேர்ந்து கொண்டார். அங்கே அவர் தம்மைச் சந்திக்க வருபவர்களுக்குத் தரும்படியாக, சுவாமி பல்தசார் ஆல்வாரெஸ் கண்டது போல, தமது கரங்கள் நிறைய வரப்பிரசாதங்களோடு எப்போதும் தங்கிய் இருக்கிறார். இந்தக் காரணத்திற்காகவே அவர் திவ்ய நன்மையில் தம்மையே நம்மீது பொழிகிறார், அதன் மூலம், தம்மையே முழுமையாக நமக்குத் தருவதால், வேறு எந்த நல்ல கொடையையும் அவர் நமக்கு மறுக்க மாட்டார் என்று நாம் புரிந்து கொள்ளச் செய்கிறார்: “அவர் தம்மோடு மற்ற எல்லாவற்றையும் தராதிருப்பது எப்படி?" (உரோ.8:32). ஏனெனில் சேசுவின் திரு இருதயத்தில் நாம் ஆசிக்கும் ஒவ்வொரு நன்மையையும், ஒவ்வொரு ஆசையையும் நாம் பெற்றுக் கொள்கிறோம்: “நீங்கள் அவரிடத்தில் எல்லாவற்றிலும் செல்வந்தராக்கப்பட்டிருக்கிறீர்கள். இவ்விதமாக, நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் வெளிப்படுவதற்கு எதிர்பார்த்திருக்கிற உங்களுக்கு எந்த வரப்பிரசாதத்திலும் யாதொரு குறைவுமில்லை" (1 கொரி. 1:5,7).

ஆ என் சேசுவே, நீர் உம் திரு இரத்தத்தையும், உமது உயிரையும் எனக்குத் தர மறுக்கவில்லை. அப்படிய் இருக்க என் பரிதாபத்திற்குரிய இருதயத்தை உமக்குத் தர நான் மறுப்பேனா? இல்லை, எனக்கு மிகப் பிரியமுள்ள இரட்சகரே, நான் அதை முழுமையாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். நான் என் சித்தம் முழுவதையும் உமக்குத் தருகிறேன். அதை ஏற்றுக் கொண்டு, உமது விருப்பப்படி அதை நடத்தும். என்னால் எதுவும் செய்ய முடியாது, என்னிடம் எதுவுமில்லை. ஆனால் நீர் எனக்குத் தந்திருக்கிற இந்த இருதயம் என்னிடம் உள்ளது. அதை என்னிடமிருந்து அகற்றி விடக் கூடியவன் ஒருவனுமில்லை. என் பொருட்களையும், என் இரத்தத்தையும், என் உயிரையும் நான் இழக்கலாம், ஆனால் என் இருதயத்தை நான் இழக்க மாட்டேன். இந்த இருதயத்தைக் கொண்டு உம்மை நேசிக்க என்னால் முடியும். இந்த இருதயத்தைக் கொண்டு உம்மை நான் நேசிப்பேன்.

ஓ என் சர்வேசுரா, என்னை நான் முழுவதுமாக மறந்து போக எனக்குக் கற்பித்தருளும்; உமது உத்தம நேசத்தின் மீது உமது

நன்மைத்தனத்தில் நீரே என்னில் ஆவலைத் தூண்டிய் இருக்கிறீர் என்பதால், அந்த நேசத்திடம் வந்து சேர நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குக் கற்பியும். உம்மை மகிழ்விப்பதற்கான ஒரு தீர்மானத்தை நான் என்னில் உணர்கிறேன். ஆனால் இந்த என் தீர்மானத்தைச் செயற்படுத்த உம்மிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறேன், அதற்காக உம்மை மன்றாடுகிறேன். ஓ சேசுவின் நேசமுள்ள திரு இருதயமே, இது வரை நன்றியற்றதாக இருந்துள்ளதும், என் சொந்தத் தவறால் உமது அன்பிலிருந்து இது வரை விலக்கப் பட்டிருந்ததுமான என் எளிய இருதயத்தை முற்றிலும் உம்முடையதாக்கிக் கொள்வது உம்மைப் பொறுத்தது. ஓ, உம்முடைய திரு இருதயம் என்மீதுள்ள நேசத்தால் பற்றியெரிவது போல, என் இருதயமும் உம்மீதுள்ள நேசத்தால் முழுவதுமாகப் பற்றியெரியும் வரத்தை எனக்குத் தந்தருளும். நீர் சித்தங்கொள்வதை மட்டுமே நான் சித்தங்கொள்ளும்படியாகவும், இன்று முதல் உமது திருச்சித்தமே என் செயல்கள், என் சிந்தனைகள் மற்றும் என் ஆசைகள் அனைத்தின் விதியாக இருக்கும்படியாகவும், என் சித்தம் உம்முடைய திருச்சித்தத்தோடு முழுமையாக ஐக்கியமாகும் வரத்தை எனக்குத் தந்தருளும். ஓ என் இரட்சகரே, நீர் எனக்கு நியமித்திருக்கிற எதையும் அமைந்த மனதோடு ஏற்றுக்கொள்ளும்படி, இப்போது உம் திருப்பாதங்களில் விழுந்து நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற உமது வரப்பிரசாதத்தை நீர் எனக்கு மறுக்க மாட்டீர் என்று நான் நம்பிய் இருக்கிறேன். ஓ மாசற்ற மரியாயே, நீங்கள் எப்போதும் சேசுவின் திரு இருதயத்தோடு உங்களது மாசற்ற இருதயத்தை முற்றிலும் ஐக்கியப்படுத்தியிருந்தீர்களே; ஓ என் தாயாரே, எதிர்காலத்தில் சேசுநாதரும், நீங்களும் சித்தங்கொள்வதையே நானும் விரும்பி ஆசிக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

II

நாம் பெற்றுக்கொண்டுள்ள எல்லா வரப்பிரசாதங்களுக்காகவும், அதாவது, இரட்சணியம், தேவ அழைத்தல், ஒளி, மன்னிப்பு, சோதனைகளை எதிர்த்து நிற்பதற்கான வரப்பிரசாதம்,

முரண்பாடுகளையும், எதிர்ப்புகளையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ளும் வரம் என்பது போன்ற எல்லா வரப்பிரசாதங்களுக்காகவும் சேசுவின் திரு இருதயத்திற்கு நாம் கடன்பட்டவர்களாக நாம் இருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவருடைய உதவி இல்லாமல், நல்லது எதையும் நம்மால் செய்ய முடியாது: “என்னாலன்றி உங்களால் எதுவும் செய்ய முடியாது'' (அரு.15:5). இதுவரை நீ அதிக வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அதைப் பற்றி என்னிடம் முறையிடாதே, மாறாக, என்னிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள எந்த முயற்சியும் செய்யாதிருந்த உன்னையே நீ குற்றஞ்சாட்டிக் கொள்; **“இது வரையிலும் நீங்கள் எதையும் கேட்டதில்லை. . . கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்'' (அரு.16:24).** ஓ, தம்மிடம் அடைக்கலம் புகும் அனைவரிடமும் சேசுவின் திரு இருதயம் எவ்வளவு செல்வமுள்ளதாகவும், தாராள மிக்கதாகவும் இருக்கிறது! “தம்மைக் கூவியழைக்கும் அனைவருக்கும் அவர் செல்வந்தராய் இருக்கிறார்'' (உரோ.10:12). ஓ, ஏக்கத்தோடு சேசுநாதரின் உதவியைக் கேட்கும் ஆத்துமங்கள் எத்தகைய மேலான இரக்கங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்! **“ஏனெனில், ஆண்டவரே! நீர் மதுரமும், தயவும், உம்மை மன்றாடுகிற யாவருக்கும் மிகுந்த கிருபாகடாட்சமும் உள்ளவராய் இருக்கிறீர்'' (சங். 85:5).** ஆகவே, நாம் அனைவரும் இந்தத் திரு இருதயத்திடம் போய், நம்பிக்கையோடு கேட்போமாக, அப்போது நமக்குத் தேவையானதெல்லாம் பெற்றுக்கொள்வோம்.

சனி

மாமரியிடம் தஞ்சமடைதல்

I

“பரலோக இராக்கினி எந்த அளவுக்குத் தயவும் தாராளமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள் மிக அற்பமான, சிறு சிறு பக்தி முயற்சிகளுக்கும் கூட மிகப் பெரிய அளவில் தமது ஊழியர்களுக்கு வெகுமதியளிக்கிறார்கள்'' என்று **அர்ச். கிரீட்**

பெலவேந்திரர் கூறுகிறார். ஆயினும் இதற்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன. அவை:

முதலாவது, நாம் நம் பக்தி முயற்சிகளை மாமரிக்கு ஒப்புக் கொடுக்கும்போது, நாம் பாவத்திலிருந்து விடுபட்டிருக்க வேண்டும்; இல்லாவிடில், அர்ச். பீற்றர் செலஸ்தீன் கூறுகிற கெட்ட போர்வீரனிடம் தான் பேசிய அதே முறையில்தான் மாமரி நம்மிடமும் பேசுவார்கள். அவன் திவ்விய கன்னிகைக்குத் தோத்திரமாக ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பக்தி முயற்சியில் ஈடுபட்டு வந்தான். ஒரு நாள் அவன் பசியால் வெகுவாகத் துன்பப் பட்டுக் கொண்டிருந்த போது, மாமரி அவனுக்குத் தோன்றி, சில மிகச் சுவையான மாமிச வகைகளை அவனுக்குத் தந்தார்கள். ஆனால் அவை இருந்த பாத்திரம் எவ்வளவு அசுத்தமாயிருந்தது என்றால், அவன் அந்த உணவு வகைகளைச் சுவைபார்க்கக் கூட விரும்பவில்லை. திவ்ய கன்னிகை அவனிடம், “நான் சர்வேசுரனின் தாய். உன் பசியைப் போக்குவதற்காக நான் வந்திருக்கிறேன்" என்று சொல்ல, அவன் பதிலுக்கு, “ஆனால், என் இராக்கினியே, இவ்வளவு அசுத்தமான ஒரு பாத்திரத்தில் என்னால் சாப்பிட முடியாது" என்றான். “அப்படியானால், இவ்வளவு அசுத்தமான உன் ஆத்துமத்திலிருந்து எனக்கு ஒப்புக்கொடுக்கப்படும் பக்தி முயற்சிகளை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டார்கள் மாமரி. இதைக் கேட்டதும், அந்த வீரன் மனந்திரும்பி, ஒரு வனவாசியாகி, ஒரு பாலைவனத்தில் முப்பது வருடங்கள் வாழ்ந்தார். அவரது மரணத்தின் போது மாமரி மீண்டும் அவருக்குத் தோன்றி, அவரைத் தன்னோடு மோட்சத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

மாமரியின் பக்தன் இழக்கப்படுவது தார்மீக ரீதியாக சாத்தியமேயில்லாத காரியம் என்று நாம் சொல்கிறோம்; ஆனால் இதற்கு அவன் ஒன்றில் பாவமில்லாமல் இருக்க வேண்டும், அல்லது குறைந்த பட்சம் அதை விட்டு விடும் ஆசையாவது அவனுக்கு இருக்க வேண்டும். ஏனெனில் அப்போதுதான் திவ்ய கன்னிகை அவனுக்கு உதவி செய்வார்கள். ஆனால் இதற்கு மாறாக, மாமரி எப்படியும் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில்

ஒருவன் பாவம் செய்வான் என்றால், அவன் அதன் மூலம் மாமரியின் பாதுகாவலுக்குத் தன்னைத் தகுதியற்றவனாக ஆக்கிக் கொள்கிறான். தனது இரட்சணியத்தை சாத்தியமற்றதாக மாற்றி விடுகிறான்.

ஆ, என் இராக்கினியே, நரகத்திலிருந்து தொடர்ந்து என்னைக் காத்துக் கொள்ளுங்கள்; ஏனெனில், நான் இழக்கப்படுவேன் என்றால், உங்கள் இரக்கத்தாலும், நீங்கள் எனக்குச் செய்துள்ள நன்மைகளாலும் எனக்கு என்ன பயன் இருக்கும்? நான் எப்போதும் உங்களை நேசித்ததில்லை என்றாலும், குறைந்தபட்சம் இப்போதாவது, கடவுளுக்குப் பிறகு, எல்லாவற் றிற்கும் மேலாக உங்களை நேசிக்கிறேன். உங்கள் பரிந்துரையின் வழியாக, ஏராளமான வரப்பிரசாதங்களை எனக்குத் தந்தருளுகிற கடவுளிடம் இருந்தோ, உங்களிடமிருந்தோ நான் திரும்பிக் கொள்ள என்னை அனுமதியாதீர்கள். ஓ மரியாயே, என் நம்பிக்கையே, நரகத்திலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். ஆயினும் முதலில் பாவத்திலிருந்து என்னைக் காத்துக் கொள்ளுங்கள், ஏனெனில் அது மட்டுமே நரகத்திற்கு என்னைத் தீர்ப்பிட வல்லதாய் இருக்கிறது.

II

இரண்டாவது நிபந்தனை மரியாயின் மீது கொள்ளும் பக்தியில் நிலையாயிருப்பதாகும்: "நிலைமை வரம் மட்டுமே நித்திய முடியைப் பெற்றுத் தரும்" என்கிறார் **அர்ச். பெர்னார்ட். தாமஸ் அ கெம்பிஸ்** இளைஞனாயிருந்த போது, சில குறிப்பிட்ட ஜெபங்களைச் சொல்லி, திவ்ய கன்னிகைக்குத் தம்மை அனுதினமும் அர்ப்பணிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதன்பின் இந்த வழக்கத்தை அவர் சிறிது காலம் நிறுத்தி விட்டார். இறுதியாக அதை முழுமையாகக் கைவிட்டு விட்டார். ஒருநாள் இரவில் அவர் மாமரியைக் கனவில் கண்டார்; மாமரி அவருடைய தோழர்களை எல்லாம் அன்போடு அணைத்துக் கொண்டார்கள். ஆனால் அவருடைய முறை வந்தபோது, அவர்கள் அவரிடம்: "உன் பக்தி முயற்சிகளைக் கைவிட்டு விட்ட நிலையில் நீ என்ன

எதிர்பார்க்கிறாய்? போய்விடு, என் சீராட்டல்களுக்கு நீ தகுதியற்றவன்" என்றார்கள். இதைக் கேட்டவுடன் தாமஸ் திடுக்கிட்டு விழித்தார். அதன்பின் அவர் தம் வழக்கமான ஜெபங்களை மீண்டும் ஜெபிக்கத் தொடங்கினார். இதனாலேயே **அர்ச். லாரென்ஸின் ரிச்சர்ட்** என்பவர் சரியான காரணத்தோடு: "மாமரியின் மீது தனக்குள்ள பக்தியில் நிலையாயிருப்பவன் தன் நம்பிக்கையில் ஆசீர்வதிக்கப்படுவான், அவன் தான் ஆசித்ததையெல்லாம் பெற்றுக் கொள்வான்" என்று கூறுகிறார். ஆனாலும் இப்படி நிலையாயிருப்பது பற்றி யாரும் உறுதியோடு இருக்க முடியாது என்பதால், மரணத்திற்கு முன் தான் இரட்சிக்கப்படுவது பற்றியும் யாரும் உறுதியோடு இருக்க முடியாது. சேசு சபையின் **அர்ச். பெர்க்மான்ஸ்** இக்காரியத்தில் நம் தனிப்பட்ட கவனத்திற்குத் தகுதியுள்ளவராக இருக்கிறார். இந்தப் புனித இளைஞர் மரணத் தருவாயில் இருந்த போது, அவர் இவ்வுலகை விட்டுப் புறப்படுமுன், அவருடைய தோழர்கள், பரிசுத்த மாமரிக்கு முற்றிலும் உகந்த எந்த பக்தி முயற்சியைத் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று தங்களுக்குச் சொல்லும்படி அவரிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார்கள். "எவ்வளவு சிறியதாயிருந்தாலும், நிலையானதாய் இருக்கும் எந்த பக்தி முயற்சியும் மாமரிக்குப் பிரியமானதே" என்ற அற்புதமான வார்த்தைகளைப் பதிலாகத் தந்தார். ஓ, முன்பு மாமரிக்குத் தோத்திரமாகத் தாங்கள் கடைப்பிடித்து வந்த பக்தி முயற்சிகளில் நிலையாயிருந்திருந்தால் இரட்சிக்கப் பட்டிருக்கக் கூடிய எத்தனை பேர், அதில் நிலைத்திராததால் இப்போது நரகத்தில் இருக்கிறார்கள்!

ஓ என் தாயாரே, என் நம்பிக்கைகளையெல்லாம் உங்கள் பேரில் வைக்கிறேன்; உங்களிடமிருந்து ஒவ்வொரு வரப்பிரசாதத்தையும் நான் எதிர்பார்க்கிறேன். அந்தோ, நான் கொடிய நீசப் பாவியாக இருப்பதால், இது வரை நான் பாவத்தில் விழுந்து வந்தேன், ஏனெனில் உங்களிடம் நான் தஞ்சமடைந்ததில்லை. இப்போதோ, சேசுநாதரின் பேறுபலன்களின் வழியாகவும், உங்கள் ஜெபங்களின் வழியாகவும், என் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொண்டேன் என்று நான் நம்புகிறேன். ஆனால் நான் தேவ வரப்பிரசாதத்தை மீண்டும் இழந்து போகலாம். ஆபத்து கடந்து

போய்விடவில்லை; என் எதிரிகள் உறங்குவதேயில்லை. நீங்கள் எனக்கு உதவுவீர்கள் என்றும், நான் என்னை உங்களிடம் அர்ப்பணித்தால், உங்கள் உதவியைக் கொண்டு வெற்றி பெறுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன். ஆனால் ஆபத்துக் காலத்தில், உங்களைக் கூவியழைப்பதை நான் அசட்டை செய்து, அதனால் இழக்கப்படலாம் என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே, நரகத்தின் தாக்குதல்களின் போது, "மரியாயே, எனக்கு உதவி செய்யுங்கள்! என் தாயாரே, என் சர்வேசுரனை இழந்து போக என்னை அனுமதிக்காதீர்கள்" என்று சொல்லி உங்களிடம் எப்போதும் தஞ்சமடையும் வரத்தை உங்களிடம் மன்றாடிக் கேட்கிறேன்.

உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

"இன்னும் சிறிது காலம், அதன்பின் என்னைக் காண மாட்டீர்கள்."

(ஞாயிறு சுவிசேஷம்)

I

காலத்தை விடக் குறுகியது வேறு எதுவுமில்லை, ஆயினும் அதை விட அதிக மதிப்புள்ளதும் எதுவுமில்லை. அதை விடக் குறுகியது எதுவுமில்லை, ஏனெனில் கடந்த காலம் என்பது இனி இல்லை, எதிர்காலம் நிச்சயமில்லை, நிகழ்காலம் என்பது ஒரே ஒரு கணம்தான். **"இன்னும் சிறிது காலம், அதன் பின் என்னைக் காண மாட்டீர்கள்"** என்று சேசுகிறீஸ்துநாதர் கூறினார். நம் வாழ்வு பற்றி நாமும் இதே வார்த்தைகளைக் கூறலாம். அது, அர்ச். யாகப்பர் கூறுகிறபடி, **"சிறிது காலம் மட்டும் தோன்றுகிற புகை" மட்டுமே (4:15).**

"காலம் குறுகினதாய் இருக்கிறது... அழுகிறவர்கள் அழாதவர்களைப் போலவும், சந்தோஷிக்கிறவர்கள் சந்தோஷியாதவர்களைப் போலவும், விலைக்குக் கொள்ளுகிறவர்கள், ஒன்றையும் சுதந்தரியாதவர்களைப் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதை அனுபவியாதவர்களைப்

போலவும் இருக்கவேண்டும்'' என்று அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கூறுகிறார் **(1 கொரி. 7:29,30,31)**. ஆகவே, நாம் இவ்வுலகில் இருக்கும் காலம் மிகக் குறுகியது என்பதால், அழுபவர்கள் அழாதவர்களைப் போல் இருக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் சொல்கிறார், ஏனெனில் அவர்களுடைய துயரங்கள் விரைவில் கடந்து போகும்; மகிழ்கிறவர்கள் மகிழ்ச்சியற்றவர்களைப் போல் இருக்க வேண்டும், உல்லாசங்களில் தங்களுக்குள்ள நாட்டங்களில் அவர்கள் கருத்தைச் செலுத்தக் கூடாது, ஏனெனில் அவை விரைவில் முடிந்து போகும். இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதன் கடந்து போகிற நன்மைகளை அனுபவிக்காமல் இருந்து, நித்திய வாழ்வை சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லி முடிக்கிறார்.

“மகனே, காலத்தில் கவனமாயிரு'' என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார் (சீராக்.4:23). மகனே, காலத்தைப் பாதுகாக்கக் கற்றுக் கொள், அதுவே கடவுள் உனக்குத் தரும் எல்லாக் கொடைகளிலும் மிகப் பெரியதும், அதிக விலைமதிப்புள்ளதுமாக இருக்கிறது. காலம் கடவுளுக்கு இணையான மதிப்புள்ளது என்று **அர்ச். சியென்னா பெர்னார்தீன்** கூறுகிறார்; ஏனெனில் தான் நன்றாகச் செலவிட்ட ஒவ்வொரு கணத்திலும் மனிதன் கடவுளைச் சொந்தமாக்கிக் கொள்கிறான். அவர் மேலும் தொடர்ந்து, இவ்வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் ஒரு மனிதன்தன் பாவங்களுக்கு மன்னிப்பும், கவுளின் வரப்பிரசாதமும், பரலோக மகிமையும் பெற்றுக் கொள்ள முடியும் என்கிறார். இதனாலேயே அர்ச். பொனவெந்தூரும், “காலத்தை இழப்பதை விடப் பெரிய இழப்பு வேறு எதுவுமில்லை'' என்கிறார்.

ஆனால், காலத்தை விட அதிக மதிப்புள்ளது வேறு எதுவும் இல்லை என்றாலும், மனிதர்களின் மதிப்பில் அதை விடக் குறைந்த மதிப்புள்ளதும் எதுவுமில்லை என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். சிலர் நாலைந்து மணி நேரம் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதை நீ பார்க்கிறாய். இவ்வளவு அதிகமான நேரத்தை அவர்கள் ஏன் வீணாக்குகிறார்கள் என்று நீ கேட்டால், “உல்லாசமாக இருப்பதற்கு'' என்று அவர்கள் பதில் சொல்வார்கள். வேறு சிலரோ ஒரு நாளில்

பாதி நேரம் தெருவில் சும்மா நின்று கொண்டிருப்பார்கள், அல்லது ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எனன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், தாங்கள் பொழுது போக்கிக் கொண்டிருப்பதாக அவர்கள் கூறுவார்கள். இதே புனிதர் தொடர்ந்து, "ஏன் இந்த நேரத்தை வீணாக்குகிறீர்கள்? உங்கள் பாவங்களுக்காக அழும்படியாகவும், தேவ வரப்பிரசாதத்தை சம்பாதித்துக் கொள்வதற்காகவும் கடவுளின் இரக்கம் உங்களுக்குத் தருகிற ஒரு மணி நேரத்தையும் கூட நீங்கள் ஏன் இழக்க வேண்டும்?" என்று கேட்கிறார்.

ஓ, வாழ்வின் போது, மனிதர்களால் அலட்சியம் செய்யப்படும் காலமே, மரண நேரத்திம், குறிப்பாக மறு உலகிலும் நீ எவ்வளவு அதிகமாக ஆசித்துத் தேடப்படுவாய்! காலம் என்பது இவ்வாழ்வில் மட்டும் நாம் அனுபவிக்கும் ஓர் ஆசீர்வாதமாகும்; மறுவுலகில் இது அனுபவிக்கப்படுவதில்லை; மோட்சத்திலோ, நரகத்திலோ இது காணப்படுவதில்லை. நரகத்தில் சபிக்கப்பட்ட ஆத்துமங்கள் கண்ணீரோடு: "ஓ, ஒரே ஒரு மணி நேரம் மட்டும் நமக்குத் தரப்படுமானால்!" என்று சொல்லி ஏங்குவார்கள். தங்கள் நித்திய அழிவை மாற்றிக் கொள்ளத் தங்களுக்கு உதவக் கூடிய ஒரு மணி நேரத்திற்காக, ஏன், ஒரே ஒரு நிமிடத்திற்காகவும் கூட, என்ன விலை தரவும் அவர்கள் தயாராயிருப்பார்கள். ஆனால் இந்த ஒரு மணி அல்லது ஒரு நிமிடம் இனி அவர்களுக்கு ஒருபோதும் கிடைக்காது. மோட்சத்தில் அழுகை இல்லை. ஆனால், புனிதர்கள் துயரப்படுவது சாத்தியம் என்றால், பூமியில் தாங்கள் வீணாக்கிய காலத்தில் இன்னும் எவ்வளவோ அதிக மகிமையை சம்பாதித்திருக்கலாமே என்ற நினைவாலும், இந்தக் காலம் இனி ஒருபோதும் தங்களுக்குத் தரப்படப் போவதில்லை என்ற உறுதிப்பாட்டாலுமே அவர்கள் துயரம் கொள்வார்கள்.

ஓ என் ஆன்மாவின் தேவனே, இவ்வளவு அதிகமான இரக்கங்களை நீர் எனக்குக் காண்பித்திராவிட்டால், இந்தக் கணத்தில் என்னுடைய பாகம் என்னவாயிருந்திருக்கும்! நரகத்தில் இருக்கும் மூடர்களில் நானும் ஒருவனாக இருந்திருப்பேன். ஓ என் ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன், என் குருட்டுத்

தனத்தில் என்னைக் கைவிட்டு விடாதபடி உம்மை மன்றாடுகிறேன். மன்னிப்புக் கேட்குமாறும், உம்மிடமிருந்து வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வேன் என நம்புமாறும் நீர் என்னைத் தயவோடு அழைப்பதை நான் உணர்கிறேன். ஆம், என் இரட்சகரே,, உம்முடைய குழந்தைகளில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்வீர் என்று நான் நம்புகிறேன். உம்முடைய குழந்தை என்று அழைக்கப்பட நான் தகுதியற்றவன்! பரலோகத்திற்கு எதிராகவும், உமக்கு முன்பாகவும் நான் பாவம் செய்தேன்!

II

அர்ச். பிரான்சிஸ் போர்ஜியா கடவுளுக்காகத் தமது காலத்தின் ஒவ்வொரு கணத்தையும் பயன்படுத்துவதில் கவனமாக இருந்தார். மற்றவர்கள் பயனற்ற காரியங்களைப் பேசிக் கொண்டிருந்த போது, அவர் தமது பரிசுத்த நேசப் பற்றுதல்களோடு கடவுளுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் எவ்வளவு ஞான ஒடுக்கம் உள்ளவராக இருந்தார் என்றால், பல்வேறு காரியங்களைப் பற்றி உரையாடுவது குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது, என்ன பதில் சொல்வது என்று அவர் அறியாதிருந்தார். இதுபற்றி மற்றவர்கள் அவரைத் திருத்த முயன்றபோது, “வீணான காரியங்களில் என் நேரத்தை வீணாக்குவதை விட மற்றவர்களால் அறிவற்றவன் என்று கருதப்படுவதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன்" என்றார் அவர்.

“நான் என்ன தீமை செய்து விட்டேன்?" என்று சிலர் கேட்பார்கள். கேளிக்கைகளிலும், தேவையற்ற உரையாடல்களிலும் ஆத்துமத்திற்கு ஆதாயமற்ற, பயனில்லாத அலுவல்களிலும் உன் நேரத்தைச் செலவிடுவது தீமை இல்லையா என்று நான் கேட்கிறேன். இந்தக் காலத்தை நீ வீணாக்குவதற்காகத்தான் கடவுள் அதை உனக்குத் தந்தாரா? **“செல்வாக்கு நாளில் குறை செய்து கொள்ளாதே; செய்யக் கூடுமான நன்மையை ஒன்றும் தவறாமல் செய்" (சீராக்.14:14)** என்று பரிசுத்த ஆவியானவர் அறிவுறுத்துகிறார். அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள வேலையாட்கள் தீயது எதுவும் பேசவில்லை. அவர்கள் எதுவும் செய்யாமல் தெருக்களில்

நின்று நேரத்தை வீணாக்கிக் கொண்டு மட்டும் இருந்தார்கள். ஆனால், **"நீங்கள் நாள் முழுவதும் சோம்பலாய் இங்கே நிற்பது ஏன்?"** என்று அவர்கள் கடிந்துகொள்ளப்பட்டார்கள் **(மத்.20:6).** தீர்வை நாளில் சேசுநாதர் வீணாக்கப்பட்ட ஒவ்வொரு மாதத்துக்கும், நாளுக்கும் மட்டுமல்ல, மாறாக, பயனற்ற விதமாய்ப் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர் கணக்குக் கேட்பார்: "**மனிதர் பேசும் ஒவ்வொரு பயனற்ற வார்த்தைக்கும் தீர்வை நாளில் அவர்கள் கணக்குக் கொடுப்பார்கள்" (மத்.12:36).** இவ்வாறே நீ வீணாக்கும் ஒவ்வொரு கணத்திற்கும் அவர் கணக்குக் கேட்பார். அர்ச். பெர்னார்ட் கூறுகிறபடி, கடவுளுக்காகச் செலவிடப்படாத நேரம் முழுவதும் வீணாக்கப்பட்ட நேரமே. இதனாலேயே பரிசுத்த ஆவியானவர்: "உன் கையால் செய்ய முடியும்போதே, அதை ஆர்வத்தோடு செய்து விடு; ஏனெனில், நீ எங்கே விரைந்து சென்று கொண்டிருக்கிறாயோ, அந்த நரகத்தில் வேலையுமில்லை, வேலை செய்யக் காரணமுமில்லை . . ." என்கிறார். இன்று நீ செய்ய முடிந்த வேலையை நாளைக்குத் தள்ளிப் போடாதே, ஏனெனில் நாளை நீ இறந்து போகலாம், இனி நன்மை செய்யக் காலமே இல்லாததும், உன் புண்ணியங்களின் வெகுமதியை நீ அனுபவிக்க, அல்லது உன் பாவங்களுக்குரிய தண்டனையை அனுபவிக்க மட்டுமே நீ செல்வதுமான மற்றொரு உலகத்திற்கு நீ போய்விடலாம். **"இன்று அவருடைய குரலைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்" (சங்.94).** இன்றே அவரது அழைப்புக்குக் கீழ்ப்படியுங்கள்; ஏனெனில் நாளை உங்களுக்கு இனி நேரமில்லாமல் போகலாம், அல்லது கடவுள் இனி உங்களை அழைக்காமலே போகலாம். நம் இரட்சணியம் முழுவதும் தேவ அழைத்தல்களுக்கு, கடவுள் நம்மை அழைக்கும் காலத்தில் செவிகொடுப்பதையே சார்ந்திருக்கிறது.

ஓ என் தேவனே, என்னை ஒளிர்வித்தருளும்! உம்மை நோகச் செய்வது மட்டுமே தீமை என்றும், உம்மை நேசிப்பது மட்டுமே நன்மை என்றும் நான் புரிந்து கொள்ளச் செய்தருளும். உமக்காக உழைப்பதில் என் எஞ்சிய நாட்களைச் செலவிட எனக்கு உதவும். மரியாயே, என் நம்பிக்கையே, எனக்காகப் பரிந்துபேசுங்கள்.

திங்கள்

நம் சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் பிறர்சிநேகம்

I

"ஆதலால், சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட நீங்கள் பரிசுத்தரும், பிரியமுள்ளவர் களுமாய்த் தயாளமான உள்ளத்தையும், சாந்தத்தையும், தாழ்ச்சியையும், அடக்க வொடுக்கத்தையும், பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள்'' (கொலோ.3:12). சேசுநாதரைப் பின்செல்வோர் பிறர்சிநேகத்தை மட்டுமின்றி, பிறர்சிநேகத்தின் உட்பண்புகளையும் அணிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர்களுடைய எல்லாச் செயல்களிலும் அவர்கள் பிறர்சிநேகத்தால் உடுத்தப்பட்டிருக்கவும், சூழப்பட்டிருக்கவும் வேண்டும். அவர்கள் மிகுந்த தயவுள்ள அன்போடு ஒருவரையயாருவர் நேசிக்க வேண்டும். "பிறர்சிநேகம் தீயவர்களைப் பற்றி நினைக்கும்போதும் துக்கப்படுவதில்லை'' என்கிறார் அர்ச். அகுஸ்தினார்.

நினைவில் பிறர்சிநேகத்தை அனுசரிப்பதற்கு, முதலில் உன் அவசர முடிவுகள் அனைத்தையும், உன் எல்லா சந்தேகங்களையும் அகற்ற வேண்டும். மற்றொருவனை அவசரப் பட்டு சந்தேகப்படுவது ஒரு குறைபாடு; பிறர்மீது நம்பிக்கையின்மைக்கு இடம் கொடுப்பது அதை விடப் பெரிய குறைபாடு, மற்றொருவன் பாவம் செய்து விட்டான் என்று சரியான காரணமின்றித் தீர்மானிப்பது கடவுளுக்கு முன்பாக இன்னும் பெரிய குற்றமாக இருக்கிறது. தன் அயலானை அவசரப்பட்டுத் தீர்ப்பிடுகிறவன் கடுமையான முறையில் தீர்ப்பிடப்படுவான். **"நீங்கள் தீர்ப்புக்கு உள்ளாகாபடி தீர்ப்பிடாதீர்கள். ஏனெனில் எப்படித் தீர்ப்பிடுவீர்களோ, அப்படியே நீங்கள் தீர்ப்பிடப்படுவீர்கள்'' (மத்.7:1,2).** ஆனால் சரியான காரணமின்றி மற்றவர்களைத் தீயவர்கள் என்று தீர்ப்பிடுவது பாவம் என்றாலும், இத்தகைய நம்பிக்கை யின்மைக்கு அல்லது தீர்ப்புகளுக்கு சில காரணங்கள் இருக்கும்போது, சந்தேகப்படுவதும், மற்றவர்களைத் தீயவர்கள் என்று தீர்மானிப்பதும் தெய்வீக சட்டத்தை மீறும் காரியமாகாது. ஆயினும், அனைவரையும் பற்றி நல்ல விதமாக நினைப்பதும், இத்தகைய எல்லா சந்தேகங் களையும்,

தீர்ப்புகளையும் விலக்குவதும் அனைத்திலும் அதிகப் பாதுகாப்பானதும், அதிகப் பிறர்சிநேகமுள்ளதுமான விதியாகும். **“சிநேகம் தீங்கு நினையாது" (1கொரி.13:5)** என்கிறார் அப்போஸ்தலர். உன் அலுவலின்படி மற்றவர்களைத் திருத்தும் பொறுப்பு உனக்குத் தரப்படவில்லை என்றால், மற்றவர்களுக்கு எப்போதும் சாதகமாகவே எதையும் தீர்மானிக்க முயற்சி செய். “நம் அயலானிடம் நன்மையானதை மட்டுமே நாம் கவனிக்க வேண்டும்" என்று அர்ச்.ஜேன் பிரான்செஸ் த ஷாந்தால் கூறுவது வழக்கம். சில சமயங்களில் மற்றவர்களிடம் கண்டிக்கப்பட வேண்டியதைத் தவறுதலாக நீ புகழ்ந்திருப்பாய் என்றால், உன் தவறுக்காக நீ வருத்தப்பட எந்தக் காரணமுமில்லை. “பிறர்சிநேகம் தீயவர்களைப் பற்றி நல்ல விதமாக நினைக்கும் போதும் கூட, அது அதிகம் வேதனைப்படாது" என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார். அர்ச். பொலோஞ்ஞா கத்தரீனம்மாள் ஒரு முறை, “நான் துறவறத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன், என் சகோதரிகளில் ஒருவருக்கும் நான் தீங்கு நினைத்ததில்லை. ஏனெனில் குறைபாடுள்ளவனாகத் தோன்றும் ஒரு மனிதன், மிகச் சிறந்த நடத்தையைக் கொண்டுள்ள இன்னொருவனை விட கடவுளுக்கு அதிகப் பிரியமானவனாக இருக்கலாம்" என்று கூறினாள். ஆகவே, மற்றவர்களின் குறைகளையும், கவலைகளையும் ஊன்றிக் கவனிக்காமல் இருக்கவும், மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று விசாரித்துக் கொண்டு அலைந்து, இவ்வாறு சந்தேகங்களால் தங்கள் மனங்களையும், கசப்பாலும், வெறுப்பாலும் தங்கள் இருதயங்களையும் நிரப்பிக்கொள்கிற மனிதர்களைக் கண்டுபாவிக்காமல் இருக்கவும் கவனமா யிருங்கள். மற்றவர்கள் உங்கள் குறைகள் பற்றிப் பேசுவதாக உங்களிடம் சொல்பவர்களின் வார்த்தைகளைக் கவனிக்காதீர்கள். உங்களை இழிவாகப் பேசியவர்களின் பெயர்களை அவர்களிடம் கேட்காதீர்கள். இத்தகைய கதைகளில் பொதுவாக நிறைய மிகைப்படுத்தல்கள் இருக்கும். உங்கள் நடத்தை பிறருடைய புகழ்ச்சிக்குத் தகுதியுள்ளதாக இருக்கட்டும். ஆனால், உங்களைப் பற்றிச் சொல்லப்படுவதைக் கவனிக்காதீர்கள். நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் செய்ததாக யாராவது உங்களைக் குற்றம் சாட்டியதாக உங்களுக்குச்

சொல்லப்படும்போது, மற்றவர்கள் உங்களைக் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள் என்பதும், உங்கள் குறைபாடுகளை அவர்கள் அறிந்திருந்தால், இன்னும் அதிகமாக உங்களைக் குற்றஞ்சாட்டியிருப்பார்கள் என்றும் பதில் சொல்லுங்கள். அல்லது கடவுள் மட்டுமே உங்களைத் தீர்ப்பிட வேண்டியவர் என்று சொல்லலாம்.

II

நம் அயலான் ஏதாவது நோய் அல்லது இழப்பு, அல்லது ஒரு பேரிடரைச் சந்திக்கும்போது, குறைந்தபட்சம் மேலான சித்தத்தோடு அவனது மோசமான நிலைக்காக வருந்துவதைப் பிறர்சிநேகம் நமக்குக் கடமையாக்குகிறது. நான் மேலான சித்தம் என்று சொல்வது ஏனெனில், ஓர் எதிரிக்கு ஒரு மோசமான காரியம் நேரிட்டு விட்டது என்று கேள்ப்படும்போது இச்சை அதில் ஓரளவு இன்பம் காண்பதாகவே எப்போதும் தோன்றுகிறது. ஆனால் அந்த இன்பம் சித்தத்தால் எதிர்க்கப்படும் வரையிலும், அது குற்றமுள்ளதாக இருப்பதில்லை. மனிதனின் கீழ்த்தரமான பசி மற்றவர்களின் நிர்ப்பாக்கியத்தில் அக்களிக்கும்படி சித்தத்தைத் தூண்டும் போதெல்லாம், காரணமின்றிக் குரைக்கும் நாயை அலட்சியம் செய்வது போலவே, அந்தக் கீழ்த்தரமான வேட்கையையும் அலட்சியம் செய்து விடுங்கள். ஆயினும் அவர்களது துன்பத்தைக் கண்டு உங்கள் மேலான சித்தம் வருந்தும்படி அதைத் தூண்ட முயலுங்கள். உண்மையில் சில சமயங்களில் மற்றவர்களின் உலகத்தன்மையான துன்பங்களிலிருந்து விளையும் நல்ல பலன்களைக் கண்டு அக்களிப்பது நியாயமானதாகவே இருக்கிறது. உதாரணமாக, ஒரு பிரபலமான, பிடிவாதமான பாவி நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கண்டு, அவன் மனந்திரும்ப அது ஒரு வாய்ப்பு என்றோ, அல்லது அவனது துர்மாதிரிகையான வாழ்வுக்கு அது ஒரு தடை என்றோ நினைத்து மகிழ்ச்சி கொள்வது நமக்குத் தடை செய்யப்படவில்லை. ஆயினும், ஒருவேளை அவன் நம்மை நோகச் செய்திருக்கிறான் என்றால், அவனது நோயால் நமக்கு வரும் மகிழ்ச்சிக்கு நமது ஆத்தும தாகம் மட்டுமின்றி, நம் ஆசாபாசமும்

ஒரு காரணமாக இருக்கலாம். "ஓர் எதிரியின் வீழ்ச்சியால் மற்றவர்கள் நீதியான முறையில் நன்மையடைவார்கள் என்று நாம் நினைக்கும்போதும், அவன் செழித்து வளரும்போது மற்றவர்கள் அநீதியான முறையில் ஒடுக்கப்படலாம் என்று நாம் அஞ்சும்போதும், பிறர் சிநேகத்தை இழக்காமலே நாம் ஓர் எதிரியின் அழிவைக் கண்டு அக்களிப்பதும், பொறாமையின் குற்றமில்லாமலே அவனது உயர்வைக் கண்டு நாம் துக்கப்படுவதும் அடிக்கடி நிகழலாம்" என்று அர்ச். கிரகோரியார் கூறுகிறார்.

செவ்வாய்

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 1

I

புறணி பேசுபவனின் நாவு மூன்று புறம் கருக்குள்ள வாளாக இருக்கிறது என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். அது அயலானின் நற்பெயரைச் சிதைக்கிறது; அந்தப் புறணியைக் கேட்பவர்களின் ஆத்துமங்களைக் காயப்படுத்துகிறது; புறணி பேசுபவனிடமிருந்து தேவ வரப்பிரசாதத்தை அகற்றி அவனுடைய ஆத்துமத்தையே கொல்கிறது. **"மறைவாய்க் கோள்சொல்கிறவன், சத்தம் போடாமல் கடிக்கும் பாம்புக்குச் சமமாய் இருக்கிறான்" (சங்கப்.10:11).**

வார்த்தைகளில் சகோதர நேசத்தை அனுசரிப்பதற்கு, எல்லாவற்றிற்கும் மேலாக, புறணி பேசுவதன் எல்லா வகைகளையும் நீ விலக்க வேண்டும். **"கோள் சொல்கிறவன் தன் ஆத்துமத்தைக் கறைப்படுத்துவான், அவன் சகலராலும் வெறுக்கப்படுவான்"** என்கிறார் பரிசுத்த ஆவியானவர் **(சீராக்.21:31).** ஆம்; அவன் கடவுளுக்கும் மனிதருக்கும், தங்கள் சொந்த வேடிக்கைக்காக அவனது அவதூறான வார்த்தைகளைப் பாராட்டி அவனை ஊக்கப் படுத்துபவர்களுக்கும் கூட வெறுப்புக்குரியவன் ஆவான். அவர்களும் கூட அவனைத் தவிர்க்கின்றனர். ஏனெனில் மற்றவர்களைப் பற்றித் தங்களிடம் அவன் அவதூறு பேசுவது போல, தங்களைப் பற்றி மற்றவர்களிடமும் அவதூறு பேசுவான் என்று அவர்கள் நியாயமாகவே பயப்படுகின்றனர். மற்ற துர்க்குணங்களை

விட்டு விட்டவர்களும் கூட இதை எளிதாக விலக்க முடிவதில்லை என்று **அர்ச். ஜெரோம்** சொல்கிறார்: "மற்றப் பாவங்களை விட்டு விட்டவர்கள் தொடர்ந்து அவதூறு பேசும் பாவத்தில் விழுகிறார்கள்." கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியிலும் கூட, ஓர் அயலானின் நற்பெயரைக் காயப்படுத்தாமல் தங்களால் பேச முடியாது என்னும் அளவுக்கு மிகக் கூரிய நாவுகளை உடைய சிலர் இருப்பது பரிதாபத்திற்குரியது! **தாமஸ் கேன்டிம்ப்ரேட்டென்சிஸ்** என்பவர் கூறுவது போல, கோள் சொல்பவனாயிருந்த ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு நேர்ந்த கதி இவர்களுக்கும் நேராமல் கடவுள் காப்பாராக. இவன் கடுங்கோப வெறியில், தன் பற்களால் தன் நாக்கைக் கடித்துக் குதறியபடி மரணமடைந்தான். இவனைப் போன்ற மற்றொரு பாவியைப் பற்றி **அர்ச். பெர்னார்ட்** பேசுகிறார். இவன் அர்ச். மலாக்கியின் நற்பெயரைக் கெடுக்க முயன்றான். திடீரென அவனுடைய நாக்கு வீங்கி, புழுத்துப் போனது! இந்தப் பரிதாபமான நிலையில் அந்தப் பரிதாபத்திற்குரிய மனிதன் ஏழு நாட்கள் கடும் வேதனையுற்ற பின் மரணமடைந்தான்.

ஆனால் அனைவரைப் பற்றியும் நல்ல விதமாகப் பேசுபவர்கள் கடவுளுக்கும், மனிதர்களுக்கும் எவ்வளவு பிரியமானவர்களாக இருக்கிறார்கள்! "தன் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களை ஒரு தடவை கூடக் குறை பேசாத எந்த மனிதனையாவது எனக்குத் தெரியும் என்றால், அவனுக்குப் புனிதப் பட்டம் கொடுக்கப்பட நான் முயற்சிகள் எடுப்பேன்" என்று **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள்** கூறுவது வழக்கம். ஆகவே, பிறரைப் பற்றிய அவதூறான ஒரு வார்த்தை கூடப் பேசிவிடாதபடி எச்சரிக்கையாக இரு. எல்லாவற்றிற்கும் மேலாக, மிக அற்பமான அளவிலும் கூட உன் மேலதிகாரிகளின் நற்பெயருக்குக் களங்கம் வருவித்து விடக் கூடிய எந்த விதமான பேச்சுக்கும் எதிராக உன்னையே நீ காத்துக் கொள். அவர்களைப் பற்றி அவதூறு பேசுவதன் மூலம், அவர்களது தீர்ப்புகள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றில் பிறர் கொண்டிருக்கும் மரியாதையை நீ குறைத்து விடுவது போலவே, உன் தோழர்களின் கீழ்ப்படிதல் உணர்வையும் நீ குறைத்து விடுவாய்.

புறணி என்னும் பாவம் மற்றவர்களைப் பற்றி உண்மையல்லாத செய்திகளைப் பரப்புவது, அவர்களுடைய குறைகளை மிகைப்படுத்திக் காட்டுவது, அவர்களுடைய மறைவான பாவங்களை வெளிப்படுத்துவது ஆகியவற்றால் மட்டுமின்றி, அவர்களுடைய புண்ணியச் செயல்களைக் குறைபாடுள்ளவையாகக் காட்டுவதாலும், அவற்றிற்கு ஒரு தீய நோக்கம் கற்பிப்பதாலும் கூட செய்யப் படுகிறது. மற்றவர்களின் நற்செயல்களை மறுப்பதும், அவர்களுக்குச் செலுத்தப்படும் நியாயமான புகழ்ச்சிக்கு அவர்களுக்குள்ள தகுதியையும் கேள்விக்குள்ளாக்குவதும் கூட புறணி என்னும் பாவம்தான். தங்கள் அவதூறுகளை அதிகம் நம்பக்கூடியவையாக ஆக்கும்படி சிலர் மற்றவர்களைப் புகழத் தொடங்கி, அவர்களைப் பற்றி அவதூறு பேசுவதில் முடிக்கின்றனர். இப்படிப்பட்டவன் மிகுந்த திறமையுள்ளவனாக இருக்கிறான், ஆனால் அவனிடம் ஆங்காரம் இருக்கிறது; இவன் மிகுந்த தாராளமுள்ளவன், ஆனால் அதே சமயம் பழிவாங்கும் குணமுள்ளவன் என்றெல்லாம் இவர்கள் பேசுகிறார்கள்.

ஆ, என் தேவனே, என் பாவங்களை தேவரீர் கண்ணோக்காமல், என் இரட்சணியத் திற்காகத் தம் உயிரைப் பலியாக்கியவரான உமது திருமகன் சேசுநாதரை நோக்கிப் பாரும். சேசுவின் நிமித்தமாக என் மீது தயவாயிருந்து, உமக்கு எதிராகவும், குறிப்பாக என் அயலான் மீது சிநேகமில்லாததால் அவனுக்கு எதிராகவும் நான் கட்டிக்கொண்ட பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருளும். ஆண்டவரே, உமக்கு வெறுப்பூட்டுகிற எதையும் என்னில் அழித்து, எல்லாவற்றிலும் உம்மை மகிழ்விக்கும் நேரிய ஆசையை எனக்குத் தந்தருளும்.

II

அனைவரைப் பற்றியும் நல்ல விதமாகப் பேசுவதில் கவனத்தோடு இரு. மற்றவர்கள் உன்னைப் பற்றி எப்படிப் பேச வேண்டுமென நீ விரும்புகிறாயோ, அப்படியே நீயும் மற்றவர்களைப் பற்றிப் பேசு. நீ பேசும்போது உன்னோடு இல்லாதவர்களைப் பொறுத்த வரை, **அர்ச். பாஸ்ஸி மரிய**

மதலேனம்மாள் தரும் அற்புதமான விதியைப் பின்பற்று: “மற்றவர்கள் முன்னிலையில் எதைச் சொல்ல விரும்ப மாட்டாயோ, அதை அவர்கள் இல்லாத போதும் ஒருக்காலும் சொல்லாதே." ஒருவன் மற்றவர்களைப் பற்றிப் புறணி பேசுவதை நீ எப்போதாவது கேட்க நேரிட்டால், அவனுடைய பிறர்சிநேகமின்மையை ஊக்கப்படுத்தாதபடி கவனமாயிரு, அவனுடைய வார்த்தைகள் உனக்குப் பிடிக்கவில்லை என்பதை உன் தோற்றத்தில் காட்டு. இல்லாவிடில் அவனுடைய குற்றத்தில் நீயும் பங்கு பெறுவாயண். ஒன்றில் நீ அவனைக் கடிந்து கொள்ள வேண்டும், அல்லது பேசும் விஷயத்தை மாற்றி விட வேண்டும், அல்லது அங்கிருந்து சென்று விட வேண்டும், குறைந்த பட்சம் அவன் பேசுவதைக் கவனிக்காமல் இருக்க வேண்டும். **“முட்களால் உன் செவிகளுக்கு வேலியிடு; தீய நாவு பேசுவதைக் கேளாதே''** என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார் **(சீராக். 28:28)**. புறணிக்கு எதிராக, அது உன் செவிக்குள் புகாதபடி, முட்களால் அவற்றிற்கு வேலியிடு. ஆகவே, ஒருவன் மற்றவர்களைப் பற்றி அவதூறு பேசுவதை நீ கேட்கும்போதெல்லாம், குறைந்த பட்சம் உன் மவுனத்தாலோ, அல்லது உன் முக பாவனையாலோ, அல்லது கண்களைத் தாழ்த்திக் கொள்வதாலோ, அந்த உரையாடலில் உனக்குப் பிரியமில்லை என்பதைக் காட்டுவது அவசியம். எதிர்காலத்தின் உனக்கு முன்னால் யாரும் மற்றொருவனைப் பற்றி அவதூறு பேசத் துணியாத விதத்தில் எப்போதும் நடந்துகொள். உன்னால் முடியும்போது, அவதூறாகப் பேசப்படும் மனிதனின் இடத்தை நீ எடுத்துக் கொள். **“உன் உதடுகள் இரத்தாம்பர நாடாவைப்போல் சிவப்பானவை'' (உந்.சங்.4:3)**. என் மணவாளியே உன் உதடுகளை நான் செந்நிற நாடாவைப் போலாக்குவேன் என்கிறார் ஆண்டவர். அதாவது, **அர்ச். நிஸ்ஸா கிரகோரியாரின்** விளக்கப்படி, உன் வார்த்தைகள் மற்றவர்களின் குறைகளை முடிந்த வரை மறைத்து மூடும் அளவுக்கு பிறர்சிநேகத்தால் நிறைந்திருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சமாக, அவர்களுடைய செயல்கள் மன்னிக்கப்படத் தக்கவை என்றால், அவர்களுடைய நோக்கம் சரியானதே என்று நீ வாதிட வேண்டும். “செயலை ஆதரிக்க உன்னால் இயலவில்லை என்றால், அதன் நோக்கத்தையாவது ஆதரித்துப் பேசு'' என்கிறார்

அர்ச். பெர்னார்ட். சூரியஸ் என்பவர் கூறுவதுபோல, மடாதிபதி கான்ஸ்டபைல் என்பவர் “தமது சகோதரர்களின் மூடுதுகில்" என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் இந்தப் பரிசுத்த துறவி, மற்றவர்களைப் பற்றி யாராவது குறை பேசுவதைக் கேட்ட போதெல்லாம், அவர்களை மூடிப் பாதுகாக்கவும், ஆதரிக்கவும் முற்பட்டார். **அர்ச். தெரேசம்மாளும்** இப்படியே நடந்துகொண்டாள். அவளைப் பற்றித் துறவறக் கன்னியர் வழக்கமாக, அவள் முன்னிலையில் தங்கள் நற்பெயர் பாதுகாப்பாக இருந்தது, ஏனெனில் அவள் அதை எப்போதும் ஆதரித்துக் காத்து வந்தாள் என்று சொல்வதுண்டு.

புதன்

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 2

I

யாரிடமும் அவனைப் பற்றி மற்றொருவன் தவறாகப் பேசினான் என்று ஒருபோதும் சொல்லாதபடி கவனமாயிரு; ஏனெனில் இவ்வகையாக கோள் சொல்வது சில சமயங்களில் நீண்ட காலம் நீடிக்கும் சண்டை சச்சரவுக்கும், வெறுப்புகளுக்கும் இடமளிக்கிறது. ஓ! கோள் சொல்பவர்கள் கடவுளுக்கு எவ்வளவு பயங்கரமான கணக்குக் கொடுக்க வேண்டிய் இருக்கும்! சண்டை சச்சரவை விதைப்பவர்கள் அவருடைய பார்வையில் அருவருப்புக்கு உரியவர்களா ய் இருக்கிறார்கள். **“ஆண்டவருக்கு அருவருப்பான காரியங்கள் ஆறு; ஏழாவது காரியம் கூட அவருடைய ஆத்துமத்துக்கு அருவருப்பாய் இருக்கும்... பொய்களைச் சொல்கின்ற கள்ளச் சாட்சியும், தன் சகோதரருக்குள் பிரிவினைகளை விதைக்கிறவனும் (அவருக்கு அருவருப் பானவர்கள்)" (பழ.6:16,19)**. கோபத்தில் வெளிவரும் பிறர்சிநேகமற்ற ஒரு வார்த்தை மன்னிக்கப் படக் கூடியதாக இருக்கலாம். ஆனால் பிரிவினையை விதைப்பவனும், ஒரு சமூகத்தின் அமைதியைக் குலைப்பவனுமான மனிதனை சர்வ வல்லவர் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? பரிசுத்த ஆவியானவரின்

அறிவுரையைக் கேள்: **"உன் பிறனுக்கு எதிரான ஒரு வார்த்தையை நீ கேட்டாயாகில், அது உனக்குள்ளேயே இறந்து போகக்கடவது" (சீராக்.19:10).** மற்றொருவனுக்கு எதிராக நீ கேட்கும் வார்த்தைகளை நீ உனக்குள் வைத்துக் கொள்ளக் கூடாதது மட்டுமல்ல, மாறாக, அவை உனக்குள் இறந்து புதைக்கப்பட்டு விடவும் வேண்டும். ஆகவே, நீ கேட்ட காரியத்தின் மிகச் சிறிய குறிப்பைக் கூட ஒருபோதும் பிறருக்குத் தராதபடி நீ கவனமாய் இருக்க வேண்டும். ஏனெனில் ஒரே ஒரு வார்த்தை, ஒரு தலையசைப்பு, ஒரு சிறு குறிப்பும் கூட, உன்னிடம் சொல்லப்பட்ட பாவங்களைப் பற்றிய ஒரு வித அறிவை மற்றவர்களுக்குத் தரக் கூடும், அல்லது ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தி விடக் கூடும்.

சிலர் தங்களுக்குச் சொல்லப்பட்ட இரகசியங்களை மற்றவர்களுக்கு உடனே வெளிப்படுத்தாவிடில் தலையே வெடித்து விடும் என்பது போலத் தோன்றுவார்கள்; இந்த இரகசியங்கள் ஏராளமான முட்கள் என்பதுபோலவும், அவற்றைத் தங்கள் இருதயத்திலிருந்து பிடுங்கி எறியாவிடில், அவை அதைக் காயப்படுத்தி விடும் என்பதுபோலவும் நடந்துகொள்வார்கள். மடத்து அதிபர்களைத் தவிர வேறு யாருக்கும் மற்றவர்களின் மறைவான குறைபாடுகளை நீ ஒருபோதும் வெளிப்படுத்தக் கூடாது. இவர்களிடமும் கூட, மடத்திலுள்ள மற்றவர்களுக்கு இதனால் ஏற்படும் தீங்கைத் தவிர்க்கும் நோக்கத்தோடு மட்டுமே சொல்ல வேண்டும். அல்லது அந்தப் பாவத்தைச் செய்தவனின் ஆன்ம நன்மைக்காக இதை மடாதிபரிடம் சொல்வது அவசியமாக இருக்கும்பட்சத்தில் அவருக்கு இதை வெளிப்படுத்த வேண்டும்.

மேலும், உன் உரையாடல்களில், ஒரு சைகையாலும் கூட மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தி விடாதபடி நீ கவனமாய் இருக்க வேண்டும். ஓர் அயலானின் மனதை நோகச் செய்யும் சைகைகள் பிறர்சிநேகத்திற்கும், "மனிதர் உங்களுக்கு எதெதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்.7:12) என்ற சேசுநாதரின் வார்த்தைகளுக்கும் எதிரானவை. உன் தோழர்களுக்கு முன் ஒரு

கேலிப் பொருளாக ஆக நீ நிச்சயமாக விரும்ப மாட்டாய். ஆகவே, மற்றவர்களைக் கேலி செய்வதையும் நீ தவிர்க்க வேண்டும்.

எல்லா சச்சரவுகளையும் கூட முடிந்த வரை தவிர்த்து விட முயற்சி செய். சில சமயங்களில் அற்பக் காரியங்கள் பெரும் வாக்குவாதங்களாகி, சச்சரவுகளுக்கும், காயப்படுத்தும் வார்த்தைகளுக்கும் இடங்கொடுத்து விடும். சிலர் தங்கள் முரண்பாட்டு உணர்வால், பயனற்ற சச்சரவுக்கு வழிவகுக்கும் ஏதாவது ஒரு விவாதப் பொருளை முன்வைப்பதன் மூலம் பிறர்சிநேகச் சட்டத்தை மீறுகிறார்கள். **“உனக்கு சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடாதே” (சீராக்.11:9)** என்று ஞானியானவர் கூறுகிறார்.

II

ஆனால் ஒவ்வொரு விவாதத்திலும் பிரச்சினையின் சரியான பக்கத்தையே தாங்கள் ஆதரிப்பதாகவும், முற்றிலும் ஆதாரமற்ற வாதங்களை வாய்மூடி மவுனமாகக் கேட்டுக் கொண்டிருக்கத் தங்களால் முடியாது என்றும் சிலர் சொல்வார்கள். இதற்கு **அர்ச். ராபர்ட் பெல்லார்மினின்** வார்த்தைகளில் நான் பதில் தருகிறேன்: “ஒரு அவுன்ஸ் அளவு பிறர்சிநேகம் ஒரு நூறு வண்டியளவு அறிவைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளது." இத்தகைய வாக்குவாதங்களில் பணிந்து போய்விடுவது வெற்றி கொள்வதற்கு சமம் என்று முத். எஜிடியுஸ் வழக்கமாகக் கூறுவார். ஏனெனில் பணிதல் புண்ணியத்தில் மேலோங்கச் செய்து மனச் சமாதானத்தைப் பாதுகாக்கிறது. நிச்சயமாக சமாதானம் பாதுகாக்கப்படுவது, வார்த்தையளவிலான வெற்றியின் வீண் மகிமையை விட எவ்வளவோ மடங்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. இதனாலேயே **அர்ச். எஃப்ரேம்** தமது மனச் சமாதானத்தைக் காத்துக் கொள்வதற்காக வாக்குவாதங்களில் தம் எதிரிக்கு எப்போதும் விட்டுக்கொடுத்து விடுவார். ஆகவே**, அர்ச். ஜோசப் காலாசாங்க்ஷியுஸ்** என்பவர் “சமாதானத்தை விரும்பும் அனைவரும் யாரோடும் ஒருபோதும் சச்சரவில் ஈடுபடக் கூடாது"என்று சொல்வது வழக்கம்.

ஆனால், நீ பிறர்சிநேகத்தை நேசித்தால், எல்லோரிடமும் அன்பாகவும், சாந்தத்தோடும் இருக்க முயற்சி செய். சாந்தம் என்பது செம்மறிக்குட்டியின் தனிப்பட்ட புண்ணியமாகும். சேசுநாதரின் அன்பிற்குரிய புண்ணியமாகும். அவர் சாந்தத்தின் மீது தமக்குள்ள அன்பின் காரணமாக, செம்மறிப் புருவை என்னும் பெயரைத் தம்முடையதாக்கிக் கொண்டார். மற்றவர்களுடனான உன் உரையாடலில், உனக்கு மேற்பட்டவர்களிடம் மட்டுமல்ல, மாறாக அனைவரிடமும், குறிப்பாக உன்னை நோகச் செய்தவர்களிடமும், உன் விருப்பங்களை எதிர்ப்பவர்கள் அல்லது தங்கள் முரட்டு சுபாவத்தாலோ, நீ செய்த கடந்த கால நன்மைகளை மறப்பதாலோ உனக்கு வருத்தம் வருவிப்பவர்களிடமும் இணக்கமாக இரு. **“தேவசிநேகம் பொறுமையுள்ளது... சகலத்தையும் தாங்கிக் கொள்ளும்'' (1கொரி.13:4,7).** ஆகவே, தன் அயலானின் குறைகளைத் தாங்கிக் கொள்ளாதவன் உண்மையான பிறர் சிநேகத்தைக் கொண்டிருக்க முடியாது. மிக உத்தமமான ஆன்மாக்களும் கூட எல்லாக் குறைபாடுகளிலிருந்தும் விடுபட்டிருப்பதில்லை. நீயே கூட தவறுதல்களுக்கு உட்பட்டிருக்கிறாய்; உன் பலதரப்பட்ட குறைபாடுகளையும் மீறி மற்றவர்கள் உன்னை நேசத்தோடும், தயவோடும் நடத்த வேண்டுமென நீ எதிர்பார்க்கிறாய். ஆகவே, அப்போஸ்தலரின் அறிவுரைப்படி நீ பிறருடைய குறைகளில் தயவோடிருக்க வேண்டும்: **''ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கிக் கொள்ளுங்கள்'' (கலாத்.6 :2)**. ஒரு தாய் தன் குழந்தைகளை நேசிப்பதால், அவர்களது ஆணவத்தைப் பொறுமையோடு சகித்துக் கொள்கிறாள். மற்றவர்கள் உன் மீது சுமத்தும் சுமைகளை நீ எப்படித் தாங்கிக் கொள்கிறாய் என்பதன் அடிப்படையிலேயே நீ உன் அயலானை உண்மையான பிறர்சிநேகத்தோடு நேசிக்கிறாயா என்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஓ! நம் இரட்சகர் தம் சீடர்களோடு வாழ்ந்த காலம் முழுவதும் அவர்களுடைய முரட்டுத்தனத்தையும், குறைபாடுகளையும் எத்தகைய பிறர்சிநேகத்தோடு தாங்கிக் கொண்டார்! எத்தகைய சிநேகத்தோடு அவர் துரோகியான யூதாஸின் பாதங்களைக் கழுவினார். இன்றளவும் கூட அவர் எப்படி உன் பாவத்

தன்மையையும், நன்றியற்றதனத்தையும் சகித்துக் கொண்டு வருகிறார்! அப்படிய் இருக்க, நீ மட்டும் உன் அயலாரின் குறைகளைப் பொறுத்துக்கொள்ள மறுப்பாயா? மருத்துவன் நோயாளியை நேசிக்கும் அதே வேளையில் நோயை வெறுக்கிறான். உன்னிடம் உண்மையான பிறர்சிநேகம் இருக்குமானால் நீ உன் அயலாரை நேசிக்கும் அதே வேளையில் அவர்களுடைய தவறுதல்களை வெறுக்க வேண்டும். ஆனால், “நான் என்ன செய்வது? இத்தகைய ஒருவனை எனக்கு இயல்பாகவே பிடிக்கவில்லை, அவனோடு நட்புக் கொள்வதை நான் வேதனையானதாக உணர்கிறேன்" என்று நீ சொல்வாய். இதற்கு என் பதில்: அதிக பக்தியார்வமும், அதிகப் பிறர் சிநேகமும் கொண்டிரு, அப்போது இத்தகைய வெறுப்புகள் எல்லாம் மறைந்துபோகும்.

வியாழன்

நம் வார்த்தைகளில் பிறர்சிநேகம் - 3

I

சாந்தம் எப்படி அனுசரிக்கப்பட வேண்டும் என்று சிந்திப்போம். முதலாவதாக, உன் பலம் முழுவதையும் கொண்டு, கோபத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் கட்டுப்படுத்து. அடுத்து, பிறரை நோகச் செய்கிற எல்லா வார்த்தைகளையும், எல்லா விதமான முரட்டுத் தனத்தையும், ஆணவமுள்ள நடத்தையையும் தவிர்ப்பதில் நீ கவனமாக இருக்க வேண்டும்; ஏனெனில் முரட்டுக் குணம் சில சமயங்களில் அவமதிக்கும் வார்த்தைகளை விட அதிகம் நோகச் செய்வதாக இருக்கிறது. ஒருவன் உன்னை இழிவாக நடத்துகிறான் என்றால், உன் மீதுள்ள அன்பிற்காக இதை விட எத்தனையோ மடங்கு அதிகமான அவமானங்களைத் தாங்கிக் கொண்ட சேசுநாதரின் அன்பிற்காக அதைப் பொறுமையோடு அனுபவி. என் தேவனே! மன ஜெபத்தை அனுசரிப் பவர்களும், அடிக்கடி தேவத் திரவிய அனுமானங்களைப் பெறுபவர்களுமாகிய சில ஆத்துமங்கள் ஒரு சுடுசொல்லையும், பிறருடைய அலட்சியத்தையும் கூடப் பொறுக்க முடியாமல் இருப்பதைக் காண்பது எவ்வளவு

வேதனையானது! பரலோக ஆரோகணத்தின் சகோதரி மேரி ஒரு அவமானத்தை எதிர்கொள்ள நேர்ந்த போதெல்லாம் திவ்விய நற்கருணை ஆண்டவருக்கு முன்பாகச் சென்று, “என் மணவாளரே, இந்தச் சிறு பரிசை நான் உமக்குத் தருகிறேன்; இதை ஏற்றுக் கொண்டு, என்னை நோகச் செய்தவரை மன்னிக்கும்படி உம்மை இரந்து மன்றாடுகிறேன்" என்று சொல்வாள். இந்தத் துறவறக் கன்னிகையை நீ ஏன் கண்டுபாவிக்கக் கூடாது? பிறர்சிநேகத்தைப் பாதுகாத்துக் கொள்ள, நீ எல்லாவற்றையும் ஏற்று அனுபவிக்க வேண்டும். புண்ணியம் மற்றவர்களால் மோசமான நடத்தப் படுவதன் மூலம் எண்பிக்கப்படும் வரைக்கும், அது பலவீனமாக இருக்கிறது என்று சுவாமி ஆல்வாரெஸ் கூறுவது வழக்கம். தான் இழிவையும், அவமானத்தையும் தாங்கிக் கொள்ளும் முறையைக் கொண்டே அது பிறர்சிநேகத்தில் செழித்து வளர்கிறதா, அல்லது தோற்றுப்போகிறதா என்பதைக் காட்டுகிறது.

யாராவது உன்னிடம் கோபமான வார்த்தைகளில், அல்லது அவமானமும், கண்டனமும் உள்ள வார்த்தைகளில் பேசினால், இனிமையோடு அவனுக்குப் பதில் சொல். அப்போது அவனுடைய கோபம் அந்தக் கணமே தணிந்து போகும். “சாந்தமுள்ள பதில் கடுங்கோபத்தை முறிக்கிறது" (பழ.15:1). “நெருப்பை நெருப்பாலும், கடுஞ்சினத்தைக் கோபத்தாலும் அணைக்க முடியாது." உன்னிடம் கோபத்தோடு பேசுபவர்களுக்கு வெறுப்பும் கசப்புமுள்ள முறையில் நீ பதில் சொன்னால், அவர்களுடைய கோபம் அடங்கி விடும் என்று நினைக்கிறாயா? அதற்கு மாறாக, நீ அதைத் தூண்டி விடுவாய்,மேலும் பிறர்சிநேகச் சட்டத்தையும் நீ மீறி விடுவாய். கோபமான ஒவ்வொரு வார்த்தைக்கும் உன் பதில் இனிமை நிறைந்ததாக இருக்கட்டும். அப்போது கோப நெருப்பு அதே கணத்தில் அணைந்து விடும். **ஸோஃப்ரோனியுஸ்** இரு துறவிகளைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியை விவரிக்கிறார். அவர்கள் ஒரு பயணத்தில் வழிதவறி, எதிர்பாராமல் அப்போதுதான் விதை விதைக்கப்பட்டிருந்த ஒரு வயலுக்குள் நுழைந்த விட்டார்கள். அந்த வயலைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த விவசாயி கோபவெறி கொண்டு மிகக் கேவலமான வார்த்தைகளால்

அவர்களைத் திட்டத் தொடங்கினான். முதலில் அவர்கள் அமைதியாக இருந்தாலும், தங்கள் மௌனம் அவனுடைய கோபத்தை அதிகமாக்க மட்டுமே உதவுகிறது என்பதைக் கண்டு, தாழ்ச்சியோடு, “சகோதரனே, நாங்கள் தவறு செய்து விட்டோம். கடவுளின் பெயரால் எங்களை மன்னித்து விடு" என்றார்கள். இந்தத் தாழ்ச்சியுள்ள பதில் அவனுடைய கோபத்தை உடனே தணித்து, தனது நடத்தைக்காக அவன் மனம் வருந்தும்படி செய்தது. அவன் உடனே அந்த இரு துறவிகளிடமும் தனது கொடிய வார்த்தைகளுக்காக மன்னிப்புக் கேட்டான். அது மட்டுமின்றி, மற்றொரு அதிசயமும் அதன்பின் நடந்தது-- அவன் விரைவில் உலகத்தைத் துறந்து, அடைபட்ட மடத்தில் அவர்களோடு சேர்ந்து கொண்டான்!

II

சில சமயங்களில், குறிப்பாக நீங்கள் ஒரு மடத்தின் அதிபராக இருக்கும்போது, மற்றொருவன் பேசிக் கொண்டே போவதைத் தடுக்கும்படி, அல்லது உங்களுக்கு மரியாதை செலுத்த அவனுக்குக் கற்றுத் தரும்படி ஒரு கூரிய பதிலால் அவனது வாயை அடைப்பது சரியானதும், அவசியமானதும் கூட என்று நீங்கள் நினைக்கலாம்; ஆனால் அத்தகைய கூரிய வார்த்தைகள் அறிவிலிருந்து வருவதற்குப் பதிலாக, கோபத்திலிருந்தே வருகிறது என்பதில் உறுதியாயிருங்கள். கோபம் சில சமயங்களில் நியாயமானது என்பது எனக்குத் தெரியும். **“உன் கோபத்தில் பாவமிராதிருக்கக் கடவது"** என்கிறார் சங்கீத ஆசிரியர் **(சங்.4:5)**. ஆனால் பாவமின்றிக் கோபிப்பது நடைமுறையில் மிகக் கடினமான காரியம். கோபத்திற்குத் தன்னைக் கையளிக்கும் எவனும் தனது ஆத்துமத்தை நிச்சயமான ஓர் ஆபத்துக்கு உள்ளாக்குகிறான். இதனாலேயே **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** தமது ஃபிலோத்தியா என்ற நூலில் ஞானத்தோடு, கோபத்திற்கான சந்தர்ப்பங்கள் எவ்வளவு நியாயமானவையாக இருந்தாலும், அதன் வெளிப்பாடுகள் அடக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார். “நீ நியாயத்தோடு கோபப்படுகிறாய் என்பதை விட நீ கோபப்படுவதேயில்லை என்று

உன்னைப் பற்றிச் சொல்லப்படுவது அதிக நல்லது" என்று புனிதர் கூறுகிறார். ஆத்துமத்தில் நுழைய ஒரு முறை அனுமதிக்கப்பட்ட கோபம் அதன்பின் சிரமத்தோடுதான் வெளியேற்றப்படுகிறது என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார். ஆகவே கோபத்தை அதன் முளையிலேயே கிள்ளி எறியும்படி அவர் உறுதியான முறையில் நமக்கு அறிவுறுத்துகிறார். அக்ரிப்பினுஸ் என்னும் ஒரு தத்துவஞானி, தம் நிலச் சொத்தை இழந்த போது, "நான் என் உடைமைகளை இழந்திருக்கிறேன் என்றாலும், என் சமாதானத்தை இழக்கவில்லை" என்றார். நீ நிந்திக்கப்படும் ஒவ்வொரு முறையும், உன் பதிலும் இப்படிப்பட்டதாகவே இருக்கட்டும். ஓர் அவமானத்தைப் பெற்றுக் கொண்டிருப்பது உனக்குப் போதாதா? கோபத்திற்கு இடம் கொடுத்து, உன் ஆத்தும சமாதானத்தையும் இழக்க நீ விரும்புகிறாயா? கோபத்தினால் வரும் மன உளைச்சல், நீ பெற்றுக்கொண்ட அவமானத்தை விட உனக்கு அதிகத் தீமையானது. தான் அவமானப்படுத்தப்படும் ஒவ்வொரு முறையும் கோபத்திற்கு இடமளிப்பவன் தன்னைத் தானே தண்டிப்பவனாக இருக்கிறான் என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார். ஆத்துமம் ஒரு தவறுதலுக்கான வருத்தத்திலிருந்து மீண்டு வரும்போது, அது அமைதியை இழப்பது, அதற்கு எப்போதுமே தீங்கு விளைவிப்பதாகத்தான் இருக்கும். ஏனெனில் அர்ச். அலாய்சியஸ் வழக்கமாகக் கூறுவது போல, குழம்பிய நீரில் மீன் பிடிப்பது பசாசுக்கு இன்பமான காரியம்.

கோபம் அல்லது இழிவின் தொனியோடு யாராவது உன்னிடம் பேசும்போது, நீ இனிமை யோடு பதில் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லிய் இருக்கிறேன். ஆனால் நான் இப்போது சொல்கிறேன்: ஆத்துமம் குழப்பத்திற்கு உள்ளாகும்போதெல்லாம் அது மவுனமாக இருப்பதே நல்லது; ஏனெனில் அப்போது கோபமானது கடுமையான வார்த்தைகளை நியாயமானவை யாகவும், அறிவுக்கு உகந்தவையாகவும் தோன்றச் செய்யும். ஆனால் சமாதானம் திரும்பி வரும்போது, உன் வார்த்தைகள் நியாயப்படுத்தப்பட முடியாதவை என்று நீ காண்பாய். கோபம் ஓர் இருண்ட போர்வையைக் கொண்டு ஆத்துமத்தை மூடுகிறது, இந்தப் போர்வை எது சரி, எது தவறு என்று அந்த ஆத்துமம் பிரித்தறிய

முடியாதபடி அதைத் தடுத்து விடுகிறது என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார்.

உன்னை நோகச் செய்த மனிதன் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வருகிறான் என்றால், கடுகடுப்பான முகத்தோடு அவனை எதிர் கொள்ளாதபடியும், உன் வார்த்தைகளிலும் பார்வையிலும் அதிருப்தியும், மரியாதைக் குறைவும் தோன்றாதபடியும் கவனமாயிரு.

ஆனால் நீ மற்றொருவனை நோகச் செய்த அல்லது கோபப் படுத்திய ஒவ்வொரு முறையும், உன் பலம் முழுவதையும் பயன்படுத்தி, உடனடியாக அந்த மனிதனின் வேதனையைத் தணிக்கவும், உன்மீது அவன் இருதயத்தில் எந்த விதமான கோப உணர்வும் தோன்றாதபடி செய்யவும் முயற்சி செய். "காயப்படுத்தப்பட்ட பிறர்சிநேகத்திற்குத் தாழ்ச்சி மட்டுமே பரிகாரமாக இருக்கிறது" என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். சுய அவமதிப்பு பிறர்சிநேக மீறுதலைச் சரி செய்வதற்கு மிகவும் பயனுள்ள ஒரு வழியாகும். ஆகவே, பிறர்சிநேகத்திற்கு எதிராக நீ குற்றம் செய்யும் ஒவ்வொரு முறையும் உடனடியாக உன்னையே தாழ்த்தி, அவமானத்தைப் பற்றிய உன் இயல்பான வெறுப்பின் மீது பலவந்தமான முறையில் வெற்றி கொள்; நீ செய்த தீமைக்கான பரிகாரத்தை எவ்வளவு காலம் தள்ளிப் போடுவாயோ, அவ்வளவு அதிகமாக, பரிகாரம் செய்ய உனக்கிருக்கும் வெறுப்பும் அதிகரிக்கும். **"நீ பீடத்தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்பொழுது உன் சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கலாய் இருக்கிறானென்று அங்கே நினைவுகூர்வாயாகில், உன் காணிக்கையை அங்கே பீடத்தின் முன்பாக வைத்துவிட்டு, முந்த உன் சகோதரனோடு உறவாடப் போ; பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக"** என்கிறார் நம் மீட்பர் **(மத்.5:23,24).** நீ உன் காணிக்கையைச் செலுத்தவோ, திவ்ய நன்மை வாங்கவோ, பூசை காணவோ பீடத்தை நெருங்கி வரும்போது, உன் சகோதரனை நீ மனம் நோகச் செய்திருக்கிறாய் என்பது உன் நினைவுக்கு வந்தால், பீடத்தினின்று உடனே புறப்பட்டுப் போய், அவனோடு மீண்டும் ஒப்புறவாகு.

வெள்ளி

நம் நம்பிக்கையான சேசுநாதரின் மரணம் II

சேசுநாதர் நம் இரட்சணியத்தின் ஒரே நம்பிக்கையாக இருக்கிறார். **“வேறு எவராலும் இரட்சணியமில்லை" (அப்.4:12)**. ஓ, பாறையின் புனிதப் பிளவுகளில், அதாவது, சேசுகிறீஸ்து நாதரின் திருக்காயங்களில் எத்தகைய பாதுகாப்பான புகலிடத்தை நாம் காண்கிறோம்! அங்கே, நம் பாவங்களின் காட்சி நம்மில் உண்டாக்கும் அவநம்பிக்கையின் உணர்விலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். அங்கே சோதனைகளுக்கு எதிரான பாதுகாப்பின் போர்க்கருவிகளை நாம் காண்போம்; அங்கே உலகத்தின் தாக்குதல்களை எதிர்த்து நிற்கப் போதுமான பலத்தை நாம் கண்டடைவோம். நான் மட்டுமே வாசல் என்கிறார் சேசுநாதர்; என் வழியாக நுழைபவன் நிச்சயமாக நித்திய வாழ்வைக் கண்டடைவான்: **“நானே வாசல், என் வழியாய்ப் பிரவேசிக்கும் எவனும் இரட்சிக்கப்படுவான்" (அரு.10:9).** சேசுநாதர் தமது திரு இரத்தத்தாலும், தமது திருமரணத்தாலும் நம் பொருட்டு, தேவ நீதிக்குப் பரிகாரம் செய்யாமல் இருந்திருந்தால், மன்னிக்கப்படுவேன் என்ற நம்பிக்கையை எந்தப் பாவிதான் கொண்டிருக்க முடியும்? **“அவர் அவர்களுடைய அக்கிரமங்களைத் தாங்கிக் கொள்வார்" (இசை. 53)**. இதனாலேயே அப்போஸ்தலர் நம்மிடம்: **“வெள்ளாட்டுகிடாய்கள், காளைகள் இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்களின்மேல் தெளிக்கப்படுகிற கிடாரியின் சாம்பலும், மாம்ச அசுத்தத்தை நீக்கி, அவர்களைச் சுத்தப்படுத்துமானால், நாம் ஜீவியரான கடவுளைச் சேவிக்கும்படிக்கு இஸ்பிரீத்து சாந்துவினால் மாசில்லாத பலியாகத் தம்மைத்தாமே சர்வேசுரனுக்கு**

ஒப்புக்கொடுத்த கிறீஸ்துநாதருடைய இரத்தம் எவ்வளவோ அதிகமாய் நம்முடைய மனச்சாட்சிகளைச் செத்த கிரியைகளினின்று சுத்திகரிக்கும்!'' (எபி.10:13). பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட வெள்ளாடுகள் மற்றும் காளைகளின் இரத்தம் யூதர்கள் தேவாலய வழிபாட்டில் அனுமதிக்கப்படும்படி, அவர்களிடமிருந்து வெளியரங்கமான சரீர அசுத்தங்களை அகற்றுமானால், அன்பிற்காகத் தம்மையே நமக்கென பாவப் பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுத்தவராகிய சேசுநாதரின் திரு இரத்தம் இன்னும் எவ்வளவு அதிகமாக, உன்னதரான நம் தேவனுக்கு ஊழியம் செய்ய நமக்கு உதவும்படி நம் ஆத்துமங்களிலிருந்து பாவத்தை அகற்றும்!

நம் அன்புள்ள இரட்சகர் வேறு எதற்காகவும் அன்றி பாவிகளை இரட்சிக்கும் ஒரே நோக்கத்துடன் உலகிற்கு வந்தார். நம் பாவங்களின் காரணமாக, நமக்கு எதிராக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த தண்டனைத் தீர்ப்பைக் கண்டபின் அவர் என்ன செய்தார்? தமது சொந்த மரணத்தால் நம் பாவங்களுக்குரிய பரிகாரத்தை அவர் செலுத்தினார்; தேவநீதி இனி நம் பாவங்களுக்குரிய பரிகாரத்தை நம்மிடமிருந்து தேடாதபடி தமது சொந்த இரத்தத்தைக் கொண்டு நம் தண்டனைத் தீர்ப்பை அவர் ரத்துச் செய்தார், அவர் தாம் எதன்மீது மரித்தாரோ, அதே சிலுவையின் மீது நமக்குரிய தண்டனைத் தீர்ப்பையும் அறைந்து விட்டார்; **“நமக்கு எதிரிடையாயும், நமக்கு விரோதமாயுமிருந்த தீர்ப்பின் கையெழுத்தை அழித்து, அதைச் சிலுவையில் அறைந்து, முழுதும் ஒழித்துப்போட்டார்'' (கொலோ.2:14).**

“கிறீஸ்துநாதர்...பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, நித்திய இரட்சணியத்தை நமக்குப் பெறுவித்தார்'' (எபி.9:12). ஆ, என் சேசுவே, எங்களுக்காகப் பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு நீர் இந்த வழியைக் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால், வேறு யாரால் அதைக் கண்டுபிடித்திருக்க முடியும்? **“அவருடைய வழிகளை அறிவியுங்கள்'' என்று தாவீது காரணத்தோடுதான் கூக்குரலிட்டார் (சங்.9:12).** ஓ, பரலோகவாசிகளே, நம்மை இரட்சிக்கும்படி நம் சர்வேசுரன் பயன்படுத்திய நேசத்திற்குரிய அற்புதத் திட்டங்களை அறிவியுங்கள். ஆகவே, ஓ என் இனிய இரட்சகரே, நீர் என் மீது

மிகுந்த அன்பு கொண்டிருக்கிறீர் என்பதால், எனக்கு இரக்கமக் காட்டுவதை ஒருபோதும் நிறுத்தி விடாதிரும். நீர் உமது இரத்தத்தைக் கொண்டு லூசிபரின் கைகளிலிருந்து என்னைக் காப்பாற்றி வீட்டீர். உமது கரங்களில் நான் என் ஆத்துமத்தை ஒப்படைக்கிறேன்; அதை இரட்சிப்பது உம் பொறுப்பு: **“உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்படைக்கிறேன்; ஓ சத்தியத்தின் தேவனே, நீர் என்னை மீட்டு இரட்சித்தீர்” (சங்.30:5).**

II

“என் பாலகரே, நீங்கள் பாவஞ் செய்யாதிருக்கும்படிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஆகிலும் யாதொருவன் பாவஞ்செய்தால், நீதிபரனாகிய சேசுக்கிறீஸ்துநாதர் பிதாவிடம் நமக்காகப் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு அவரே பரிகாரப் பலியாய் இருக்கிறார்'' (1 அரு.2:1). சேசுநாதர் தமது மரணத்தைக் கொண்டு, நித்தியப் பிதாவிடம் நமக்காகப் பரிந்துபேசுவதை முடிவுக்குக் கொண்டு வந்து விடவில்லை. இப்போதும் கூட அவர் நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டுதான் இருக்கிறார்; மேலும் அர்ச். சின்னப்பர் எழுதுவது போல, நமக்கு இரக்கம் காட்டும்படி தம் பிதாவைத் தூண்டுவதைத் தவிர வேறு என்ன செய்வது என்று தெரியாதவரைப் போல அவர் தோன்றுகிறார்: **“நமக்காகப் பரிந்து பேசுவதற்காகவே என்றென்றும் ஜீவிக்கிறார்'' (எபி.7:25).** மேலும் இதற்காகத்தான் நம் இரட்சகர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றிருக்கிறார் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார்: **”சர்வேசுரனுடைய சமூகத்தில் நமக்காகத் தாம் பரிந்துபேசும்படிக்கு'' (எபி.9:24)**. கலகக்காரர்கள் தங்கள் அரசனின் சமூகத்திலிருந்து துரத்தியடிக்கப்படுவது போலவே பாவிகளாகிய நாமும், கடவுளின் மன்னிப்பைக் கேட்கவும் கூட நம் சர்வேசுரனின் சமூகத்தில் அனுமதிக்கப்படத் தகுதியற்றவர்களாக, அவர் முன்னிலையிலிருந்து துரத்தியடிக்கப்பட்டிருப்போம். ஆனால் சேசுநாதர், நம் மீட்பர் என்ற முறையில் தேவப் பிரசன்னத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார், தமது பேறுபலன்களின் வழியாக. நாம் இழந்து போன வரப்பிரசாதத்தைத் திரும்பவும் நமக்குப் பெற்றுத் தருகிறார்: **“புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய சேசுவிடமும்,**

ஆபேலின் இரத்தத்தை விட அதிக நன்றாய்ப் பேசுகிற இரத்தத் தெளிப்பிடமும் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்'' (எபி.12:24). ஓ, எவ்வளவு பெருமளவு பலனுள்ள வகையில் இரட்சகரின் திரு இரத்தம், காயீனின் தண்டனைக்காக மன்றாடிய ஆபேலின் இரத்தத்தை விட அதிகமாக, நமக்காகத் தேவ இரக்கத்தை மன்றாடிக் கேட்கிறது! கடவுள் அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாளிடம், "சேசுகிறீஸ்துவின் மாசற்ற சரீரம் பழிவாங்கப்பட்டதன் காரணமாக, என் நீதி இரக்கமாக மாற்றப்பட்டு விட்டது. என் மகனின் திரு இரத்தம் ஆபேலின் இரத்தத்தைப் போல, பழிவாங்கும்படி என்னிடம் மன்றாடவில்லை, மாறாக, அது இரக்கத்திற்காகவும், தயவிற்காகவும் மன்றாடுகிறது. அதன் குரல் சத்தத்தில், என் நீதி சாந்தமடையாமல் இருக்க இயலாது. இந்த இரத்தம் நீதியின் கரங்களை எந்த அளவுக்குக் கட்டிப் போடுகிறது என்றால், ஒரு பேச்சுவகைக்கு, முன்பு அது பாவத்திற்குப் பழிவாங்கிக் கொண்டிருந்தது போல் இப்போது பழிவாங்க இயலாமல் இருக்கிறது'' என்றார்.

"பிணையாளியின் உபகாரத்தை மறந்து விடாதே'' (சீராக்.29:19). ஆ, என் இனிய இரட்சகராகிய சேசுவே, என் பாவங்களுக்குப் பிறகு, நான் ஏற்கனவே தேவ நீதிக்குப் பரிகாரம் செய்ய இயலாமல் இருந்தபோது, நீர் உமது மரணத்தின் மூலம் எனக்காகப் பரிகாரம் செய்ய சித்தமாயிருந்தீர். ஓ, உம்முடைய இந்த மாபெரும் இரக்கத்தை நான் மறப்பேன் என்றால், இப்போது நான் எவ்வளவு நன்றிகெட்டவனாக இருப்பேன்! இல்லை, என் மீட்பரே, இதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அதற்காக எப்போதும் உமக்கு நன்றிசெலுத்திக் கொண்டிருக்கவும், உம்மை நேசிப்பதன் மூலமும், உம்மை மகிழ்விக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வதன் மூலமும் என் நன்றியறிதலைக் காட்டவும் நான் ஆசையா ய் இருக்கிறேன். மிக அநேக துன்பங்களால் நீர் எனக்காக சம்பாதித்துள்ள வரப்பிரசாதத்தைக் கொண்டு எனக்கு உதவி செய்தருளும். என் சேசுவே, என் அன்பரே, என் நம்பிக்கையே, நான் உம்மை நேசிக்கிறேன்!

சனி

மாமரியின் பிறர்சிநேகம்

I

தேவசிநேகமும், பிறர்சிநேகமும் ஒரே திருச்சட்டத்தால் நமக்குக் கட்டளையாகத் தரப்பட்டுள்ளன. **"சர்வேசுரனைச் சிநேகிக்கிறவன் தன் சகோதரனையும் சிநேகிக்கக்கடவான் என்கிற இந்தக் கற்பனையைச் சர்வேசுரனிடத்தில் நாம் பெற்றிருக்கிறோம்'' (1அரு.4:21).** கடவுளை நேசிக்கிறவன் அவர் நேசிக்கும் அனைத்தையும் நேசிக்கிறான் என்பதுதான் இதன் காரணம் என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** கூறுகிறார். **அர்ச். ஜெனோவா கத்தரீனம்மாள்** ஒரு நாள், "ஆண்டவரே, நான் என் அயலானை நேசிக்க வேண்டும் என்று நீர் சித்தங்கொள்கிறீர். ஆனால் உம்மைத் தவிர வேறு யாரையும் என்னால் நேசிக்க முடியாது'' என, "என்னை நேசிப்பவர்கள் நான் நேசிக்கும் காரியத்தையும் நேசிக்கிறார்கள்'' என்று கடவுள் பதில் கூறினார். ஆனால் மாமரி கடவுளை நேசித்த அளவுக்கு அவரை நேசித்தவர்கள் ஒருபோதும் இருந்ததில்லை, இனி ஒருபோதும் இருக்கப் போவதில்லை என்பது போலவே, மாமரி தன் அயலானை நேசித்ததை விட அதிகமாக அவனை நேசித்தவர்கள் ஒருபோதும் இருந்ததில்லை, இனியும் இருக்கப் போவதில்லை.

"சலொமோன் இராஜா தமக்கு லீபான் மலையில் விளைந்த (கேதுரு) மரத்தினால் ஒரு பல்லக்கை உண்டுபண்ணினார். . . எருசலேம் பெண்களினிமித்தம் நேசமென்னும் சமுக்காளத்தை உட்புறத்தில் போட்டுச் சோடித்தார்'' (உந்.சங்.3:9,10) என்னும் உந்நத சங்கீத வார்த்தைகளுக்கு சுவாமி **கொர்னேலியஸ் ஆ லாப்பிதே** விளக்கம் கூறுகையில், "இந்தப் பல்லக்கு அவதரித்த வார்த்தையானவர் தங்கியிருந்த மாமரியின் திருவுதரம் ஆகும். அவர் எருசலேமின் பெண்களுக்காக நேசத்தால் அதை நிரப்பினார்; ஏனெனில், மாமரி தன்னிடம் தஞ்சமடையும் அனைவருக்கும் அவர்கள் உதவும்படியாக, நேசமாகவே இருக்கும் கிறீஸ்துநாதர் திவ்விய கன்னிகையை உச்சபட்ச பிறர்சிநேகத்தால் ஏவித் தூண்டினார்'' என்கிறார்.

மாமரியின் சிநேகம் எவ்வளவு மேலானது என்றால், இவ்வுலகில் இருந்தபோது, ஏழைகள் தன்னிடம் கேட்காமலே மாமரி அவர்களுக்கு உதவி புரிந்தார்கள். இதற்குக் கானாவூர்த் திருமணம் ஓர் உதாரணம். அங்கே, திருமண வீட்டாரின் இக்கட்டான சூழ்நிலையைப் பற்றி மாமரி தன் திருமகனிடம் **“அவர்களுக்கு இரசமில்லை" (அரு.2:3)** என்று கூறி, ஒரு புதுமையைச் செய்யும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார்கள். ஓ, தன் அயலானின் துன்பத்தைத் தீர்க்கும் அலுவலில் அவர்கள் எவ்வளவு துரிதமாகச் செயல்பட்டார்கள்! பிறர்சிநேகத்தின் அலுவல் ஒன்றை நிறைவேற்றும்படி எலிசபெத்தின் வீட்டிற்கு மாமரி சென்றபோது, அவர்கள் **“மலைநாட்டுக்கு விரைந்து போனார்கள்" (லூக்.1:39).** ஆயினும் நம் இரட்சணியத்திற்காகத் தன் திருமகனை மரணத்திற்குக் கையளித்தபோது அவர்கள் வெளிப்படுத்திய பிறர்சிநேகத்தின் மேன்மையை எலிசபெத்தின் வீட்டில் அதிக முழுமையாக அவர்களால் வெளிப்படுத்த முடியவில்லை. இந்தக் காரியத்தைப் பற்றி **அர்ச். பொனவெந்தூர்** கூறுகையில்: “மாமரி தன் ஒரே பேறான திருமகனைக் கையளிக்கும் அளவுக்கு உலகின் மீது அன்பு கூர்ந்தார்கள்" என்கிறார். இதனாலேயே **அர்ச். ஆன்செல்ம்**, “ஓ, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உங்கள் மாசற்றதனம் தேவதூதர்களின் மாசற்றதனத்தையும், உங்கள் தயவு புனிதர்களின் தயவையும் விஞ்சியதாக இருக்கிறது" என்கிறார்! “மாமரி இப்போது மோட்சத்தில் இருப்பதால், அவர்களுடைய இந்த நேசம் குறைந்து விடவில்லை, மாறாக, இப்போது மனிதர்களின் துன்பங்களை அவர்கள் அதிகத் தெளிவாகக் காண்பதால், அவர்களுடைய நேசம் இப்போது அதிகரித்திருக்கிறது" என்று அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார். புனிதரே தொடர்ந்து, “தான் இவ்வுலகில் இருந்தபோதே பரிதாபத்திற்குரிய மனிதர்களின் மீது மாமரி கொண்டிருந்த இரக்கம் பெரிதாக இருந்தது; இப்போது மோட்சத்தில் ஆட்சி செலுத்துகையில் அவர்களது இரக்கம் இன்னும் பல மடங்கு பெரியதாக இருக்கிறது" என்று கூறுகிறார்.

ஓ இரக்கத்தின் மாதாவே, நீங்கள் தேவசிநேகத்தால் முழுவதுமாக நிரம்பியிருந்தீர்களே, அவருடைய மாசற்றதும்,

பரிசுத்தமானதுமான அன்பை எனக்குப் பெற்றுத் தாருங்கள். நீங்கள் உங்கள் அயலாரிடம் முழுவதும் அன்பாகவே இருந்தீர்களே, என் அயலானை நேசிக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள். மரியாயே, என்னை ஒரு புனிதனாக்குங்கள்.

II

"ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையிடம் ஜெபித்தவர்கள் யாரும் அவர்களுடைய பிறர் சிநேகத்தின் வழியாக வரப்பிரசாதங்களை அடையாமல் போனதில்லை" என்று **அர்ச். ஆக்னஸ்** அர்ச். பிரிஜித்தமாளுக்கு உறுதி கூறினாள். மாமரி நமக்காகப் பரிந்து பேசவில்லை என்றால், நாம் உண்மையாகவே பரிதாபத்திற்கு உரியவர்களாகத்தான் இருப்போம்! சேசுநாதர்தாமே இந்தப் புனிதையிடம் பேசும்போது, "என் திருமாதாவின் ஜெபங்கள் இல்லாவிடில், இரக்கத்திற்கான எந்த நம்பிக்கையும் இருக்காது" என்றார்.

என் போதனைகளைக் கேட்டு, என் நேசத்திற்குச் செவிசாய்த்து, என்னைக் கண்டு பாவிப்பவன், மற்றவர்களிடம் பிறர்சிநேகத்தைச் செயல்படுத்துகிறான் என்று தேவமாதாவே கூறுகிறார்கள்: **"நான் சொல்வதைக் கேட்டு, நாள்தோறும் என் வாசலண்டை விழித்திருந்து, என் கதவு நிலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பவனே பாக்கியவான்" (பழ.8:34).** "நம் அயலான் மீது நாம் கொள்ளும் பிறர்சிநேகத்தால் அன்றி, மரியாயின் தயவுள்ள அன்பைப் பெற அதிக நிச்சயமான வேறு எந்த வழியும் நமக்கு இல்லை" என்று **அர்ச். கிரகோரி நாசியான்சென்** நமக்கு உறுதியாகக் கூறுகிறார். ஆகவே, **"உங்கள் பிதா இரக்கமுள்ளவராக இருப்பது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்" (லூக்.6:36)** என்று கடவுள் நமக்கு அறிவுறுத்துவது போல மாமரியும் தன் எல்லாக் குழந்தைகளிடமும், "உங்கள் தாய் இரக்கமுள்ளவளாக இருப்பதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்" என்று சொல்வதாகத் தோன்றுகிறது. கடவுளின் மாமரியும் நமக்குக் காட்டும் நேசத்தின் அளவைத் தீர்மானிப்பது நாம் நம் அயலானுக்குக் காட்டும் சிநேகமே

என்பது நிச்சயம்: **“கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்'' (லூக்.6:38).** “ஏழைகளுக்குக் கொடுத்து, மோட்சத்தை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று **அர்ச். மெத்தோடியஸ்** சொல்வது வழக்கம். ஏனெனில் பிறர்சிநேகம் நம்மை இவ்வுலகத்திலும், மறுவுலகத்திலும் மகிழ்ச்சியுள்ளவர்களாக ஆக்குகிறது என்று அப்போஸ்தலர் எழுதுகிறார்: **“தேவபக்தி இந்த ஜீவியத்துக்கும், இதற்குப் பின்வரும் ஜீவியத்துக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால், எல்லா வற்றிற்கும் பயனுள்ளது'' (1 திமோ.4:8). “ஏழைகளுக்கு இரக்கம் காட்டுகிறவன் கடவுளுக்குக் கடன் கொடுக்கிறான்''** என்ற **பழமொழி ஆகம** வாக்கியத்துக்கு **(13:17)** விளக்கம் தருகையில் **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பரும்** இதே விதமான கருத்தைக் கூறுகிறார்: “தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்கிறவன் கடவுளைக் கடனாளியாக்குகிறான்.''

ஓ, இரக்கத்தின் மாதாவே, நீங்கள் அனைவர் மீதும் இரக்கத்தால் நிறைந்திருக்கிறீர்கள்; என் துயரங்களை மறந்து விடாதீர்கள்; அவற்றை முற்றிலும் நன்றாக நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களுக்கு எதையும் மறுக்காதவராகிய கடவுளிடம் எனக்காகப் பரிந்து பேசுங்கள். தேவசிநேகத்திலும், பிறர்சிநேகத்திலும் உங்களை நான் கண்டுபாவிக்கும் வரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு

“சினம் கொள்ளத் தாமதியுங்கள்.''

(ஞாயிறு சுவிசேஷம்)

I

கோபமே எல்லாத் துர்க்குணங்களும் ஆன்மாவினுள் நுழைவதற்கான வாசலாக இருக்கிறது என்று **அர்ச். ஜெரோம்** சொல்கிறார். அர்ச். பொனவெந்தூர் கூறுகிறபடி, கோபமுள்ள மனிதன் எது நல்லது, எது தீயது என்று பிரித்தறிய இயலாதவனாக

இருக்கிறான். **“மனிதனுடைய கோபம் தேவ நீதியைப் பிறப்பிக்காது'' (யாகப்.1:20)**. கோபம் கொள்கிறவன் கடவுளுக்கு, அல்லது தன் அயலானுக்கு எதிராகக் கனமான பாவத்தில் விழும் பெரும் ஆபத்தில் இருக்கிறான். இவ்வாறு, நமக்கு ஓர் அவமானம் வரும்போது, நாம் நம்மையே வலுவந்தம் செய்து, நம் கோபத்தை அடக்கிக்கொள்ள வேண்டும். ஒன்றில் சாந்தத்தோடு பதில் சொல்வோம், அல்லது மவுனமாக இருந்து விடுவோம்; இவ்வாறு நாம் வெற்றி பெறுவோம் என்று **அர்ச். இசிதோர்** சொல்கிறார். ஆனால் கோபத்தோடு நீ பதில் சொல்வாய் என்றால், உனக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு செய்பவன் ஆவாய். உன்னைத் திருத்துபவனுக்குக் கோபத்தோடு பதில் சொல்வது இன்னும் அதிக மோசமாக இருக்கும். முகஸ்துதியின் மூலம் தங்கள் ஆத்துமங்களைக் காயப்படுத்துபவர்கள் மீது கோபப்பட வேண்டியிருந்தும் கோபப்படாத சிலர் இருக்கிறார்கள் என்று **அர்ச். பெர்னார்ட்** சொல்கிறார். ஆனால் அவர்கள் தங்கள் ஒழுங்கீனங்களைக் குணமாக்குவதற்காகத் தங்களைத் திருத்துபவன் மீது இவர்கள் எரிச்சலும் கோபமும் கொள்கிறார்கள். திருத்தப் படுவதை வெறுக்கும் மனிதனுக்கு எதிராக, அழிவின் தீர்ப்பு கூறப்பட்டு விட்டது என்று ஞானியானவர் கூறுகிறார்: **“ஏனெனில் அவர்கள் என் கண்டிப்புகளைப் புறக்கணித்தார்கள். . . “மதியீனர்களின் செல்வாக்கு அவர்களை அழித்து விடும்'' (பழ. 1:30,32)**. மூடர்கள் திருத்தப்படுவதிலிருந்து விடுபட்டிருப்பதை, அல்லது தாங்கள் பெறும் அறிவுரைகளைப் புறக்கணிப்பதை செல்வாக்கு என்று மதிக்கிறார்கள்; ஆனால் இத்தகைய செல்வாக்கு அவர்களுடைய அழிவுக்குக் காரணமாக இருக்கிறது. **“சீக்கிரத்தில் கோபித்துக்கொள்ள வேண்டாம்'' (சங்கப்.7:10).** பிறர் தங்களுக்கு முரண்படும் ஒவ்வொரு முறையும் சிலர் நிறம் மாறுகிறார்கள், கோபப்படுகிறார்கள். கோப மூட்டும் ஒரு சந்தர்ப்பத்தை நீ எதிர்கொள்ளும்போது, அது உன் இருதயத்திற்குள் நுழைந்து விட அனுமதிக்காதபடி நீ விழிப்பாய் இருக்க வேண்டும். கோபம் உள்ளே நுழைய அனுமதி பெற்றதும், அது தங்களை எங்கே வழிநடத்துகிறது என்பது யாருக்கும் தெரியாது. இதன் காரணமாக, இத்தகைய சந்தர்ப்பங்களை நம் தியானங்களிலும் ஜெபங்களிலும் நாம் முன்னறிந்திருப்பது

அவசியம். ஏனெனில் அவற்றை எதிர்கொள்ள நாம் ஆயத்தமாக இராவிடில், மூர்க்கமான குதிரைக்குக் கடிவாளமிடுவதைப் போல, கோபத்தை அடக்குவதும் கடினமானதாக இருக்கும். ஆயினும், கோபம் ஆத்துமத்தினுள் நுழைய அனுமதித்து விட்ட பரிதாப நிலையில் நாம் இருந்தால், அது தொடர்ந்து அங்கே தங்கிய் இருக்க அனுமதிக்காதபடி நாம் கவனமாயிருப்போம். ஒரு சகோதரன் தன் மீது மனத்தாங்கலாக இருப்பதாக உணரும் எவனும், முதலில் அவனோடு சமாதானம் செய்து கொள்ளாமல் பீடத்தருகில் வந்து காணிக்கை செலுத்தலாகாது என்று சேசுநாதர் கூறுகிறார். **“முதலில் உன் சகோதரனுடன் உறவாடப் போ; பிறகு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்.5:9)**. எந்த விதத்திலாவது நோகடிக்கப்பட்ட ஒருவன் தன் இருதயத்திலிருந்து கோபம் முழுவதையும் மட்டுமல்ல, மாறாக தங்களை நோகச் செய்த மனிதர்கள் மீது தங்களுக்குள்ள ஒவ்வொரு கசப்புணர்வையும் வேரறுத்து விட முயல வேண்டும். **“சகலவித கசப்பும், கோபமும், எரிச்சலும், கூக்குரலும், தூஷணமும், இது முதலான எவ்வித துர்க்குணமும் உங்களை விட்டு விலகக்கடவது" (எபே.4:31)**. கோபம் உன்னிடம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும் வரையிலும், செனேக்காவின் அறிவுரையைப் பின்பற்று: “நீ கோபமாக இருக்கும்போது, எதுவும் செய்யாதே. எதுவும் சொல்லாதே, அது கோபத்தால் தூண்டப்பட்டதாக ஆகி விடலாம்." தாவீதைப் போல மவுனமாயிரு, நீ தொந்தரவு செய்யப் படுவதாக உணரும்போது எதுவும் பேசாதே. **“நான் கலங்கியிருந்தபடியால் பேசாமலிருந்தேன்" (சங்.76:5)**. எத்தனை பேர், கோபத்தால் பற்றியெரியும்போது, வாய்க்கு வந்தபடி பேசி விட்டு, அல்லது எதையாவது செய்து விட்டு, பிறகு தாங்கள் அமைதி யடைந்தபின் அதற்காக வருந்துகிறார்கள்!

II

மிக அநேக சூழ்நிலைகளுக்கு மத்தியில், கோபத்தின் ஒவ்வொரு தூண்டுதலிலிருந்தும் ஒட்டுமொத்தமாக விடுபட்டிருப்பது மனித பலவீனததிற்கு சாத்தியமேயில்லை என்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்பது உண்மைதான். செனேக்கா கூறுவது

போல, இந்தக் கோபத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டிருப்பவன் ஒருவனுமில்லை. ஆத்துமத்தில் வெடித்துக் கிளம்பும் கோப உணர்வுகளை அடக்குவதற்குத்தான் நாம் முழு முயற்சி எடுக்க வேண்டும். அவற்றை எப்படி அடக்குவது? சாந்தத்தால்! இது செம்மறிக்குட்டியின் புண்ணியம்-- அதாவது சேசுநாதரின் நேசத்திற்குரிய புண்ணியம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அவர் ஒரு செம்மறிப் புருவையைப் போல, கோபம் கொள்ளாமலும், எந்த முறைப்பாடும் சொல்லாமலும், தமது திருப்பாடுகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதலின் துன்ப துயரங்களை அனுபவித்தார். **“ஆடானது தன்னைக் கழுத்தறுப்பான் முன் வாய்த் திறவாதிருப்பதுபோல, அவர் தம் கொலைஞர் முன் மௌனங்காத்தார்'' (இசை.53:7).** இதனாலேயே தம்மிடமிருந்து சாந்தத்தையும், இருதயத் தாழ்ச்சியையும் கற்றுக்கொள்ளும்படி அவர் நமக்குக் கற்பித்தார்: **“நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவனென்று என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' (மத்.11:29).**

ஓ, சாந்தமுள்ளவர்கள் கடவுளின் பார்வைக்கு எவ்வளவு பிரியமானவர்களாக இருக்கிறார்கள்! அவர்கள் சமாதானத்தில் தங்களுக்கு வரும் எல்லாச் சிலுவைகளுக்கும், நிர்ப்பாக்கியங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும், காயங்களுக்கும் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். சாந்த குணமுள்ளவர்களுக்குப் பரலோக இராச்சியம் வாக்களிக்கப்பட்டுள்ளது: **“சாந்த குணமுள்வர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் நாட்டைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்'' (மத்.5:4);** அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவார்கள்: **“சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தேவமக்கள் எனப்படுவார்கள்'' (மத்.5:9).** சிலர் எந்த அடிப்படையுமின்றித் தங்கள் சாந்த குணத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வார்கள்; ஏனெனில் தங்களைப் புகழ்பவர்களும், நன்மை செய்பவர்களுமான மனிதர்களிடம் மட்டுமே அவர்கள் சாந்தத்தோடு இருக்கிறார்கள். ஆனால் தங்களைக் காயப்படுத்துகிற அல்லது கண்டனத்துக்கு உள்ளாக்குகிற மனிதர்களிடமோ, அவர்கள் முழுவதும் கடுங்கோபவெறியும், பழிவாங்கும் ஆசையும் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். சாந்தம்

என்னும் புண்ணியம் நம்மை வெறுப்பவர்களும், தவறாக நடத்துபவர்களுமான மனிதர்களிடமும் சாந்தமாகவும், சமாதானத்தோடும் இருப்பதில் அடங்கிய் இருக்கிறது. **“சமாதானத்தை வெறுப்பவர்களோடு நான் சமாதானமாயிருந்தேன்'' (சங்.119:7).**

அர்ச். சின்னப்பர் சொல்வது போல, எல்லா மனிதர்களிடமும் நாம் இரக்கத்தை அணிந்துகொண்டவர்களாக இருந்து, ஒருவரை யயாருவர் தாங்கிக் கொள்ள வேண்டும். **“சர்வேசுரனால் தெரிந்து கொள்ளப்பட்ட நீங்கள் பரிசுத்தரும், பிரியமுள்ளவர்களுமாய்த் தயாளமான உள்ளத்தையும், சாந்தத்தையும், தாழ்ச்சியையும், அடக்கவொடுக்கத்தையும், பொறுமையையும் உடுத்திக்கொண்டு, ஒருவரொருவரைத் தாங்கி, எவனுக்காவது மற்றொருவன் மேல் முறைப்பாடு இருந்தால், அதைப் பொறுத்துக்கொண்டு, ஆண்டவர் உங்களை மன்னித்தது போல் நீங்களும் உங்களுக்குள் ஒருவர் ஒருவரை மன்னித்துக்கொள்ளுங்கள்'' (கொலோ.3:12).** உன் குறைகளை மற்றவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும், உன் தவறுகளை அவர்கள் மன்னிக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்; அதே விதத்தில் நீயும் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். ஆகவே, உனக்கு எதிராகக் கோபவெறி கொண்டுள்ள ஒருவன் உன்னை அவமானப்படுத்தும்போது, **“சாந்தமுள்ள பதில் கடுங்கோபத்தை முறிக்கிறது'' (பழ.15:1).** தீயவர்கள் தங்களுக்கு வரும் அவமானங்களைத் தங்கள் ஆங்காரத்தை அதிகரித்துக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் தாழ்ச்சியும், சாந்தமும் உள்ளவர்களோ நிந்தை அவமானங்களைத் தாழ்ச்சியில் வளரத் தங்களுக்குத் தரப்பட்ட ஒரு வாய்ப்பாக மாற்றிக் கொள்கிறார்கள். “அவமானத்தைத் தாழ்ச்சியாக மாற்றிக் கொள்பவனே தாழ்ச்சியுள்ளவனாக இருக்கிறான்'' என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார்.

“சாந்தமுள்ள மனிதன் தனக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ளவனாக இருக்கிறான்'' என்கிறார் **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்**. சுவாமி ஆல்வாரெஸ் கூற்றுப்படி, நிந்தை அவமான நேரம் சாந்த குணமுள்ளவர்களுக்குப் பேறுபலன்களின்நேரமாக

இருக்கிறது என்பதால், அவர்கள் தங்களுக்குத் தாங்களே பயனுள்ளவர்களாக இருக்கிறார்கள். இதனாலேயே, தம் சீடர்களைப் பற்றி மற்றவர்கள் இல்லாதது பொல்லாததெல்லாம் கூறி, அவர்களைத் துன்புறுத்தும்போது அவர்கள் பாக்கியவான்கள் என்று சேசுநாதர் கூறுகிறார். "என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்துத், துன்பப்படுத்தி, உங்கள் மேல் சகல தின்மையையும் அபாண்டமாய்ச் சொல்லும்போது, நீங்கள் பாக்கியவான்கள்'' (மத்.;5:11). இதனாலேயே சேசுநாதர் நிந்தித்துப் புறக்கணிக்கப்பட்டது போலத் தாங்களும் புறக்கணிக்கப்பட வேண்டுமென்று புனிதர்கள் எப்போதும் விரும்பினார்கள். சாந்தமுள்ளவர்கள் மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பது எப்படியெனில், அதே **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** சொல்வது போல, சாந்தமும், சந்தோஷ உற்சாக மனநிலையும் கொண்ட கிறீஸ்தவன் காயப்படுத்தப்படுவதை அல்லது அவமதிக்கப்படுவதைக் காண்பதை விட கடவுளிடம் மற்றவர்களை ஈர்க்கக் கூடிய காரியம் வேறு எதுவுமில்லை. ஏனெனில் புண்ணியம் சோதிக்கப்படும்போதுதான் அறியப்படுகிறது; பொன் நெருப்பால் பரிசோதிக்கப்படுவது போல, மனிதரின் சாந்த குணம் அவமானத்தால் எண்பிக்கப்படுகிறது. "பொன்னும் வெள்ளியும் நெருப்பினால் சுத்தமாவது போல, மனிதரும் தாழ்ச்சியின் உலையில் தகுதியானவர்கள் ஆகிறார்கள்'' (சீராக்.2:5).

திங்கள்

நம் செயல்களில் பிறர்சிநேகம்

I

தாங்கள் நேர்மையான விதத்தில் தங்கள் அயலார் அனைவரையும் நேசிப்பதாகச் சிலர் கூறுவார்கள். ஆனால் அவர்களில் யாருக்காகவும் இவர்கள் தங்களையே வருத்திக் கொள்ள மாட்டார்கள். **"என் சிறு குழந்தைகளே, நாம் வார்த்தையிலோ, நாவிலோ அல்லாமல் செயலிலும், சத்தியத்திலும் நேசிப்போமாக'' (1**அருள. 3:18) என்று அர்ச். அருளப்பர் கூறுகிறார். பிச்சையிடுவது மனிதர்களை மரணத்திலிருந்து விடுவிக்கிறது, பாவங்களிலிருந்து

அவர்களைச் சுத்திகரிக்கிறது, தேவ இரக்கத்தையும், நித்திய வாழ்வையும் அவர்களுக்குப் பெற்றுத் தருகிறது என்று பரிசுத்த வேதாகமம் நமக்குக் கூறுகிறது. **“தர்மம் ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சிக்கும், பாவங்களை நிவிர்த்தி பண்ணும், தேவ கிருபையையும், நித்திய ஜீவியத்தையும் பெறுவிக்கும்'' (தோபி.12:9)**. நீ உன் அயலானை அவனது துன்பத்திலிருந்து எப்படி விடுவிக்கிறாயோ, அப்படியே கடவுளும் உன்னை விடுவிப்பார். **“எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்'' (மத்.7:2).** இதனாலேயே **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்**, மற்றவர்களுக்கு அன்பு காட்டுவது கடவுளிடமிருந்து ஒரு பெரும் ஆதாயத்தைச் சம்பாதிப்பதற்கான வழியாகும் என்று கூறுகிறார். “தர்மம், எல்லாச் செயல்களிலும் அதிக ஆதாயமுள்ளது.'' **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள்**, காட்சி தியானத்தில் தான் பரவச நிலைக்கு உட்படும்போது அனுபவிக்கும் மகிழ்ச்சியை விட அதிகமான மகிழ்ச்சியைத் தன் அயலானைத் துன்பத்திலிருந்து விடுவிக்கும் போது அடைவதாக அடிக்கடி கூறுவாள். “ஏனெனில், நான் காட்சிதியானத்தில் இருக்கும்போது, கடவுள் எனக்கு உதவுகிறார். ஆனால் நான் ஓர் அயலானின் துன்பத்தைத் தீர்க்கும்போது, நான் கடவுளுக்கு உதவுகிறேன்'' என்று அவர் கூறுகிறாள். ஏனெனில் நாம் நம் அயலாருக்குச் செய்யும் ஒவ்வொரு பிறர்சிநேகச் செயலையும் கடவுள் தமக்கே செய்யப் பட்டதாக ஏற்றுக்கொள்கிறார். ஆனால் மற்றொரு புறத்தில், அர்ச். அருளப்பர் சொல்வது போல, தேவையில் இருக்கும் ஒரு சகோதரனுக்கு உதவி செய்யாதவன் கடவுளை நேசிக்கிறான் என்று சொல்ல முடியுமா? **“ஒருவன் தன் சகோதரன் இக்கட்டுப்படுகிறதைக் கண்டும், அவனுக்கு (இரங்காமல்) தன்னுள்ளத்தை மூடிக்கொண்டால், தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பது எப்படி?'' (1 அரு.3:17)**. இங்கே தர்மம் என்பது பணமும் மற்ற பொருட்களும் கொடுப்பது என்பது மட்டுமல்ல, மாறாக, அயலானின் தேவைகளிலிருந்து அவனை விடுவிக்கும்படி அவனுக்கு ஒவ்வொரு உதவியையும் செய்வது என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். **அர்ச். தெரேசம்மாள்** ஒவ்வொரு நாளும் தனது துறவற சகோதரிகளுக்கு ஏதாவது ஒரு பிறர்சிநேகச் செயலைச்

செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாள் என்று சொல்லப்படுகிறது. பகல் பொழுதில் அப்படிச் செய்ய அவளால் முடியாத போதெல்லாம் இரவில் தன் அறைக்கு முன் கடந்து செல்லும் சகோதரிகளுக்கு வெளிச்சம் காட்டுவதில் கவனமாக இருப்பாள் என்றும் சொல்லப் படுகிறது. புனிதர்கள் தங்கள் உதவி யாருக்கெல்லாம் தேவைப்படுகிறதோ அவர்களிடம் மிகுந்த பிறர்சிநேகமும் தயவும் நிரம்பியவர்களாக இருந்தார்கள். **“நீதிமான்கள் இரக்கம் உடையவர்களாய் இருக்கிறார்கள், இரக்கமும் புரிகிறார்கள்'' (பழ.13:13).**

II

நோயாளிகளுக்கு விசேஷ தயவு காட்டுவதும் கடவுளுக்கு மிகப் பிரியமானது. நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பவர்களுக்கு ஊழியம் செய்வதை விட நோயாளிகளுக்கு உதவி செய்வது பல மடங்கு அதிகப் பேறுபலனுள்ளது. உடல் நலத்தோடு இருப்பவர்களை விட நோயாளிகளுக்கு அதிக உதவி தேவைப்படுகிறது. அவர்கள் வேதனை, மனச்சோர்வு, மரண பயம் ஆகியவற்றால் துன்பப்படுகிறார்கள், சில சமயங்களில் அவர்கள் அனைவராலும் கைவிடப் படுகிறார்கள். ஓ, அவர்களது துன்பங்களில் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படி உழைப்பது கடவுளுக்கு எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது! அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள் நோயாளிகளுக்கு உதவினாள், அவர்களுக்கு ஊழியம் செய்தாள். கடவுளுக்குப் பிரியமான இந்த வேலையில் தான் எப்போதும் ஈடுபட்டிருக்குமாறு ஏதாவது ஒரு மருத்துவமனையில் வசிக்க அவள் ஆசைப்பட்டாள். “ஒரு சமூகத்தில் பரிசுத்த ஆவியானவர் ஆட்சி செலுத்துகிறாரா என்று நீ அறிய விரும்பினால், அங்கே நோயாளிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்று கேள்'' என்று சுவாமி அந்தோனி டாரஸ் என்பவர் அடிக்கடி கூறுவார். உத்தமதனத்தை அடைய விரும்புபவர்கள் நோயாளிகளுக்குப் பிறர்சிநேகம் காட்டுகிறார்கள். ஆகவே, தர்மங்களாலோ, அல்லது சிறு பரிசுகளைக் கொண்டோ நோயாளிகளின் துன்பத்தைத் தீர்ப்பதில் கவனமாயிரு, உன்னால்

முடிந்த வரை, கடவுளின் சித்தத்திற்குப் பணிந்திருப்பதை, அல்லது தங்கள் துன்பங்களையெல்லாம் அவருக்கு ஒப்புக்கொடுப்பதைப் பயிற்சி செய்யும்படி, உன் வார்த்தைகளால், அல்லது அறிவுரைகளால் அவர்களைத் தேற்ற முயற்சி செய். நன்றியை எதிர்பார்க்காதே; மாறாக, அவர்களுடைய முறைப்பாடுகளையும், பொறுமையற்றதனத்தையும், முரட்டுத்தனத்தையும் பொறுத்துக் கொள். ஆண்டவரே உன் பிறர்சிநேகத்துக்கு வெகுமதி தருவார். அர்ச். தெரேசம்மாள் சபையினரின் காலப் பதிவேடுகளில் சகோதரி சம்மனசுக்களின் இசபெல்லாவைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. அவள் மரணத்திற்குப் பிறகு நேரடியாக மோட்சத்திற்கு ஏறிச் செல்வதாகவும், பெரும் மகிமையயாளிக்கு மத்தியில் தேவதூதர்களால் சுமந்து செல்லப்படுவதாகவும் காணப்பட்டாள். பிற்பாடு ஒரு துறவறக் கன்னிகைக்கு அவள் தோன்றி, நோயாளிகளிடம் தான் காட்டிய பிறர்சிநேகத்திற்காக அந்த மகிமையைக் கடவுள் அவளுக்குத் தந்தருளியதாக அவள் கூறினாள்.

செவ்வாய்

“காலமிருக்கும்போதே நற்செயல்களைச் செய்வோமாக.''

I

“ஆயத்தமாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் நினையாத வேளையில் மனுமகன் வருவார்'' (லூக்.12:40). “ஆயத்தமாயிருங்கள்'' என்று ஆண்டவர் சொல்கிறார். மரணம் நெருங்கும்போது நம்மை ஆயத்தம் செய்யும்படி அல்ல, மாறாக, தமது வருகைக்காகத் தயாராக இருக்கும்படி அவர் சொல்கிறார். ஏனெனில் மரணத்தைப் பற்றி நாம் நினைக்காத நேரத்தில் மனுமகன் வந்து, நம் வாழ்வு முழுவதற்கும் கணக்குக் கேட்பார். சேசுநாதரின் நீதியாசனத்திற்கு முன்பாகக் குற்றமில்லாதவர்களாக நிற்கும்படி நம் கணக்குகளைச் சரிசெய்து கொள்வது மரணத்தின் குழப்பமான நேரத்தில் மிகவும் கடினமாக இருக்கும். மரணம் இருபது அல்லது முப்பது வருடங்கள் ஒருவேளை வராமல் இருக்கலாம். ஆனால் அது ஒருவேளை மிக விரைவில், ஒரு வருடத்தில், அல்லது ஒரு

மாதத்திலேயே வரலாம். யாராவது ஒருவனுக்கு ஒரு வழக்கு நடக்கலாம் என்று பயப்படக் காரணமிருக்கிறது, அந்த வழக்கைத்தான் அவனது வாழ்வு சார்ந்துள்ளது என்றால், அந்த வழக்கின் நாள் வரைக்கும் அவன் காத்துக் கொண்டிருக்க மாட்டான். மாறாக, முடிந்த வரை சீக்கிரமாக, தன் வழக்கை நடத்த ஒரு வழக்கறிஞனை அவன் தேடிக் கண்டுபிடிப்பான். ஆனால் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒரு நாள் நாம் தீர்ப்பிடப்படுவோம் என்றும், அந்தத் தீர்ப்பின் முடிவைத்தான் நம் இவ்வுலக வாழ்வு அல்ல, மாறாக, நம் நித்திய வாழ்வு சார்ந்துள்ளது என்றும் நமக்கு நன்றாகத் தெரியும். அந்நாள் மிக அண்மையில் இருக்கலாம் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் நாம் நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறோம். நம் கணக்கு வழக்குகளைச் சரி செய்வதற்குப் பதிலாக, நித்திய மரண தண்டனையை நமக்குக் கொண்டு வரக்கூடிய பாவங்களைப் பெருக்கிக் கொண்டே போகிறோம்.

ஆகவே, இது வரை நாம் கடவுளை நோகச் செய்திருந்தால், இனியாவது நம் எஞ்சிய வாழ்நாளில் நம் நிர்ப்பாக்கிய வாழ்வுக்காகப் புலம்பியழ முயற்சி செய்வோம். மனஸ்தாப முள்ளவனாயிருந்த எசேக்கியாஸ் அரசனோடு சேர்ந்து: **"என் ஆத்துமத்தின் கசப்பான துக்கத்தில் என் வாழ்நாள் முழுவதையும் உமக்கு விவரித்துக் கூறுவேன்"** என்று நாம் தொடர்ந்து சொல்வோம் **(இசை.38:15).** மோசமான விதத்தில் செலவிடப்பட்ட காலத்திற்கு நாம் ஈடுசெய்வதற்காக ஆண்டவர் நமது எஞ்சிய வாழ்நாட்களைத் தந்திருக்கிறார். **"நமக்குக் காலமிருக்கும்போதே நன்மை செய்வோமாக" (கலாத்.6:10).** ஒரு தீய மரணத்தைக் கொண்டு ஆண்டவர் நம்மைத் தண்டிக்கும்படி அவருடைய கோபத்தைத் தூண்டாதிருப்போம்; கடந்து போன வருடங்களில் நாம் மூடர்களாக இருந்து, அவரை நோகச் செய்து வந்திருக்கிறோம் என்றால், இப்போது எதிர்காலத்தில் புத்தியோடு நடந்து கொண்டு, நாம் இழந்து போன காலத்தை மீட்டெடுக்கும்படி நமக்கு அறிவுரை கூறும் அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போமாக.

ஆண்டவரே, உலக வெறுமைகளுக்குப் பின்னால் மிக அநேக வருடங்கள் ஓடிக் கொண்டும், என் இராஜரீக நன்மைத்தனமாகிய

உம்மை விட்டுப் பிரிந்தும் இருந்ததில் நான் எவ்வளவு நீசமானவனாக இருந்திருக்கிறேன்! ஆனால் இன்று முதல் உம்மையே என் ஒரே பொக்கிஷமாகவும், என் ஆத்துமத்தின் ஒரே நேசமாகவும் என் சொந்தமாகக் கொண்டிருக்க நான் ஆசைப்படுகிறேன்.

II

"ஆதலால் சகோதரரே, நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாய் நடக்க வேண்டுமென்று பார்த்துக் கொள்ளுங்கள். மதியற்றவர்களாய் இராமல், சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" (எபே.5:15,17). நாட்கள் தீயவையாய் இருக்கின்றன. **அர்ச். ஆன்செல்ம்** கூறுகிறபடி, இந்த வார்த்தைகளின் பொருள் என்னவெனில், இவ்வாழ்வின் நாட்கள் தீயவையாய் இருக்கின்றன, ஏனெனில் அவற்றில் நாம் ஓராயிரம் சோதனைகளுக்கும், நித்திய நிர்ப்பாக்கியத்தின் ஆபத்திற்கும் திறப்பாய் இருக்கிறோம்; ஆகவே, அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படி சாத்தியமான முழுக் கவனமும் தேவையாய் இருக்கிறது. "தேவைப்படும்போது, நித்திய நன்மைகளை சம்பாதித்துக் கொள்ளும்படி அநித்திய காரியங்களை இழந்து போவது என்பதைத் தவிர, காலத்தை மீட்டெடுப்பது என்பதற்கு வேறு என்ன பொருள் இருக்கிறது?" என்று **அர்ச். அகுஸ்தினார்** கேட்கிறார். முடிந்த வரை முழு விழிப்போடு தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்காக மட்டுமே நாம் வாழ வேண்டும்; தேவைப்பட்டால், நம் நித்திய நன்மைகளை அலட்சியம் செய்வதை விட, உலகக் காரியங்களில் துன்புறுவது நமக்கு நல்லது.

ஓ, அர்ச். சின்னப்பர் தாம் இழந்து போன காலத்தை எவ்வளவு நன்றாக மீட்டுக் கொண்டார்! அப்போஸ்தலர்களில் அவர் கடைசியானவராக இருந்தாலும், தமது கடுமையான உழைப்புகளின் காரணமாக, அவரே பேறுபலன்களில் முதலானவராக ஆனார் என்று **அர்ச். ஜெரோம்** கூறுகிறார்: "வரிசைப்படி கடைசியானவரான சின்னப்பர் பேறுபலன்களில் முதலானவராக இருந்தார், ஏனெனில் எல்லோரையும் விட அதிகமாக அவர் உழைத்தார்." ஒவ்வொரு கணமும், நாம் நித்திய நன்மைகளின் பெரும் பொக்கிஷங்களைக்

குவித்து வைப்போம். நீ ஒருநாளில் எதைச் சுற்றி நடந்து போகிறாயே அந்த நிலம் முழுவதையும், அல்லது ஒரு நாளில் நீ எண்ணக் கூடிய பணம் முழுவதையும் நீ சொந்தமாகக் கொண்டிருப்பாய் என்று உனக்கு வாக்களிக்கப்படுகிறது என்றால், நீ நேரத்தை வீணாக்குவாயா? அந்தக் கணமே உனக்குப் பிடித்த நிலங்களைச் சுற்றி நடக்க, அல்லது பணத்தை எண்ணத் தொடங்கி விட மாட்டாயா? இப்போது ஒவ்வொரு கணமும் நித்தியப் பொக்கிஷங்களை சம்பாதிப்பது உன் சக்திக்கு உட்பட்டதாக இருக்கிறது; ஆனால் அதையும் மீறி, நீ உன் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பாயா? இன்று உன்னால் என்ன செய்ய முடியுமோ, அதை நாளைக்கும் உன்னால் செய்ய முடியும் என்று சொல்லாதே. ஏனெனில் இன்றைய நாள் உனக்கு வீணாகிப் போகும். அது இனி ஒருபோதும் திரும்பி வராது. இன்றைய நாள் உன்னிடம் இருக்கிறது; ஆனால் ஒருவேளை நாளைய தினம் உனக்குத் தரப்படாமல் போகலாம்.

ஓ என் சர்வேசுரா, எனக்காகக் காத்திருந்ததற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். உமது கோபப் பார்வையின் கீழ் நான் உறங்கச் சென்ற அந்த இரவுகளில் ஒன்றில் நான் இறந்து போயிருந்தால், இப்போது எனக்கு என்ன ஆகி இருக்கும்! ஆனால் நீர் எனக்காகப் பொறுமையோடு காத்துக் கொண்டு இருந்திருக்கிறீர். நீர் என்னை மன்னிக்க விரும்புகிறீர் என்பதற்கு இது ஓர் அடையாளமாக இருக்கிறது. ஆகவே, என் சேசுவே, என்னை மன்னியும்! நான் மனஸ்தாபப்படுகிறேன், இனி ஒருபோதும் நான் பாவம் செய்ய மாட்டேன்.

புதன்

அயலானின் ஆத்துமத்தின் மட்டில் பிறர்சிநேகம் I

மிக உத்தமமான பிறர்சிநேகம் உன் அயலானின் ஞான நன்மைகளில் நீ காட்டும் அக்கறையிலும் ஆர்வத்திலும் அடங்கியுள்ளது. ஒரு சக மனிதனின் ஞானத் தேவைகளிலிருந்து

அவனை விடுவிப்பது, அல்லது அவனது ஞான நலத்திற்கு அவசியமானதைச் செய்வது, அவனுடைய உடலுக்குக் காட்டப்படும் பிறர்சிநேகத்தை விட எவ்வளவோ மேலானதாக இருக்கிறது. ஏனெனில் ஆத்துமத்தின் மகத்துவம் மாம்சத்தின் தாழ்ந்த நிலையை வெகுவாகக் கடந்ததாக இருக்கிறது. ஆத்துமத்திற்குக் காட்டப்படும் பிறர்சிநேகம் முதலாவதாக, நம் அயலானின் தவறுகளைத் திருத்துவதில் அனுசரிக்கப்படுகிறது. **"தவறின வழியினின்று பாவியை மனந் திரும்பச் செய்தவன் அவனுடைய ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக் கடவான்" (யாகப். 5:20)** என்று அர்ச். யாகப்பர் அறிவிக்கிறார். ஆனால் மறு பக்கத்தில், **அர்ச். அகுஸ்தினார்** இது பற்றி, ஓர் அயலான் தன் ஆத்துமத்தைச் சீரழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, அவனைத் திருத்த முயலாமல் அலட்சியமாக இருப்பவன், மற்றொருவன் தன் அவமான, ஆங்கார வார்த்தைகளைக் கொண்டு செய்யும் பாவங்களை விட, தன் மௌனத்தைக் கொண்டு அதிக கனமான பாவங்களைச் செய்கிறான் என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார். "அவன் அழிந்து போவதை நீ பார்க்கிறாய், ஆனால் அதைப் பற்றி நீ கவலைப்படவில்லை; அவனுடைய கண்டன வார்த்தைகளை விட உன் மௌனம் அதிகக் குற்றமுள்ளது" என்று இப்புனிதர் கூறுகிறார். அவனை எப்படித் திருத்துவது என்று உனக்குத் தெரியவில்லை என்று சாக்குப்போக்குச் சொல்லாதே. மற்றவர்களின் தவறுகளைத் திருத்துவதற்கு, ஞானத்தை விடப் பிறர் சிநேகமே அதிகமாகத் தேவை என்று அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் கூறுகிறார். தகுந்த நேரத்தில் நேசத்தோடும், இனிமையோடும் அவனைத் திருத்த முயற்சி செய். அது பலன் தரும். நீ மடாதிபதியாக இருந்தால், உனக்குக் கீழுள்ளவர்களைத் திருத்துவது உன் பதவியின் காரணமாக உன் கடமையாக இருக்கிறது. இல்லையென்றால், பலன் கிடைக்கும் என்று நீ எதிர்பார்க்கும் போதெல்லாம் பிறரைத் திருத்துவதற்குப் பிறர்சிநேகச் சட்டத்தின்படி நீ கடமைப்பட்டிருக்கிறாய். மலையோரத்தில், பெரும் பாதாளத்தின் விளிம்பில் ஒரு குருடன் நடந்து போவதைக் கண்டும், அவன் இருக்கும் ஆபத்தான நிலை பற்றி அவனை எச்சரிக்காமலும், இவ்வாறு அவனது அநித்திய

மரணத்திலிருந்து அவனை விடுவிக்காமலும் இருக்கும் ஒருவனுக்கு அது ஒரு கொடூரமான பாவமாக இருக்காதா? ஆனால் நித்திய சாவினின்று ஓர் அயலானை விடுவிக்க உன்னால் இயலும் என்ற நிலையிலும் அதை அலட்சியம் செய்வது, இன்னும் மிகப் பெரிய கொடூரச் செயலாக இருக்கும். உன் அறிவுரை பலனற்றுப் போகும் என்று விவேகத்தோடு நீர் தீர்மானிப்பாய் என்றால், குறைந்த பட்சம் இதற்குத் தீர்வு காணக்கூடிய மற்றொருவனிடம் முந்தினவன் இருக்கும் நிலை பற்றி எடுத்துச் சொல். “இது என் வேலையல்ல, இதற்காக நான் எந்த முயற்சியும் செய்ய மாட்டேன்'' என்று சொல்லாதே; காயீன் இப்படித்தான் பேசினான். **“நான் என்ன, என் தம்பிக்குக் காவலாளியா?''** என்று அவன் கேட்டான் **(ஆதி.4:9).** முடிந்த போது தன் அயலானை அழிவினின்று காப்பாற்றுவது ஒவ்வொருவர் மீதும் சுமந்த கடமை. **“ஒவ்வொருவனுக்கும் அவனுடைய அயலானைக் குறித்து அவர் கட்டளை கொடுத்திருக்கிறார்''** என்று சர்வப் பிரசங்கி கூறுகிறார் **(17:12).**

II

தேவைப்படும்போது, நம் அயலானுக்கு, குறிப்பாக அவனது ஆன்ம தேவைகளில் உதவி செய்யும்படி மன ஜெபத்தையும் கூட நாம் தவிர்க்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார் என்று **அர்ச். பிலிப் நேரியார்** கூறுகிறார். **அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள்** ஒரு நாள் ஜெபத்தில் ஆழ்ந்திருக்க விரும்பினாள். ஆனால் ஒரு பிறர்சிநேகச் செயலை அவள் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே ஆண்டவர் அவளிடம்: “எனக்குப் பதில் சொல் ஜெர்த்ரூத்: நான் உனக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயா, அல்லது நீ எனக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயா?'' என்று கேட்டார். “நீ கடவுளிடம் செல்ல விரும்பினால், தனியாக அவரிடம் போகாதபடி அக்கறை எடுத்துக் கொள்'' என்று **அர்ச். கிரகோரியார்** சொல்கிறார். **அர்ச். அகுஸ்தினார்** தம் பங்கிற்கு, “நீ கடவுளை நேசிக்கிறாய் என்றால், அனைவரையும் கடவுளின் அன்பிற்குள் இழுத்து வா'' என்கிறார். நீ கடவுளை நேசித்தால், அவரை நீ மட்டும் தனியாக நேசிக்காதபடி அக்கறை காட்டு, மாறாக, உன் உறவினர்கள்

அனைவரையும், உன்னோடு தொடர்பு கொண்டுள்ள அனைவரையும் அவரது அன்பிற்குள் கொண்டு வர நீ உழைக்க வேண்டும்.

பிறருக்கு நன்மாதிரிகை தரும்படியாக, மற்றவர்களும் உன்னைப் போலவே செய்யும்படி அவர்களைத் தூண்டுவதற்காக, மன ஜெபத்திலும், அடிக்கடி நன்மை வாங்குவதிலும் பக்தியும் ஒறுத்தலும், அர்ப்பணமும் உள்ளவனாகத் தோன்றுவது வீண் பெருமையின் காரியம் அல்ல. **“மனிதர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படிக்கு, உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிரக்கடவது'' (மத்.5:16).**

ஆகவே, உன்னால் முடிந்த வரை, வார்த்தைகளையும், செயல்களையும், குறிப்பாக ஜெபங்களையும் கொண்டு அனைவருக்கும் உதவி செய்ய முயற்சி செய். **“மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் என் நாமத்தினால் பிதாவிடமிருந்து எதைக் கேட்டாலும், அவர் அதை உங்களுக்குத் தருவார்'' (அரு.16:23)** என்ற தமது வார்த்தைகளின் மூலம், நமக்காக மட்டுமல்ல, மற்றவர்களுக்காக நாம் செய்யும் ஜெபங்களையும் கேட்டருள்வதாக நம் ஆண்டவர் வாக்களிக்கிறார் என்று அர்ச். பேசிலோடு சேர்ந்து அநேக வேதபாரகர்கள் கற்பிக்கிறார்கள். வழியில் அவர்கள் எந்தத் தடையையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதுதான் அவரது ஒரே நிபந்தனை. இதன் காரணமாக, பொது ஜெபத்திலும், திவ்ய நன்மை வாங்கியபின் உன் நன்றியறிதலிலும், உன் திவ்ய நற்கருணை சந்திப்புகளிலும் பரிதாபத்திற்குரிய பாவிகளுக்காகவும், அவிசுவாசிகளுக்காகவும், பதிதர்களுக்காகவும், கடவுளின்றி வாழும் அனைவருக்காகவும் ஜெபிக்க நீ ஒருபோதும் தவறக் கூடாது.

தமது மணவாளிகள் பாவிகளுக்காகச் செய்யும் ஜெபம் சேசுநாதருக்கு எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது! அவர் ஒரு முறை வணக்கத்துக்குரிய கேப்ரியின் செராஃபினா என்ற துறவற சகோதரியிடம்: “என் மகளே, உன் ஜெபங்களால் ஆத்துமங்களை இரட்சிக்க எனக்கு உதவி செய்'' என்றார். **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாளிடம்** அவர்: “மதலேன், கிறீஸ்தவர்கள் எப்படிப்

பசாசின் கரங்களிலேயே இருக்கிறார்கள் என்று பார்! என்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தங்கள் ஜெபங்களால் அவர்களை விடுவிக்காவிடில், அவர்கள் கடித்து விழுங்கப்படுவார்கள்" என்றார். இதன் காரணமாக இப்புனிதை தன் துறவற சகோதரிகளிடம்: "என் சகோதரிகளே, இவ்வுலகிலிருந்து கடவுள் நம்மைப் பிரித்திருப்பது நம் நன்மைக்காக மட்டுமல்ல, மாறாக, பாவிகளின் நன்மைக்காகவும் தான்" என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். மற்றொரு சந்தர்ப்பத்தில் அவள் அவர்களிடம்: "என் சகோதரிகளே, இழக்கப்படும் ஏராளமான ஆன்மாக்களுக்காக நாம் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்; பக்தியார்வத்தோடு நாம் அவர்களுக்காகக் கடவுளிடம் பரிந்துபேசியிருந்தோம் என்றால், ஒருவேளை நித்திய சாபத்திற்கு உள்ளாகிய் இருக்க மாட்டார்கள்" என்றாள். இதன் காரணமாகவே அவளது வரலாற்றில், பாவிகளுக்காக ஜெபிக்காமல் அவள் தன் ஒரு நாளின் ஒரு மணி நேரத்தைக் கூட வீணாக்கியதில்லை என்று நாம் வாசிக்கிறோம். ஓ, எத்தனை ஆன்மாக்கள் சில சமயங்களில், குருக்களின் பிரசங்கங்களை விட அதிகமாகத் துறவிகளின் ஜெபங்களால் மனந்திருப்பப் படுகிறார்கள்! ஒரு குறிப்பிட்ட போதகர் விளைவித்த பலன்களுக்குக் காரணம் அவருடைய பிரசங்கங்கள் அல்ல, மாறாக, போதக மேடையில் அவருக்கு உதவியாயிருந்த ஒரு பொதுநிலைச் சகோதரரின் ஜெபங்களே என்று ஒரு முறை அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. மேலும், குருக்கள் ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காக உண்மையான ஆர்வத்தோடு உழைக்கும் படியாக, நாம் குருக்களுக்காக வேண்டிக்கொள்வதிலும் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

வெள்ளி

"உங்கள் அர்ச்சிப்பே சர்வேசுரனுடைய சித்தமாக இருக்கிறது."

I

நித்திய இரட்சணியத்தைத் தேடுவதில், அர்ச். சின்னப்பர் நமக்குக் கூறுவது போல, நாம் ஒருபோதும் ஓய்ந்து விடக் கூடாது,

மாறாக, உத்தமதனத்தின் பாதையில் நாம் தொடர்ந்து ஓட வேண்டும், அப்போதுதான் நாம் பரிசை வெல்லவும், அழியாத மணிமுடியை நம்முடையதாக்கிக் கொள்ளவும் முடியும். **“ஆகையால் அதைப் பெற்றுக்கொள்ளும்படி ஓடுங்கள்'' (1 கொரி. 9:24).** இதில் நாம் தவறுவோம் என்றால், தவறு முழுவதும் நம்முடையதுதான், ஏனெனில் அனைவரும் பரிசுத்தரும், உத்தமருமாய் இருக்க வேண்டுமென்று கடவுள் சித்தமாய் இருக்கிறார்.

“உங்கள் அர்ச்சிப்பே கடவுளின் சித்தமாக இருக்கிறது'' (1 தெச. 4:3). எந்தக் கலையிலும், விஞ்ஞானத்திலும் உன்னத நிலையை அடைய வேகமுள்ள ஆசை இல்லாமல் அந்த நிலையை அடைவது சாத்தியமேயில்லை என்பது போலவே, அர்ச்சியசிஷ்டதனத்தின் மீது பலமான, ஆர்வமிக்க நாட்டங்கள் இல்லாமல், எந்த மனிதனும் ஒரு நாளும் ஒரு புனிதனாக ஆக முடியாது. “கடவுள் சாதாரணமாக, தம் அன்பிற்காகத் தாகம் கொண்டிருப்பவர்களுக்கே தமது விசேஷ நன்மைகளைத் தருகிறார்'' என்று **அர்ச். தெரேசம்மாள்** அவதானிக்கிறாள். **“உம்மால் சகாயம் பெறுகிற மனிதன் பாக்கியவான்; தான் விரும்பிய இடத்தில் ஏறக் கண்ணீர்க் கணவாயிலே தன் இருதயத்தில் படிகளை ஏற்படுத்திக்கொண்டான்.. . . . புண்ணியத்தின்மேல் புண்ணியம் பண்ணிக்கொண்டு போவார்கள்'' (சங்.83:5,6).** உத்தமதனத்தின் ஏணியில் ஏறத் தன் ஆத்துமத்தில் தீர்மானித்திருக்கிற மனிதன் பேறுபெற்றவன்: அவன் கடவுளிடமிருந்து அபரிமிதமான உதவியைப் பெறுவான், புண்ணியத்திற்கு மேல் புண்ணியம் செய்து கொண்டே செல்வான். இதுவே புனிதர்களின், குறிப்பாக **அர்ச். அவெல்லினோ பெலவேந்திரரின்** செயல்முறையாக இருந்தது. அவர் “கிறீஸ்தவ உத்தமதனத்தின் வழியில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதை'' ஒரு வார்த்தைப்பாட்டின் மூலம் தமது கடமையாக்கிக் கொண்டார். “கடவுள் இந்த உலகிலும் கூட ஒவ்வொரு நல்ல ஆசைக்கும் சன்மானம் தருகிறார்'' என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுவது வழக்கம். நல்ல ஆசைகளின் மூலம்தான் புனிதர்கள் குறுகிய காலத்தில் அர்ச்சியசிஷ்டதனத்தின் பக்திக்குரிய ஓர் உயர்ந்த நிலைக்கு வந்து சேர்ந்தார்கள். **“நீதிமான் கொஞ்சக் காலம் சீவித்தும் நெடும்**

சீவியத்தின் புண்ணியப் பலன்களை அடைந்தான்" (ஞான.4:13). இருபத்தைந்து ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்த **அர்ச். ஞானப்பிரகாசியார்** எத்தகைய உத்தமதனத்தை சம்பாதித்தார் என்றால், அவரைப் பரலோகப் பேரின்ப நிலையில் கண்ட அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள், அவரது மகிமை மிகப் பெரும்பாலான புனிதர்களின் மகிமைக்குச் சமமானதாகத் தோன்றியது என்று அறிக்கையிட்டாள். அந்தக் காட்சியில் அவர் அவளிடம்: "கடவுள் எந்த அளவுக்கு நேசிக்கப்படத் தகுதியுள்ளவராக இருக்கிறாரோ, அந்த அளவுக்கு அவரை நேசிக்க வேண்டுமென்று என் வாழ்வின் போது நான் கொண்டிருந்த ஆர்வமிக்க ஆசையின் பலன்தான் என்னுடைய இந்த மேலான அர்ச்சியசிஷ்டதனத்திற்கான காரணம்; அவருக்குத் தகுதியுள்ள அளவற்ற முறையில் அவரை நேசிக்க என்னால் இயலாததால், பூலோகத்தில் நான் ஒரு தொடர்ச்சியான அன்பின் வேதசாட்சியத்தை அனுபவித்தேன். அதற்காகத்தான் இப்போது நான் அனுபவிக்கும் மிக மேலான மகிமைக்கு நான் உயர்த்தப்பட்டிருக்கிறேன்" என்று கூறினார்.

"நம் எண்ணங்கள் ஆசை கொள்வனவாக இருக்க வேண்டும்; பெரிய ஆசைகளிலிருந்து தான் நம் முழு நன்மையும் வரும்" என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுகிறாள். மற்றொரு இடத்தில், "நம் ஆசைகளை நாம் குறைத்துக் கொள்ளக் கூடாது, மாறாக, தொடர்ச்சியான முயற்சியின் மூலம், அவருடைய வரப்பிரசாதத்தால் அர்ச்சியசிஷ்டதனத்திற்கும், புனிதர்களின் பேரின்ப நிலைக்கும் நாம் வந்து சேர்வோம் என்று கடவுளில் நாம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்" என்று அவள் சொல்கிறாள். மீண்டும் அவள்: "தங்கள் சொந்த பலத்தில் நம்பிக்கை கொள்ளாத தாராளமுள்ள ஆத்துமங்களிலேயே தேவ மகத்துவம் திருப்தி அடைகிறது" என்கிறாள். இந்த மாபெரும் புனிதை தன்னுடைய முழு அனுபவத்திலும், ஒரு சில நாட்களிலேயே தைரியமுள்ள ஆன்மாக்கள் அடைந்த புண்ணியத்தின் உயர்நிலையைக் கோழையான ஒரு கிறீஸ்தவன் பல ஆண்டுகளுக்குப் பின்னும் அடைந்ததைத் தான் கண்டதில்லை என்று கூறுகிறாள். புனிதர்களின்

வரலாறுகளை வாசிப்பது ஆத்துமத்தினுள் தைரியத்தைப் பெருமளவில் தூண்டிக் கொள்ள உதவியாக இருக்கிறது.

குறிப்பாகப் பெரும் பாவிகளாயிருந்து, பிற்பாடு பெரும் புனிதர்களாக மாறிய அர்ச். மரிய மதலேனம்மாள், அர்ச். அகுஸ்தினார், அர்ச். பெலாஜியா, அர்ச். எகிப்து மரியம்மாள் மற்றும் குறிப்பாக அர்ச். கோர்ட்டோனா மர்கரீத்தம்மாள் போன்ற புனிதர்களின் வரலாறுகளை வாசிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. குறிப்பாக அர்ச். கோர்ட்டோனாவின் வரலாற்றை வாசிப்பது நல்ல பலனைத் தரும். இவள் பல ஆண்டுகளாக நித்திய அழிவின் பாதையில் இருந்து வந்தாள், என்றாலும் அப்போதும் கூட, அர்ச்சியசிஷ்டதனம் அடைய வேண்டும் என்ற ஆசை அவளிடம் நிறைந்திருந்தது; தனது மனந்திரும்புதலுக்குப் பிறகு இவள் எவ்வளவு வேகமாக உத்தமதனத்திற்குப் பறந்து சென்றாள் என்றால், இவ்வுலக வாழ்விலேயே தான் பரலோக மகிமைக்கு முன்குறிக்கப்பட்டவள் என்பதை மட்டுமின்றி, பக்திச்சுவாலகர்களிடையே தனக்கு ஓர் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் ஒரு வெளிப் படுத்தலின் மூலம் இவள் அறிந்து கொண்டாள்!

ஓ என் சேசுவின் தெய்வீக இருதயமே! மனிதர்கள் மீது அளவற்ற நேசமும், அவர்களில் இருப்பதில் இன்பமும் கண்ட திரு இருதயமே! அவர்களை நேசிப்பதற்காகவே சிருஷ்டிக்கப்பட்ட இருதயமே! நீர் அவர்களால் இவ்வளவு அதிகமாக அவமதிக்கப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும் எப்படி சாத்தியம்? நான் எவ்வளவு பரிதாபமானவன்! நானும் கூட, அந்த நன்றியற்ற ஆன்மாக்களில் ஒருவனாக இருந்திருக்கிறேன்; நானும் கூட, பல ஆண்டுகள் உலகில் உம்மை நேசிக்காமல் வாழ்ந்திருக்கிறேன்; ஓ என் சேசுவே, எவ்வளவோ நேசத்திற்குரியவரும், உம்மை நான் நேசிக்கச் செய்வதற்கு இதற்கு மேல் எதையும் செய்ய முடியாது என்னும் அளவுக்கு என்னை நேசித்துள்ளவருமாகிய உம்மை நேசிக்காமல் இருந்த பாவத்தை எனக்கு மன்னித்தருளும். உமது அன்பை நீண்ட காலமாகப் புறக்கணித்து வந்ததற்குத் தண்டனையாக, இனி ஒருபோதும் உம்மை நேசிக்கவே முடியாத அந்த நிர்ப்பாக்கியமான

நிலைக்கு (நரகத்திற்குத்) தீர்வையிடப்பட நான் தகுதியுள்ளவனாக இருந்திருப்பேன். ஆனால் வேண்டாம், என் சேசுவே; உமது அன்பிலிருந்து நித்தியத்திற்கும் விலக்கப்படும் தண்டனையைத் தவிர வேறு எல்லாத் தண்டனைகளையும் நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். உம்மை நேசிக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும். அதன்பின் நீர் விரும்புகிறபடியெல்லாம் என்னை நடத்தும். ஆமென்.

II

உத்தமதனத்தின் ஓர் உயர்ந்த நிலையை அடைய ஆசிப்பது, அல்லது புனிதர்களைக் கண்டுபாவிக்க விரும்புவது, நம்மில் பெரும் ஆங்காரமாக இருக்கும் என்று நாம் நம்பச் செய்யப் பசாசு முயல்கிறது என்று அர்ச். தெரேசம்மாள் கூறுகிறாள். அவள் மேலும் தொடர்ந்து, அர்ச்சியசிஷ்டதனம் அடைவதற்கான பலத்த ஆசை ஆங்காரத்திலிருந்து பிறப்பது என்று மதிப்பது மிகப் பெரும் மாய்கையாக இருக்கிறது, ஏனெனில் உத்தமதனத்தின் பாதையில் தைரியத்தோடு நடக்கத் தீர்மானிப்பதில் தன் மீது நம்பிக்கை கொள்ளாமல், கடவுளின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு, அப்போஸ்தலரோடு சேர்ந்து, **“என்னை பலப் படுத்துகிறவரைக் கொண்டு எதையும் செய்ய என்னால் கூடும்'' (பிலிப்.4:13)** என்று கூறும் ஓர் ஆன்மாவுக்கு, அது ஆங்காரமாக இராது. தனியாக என்னால் எதையும் செய்ய முடியாது; ஆனால் கடவுளின் உதவியோடு எதையும் செய்ய என்னால் முடியும். ஆகவே, அவரது வரப்பிரசாதத்தைக் கொண்டு, புனிதர்கள் அவரை நேசித்தது போல நானும் அவரை நேசிக்க ஆசை கொள்வேன் என்று பிரதிக்கினை செயகிறேன்.

அனைத்திலும் அதிக உயர்வான புண்ணியத்தை அடைய ஏக்கம் கொள்வது அடிக்கடி மிகுந்த பலனுள்ள காரியமாக இருக்கிறது -- சகல புனிதர்களையும் விட அதிகமாகக் கடவுளை நேசிப்பது, சகல வேதசாட்சிகளுக்கும் மேலாக, கடவுளின் அன்பிற்காகத் துன்பப்படுவது, மனிதர்கள் தரும் எல்லாக் காயங்களையும் தாங்கிக்

கொண்டு, அவர்களை மன்னிப்பது, ஒரே ஒரு ஆத்துமத்தையாவது இரட்சிப்பதற்காக எப்பேர்ப்பட்ட கடுஞ்சோர்வையும் அரவணைத்துக் கொள்வது, இது போன்ற உத்தமமான பிறர்சிநேகச் செயல்களைச் செய்வது-- இதுதான் அந்த அனைத்திலும் மேலான புண்ணியமாகும். ஏனெனில் இந்தப் பரிசுத்த ஆவல்களும், ஆசைகளும், அவற்றின் நோக்கம் ஒருபோதும் எட்டப்படாமலே போனாலும், முதலாவதாக, அவை கடவுளின் பார்வையில் மிகுந்த பேறுபலனுள்ளவையாக இருக்கின்றன. அவர் வக்கிரமும், தீய நாட்டங்களும் உள்ள ஓர் இருதயத்தை அருவருப்பது போலவே, நல்ல மனதுள்ள மனிதர்களில் மகிமை யடைகிறார். இரண்டாவதாக, வீரத்துவமுள்ள அர்ச்சியசிஷ்டதனத்தின் மீது ஆவல்கொள்ளும் வழக்கம், சாதாரணமான, எளிய புண்ணியமுள்ள செயல்களைச் செய்ய ஆத்துமத்தைத் தூண்டுகிறது, அதை உற்சாகப்படுத்துகிறது. இதன் காரணமாக, காலையில் அந்நாளின் போது தன்னால் முடிந்த வரை அதிகமாகக் கடவுளுக்காக உழைப்பது என்று தீர்மானிப்பதும், எல்லாச் சிலுவைகளையும், எதிர்ப்புகளையும் பொறுமையோடு தாங்கிக் கொள்வது என்று பிரதிக்கினை செய்வதும், நிலையான ஞான ஒடுக்கத்தை அனுசரிப்பதும், தேவசிநேகச் செயல்களைத் தொடர்ந்து செய்வதும் மிகவும் முக்கியமானது. இதுவே பக்திச்சுவாலகர்களுக்கு ஒப்பான அர்ச். பிரான்சிஸ் அசிசியாரின் செயல்முறையாக இருந்தது. “சேசுநாதரின் வரப்பிரசாதத்தைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய அவர் தீர்மானம் செய்தார்" என்று **அர்ச். பொனவெந்தூர்** கூறுகிறார். “ஆண்டவர் நல்ல ஆசைகளிலும், அவற்றின் நிறைவேற்றத்திலும் மிகுந்த மகிழ்ச்சி கொளகிறார்" என்று அர்ச். தெரேசம்மாள் வலியுறுத்திக் கூறுகிறாள். ஓ, உலகத்திற்கு ஊழியம் செய்வதை விட, கடவுளுக்கு ஊழியம் செய்வது எவ்வளவு நல்லது! உலகப் பொருட்களை சம்பாதிப்பதற்கும், உலக செல்வத்தையும், பட்டம் பதவிகளையும், மனிதர்களின் பாராட்டுக்களையும் சம்பாதிப்பதற்கும், ஆர்வத்தோடு அவற்றின் பின்னால் ஏக்கம் கொண்டு மூச்சிரைக்க ஓடுவது போதாது; இல்லை, அவற்றின் மீது ஆசை கொள்வதும், அவற்றைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதும் அவை இல்லாத நிலையை அதிக வேதனைக்குரியதாக ஆக்குகின்றன. ஆனால் கடவுளின்

செல்வங்களையும், அவரது ஆதரவையும் சொந்தமாக்கிக் கொள்வதற்கு, அவரது வரப்பிரசாதத்தையும் அன்பையும் ஆசை கொண்டு தேடுவதே போதுமானது.

ஓ என் சேசுவே, **"உன் முழு இருதயத்தோடு உன் தேவனாகிய ஆண்டவரை நேசிப்பாயாக" (மத்.22:37)** என்று நீர் சொல்கிறீர். ஆகவே, நான் என் முழு ஆத்துமத்தோடு உம்மை நேசிப்பது உம் சித்தமாக இருக்கிறது. நான் வேறு எதையுமன்றி உம்மை மட்டும் என் முழு பலத்தோடும் நேசிக்க ஆசை கொள்வேன். ஓ என் சேசுவின் நேசமுள்ள திரு இருதயமே, பூமியின் மீது பற்றியெரியச் செய்யும்படி நீர் வந்த அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நெருப்பை என் ஆத்துமத்தில் பற்ற வைத்தருளும். என் இருதயத்தில் இன்னும் உயிரோடு இருப்பவையும், உமக்கு முழுவதும் சொந்தமாக விடாமல் என்னைத் தடுப்பவையுமான எல்லா உலகப் பற்றுகளையும் அழித்து விடும். ஓ என் அன்புள்ள இரட்சகரே, இது வரை உம்மை மிக அதிகமாக வேதனைப்படுத்தி வந்த ஓர் இருதயத்தின் அன்பை உதறி விடாதேயும். ஆ, நீர் என்னை மிக அதிகமாக நேசித்து வந்திருக்கிறீர் என்பதால், உமது அன்பு இல்லாமல் ஒரே ஒரு கணம் கூட நான் வாழ அனுமதியாதேயும்! ஓ என் சேசுவின் நேசமே, நீயே என் நேசம்! நான் உம்மை எப்போதும் நேசிப்பேன் என்றும், நீரும் என்னை எப்போதும் நேசிப்பீர் என்றும், இந்தப் பரஸ்பர அன்பு ஒருபோதும் இல்லாமல் போகாது என்றும் நம்புகிறேன்.

மரியாயே, அழகுள்ள நேசத்தின் மாதாவே, உங்கள் திருமகன் மனிதர்களால் நேசிக்கப்படுவதைக் காண விரும்புகிற அன்புள்ள தாயாரே, நான் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அப்படியே இனி எப்போதும் நான் முழுவதும் அவருடையவனாக இருக்குமாறு, உங்கள் சேசுவோடு என்னை சேர்த்துக் கட்டி அவரோடு என்னை ஒன்றித்து விடுங்கள்.

வெள்ளி

"இதோ, நமது கரங்களில் உன்னை எழுதி வைத்திருக்கிறோம்."

I

ஓ, சேசுநாதரின் திரு மரணம் நமக்குத் தருகிற இரட்சணிய நம்பிக்கை எவ்வளவு மேலானதாக இருக்கிறது! **“அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பிடுகிறவர் யார்? கிறீஸ்துநாதரோ? அவரே (நமக்காக) மரித்தவர். பின்னும் அவரே உயிர்த்தெழுந்தவர்; அவரே சர்வேசுரனுடைய வலதுபாரிசத்திலிருக்கிறவர்; நமக்காகப் பரிந்து பேசுகிறவரும் அவரே'' (உரோ.8:34).** நமக்குத் தண்டனைத் தீர்ப்பிட வேண்டியவர் யார் என்று அப்போஸ்தலர் கேட்கிறார். அவர், நித்திய சாவுக்கு நம்மைத் தீர்ப்பிடாதபடி, தம்மைச் சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிட்டுக் கொண்டார். இதிலிருந்து, **அர்ச். வில்லனோவா தோமையார்** நம்மிடம்: பாவியே, உன் பாவத்தை விட்டு விட நீ மனதாய் இருக்கிறாய் என்றால், பிறகு ஏன் பயப்படுகிறாய்? உனக்குத் தண்டனைத் தீர்ப்பிடாதபடி மரித்த ஆண்டவர் எப்படி உனக்குத் தண்டனைத் தீர்ப்பிட முடியும்? நீ அவருடைய திருப்பாதங்களிடம் திரும்பி வரும்போது, நீ தம்மை விட்டு விலகி ஓடிக் கொண்டிருந்த போது, உன்னைத் தேடி மோட்சத்திலிருந்து இறங்கி வந்தவர் எப்படி உன்னைத் துரத்த முடியும் என்று சொல்லி நம்மை உற்சாகப்படுத்துகிறார்: “பாவியே, எதைப் பற்றி நீ பயப்படுகிறாய்? நீ தண்டனைத் தீர்ப்புப் பெறாதபடி உனக்காக மரித்தவர், இப்போது மனஸ்தாபமுள்ளவனாக இருக்கிற உனக்கு எப்படித் தண்டனைத் தீர்ப்பிட முடியும்? உன்னைத் தேடிக் கொண்டு மோட்சத்திலிருந்து வந்தவர், உன்னை எப்படித் துரத்தியடிக்க முடியும்?'' ஆனால், நம் இரட்சகர் தாமே இசையாஸின் வழியாக: **“இதோ நமது கரங்களில் உன்னை எழுதிய் இருக்கின்றோம்; உன் பட்டணத்து மதில்கள் நம் கண்கள் முன் எப்போதும் இருக்கும்''** என்று சொல்லி நமக்குத் தருகிற ஊக்கம் இன்னும் பெரியதாக இருக்கிறது **(இசை.49:16).** என் ஆடே, உனக்காக நான் என்ன விலை கொடுக்கும்படி நீ செய்திருக்கிறாய் என்று பார். உனக்காக நான் அனுபவித்திருக்கிற இந்தக் காயங்களில், என் கரங்களின் மீது உன்னைப் பொறித்து வைத்திருக்கிறேன்; இவை உனக்கு உதவும்படியும், உன் எதிரிகளிடமிருந்து உன்னைக் காக்கும்படியும்

எனக்கு எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்; என்னை நேசி, நம்பிக்கை கொண்டிரு.

ஆம், என் சேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன், உம்மில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். என்னைக் காப்பாற்றுவதற்கு, ஆம், நீர் மிகப்பெரிய தொகையைக் கொடுக்க வேண்டியிருந்தது; உண்மையில் என்னை இரட்சிப்பதற்கு நீர் எந்த விலையும் தந்திருக்க வேண்டியதில்லை. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது உமது சித்தமாக இருந்திருந்தால், எவனும் அழிந்து போய் இருக்க மாட்டான். என் பாவங்கள் என்னை அச்சப்படுத்துகின்றன என்றால் உமது நன்மைத்தனம் என்னை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் நன்மையைப் பெற்றுக்கொள்ள எனக்கிருக்கும் ஆசையை விட, எனக்கு நன்மை செய்வதற்கு நீர் அதிகமான ஆசை கொண்டிருக்கிறீர். ஆ என் அன்புக்குரிய இரட்சகரே, நான் யோபுவோடு சேர்ந்து: **“நீர் என்னைக் கொன்றாலும், நான் உம்மில் நம்பிக்கை வைப்பேன், நீரே என் இரட்சகராய் இருக்கிறீர்"** என்று உம்மிடம் சொல்வேன் **(யோபு.13).** நீர் என்னை உமது பிரசன்னத்திலிருந்து துரத்துவதாய் இருந்தாலும், ஓ என் நேசரே, என் இரட்சகராகிய உம்மில் நம்பிக்கை வைப்பதை நான் விட்டுவிட மாட்டேன். உமது இந்தத் திருக்காயங்கள் எனக்கு மிகவும் அதிகமாகச் செய்துள்ளன, இந்தத் திரு இரத்தம் உமது இரக்கத்திலிருந்து ஒவ்வொரு நன்மையையும் பெற்றுக் கொள்வேன் என்று நம்பும்படி என்னை ஊக்குவிக்கிறது. பிரியமுள்ள சேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்; உம்மை நேசிக்கிறேன்; உம்மில் என் நம்பிக்கையை வைக்கிறேன்.

II

அர்ச். பெர்னார்ட் நோயுற்றிருந்தபோது ஒரு நாள் கடவுளின் நீதியாசனத்திற்கு முன்பாகத் தாம் இருக்கக் கண்டார். அங்கே பசாசு அவருடைய பாவங்களைப் பற்றி அவரைக் குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்தது. அவர் பரலோகத்திற்குத் தகுதி பெறவில்லை என்று அது அவரிடம் கூறியது: புனிதர் பதிலுக்கு, “நான் பரலோகத்திற்குத் தகுதியற்றவன் என்பது உண்மைதான், ஆனால் சேசுநாதர் இந்த

இராச்சியத்தில் இருவித உரிமைகளைக் கொண்டிருக்கிறார். முதலாவது, அவர் தம் சுபாவப்படி கடவுளின் திருச்சுதனாக இருக்கிறார். இரண்டாவதாக, தமது மரணத்தால் அவர் அதை விலைக்கு வாங்கிய் இருக்கிறார். இவற்றில் முதலாவது உரிமையில் அவர் திருப்தியடைகிறார். இரண்டாவதில், அந்த உரிமையை அவர் எனக்குத் தருகிறார். ஆகவேதான் நான் பரலோகத்தைக் கேட்கிறேன், அதைப் பெற்றுக்கொள்வேன் என்றும் நம்புகிறேன்'' என்றார். நாமும் இப்படியே சொல்லலாம்; ஏனெனில் துன்பங்களால் எரிக்கப்பட்டு சாக சேசுநாதர் கொண்டிருந்த சித்தம், மனஸ்தாபமுள்ளவர்களும், மனந்திரும்பும் பிரதிக்கினை உள்ளவர் களுமான சகல பாவிகளுக்கும் பரலோகத்தைப் பெற்றுத் தருவதைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இதனாலேயே அப்போஸ்தலரும், **"நமது விசுவாசத்தின் ஆதி கர்த்தாவும், அதைப் பூரணமாக்குகிறவருமாகிய சேசுநாதரை எப்போதும் கண்முன்பாக வைத்துக்கொண்டு, நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிற யுத்தத்துக்குப் பொறுமையோடு ஓடக் கடவோம். அவர் சந்தோஷ ஜீவியம் தமக்குமுன் வைக்கப் பட்டிருக்க, அவமானத்துக்குக் கூச்சப்படாமல் சிலுவையை ஏற்றுக் கொண்டார்''** என்கிறார் **(எபி.12:1,2).** ஆகவே, தமது திருப்பாடுகளின் பேறுபலன்களோடு, வெற்றியையும், நித்திய முடியையும் நமக்கு வாக்களிக்கிற சேசுநாதரை நம் கண்களுக்கு முன்பாக வைத்துக் கொண்டு, நம் எதிரிகளை எதிர்த்துப் போரிட நாம் தைரியமாக ஓடுவோமாக.

பரலோகத்தில் நமக்கு ஓர் இடத்தை ஆயத்தம் செய்வதற்காகத் தாம் அங்கு சென்றிருப்பதாக அவர் கூறிய் இருக்கிறார்: **"உங்கள் இருதயங்கள் கலங்காதிருக்கக் கடவது. . . நான் உங்களுக்கு ஓர் இடத்தை ஆயத்தம் செய்யப் போகிறேன்'' (அரு.14:1,2)**. பிதா நம்மைத் தமக்குத் தந்திருப்பதால், நாமும் அவரோடு பரலோகத்தில் இருக்க வேண்டுமெனத் தாம் விரும்புவதாக அவர் பிதாவிடத்தில் சொல்லிய் இருக்கிறார், இன்னும் தொடர்ந்து சொல்லிக் கொண்டேய் இருக்கிறார்: **"நீர் எனக்குத் தந்தருளினவர்கள்... நான் இருக்கிற இடத்தில் என்னோடிருக்க வேண்டுமென்று மனதாய் இருக்கிறேன்'' (அரு.17:24).** ஏற்கனவே தன் குற்றங்களுக்காக நரகத் தீர்ப்புப் பெறத்

தகுதியுள்ளவனும், அதன் தண்டனைகளிலிருந்து தப்ப வழியறியாதவனுமான பாவியிடம் நித்தியப் பிதாவானவர், “என் திருச்சுதனை எடுத்து, உனக்குப் பதிலாக அவரை எனக்கு ஒப்புக்கொடு" என்றும், நித்திய சுதனானவர், “என்னைப் பெற்றுக் கொண்டு நரகத்திலிருந்து உன்னை விடுவித்துக்கொள்" என்றும் சொல்வதை விட, ஆண்டவரிடமிருந்து வேறு என்ன பெரிய இரக்கத்தை நாம் எதிர்பார்த்திருக்க முடியும் என்று **அர்ச். ஆன்செல்ம்** கேட்கிறார்: “பாவியாயிருந்து, தன்னை மீட்டுக்கொள்ள இயலாத ஒருவனிடம், “என் ஒரே பேறான திருச்சுதனை ஏற்றுக்கொண்டு, உன் இடத்தில் தண்டிக்கப்படும்படியாக, அவரை ஒப்புக்கொடு" என்று பிதாவாகிய சர்வேசுரனும், “என்னை ஏற்றுக்கொண்டு, உன்னை இரட்சித்துக் கொள்" என்று திருச்சுதனும் சொல்வதை விட அதிகமான வேறு எந்த இரக்கத்தை நாம் கற்பனை செய்ய முடியும்?"

ஆ, என் நேசப் பிதாவே, உமது திருச்சுதனை என் இரட்சகராகத் தந்தருளியதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; நான் அவரது மரணத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்; மேலும், அவரது பேறுபலன்களின் பொருட்டு, இரக்கத்திற்காக நான் உம்மிடம் மன்றாடுகிறேன். என் இரட்சகரே, நீர் நித்திய சாவினின்று என்னை விடுவிப்பதற்காக உமது திரு இரத்தத்தையும், உமது உயிரையும் தந்தருளியதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். “ஆகவே, உமது விலை மதியாத திரு இரத்தத்தால் நீர் மீட்டுக் கொண்ட உமது ஊழியர்களுக்கு உதவும்படி நாங்கள் உம்மை மன்றாடுகிறோம்." ஆகவே, கலகக்காரராகிய உமது ஊழியர்களாகிய எங்களுக்கு உதவும், ஏனெனில் நீர் மிகப் பெரியதொரு விலை கொடுத்து எங்களை மீட்டுக் கொண்டீர். சேசுவே, என் ஒரே நம்பிக்கையே, நீர் என்னை நேசிக்கிறேன். எதையும் செய்ய நீர் வல்லமை யுள்ளவராக இருக்கிறீர்; என்னை ஒரு புனிதனாக்கும். நான் பலவீனனாக இருக்கிறேன் என்றால் எனக்குப் பலம் தாரும்; நான் செய்த பாவங்களின் காரணமாக நான் நோயாளியாக இருக்கிறேன் என்றால், உமது ஒரு துளி இரத்தத்தை என் ஆத்துமத்தில் விழச் செய்து என்னைக் குணமாக்கும். உமது அன்பையும், இறுதி நிலைமை வரத்தையும் எனக்குத் தந்து, உமது

வரப்பிரசாதத்தில் நான் மரிக்கச் செய்தருளும். எனக்கு மோட்சத்தைத் தாரும்; உமது பேறுபலன்களின் வழியாக நான் அதை உம்மிடம் கேட்கிறேன், அதைப் பெற்றுக்கொள்வேன் என்றும் நம்பிய் இருக்கிறேன். ஓ என் பூரண அழகுள்ள தேவனே, நான் என் முழு ஆத்துமத்தோடும் உம்மை நேசிக்கிறேன்; உம்மை எப்போதும் நேசிப்பேன் என்று நம்புகிறேன். ஓ, உம்மை மட்டுமே நேசிக்க விரும்பும் ஒரு நீசப் பாவிக்கு உதவி செய்தருளும்!

சனி

ஆவே மரியா, க்ராத்ஸியா ப்ளேனா!

பிரியதத்தத்தினாலே பூரணமான மரியாயே வாழ்க!

I

சம்மனசானவரின் வாழ்த்து ஆசீர்வதிக்கப்பட்ட நித்திய கன்னிகைக்கு அனைத்திலும் அதிக மகிழ்ச்சி தருவதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் அதைக் கேட்கும்போதெல்லாம், அவர்கள் கடவுளின் தாயாராகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அர்ச். கபிரியேல் தூதர் அறிவித்தபோது, அவர்கள் அனுபவித்த மகிழ்ச்சி அவர்களில் புதுப்பிக்கப்பட்டது போலத் தோன்றும்; இந்த நோக்கத்தை மனதில் கொண்டு நாம் அடிக்கடி மாமரியை அருள் நிறை மந்திரம் சொல்லி வாழ்த்த வேண்டும். தேவதாயாரே அர்ச். மெட்டில்டாவிடம், அருள்நிறை மந்திரத்தால் தன்னை வாழ்த்துவதை விட அதிகப் பிரியமான முறையில் தன்னை யாரும் வாழ்த்த முடியாது என்று கூறினார்கள்.

மாமரியை வாழ்த்துபவனை அவர்களும் வாழ்த்துகிறார்கள். **அர்ச். பெர்னார்ட்** ஒரு முறை திவ்விய கன்னிகை தம்மை, “ஆவே பெர்னார்ட்! - பெர்னார்டே வாழ்க!" என்று வாழ்த்தியதைக் கேட்டார்! மாமரியின் வாழ்த்து எப்போதும் தன்னை வாழ்த்துபவனின் தேவைகள் தொடர்பான ஏதாவது ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கும் என்று **அர்ச். பொனவெந்தூர்** கூறுகிறார்: “நாம் மாமரியை மனமுவந்து, ஓர் அருள் நிறை மந்திரம் சொல்லி வாழ்த்துகிறோம்

என்றால், அவர்கள் நம்மை வரப்பிரசாதத்தைக் கொண்டு வாழ்த்துகிறார்கள்." **அர்ச். லாரென்ஸின் ரிச்சர்ட்** இதைத் தொடர்ந்து: "நம் ஆண்டவரின் தாயை அருள் நிறை மந்திரத்தைச் சொல்லி நாம் வாழ்த்துவோம் என்றால், நாம் கேட்கும் வரத்தைத் தர அவர்களால் மறுக்க முடியாது" என்கிறார். **அர்ச். ஜெர்த்ரூத்** எத்தனை அருள்நிறை மந்திரங்களைச் சொல்வாளோ, அத்தனை வரப்பிரசாதங்களை அவளது மரண வேளையில் அவளுக்குத் தருவதாக மாமரியே வாக்களித்தார்கள். "அருள் நிறை மந்திரம் சொல்லும்போது பரலோகம் முழுவதும் அக்களிப்பது போலவே, பசாசுக்கள் அனைத்தும் நடுநடுங்கி ஓட்டம் பிடிக்கின்றன" என்று முத். ஆலன் கூறுகிறார். இதைத் தாமஸ் அ கெம்பிஸ் தமது சொந்த அனுபவத்தால் உறுதிப்படுத்துகிறார்; ஏனெனில் பசாசு ஒரு முறை தமக்குத் தோன்றியதாகவும், தாம் அருள்நிறை மந்திரத்தைச் சொல்லக் கேட்டு அது அதே கணத்தில் ஓடி விட்டதாகவும் அவர் கூறுகிறார்.

நாம் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும், இரவில் படுக்கப் போகும்போதும் சாஷ்டாங்கமாக விழுந்து, அல்லது குறைந்தபட்சம் முழந்தாளிட்டு மூன்று அருள்நிறை மந்திரங்கள் சொல்லலாம். ஒவ்வொரு அருள்நிறை மந்திரத்தோடும், "மரியாயே, உங்கள் மாசற்ற அமல உற்பவத்தால், என் சரீரத்தை மாசற்றதாகவும், என் ஆத்துமத்தைப் பரிசுத்தமானதாகவும் ஆக்கியருளுங்கள்" என்ற சுருக்கமான ஜெபத்தையும் சேர்த்துச் சொல்லலாம். அதன்பின், **அர்ச். ஸ்தனிஸ்லாஸ்** எப்போதும் செய்தது போல, நாம் நம் தாய் என்ற முறையில் மாமரியின் ஆசீர்வாதத்தைக் கேட்க வேண்டும்; மாமரியின் பாதுகாவலின் மேற்போர்வையின் கீழ் நம்மை வைத்து, வரும் பகல் நேரத்தில், அல்லது இரவில் பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கும்படி நாம் அவர்களிடம் மன்றாட வேண்டும். இந்த நோக்கத்திற்காக, திவ்விய கன்னிகையின் அழகிய படம் அல்லது சுரூபத்தை வைத்திருப்பது நல்லது.

நாம் திரிகால ஜெபத்தில் காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் வழக்கமான மூன்று அருள்நிறை மந்திரங்கள் சொல்ல வேண்டும். இந்த பக்தி முயற்சிக்கு முதலில் ஒரு ஞானப் பலனை வழங்கியவர் பாப்பரசர் 22-ம் அருளப்பர் ஆவார்; சுவாமி க்ராஸ்ஸே

என்பவர் விவரிக்கும் பின்வரும் நிகழ்ச்சிக்குப் பிறகே அவர் இந்த ஞானப் பலனை அறிவித்தார்: மாமரியின் பரலோக ஆரோபணத் திருநாளுக்கு முந்தின நாளன்று ஒரு குற்றவாளி உயிருடன் எரித்துக் கொல்லப் படும்படி தண்டனைத் தீர்ப்புப் பெற்றான். நெருப்புப் பற்ற வைக்கப்பட்டவுடன் அவன் ஓர் அருள்நிறை மந்திரம் சொல்ல, அதிசயமாக, தீச்சுவாலைகளுக்கு நடுவில் எந்தத் தீக்காயமும் படாமல் அவன் இருந்ததை மக்கள் கண்டார்கள். அவனுடைய ஆடைகளுக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை. 1724-ல் 13-ம் ஆசீர்வாதப்பர் இச்செபத்தைச் சொல்லும் அனைவருக்கும் நூறு நாள் பலனையும், பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை வாங்கி, வழக்கமான கருத்துக் களுக்காக ஜெபித்து, தினமும் அருள் நிறை மந்திரம் சொல்பவர்களுக்கு மாதம் ஒரு முறை பரிபூரணப் பலனை அளித்தார். முன்பு, மணியோசை கேட்டதும், மக்கள் முழந்தாளிட்டு திரிகால ஜெபம் சொல்வார்கள். ஆனால் இப்போது அப்படிச் செய்ய சிலர் வெட்கப்படுகிறார்கள். அர்ச். சார்ல்ஸ் பொரோமியோ தாம் பயணம் செய்த வண்டியிலிருந்து வெளியே வந்து, அல்லது தமது குதிரையை விட்டிறங்கி, நடுத்தெருவில், அல்லது சேற்று நிலத்திலும் கூட முழந்தாளிட்டு இதை ஜெபிக்க வெட்கப்பட்டதில்லை.

ஓ மாசற்ற, பரிசுத்த கன்னிகையே! ஓ பூரணத் தாழ்ச்சி உள்ளவர்களும், கடவுளுக்கு முன்பாக அனைவருக்கும் மேலாக உயர்த்தப்பட்டவர்களுமான சிருஷ்டியே! நீங்கள் உங்கள் கண்களில் மிகவும் தாழ்ந்தவர்களாக இருந்தீர்கள், ஆனால் உங்கள் ஆண்டவரின் கண்களில் நீங்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தீர்கள் என்றால், உங்களைத் தமது தாயாராகத் தேர்ந்து கொண்டு, பரலோக, பூலோக இராக்கினியாக உங்களை ஆக்கும் அளவுக்கு அவர் உங்களை வெகுவாக உயர்த்தினார். ஆகவே, உங்களை இவ்வளவு உயர்வாக உயர்த்திய சர்வேசுரனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஒரு மாசற்ற சிருஷ்டிக்கும் இன்னும் மேலான கொடை எதுவும் இனி வழங்கப்பட முடியாது என்னும் அளவுக்கு கடவுளோடு மிக நெருக்கமாக நீங்கள் ஒன்றிக்கப் பட்டிருப்பதைக் கண்டு நான் அக்களிக்கிறேன். மிக விலையேறப் பெற்ற கொடைகளைப் பெற்றிருந்தும், மிகுந்த தாழ்ச்சியுள்ளவர்களாக

இருந்த உங்களுக்கு முன்பாக வர, எத்தனையோ பாவங்களுக்கு மத்தியிலும் மிகுந்த ஆங்காரமுள்ளவனாக இருக்கும் நான் வெட்கப் படுகிறேன். ஆனால் நான் நிர்ப்பாக்கியனாக இருந்தாலும், அருள் நிறைந்த மரியாயே வாழ்க என்று சொல்லி நானும் உங்களை வாழ்த்துவேன். நீங்கள் ஏற்கனவே தேவ வரப்பிரசாதத்தால் பூரணமாக நிரம்பிய் இருக்கிறீர்கள்; அதில் ஒரு பகுதியை எனக்குத் தந்தருளுங்கள். கர்த்தர் உம்முடனே. நீங்கள் சிருஷ்டிக்கப்பட்ட முதல் கணத்திலிருந்தே எப்போதும் உங்களோடு இருக்கும் ஆண்டவர் இப்போது உங்கள் திருமகனாக ஆனதன் மூலம் தம்மோடு உங்களை இன்னும் அதிக நெருக்கமாக ஒன்றித்திருக்கிறார். பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே. ஓ இராக்கினியே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, எங்களுக்கும் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தாருங்கள். உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே. ஓ, மிகுந்த மேன்மையுள்ளதும், பூரண பரிசுத்தமுள்ளதுமான ஒரு கனியை உலகிற்குத் தந்த ஆசீர்வதிக்கப் பட்ட மரமே வாழ்க!

II

கடிகார மணி ஒலிக்கும் ஒவ்வொரு முறையும் ஒரு அருள்நிறை மந்திரம் சொல்லி நாம் தேவதாயாரை வாழ்த்தலாம். **அர்ச். அல்போன்ஸ் ரொட்ரீகஸ்** ஒவ்வொரு மணி நேரமும் அவர்களை வாழ்த்துவார்; இரவில் அவர் தம் பக்தி முயற்சியை விட்டு விடாதபடி சம்மனசுக்கள் அவரை எழுப்பி வந்தார்கள்.

வீட்டை விட்டு வெளியே போகும்போதும், வீட்டுக்குத் திரும்பி வந்தவுடனும், வீட்டிலும் வெளியிலும் திவ்விய கன்னிகை நம்மை எல்லாப் பாவத்திலிருந்தும் காக்கும்படியாக, அவர்களை வாழ்த்தி ஓர் அருள்நிறை மந்திரம் நாம் சொல்லலாம். அதைச் சொல்லும் ஒவ்வொரு முறையும், கர்த்தூசிய குருக்கள் எப்போதும் செய்வது போல, நாம் திவ்விய கன்னிகையின் திருப்பாதங்களை முத்தமிட வேண்டும்.

மாதாவின் சுரூபத்தை அல்லது படத்தை நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும் ஓர் அருள்நிறை மந்திரம் சொல்லி அவர்களை வாழ்த்த வேண்டும். இந்த நோக்கத்திற்காக, தங்கள் வீட்டுச் சுவர் மீது திவ்விய கன்னிகையின் அழகிய சுரூபம் ஒன்றை வைக்க முடிந்தவர்கள் அப்படிச் செய்வது மிகவும் நல்லது. அப்போது அதைக் கடந்து செல்பவர்கள் அதன்முன் நின்று மாமரியை வணங்கி வாழ்த்த முடியும். நேப்பிள்ஸிலும், இன்னும் அதிகமாக உரோமையிலும் மாமரியின் பக்தர்களின் வணக்கத்திற்காகப் பாதையோரங்களில் திவ்விய இராக்கினியின் மிக அழகிய சுரூபங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

பரிசுத்த திருச்சபையின் கட்டளைப்படி, கட்டளை ஜெப மணிகள் ஒவ்வொன்றுக்கும் முன்பாக ஓர் அருள்நிறை மந்திரம் ஜெபிக்கப்படுகிறது. அவை ஒவ்வொன்றும் மற்றொரு அருள்நிறை மந்திரத்தோடு முடிக்கப்படுகின்றன. ஆகவே நாம் நம் எல்லாச் செயல்களையும் ஓர் அருள்நிறை மந்திரத்தைக் கொண்டு தொடங்குவதும், முடிப்பதும் மிகவும் நல்லது. நான் நம் எல்லாச் செயல்களும் என்று சொல்கிறேன், அவை ஜெபம், பாவசங்கீர்த்தனம், திவ்ய நன்மை, ஞான வாசகம், பிரசங்கங்கள் கேட்டல், மற்றும் இவை போன்ற ஞானச் செயல்களாக இருந்தாலும் சரி, அல்லது படிப்பு, அறிவுரை கூறுதல், வேலை செய்தல், உணவு மேஜைக்குச் செல்லுதல், படுக்கச் செல்லுதல் போன்ற உலகக் காரியங்களாக இருந்தாலும் சரி. இவ்வாறு இரண்டு அருள் நிறை மந்திரங்களுக்கு நடுவில் செய்யப்படும் செயல்கள் பலன் மிக்கவை. இப்படியே நாம் காலையில் எழும்போதும், இரவில் உறங்குவதற்காகக் கண்களை மூடும் போதும், ஒவ்வொரு சோதனையின் போதும், ஒவ்வொரு ஆபத்தின் போதும், ஒவ்வொரு முறை கோபம் கொள்ளத் தூண்டப்படும்போதும், இது போன்ற வேறு சமயங்களிலும் ஓர் அருள் நிறை மந்திரம் சொல்லப் பழகுவோம்.

இதைச் செய்யுங்கள், அப்போது அதிலிருந்து நீங்கள் பெறக்கூடிய அளவற்ற நன்மைகளைக் காண்பீர்கள். அர்ச். மெட்டில்டா மாமரியின் வல்லமை, ஞானம் மற்றும் நன்மைத்தனத்திற்கு மகிமையாக மூன்று அருள்நிறை மந்திரங்களைத்

தினமும் சொல்லி வந்தால் பாக்கியமான மரணம் என்னும் பெரும் வரத்தைத் தருவதாக திவ்விய கன்னிகை அவளுக்கு வாக்களித்தார்கள் என்று சுவாமி ஆவ்ரியெம்மா என்பவர் கூறுகிறார். மேலும் மாமரியே **அர்ச். ஜேன் பிரான்செஸ் த ஷாந்தாலிடம்,** அருள் நிறை மந்திரம், குறிப்பாகத் தனது பத்துப் புண்ணியங்களுக்கு மகிமையாகப் பத்து முறை சொல்லப்படும்போது, அந்த பக்தி முயற்சி தனக்கு மிகவும் பிரியமானதாக இருக்கிறது என்று கூறினார்கள்.

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே! ஓ மரியாயே, நீங்களே சர்வேசுரனுடைய திருத்தாயாராக இருக்கிறீர்கள் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். இந்த சத்தியத்தைத் தற்காப்பதற்காக ஓராயிரம் முறை என் உயிரை இழக்கவும் நான் தயாராக இருக்கிறேன். பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்: ஆனால் நீங்கள் சர்வேசுரனுடைய மாதாவாக இருக்கிறீர்கள் என்றாலும், ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கும் நீங்கள் தாயாராக இருக்கிறீர்கள்; பாவிகளை இரட்சிக்கக் கடவுள் மனிதனாகி, உங்களைத் தம் தாயாராக ஆக்கியதால் உங்கள் ஜெபங்கள் எந்தப் பாவியையும் இரட்சிக்க வல்லமை கொண்டவையாக இருக்கின்றன. ஆகவே, மரியாயே, எங்களுக்காக இப்பொழுதும், எங்கள் மரண நேரத்திலும் ஜெபிக்கத் துரிதப்படுங்கள். எப்போதும் ஜெபியுங்கள்; மிக அதிகமான சோதனைகள் மற்றும் கடவுளை இழக்கும் ஆபத்துக்களுக்கு மத்தியில் நாங்கள் வாழும் இப்பொழுது எங்களுக்காக ஜெபியுங்கள்; ஆனால் இன்னும் அதிகமாக, நாங்கள் உலகை விட்டுப் பிரிந்து, கடவுளின் நீதிமன்றத்திற்கு முன்பாகச் செல்ல ஆயத்தமாகும் எங்கள் மரண நேரத்தில் எங்களுக்காக ஜெபியுங்கள். இவ்வாறு சேசுகிறீஸ்துநாதரின் பேறுபலன்களாலும், உங்கள் பரிந்துரைகளாலும் நாங்கள் இரட்சிக்கப்பட்டு, ஒரு நாள் இனி இழக்கப்படும் ஆபத்து எதுவுமின்றி, பரலோகத்தில் நித்தியத்திற்கும் உங்கள் திருச்சுதனோடு உங்களை வாழ்த்திப் போற்றிப் புகழும்படி மோட்சத்திற்கு வந்து சேர்வோமாக. ஆமென்.

உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

"கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்."

(ஞாயிறு சுவிசேஷம்)

I

"கேளுங்கள், கொடுக்கப்படும்." நாம் எல்லாக் காரியங்களிலும் வறியவர்களாக இருக்கிறோம்; ஆனால் நாம் ஜெபிப்போம் என்றால், எல்லாக் காரியங்களிலும் நாம் செல்வந்தர்களாக இருப்போம்; ஏனெனில் கடவுள் தம்மிடம் ஜெபிப்பவனுடைய மன்றாட்டைக் கேட்பதாக வாக்களித்திருக்கிறார். "கேளுங்கள், கொடுக்கப்படும்" என்று அவர் கூறுகிறார். "என்னிடம் நீ விரும்பும் எதையும் கேள், நான் அதை உனக்குத் தருவேன்' என்று சொல்வதை விட அதிகமான அன்பை ஒரு நண்பன் மற்றொருவனுக்கு எப்படிக் காட்ட முடியும்? நம் ஆண்டவர் நம் ஒவ்வொருவரிடமும் இதைத்தான் சொல்கிறார். கடவுள் அனைத்திற்கும் ஆண்டவராக இருக்கிறார். நாம் அவரிடம் கேட்பதையெல்லாம் தருவதாக அவர் வாக்களிக்கிறார். ஆகவே, நாம் ஏழைகளாக இருக்கிறோம் என்றால், தவறு நம்முடையதுதான், ஏனெனில் நமக்குத் தேவைப்படும் வரங்களை நாம் அவரிடம் கேட்பதில்லை. இந்த அடிப்படையில்தான் மனச் செபம் அனைவருக்கும் அவசியமானதாக இருக்கிறது, ஏனெனில் அதை நாம் புறக்கணிக்கும்போது, உலகக் கவலைகளில் நாம் ஈடுபட்டிருக்கும்போது, ஆத்துமத்தின் மீது மிகச் சிறிதளவே கவனம் செலுத்துகிறோம்; ஆனால் நாம் ஆத்துமத்தின் மீது கவனம் செலுத்தும்போது, அதன் தேவைகள் என்னவென்று கண்டுபிடிக்கிறோம். அதன்பின் அது தொடர்பான வரங்களுக்காக நாம் ஜெபித்து, அவற்றைப் பெற்றுக்கொள்கிறோம்.

புனிதர்களின் வாழ்வு முழுவதும் தியான மற்றும் ஜெப வாழ்வாக இருக்கிறது. தாங்கள் எவற்றின் வழியாகப் புனிதர்கள் ஆனார்களோ, அந்த வரப்பிரசாதங்கள் அனைத்தையும் ஜெபத்தின் வழியாகத்தான் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே, நாம் இரட்சிக்கப் படவும், புனிதர்கள் ஆகவும் விரும்புவோம் என்றால், நாம் தேவ இரக்கத்தின் வாசல்களருகில் நின்று, பிச்சை கேட்பது

போல, நமக்குத் தேவைப்படும் அனைத்திற்காகவும் இரந்து மன்றாட வேண்டும்; நமக்குத் தாழ்ச்சி தேவைப்படுகிறது; அதை நாம் கேட்போம், அப்போது நாம் தாழ்ச்சியுள்ளவர்களாக இருப்போம்; துன்பங்களின் மத்தியில் நமக்குப் பொறுமை தேவைப் படுகிறது. ஆகவே நாம் அதற்காக ஜெபிப்போம், அப்போது நாம் பொறுமை உள்ளவர்களாக இருப்போம். தேவசிநேகத்தை நாம் ஆசித்துத் தேடுகிறோம்; அதை நாம் ஜெபத்தில் கேட்போம், அப்போது அதைப் பெற்றுக் கொள்வோம். **“கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்'' (மத்.7:7)** என்பது கடவுளின் வாக்குறுதி, அது தவற முடியாதது. சேசுநாதர் நம் ஜெபங்களில் நாம் அதிக நம்பிக்கை கொள்ளச் செய்யும்படியாக, தம் பெயரால் பிதாவிடம் நாம் கேட்கும் வரப்பிரசாதங்கள் எவையாயினும், அவரது அன்பு அல்லது அவரது பேறுபலன்களின் பொருட்டு, பிதாவானவர் அவற்றை யெல்லாம் நமக்குத் தருவார் என்று வாக்களித்திருக்கிறார்: **“மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் என் நாமத்தினால் பிதாவிடம் எதையெல்லாம் கேட்பீர்களோ, அதையெல்லாம் அவர் உங்களுக்குத் தந்தருள்வார்'' (அரு.16:23).** மற்றோர் இடத்தில், தம் திருப்பெயராலும், தமது பேறுபலன்களின் வழியாகவும் நாம் அவரிடம் எதைக் கேட்டாலும், அதைத் தாம் தந்தருள்வதாக அவர் கூறுகிறார்: **“நீங்கள் என் நாமத்தினால் என்னிடம் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன்'' (அரு.14:14)**. ஆம்; ஏனெனில் கடவுளால் செய்ய முடிந்தது அனைத்தையும், அவரது திருச்சுதனாகிய சேசுநாதராலும் செய்ய முடியும் என்பது நம் விசுவாசமாகும்.

II

மனிதன் தனக்குச் சாதாரணமாகத் தரப்படும் வரப்பிரசாத உதவியைக் கொண்டு எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்ற இயலாதவனாக இருக்கிறான் என்றாலும், ஜெபத்தின் மூலம் அவற்றை நிறைவேற்றத் தேவையான மேலதிக உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அர்ச். அகுஸ்தினாரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி, பரிசுத்த திரிதெந்தீன் பொதுச் சங்கம் கற்பிக்கிறது. “சாத்தியமற்றவைகளைக் கடவுள்

கட்டளையிடுவதில்லை, ஆனால் தமது கட்டளைகளைக் கொண்டு, உங்களால் என்ன முடியுமோ, அதைச் செய்யவும், உங்களால் முடியாதது எதுவோ, அதை ஜெபத்தில் கேட்கவும் அவர் உங்களுக்கு அறிவுறுத்துகிறார்; அதைச் செய்ய உங்களால் இயலுமாறு அவர் உங்களுக்கு உதவி செய்கிறார்" என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார். இத்துடன் அவரது மற்றொரு புகழ்பெற்ற போதகத்தையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம்: "கடவுள் சாத்தியமில்லாவற்றைக் கட்டளையிடுவதில்லை என்று கற்பிக்கும் நம் விசுவாசம், எளிதான காரியங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்றும், கடினமான காரியங்களில் நாம் எதைக் கேட்க வேண்டுமென்றும் நமக்கு அறிவுறுத்துகிறது."

ஆனால் நம் பலவீனத்தை அறிந்திருக்கிற சர்வேசுரன், நாம் எதிர்த்து நிற்க முடியாத எதிரிகளால் நாம் தாக்கப்படும்படி ஏன் அனுமதிக்கிறார்? மேற்கூறிய வேதபாரகர் இதற்கு இப்படிப் பதில் சொல்கிறார்: ஆண்டவர் தம்மிடம் ஜெபிக்க நமக்குள்ள அவசியத்தைப் பார்க்கிறார்; அந்த அவசியத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய பெரும் அனுகூலங்களையும் பார்க்கிறார், ஆகவே, நாம் அவருடைய உதவியைக் கேட்க வேண்டும் என்பதற்காக, நம்மை விட அதிக பலமுள்ள எதிரிகளால் நாம் தாக்கப்பட நம்மை அனுமதிக்கிறார் என்று அவர் இந்தக் கேள்விக்குப் பதில் கூறுகிறார். இதன் காரணமாக, எதிரியின் தாக்குதலில் தோல்வி அடைபவர்கள் எதிரியை எதிர்த்து நிற்கத் தங்களிடம் போதிய பலமில்லை என்று சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. ஏனெனில் கடவுளின் உதவியை அவர்கள் கேட்டிருந்தால், அதை அவர்; அவர்களுக்குத் தந்திருப்பார்; அவர்கள் ஜெபித்திருந்தால், தங்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றிருப்பார்கள். ஆகவே, அவர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் என்றால், கடவுள் அவர்களைத் தண்டிப்பார். ஒரு படைத்தளபதி சரியான நேரத்தில் தன் அரசனிடமிருந்து உதவியைத் தேடாததன் காரணமாக, ஒரு கோட்டையை இழக்கிறான் என்றால், அவன் துரோகி என்று முத்திரை குத்தப்படுவான் என்று **அர்ச். பொனவெந்தூர்** கூறுகிறார். இவ்வாறே, தான் சோதனைகளால் தாக்கப்படுவதைக் காணும்போது கடவுளின்

உதவியைத் தேடுவதை அசட்டை செய்கிற கிறீஸ்தவனைக் கடவுளும் துரோகி என்று மதிக்கிறார். "கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள்" என்று சேசுநாதர் கூறுகிறார். ஆகவே, கேளாதவன் பெற்றுக்கொள்வதில்லை என்று அர்ச். தெரேசம்மாள் கூறுகிறாள். இது, **"நீங்கள் மன்றாடிக் கேளாததினாலே உங்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை" (யாகப்.4:2)** என்ற அர்ச். யாகப்பரின் போதனைக்கு ஒத்ததாக இருக்கிறது. ஜெபம் எல்லா எதிரிகளுக்கும் எதிரான வல்லமையுள்ள தற்காப்பு ஆயுதம் என்று **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** கூறுகிறார். "உண்மையாகவே ஜெபம் மாபெரும் தற்காப்புக் கவசமாக இருக்கிறது." முன்னதாகவே ஜெபத்தின் மூலம் தன்னை பலப்படுத்திக்கொள்பவன் ஆத்துமத்திற்குள் பாவம் வரும் வழியைத் தடை செய்கிறான் என்று அர்ச். எஃப்ரேம் கூறுகிறார். "வேலை செய்வதற்கு முன் நீ ஜெபிப்பாய் என்றால், ஆத்துமத்திற்குள் வரும் பாதை பாவத்திற்குத் திறந்திருக்காது." **"ஆண்டவரைப் போற்றித் துதித்து, அவரைக் கூவியழைப்பேன், அப்போது நான் என் எதிரிகளிடமிருந்து இரட்சிக்கப்படுவேன்"** என்ற வார்த்தைகளில் **(சங்.17:4)** தாவீதும் இதையே கூறினார்.

நாம் ஒரு நல்ல வாழ்வு நடத்தவும், நம் ஆத்துமங்களை இரட்சித்துக் கொள்ளவும் விரும்புகிறோம் என்றால், நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "நன்றாக ஜெபிப்பது எப்படியென்று அறிந்துள்ளவன் நன்றாக வாழ்வது எப்படியென்றும் அறிந்திருக்கிறான்" என்கிறார் **அர்ச். அகுஸ்தீனார்**.

ஜெபத்தின் நிபந்தனைகள்

I

ஜெபத்தின் நிபந்தனைகளைப் பற்றி சிந்திப்போம். பலர் ஜெபிக்கிறார்கள், ஆனால் தாங்கள் கேட்பதைப் பெற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் தாங்கள் ஜெபிக்க வேண்டிய முறைப்படி அவர்கள் ஜெபிப்பதில்லை. **“நீங்கள் கேட்டும், அடையாமல் போகிறீர்கள். ஏனெனில் உங்கள் இச்சைகளுக்குத் திருப்தியாக வேண்டுமென்று ஆகாதவிதமாய்க் கேட்கிறீர்கள்'' (யாக.4:3).** நன்றாக ஜெபிப்பதற்கு, முதலாவதாக, தாழ்ச்சியுடன் ஜெபிப்பது அவசியமாகிறது. **“கடவுள் ஆங்காரிகளை எதிர்க்கிறார், தாழ்ச்சியுள்ளவர்களுக்கு வரப்பிரசாதங்களைத் தருகிறார்'' (யாக.4:6)**. கடவுள் ஆங்காரிகளின் விண்ணப்பங்களை நிராகரிக்கிறார், ஆனால் தாழ்ச்சி யுள்ளவர்களின் அனைத்து ஜெபங்களுக்கும் பதிலளிக்காமல் அவர் அவர்களைப் போக விடுவதில்லை. **“தன்னைத் தாழ்த்துகிறவனுடைய வேண்டுதல் மேகங்களை ஊடுருவிப்போகும்; சேருகிறவரைக்கும் ஆறுதல் அடையாது; உந்நத கடவுள் பார்க்கிறவரையிலும் திரும்பிப் போகாது'' (சீராக்.35:21).** அவர்கள் இது வரை பாவிகளாய் இருந்திருந்தாலும் இது மாறுவதில்லை. **“மனஸ்தாபத்தினாலே நொறுங்கித் தாழ்ச்சியுள்ள இருதயத்தை நீர் புறக்கணிக்க மாட்டீரே சுவாமி!'' (சங்.50:17).** இரண்டாவதாக, நம்பிக்கையோடு ஜெபிப்பது அவசியம். **“ஆண்டவரை நம்பின எவனும் கலங்கினதில்லை'' (சீராக்.2:11).** கடவுளின் வரப்பிரசாதங் களுக்காக நாம் செய்யும் மன்றாட்டுக்களில், ஒரு குழந்தை தன் தந்தையிடம் கொண்டுள்ள அதே நம்பிக்கையோடு நாம் ஜெபிக்கும்படி செய்வதற்காக, கடவுளை வேறு எந்தப் பெயரையும் அன்றி, பிதாவே என்னும் பெயரைச் சொல்லியே அழைத்து அவரிடம் ஜெபிக்கும்படியாக சேசுநாதர் நமக்குக் கற்பித்திருக்கிறார். ஆகவே நம்பிக்கையோடு ஜெபிப்பவன் ஒவ்வொரு வரப்பிரசாதத்தையும் பெற்றுக் கொள்கிறான். **“ஆதலால் நீங்கள் ஜெபம்பண்ணும் போது கேட்கிறதையெல்லாம் பெற்றுக் கொள்வீர்கள் என்று விசுவசியுங்கள். அவைகள் உங்களுக்குச் சம்பவிக்குமென்று உங்களுக்குச் சொல்கிறேன்'' (மாற்கு.11:24).**

சத்தியமாகவே இருக்கிற கடவுளின் வாக்குறுதிகள் மீறப்படக் கூடும் என்று யார் அஞ்ச முடியும் என்று **அர்ச். அகுஸ்தினார்** கேட்கிறார். கடவுள், வாக்களித்தபின், ஏமாற்றும் எண்ணத்தினாலோ, அல்லது தங்கள் மனங்களை மாற்றிக் கொள்வதாலோ, தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றாதிருக்கும் மனிதர்களைப் போன்றவர் அல்லர் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது: **"கடவுள் மனிதனைப் போலப் பொய் சொல்பவருமல்ல, மனித புத்திரனைப் போல் மாறுபடுகிறவரும் அல்ல. அவர் சொன்னதைச் செய்யாதிருப்பாரோ?'' (எண்.23:19). அர்ச். அகுஸ்தினார்** இதன் தொடர்ச்சியாக, ஆண்டவர் தம் வரப்பிரசாதங்களை நம்மீது பொழிய விரும்பவில்லை என்றால், அவற்றைக் கேட்கும்படி மிகுந்த ஆர்வத்தோடு அவர் நமக்கு அறிவுறுத்துவாரா? தமது வாக்குறுதிகளால், நாம் அவரிடம் கேட்கும் வரப்பிரசாதங்களைத் தருவதை அவர் தமது கடமையாக்கிக் கொள்கிறார் என்கிறார். "வாக்களிப்பதன் மூலம், அவர் தம்மைக் கடனாளியாக ஆக்கி இருக்கிறார்'' என்று அவர் கூறுகிறார்.

ஆனால், நான் ஒரு பாவி, ஆகவே என் ஜெபம் கேட்கப்பட நான் தகுதியற்றவன் என்று சிலர் சொல்வார்கள். வரப்பிரசாதங்களைப் பெற ஜெபம் கொண்டுள்ள பலனுள்ள தன்மை நம் பேறுபலன்களில் அல்ல, மாறாக தேவ இரக்கத்தையே சார்ந்துள்ளது என்று **அர்ச். தாமஸ் அக்குயினாஸ்** இதற்குப் பதிலளிக்கிறார். **"கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான்''** என்று சேசுநாதர் கூறுகிறார் **(மத்.7:8).** அதாவது, நீதிமானாயிருந்தாலும் பாவியாயிருந்தாலும், ஒவ்வொருவனும் பெற்றுக்கொள்கிறான். ஆனால், **"மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்: என் நாமத்தினால் நீங்கள் எதையாவது என் பிதாவிடத்தில் கேட்டால், அவர் அதை உங்களுக்குத் தந்தருள்வார்'' (அருள. 16:23)** என்று இரட்சகர் சொல்லும்போது, அவரே எல்லா அச்சத்தையும் நம்மிடமிருந்து போக்கி விடுகிறார். பாவிகளே, நீங்கள் பேறுபலன்களின்றி இருக்கிறீர்கள் என்றால், நான் என் பிதாவுக்கு முன்பாக பேறுபலன்களைக் கொண்டிருக்கிறேன். ஆகவே, என் பெயரால் கேளுங்கள், நீங்கள் எதைக் கேட்டாலும் அதைப் பெற்றுக் கொள்வீர்கள் என்று நான் வாக்களிக்கிறேன் என்று அவர் சொன்னது

போலாயிற்று. ஆனாலும், இந்த வாக்குறுதி உடல் நலம், செல்வங்கள் என்பன போன்ற உலக நன்மைகளுக்குப் பொருந்தாது என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். இந்த உலக வரப்பிரசாதங்கள் நம் இரட்சணியத்திற்கு ஆபத்தாக இருக்கும் என்று அவர் காண்பதால், நீதியுள்ள முறையில், இந்த வரப்பிரசாதங்களைத் தர அவர் அடிக்கடி மறுக்கிறார். "எது பயனுள்ளது என்று நோயாளியை விட மருத்துவன் நன்றாக அறிந்திருக்கிறான்" என்கிறார் **அர்ச். அகுஸ்தினார்.** அவரே மேலும் தொடர்ந்து, கடவுள் தமது இரக்கத்தின் காரணமாக சிலருக்குத் தர மறுப்பதை, தாம் கோபமாயிருப்பதன் காரணமாக மற்றவர்களுக்குத் தருகிறார் என்று கூறுகிறார். இதன் காரணமாக, உலக ஆசீர்வாதங்கள் ஆத்துமத்திற்கு ஆதாயமானவையாக இருக்கும் என்ற நிபந்தனையின் பேரிலேயே நாம் அவற்றைக் கேட்க வேண்டும். ஆனால் பாவ மன்னிப்பு, நிலைமை வரம், தேவசிநேகம் என்பன போன்ற ஞான வரப்பிரசாதங்கள் முழுமையாகவும், அவற்றைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடும் கேட்கப்படவேண்டும். **"நீங்கள் தீயோராயினும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கொடைகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, உங்கள் பரம பிதா தம்மை வேண்டிக் கொள்கிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நல்ல இஸ்பிரீத்துவைத் தந்தருளுவார்" (லூக்.11:13)** என்று சேசுநாதர் கூறுகிறார்.

ஓ என் அன்புள்ள இரட்சகரே, உம்முடைய உதவியின்றி என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் உம்மிடம் நாங்கள் கேட்கும் எல்லாவற்றையும் தந்தருள்வதாக நீர் வாக்களித்திருக்கிறீர். ஆகவே, என் பிரியமுள்ள சேசுவே, உமது வாக்குறுதிகளில் நம்பிக்கை கொண்டு, என் எல்லாப் பாவங்களுக்கும் நான் மன்னிப்பை வேண்டுகிறேன்; பரிசுத்த நிலைமை வரத்தை நான் கேட்கிறேன்; ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, உமது பரிசுத்த அன்பு என்னும் கொடையை நான் கேட்கிறேன்.

II

எல்லாவற்றிற்கும் மேலாக, ஜெபத்தில் நிலையாயிருத்தல் அவசியம். அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 11-ம் அதிகாரத்தைப் பற்றிய தமது விளக்கவுரையில் கொர்னேலியுஸ் ஆ லாப்பிதே இது பற்றி, "ஓயாமல் நச்சரிக்கும் அளவுக்கும் கூட நாம் ஜெபத்தில் நிலையாக இருக்க வேண்டுமென்று நம் ஆண்டவர் விரும்புகிறார்'' என்று சொல்கிறார். **"நாம் எப்போதும் ஜெபிக்க வேண்டும்'' (லூக்.21:36); "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'' (1 தெச.5:17); "ஆகையால் எந்நேரமும் விழிப்பாயிருந்து ஜெபம் பண்ணுங்கள்''** என்ற வேதாகம வாக்கியங்களிலிருந்து இதை நாம் புரிந்து கொள்ளலாம். மேலும், "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், கண்டடைவீர்கள், தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்'' என்று நம் ஆண்டவர் மீண்டும் மீண்டும் ஜெபிக்கும்படி நமக்கு அறிவுறுத்துவதிலிருந்தும் இதை நாம் புரிந்துகொள்ளலாம். கேளுங்கள் என்று மட்டும் சொல்லியிருந்தால் அது போதுமானதாக இருந்திருக்கலாம்; ஆனால் அப்படியில்லை. பிச்சை கிடைக்கும் வரை விடாமல் கேட்டுக் கொண்டும், கெஞ்சிக் கொண்டும், கதவைத் தட்டிக்கொண்டும் இருக்கும் பிச்சைக்காரர்களை ஜெபத்தில் நாம் பின்பற்ற வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். ஆனால் குறிப்பாக இறுதி நிலைமை வரம் தொடர்ச்சியான ஜெபத்தாலன்றி நாம் பெற்றுக்கொள்ள முடியாத வரப்பிரசாதமாக இருக்கிறது. இந்த நிலைமை வரமாகிய வரப்பிரசாதத்திற்கு நாம் தகுதி பெற முடியாது. ஆனால், **அர்ச். அகுஸ்தினார்** கூறுவது போல, ஒரு குறிப்பிட்ட முறையில் இதற்கு நாம் தகுதி பெறலாம். "இந்தக் கொடையைத் தாழ்ச்சியோடு திரும்பத் திரும்ப ஜெபிப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ள முடியும்'' என்று இந்தப் பரிசுத்த வேதபாரகர் கூறுகிறார். அப்படி இருக்க, நாம் இரட்சிக்கப்பட விரும்பினால் எப்போதும் ஜெபிப்போமாக, ஜெபிப்பதை ஒருபோதும் நிறுத்தி விடாதிருப்போமாக. பாவசங்கீர்த்தன குருக்களும் ஆசிரியர்களும், ஆத்துமங்களின் இரட்சணியத்தை ஆசித்துத் தேடுகிறார்கள் என்றால், அவர்கள் தங்களிடம் பாவசங்கீர்த்தனம் செய்பவர்களை, அல்லது தாங்கள் சொல்வதைக் கேட்பவர்களை ஜெபிக்கும்படி வற்புறுத்துவதை நிறுத்தி விடவே கூடாது. மேலும், அர்ச். பெர்னார்டின் அறிவுரைக்கு ஒத்தபடி, நாம் எப்போதும் மாமரியின்

பரிந்து பேசுதலில் தஞ்சமடைவோம். “நாம் வரப்பிரசாதத்தைக் கேட்போம், அதை மரியாயின் வழியாகக் கேட்போம்; ஏனெனில் அவர்கள் கேட்பதைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களது ஜெபம் பலனற்றுப் போக முடியாது" என்று அவர் கூறுகிறார்.

ஓ என் தேவனே, நீர் ஏற்கனவே என்னை மன்னித்து விட்டீர் என்றுநான் நம்புகிறேன்; ஆயினும் என் எதிரிகள் என் மரணம் வரை என்னை எதிர்த்துப் போராடுவதை நிறுத்தப் போவதில்லை. நீர் எனக்கு உதவி செய்யாவிடில், நான் உம்மை மீண்டும் இழந்து போவேன். ஆ! சேசுநாதரின் பேறுபலன்களின் வழியாக, நான் பரிசுத்த நிலைமை வரத்தை மன்றாடிக் கேட்கிறேன். இதே வரத்தை தேவ இஷ்டப்பிரசாத நிலையில் இருக்கும் அனைவருக்காகவும் நான் மன்றாடிக் கேட்கிறேன். நான் இந்த நிலைமை வரத்தை உம்மிடம் தொடர்ந்து கேட்பேன் என்றால், அதை நீர் எனக்குத் தந்தருள்வீர் என்ற உமது வாக்குத்தத்தத்தில் நான் முழு நம்பிக்கை வைக்கிறேன். ஆயினும் என் சோதனைகளில் உம்மிடம் தஞ்சமடைதை நான் அசட்டை செய்து, அதனால் பாவத்தில் மீண்டும் விழுந்து விடுவேன் என்று அஞ்சுகிறேன். ஆகவே, ஜெபத்தை இனி ஒருபோதும் அசட்டை செய்யாதிருக்கத் தேவையான வரத்தை உம்மிடம் கேட்கிறேன். நான் மீண்டும் பாவத்தில் விழும் ஆபத்தில் இருக்கும் சந்தர்ப்பங்களில், உமக்கு என்னை ஒப்புக் கொடுத்து, சேசு மரியாயின் மகா பரிசுத்த திருப்பெயர்களின் உதவியை மன்றாட எனக்கு அருள்வீராக. ஓ என் தேவனே, இதுவே என் நோக்கம், உமது வரப்பிரசாத உதவியோடு இதை நான் செய்வேன் என்று நம்புகிறேன். சேசுநாதரின் நிமித்தமாக நான் சொல்வதற்கு செவிசாய்த்தருளும். ஓ மரியாயே, என் மாதாவே, கடவுளை இழந்து போகும் எல்லா ஆபத்துக்களிலும், உங்களிடமும், உங்கள் திருமகனிடமும் நான் அடைக்கலம் புகும் வரப் பிரசாதத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்.

தவ நாட்கள் - செவ்வாய்

கடவுள் ஞான நன்மைகளை நமக்குத் தந்தருள்வதாக வாக்களித்திருக்கிறார், உலக நன்மைகளை அல்ல.

I

நம் ஜெபங்களைக் கேட்பதாக நம் ஆண்டவர் தந்துள்ள வாக்குறுதி, உலக நன்மை களுக்கான நம் மன்றாட்டுகளுக்குப் பொருந்தாது, மாறாக, அது அவசியமான, அல்லது ஏதோ ஒரு விதத்தில் ஆத்தும இரட்சணியத்திற்குப் பயனுள்ளதாக இருக்கிற, ஞான ரீதியான வரப்பிரசாதங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதைப் பற்றி சிந்திப்போம். சேசுநாதரின் திருப்பெயராலும், அவருடைய பேறுபலன்களின் வழியாகவும் நாம் கேட்கும் வரப்பிரசாதங்களை மட்டுமே பெற்றுக் கொள்வோம் என்றுதான் நாம் எதிர்பார்க்க முடியும். "ஆனால்," **அர்ச். அகுஸ்தினார்** சொல்வது போல, "நம் இரட்சணியத்திற்கு ஆபத்தான எதையும் நாம் கேட்கிறோம் என்றால், இரட்சகரின் திருப்பெயரால் நாம் கேட்கிறோம் என்று சொல்லப்பட முடியாது." இரட்சணியத்திற்கு ஆபத்தான எதையும் இரட்சகரிடமிருந்து நாம் எதிர்பார்க்க முடியாது. கடவுள் அதைத் தருவதில்லை, தர முடிவதுமில்லை. ஏன்? ஏனெனில் அவர் நம்மை நேசிக்கிறார். நோயாளியின் மீது மதிப்பு வைத்துள்ள மருத்துவன், அவனுக்கு நல்லதல்ல என்று தான் நினைக்கும் உணவை அவன் சாப்பிட அனுமதிக்க மாட்டான். எத்தனை மனிதர்கள் தாங்கள் ஏழைகளாக அல்லது நோயாளிகளாக இருந்திருந்தால், தாங்கள் செய்யும் பாவங்களைச் செய்யாதபடி தடுக்கப்பட்டிருப்பார்கள்! பலர் உடல் நலத்தை அல்லது செல்வங்களைக் கேட்கிறார்கள், ஆனால் கடவுள் அவர்களுக்கு அவற்றைத் தருவதில்லை, ஏனெனில் அவை அவர்களுக்குப் பாவ சந்தர்ப்பமாக, அல்லது குறைந்தபட்சம், தம் ஊழியத்தில் அவர்கள் வெதுவெதுப்பாக இருப்பதற்கான ஒரு தூண்டுதலாக இருக்கும் என்று அவர் காண்கிறார். ஆகவே, நாம் இந்த உலகக் கொடைகளைக் கேட்கும்போது, "அவை எங்கள் ஆத்துமங்களுக்குப் பலனுள்ளதாக இருந்தால்" என்ற நிபந்தனையையும் நம் ஜெபத்தோடு எப்போதும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். கடவுள் அவற்றை நமக்குத் தரவில்லை என்று நாம் காணும்போது, நம்மை நேசிப்பதாலும், நாம் கேட்கும் காரியங்கள் நம் ஞான நலனுக்கு ஆபத்தானதாக மட்டுமே இருக்கும்

என்பதாலுமே அவர் அவற்றை நமக்குத் தர மறுக்கிறார் என்பதில் நாம் உறுதியாய் இருப்போமாக.

கடவுளின் வரப்பிரசாதத்தை விலக்கி விட நம்மைத் தூண்ட முயலும் சில சோதனை களிலிருந்து நம்மை விடுவிக்கும்படி கடவுளிடம் நாம் அடிக்கடி ஜெபிக்க வேண்டும். ஆனால் அவரோடு நம் ஆத்துமம் அதிக நெருக்கமாக ஒன்றிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக, கடவுள் சில சமயங்களில் நம்மை அவற்றிலிருந்து விடுவிப்பதில்லை. நம்மைக் காயப்படுத்தி, கடவுளிடமிருந்து நம்மைப் பிரிப்பவை சோதனைகளோ, நாம் வெறுக்கிற கெட்ட எண்ணங்களோ அல்ல, மாறாக தீமைக்கு நாம் சம்மதிப்பதே ஆகும். கடவுளின் வரப்பிரசாத உதவியால் ஆத்துமம் ஒரு சோதனையை எதிர்த்து நிற்கும்போது, அது உத்தமதனத்தின் பாதையில் வேகமாக முன்னேறுகிறது. அர்ச். சின்னப்பர் அசுத்தப் பாவ சோதனைகளால் தாம் மிக அதிகமாகத் துன்புறுத்தப்பட்டதாகவும், அவற்றிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கடவுளிடம் தாம் மும்முறை ஜெபித்ததாகவும் நமக்குக் கூறுகிறார்: **"என்னைக் கொட்டும் பேய்த் தூதனாகிய ஒரு கொடுக்கு என் மாம்சத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இது என்னைவிட்டு அகலும் படிக்கு மும்முறை ஆண்டவரை நோக்கி மன்றாடினேன்.''**

அதற்கு ஆண்டவர் தந்த பதில் என்ன? என் வரப்பிரசாதத்தைக் கொண்டிருப்பதே உனக்குப் போதுமானது என்று ஆண்டவர் அவருக்குக் கூறிவிட்டார்: **"என் வரப்பிரசாதமே உனக்குப் போதும்'' (2 கொரி.12:7-9).** இவ்வாறு, நம்மைத் தாக்கும் சோதனைகளில், அவற்றிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக, அல்லது அவற்றை எதிர்த்து நிற்க நமக்கு உதவும்படியாக நாம் அவரிடம் மன்றாட வேண்டும். இப்படி நாம் ஜெபிக்கும்போது, அவற்றை எதிர்த்து நிற்கக் கடவுள் நமக்கு ஏற்கனவே உதவி செய்து கொண்டிருக்கிறார் என்பதில் நாம் முற்றிலும் உறுதியாக இருக்க வேண்டும்: **"துன்ப நேரத்தில் நீ நம்மைக் கூவியழைத்தாய், கடும் புயலின் இரகசிய ஸ்தலத்தில் நாம் உன் குரலைக் கேட்டு, உன்னை விடுவித்தோம்'' (சங்.80:8).** நமது மேலதிக நன்மைக்காகக் கடவுள் நம்மை அடிக்கடி

புயலின் நடுவில் விட்டு விடுகிறார்; ஆனால் இன்னும் கூட அவர் நம் மன்றாட்டை இரகசியத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார், எதிர்த்து நிற்கவும், தேவ சித்தத்திற்கு அமைந்திருக்கவும் நம்மைப் பலப்படுத்த அவர் தமது வரப்பிரசாதத்தை நமக்குத் தருகிறார்.

II

இரட்சணியத்திற்கு அவசியமில்லாத சகல உலகக் கொடைகளும் நிபந்தனையின் பேரிலேயே கேட்கப்பட வேண்டும்; கடவுள் அவற்றை நமக்குத் தரவில்லை என்று நாம் கண்டால், நம் மேலதிக நன்மைக்காகவே அவற்றைக் கடவுள் நமக்குத் தர மறுக்கிறார் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். ஆனால் ஞான வரங்களைப் பொறுத்த வரை, அவற்றை அவரிடம் நாம் கேட்கும்போது, அவர் அவற்றைத் தந்தருளுகிறார் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். நாம் நம்மை நேசிப்பதை விடக் கடவுள் நம்மை அதிகமாக நேசிக்கிறார் என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுகிறாள். கடவுளின் வரப்பிரசாதத்தைப் பெறுவதற்கு நமக்குள்ள ஆசையை விட, அதை நமக்குத் தருவதற்குக் கடவுள் அதிக ஆசை கொண்டுள்ளார் என்று அர்ச். அகுஸ்தினார் கூறுகிறார்: "கடவுளின் உபகாரங்களைப் பெற்றுக்கொள்ள நீ ஆசைப்படுவதை விட அதிகமாக, அவற்றை உன் மீது பொழிய அவர் சித்தமாய் இருக்கிறார்." அவருக்குப் பின் **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள்** இது பற்றிக் கூறும்போது, ஜெபிக்கும் ஆன்மாவுக்குத் தாம் ஒரு விதத்தில் கடன்பட்டிருப்பதாகக் கடவுள் உணர்கிறார். அவர் அதனிடம்: "ஆன்மாவே, வரப்பிரசாதத்தை என்னிடம் கேட்டதற்காக நான் உனக்கு நன்றி கூறுகிறேன்" என்று சொல்பவரைப் போலத் தோன்றுகிறார். ஏனெனில் அப்போது ஆத்துமம் தனக்கு நன்மை செய்யும் ஒரு வாய்ப்பைத் தருகிறது, இவ்வாறு, அனைவருக்கும் தமது வரப்பிரசாதத்தைத் தரும் அவரது ஆசையையும் அது திருப்தி செய்கிறது. எந்த வரங்களைத் தருவதில் கடவுள் மிக அதிகமான இன்பம் காண்கிறாரோ, அந்தக் காரியங்களை ஓர் ஆன்மா கேட்கும்போது, கடவுள் அவற்றை அதற்குத் தராமல் இருப்பது எப்ப நிகழ முடியும்? ஆத்துமம் அவரை நோக்கி: "ஆண்டவரே,

செல்வங்களையோ, உலக மகிமைகளையோ, நன்மைகளையோ அன்றி, உமது வரப்பிரசாதத் தையே நான் இரந்து மன்றாடுகிறேன். பாவத்திலிருந்து என்னை விடுவியும்; ஒரு நல்ல மரணத்தை எனக்குத் தந்தருளும்; எனக்கு மோட்சத்தைத் தந்தருளும்; எனக்கு உமது அன்பைத் தந்தருளும்" என்று கேட்கும்போது, **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்** கூறுவது போல அது எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஜெபத்தில் கேட்க வேண்டிய வரமாக இருக்கிறது. "உமது திருச் சித்தத்திற்குப் பணிந்திருக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும்"-- ஓர் ஆத்துமம் இப்படி ஜெபிக்கும்போது, கடவுள் அதன் ஜெபத்தைக் கேட்க மறுப்பது எப்படி சாத்தியமாகும்? ஓ என் தேவனே, நீர் விரும்பும் விதத்தில் செய்யப்படும் ஜெபங்களை நீர் கேட்கவில்லை என்றால், வேறு எந்த ஜெபத்தைத்தான் நீர் கேட்பீர் என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார்: "இவற்றை நீர் கேட்கவில்லை என்றால், எதைத்தான் நீர் கேட்பீர்?" மேலும், இவ்வகையான ஞான வரங்களை நாம் கேட்கும்போது, அவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆசை கடவுளிடமிருந்து மட்டுமே நமக்கு வர முடியும் என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார்; ஆகவே இப்புனிதர் கடவுளை நோக்கித் திரும்பி, "இந்த ஆசையைத் திருப்தி செய்ய உமக்குச் சித்தமில்லை என்றால், அவற்றை வேறு என்ன காரணத்திற்காகத் தந்திருக்கிறீர்?" என்று கேட்கிறார். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக சேசு கிறீஸ்துநாதரின் வார்த்தைகள், ஞான வரங்களுக்காக நாம் ஜெபிக்கும்போது, நம் நம்பிக்கைக்கு உயிரூட்ட வேண்டும்: **"நீங்கள் தீயோராயினும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கொடைகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, உங்கள் பரம பிதாவானவர் தம்மை வேண்டிக் கொள்கிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நல்ல இஸ்பிரீத்துவைத் தந்தருளுவார்" (லூக்.11:13)**. தீமையாலும், சுய நேசத்தாலும் நிறைந்திருக்கிற நீங்கள், உங்கள் குழந்தைகள் கேட்கிற நன்மையான காரியங்களைத் தர மறுக்க முடியாதவர்களாக இருக்கிறீர்கள் என்றால், எந்த ஒரு உலகத் தகப்பனும் தன் குடும்பத்தை நேசிக்க முடிவதற்கும் மேலாக உங்களை நேசிக்கிற உங்கள் பரலோகப் பிதாவானவர், நீங்கள் தமது ஞானக் கொடைகளைக் கேட்கும்போது, அவற்றை எவ்வளவு அதிகமாக உங்களுக்குத் தந்தருள்வார்!

ஆகவே, நாம் இரட்சிக்கப்பட விரும்பினால், நாம் ஜெபிப்போம், எப்போதும் ஜெபித்துக் கொண்டே இருப்போம். ஜெபமே நமக்கு அனைத்திலும் இன்பமான வேலையாக இருக்கட்டும்; ஜெபம் நம் முழு வாழ்வினுடையவும் பயிற்சியாக இருக்கட்டும். நாம் குறிப்பிட்ட வரப்பிரசாதங்களுக்காக ஜெபிக்கும் போது, தொடர்ந்து ஜெபிப்பதற்கான வரப்பிரசாதத்தைக் கேட்க ஒருபோதும் மறவாதிருப்போம்; ஏனெனில் நாம் ஜெபிப்பதை எப்போதாவது விட்டு விடுவோம் என்றால், நாம் இழக்கப்படுவோம். ஜெபத்தை விட அதிக எளிதானது எதுவுமில்லை. "ஆண்டவர் என் அருகில் நில்லும்! ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்! ஆண்டவரே, உமது நேசத்தை எனக்குத் தாரும்!" என்று இது போன்ற ஜெபங்களைச் செய்வதற்கு நமக்கு எந்தச் செலவும் இல்லை! இதை விட அதிக எளிதானது என்ன இருக்க முடியும்? ஆனால் இதை நாம் செய்யாவிடில், நாம் இரட்சிக்கப்பட முடியாது. ஆகவே, நாம் ஜெபிப்போம், மாமரியின் பரிந்துரையின் கீழ் எப்போதும் தஞ்சமடைவோம். "வரப்பிரசாதத்தைத் தேடுவோம், அதை மாமரியின் வழியாகத் தேடுவோம்" என்கிறார் அர்ச். பெர்னார்ட். மாமரியிடம் நாம் நம்மை ஒப்படைக்கும்போது, அவர்கள் நம் ஜெபத்தைக் கேட்கிறார்கள். நமக்கு வேண்டிய எதையும் அவர்கள் பெற்றுத் தருகிறார்கள் என்பதில் உறுதியாயிருப்போம். "வழிகளோ, சித்தமோ அவர்களிடம் ஒருபோதும் குறைவுபட முடியாது" என்று அதே புனிதர் கூறுகிறார். மேலும் **அர்ச். அகுஸ்தினார்** தம் திவ்ய அன்னையைப் பார்த்து இப்படிக் கூறுகிறார்: "ஓ மிகுந்த பக்தியுள்ள இராக்கினியே, உம்முடைய மன்றாட்டின் உதவியைக் கேட்ட எவனும் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் யாரும் கேள்விப்பட்டதில்லை." "ஆ, இல்லவேயில்லை, மாமரியிடம் வேண்டிக் கொள்பவன் இரட்சணியத்தைக் கண்டடைகிறான்; ஆகவே அவன் அவர்களை, "தன்னை மன்றாடுவோரின் இரட்சணியம்" என்று அழைக்கிறான்" என்று **அர்ச். பொனவெந்தூர்**. நாம் ஜெபத்தை ஒருபோதும் அசட்டை செய்யாதிருப்போமாக.

நித்திய பிதாவே, நான் தாழ்ச்சியோடு உம்மை ஆராதிக்கிறேன், என்னைப் படைத்து, சேசுநாதரின் வழியாக என்னை

இரட்சித்துள்ளதற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். என்னை ஒரு கிறீஸ்தவனாக்கியதற்காகவும், ஞானஸ்நானமாகிய தேவத் திரவிய அனுமானத்தில் என்னை உமது குழந்தையாக சுவீகரித்துக் கொண்டதற்காகவும், மிகுந்த உண்மையுள்ள மனதோடு நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் எண்ணற்ற பாவங்களைச் செய்த பிறகு, என் மனஸ்தாபத்தை ஏற்றுக் கொண்டு, நான் தாழ்ச்சியோடு நம்புகிறபடி உமக்கு எதிராக நான் செய்த எல்லாப் பாவங்களையும் மன்னித்ததற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தப் பாவங்களுக்காக நான் மெய்யான மனஸ்தாபப்படுகிறேன், ஏனெனில் அவை அளவற்ற நன்மைத் தனமாகிய உம்மை வேதனைக்குள்ளாக்கின. நீர் என்னைக் காத்திருக்கவில்லை எனில், நான் மீண்டும் விழுந்திருக்கக் கூடிய பல பாவங்களிலிருந்து என்னைப் பாதுகாத்ததற்காக உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால் என் எதிரிகள் என்னைத் தங்கள் அடிமையாக்கும்படி இன்னும் போராடுகிறார்கள், இனியும் போராடுவார்கள். நீர் என்னை இடைவிடாமல் பாதுகாத்து, உமது எனக்கு உதவி செய்யாவிடில், பரிதாபத்திற்குரிய சிருஷ்டியாகிய நான் பாவத்திற்குத் திரும்பிச் சென்று நிச்சயமாக உமது வரப்பிரசாதத்தை இழந்து போவேன். ஆகவே, சேசுநாதருடைய அன்பைப் பார்த்து, என் மரணம் வரையிலும் எனக்குப் பரிசுத்த நிலைமை வரத்தைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறேன். உமது திருச்சுதனான சேசுநாதர், தமது திருப்பெயரால் நாங்கள் எதைக் கேட்டாலும் அதை நீர் தருவீர் என்று வாக்களித்திருக்கிறார். அவருடைய பேறுபலன்களின் வழியாக, நானும், நீதிமான்கள் அனைவரும் இனி ஒருபோதும் உமது அன்பிலிருந்து பிரிக்கப் படாமலும், காலத்திலும், நித்தியத்திலும் உம்மை என்றென்றும் நேசித்துக் கொண்டும் இருக்க எங்களுக்குத் தேவையான வரப்பிரசாதத்தைத் தந்தருளும்படி உம்மை இரந்து மன்றாடுகிறேன். மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, எனக்காக சேசுவை மன்றாடுங்கள்.

தவ நாட்கள் - புதன்

பூமியின் மீது சேசுநாதர் வாழ்ந்த தரித்திர வாழ்வு

I

செல்வங்கள், இன்பங்கள் மற்றும் உலக மகிமைகளைச் சொந்தமாகக் கொண்டிருப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கிய் இருக்கிறது என்று உலகம் தன்னைப் பின்செல்வோருக்குக் கற்பிக்கிறது. ஆனால் கடவுளின் திருச்சுதன் மனிதனாக அவதரித்தபோது அவரால் இந்த வஞ்சக உலகம் தண்டனைத் தீர்ப்பிடப்பட்டது. **"இப்பொழுதே இவ்வுலகம் தீர்ப்புக்குள்ளாகிறது" (அரு.12:31).** இந்தத் தண்டனைத் தீர்ப்பு பெத்லகேமின் மாட்டுத் தொழுவத்தில் தொடங்கியது. சேசுநாதர் அங்கேதான் தரித்திரத்தில் பிறக்க விரும்பினார். தமது தரித்திரத்தின் வழியாக நம்மைச் செல்வந்தர்களாக்கவும், தமது தெய்வீக மாதிரிகையால் உலக உடைமைகளின் மீது நம் சகல பற்றுதல்களைப் பிடுங்கியெடுக்கவும் அவர் விரும்பினார்.

கடவுளின் திருச்சுதன் உலகில் பிறந்த நேரத்தில் பேரரசனின் ஆணை அமல் செய்யப்பட வேண்டும் என்பது கடவுளின் நியமமாக இருந்தது. அந்த ஆணையின்படி ஒவ்வொருவரும் தான் பிறந்த இடத்திற்குப் போய் அங்கே பெயரைப் பதிவு செய்ய வேண்டியிருந்தது. இதன் காரணமாக, சூசையப்பர் தமது மனைவி மரியாயோடு செசாரின் கட்டளைப்படி தமது பெயரைப் பதிவு செய்வதற்காகப் பெத்லகேமுக்குச் சென்றார். இப்போது, மாமரியின் பிரசவ காலம் நெருங்கி வருகிறது. மாமரி, மற்ற வீடுகளிலிருந்தும், ஏழைகளுக்குரிய பொதுச் சத்திரத்திலிருந்தும் கூட, இடமில்லை என்று துரத்தப்பட்டு, அன்றிரவை ஒரு குகையில் கழிக்கவும், அன்றிரவு அந்தக் குகையில் பரலோக அரசர் பிறக்கவும் தேவ சித்தமாயிற்று. சேசுநாதர் நாசரேத்தில் பிறந்திருந்தாலும் இதே போன்ற ஒரு தரித்திர நிலையில்தான் பிறந்திருப்பார் என்பது உண்மைதான்; என்றாலும் நாசரேத்தில் அவருக்குக் குறைந்த பட்சம் ஈரமின்றிக் காய்ந்த ஓர் அறையும், கொஞ்சம் நெருப்பும், கதகதப்பான உடைகளும், அதிக வசதியான ஒரு தொட்டிலுமாவது இருந்திருக்கும். ஆனால் அவரோ இந்தக் குளிர் மிகுந்த குகையைத் தேர்ந்து கொண்டார். அங்கே அவருக்கு உஷ்ணம் தர நெருப்பு இல்லை; தொட்டிலுக்குப் பதிலாக ஒரு முன்னிட்டியைத் தம் முதல் உறக்கத்திற்கென அவர் தேர்ந்துகொண்டார், உடலில் குத்துகிற ஒரு

சிறு வைக்கோல் படுக்கையும் அவருக்கு இருந்தது. அவர் இன்னும் அதிகம் துன்பப்பட அது உதவியாக இருந்தது!

நாம் பெத்லகேம் குகைக்குள் நுழைந்து பார்ப்போம்; ஆயினும் விசுவாசத்தோடு அங்கே நுழைவோமாக. விசுவாசமின்றி அதற்குள் நுழைவோமானால், நம்மில் பரிதாப உணர்வைத் தூண்டும் ஒரு பச்சிளம் குழந்தையை மட்டும்தான் நாம் பார்ப்போம். மிக அழகான, ஆனால் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிற, தாம் படுத்திருக்கிற படுக்கையின் வைக்கோல் குத்துவதால் அழுது கொண்டிருக்கிற ஒரு குழந்தை. ஆனால் நாம் விசுவாசத்தோடு அதனுள் நுழைந்து, இந்தக் குழந்தை கடவுளின் திருச்சுதன் என்பதையும், அவர் நம்மீது கொண்ட அன்பிற்காக பூமிக்கு இறங்கி வந்தவர் என்பதையும், நம் பாவங்களுக்குரிய பரிகாரக் கடனைச் செலுத்துவதற்காக மிக அதிகமாகத் துன்பப்பட்டவர் என்பதையும் சிந்திப்போம் என்றால், அவருக்கு நன்றி கூறாமலும், அவரை நேசிக்காமலும் இருப்பது நமக்கு எப்படி சாத்தியமாகும்?

ஓ என் இனிய குழந்தாய், நீர் எனக்காக எவ்வளவு அதிகமாகத் துன்பப்பட்டீர் என்பதை அறிந்தும், நான் உமக்கு மிக நன்றியற்றவனாகவும், மிக அடிக்கடி உம்மை நோகச் செய்யவும் என்னால் முடிந்திருக்கிறது என்பது எப்படி சாத்திம்? ஆனால் நீர் சிந்துகிற இந்தக் கண்ணீர்த் துளிகளும், என் மீதுள்ள அன்பிற்காக நீர் தேர்ந்து கொண்ட தரித்திரமும், உமக்கு எதிராக நான் செய்த பாவங்கள் அனைத்திற்கும் மன்னிப்புப் பெறுவேன் என்னும் நம்பிக்கையை எனக்குத் தருகின்றன. என் சேசுவே, உமக்கெதிராக மிக அடிக்கடி என் முதுகைத் திருப்பிக் கொண்டதற்காக நான் மனஸ்தாபப்படுகிறேன்; என் சர்வேசுரனும், என் சர்வமுமான உம்மை அனைத்திற்கும் மேலாக நான் நேசிக்கிறேன்! என் தேவனே, இன்று முதல், நீரே என் ஒரே பொக்கிஷமாகவும், என் ஒரே நன்மையாகவும் இருப்பீர். **அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரோடு** சேர்ந்து, "உமது அன்பை எனக்குத் தாரும், உமது வரப்பிரசாதத்தை எனக்குத் தாரும், அப்போது நான் போதுமான அளவுக்கு செல்வமுள்ளவனாக இருப்பேன்" என்று நான் உம்மிடம் சொல்வேன். நான் உம்மைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்,

உம்மைத் தவிர வேறொன்றையும் நான் ஆசிக்கவில்லை. என் சேசுவே, என் வாழ்வே, என் நேசரே, நீர் மட்டுமே எனக்குப் போதுமானவராக இருப்பீர்.

II

நம் இரட்சகரின் முன்மாதிரிகையைப் பின்பற்றி, புனிதர்கள் அனைத்திலிருந்தும் தங்களை விலக்கிக் கொள்ளத் தேடினார்கள். தாமே ஏழையாயிருந்த சேசுநாதரைப் பின்செல்லும்படி தரித்திரத்தை நேசித்தார்கள். "கிறீஸ்துநாதரின் தரித்திரம் உலகின் அனைத்துப் பொக்கிஷங் களையும் விட அதிக செல்வமிக்கது" என்று **அர்ச். பெர்னார்ட்** கூறுகிறார். நாம் பரலோக செல்வங்களை சம்பாதிப்பதிலும், உலக செல்வங்களைப் புறக்கணிப்பதிலும் அது நம்மை ஏவித் தூண்டுகிறது. **"என் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவை அறிகிற உன்னதமான அறிவைப்பற்றி நான் எல்லாவற்றையும் நஷ்டமென்று மதிக்கிறேன். அவருக்காக எல்லாவற்றையும் இழந்து விட்டு, அவைகளைக் குப்பையென்றும் எண்ணுகிறேன்" (பிலி.3:8)** என்று அர்ச். சின்னப்பர் எழுதினார். சேசுநாதரின் வரப்பிரசாதத்தோடு ஒப்பிடுகையில் மற்ற அனைத்தையும் அவர் வெறும் நஷ்டமென்றும், குப்பையென்றும் மதித்தார். அர்ச். பிரான்சிஸ் போர்ஜியா சேசு சபையில் ஒரு தரித்திர வாழ்வைத் தழுவிக்கொள்வதற்காகத் தமது சொத்து சுகங்களையெல்லாம் துறந்தார். **அர்ச். பிரான்சிஸ் அசிசியார்** ஓர் ஏழைப் பிச்சைக்காரனைப் போலத் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்வதற்காக, தாம் அணிந்திருந்த சட்டையைக் கூடக் கழற்றித் தன் தந்தையிடம் திருப்பிக் கொடுத்தார். உடைமைகளின் மீது இச்சை கொள்பவன் ஒருபோதும் புனிதனாக மாட்டான் என்று **அர்ச். பிலிப் நேரியார்** கூறுகிறார். அது உண்மையில் அப்படித்தான் இருக்கிறது; ஏனெனில் இவ்வுலகத்தால் நிரம்பிய் இருக்கும் இருதயத்தில் தேவசிநேகத்திற்கு இடமில்லை. "நீ வெறுமையான இருதயத்தோடு வருகிறாயா?" என்பதுதான் பண்டைய காலத்தில், மடங்களில் சேர வருபவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வியாக இருந்தது. நீ ஒரு வெறுமையான இருதயத் தோடு வரவில்லை என்றால், கடவுளுக்கு முழுவதும் சொந்தமாய் இருக்க உன்னால் ஒருபோதும் முடியாது.

“ஏனெனில் எங்கே உன் பொக்கிஷம் உள்ளதோ, அங்கே உன் இருதயமும் இருக்கும்" (மத்.6 :21). ஒருவன் எதை அதிகமாக நேசித்து, அதிகமாக மதிக்கிறானோ, அதுதான் அவனுடைய பொக்கிஷமாக இருக்கிறது. ஒரு முறை, ஒரு செல்வந்தன் இறந்த போது, அர்ச். பதுவை அந்தோனியார் போதக மேடையிலிருந்து அந்த மனிதன் நரகத்திற்குத் தீர்ப்பிடப் பட்டான் என்று அறிவித்தார். தாம் கூறியதை எண்பிக்கும்படி அவன் தன் பணத்தையெல்லாம் வைத்திருந்த இடத்திற்குச் சென்று பார்க்கும்படி மக்களிடம் அவர் கூறினார். அவர்களும் சென்று பார்த்தபோது, உண்மையில் அவனுடைய இருதயம் இன்னும் உஷ்ணத்தோடு அவனது பணத்துக்கு நடுவில் இருந்ததை அவர்கள் கண்டார்கள்.

அர்ச். பவுலினுஸோடு சேர்ந்து, “செல்வந்தர்கள் தங்கள் செல்வங்களையும், அரசர்கள் தங்கள் அரசுகளையும் அனுபவிக்கட்டும். கிறீஸ்துவே என் உடைமை, என் இராச்சியம், என் மகிமை" என்று சொல்லக் கூடிய மனிதன் பேறுபெற்றவன். “எனக்கு உமது வரப்பிரசாதத்தோடு, உமது அன்பையும் தாரும். அப்போது நான் பெரும் செல்வந்தனாயிருப்பேன்" என்றார் அர்ச். இஞ்ஞாசியார். நாம் தேவ அன்னையாகிய கன்னிமாமரியிடம் தஞ்சமடையவும், கடவுளுக்குப் பின் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களை நேசிக்கவும் ஒருபோதும் தவறாதிருப்போமாக. தன்னை நேசிப்பவர்கள் அனைவரையும் அவர்கள் வரப்பிரசாதங்களால் வளப்படுத்துகிறார்கள். **“என்னை நேசிக்கின்றவர்களைச் செல்வந்தர் ஆக்கவும், அவர்களுடைய பொக்கிஷங்களை நிறைக்கும்படியாகவும் . . . ஆஸ்தியும், மகிமையும், மேலான செல்வமும், நீதியும் என்னோடு இருக்கின்றன." (பழ.8:21, 18).**

ஓ பாலகனாகிய என் தேவனே, நீர் வைக்கோலின் மீது குளிரால் நடுங்கிக் கொண்டும், என் பொருட்டு அழுது கொண்டும் இருப்பதை நான் காண்கிறேன். ஓ, உம்மை நேசிக்காமல் நான் எப்படி வாழ முடியும்? ஓ என் சர்வேசுரா, நீர் எனக்காக எவ்வளவு அதிகமாகத் துன்பப் பட்டிருக்கிறீர் என்பதை விசுவாசத்தால் நான் அறிந்திருந்தும், உம்மை இவ்வளவு அதிகமாக நோகச் செய்ய என்னால் எப்படி முடிந்தது! ஆனால் உம்மை வாதிக்கிற இந்த வைக்கோலும், நீர்

படுத்திருக்கிற இந்தப் பரிதாபமான முன்னிட்டியும், நீர் சிந்துகிற நேசமுள்ள கண்ணீரும், உம்மிடமிருந்து வெளிப்படும் மென்மையான அந்த அழுகையும்-- இவையெல்லாம், நான் மன்னிப்படைவேன் என்றும் என் எஞ்சிய வாழ்வு முழுவதும் உம்மை நேசிக்கத் தேவையான வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வேன் என்றும் நான் உறுதியாக நம்பச் செய்கின்றன. ஓ தேவ மகவே, நான் உம்மை நேசிக்கிறேன்! என்னை முழுவதும் உமக்குத் தருகிறேன். மரியாயே, இந்த மாபெரும் திருமகனின் மாபெரும் அன்னையே, அவரால் அனைவரிலும் அதிகமாக நேசிக்கப்பட்டவர்களே, அவரிடம் எனக்காக மன்றாடுங்கள்.

வியாழன்

சேசுவின் விண்ணேற்புத் திருநாள்

“எழுந்து வாரும் ஆண்டவரே, உமது இளைப்பாற்றியின் ஸ்தலத்திற்கு எழுந்து வாரும்."

I

உயிர்த்தெழுந்த இரட்சகரின் உரிமையுள்ள வீடு, ஆசீர்வதிக்கப் பட்டவர்களின் இல்லமாகிய பரலோகமே. ஆனால் சேசுநாதர் இன்னும் நாற்பது நாட்கள் இவ்வுலகில் தங்கிய் இருக்க விரும்பினார். இந்நாட்களில் அவர், தாம் பரலோகத்திற்கு ஆரோகணமாவதற்கு முன்பாக, தமது உயிர்ப்பில் தம் சீடர்களுக்குள்ள விசுவாசத்தை பலப்படுத்தவும், அவர்களுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் தரவும் மீண்டும் மீண்டும் அவர்களுக்குக் காட்சியளித்தார். இதனிடையே தேவதூதர்கள் தங்கள் அரசரைத் தங்கள் பரலோக நாட்டில் கொண்டிருக்க ஏக்கத்தோடு ஆசித்தார்கள். இதன் காரணமாக அவர்கள், **“எழுந்தருளி வாரும் ஆண்டவரே, உமது இளைப்பாற்றியின் ஸ்தலத்திற்கு எழுந்தருளி வாரும்" (சங்.131:8)** என்ற தாவீதின் வார்த்தைகளில் தொடர்ந்து அவரை அழைத்துக் கொண்டே இருந்தார்கள். வாரும் ஆண்டவரே, இப்போது மனிதர்களை நீர் மீட்டு இரட்சித்து விட்டதால், விரைந்து வாரும்; உமது இராச்சியத்திற்கு வந்து, எங்களோடு தங்கும்.

அந்த மகிமையான நேரம் எப்படி வந்து சேர்ந்து நம் திவ்ய இரட்சகர், சுமார் நூற்றிருபது சீடர்களோடு ஒலிவ மலையின் மீது ஏறிச் செல்கிறார் என்று பார். அதன்பின் தமது கரங்களை வானை நோக்கி உயர்த்தி, சேசுநாதர் அவர்களை ஆசீர்வதித்த பின், வெற்றி வீரராக, மாபெரும் மகிமை தம்மைச் சூழ்ந்திருக்க, வானங்களுக்குள் எழுந்தருளிச் செல்கிறார். ஓர் அரசன் தன் இராச்சியத்திற்குள் ஆடம்பரமான முறையில் நுழையும்போது, அவன் தன் தலைநகரத்தின் மதில் வாயில்கள் வழியாகக் கடந்து போவதில்லை, ஏனெனில் அவ்விழாவன்று அவனுக்கு வழிவிடும்படியாக, வாயில்கள் அகற்றப்படுகின்றன. இவ்வாறே சேசுகிறீஸ்துநாதர் இப்போது பரலோகத்திற்குள் நுழையும் வேளையில் சம்மனசுக்கள் கூடி நின்று: **“மன்னர்களே! உங்கள் கதவுகளை உயர்த்துங்கள்; நித்திய கபாடங்களே (வாசல்களே)! உயர்ந்து நில்லுங்கள்; மகிமையின் அரசர் உட்பிரவேசிப்பார்" (சங். 24:9)** என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

II

சேசுநாதர் நமக்காக மரிப்பதற்கு முன், மோட்சம் மூடப் பட்டிருந்தது. ஆனால் இன்று, ஆண்டவரே, கைதிகளின் மகிமை மிக்க ஒரு கூட்டத்தோடு, லிம்போவிலிருந்து வந்து, உம்மோடு மோட்சத்திற்குப் பறந்து செல்கிற ஆசீர்வதிக்கப்பட்ட, பெருந்திரளான ஆத்துமங்களோடு நீர் வானமண்டலங்களின்மீது எழுந்தருளிச் செல்கிறீர். “உன்னதத்தில் தேவரீர் ஆரோகணமாகி அடிமைப்பட்டவர்களைக் கூட்டிக்கொண்டு போனீர்" (சங்.67:16). தமது மரணத்தாலும், மகிமையுள்ள மோட்ச ஆரோகணத்தாலும் நம் இரட்சகர் தம்மை நேசிக்கிற அனைவருக்கும் மோட்சத்தைத் திறந்து வைத்திருக்கிறார்.

ஆ, மனிதர்களுக்காக மகிமையின் அரசரான சேசுநாதர் பரலோக இராச்சியத்தை வெற்றி கொள்ளும்படி எவ்வளவோ அதிகமான துன்பங்களை அனுபவித்த பின்னும், ஏராளமான மூடத்தனமுள்ள பாவிகள் எந்த மதிப்புமற்ற இன்பங்களுக்காகவும், ஒரு வெறும் ஒன்றுமில்லாமைக்காகவும் மோட்சத்தை

வேண்டாமென்று தள்ளி விடுவதும், மோட்சப் பேரின்பத்தைத் தள்ளி விட்டு, நரக வாதைகளை ஏற்றுக் கொள்வதும் எவ்வளவு புலம்புதலுக்குரியது!

நம் மத்தியஸ்தரான சேசுநாதரின் பேறுபலன்களின் வழியாக, நாம் ஞானஸ்நானத்தில் கடவுளின் பிள்ளைகளாக ஆகும் வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டோம். **"அப்படியே நாம் பிள்ளைகளென்றால், சுதந்தரக்காரராகவும் இருக்கிறோம். அதாவது: சர்வேசுரனுடைய சுதந்தரக்காரரும், கிறீஸ்துநாதருக்கு உடன் சுதந்தரக்காரராகவும் இருக்கிறோம்."** ஆனால் அர்ச். சின்னப்பர் தொடர்ந்து: "**ஆயினும் அவரோடுகூட மகிமையடையும்படிக்கு அவரோடுகூடப் பாடுப்பட்டால்தான் அப்படி இருப்போம்"** என்கிறார் **(உரோ.8:17).** அதன்பின் பரலோக நம்பிக்கையால் பலப்படுத்தப்பட்டு, தைரியத்தோடு துன்புறும்படி நம் அனைவருக்கும் அறிவுறுத்துகிறார். **"இக்காலத்தின் துன்ப துரிதங்கள் இனி நம்மிடத்தில் வெளிப்படப்போகிற மகிமைக்குச் சரிதகைமையானதல்ல என்று எண்ணுகிறேன்" (உரோ.8:18).** தன் கந்தைத் துணிகளைக் கொடுத்து மகிழ்ச்சியோடு ஒரு பெரிய இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பாத அளவுக்கு மூடத்தனமுள்ள பிச்சைக்காரன் ஒருவனுமில்லை.

ஓ, என் சேசுவே, என் பாவங்களை நான் பார்க்கும்போது, மோட்சத்தை நாட வெட்கப்பட்டு நிற்கிறேன். ஆனால் சிலுவையின் மீது தேவரீரை அடியேன் காணும்போது, நான் அறிந்துள்ளபடி, என் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவும், எனக்கு மோட்சத்தைப் பெற்றுத் தரவுமே நீர் மரித்தீர் என்பதால், மோட்சத்தை அடைவேன் என்று நம்புவதை நிறுத்தி விட என்னால் இயலாது. ஆ, என் சேசுவே, உம்மை இழந்து போகும் எல்லா ஆபத்திலிருந்தும் என்னை விடுவிக்கும் அந்நாள் என்று வந்து சேரும்? ஓ மரியாயே, மோட்ச இராக்கினியே, உங்கள் பரிந்துரை கடவுளின் திருமுன் முழு வல்லமையுள்ளது. அடியேன் உங்களில் என் நம்பிக்கையை வைக்கிறேன்.

பரலோகமே! ஓ பரலோகமே! ஓ என் ஆண்டவரே, உம்மை இழந்து போகும் அச்சமின்றி, தேவரீரை நான் எப்போது

முகமுகமாய்த் தரிசித்து, உம்மைத் தழுவிக் கொள்வேன்!

பரலோக ஆரோகணத்திற்குப் பின்வரும் வெள்ளி

தேவசிநேகம் இருதயத்தைப் பற்றியெரியச் செய்யும் நெருப்பாக இருக்கிறது.

“துயி ஆமோரிஸ் இன் ஏயிஸ் இஞ்ஞெம் ஆக்செந்தே.''

I

கபரிசுத்த ஆவியானவர் பிதாவும், சுதனும் ஒருவரையயாருவர் நேசிக்கும் அவர்களுடைய பரஸ்பர நேசத்தின் வழியாக அவர்கள் இருவரிடமிருந்தும் புறப்பட்டு வருகிறார் என்று நம் விசுவாசத்தில் நாம் அறிந்திருக்கிறோம். எனவே நம் ஆத்துமங்களுக்குள் ஆண்டவர் ஊற்றுவதும், எல்லாக் கொடைகளிலும் மேலான கொடையுமாகிய தேவசிநேகக் கொடை குறிப்பாக பரிசுத்த ஆவியானவரிடமிருந்தே நமக்கு வருகிறது என்றும் நாம் அறிந்திருக்கிறோம். **“நமக்கு அளிக்கப் பட்ட இஸ்பிரீத்துசாந்துவினாலே தேவசிநேகம் நம் இருதயங்களில் எப்பக்கத்திலும் பொழியப் பட்டிருக்கிறது'' (உரோ.5:5)**. ஆகவே இந்த நவநாளில் தேவசிநேகத்தை நாம் ஆசித்துத் தேடும்படியாகவும், பக்தி முயற்சிகளாலும், குறிப்பாக பக்திப்பற்றுதலுள்ள ஜெபத்தாலும் அதை அடைந்துகொள்ள உழைக்கும்படியாகவும், தேவசிநேகத்தின் உன்னதத் தன்மையையும், மதிப்பையும் நாம் விசேஷமாக தியானிப்போமாக. ஏனெனில், **“உங்கள் பரம பிதாவானவர் தம்மை வேண்டிக் கொள்கிறவர்களுக்கு ... நல்ல இஸ்பிரீத்துவைத் தந்தருள்வார்'' (லூக்.11:13)** என்று சேசுநாதர் கூறிய் இருக்கிறார்.

பழைய திருச்சட்டதகில், தமது பீடத்தின் மீது நெருப்பு தொடர்ந்து எரிந்துகொண்டிருக்க வேண்டுமென்று சர்வேசுரன் கட்டளையிட்டார். **“அக்கினியோ எப்போதும் பீடத்தில் எரியும்''**

(லேவி.6:12). நம் ஆத்துமங்கள் கடவுளின் பீடங்களாக இருக்கின்றன, அவற்றின் மீது தமது அன்பு எப்போதும் எரிந்து கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்று அர்ச். கிரகோரியார் கூறுகிறார். இதன் காரணமாக, நித்தியப் பிதா, தமது திருமகனின் மரணத்தால் நாம் இரட்சிக்கப்படுமாறு, அவரை நமக்குத் தந்ததோடு மட்டும் திருப்தியடையாமல், பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களில் தங்கியிருந்து, அவற்றைத் தமத அன்பால் தொடர்ந்து பற்றியெரியச் செய்யும்படியாக, அவரையும் நமக்குத் தர சித்தங்கொண்டார். இந்தப் பரிசுத்த நேசத்தால் நம் இருதயங்களைப் பற்றியெரியச் செய்வதற்காகவே தாம் இவ்வுலகிற்கு வந்ததாகவும், அது இப்போதே பற்றியெரிவதைக் காண்பதை விட வேறு எதையும் தாம் விரும்பவில்லை என்றும் சேசுநாதர்தாமே அறிவித்தார்: **"நான் பூமியிலே அக்கினியைப் போட வந்தேன். அது பற்றியெரிய வேண்டும் என்பதல்லாமல், வேறெதை விரும்புகிறேன்?" (லூக்.12:49)**. இதனாலேயே இவ்வுலகில் தாம் மனிதர்களிடமிருந்து பெறும் காயங்களையும், நன்றியற்றதனத்தையும் மறந்து, தாம் பரலோகத்திற்கு ஏறிச் சென்றவுடன், அவர் நம் மீது தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். ஓ உத்தம நேசமுள்ள இரட்சகரே, தேவரீர் உமது திருப்பாடுகளிலும், அவமானங்களிலும் மட்டுமின்றி, உமது பரலோக மகிமையிலும் கூட எங்களை நேசிக்கிறீரே சுவாமி!

ஓ என் தேவனே, எனக்காக மாபெரும் காரியங்களைச் செய்திருக்கிற உமக்காக நான் இது வரை எதுவும் செய்ததில்லை! ஐயோ, உம் திருவாயினின்று என்னை நீர் உமிழ்ந்து விடவே என் வெதுவெதுப்பு என்னைத் தகுதியுள்ளவனாக ஆக்கிய் இருக்கிறது! ஓ பரிசுத்த ஆவியானவரே, குளிராய் இருக்கிறதை உஷ்ணப்படுத்தும், என் வெதுவெதுப்பிலிருந்து என்னை விடுவித்து, உம்மை மகிழ்விக்கும் ஒரு பெரும் ஆசையை என்னில் மூட்டியருளும்.

II

இதனால்தான் பரிசுத்த ஆவியானவர் நெருப்புமயமான நாவுகளின் வடிவத்தில் தோன்றுவதைத் தேர்ந்துகொண்டார்.

"அக்கினிமயம் போன்ற பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி, அவர்களில் ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கின" (அப்.நட.2:3). இதனாலேயே பரிசுத்த திருச்சபை, ***"ஆண்டவரே, எங்கள் ஆண்டவராகிய சேசுநாதர் பூமியின் மீது போட வந்ததும், அது பற்றியெரிய வேண்டுமென்று அவர் ஏக்கத்தோடு ஆசித்ததுமான அக்கினியைக் கொண்டு உம்முடைய பரிசுத்த ஆவியானவர் எங்களைப் பற்றியெரியச் செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்"*** என்று நாம் ஜெபிக்கும்படி கற்பிக்கிறது. இதுவே புனிதர்கள் தங்கள் பகைவர்களை நேசிப்பது, அவமானத்தை ஆசையோடு தேடுவது, உலக உடைமைகள் அனைத்தையும் துறப்பது, வாதைகளையும், மரணத்தையும் கூட மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது போன்ற பெரிய காரியங்களைச் செய்ய அவர்களைத் தூண்டிய பரிசுத்த நெருப்பாக இருந்தது. நேசத்தால் ஒருபோதும் சோம்பலாக இருக்கவே முடியாது; போதும் என்று அது ஒருபோதும் சொல்லாது. கடவுளை நேசிக்கிற ஆத்துமம், தன் நேசருக்காக எவ்வளவு அதிகமாகச் செய்கிறதோ, அதை விட அதிகமாக, அவரைப் பிரியப்படுத்துவதும், அவரது அன்பை இன்னும் அதிகமாக ஈர்த்துக் கொள்வதுமான செயல்களைச் செய்ய ஆசை கொள்கிறது. இந்தப் பரிசுத்த நேசம் மன ஜெபத்தில் தூண்டப்படுகிறது. **"அதை நினைக்க நினைக்க (என் மனதில்) அக்கினி மூண்டது" சங்.38:3).** ஆகவே, தேவசிநேக நெருப்பால் பற்றியெரிய நாம் ஆசித்தால், ஜெபத்தில் நாம் இன்பம் காண வேண்டும். தெய்வீக நேசப் பற்றுதலின் சுடர் தூண்டப்படுகிற ஆசீர்வதிக்கப்பட்ட தீச்சுளை அதுவே.

ஆண்டவரே, இப்போது சுய திருப்தி, சுய மகிழ்ச்சி முழுவதையும் நான் துறந்து விடுகிறேன். உம்மை மனநோகச் செய்வதை விட உயிர் துறப்பதற்குநான் ஆசையாக இருக்கிறேன். நீர் அக்கினி மயமான நாவுகளின் வடிவத்தில் தோன்றினீர்; என் நாவை உம்மை நோகச் செய்வதற்கு இனி ஒருபோதும் நான் பயன்படுத்தாதபடி அதை உமக்கு அர்ப்பணிக்கிறேன். உம்மை வாழ்த்திப் போற்றும்படி நீர் எனக்கு நாவைத் தந்தீர். நானோ, உம்மை நோகச் செய்யவும், உமக்கு எதிரான குற்றங்களுக்குள்

மற்றவர்களையும் இழுத்து வரவுமே என் நாவைப் பயன்படுத்திய் இருக்கிறேன்! இந்தக் காரியங்களுக்காக என் முழு ஆத்துமத்தோடு நான் மனஸ்தாபப்படுகறேன். ஓ, தம் இவ்வுலக வாழ்வில் தமது நாவைக் கொண்டு மிக அதிகமாக உம்மை மகிமைப்படுத்திய சேசுநாதரின் அன்பிற்காக, இன்று முதல், உம்மை எப்போதும் போற்றித் துதிப்பதன் மூலமும், அடிக்கடி உமது உதவியைக் கேட்டு மன்றாடுவதன் மூலமும், உமது நன்மைத் தனத்தையும், உமக்குத் தகுதியுள்ள அளவற்ற நேசத்தைப் பற்றியும் பேசுவதன் மூலமும், நானும் உம்மை மகிமைப்படுத்த எனக்கு வரமருளும். என் இராஜரீக நன்மைத்தனமே, நான் உம்மை நேசிக்கிறேன்; ஓ அன்பின் தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன்! மரியாயே, பரிசுத்த ஆவியானவரின் மகா பிரியத்திற்குரிய மணவாட்டியே, இந்தப் பரிசுத்த நெருப்பை எனக்காகப் பெற்றுத் தாருங்கள்.

சனி

தேவசிநேகம் ஆத்துமத்தை ஒளிர்விக்கும் ஒளியாக இருக்கிறது.

"ஓ லுக்ஸ் பெயாத்திஸிமா."

I

நம்மில் ஆதாமின் பாவத்தின் மிக மோசமான விளைவுகளில் ஒன்று, மனதை இருட்டாக்கிய ஆசாபாசங்களைக் கொண்டு நம் அறிவை அது குருடாக்கியது ஆகும். ஓ, எந்த ஓர் ஆசாபாசத்தால் ஆளப்படத் தன்னை அனுமதிக்கும் ஆத்துமம் எவ்வளவு பரிதாபத்திற்குரியது! ஆசாபாசம் என்பது ஒரு புகை, அது ஒரு மூடுதிரை, நாம் சத்தியத்தைக் காணாதபடி அது நம்மைத் தடுத்து விடும். எது தீமை என்று அறியாதவன் தீமையிலிருந்து எப்படி விலகியோடுவான்? தீமையின் இந்த மறைவான தன்மை, நம் பாவங்கள் அதிகரிக்கும் அளவுக்கேற்ப, தானும் அதிகரிக்கிறது. ஆனால் தமது தெய்வீக ஒளிக்கதிர்களோடு, மகா உன்னத, ஆசீர்வதிக்கப்பட்ட ஒளியானவர் என்று அழைக்கப்படுகிற பரிசுத்த ஆவியானவர் தம்மை நேசிக்கும்படி நம் இருதயங்களைப்

பற்றியெரியச் செய்வது மட்டுமின்றி, நம் இருளையும் சிதறடித்து, சகல உலகக் காரியங்களின் வெறுமையையும், நித்திய நன்மைகளின் அளவற்ற மதிப்பையும், இரட்சணியத்தின் முக்கியத்துவத்தையும், வரப்பிரசாதத்தின் மதிப்பையும், கடவுளின் நன்மைத்தனத்தையும், நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள அவர் தகுதிபெற்றுள்ள அளவற்ற நேசத்தையும், அவர் நமக்குக் காண்பித்துள்ள அளவற்ற நேசத்தையும் நமக்கு வெளிப்படுத்தவும் செய்கிறார்.

ஓ பரிசுத்த ஆவியானவரே, தெய்வீக தேற்றரவாளரே, பிதாவாகிய சர்வேசுரனையும், சுதனாகிய சர்வேசுரனையும் நான் ஆராதிப்பது போல், என் மெய்யான சர்வேசுரனாக உம்மையும் நான் ஆராதிக்கிறேன். உமது வரப்பிரசாதத்தாலும், உமது நேசத்தாலும் என்னை சந்தித்தருளும்; பரம திவ்ய இரகசியங்களைப் புரிந்து கொள்ள என்னால் இயலும்படியாகவும், பரலோகக் காரியங்களின் காட்சிதியானத்தால், என் நினைவுகளையும், நாட்டங்களையும் இந்த நீச உலகத்தின் வீணான சகல காரியங்களிலிருந்தும் நான் விலக்கும் படியாகவும், உமது புத்தியாகிய கொடையை எனக்குத் தந்தருளும்படியாக உம்மை மன்றாடுகிறேன்.

II

“மிருக சார்பான மனிதன் தேவ ஆவியானவர் சம்பந்தமான காரியங்களைக் கண்டுபிடிக்க மாட்டான்" (1 கொரி. 2:14). மனிதன், இவ்வுலக இன்பங்களால் கிரகிக்கப்பட்டவனாக, இந்த உண்மைகளை மிகச் சிறிதளவே அறிந்திருக்கிறான். இதன் காரணமாக, தான் வெறுக்க வேண்டியதை மகிழ்ச்சியற்ற விதத்தில் அவன் நேசிக்கிறான், தான் நேசிக்க வேண்டியதையோ வெறுக்கிறான். “ஓ அறியப்படாத நேசமே! ஓ நேசிக்கப்படாத நேசமே!" என்று வியந்து கூறுகிறாள் **அர்ச். பாஸ்ஸி மரிய மதலேனம்மாள்**. இதனாலேயே அர்ச். தெரேசம்மாளும், கடவுள் அறியப்படாததாலேயே அவர் நேசிக்கப்படுவதில்லை என்றாள். ஆகவே புனிதர்கள் எப்போதும் கடவுளிடமிருந்து ஞான வெளிச்சத்தைத் தேடினார்கள். “உம்முடைய ஞானக் கதிர்களை வரவிடும்; என் இருளை ஒளிர்வித்தருளும், என்

கண்களைத் திறந்தருளும்." ஆம், ஏனெனில் ஒளி இல்லாவிடில், ஆபத்தான மலைச் சரிவுகளில் விழுவதைத் தவிர்க்க இயலாது, கடவுளையும் காண இயலாது.

ஓ பரிசுத்த, தெய்வீக ஆவியானவரே, நீர் மெய்யான சர்வேசுரனாக, பிதாவோடும், சுதனோடும் ஒரே சர்வேசுரனாக இருக்கிறீர் என்று நான் விசுவசிக்கிறேன். நீரே அந்த ஞான ஒளிக் கதிர்களை எனக்குத் தந்தவர் என்று ஒப்புக்கொண்டு அடியேன் உம்மை ஆராதிக்கிறேன். அந்த ஒளியைக் கொண்டு, உம்மை நோகச் செய்ததன் மூலம் நான் செய்துள்ள தீமையையும், உமத்மை நேசிக்க எனக்குள்ள கடமையையும் நான் கண்டுபிடிக்கச் செய்தீர். இதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்மை நோகச் செய்ததற்காக நான் மிகவும் மனம் நொந்து மெத்த மனஸ்தாபப்படுகிறேன். என் இருளில் உம்மால் கைவிடப்படவே நான் தகுதியுள்ளவனாக இருக்கிறேன். ஆயினும், நீர் இன்னும் என்னைக் கைவிடவில்லை என்பதை நான் உணர்கிறேன். ஓ நித்திய ஆவியானவரே, என்னைத் தொடர்ந்து ஒளிர்வித்து, இன்னும் அதிகமதிகமாக உமது அளவற்ற நன்மைத்தனத்தை நான் அறியச் செய்து, எதிர்காலத்தில் என் முழு இருதயத்தோடு உம்மை நேசிக்க எனக்குப் பலம் தந்தருளும். உமது அன்பால் மேற்கொள்ளப்பட்டு, வேறு யாரையுமன்றி உம்மை மட்டுமே நேசிக்கும்படி நான் நெருக்கப்படுமாறு, வரப்பிரசாதத்திற்கு மேல் வரப்பிரசாதத்தைத் தந்தருளும். சேசுநாதரின் பேறுபலன்களின் வழியாக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; என்னை விட அதிகமாக உம்மை நேசிக்கிறேன்; என் இராஜரீக நன்மைத்தனமாகிய உம்மை நான் நேசிக்கிறேன். முழுவதும் உமக்குச் சொந்தமாய் இருக்க நான் ஆசிக்கிறேன்; என்னை ஏற்றுக் கொள்ளும், இனி ஒருபோதும் உம்மை விட்டுப் பிரிய என்னை அனுமதியாதேயும். மரியாயே, என் மாதாவே, எப்போதும் உங்கள் பரிசுத்த பரிந்துரையால் எனக்கு உதவி செய்யுங்கள்.

பரலோக ஆரோகணத்திற்குப் பின் எட்டு நாட்களுக்குள் வரும் ஞாயிறு

தேவசிநேகம் தேற்றரவு தருகிற நீரூற்றாக இருக்கிறது.

“ரிகா குவோத் எஸ்த் ஆரிதும்.''

I

அன்பானது உயிருள்ள நீரூற்று, நெருப்பு, சிநேகம் என்று அழைக்கப்படுகிறது. ஃபோன்ஸ் வீவுஸ், இக்னிஸ் காரித்தாஸ், நம் திவ்ய இரட்சகர் சமாரியப் பெண்ணிடம்: **“நான் கொடுக்கும் தண்ணீரில் பானம்பண்ணுகிறவனுக்கோ, என்றென்றைக்கும் தாகமுண்டாகாது'' என்றார் (அரு.4:13).** தேவ அன்பு நம் தாகத்தைத் தணிக்கும் நீராக இருக்கிறது; ஏனெனில் கடவுளைத் தன் முழு இருதயத்தோடு உண்மையாகவே நேசிக்கிறவன் வேறு எதையும் தேடுவதில்லை, ஆசிப்பதுமில்லை, ஏனெனில் கடவுளில் அவன் ஒவ்வொரு நன்மையையும் கண்டடைகிறான். இதன் காரணமாக, கடவுளைச் சொந்தமாகக் கொண்டிருப்பதில் மகிழ்ந்து, அவன் அடிக்கடி அக்களிப்போடு: “என் தேவனே! என் சர்வமுமே!'' என்கிறான். எல்லாம் வல்ல சர்வேசுரன் சிருஷ்டிகளிடமிருந்து வரும் கடந்து போகிற நீச இன்பங்களைத் தேடி, அளவற்ற நன்மைத் தனமும், முழு மகிழ்ச்சியின் ஊற்றுமாகிய தம்மை விட்டுப் பிரிந்து செல்லும் எண்ணற்ற மனிதர்களைப் பற்றி முறையிடுகிறார்: **“ஜீவ தண்ணீரின் ஊற்றாகிய நம்மைக் கைநெகிழ்ந்தார்கள்; தண்ணீரை நிறுத்த இயலாத வெடிப்பு நிறைந்த கிணறுகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்'' (எரே.2:13).** இதனிடையே, நம்மை நேசிப்பவரும், நாம் மகிழ்ச்சியா யிருப்பதைக் காண ஆசிப்பவருமான சர்வேசுரன், **“தாகமாய் இருக்கிற எவனும் என்னிடம் வருவானாக'' என்று அறிவிக்கிறார் (அரு.7 :37).** மகிழ்ச்சியாய் இருக்க விரும்புகிறவன், என்னிடம் வருவானாக, நான் பரிசுத்த ஆவியானவரை அவன் மீது பொழிவேன். அவர் அவனை இவ்வுலகிலும், மறுவுலகிலும் ஆசீர்வதிக்கப்பட்டவனாக ஆக்குவார்.

தோமினே, தா மீக்கி ஆங்க் ஆக்குவாம்! **ஆண்டவரே, அந்தத் தண்ணீரை எனக்குத் தாரும்! (அரு.4:15).** ஓ சேசுவே, அந்த சமாரியப் பெண்ணோடு சேர்ந்து நானும், உமது அன்பின் இந்தத் தண்ணீரை எனக்குத் தரும்படி உம்மை மன்றாடுகிறேன். அது பூலோகத்தை நான்

மறக்கவும், அளவில்லாத சிநேகத்துக்கு முற்றும் உரியவராகிய உமக்காக மட்டுமே வாழவும் செய்து விடும். ***ரிகா குவோத் எஸ்த் ஆரிதாம்!*** என் ஆத்துமம் தரிசான நிலமாக இருக்கிறது. அது பாவக் களைகளையும், முட்களையும் மட்டுமே முளைப்பிக்கிறது. ஓ, உமது பரிசுத்த வரப்பிரசாதத்தால் அதற்கு நீர் பாய்ச்சும், அப்போது அது மரணத்தில் இவ்வுலகை விட்டுப் பிரியுமுன், உமது மகத்துவத்திற்கு உகந்த கனிகளைத் தரும்.

II

ஆகவே, சேசுநாதரின் விசுவாசம் கொண்டு, அவரை நேசிப்பவன் எவ்வளவு அதிக வரப்பிரசாதங்களைக் கொண்டு வளப்படுத்தப் படுவான் என்றால், அவனுடைய இருதயத்திலிருந்து பரிசுத்த புண்ணியங்களின் நீரூற்றுகள் பீறிட்டுப் புறப்படும். அவை அவனது உயிரைப் பாதுகாப்பது மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் உயிரளிக்கும். உண்மையில் இந்தத் தண்ணீர் பரிசுத்த ஆவியானவர்தான், அது, தமது பரலோக ஆரோகணத்திற்குப் பிறகு தாம் பரலோகத்திலிருந்து அனுப்புவதாக சேசுநாதர் வாக்களித்த, நிலையான நேசம்தான். **“தம்மை விசுவசிக்கிறவர்கள் அடையப் போகிற இஸ்பீரித்துசாந்துவைக் குறித்தே இதைத் திருவுளம் பற்றினார். ஏனெனில் சேசுநாதர் இன்னும் மகிமைப்படாமல் இருந்ததால், இஸ்பிரீத்து சாந்துவானவர் இன்னும் தந்தருளப் படாதிருந்தார்'' (அரு.7:39).**

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீருள்ள வாய்க்கால்களைத் திறக்கும் திறவுகோல் பரிசுத்த ஜெபமே. அது, “கேளுங்கள், கொடுக்கப்படும்'' என்ற வாக்குறுதியின் பலனாக நன்மையான காரியங்கள் அனைத்தையும் பெற்றுத் தருகிறது. நாம் பலவீனர்களாகவும், குருடர்களாகவும், நீசப் பாவிகளாகவும் இருக்கிறோம். ஆனால் ஜெபம் நமக்கு பலத்தையும், ஒளியையும், செல்வத்தையும், மகிழ்ச்சியையும் பெற்றுத் தரும். “ஜெபம் ஒன்றே ஒன்றுதான் எனினும், அது எல்லாவற்றையும் செய்ய வல்லது'' என்று தியோடோரே கூறுகிறார். ஜெபிக்கிறவன், தான் கேட்கும்

அனைத்தையும் பெற்றுக்கொள்கிறான். கடவுள் தமது வரப்பிரசாதங்களை நமக்குத் தர ஆசிக்கிறார், ஆனால் அவற்றிற்காக நாம் ஜெபிக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்.

ஓ, ஜீவ தண்ணீரின் ஊற்றே, ஓ இராஜரீக நன்மைத்தனமே, உமது அன்பிலிருந்து என்னைப் பிரித்த இவ்வுலகின் கெட்டுப் போன தண்ணீர்களுக்காக எவ்வளவு அடிக்கடி நான் உம்மை விட்டு விலகி ஓடி இருக்கிறேன்! ஓ, உம்மை நோகச் செய்வதை விட நான் சாவதாயிருந்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்! ஆனால் எதிர் காலத்தில் வேறு எதையுமன்றி, என் தேவனாகிய உம்மை மட்டுமே நான் தேடுவேன். எனக்கு உதவி செய்யும், எப்போதும் நான் உமக்குப் பிரமாணிக்கமாய் இருக்கச் செய்தருளும். மரியாயே, என் நம்பிக்கையே, உங்கள் பரிசுத்த பாதுகாவலின் கீழ் என்னை எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள்.

திங்கள்

தேவசிநேகம் ஆன்மாவை வளப்படுத்தும் பனித்துளியாக இருக்கிறது.

“இன் ஏஸ்து தெம்பேரியெஸ்; துல்ச்சே ரெஃப்ரிஜேரியும்."

I

தேவசிநேகம் ஆத்துமத்தை வளப்படுத்தும் பனித்துளியாக இருக்கிறது. இவ்வாறே ஜெபிக்கும்படி பரிசுத்த திருச்சபை நமக்குக் கற்பிக்கிறது: “பரிசுத்த ஆவியானவர் பொழியப் படுவது நம் இருதயங்களைச் சுத்திகரித்து, அவரது பனித் துளி உள்ளரங்கமாகத் தெளிக்கப் படுவதால், அவற்றை வளப்படுத்துவதாக." அன்பு நம் நல்ல ஆசைகளையும், நம் பரிசுத்த நோக்கங்களையும், நம் ஆத்துமங்களின் நற்செயல்களையும் வளப்படுத்துகிறது; இவை பரிசுத்த ஆவியானவரின் வரப்பிரசாதம் நம்மில் விளையச் செய்கிற மலர்களாகவும், கனிகளாகவும் இருக்கின்றன. நேசம் தீய ஆசைகள் மற்றும் சோதனைகளின் வெப்பத்தைக் குளிர்விப்பதாலும், அது பனித்துளி என்று அழைக்கப்படுகிறது. இதன் காரணமாகவே பரிசுத்த

ஆவியானவரும், "அதீத வெப்பத்தில் உபசாந்தியும், நம் துக்கத்தில் ஆறுதலுமானவர் - இன் ஏஸ்து தெம்பேரியெஸ்; துல்ச்சே ரெஃஃப்ரிஜேரியும்" என்று அழைக்கப்படுகிறார்.

ஓ பரிசுத்த, தெய்வீக ஆவியானவரே, நான் இனி எனக்காக வாழ மாட்டேன்; எனக்கு எஞ்சிய் இருக்கிற வாழ்நாட்களை உம்மை நேசிப்பதிலும், உம்மை மகிழ்விப்பதிலும் நான் செலவிடுவேன். இது காரணமாக, ஜெபத்தின் கொடையை எனக்குத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறேன். என் இருதயத்திற்குள் வந்து, நான் ஜெபிக்க வேண்டிய முறையை எனக்குக் கற்பித்தருளும். ஞான வறட்சி அல்லது சோர்வின் காலத்தில் நான் ஜெபத்தைக் கைவிட்டு விடாதிருக்க எனக்குப் பலம் தாரும்; ஜெப உணர்வை, அதாவது, உமது மிகவும் உகந்த முறையில் ஜெபிப்பதும், இத்தகைய ஜெபங்களை உமக்கு உகந்த விதத்தில் ஒப்புக்கொடுப்பதுமான வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும்.

II

இந்தப் பனித்துளி நாம் ஜெபிக்கும் நேரத்தில் நம் இருதயங்களுக்குள் இறங்குகிறது. ஒரு கால்மணி நேர ஜெபம் எத்தகைய வெறுப்பையும், கோபத்தையும், ஒழுங்கற்ற அன்பையும், அவை எவ்வளவு தீவிரமானவையாக இருந்தாலும், அணைப்பதற்குப் போதுமானது: **"அவர் என்னைத் திராட்ச இரச அறைக்கு அழைத்துச் சென்றார்; என்னில் தேவசிநேகத்தை ஒழுங்குபடுத்தினார்" (உந்.சங். 2:4).** இந்தத் திராட்சை இரச உக்கிராண அறை பரிசுத்த தியானம் ஆகும். அங்கே நேசமானது எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளை நாம் நேசிக்கும்படியாகவும், நம்மைப் போலவே நம் அயலாரையும் நேசிக்கும்படியாகவும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. கடவுளை நேசிக்கிறவன் ஜெபத்தை நேசிக்கிறான்; ஜெபத்தை நேசிக்காதவனுக்குத் தன் ஆசாபாசங்களை வெல்வது ஒருபோதும் சாத்தியமாயிராது.

ஓ என் தேவனே, என் பாவங்களால் நான் தொலைந்து போனேன். ஆனால் இப்போது நீர் எனக்குக் காண்பித்துள்ள

உபகாரத்திலிருந்து, நீர் என் அர்ச்சிப்பையும், இரட்சிப்பையும் விரும்புகிறீர் என்று நான் காண்கிறேன்; உம்மை நான் மகிழ்விக்கும்படியாகவும், உமது அளவற்ற நன்மைத்தனத்தை மிகுந்த ஆவலோடு நேசிக்கும்படியாகவும், நான் நிச்சயமாக பரிசுத்தமடைய ஆசிக்கிறேன். என் இராஜரீக நன்மையே, என் நேசரே, என் சர்வமே, நான் உம்மை நேசிக்கிறேன், உம்மை நேசிப்பதால், என்னை முழுமையும் உமக்குத் தருகிறேன். ஓ பாக்கியவதியாகிய கன்னி மாமரியே, என்னைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

செவ்வாய்

தேவசிநேகம் மன உற்சாகத்தை மீட்டுத் தரும் இளைப்பாற்றியாக இருக்கிறது.

“இன் லாபோரே ரெக்குய்யெஸ்; இன் ஃப்ளேத்து ஸோலாத்ஸியும்."

I

தேவசிநேகம் உழைப்பில் ஓய்வு என்றும் துக்கத்தில் ஆறுதல் என்றும் அழைக்கப்படுகிறது. அன்பு உடல், மன உற்சாகத்தை மீண்டும் தரும் இளைப்பாற்றியாக இருக்கிறது. ஏனெனில் அன்பின் முதன்மையான விளைவு நேசரின் சித்தத்தை நேசிக்கப்படுபவரின் சித்தத்தோடு ஐக்கியப்படுத்துவது ஆகும். கடவுளை நேசிக்கும் ஓர் ஆன்மாவுக்கு, தான் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு அவமதிப்பிலும், தான் அனுபவிக்கும் ஒவ்வொரு துயரத்திலும், தான் சந்திக்கும் ஒவ்வொரு இழப்பிலும், தன் நேசரின் திருச்சித்தத்தாலேயே இது நிகழ அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற அறிவு அது அமைந்த மனதோடு இருப்பதற்கு இருப்பதற்குப் போதுமானது. **“என் சர்வேசுரனுடைய திருச்சித்தம் இதுவே"** என்று சொல்லிக் கொண்டு, எல்லாத் துன்பங்களிலும், பகைமைகளிலும் அது சமாதானமும், திருப்தியும் அடைகிறது. இது புலனின்பங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட சமாதானமாக இருக்கிறது**. “சகல புத்தியையும் கடந்த தேவ சமாதானம்'' (பிலி.4:7).** அர்ச். பாஸ்ஸி

மரிய மதலேனம்மாள், “இது கடவுளின் சித்தம்'' என்று மட்டும் சொல்வதால், உடனடியாக மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டாள்.

ஓ என் தேவனே, எவ்வளவு அடிக்கடி என் சொந்த சித்தத்தைப் பின்பற்றுவதன் பொருட்டு, நான் உம் திருச்சித்தத்தை எதிர்த்துப் புறக்கணித்திருக்கிறேன்! மற்ற எல்லாத் தீமைகளுக்கும் மேலாக இந்தத் தீமைக்காக நான் துக்கப்படுகிறேன். ஆண்டவரே, இந்நாள் முதல் என் முழு இருதயத்தோடும் உம்மை நேசிக்க நான் ஆசிக்கிறேன்.

II

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் சிலுவையைச் சுமந்து செல்ல வேண்டும்; ஆனால் சிலுவை அதை இழுத்துச் செல்பவர்களுக்குக் கடினமானது, ஆனால் அதைத் தழுவிக் கொள்பவர்களுக்கு அது எளிதானது என்று **அர்ச். தெரேசம்மாள்** கூறுகிறாள். எப்படி அடிப்பது என்றும், எப்படி குணமாக்குவது என்றும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். **“அவரே காயப் படுத்துகிறார், அவரே குணமாக்குகிறார், அவரே அடிக்கிறார், அவரது கரங்கள் குணப் படுத்துகின்றன'' (**யோப் 5:18) என்று பரிசுத்த யோப் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர், தமது இனிய அபிஷேகத்தால், ஒவ்வொரு அவமானத்தையும், வாதையையும் இனியதாகவும், சுகமானதாகவும் ஆக்குகிறார். **“ஆம் பிதாவே, இதுவே உமக்குப் பிரியம் என்பதால், அப்படியே ஆகக்கடவது'' (மத்.11:26).** நமக்கு நேரிடும் ஒவ்வொரு துன்பத்திலும் நாமும் இப்படியே சொல்ல வேண்டும்: “ஆண்டவரே, இதுவே உமக்குப் பிரியம் என்பதால், அப்படியே ஆகக்கடவது.'' ஏதாவது ஓர் உலகத்தன்மையான பேராபத்து பற்றிய அச்சம் ஏற்படும்போது, “ஆண்டவரே, உமக்குப் பிரியமானதை எனக்குச் செய்யும்; அனைத்தும் உம்மிடமிருந்தே வருவதாக நான் ஏற்றுக கொள்வேன்'' என்று சொல்வோம். **அர்ச். தெரேசம்மாள்** அறிவுறுத்துவது போல, ஒரு நாள்பொழுதில், இம்முறையில் கடவுளுக்கு நம்மை அடிக்கடி ஒப்புக்கொடுப்பது நல்லது என்று **அர்ச். தெரேசம்மாள்** அறிவுறுத்துகிறாள்.

"பேசும் ஆண்டவரே, உம் அடியான் கேட்கிறான்." நான் என்ன செய்ய வேண்டுமென்று சித்தமாய் இருக்கிறீர்? நான் செய்ய வேண்டுமென்று நீர் விரும்பும் அனைத்தையும் நான் செய்வேன். உமது சித்தமே என் ஒரே ஆசையாகவும், என் ஒரே நேசமாகவும் இருக்கும். பரிசுத்த ஆவியானவரே, என் பலவீனத்தைப் பலப்படுத்தும், நீர் நன்மைத்தனமாகவே இருக்கிறீர். உம்மையன்றி வேறு எதையும் யாரையும் நான் எப்படி நேசிக்க முடியும்? ஓ, உமது பரிசுத்த அன்பின் இனிய ஈர்ப்புகளைக் கொண்டு என் இருதய நாட்டங்கள் அனைத்தையும் உம்மிடம் ஈர்த்துக் கொள்ளும். நான் என்னை முழுமையாக உமக்குத் தரும்படியாக, அனைத்தையும் துறந்து விடுகிறேன். என்னை ஏற்றுக்கொண்டு, எனக்கு உதவியாயிரும். மரியாயே, என் தாயாரே, எனக்காக ஜெபியுங்கள்.

புதன்

தேவசிநேகம் நம்மைப் பலப்படுத்துகிறது.

ஃபோர்த்திஸ் எஸ்த் உத் மோர்ஸ் தெலெக்ஸியோ

நேசம் மரணத்தைப் போல வலிமையானது.

I

மரணத்தை எதிர்த்து நிற்கக் கூடிய படைக்கப்பட்ட வல்லமை எதுவுமில்லாதது போலவே, கடவுளை நேசிக்கிற ஆத்துமத்திற்கு, நேசத்தைத் தடை செய்யும் கஷ்டம் அல்லது துன்பம் எதுவுமில்லை. நேசிக்கிற ஆத்துமம் தன் நேசரில் அகமகிழும்போது, நேசம் எல்லா இழப்புகளையும், இழிவையும், துயரங்களையும் மேற்கொள்கிறது. "அன்பின் நெருப்பால் வெல்லப்படும் அளவுக்கு மிகக் கடினமானது எதுவுமில்லை." ஓர் ஆத்துமம் உண்மையாகவே கடவுளை நேசிக்கிறதா, காரியங்கள் சாதகமாக இருக்கும் சமயத்தைப் போலவே, காரியங்கள் எதிராக இருக்கும்போதும் அது அவருக்குப் பிரமாணிக்கமாக இருக்கிறதா என்பதை அறிவதற்கு இதுவே மிக உறுதியான அடையாளமாகும். **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்**, "கடவுள் நம்மைத் தண்டிக்கும்போதும், நமக்கு ஆறுதல் அளிக்கும்

போதும் ஒரே விதமாக நேசமிக்கவராக இருக்கிறார், ஏனெனில் அவர் இந்த இரண்டையுமே அன்பினால் செய்கிறார்" என்கிறார்.

ஓ என் ஆத்துமத்தின் தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன் என்ற சொல்கிறேன், ஆயினும் உமது அன்பிற்காக நான் என்ன செய்கிறேன்? ஒன்றுமில்லை, ஆகவே, ஒன்றில் நான் உம்மை நேசிக்கவில்லை, அல்லது மிகக் குறைவாகவே நேசிக்கிறேன் என்பதற்கு இது அடையாளமாக இருக்கிறது. ஆகவே, சேசுவே, உமது பரிசுத்த ஆவியானவரை என்மீது அனுப்பும், அவர் வந்து, மரணம் என்னை மேற்கொள்ளுமுன் உமது அன்பிற்காக நான் ஏதாவது துன்பத்தை அனுபவிக்கும்படி, அல்லது எதையாவது செய்யும்படி என்னைப் பலப்படுத்துவாராக. ஆண்டவரே, இவ்வாழ்வில் நான் இது வரை இருந்து வந்தது போல, இனி குளிர்ச்சியுள்ளவனாகவும், நன்றியற்றவனாகவும் இருக்க அனுமதியாதிரும். என்னை நரகத்திற்குத் தகுதியுள்ளவனாக ஆக்கியிரந்த எண்ணற்ற பாவங்களைப் பற்றி, துன்பங்களை நேசிக்க எனக்கு பலம் தாரும். ஓ, பூரண நன்மைத்தனமும், பூரண நேசமுமாக இருக்கிற என் தேவனே, எங்கிருந்து உம்மை அடிக்கடி நான் துரத்தினேனோ, அந்த என் ஆத்துமத்தில் தங்கி வசிக்க நீர் ஆசிக்கிறீர். வந்து அதை உமது சொந்தமாக்கிக் கொள்ளும். அதனுள் தங்கியிருந்து, அதை முழுவதும் உம்முடையதாக்கிக் கொள்ளும்.

II

கடவுள் இவ்வுலகில் நம்மை மிக அதிகமாகத் துன்பத்திற்கு உள்ளாக்கும்போதுதான் அவர் நம்மை மிக அதிகமாக நேசிக்கிறார். அர்ச். சின்னப்பர் தமது பரவச நிலையில் மூன்றாம் வானம் வரை உயர்த்தப்பட்டபோது இருந்ததை விட, சிறையில் சங்கிலிகளால் கட்டுண்டிருந்த போதுதான் அதிக மகிழ்ச்சியாக இருந்தார் என்று **அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்** கருதினார். இதனாலேயே பரிசுத்த வேதசாட்சிகள் தங்கள் வாதைகளுக்கு மத்தியிலும் அக்களிப்புக் கொண்டார்கள், கடவுள் தமது நேசத்திற்காகத் துன்புற அவர்களை அனுமதித்த மாபெரும் உபகாரத்திற்காக அவர்கள் அவருக்கு நன்றி

செலுத்தினார்கள். மற்ற புனிதர்கள், தங்களைத் துன்புறுத்தக் கொடுங்கோலர்கள் யாரும் இல்லாதிருந்தபோது, கடவுளை மகிழ்விக்கும்படி தங்கள் மீது தாங்களே சுமத்திக் கொண்ட தவமுயற்சிகளால் தங்களைத் தாங்களே வாதிப்பவர்கள் ஆனார்கள். "நேசிக்கிறவன் உழைப்பின் கடுமையை உணர்வதில்லை, அல்லது அந்த உழைப்பே அவனால் நேசிக்கப்படுகிறது" என்று **அர்ச். அகுஸ்தினார்** கூறுகிறார்.

ஓ என் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன். நான் உம்மை நேசிக்கிறேன் என்றால், அர்ச். அருளப்பர் உறுதி கூறுவது போல, நீர் என்னோடு இருக்கிறீர்: **"சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் சர்வேசுரனிடம் நிலைத்திருக்கிறான்; சர்வேசுரனும் அவனிடம் நிலைத்திருக்கிறார்" (1 அரு. 4:16).** ஆகவே, நீர் என்னோடு இருப்பதால், உம்மைத் தவிர நான் வேறு யாரையும் ஆசிக்காமலும், தேடாமலும், நேசிக்காமலும், இவ்வாறு, உமது அன்பால் கட்டுண்டவனாக, இனி ஒருபோதும் உம்மிடமிருந்து என்னைப் பிரித்துக் கொள்ளாமலும் இருக்கும்படியாக, உமது அன்பின் தீச்சுவாலைகளை, உமது அன்பின் சங்கிலிகளை அதிகரித்தருளும். சேசுவே, நான் உம்முடையவனாக, முழுவதும் உம்முடையவனாக இருக்க ஆசிக்கிறேன். மரியாயே, என் இராக்கினியே, எனக்காகப் பரிந்து பேசுபவர்களே, எனக்கு அன்பையும் பரிசுத்த நிலைமை வரத்தையும் பெற்றுத் தாருங்கள்.

வியாழன்

தேவசிநேகம் நம் ஆத்துமங்களில் கடவுள் தங்கி வசிக்கச் செய்கிறது.

"துல்ச்சிஸ் ஆஸ்ப்பெஸ் ஆனிமே."

I

பரிசுத்த ஆவியானவர் ஆத்துமத்துக்கு மதுரமான (இனிய) விருந்தாளி என்று அழைக்கப்படுகிறார். தம்மை நேசிப்பவர்களுக்கு சேசுகிறீஸ்துநாதரால் அளிக்கப்பட்ட மாபெரும் வாக்குறுதி: **"நீங்கள்**

என்னைச் சிநேகித்தால், என் கற்பனைகளை அநுசரியுங்கள். நானும் பிதாவை மன்றாடுவேன்; அவர் என்றென்றைக்கும் உங்களோடுகூட வசிக்கும்படியாகத் தேற்றுகிறவராகிய வேறொருவரை உங்களுக்குத் தந்தருளுவார்" (அரு.14:15,16). இவ்வாறு ஆத்துமம் பரிசுத்த ஆவியானவரைத் தன்னிடமிருந்து துரத்தி விடாத வரைக்கும் அவர் ஒருபோதும் அதைக் கைவிட மாட்டார்: "தாம் கைவிடப்படாத வரை அவரும் கைவிட மாட்டார்."

ஆகவே, நாம் கடவுளை நேசிக்கும்போது, அவர் நம் ஆத்துமத்தில் தங்கி வசிக்கிறார். ஆனால் நம் முழு இருதயங்களோடும் நாம் அவரை நேசிக்கவில்லை என்றால் தாம் திருப்தியடைவதில்லை என்று அவர் அறிக்கையிடுகிறார். உரோமை அமைச்சரவை சேசுநாதரைத் தங்கள் தெய்வங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் அவர் தம்மைத் தவிர வேறு யாரும் ஆராதிக்கப்படுவதை விரும்பாத அகங்காரமுள்ள கடவுள் என்று அவர்கள் கூறினார்கள் என்று அர்ச். அகுஸ்தினார் எழுதுகிறார். அது அப்படித்தான் இருக்கிறது: தன்னை நேசிக்கும் இருதயத்தில் ஒரு தோழனை அவர் அனுமதிக்க மாட்டார்; அவர் அங்கே தனியாகத் தங்கிய் இருக்க வேண்டும், அவர் மட்டுமே நேசிக்கப்படுபவராக இருக்க வேண்டும். தாம் மட்டுமே அங்கு நேசிக்கப்படவில்லை என்பதை அவர் கண்டால், அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் எழுதுவது போல, ஒரு பேச்சு வகைக்கு, தமக்கு மட்டுமே சொந்தமாய் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிற அந்த இருதயத்தின் அன்பைத் தம்மோடு பகிர்ந்து கொள்ளும் சிருஷ்டிகளின் மீது அவர் பொறாமை கொள்கிறார்! **"உங்களுக்குள்ளே வாசமாய் இருக்கிற இஸ்பிரீத்துவானவர் பொறாமையான சிநேகமுள்ளவரென்று வேதவாக்கியம் சும்மா சொல்வதாக நினைக்கிறீர்களோ?" (யாக.4:5).**

ஓ என் தேவனே, நான் முழுவதும் உம்முடையவனாய் இருக்க வேண்டுமென்று நீர் ஆசிக்கிறீர் என்று காண்கிறேன். நான் பல தடவைகள் உம்மை என் ஆத்துமத்திலிருந்து துரத்திய் இருக்கிறேன், ஆயினும் நீர் என்னிடம் திரும்பி வருவதிலும், உம்மை என்னோடு ஒன்றிப்பதிலும் வெறுப்புக் கொள்ளவில்லை. ஓ, இப்போது என்

முழு சுயத்தையும் உம் சொந்தமாக்கிக்கொள்ளும். நான் இந்நாளில் என்னை முழுவதுமாக உமக்குத் தருகிறேன்.

II

ஒரே வார்த்தையில் சேசுநாதர் பொறாமையுள்ளவர் என்று அர்ச். ஜெரோம் சொல்கிறார். இதன் காரணமாக, பரலோக மணவாளர் மாடப் புறாவைப் போலத் தனிமையிலும், உலகிலிருந்து மறைந்தும் வாழ்கிற ஆத்துமத்தைப் புகழ்கிறார்: **"உன் கன்னங்கள் மாடப் புறாவைப் போல் அழகானவை" (உந்.சங்.1:9),** ஏனெனில் முழுவதுமாகத் தம்முடையதாகக் கொண்டிருக்க அவர் ஆசிக்கிற அன்பில் உலகம் எந்த விதத்திலும் பங்கெடுக்கக் கூடாது என்று அவர் ஆசிக்கிறார். மேலும், மணவாளி முத்திரையிடப்பட்ட தோட்டமாக, எல்லா உலக அன்பிற்கும் எதிராக சுற்றி வேலி அடைக்கப்பட்ட ஒரு தோட்டமாக இருப்பதாலும் அவள் புகழப்படுகிறாள் **(உந்.சங்.4:12)**. சேசுநாதர் நம் முழு அன்பிற்கும் தகுதியானவராக இல்லாதிருக்க முடியுமா? "அவர் தமக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல், தம்மை முழுவதும் உனக்குத் தந்தார்" என்கிறார் அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர். அவர் தம் திரு இரத்தத்தையும், தம் உயிரையும் உனக்குத் தந்திருக்கிறார்; உனக்குத் தருவதற்கு இதற்கு மேல் அவரிடம் ஒன்றுமில்லை.

ஓ என் சேசுவே, என்னை ஏற்றுக் கொள்ளும். எதிர்காலத்தில், நான் உமது அன்பிலிருந்து ஒரு கணம் கூட விலக்கப்படாமல் வாழும்படி எனக்கருளும். நீர் என்னைத் தேடுகிறீர். நானும் வேறு யாரையுமன்றி உம்மை மட்டும் தேடுகிறேன். நீர் என் ஆத்துமத்தை ஆசிக்கிறீர், என் ஆத்துமமும் வேறு யாரையுமன்றி உம்மை மட்டும் ஆசிக்கிறது. நீர் என்னை நேசிக்கிறீர், நானும் உம்மை நேசிக்கிறேன்; நீர் என்னை நேசிப்பதால், இனி ஒருபோதும் உம்மை விட்டுப் பிரிக்கப்பட முடியாத விதத்தில் என்னை உம்மோடு சேர்த்துக் கட்டியருளும். ஓ பரலோக இராக்கினியே, எனக்காக ஜெபியுங்கள்.

வெள்ளி

தேவசிநேகம் ஆத்துமத்தைக் கடவுளோடு சேர்த்துக் கட்டுகிற ஒரு புனித பந்தனமாக இருக்கிறது.

I

படைக்கப்படாத நேசமாகிய பரிசுத்த ஆவியானவர் பிதாவையும் நித்திய வார்த்தையானவரையும் ஒன்றிக்கிற அழிக்க முடியாத பந்தனமாக இருப்பது போலவே, அவர் ஆத்துமத்தையும் கடவுளோடு இணைப்பவராக இருக்கிறார். “சிநேகம் நம்மைக் கடவுளோடு இணைக்கும் ஒரு புண்ணியமாகும்" என்கிறார் **அர்ச். அகுஸ்தினார்**. இதனாலேயே **அர்ச். லாரென்ஸ் யுஸ்தீனியன்** மிகுந்த மகிழ்ச்சியோடு: “ஓ நேசமே, கடவுளையே கட்ட வல்லதாக இருக்ற உன் பந்தனம் எவ்வளவு பலமானது!" என்று அதிசயிக்கிறார். உலக பந்தனங்கள் மரணத்தின் பந்தனங்களாக இருக்கின்றன. ஆனால் கடவுளின் பந்தனங்களோ வாழ்வு மற்றும் இரட்சணியத்தின் பந்தனங்களாக இருக்கின்றன. **“அதன் விலங்குகள் குணப்படுத்தும் கட்டுகளாம்'' (சீராக்.6:31)**. ஏனெனில் கடவுளின் கட்டுக்கள், அன்பைக் கொண்டு, நம் உண்மையான, ஒரே வாழ்வாகிய கடவுளோடு நம்மைப் பிணைக்கின்றன.

சேசுநாதரின் வருகைக்கு முன்பு, மனிதர்கள் கடவுளிடமிருந்து விலகிச் சென்றார்கள். உலகத்தோடு பற்றுக் கொண்டவர்களாக, தங்கள் சிருஷ்டிகரோடு இணைந்திருக்க அவர்கள் மறுத்து விட்டார்கள்; ஆனால் **“மனிதரைப் பாசக் கயிறுகளால் கட்டுவது போல், நாம் அவர்களை சிநேக வடத்தால் இழுத்தோம்'' (ஓசே.11:3)** என்று ஓசே தீர்க்கதரிசி முன்னுரைத்தது போல, நம் நேச ஆண்டவர் அன்பின் கட்டுக்களால் நம்மைத் தம்மிடம் இழுத்திருக்கிறார். இந்தக் கட்டுகள் அவருடைய நன்மைகள், அவரது ஒளிகள், தம்மை நேசிக்க அவர் விடுக்கும் அழைப்புகள் மற்றும் பரலோகத்தைப் பற்றிய அவரது வாக்குறுதிகள் ஆகியவை ஆகும்; ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அவை சிலுவைப் பலியிலும், பீடத்தின் தேவத்திரவிய அனுமானத்திலும், இறுதியாக, நம் மீது தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பியதிலும் அவர் நம் மீது பொழிந்துள்ள கொடைகளாக இருக்கின்றன.

என் பிரிய சேசுவே, நான் உம்மை நேசிப்பதை எனக்குக் கடமையாக்க, நீர் உண்மையில் அளவுக்கு அதிகமாகவே செய்து விட்டீர். மிக அதிகமான விலை கொடுத்து என் அன்பை நீர் வாங்கி இருக்கிறீர். ஆகவே, நீர் எனக்காக உம் இரத்தத்தைச் சிந்தி, உம் உயிரைக் கையளித்த பிறகும் நான் உம்மைக் கொஞ்சமாக மட்டுமே நேசிப்பேன் என்றால், அல்லது என் இருதயத்தை உமக்கும் சிருஷ்டிகளுக்கும் பங்கிட்டுத் தருவேன் என்றால், நான் மிகவும் நன்றிகெட்டவனாகவே இருப்பேன். என் பாசங்கள் முழுவதையும் உமக்குத் தரும்படியாக, மற்ற எல்லாற்றிலிருந்தும் என்னைப் பிரித்துக் கொள்ள நான் ஆசிக்கிறேன். ஆயினும் இந்த ஆசையைத் தனியாக நிறைவேற்ற இயலாதபடி நான் மிகவும் பலவீனனாக இருக்கிறேன். இந்த ஆசையை என்னுள் தூண்டிய நீரே இதை நிறைவேற்றத் தேவையான பலத்தையும் எனக்குத் தந்தருளும்.

II

“கைதியாய்க் கிடந்த சியோன் மகளே, உன் கழுத்துச் சங்கிலியை அறுத்துவிடு'' என்று **இசையாஸ்** தீர்க்கதரிசி கூறுகிறார் **(52:2)**. ஓ என் ஆத்துமமே, பரலோகத்திற்காகப் படைக்கப் பட்ட என் ஆத்துமமே, உன் கழுத்திலிருந்து இவ்வுலகின் கட்டுக்களை அவிழ்த்து விட்டு, அன்பின் கட்டுக்களைக் கொண்டு கடவுளோடு உன்னைப் பிணைத்துக் கொள். **“உத்தமதனத்தின் பந்தனமாகிய தேவசிநேகத்தைக் கொண்டிருங்கள்'' (கொலோ.3:14)**. நேசம் தன்னோடு மற்ற எல்லாப் புண்ணியங்களையும் ஒன்றிணைத்து, ஆத்துமத்தை உத்தமமாக்குகிற பந்தனமாகும். “நேசி, அதன்பின் உனக்குப் பிரியமானதைச் செய்'' என்கிறார் **அர்ச். அகுஸ்தினார்**. ஆம், கடவுளை நேசி, அதன்பின் உனக்குப் பிரியமானதைச் செய், ஏனெனில் கடவுளை நேசிப்பவன் தனது நேசரை நோகச் செய்யும் எதையும் கவனமாகத் தவிர்க்கிறான், எல்லாக் காரியங்களிலும் அவரை மகிழ்விக்கத் தேடுகிறான்.

ஓ என் சேசுவே, நான் எப்போதும் உம் மீதுள்ள ஆசையால் ஏங்கித் தவிக்கவும், உமது அன்பில் கரைந்து போகவும் என் எளிய

இருதயத்தை உமது அன்பின் இனிய அம்பினால் ஊடுருவக் குத்தியருளும். நான் எப்போதும் உம்மை மட்டுமே தேடுவேனாக, உம்மை மட்டுமே ஆசிப்பேனாக, உம்மை மட்டுமே கண்டடைவேனாக! ஓ சேசுவே, நான் உம்மை மட்டுமே ஆசிக்கிறேன். வாழ்வின் போதும், குறிப்பாக என் மரண நேரத்திலும், ஆண்டவரே, உம்மை மட்டுமே நான் நேசிக்கிறேன் என்று எபபோதும் நான் சொல்லிக் கொண்டிருக்க எனக்கு அருள்வீராக. ஓ மரியாயே, என் தாயாரே, இன்று முதல் கடவுளைத் தவிர வேறு ஒன்றையும் நான் ஒருபோதும் ஆசிக்காதபடி எனக்காக ஜெபியுங்கள்.

சனி

தேவசிநேகம் எல்லா நன்மைகளையும் தன்னுள் கொண்டுள்ள ஒரு பொக்கிஷம்

“இன்ஃபினித்துஸ் தெசாவ்ருஸ் ஓமினிபுஸ்.''

I

தேவசிநேகம் நாம் விலைக்கு வாங்க வேண்டிய பொக்கிஷமாக இருக்கிறது. பரிசுத்த சுவிசேஷம் கூறுவது போல, அதை விலைக்கு வாங்க ஒருவன் தனக்குள்ளதெல்லாம் விட்டுவிட வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த அன்பு நம்மைக் கடவுளின் நட்பில் பங்கு பெறுபவர்களாக ஆக்குகிறது: **“ஞானமானது மனிதருக்கு அளவில்லாத திரவியமாய் இருக்கிறது. அதைப் பயன் படுத்திக் கொள்பவர்கள்... சர்வேசுரனுடைய சிநேகத்துக்குப் பங்காளிகள் ஆகிறார்கள்'' (ஞான.7:14)**. “ஓ மனிதர்களே, நல்லவற்றைத் தேடி எங்கே செல்கிறீர்கள்? நல்லவை யாவும் தன்னுள் கொண்டுள்ளவராகிய ஒரே நன்மையைத் தேடுங்கள்'' என்கிறார் **அர்ச். அகுஸ்தினார்**. ஆனால் உலகக் காரியங்களை நாம் புறக்கணித்தால் அன்றி, கடவுளாகிய ஏக நன்மையை நம்மால் கண்டுபிடிக்க முடியாது. “சிருஷ்டிகளின் மீதுள்ள பற்றை உன் இருதயத்திலிருந்து அறுத்து விடு, அப்போது கடவுளைக் காண்பாய்'' என்று **அர்ச். தெரேசம்மாள்** எழுதுகிறாள். கடவுளைக் கண்டு அடைபவன், தான் ஆசிக்கக் கூடிய அனைத்தையும் அடைந்து

கொள்கிறான். **"ஆண்டவரிடத்தில் ஆனந்தங்கொள்; அப்போது உன் இருதயம் ஆசிப்பதை அவர் உனக்குத் தருவார்" (சங்.36:4).** மனித இருதயம் தன்னை சந்தோஷப்படுத்தும் நல்ல காரியங்களைத் தொடர்ந்து தேடித் திரிகிறது. ஆனால் அவற்றை அது சிருஷ்டிகளிடம் தேடும் என்றால், எவ்வளவு அதிகமாக அவற்றைப் பெற்றுக்கொண்டாலும், அது அவற்றால் திருப்தியடையாது. ஆனால் அது கடவுளை மட்டுமே தேடும் என்றால், அதன் எல்லா ஆசைகளையும் அவர் திருப்திப்படுத்துவார். அப்படியானால், உண்மையில் இவ்வுலகில் புனிதர்களைத் தவிர வேறு யார் அதிக மகிழ்ச்சியாக இருக்க முடியும்? ஒரு முறை காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற ஓர் அரசன், அங்கே ஒரு வனவாசி தனியாக விரைந்து ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டான். அவன் அவரிடம் அந்தக் காட்டில் அவர் எதைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்று கேட்க, வனவாசி அரசனிடம் பதிலுக்கு, "அரசே, நீங்கள் எதைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "நான் காட்டு மிருகங்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று அரசன் பதில் கூற, "நான் கடவுளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார் அந்த வனவாசி!

என் தேவனே, நான் இது வரை உம்மையல்ல, மாறாக என்னையும், என் சொந்த இன்பங்களையும் மட்டுமே தேடிக் கொண்டிருந்தேன். இவற்றிற்காக நான் என் இராஜரீக நன்மையாகிய உம்மிடமிருந்து திரும்பியிருந்தேன். ஆனால் **"தம்மைத் தேடுகிற ஆத்துமத்திற்கு ஆண்டவர் நல்லவராக இருக்கிறார்" (புலம்பல் 3:25)** என்ற எரேமியாஸின் வார்த்தைகளால் நான் தேற்றப்படுகிறேன். என் தேவனாகிய நீர் உம்மைத் தேடுபவனுக்கு முழு நன்மைத்தனமாக இருக்கிறீர் என்று இந்த வார்த்தைகள் எனக்கு உறுதி தருகின்றன.

II

அர்ச். க்ளமெண்ட் சேசுநாதரை மறுதலிப்பார் என்றால் அவருக்குப் பொன்னும் மணிக்கற்களும் தருவதாகக் கொடுங்கோலன் அவருக்கு ஆசை காட்டினான். ஆனால் புனிதரோ ஓர் ஆழ்ந்த பெருமூச்சோடு: "ஐயோ! கடவுள் கொஞ்சம் சேற்றோடு

போட்டியிட வேண்டி இருக்கிறதே!" என்றார். தேவசிநேகமாகிய பொக்கிஷத்தின் மதிப்பை அறிந்து, அதை அடையத் தேடுகிற மனிதன் பாக்கியவான்! அதைப் பெற்றுக்கொள்பவன், கடவுளை மட்டுமே தான் சொந்தமாகக் கொண்டிருக்கும்படியாக, மற்ற எல்லாவற்றையும் தன்னிடமிருந்து அகற்றி விடுவான். "வீடு தீப்பற்றி எரியும்போது எல்லாப் பொருட்களும் ஜன்னல்கள் வழியாக வெளியே வீசப்படுகின்றன" என்கிறார் **அர்ச். பிரான்சிஸ் சலேசியார்**. மேலும், நேசமானது உலக நாட்டங்கள் அனைத்தையும் நம்மிடம் இருந்து கொள்ளையிடும் திருடனாக இருக்கிறது என்று மாபெரும் தேவ ஊழியரான சுவாமி சின்ன பவுல் செஞ்ஞேரி வழக்கமாகக் கூறுவதுண்டு. இதன் காரணமாக, நாம் முழு உண்மையோடு: "என் தேவனே, உம்மை மட்டுமேயன்றி வேறு எதை நான் ஆசிக்கிறேன்?" என்று சொல்ல முடியும்.

என் அன்புள்ள இரட்சகரே, உம்மைக் கைவிட்டதில் நான் செய்துள்ள தீமையை நான் அறிந்திருக்கிறேன், என் முழு இருதயத்தோடு நான் அதற்காக மனஸ்தாபப்படுகிறேன். நீர் ஓர் அளவற்ற பொக்கிஷமாக இருக்கிறீர் என்பதை நான் அறிவேன். ஒளியை நான் இனி தவறாகப் பயன்படுத்த மாட்டேன். நான் எல்லாவற்றையும் கைவிட்டு, உம்மை மட்டுமே என் ஏக அன்பாகத் தேர்ந்துகொள்கிறேன். என் சர்வேசுரா, என் நேசரே, என் சர்வமே, நான் உம்மை நேசிக்கிறேன், நான் உம்மை ஆசிக்கிறேன், நான் உமக்காகப் பெருமூச்செறிகிறேன். ஓ பரிசுத்த ஆவியானவரே, தேவரீர் வந்து, உம்மைத் தமது நோக்கமாகக் கொண்டிராத என்னிலுள்ள ஒவ்வொரு நாட்டத்தையும் உமது புனித நெருப்பால் அழித்து விடும். நான் முழுவதும் உம்முடையவனாக இருக்கவும், உம்மைப் பிரியப்படுத்த, எல்லாவற்றின் மீதும் நான் வெற்றி கொள்ளவும் எனக்கு அருள்வீராக. மரியாயே, எனக்காகப் பரிந்து பேசுபவர்களே, என் தாயாரே, உங்கள் ஜெபங்களைக் கொண்டு எனக்கு உதவுங்கள்.

மங்கள வார்த்தை திருநாள்

(மார்ச் 25)

“அவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து. . . மனிதனானார்."

I

கடவுள் இவ்வுலகில் தம்மை நேசிக்கவும், அதன்பின் மறுவுலகில் தம்மைத் துய்த்து மகிழவும் நம்மைப் படைத்திருக்கிறார்; ஆனால் நாம் பாவம் செய்ததன் மூலமாகக் கடவுளுக்கு எதிராகக் கலகம் செய்தோம், அவருக்குக் கீழ்ப்படிய மறுத்தோம். அதனால் தேவ வரப்பிரசாதம் நம்மிடமிருந்து விலக்கப்பட்டது. நாம் பரலோகத்திலிருந்து விலக்கப்பட்டோம், நித்திய நரக வேதனைகளுக்குத் தீர்ப்பிடப்பட நம்மைத் தகுதியானவர்களாக ஆக்கிக் கொண்டோம். ஆகவே, நாம் அனைவரும் இழக்கப் பட்டவர்களாக இருந்தோம். ஆனால் இந்தக் கடவுள் நம்மீது பரிதாபம் கொண்டு நம் மாபெரும் அழிவைச் சரிசெய்யக் கூடிய இரட்சகர் ஒருவரை பூலோகத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார்.

ஆனால் இந்த இரட்சகர் யாராக இருப்பார்? அவர் ஒரு தேவ தூதராக இருப்பாரா, அல்லது ஒரு பக்திச்சுவாலகராக இருப்பாரா? இல்லை; கடவுள் நம்மீது தாம் கொண்டுள்ள அளவற்ற அன்பை நமக்குக் காட்டும்படியாக, தம் சொந்த மகனையே நமக்காக அனுப்புகிறார்: “கடவுள் தம் சொந்த மகனைப் பாவ மாம்சத்தின் பாவனையில் அனுப்பினார்."

ஓ அதிசயமே! ஓ கடவுளின் அன்பின் மிகுதியே-- ஒரு கடவுள் மனிதனானார்! இவ்வுலக அரசன் ஒருவன் இறந்து கிடக்கும் ஒரு புழுவைக் கண்டு, அதற்கு மீண்டும் உயிர் கொடுக்க விரும்புகிறான். அதைச் செய்வதற்கு, அவனே அந்தப் புழுவாக மாறி, அதன் அருவருப்பான வசிப்பிடத்திற்குள் நுழைந்து, அங்கே தன் உயிரை விலையாகத் தந்து, தன் சொந்த இரத்தத்தில், இறந்த அந்தப் புழுவைக் குளிப்பாட்டினால் மட்டுமே அது உயிர் பெறும் என்று அவனுக்குச் சொல்லப்படுகிறது. இப்போது அந்த அரசனின் பதில்

என்னவாக இருக்கும்? "இல்லை! இந்தப் புழுவுக்கு உயிர் தருவதற்காக என் இரத்தத்தைச் சிந்தி இதை உயிர்ப்பிப்பதால் எனக்கு என்ன நன்மை வரப் போகிறது?" என்றுதான் அவன் கேட்பான். மனிதர்கள் தங்கள் சொந்தப் பாவங்களால் நித்திய அழிவுக்குத் தகுதி பெற்றிருக்க, அவர்கள் அழிந்து போவதால், கடவுளுக்கு என்ன நஷ்டம்? இதனால் அவருடைய பேரின்பத்தில் ஒரு துளியளவாவது குறைந்து விடப் போகிறதா?

இல்லவேயில்லை! மனிதர்கள் மீது கடவுள் கொண்டுள்ள அன்பு உண்மையாகவே அளவற்றதாக இருந்ததால்தான் அவர் பூமிக்கு இறங்கி வந்து, ஒரு கன்னிகையிடமிருந்து மனித சரீரத்தை எடுக்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்திக் கொண்டார். ஓர் அடிமையின் தன்மை பூண்டு, அவர் மனிதனானார் - அதாவது, அவர் நம்மைப் போன்ற ஒரு புழுவாகத் தம்மை ஆக்கிக் கொண்டார். **"தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனிதர் சாயலாகி, மனித ரூபமாகக் காணப்பட்டார்" (பிலி.2:7).** அவர் பிதாவைப் போல சர்வேசுரனாக இருக்கிறார் - மிகப் பெரியவர், சர்வ வல்லபர், பேரரசர், எல்லாவற்றிலும் பிதாவுக்குச் சரி சமமானவர்; ஆனால்; மாமரியின் திருவுதரத்தில் அவர் மனிதனான போது, அவர் பலவீனமுள்ள சிருஷ்டியாகவும், பிதாவுக்குக் கீழ்ப்பட்டவராகவும் ஆனார். மாமரியின் திருவுதரத்தில் இவ்வாறு தாழ்த்தப்பட்டவராக அவரைப் பாருங்கள்; அங்கே, முப்பத்து மூன்று வருடங்கள் உலகில் துன்ப வாழ்வு நடத்தியபிறகு, ஒரு சிலுவையின் மீது கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு சாக வேண்டும் என்ற பிதாவின் திருச் சித்தத்தை அவர் ஏற்றுக் கொண்டார்! **"தம்மைத்தாமே தாழ்த்தி, மரணமட்டுக்கும் அதாவது சிலுவை மரண மட்டுக்கும் கீழ்ப்படிதல் உள்ளவரானார்" (பிலி.2:8).**

அவரது தாயின் திருவுதரத்தில் ஒரு குழந்தையாக அவரைப் பாருங்கள். அங்கே அவர் எல்லாக் காரியங்களிலும் தமது பிதாவின் திருச்சித்தத்தோடு தம்மை இணைத்துக் கொண்டார், நம் மீதுள்ள அன்பால் பற்றியெரிந்தார். மனமுவந்து தம்மைக் கையளித்தார்: **"தம் சொந்த சித்தப்படியே அவர் பலியானார்" (இசை. 53:7).** நம் இரட்சணியத்திற்காக அனைத்து துன்பங்களையும் அனுபவிக்க அவர்

தம்மை ஒப்புக்கொடுத்தார். அப்போது தாம் கசைகளால் அடிக்கப்படுவதைத் தீர்க்கதரிசனமாகக் கண்டு, தம் திருச்சரீரத்தை ஒப்புக்கொடுத்தார்; முட்களைக் கண்டு, தம் திருச்சிரசை ஒப்புக்கொடுத்தார்; ஆணிகளைக் கண்டு, தம் கரங்களையும், பாதங்களையும் ஒப்புக்கொடுத்தார்; சிலுவையை தீர்க்கதரிசனமாகக் கண்டு தம் உயிரை ஒப்புக்கொடுத்தார். நன்றிகெட்ட பாவிகளாகிய நமக்காக இவ்வளவு அதிகமாகத் துன்பப்பட அவர் ஏன் பிரியம் கொண்டார்? ஏனெனில் அவர் நம்மை நேசித்தார். **“இவர் நம்மைச் சிநேகித்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களினின்று நம்மை கழுவினார்'' (காட்சி.1:5)**. நாம் பாவத்தால் கறைப்பட்டவர்களாக இருந்ததை அவர் கண்டு, தமது சொந்த இரத்தத்தால் நமக்கு ஒரு ஸ்நானத்தை ஆயத்தம் செய்தார். இதன் மூலம் நாம் சுத்திகரிக்கப்பட்டு, கடவுளுக்குப் பிரியமானவர்களாக ஆக வேண்டுமென்று இப்படிச் செய்தார்: **“கிறீஸ்துநாதரும் நம்மைச் சிநேகித்து, நமக்காகத் தம் உயிரைக் கையளித்தார்'' (எபே.5:2).** நாம் மரணத்திற்குத் தீர்வையிடப்பட்டதை அவர் கண்டு, நாம் வாழும்படி தாமே சாகத் தயாரானார்; நம் பாவங்களின் காரணமாக, நாம் கடவுளால் சபிக்கப்பட்டதைக் கண்டு, நாம் இரட்சிக்கப் படும்படி, நாம் தகுதி பெற்றிருந்த அந்த சாபங்களைத் தம்மீது சுமத்திக் கொள்வதில் அவர் பிரியம் கொண்டார்: **“கிறீஸ்துநாதர் நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்று நம்மை இரட்சித்தார்'' (கலாத். 3:13).**

ஓ என் தேவனே, மனுக்குலம் முழுவதன் சார்பாகவும் நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன்; ஏனெனில் நீர் எங்களை இரட்சிக்க நினைத்திராவிட்டால், நானும் உலகம் முழுவதும் என்றென்றும் இழக்கப்பட்டிருப்போம்! ஓ என் பிரியமுள்ள சேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்; நீரே என் நம்பிக்கை, நீரே என் நேசம்!